வாழ்வு. 3

# கிறிஸ்துவின் வாழ்வு, 3
# டேவிட் ரோப்பர்

## ஒப்பீடு


32. ?அவர் அநேக விஷயங்களை உவமைகளாக... சொன்னார்? (மத். 13:1-53; மாற். 4:1-34; லூக். 8:4 ? 18)
33. ?விதைப்பவனாக உவமையைக் கேளுங்கள்? (மத். 13:3-10, 18-23; மாற். 4:2-10, 13-20; லூக். 8:4-9, 11-15)
34. ?இவர்கள் யார்?? (மத். 8:18,23-34; 9:1, 10-17; மாற். 2:15-22; 4:35-41; 5:1-21; லூக். 5:29-39; 8:22-40)
35. அன்புகூரப்பட முடியாதவர்களை அடைதல் (மாற். 5:1-20)
36. ?நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா?? (மத். 9:18-34; 13:54-58; மாற். 5:22-43; 6:1-6; லூக். 4:16-13; 8:41-56)
37. புறக்கணித்தலைக் கையாள்வது எப்படி (லூக். 4:16-31)
38. வெற்றியின் அபாயம்
(மத். 9:35-38; 10:1-42; 11:1; 14:1-13, மாற். 6:6-32; லூக். 9:1-10; யோவா. 6:1)
39. இராஜாவும் அவரது ஸ்தானாபதிகளும்
(மத். 10)
40. வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய ஒரு சத்தம்
41. சோதனைக்கான காலம்
(மத். 14:13-36; மாற். 6:33-56; லூக். 9:11-17; யோவா. 6:2-71)
42. மக்களுக்கு உண்மையிலேயே உதவி தேவைப்படும்போது
(மத். 14:13-21; மாற். 6:33-44; லூக். 9:11-17; யோவா. 6:2-14)
43. கவலை தரும் இடைமறித்தல்களா அல்லது பயன்மிக்க இடையிசைகளா?
(மாத். 15:1-21; மாற். 7:1-37; 8:1-9; யோவா. 6:4; 7:1)
44. மோசமாகிப்போன ஒரு நல்ல கருத்து
(மாத். 15:1-6; மாற். 7:1-5; 9-13)
45. பாரம்பரியம் ஒன்று எப்போது மோசமாக இருக்கிறது?
(மாத். 15:7-20; மாற். 7:6-8; 14-23)
46. மலை உச்சிகள் மற்றும் பள்ளத்தாக்குகள்
(மாத். 15:39 ஆ; 16:1-28; 17:1-23; மாற். 8:10-38; 9:2-13; லூக். 9:18-36)

படிப்பு உதவிகள்
பதிலளிக்கும் படிவம்

# ஒப்பீடு

I. அவரது ஊழியத்திற்கு முன்னதாகக் கிறிஸ்துவின் வாழ்வு.
   A. லூக்காவின் முன்னுரை மற்றும் அர்ப்பணிப்பு (லூக்கா 1:1-4).
   B. யோவானின் அறிமுகம் (யோவா. 1:1-18).
   C. மத்தேயு கூறுகின்றபடி இயேசுவின் வம்ச வரலாறு (மத். 1:1-17).
   D. லூக்கா கூறுகின்றபடி இயேசுவின் வம்ச வரலாறு (லூக். 3:23-38).
   E. யோவான் ஸ்நானன் பிறப்பு பற்றி சகரியாவுக்கு தூதனின் அறிவிப்பு (லூக். 1:5-25).
   F. இயேசுவின் பிறப்பு பற்றி மரியாளுக்குத் தூதனின் அறிவிப்பு (லூக். 1:26-38).
   G. (கர்ப்பவதியாயிருந்த இயேசுவின் தாயார்) மரியாள், (கர்ப்பவதியாயிருந்த யோவான் ஸ்நானனின் தாயார்) எலிசபெத்தைச் சந்தித்தல் (லூக். 1:39-56).
   H. யோவான் ஸ்நானனின் பிறப்பும், அவரது தொடக்க கால வாழ்வும் (லூக். 1:57-80).
   I. இயேசுவின் வருகை பற்றி யோசேப்புக்கு அறிவிப்பு (மத். 1:18-25).
   J. இயேசுவின் பிறப்பு (லூக். 2:1-7).
   K. இயேசுவின் பிறப்பு மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்படுதல் (லூக். 2:8-20).
   L. இயேசுவுக்கு விருத்தசேதனம் மற்றும் பெயரிடுதல்; தேவாலய ஆராதனை (லூக். 2:21-39).
   M. கிழக்கிலிருந்து ஞானிகளால் இயேசு சந்திக்கப்படுதல் (மத். 2:1-12).
   N. எகிப்துக்கு ஓடிப்போகுதலும் பெத்லகேமில் ஆண் குழந்தைகள் கொல்லப்படுதலும் (மத். 2:13-18).
   O. குழந்தை இயேசு எகிப்தில் இருந்து நாசரேத்தூருக்குக் கொண்டு வரப்படுதல் (மத். 2:19-23; லூக். 2:39ஆ வைக் காணவும்).
   P. இயேசு நாசரேத்தூரில் வாழ்தல்; அவரது பன்னிரெண்டு வயதில் எருசலேமுக்கு ஒரு பயணம் (லூக். 2:40-52).

II. யோவான் ஸ்நானனின் ஊழியம் ஆரம்பித்தல்.
   A. யோவானின் ஊழியம் (மத். 3:1-6; மாற். 1:1-6; லூக். 3:1-6).
   B. யோவானின் செய்தி (மத். 3:7-12; மாற். 1:7, 8; லூக். 3:7-18).

III. *இயேசுவின் ஊழியம் ஆரம்பித்தல்.*
   A. *யோர்தான் நதியில் யோவானிடம் இயேசு ஞானஸ்நானம் பெறுதல் (மத். 3:13-17; மாற். 1:9-11; லூக். 3:21, 22; யோவா. 1:31-34).*
   B. *வனாந்தரத்தில் இயேசு சோதிக்கப்படுதல் (மத். 4:1-11; மாற். 1:12, 13; லூக். 4:1-13).*
   C. *இயேசுவைப் பற்றி யோவானின் சாட்சியம் (யோவா. 1:19-34).*
   D. *(யூதேயாவில்) இயேசுவின் முதல் சீஷர்கள் (யோவா. 1:35-51).*
   E. *(கலிலேயாவின் கானாவூரில்) இயேசுவின் முதல் அற்புதம் (யோவா. 2:1-11).*
   F. *(கலிலேயாவின்) கப்பர்நகூமில் இயேசு முதலில் தங்குதல் (யோவா. 2:12).*

IV. *முதல் பஸ்காவில் இருந்து இரண்டாம் பஸ்கா வரை.*
   A. *இயேசுவின் ஊழிய காலத்தில் வந்த முதல் பஸ்கா.*
      1. *தேவாலயத்தைச் சுத்திகரித்தல் (யோவா. 2:13-25).*
      2. *நிக்கொதேமுவுக்குப் போதித்தல் (யோவா. 3:1-21).*
   B. *யூதேயாவில் முதல் ஊழியம் (மற்றும் யோவானாலும் மேலும் சாட்சி கொடுக்கப்படுதல்) (யோவா. 3:22-36).*
   C. *யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு மாறுதல்.*
      1. *கடந்து செல்லுதலுக்கான காரணங்கள் (மத். 4:12; மாற். 1:14; லூக். 3:19, 20; யோவா. 4:1-3).*
      2. *சமாரியாவில் நடந்த சம்பவம் (யோவா. 4:4-42).*
      3. *கலிலேயா வந்து சேருதல் (லூக். 4:14; யோவா. 4:43-45).*
   D. *கலிலேயாவில் இயேசுவின் போதனை பற்றிய ஒரு பொதுவான விவரம் (மத். 4:17; மாற். 1:14, 15; லூக். 4:14, 15).*
   E. *கானாவூரில் இரண்டாவது அற்புதம் (யோவா. 4:46-54).*
   F. *கலிலேயாவின் கப்பர்நகூமுக்கு மாறுதல் (மத். 4:13-16).*
   G. *நான்கு மீனவர்களை அழைத்தல் (மத். 4:18-22; மாற். 1:16-20; லூக். 5:1-11).*
   H. *கப்பர்நகூமில்: ஜெப ஆலயத்தில் அசுத்த ஆவிபிடித்த ஒருவரைக் குணமாக்குதல் (மாற். 1:21-28; லூக். 4:31-37).*
   I. *கப்பர்நகூமில்: பேதுருவின் மாமியும் மற்றவர்களும் குணமாக்கப்படுதல் (மத். 8:14-17; மாற். 1:29-34; லூக். 4:38-41).*
   J. *கலிலேயாவில்; இயேசுவின் முதல் போதனை மற்றும் குணமாக்குதலின் பயணம் (மத். 4:23-25; மாற். 1:35-39; லூக். 4:42-44).*

K. *கலிலேயாவில்: ஒரு தொழுநோயாளியைக் குணமாக்குதல் - மற்றும் அதன் விளைவாக உணர்வெழுச்சி ஏற்படுதல் (மத். 8:2-4; மாற். 1:40-45; லூக். 5:12-16).*

L. *கப்பர்நகூமுக்குத் திரும்புதல்: திமிர்வாதம் கொண்ட ஒருவரைக் குணமாக்குதல் (மத். 9:2-8; மாற். 2:1-12; லூக். 5:17-26).*

M. *கப்பர்நகூமுக்கு அருகில்: மத்தேயுவை அழைத்தல் (மத். 9:9; மாற். 2:13, 14; லூக். 5:27, 28).*

V. *இரண்டாம் பஸ்காவில் இருந்து மூன்றாம் பஸ்கா வரை.*

A. *இயேசு, சப்பாணியாயிருந்த ஒரு மனிதரை ஓய்வுநாளில் குணமாக்கி அச்செயலைத் தற்காத்தார் (யோவா. 5:1-47).*

B. *இயேசு, ஓய்வுநாளில் கதிர்கொய்த தமது சீஷர்களைத் தற்காத்தார் (மத். 12:1-8; மாற். 2:23-28; லூக். 6:1-5).*

C. *இயேசு, சூம்பின கையுடைய ஒரு மனிதரை ஓய்வுநாளில் குணமாக்கி தற்காத்தார் (மத். 12:9-14; மாற். 3:1-6; லூக். 6:6-11).*

D. *இயேசு, கலிலேயாக் கடலுக்கு அப்பால் திரளான கூட்டத்தாரைக் குணமாக்கினார் (மத். 12:15-21; மாற். 3:7-12).*

E. *ஜெபத்திற்குப் பின்பு இயேசு பன்னிரெண்டு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்தார் (மத். 10:2-4; மாற். 3:13-19; லூக். 6:12-16).*

F. *மலைப் பிரசங்கம்.*

1. *அறிமுகக் கூற்றுக்கள் (மத். 5:1, 2; லூக். 6:17-20).*
2. *பாக்கிய வசனங்கள்: மேசியாவின் பிரஜைகளுக்கான வாக்குத்தத்தங்கள் (மத். 5:3-12; லூக். 6:20-26).*
3. *மேசியாவின் பிரஜைகளினுடைய செல்வாக்கு (மற்றும் பொறுப்புகள்) (மத். 5:13-16).*
4. *மேசியாத்துவ பழைய ஏற்பாட்டு போதனைக்கும் - மற்றும் பழைய ஏற்பாட்டு போதனை பற்றி மனிதரால் ஏற்படுத்தப்பட்ட பாரம்பரியங்களுக்குள்ள உறவு (மத். 5:17-48; லூக். 6:27-30, 32-36).*
5. *மதரீதியான செயல்கள் காட்சிக்காக அல்ல ஆனால் இருதயத்தில் இருந்தே வருவதாயிருக்க வேண்டும் (மத். 6:1-18).*
6. *பரலோக பொக்கிஷங்களின் பாதுகாப்பானது பூமிக்கு உரிய பெருங்கவலைகளுடன் நேர்மாறாக ஒப்பிடப்பட்டது (மத். 6:19-34).*
7. *தீர்க்கப்படுதல் பற்றிய போதனை (மத். 7:1-6; லூக். 6:37-42).*
8. *ஜெபத்தைப் பற்றிய போதனை (மத். 7:7-11).*

   9. *பொன் விதி (மத். 7:12; லூக். 6:31).*
   10. *இரண்டு வழிகள் - மற்றும் கள்ளத் தீர்க்கதரிசிகள் (மத். 7:13-23; லூக். 6:43-45).*
   11. *முடிவுரையும் பயன்பாடும் (கட்டுபவர்கள் இரண்டு பேர்) (மத். 7:24-29; லூக். 6:46-49).*

G. *நூற்றுக்கு அதிபதியொருவரின் வேலையாள் குணமாகுதல் (மத். 8:1, 5-13; லூக். 7:1-10).*

H. *ஒரு விதவையின் மகன் உயிருடன் எழுப்பப்படுதல் (லூக். 7:11-17).*

I. *யோவான் ஸ்நானனுக்குப் பதில் அளித்தல் (மத். 11:2-30; லூக். 7:18-35).*

J. *இயேசுவின் பாதங்கள் அபிஷேகம் செய்யப்படுதல் (லூக். 7:36-50).*

K. *கலிலேயாவில் இரண்டாவது பயணம் (லூக். 8:1-3).*

L. *தேவதூஷணக் குற்றம் சாட்டப்படுதல்கள் (மத். 12:22-37; மாற். 3:20-30; லூக். 11:14-23).*

M. *அடையாளம் தேடுபவர்கள் (மத். 12:38-45; லூக். 11:16, 24-26, 29-36).*

N. *இயேசுவின் குடும்பம் (மத். 12:46-50; மாற். 3:31-35; லூக். 8:19-21; 11:27, 28).*

O. *உவமைகளின் முதல் மாபெரும் தொகுப்பு.*
   1. *நிகழ்வுவேளையும் அமைவும் (மத். 13:1-3; மாற். 4:1, 2; லூக். 8:4).*
   2. *விதைப்பவன் உவமையும் விளக்கமும் (மத். 13:3-23; மாற். 4:3-25; லூக். 8:5-18).*
   3. *மறைவான வளர்ச்சியின் உவமை (மாற். 4:26-29).*
   4. *களைகளின் உவமை (மத். 13:24-30).*
   5. *கடுகு விதை, புளித்தமா ஆகியவற்றின் உவமைகள் (மத். 13:31-35; மாற். 4:30-34).*
   6. *களைகளின் உவமை விளக்கப்படுதல் (மத். 13:36-43).*
   7. *பொக்கிஷம், முத்து ஆகியவற்றின் உவமைகள் (மத். 13:44-46).*
   8. *மீன்பிடி வலையின் உவமை (மத். 13:47-53).*

P. *புயலை அமர்த்துதல் (மத். 8:18, 23-27; மாற். 4:35-41; லூக். 8:22-25).*

Q. *அசுத்த ஆவி பிடித்த இருவரைக் குணமாக்குதல் (மத். 8:28-34; 9:1; மாற். 5:1-21; லூக். 8:26-40).*

R. *பாவிகளுடன் உண்ணுதல் (மற்றும் உபவாசித்தல் பற்றிய உரை) (மத். 9:10-17; மாற். 2:15-22; லூக். 5:29-39).*

S. *யாவீருவின் மகளை உயிர்ப்பித்தல் (மற்றும் பெரும்பாடு உள்ள ஒரு பெண்ணைக் குணமாக்குதல்) (மத். 9:18-26; மாற். 5:22-43; லூக். 8:41-56).*

T. *பார்வையற்றவரையும் அசுத்த ஆவி பிடித்தவரையும் குணமாக்குதல் (மற்றும் விமர்சிக்கப்படுதல்) (மத். 9:27-34).*

U. *நாசரேத்தூருக்கு வருதல் (மற்றும் புறக்கணிக்கப்படுதல்) (மத். 13:54-58; மாற். 6:1-6; லூக். 4:16-31).*

V. *கலிலேயாவுக்கு இயேசுவின் மூன்றாம் பயணம் (மற்றும் பன்னிருவருக்கு அறிவுறுத்துதல்) (மத். 9:35-38; 10:1-42; 11:1; மாற். 6:6-13; லூக். 9:1-6).*

W. *இயேசுவின்மீது ஏரோதுவின் ஆர்வம் (மற்றும் யோவான் ஸ்நானனின் மரணம் பற்றிய விவரம்) (மத். 14:1-12அ; மாற். 6:14-29; லூக். 9:7-9).*

X. *ஏரோதுவின் ஆளுகைப் பகுதியில் இருந்து இயேசு விலகிச் செல்லுதல் (மற்றும் திரும்பி வருதல்).*

   1. *பன்னிருவர் திரும்பி வருதலும் கலிலேயாக் கடலின் கிழக்குக் கரைப் பகுதிக்குப் போய் ஓய்வெடுத்தலும் (மத். 14:12ஆ, 13; மாற். 6:30-32; லூக். 9:10; யோவா. 6:1).*
   2. *ஐயாயிரம் ஆண்களுக்கு உணவளித்தல் (மத். 14:13-21; மாற். 6:33-44; லூக். 9:11-17; யோவா. 6:2-14).*
   3. *தண்ணீரின்மீது நடத்தல் (மத். 14:22-36; மாற். 6:45-56; யோவா. 6:15-21அ).*

Y. *ஜீவ அப்பம் பற்றி இயேசுவின் உரை (மற்றும் பேதுருவின் அறிக்கை) (யோவா. 6:21ஆ-71).*

VI. *மூன்றாவது பஸ்காவிலிருந்து இயேசு பெத்தானிக்கு வந்து சேர்ந்தது வரை.*

A. *மூன்றாவது பஸ்கா (யோவா. 6:4; 7:1ஐக் காணவும்).*

B. *பாரம்பரியத்தை மதிக்கவில்லை என்று கடிந்து கொள்ளப்படுதல் (மத். 15:1-20; மாற். 7:1-23).*

C. *ஏரோதுவின் எல்லைப் பகுதியிலிருந்து விலகிச் செல்லுதல் (மத். 15:21; மாற். 7:24).*

D. *பெனிக்கியா (அல்லது கானானிய) பெண் ஒருத்தியின் மகளைக் குணமாக்குதல் (மத். 15:22-28; மாற். 7:25-30).*

E. *ஏரோதுவின் எல்லையைத் தவிர்த்தல் (மத். 15:29; மாற். 7:31).*

F. *காது கேளாதவர் உட்படப் பலரைக் குணமாக்குதல் (மத். 15:30, 31; மாற். 7:32-37).*

G. *நான்காயிரம் ஆண்களுக்கு உணவளித்தல் (மத். 15:32-39அ; மாற். 8:1-9).*

H. *ஏரோதுவின் எல்லைப் பகுதியில் இருந்து இன்னொரு விலகிச் செல்லுதல்.*

   1. *கலிலேயாவில்: இயேசுவின் விரோதிகளால் இன்னொரு தாக்குதல் - அதைத் தொடர்ந்து*

*இன்னொரு பின்வாங்குதல் (மத். 15:39ஆ-16:12; மாற். 8:10-21).*

2. *பெத்சாயிதாவில்: பார்வையற்ற ஒரு மனிதர் குணமாக்கப்படுதல் (மாற். 8:22-26).*
3. *பிலிப்புச் செசரியாவின் அருகில்: நல்ல அறிக்கை (மத். 16:13-20; மாற். 8:27-30; லூக். 9:18-21).*
4. *பிலிப்புச் செசரியாவின் அருகில்: இயேசுவின் மரணம் முன்னுரைக்கப்பட்டது (மத். 16:21-28; மாற். 8:31-38; லூக். 9:22-27).*
5. *பிலிப்புச் செசரியாவின் அருகில் (எர்மோன் மலைமீது?): மறுரூபமாகுதல் (மத். 17:1-13; மாற். 9:2-13; லூக். 9:28-36).*

32

# "அவர் அநேக விஷயங்களை உவமைகளாக . . . சொன்னார்"

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #12*

V. *இரண்டாம் பஸ்காவில் இருந்து மூன்றாம் பஸ்கா வரை (தொடர்ச்சி).*
  O. *உவமைகளின் முதல் மாபெரும் தொகுப்பு.*
    1. *நிகழ்வுவேளையும் அமைவும் (மத். 13:1-3; மாற். 4:1, 2; லூக். 8:4).*
    2. *விதைப்பவன் உவமையும் விளக்கமும் (மத். 13:3-23; மாற். 4:3-25; லூக். 8:5-18).*
    3. *மறைவான வளர்ச்சியின் உவமை (மாற். 4:26-29).*
    4. *களைகளின் உவமை (மத். 13:24-30).*
    5. *கடுகு விதை, புளித்தமா ஆகியவற்றின் உவமைகள் (மத். 13:31-35; மாற். 4:30-34).*
    6. *களைகளின் உவமை விளக்கப்படுதல் (மத். 13:36-43).*
    7. *பொக்கிஷம், முத்து ஆகியவற்றின் உவமைகள் (மத். 13:44-46).*
    8. *மீன்பிடி வலையின் உவமை (மத். 13:47-53).*

### அறிமுகம்

*முந்திய பாடத்தில் நாம், "ஒரு மும்முரமான நாள்" என்று அழைக்கப்பட்ட நாளைப் பற்றிய ஆய்வு ஒன்றைத் தொடங்கினோம். இயேசு சாத்தானுடைய வல்லமையினால் அசுத்த ஆவிகளைத் துரத்தினார் என்ற பரிசேயர்களின் குற்றச்சாட்டு அந்த நாளின் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாக இருந்தது. அதைத்தொடர்ந்து வந்த எதிர்கொள்ளுதலானது கிறிஸ்துவின் ஊழியத்தில் ஒரு திருப்புமுனையைக் குறிப்பிட்டது. இயேசு தமது பிரசங்க பாணியை மாற்றிக்கொண்டார் என்பது ஒரு விளைவாயிருந்தது: அவரது வெளிப்படையான போதனையானது அதிகம் அதிகமாக உவமைகளின் மூலமாகச் செய்யப்பட்டது (மத். 13:34, 35; மாற். 4:33, 34). கலிலேயாக் கடலின் குறுக்கே இயேசு பின்வாங்கிச் சென்றது*

என்பது இன்னொரு விளைவாயிருந்தது (மாற். 4:33, 35). கடல் பயணம் பற்றி நாம் நமது அடுத்த பாடத்தில் படிப்போம். இந்தப் பாடத்தில் நாம், கர்த்தருடைய "உவமைகளின் முதல் மாபெரும் தொகுப்பின்"மீது நமது கவனத்தைச் செலுத்துவோம்.[1]

முந்திய பாடமானது, இயேசுவின் தாயும் சகோதரர்களும் அவரைக் காண்பதற்கு வந்த வரலாற்றுடன் முடிந்தது (மத். 12:46-50). அதைத் தொடர்ந்து, கிறிஸ்து தாம் போதித்துக் கொண்டிருந்த வீட்டை விட்டுப் புறப்பட்டு, தமக்குப் பிரியமான இடங்களின் ஒன்றான கலிலேயாவின் கடற்கரைக்குச் சென்றார் (மத். 13:1; மாற். 4:1). வழக்கம்போல், அவரது உரையைக் கேட்பதற்கு மக்கள் எல்லா இடங்களிலும் இருந்து அங்கு வந்தார்கள் (லூக். 8:4), அவர் மீண்டும் ஒருமுறை படகில் இருந்தபடியே கரையில் இருந்த மக்களை நோக்கிப் பேசும்படி கட்டாயப்படுத்தப்பட்டார் (மத். 13:2; மாற். 4:1).

சூழ்நிலை பழக்கமானதாக இருக்கலாம், ஆனால் அவரது பிரசங்கம் அவ்வாறானதாக இருக்கவில்லை: அது கதைகளின் வரிசைத்தொடர் ஒன்றைக் கொண்டிருந்தது - அவை யாவும் சிறியவைகளாக, அவற்றில் சில மிகவும் சிறியவைகளாக இருந்தன. "அவர் அநேக விஷயங்களை உவமைகளாக அவர்களுக்குச் சொன்னார்" (மத். 13:3அ; மாற். 4:2அ-வைக் காணவும்).

இயேசு இதற்கு முன்னும் உவமைகளைப் பயன்படுத்தியிருந்தார். மலைப் பிரசங்கம் பற்றிய லூக்கா சுவிசேஷ விவரத்தில், பார்வையற்றவர் பார்வையற்றவரை நடத்திச் செல்லுதல் பற்றி கிறிஸ்து "ஒரு உவமையைப் பேசினார்" என்று கூறப்படுகிறது (லூக். 6:39). பரிசேயரான சீமோனுடன் இயேசு உணவு உட்கொண்ட வேளையில், அவர் இரு கடன்காரர்கள் பற்றிய உவமையைக் கொடுத்தார் (லூக். 7:41, 42).[2] ஏழு அசுத்த ஆவிகள் பற்றிய அவரது விவரிப்பை ஒரு உவமையாகவே பலர் வகைப்படுத்து கின்றார்கள் (லூக். 11:24-26).[3] கிறிஸ்து உவமைகளின் பயன்பாட்டை விரிவாகவும் தனிப்பட்ட வகையில் முழுமையாகவும் பயன்படுத்தினார் என்பதே இவ்வேளையின் வேறுபாடாக இருந்தது. மத்தேயு, "இவைகளையெல்லாம் இயேசு ஜனங்களோடே உவமைகளாகப் பேசினார். உவமைகளினாலேயன்றி, அவர்களோடே பேசவில்லை"[4] என்று எழுதினார் (மத். 13:34; மாற். 4:33, 34ஐக் காணவும்). அவரது போதனையை விவரிப்பதற்கு உவமையைப் பயன்படுத்துதல் என்பதற்குப் பதிலாக, உவமைகள் என்பவை அவரது போதனையின் கருவியாயின.

இயேசுவின் ஊழியத்தின் எஞ்சிய பகுதியில் உவமைகள் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக ஆனதால், நாம் உவமைகளைப் பற்றிப் பொதுவாகக் கலந்துரையாடுதல் அவசியமாகிறது. பின்பு நாம் "ஒரு மும்முரமான நாளில்" கிறிஸ்துவால் உரைக்கப்பட்ட பத்து அல்லது அதற்கு ஏறக்குறைய இருந்த உவமைகளைச் சுருக்கமாகக் கவனிப்போம்.

## *உவமைகள்: ஒரு விளக்கம்*
## *(மத். 13:10-17; மாற். 4:10-13, 21-25; லூக். 8:9, 10, 16-18)*

*இயேசு ஒருவர் மாத்திரமே உவமைகளைப் பயன்படுத்திய பிரசங்கியா ராக இருந்ததில்லை. உவமைகள் என்பவை பழைய ஏற்பாட்டுப் பேச்சாளர் களின் செய்தித் தொகுப்புகளின் அங்கமாக இருந்தன (சங். 78:2;[5] எசே. 17:2; 20:49; 24:3; ஓசியா 12:10). இருப்பினும், "உவமைகளைப் பயன்படுத்துவதில் குறிப்பிடத்தக்க அளவு தனிச்சிறப்பானவராக வரலாற்றில் கூறப்படும் ஒரே போதகராக உள்ளவர் இயேசு மட்டுமே.'"[6] உவமைகளைப் பற்றிக் குறிப்பிடும்போதெல்லாம் நாம் எவ்வித மாறுபாடும் இன்றி அவரைப் பற்றியே நினைக்கின்றோம்.*

F. *லாகார்டு ஸ்மித் அவர்கள், "மாபெரும் போதகர் என்ற வகையில் இயேசு தமது சீஷர்களுக்கு அறிவுறுத்த எண்ணற்ற முறைகளைப் பயன்படுத்துகின்றார் ... ஆயினும் இந்த முறைகள் எல்லாவற்றிலும் மிகவும் ஆர்வத்திற்குரியதும் தனிச்சிறந்த போதனை வகையாக இருப்பதும் அவர் உவமைகளைப் பயன்படுத்துதல் என்பதாகவே இருக்கலாம்'' என்று எழுதினார்.*[7] H. I. *ஹெஸ்டர் அவர்கள், "இயேசுவின் உவமைகள் இலக்கிய நயத்தில் இணையற்றவைகளாக உள்ளன: 'அவைகள் உலகத்தின் இலக்கியக் கலைகளில் மிகுந்த நேர்த்தியானவைகளாக, எளிமையுடன் தொகுக்கபட்ட வைகளாக, ஆழ்ந்தறிவுள்ள சிந்தனை உடையவைகளாக, உணர்வில் ஆரம்பத்தன்மையும் ஆவிக்குரிய வகையில் வலிவார்ந்த தன்மையும் உடையவைகளாக இருக்கின்றன' " என்று கூறினார்.*[8]

### *உவமைகள்: என்ன?*

*"உவமை'' என்ற வார்த்தையானது "உடன்'' என்று அர்த்தப்படும் கிரேக்க முன்னிடைச் சொல்லுடன் (para) "எறிதல்" என்று அர்த்தப்படும் கிரேக்கப் பெயர்ச் சொல்லை (ballo) இணைத்துப் பெற்ற கிரேக்கக் கூட்டுச் சொல்லில் (parabole) இருந்து வருகிறது. இது உண்மையில் "உடன் எறியப்பட்ட பொருள்" என்று அர்த்தப்படுகிறது. இது* "parallel" *(இணை) என்ற வார்த்தையுடன் தொடர்புபட்டுள்ளது, இதனை இரு இணைகோடு கள் வரைவதன் மூலம் விவரிக்க முடியும்:*

*ஒரு உவமையில், (கூறப்பட்ட) ஒரு எடுத்துரைப்பு அல்லது கதையானது (வழக்கமாகப் பேசப்படாத) ஆவிக்குரிய "சத்தியத்துடன் எறியப்படுகிறது." அந்த எடுத்துரைப்பு அல்லது கதை என்பது மிகவும் எளிமையானதாக இருந்தது, ஆனால் தனிச்சிறப்பு வாய்ந்த, ஆழ்ந்தறிவுள்ள சத்தியத்தைப் போதித்தல் என்பதே அதன் நோக்கமாக இருந்தது. இந்த இணைவியமானது பின்வருமாறு விவரிக்கப்படக்கூடும்:*

*பேசப்பட்ட எடுத்துரைப்பு அல்லது கதை*

---

---

*பேசப்படாத ஆவிக்குரிய சத்தியம்*

*வசனத்தை முறையாகப் புரிந்துகொள்ளுதல் பற்றிய சில புத்தகங்களில்,[9] "விரிவாக்கப்பட்ட இருபொருள் உவமை"[10] என்பது உவமையின் நுட்பக் கருத்தான விளக்கமாக உள்ளது. ஒரு இருபொருள் உவமை* simile ("SIM-uh-lee" *என்று உச்சரிக்கப்படுகிறது) என்பது "போல" அல்லது "இப்படிப்பட்ட" என்ற வார்த்தையைப் பொதுவாகப் பயன்படுத்துகிற ஒப்பீட்டை ஏற்படுத்தும் பேச்சின் உருவகமாக உள்ளது. "நரியைப் போலத் தந்திரம்" மற்றும் "இரத்தம் போலச் சிகப்பு" என்பவை இருபொருள் உவமைகளாகும். சில உவமைகள் இந்த விளக்கத்திற்குள் பொருந்துகின்றன; ஆனால் புதிய ஏற்பாட்டில், இச்சொற்றொடரானது இவ்வழி முறையில் கட்டுப்படுத்தப்படுவதில்லை. சில உவமைகள் "போல" "வாறு" அல்லது இதைப் போன்ற மற்ற சொற்களுடன் அறிமுகப்படுத்தப்படுகின்றன (மத். 13:31, 33, 44, 45), ஆனால் எல்லா உவமைகளும் இவ்வாறு அறிமுகப் படுத்தப்படுவதில்லை (மத். 13:3; லூக். 7:41, 42ஐக் காணவும்). மற்றும், சில வேளைகளில் உவமைகள் வார்த்தையின் எந்தக் கருத்தறிவிலும் விரிவாக்கப் படாமல், மிகவும் சுருக்கமாக்கப்பட்டுள்ளன (லூக். 6:39).*

*உவமையானது, "பரலோக அர்த்தம் கொண்ட பூலோகக் கதை" என்றும் அழைக்கப்பட்டுள்ளது. இது நல்ல சமாரியன் (லூக். 10:30-37) மற்றும் காணாமற்போன மகன் (லூக். 15:11-32) போன்ற நன்கு அறியப்பட்டுள்ள உவமைகள் சிலவற்றிற்குப் பொருந்துகிறது, ஆனால் சில உவமைகளைக் கதைகள் என்ற வகைப்படுத்துதல் கடினமானதாக இருக்கும் (லூக். 6:39; 8:16ஐக் காணவும்).*

*இயேசுவின் உவமை பற்றிய மாறுபட்ட பட்டியல்களைப் பரிசோதியுங்கள், அப்போது நீங்கள் இருபொருள் உவமை, ஒப்புவமை, உவமைக் கதை அல்லது பேச்சின் பிற ஒப்பீட்டு உருவகங்களாக வகைப்படுத்தக் கூடிய வசனப் பகுதிகளைக் கண்டறிவீர்கள். சில வேளைகளில் உவமைகள், நாம் வழக்கமாக விவரிப்புகள் என்று அழைப்பவைகளாக உள்ளன.[11] லூக்கா 4:23ல் கிறிஸ்து ஒரு பழமொழியை உவமை என்று குறிப்பிட்டார்.[12] ஆகையால், புதிய ஏற்பாட்டு உவமையை, ஏறக்குறைய நன்கு பழக்கப்பட்ட சூழ்நிலைக்கும்[13] பழக்கப்படாத ஆவிக்குரிய சத்தியத்திற்கும் இடையில் கொண்டு வரப்படுகிற ஒப்பீடு என்று எளிமையாய் நினைத்தல் மிகச் சிறந்ததாக உள்ளது. முதலாவதானது பொதுவாக எடுத்துரைக்கப்படுகிறது, இரண்டாவதானது பொதுவாக எடுத்துரைக்கப்படாமல் மறைவாக உணர்த்தப்படுகிறது.*

***உவமைகள்: ஏன்?***

*இந்த வேளையில் இயேசு உவமைகளை மிக விரிவாகப் பயன்*

*படுத்தியது சீஷர்களைத் திகைக்கச் செய்தது. அவர் அவற்றைக் கூறி முடித்தபின்பு, அவர்கள் தனியாக அவரிடத்தில் வந்து, "ஏன் அவர்களோடே உவமைகளாகப் பேசுகிறீர்?" என்று கேட்டார்கள் (மத். 13:10). கிறிஸ்து ஏன் உவமைகளைப் பயன்படுத்தினார்?*

*முதலாவது, அவர் திறந்த மனமுள்ளவர்களுக்கு சத்தியத்தை வெளிப் படுத்த உவமைகளைப் பயன்படுத்தினார். சட்டப்படி, நாம் உவமைகளின் நோக்கத்தை ஆழ்ந்து சிந்திக்கையில், முதலில் நாம் அவற்றின் நேர்மறையான மதிப்பையே நினைத்துப் பார்க்கின்றோம்:*

- *உவமைகள் நமது கவனத்தைக் கவர்கின்றன: ஏறக்குறைய எல்லாருமே கதையை விரும்புகின்றோம்.*
- *உவமைகள் நமது சிந்தனையைத் தூண்டுகின்றன: அவைகள் நம்மை, "இது எதனை அர்த்தப்படுத்துகிறது?" என்று கேட்க வைக்கின்றன.*
- *உவமைகள் நமது புரிந்துகொள்ளுதலை ஒளியூட்டுகின்றன: அவைகள், புரிந்துகொள்ளக் கடினமான கொள்கைகளை விவரிக்கின்றன.*
- *உவமைகள் நமது ஞாபகத் திறனை வளப்படுத்துகின்றன: அவைகள் நினைவில் வைத்துக் கொள்வதற்குச் சுலபமானவைகளாக உள்ளன.*

*உவமைகள், ஆவிக்குரிய கருத்துக்களை நாம் புரிந்துகொள்ளவும் மதிக்கவும் உதவுகின்றன. சந்தேகத்திற்கு இடமின்றி, அவைகள் இயேசுவின் சீஷர்களுக்கும் உதவின. கிறிஸ்து ஞானமுள்ள போதகரை, "தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக் கொடுக்கிற வீட்டெஜமானாகிய மனுஷனுக்கு" ஒப்பிட்டார் (மத். 13:52). உவமைகள் என்பவை, பழமையான சத்தியத்தைப் போதிக்கும் புதிய வழிமுறையாக இருந்தன.*

*இரண்டாவது, மூடலான [ஏற்றுக்கொள்ளாத] மனமுள்ளவர்களுக்குச் சத்தியத்தை மறைப்பதற்காக உவமைகளைப் பயன்படுத்தினார். இயேசு ஏன் உவமைகளில் பேசினார் என்று அவரது சீஷர்கள் அவரிடத்தில் கேட்டபோது, அவர் நேர்மறையான கருத்தின்மீதல்ல, ஆனால் எதிர்மறை யான கருத்தின்மீதே கவனம் செலுத்தினார். அவர், "அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும் உணர்ந்துகொள்ளாத வர்களாயும் இருக்கிறபடியினால், நான் உவமைகளாக அவர்களோடே பேசுகிறேன்" என்றார் (மத். 13:13). அவர் ஏசாயாவின் கூற்றை மேற்கோள் காண்பித்தார்: "... அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள்" (மத். 13:15; ஏசா. 6:10ஐக் காணவும்).*

*நீங்கள் இந்த வார்த்தைகளை வாசிக்கையில், சந்தர்ப்பப் பொருளைச் சிந்தையில் வைத்துக் கொள்ளுங்கள்: இயேசு பெயல்செபூலின் வல்லமையால் அசுத்த ஆவியைத் துரத்தினார் என்று குற்றம் சாட்டியதினால், பரிசேயர்கள் தங்கள் இருதயங்கள் பழுது பார்க்க இயலாத வகையில் கடினப்பட்டுக் கிடந்ததைச் செயல்விளக்கப்படுத்தினார்கள். அவர்கள் சத்தியத்தைக் கற்றுக்கொள்வதற்கல்ல ஆனால் இயேசுவை அகப்படுத்தச் சில வழிவகைகளைக்*

*கண்டறிவதற்காகவே அவர் உரைத்தவற்றைக் கவனித்தார்கள் என்பது தெளிவாயிருந்தது. பகையுணர்வு மிகுந்திருந்த இந்தச் சூழலில் இயேசு "கதைகளை" - கற்றுக்கொள்ள மனவிருப்பமற்றவர்களுக்கு மதியீனமான வைகளாகத் தோன்றிய கதைகள், ஆனால் அவற்றின் அர்த்தத்தைக் கண்டுபிடிக்க நேரம் எடுத்துக்கொள்ள விரும்பியவர்களின் இருதயங்களை ஒளியூட்டிய கதைகளை - கூறத் தொடங்கினார் (மத். 13:16, 17).*

*உவமைகள் இவ்விதமாக நேர்மையான இருதயங்களிலிருந்து கடினமான இருதயங்களைப் பிரித்தன. ஒரு வகையில், மூடப்பட்ட சிந்தையுள்ளவர்களுக்கு அவைகள் ஒரு நியாயத்தீர்ப்பாய் இருந்தன.*

***உவமைகள்: எவ்வாறு?***

*கிறிஸ்துவின் உபதேச ஊழியம் பற்றிய நமது படிப்பில் உவமைகள் பெரிய பெரிய பங்கினைச் செயலாற்றும் என்பதால், இவற்றை எவ்வாறு விளக்கப்படுத்துவது என்பது பற்றி நாம் ஒரு சில வார்த்தைகளைக் கூறவேண்டும்?*

*வேதாகமத்தில் உள்ள பேச்சு உருவகங்களை விளக்கப்படுத்துவதற்கான பொதுவான செயல்முறை மூன்று படிநிலைகளைக் கொண்டுள்ளது: (1) உருவகத்தைப் புரிந்துகொள்ளுதல்; (2) அது எடுத்துரைக்கும் வேதாகம சத்தியத்தை உறுதிப்படுத்துதல்; (3) இவ்விரண்டும் பொதுவில் கொண்டுள்ளது என்ன என்பதைத் தீர்மானித்தல். உவமைகள் பற்றிய படிப்பிற்கு, பின்வரும் படிநிலைகள் தழுவிக்கொள்ளப்படலாம்: (1) கதையைப் பற்றி அல்லது இயேசு ஏற்படுத்திய கூற்றைப் பற்றி உங்களால் இயன்ற பின்னணி யாவற்றையும் கண்டறியுங்கள். காட்சியமைப்பானது அவர் கூறியதை முதன் முதலில் கேட்டவர்களுக்குப் பழக்கமானதாக இருந்திருக்கலாம், ஆனால் சில காட்சியமைவுகள் இன்றைய நாட்களில் நமக்குப் பழக்கமற்றவையாக உள்ளன. (2) போதிக்கப்படும் அடிப்படை சத்தியத்தைத் தீர்மானிக்க முயற்சி செய்யுங்கள். அவ்வப்போது இயேசு உவமையை விவரமாக விளக்கியிருந்தார் (மத். 13:18-23, 36-43). சில வேளைகளில் அவர் உவமையைத் தொடர்ந்து ஒரு நடைமுறைப் பயன்பாட்டையும் விளக்கப்படுத்தினார் (லூக். 7:42ஆ-47; 10:29, 36, 37; 12:40). சந்தர்ப்பப் பொருளானது உவமையின் செய்திக்கு குறிப்பொன்றைப் பெரும்பாலும் அளிக்கிறது (லூக். 15:1-3; 18:1). சிலவேளைகளில் கிறிஸ்துவின் ராஜ்யத்தினுடைய சத்தியங்களைப் பற்றிய பொதுவான அறிவு மாத்திரமே நீங்கள் கொண்டுள்ள உதவியாக உள்ளது. (3) கடைசியாக, உவமையானது அடிப்படை சத்தியத்தின்மீது எவ்வாறு வெளிச்சம் வீசுகிறது என்பதைக் காண்பதற்கு உவமையையும் சத்தியத்தையும் பக்கம் பக்கமாக வையுங்கள்.*

*மூன்றாவது படிநிலையின் தொடர்பாக, விதிப்படி ஒவ்வொரு உவமையிலும் மையக்கருத்தான சத்தியம் ஒன்று வலியுறுத்தப்படுவதைப் புரிந்துகொள்ள வேண்டும். இதற்கு விதிவிலக்குகள் உள்ளன (இப்பாடத்தின் பிற்பகுதியில் இரண்டு விதிவிலக்குகளை நாம் ஆராய் வோம்), ஆனால், ஒரு உவமையை நாம் அளவுக்கு அதிகமாக விளக்கி யுரைத்து ஒவ்வொரு சிறு விவரத்திற்கும் ஒரு அர்த்தம் உள்ளதென்று கருத்து*

*ஏற்படுத்துவதைக் குறித்து ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.[14] எடுத்துக்காட்டாக, இந்தப் பாடத்தில் படிப்பதற்காக கொடுக்கப்பட்டவை களில் ஒரு நிலத்தில் புதையுண்டிருந்த பொக்கிஷத்தைப் பெறுவதற்காக அந்த நிலத்தை வாங்கிய மனிதன் பற்றிய உவமை உள்ளடங்குகிறது (மத். 13:44). ராஜ்யம் மதிப்புமிக்கது என்பதே அவ்வுவமையின் கருத்தாக உள்ளதே தவிர, நாம் அந்த மனிதனின் செயல்களை (அவைகள் சந்தேகத்தை எழுப்பக் கூடியவைகள்) போலச் செய்ய வேண்டும் என்பது இங்கு கருத்தல்ல. முன்பு நாம் இரண்டு கடன்காரர்கள் பற்றிய உவமையைப் படித்து, தேவன் அந்த நாட்களில் இருந்த இரக்கமற்ற கடன்கொடுப்பவர் களுடன் ஒப்பிடப்படக் கூடாது என்று வலியுறுத்தினோம். நாம் பிற்பாடு படிக்கவிருக்கும் வசனப்பகுதிகளில் இருந்து இன்னும் இரண்டு விவரிப்பு களை ஆழ்ந்து சிந்தியுங்கள்: நாம் ஒவ்வொரு விவரத்தையும் "பொருத்தப் படுத்த" முயற்சி செய்தால், லூக்கா 12:39, 40ல் இயேசுவின் வார்த்தைகள், அவர் ஒரு திருடராய் இருக்கின்றார் என்று கருத்துத் தெரிவிப்பதாக இருக்கும், மற்றும் லூக்கா 18:1-6ல் உள்ள உவமையானது தேவனை ஒரு அநீதியான நியாயாதிபதி என்று பெயரிடுவதாயிருக்கும்.*

*உவமைகளை விளக்கப்படுத்துவதற்கு இன்னும் ஒரு சில பொதுவான கொள்கைகள் புரிந்து கொள்ளப்பட வேண்டும். (1) பெரும்பாலான உவமைகள் "ராஜ்யத்தின்" உவமைகளாக உள்ளன (மத். 13:24, 31, 33, 44, 45, 47ஐக் காணவும்). அவைகள், ராஜ்யத்தில்/சபையில் உள்ள குடிமக்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது உட்பட ராஜ்யத்தின் அம்சங் கள் சிலவற்றை வெளிப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டிருந்தன.[15] (2) இரண்டு உவமைகள் ஒரே விவரங்களைக் கொண்டிருக்கையில், அவ்விவரங்கள் இரு உவமைகளிலும் ஒரே விதமாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. எடுத்துக்காட்டாக, விதைப்பவன் உவமையில், "விதை தேவனுடைய வசனமாக உள்ளது" (லூக். 8:11), அதே வேளையில் களைகளின் உவமையில், விதைகள் என்பவை "ராஜ்யத்தின் புத்திரர்களாக" உள்ளார்கள் (மத். 13:38). (3) உவமைகள் என்பவை பேச்சு உருவகங்களாக இருப்பதால், அவை அடிப்படையில் புதிய சத்தியத்தை வெளிப்படுத்து வதற்கு மாறாக சத்தியத்தை விளக்கப்படுத்துகின்றன. ஆகையால் ஒருவர், "ஒரே ஒரு உவமையை மட்டும் வைத்துக்கொண்டு மார்க்க உபதேசத்தை நிரூபிக்கத் தயங்க வேண்டும்."[16]*

*உவமைகளின் மீதான பின்னணிக்கு அது போதுமானதாக உள்ளது. இப்போது நாம் ''மும்முரமான நாளில்'' இயேசுவால் பேசப்பட்ட உவமைகளைக் கண்ணோக்குவோம்.*

## *உவமைகள்: உதாரணங்கள்*
## *(மத். 13:3-9, 18-33, 36-50; மாற். 4:3-9, 14-20, 26-32; லூக். 8:5-8, 11-15)*

*அந்த நாளில் (மாற். 4:2) பேசப்பட்ட எல்லா உவமைகளைப் பற்றிய*

பதிவேடு நமக்கு உள்ளதா என்று நாம் அறிவதில்லை, ஆனால் மத்தேயு குறைந்தபட்சம் ஒன்பது உவமைகளைக் கூறியுள்ளார். மாற்குவும் மத்தேயு குறிப்பிட்ட எல்லா உவமைகளையும் குறிப்பிட்டு, அத்துடன் மத்தேயு பதிவு செய்திராத ஒரு உவமையையும் குறிப்பிட்டுள்ளார். லூக்கா சுவிசேஷத்தில் ஒரே ஒரு உவமை மாத்திரமே காணப்படுகிறது: விதைப்பவன் உவமை.

### *விதைப்பவன் உவமை (மத். 13:3-9, 18-23; மாற். 4:3-9, 14-20; லூக். 8:5-8, 11-15)*

விதைப்பவன் உவமையின் முக்கியத்துவத்தின் காரணமாக அது ஒப்பீட்டு சுவிசேஷங்கள் மூன்றிலும் காணப்படுகிறது. இயேசு தமது சீஷர்கள் இந்த உவமையைப் புரிந்துகொள்ள முடியாதென்றால், அவர்களால் வேறு எந்த உவமையையும் புரிந்துகொள்ள முடியாது என்றார் (மாற். 4:13). இது எல்லா உவமைகளுக்கும் ஒரு திறவுகோலை அளிக்கிறது:[17] இது உவமைகள் ஏன் அவசியமாயிருந்தன என்பதைப் புரிந்துகொள் வதற்கான திறவுகோலாக இருந்தது. இயேசுவின் உரையைக் கேட்க வந்திருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் இல்லையென்றாலும், பலர் கடினப்பட்ட, ஆழமற்ற அல்லது பிரிவுபட்ட இருதயங்களைக் கொண்டிருந் தார்கள். குறிப்பிட்ட இந்த உவமையானது, உவமைகளைப் பொதுவாகப் புரிந்துகொள்வதற்கான ஒரு திறவுகோலையும் அளித்தது. கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் இந்தக் கதையை விளக்குவது எவ்வாறு என்பதைக் கற்றுக்கொள்ளுதலானது, மற்ற உவமைகளை விளக்கப்படுத்த அவர்களுக்கு உதவும். விதைப்பவன் உவமை பின்தொடரும் பிரசங்கத்தின் விரிவாக ஆராயப்படும், ஆனால் இவ்வேளையில் ஒரு சில விளக்கங்களை முறைப்படி தருதல் என்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது.

கடலோரத்தில் இயேசு தமது போதனையை, நான்கு வகையான நிலங்களைப் பற்றிக் கூறுதலின் மூலம் தொடங்கினார்: வழியோர[18] நிலம், பாறை நிலம், முட்புதரான நிலம் மற்றும் நல்ல நிலம்.[19] அவர் இதைக் கூறி முடித்தபின்பு,[20] அவர்கள் தனிமையில் இருந்த வேளையில், அவரது சீஷர்கள் அவரிடத்தில், அந்த உவமை எதை அர்த்தப்படுத்திற்று என்று கேட்டார்கள் (மாற். 4:10; லூக். 8:9).[21] அவர், நிலத்தின் வகை ஒவ்வொன்றும், வசனத்தைக் கேட்பதில் எவ்வகையான செயல்விளைவை ஏற்படுத்தும் என்பதைப் பாதிக்கின்ற இருதயத்தின் சூழ்நிலையொன்றைக் குறித்தது என்று விளக்கம் தந்தார். ‘‘உண்மையும் நன்மையுமான’’ இருதயங்களைக் கொண்டவர்கள் மட்டுமே ஆவிக்குரிய வகையில் பலன்மிகுந்த வாழ்வை வாழ முடியும், வாழ்வார்கள் (லூக். 8:15).

ஒவ்வொரு நாளிலும் இயேசு இந்த நான்கு வகைப்பட்ட இருதயம் கொண்டவர்களால் சூழப்பட்டிருந்தார். கடின இருதயங்கொண்ட பரிசேயர்கள் கிறிஸ்துவை அகப்படுத்த முயற்சி செய்தார்கள். ஆழமற்ற சிந்தை கொண்ட திரளான கூட்டத்தார் கிறிஸ்துவின் ஊழியம் மற்றும் அற்புதங்களினால் பிடிபட்டு இருந்தார்கள், ஆனால் அவரது ஊழியத்தின் உண்மையான இயல்பைப் புரிந்துகொள்ளத் தவறினார்கள். பிரிவு

*பட்டிருந்த இருதயங் கொண்டவர்களும் இருந்தார்கள் - இதற்கு மாதிரியாக யூதா [ஸ்காரியோத்] இருந்தான், இவன் தனது பணத்தாசையுடன் போராடிக் கொண்டிருந்தான் (யோவா. 12:6ஐக் காணவும்). அவரது முயற்சியைப் பலனுள்ளதாக்கிக் கொண்டிருந்த ஒரு சில உண்மையும் நன்மையுமான இருதயங்களும் அவரைச் சுற்றியிருந்தன.*

*இயேசு யூதமதத் தலைவர்களால் புறக்கணிக்கப்பட்டிருந்தது ஏன் என்பதை இயேசுவின் சீஷர்களுக்கு விளக்கப்படுத்தும் நடைமுறை நோக்கத்திற்கும் இந்த உவமை பயன்பட்டது. இது, அவர்கள் தங்கள் சொந்த பிரசங்கித்தலைத் தொடங்கவிருந்த எதிர்வரும் நாட்களிலும் ஒரு நடைமுறை நோக்கத்திற்குப் பயன்படுவதாயிருந்தது: இது, சிலர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளுகையில் சிலர் அதை ஏன் ஏற்றுக் கொள்ளுவதில்லை என்பதை விளக்கப்படுத்தும். இந்த உவமையின் செய்தியானது, இன்றைய நாட்களில் வசனத்தைப் போதித்துப் பிரசங்கிக் கின்ற எல்லாருக்கும் இன்னமும் வலிவாக தேவைப்படுவதாக உள்ளது.*

***மறைவான வளர்ச்சியின் உவமை (மாற். 4:26-29)***

*மாற்கு சுவிசேஷத்தின்படி, இயேசு விதைப்பவன் உவமையைக் கூறிய உடன், அவர் அறுவடைக் காலம் வரையிலும் தானே வளர்ந்த ஒரு விதையைப் பற்றிக் கூறினார்.[22] இது பண்படுத்துதல் தேவைப்படாத பயிர் ஒன்றை நட்டுள்ள எவரொருவருக்கும் நன்கு பழக்கப்பட்ட விவரங்கள் கொண்ட ஒரு எளிய கதையாக உள்ளது.[23] முந்தின உவமையில் போலவே, இதிலும் நிலம் என்பது மனிதரின் இருதயம் என்றும் விதை என்பது சுவிசேஷம் என்றும் நாம் நினைக்கக் கூடும். அநேகமாக இந்த உவமை யானது சீஷர்களை உற்சாகப்படுத்துவதற்காகக் கூறப்பட்டதாக இருக்க வேண்டும்:*

- *நாம் அறிந்தாலும் அறியாதிருந்தாலும், சுவிசேஷமானது அதனைக் கேட்பவர்களின் இருதயங்களில் செயல்விளைவை ஏற்படுத்துகிறது.*
- *விதையானது முளைத்து வளர காலத்தை எடுத்துகொள்கிறது, எனவே நாம் பொறுமையாக இருக்க வேண்டியது அவசியமாகிறது.*
- *விதைத்தல் என்ற பணியில் நாம் உண்மையுடன் நிலைத்திருந்தால் தேவன் நிறைவாக விளைச்சலைக் கொடுப்பார் (1 கொரி. 3:6).*

*நாற்பத்தி ஏழு ஆண்டுகளுக்கு முன்பு, நான் கிறிஸ்துவின் வாழ்வு பற்றி J. W. இராபர்ட்ஸ் அவர்களின் கீழாகப் படித்துக் கொண்டிருந்தபோது, சகோதரர் இராபர்ட்ஸ் அவர்கள், கர்த்தருடைய சபை இல்லாத இடம் ஒன்றில் சுவிசேஷக் கூட்டம் ஒன்று நடத்திய Gospel Advocate என்ற பத்திரிகையின் ஆசிரியரைப் பற்றிக் கூறினார். மூன்று வாரங்களாக, அந்தப் பிரசங்கியார் உழைத்து, ஒவ்வொரு பிரசங்கத்திலும் தம் இருதயத்தை வெளியில் ஊற்றினார், பதில்கள் பெருக்கெடுக்கும் என்று நம்பி இவ்வாறு செய்தார். ஒரே ஒரு ஞானஸ்நானம் நடைபெற்றது: முகத்தில் தவிட்டு நிறப் புள்ளிகள் கொண்ட ஒரு இளம் பெண் ஞானஸ்நானம் பெற்றாள். அந்தச் சுவிசேஷகர் ஏமாற்ற உணர்வடையாதிருக்கப் போராடினார். ஆயினும்*

*விதையானது மெதுவாக, அமைதியாக ஆனால் நிச்சயமாகவே வளர்கிறது என்பதை நினைவில் வையுங்கள். அந்தச் சிறுபெண் வளர்ந்து, திருமணம் முடித்து, ஆறு பையன்களைப் பெற்றாள் - அவர்கள் அனைவரும் சுவிசேஷப் பிரசங்கியார்களானார்கள். "... சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்" (கலா. 6:9; பிர. 11:6ஐக் காணவும்).*

***களைகளைப் பற்றிய உவமை (மத். 13:24-30, 36-43)***

*இயேசு, விதை வளர்தல் பற்றிய இன்னொரு உவமையையும் உரைத்தார்: கோதுமை விதைக்கப்பட்டதற்குச் சற்றுப் பின்பு அவ்வயலில் களைகளை விதைத்த சத்துருவைப் பற்றி அவர் கூறினார். களைகள் என்பவை கோதுமைச் செடியைப் போன்றே இருந்தன, அதிலும் விசேஷமாக வளர்ச்சியின் தொடக்க நிலைகளில் அவை அவ்வாறு இருந்தன.[24] அழிவுக்குரிய இந்தச் செயல் கண்டுபிடிக்கப்பட்டபோது, வேலைக்காரர்கள் எஜமானரிடத்தில் வந்து, தாங்கள் அந்தக் களைகளைப் பிடுங்கி எறிந்துவிடலாமா என்று கேட்டார்கள். அந்த வேளையில் இளஞ்செடிகளின் வேர்கள் களைச் செடியின் வேர்களுடன் பின்னிப் பிணைந்திருக்கலாம், எனவே எஜமானர், "வேண்டாம், களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங் கூட வேரோடே பிடுங்காதபடிக்கு இரண்டையும் அறுப்புமட்டும் வளரவிடுங்கள்" என்று கூறினார் (மத். 13:29). அறுவடை வரையிலும் அந்தச் செடிகள் ஒன்றாய் வளரட்டும் என்று அவர்களுக்குக் கட்டளையிட்ட எஜமானர், அறுவடை வேளையில் விரும்பத்தக்க பயிரிலிருந்து விரும்பத்தகாத களையைப் பிரிக்கும்படி உத்தரவிட்டார் (வ. 30).*

*பிற்பாடு சீஷர்கள் கிறிஸ்துவிடத்தில், அந்த உவமையை விளக்கியுரைக்கும்படி கேட்டார்கள் (வ. 36). அவர், சத்துரு பிசாசு என்றும், அறுப்பு உலகத்தின் முடிவு என்றும் கூறினார் (வ. 39). இந்தப் புத்தகத்தில் நியாயத்தீர்ப்பின் கடைசி நாளைப் பற்றி இரண்டு உவமைகள் உள்ளன; அவற்றில் இது ஒன்றாக உள்ளது.[25] வசனம் 39 முதல் 43 வரையுள்ள பகுதியானது இரண்டாம் வருகை மற்றும் அதைத் தொடரும் நியாயத்தீர்ப்பு ஆகியவை பற்றி ஒரு விரிவான சித்தரிப்பைத் தருகிறது.*

*சிலர் இந்த உவமையை, சபையில் நமது ஐக்கியத்தில் இருந்துகொண்டு பொல்லாதவைகளைச் செய்பவர்களை நீக்க எவ்வித முயற்சியும் மேற்கொள்ளக்கூடாது என்று இது போதிக்கிறது என்று கூறி, இந்த உவமையை சபை ஒழுங்கு நடவடிக்கைக்கு எதிராக நடைமுறைப் படுத்துவதை மேற்கொள்ள முயற்சி செய்திருக்கின்றார்கள். இப்படிப்பட்ட ஒரு விளக்கமானது இயேசு தமக்குத்தாமே முரண்படுவதாக ஒரு கருத்தை ஏற்படுத்தும் (மத். 18:15-18; 1 கொரி. 5:4, 5, 11, 13ஆ ஆகியவற்றையும் காணவும்). J. W. மெக்கார்வீ அவர்கள், "இந்த உவமையும் இதன் விளக்கமும் சிலவேளைகளில் சபை ஒழுங்கு நடவடிக்கைக்கு எதிரான விவாதம் என்ற வகையில் வேண்டப்படுகின்றன, ஆனால் அவற்றைக் குறித்து, அப்படிப் பட்ட பயன்பாடானது தெளிவாகவே தவறானதாக உள்ளது. வயல்/நிலம் என்பது சபையல்ல, ஆனால் அது உலகம் என்பதாக உள்ளது, மற்றும்*

பொல்லாத மனிதர்களை இல்லாமற்செய்தல் என்ற செயலுக்கு நாம் முயற்சி செய்யக் கூடாது என்பதே இந்த உவமையின் போதனையாக உள்ளது" என்று எழுதினார்.[26] ஜான் கார்ட்டர் அவர்கள் பின்வருமாறு ஒப்புக் கொண்டார்: "... 'ராஜ்யத்தின் புத்திரரும்' 'பொல்லாங்கனின் புத்திரரும்' காலங்களின் முடிவு வரையிலும் இவ்வுலகத்தில் ஒன்றாகவே வாழ வேண்டியுள்ளது. [இந்த உவமையானது] ... சபை தனது உறுப்பினர்களில் முறைமையற்று வாழ்பவர்களையோ அல்லது வெளிப்படையாக அவிசுவாசிகளாய் இருப்பவர்களையோ உறுப்பினராகத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பது கட்டளையாக இருப்பதில்லை என்பது மிகவும் தெளிவாக உள்ளது.'"[27]

ஒருவேளை இந்த உவமையானது, மிகவும் அதிகமானவர்கள் ஏற்றுக் கொள்ளாதவர்களாய் இருப்பது ஏன் என்பதை சீஷர்கள் புரிந்துகொள்ள உதவுவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கலாம்: சத்துருவான பிசாசானவன் வேலை செய்கின்றான். இது, அவர்களின் ஊழியத்தினுடைய நீண்ட காலத்திய இயல்பின் தெளிவான காட்சியையும் அவர்களுக்குக் கொடுத்திருக்கலாம்.

### கடுகு விதை மற்றும் புளித்தமா ஆகியவை பற்றிய உவமைகள் (மத். 13:31-33; மாற். 4:30-32)[28]

பதிவேடுகளின் விவரப்படி, அந்த நாளில் பேசப்பட்ட எஞ்சிய உவமைகள் மிகவும் சுருக்கமானவைகளாகவும் விளக்கம் இன்றியே தரப்பட்டவைகளாகவும் இருந்தன. அவற்றில் முதலாவது, விதை வளருதல் என்ற கருத்தாய்வின் தொடர்ச்சியாக இருந்தது: இது கடுகு விதையின் உவமையாக இருந்தது. இங்கு இவ்விதையின் அளவானது அதிலிருந்து விளைகிற தாவரத்தின் அளவுடன் ஒப்பிடப்படுதல் என்பது வலியுறுத்தமாக உள்ளது: கடுகு விதையானது மிகவும் சிறியதாக உள்ளது,[29] ஆனால் அது மிகப்பெரிய தாவரத்தை உண்டாக்கிற்று.[30] மீண்டும் ஒருமுறையாக, இந்த உவமையானது அநேகமாக, சீஷர்களை உற்சாகப்படுத்துவதற்காகப் பேசப்பட்டிருக்கலாம்: கிறிஸ்துவின் இயக்கமானது ஒரு சிறிய தொடக்கத்தைக் கொண்டிருந்தாலும், அவர்கள் விதைத்தலின் பணிப்பொறுப்பில் உண்மையாக நிலைத்திருந்தால், அவ்வியக்கமானது அவர்களின் கட்டுக்கடங்காக் கனவுகளுக்கு அப்பாலும் பரந்து வெற்றி அடையும். இந்த உவமைகளின் சத்தியத்தை இன்றைய நாட்களில் ஆப்பிரிக்கா மற்றும் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் காண முடியும்.

அடுத்த உவமையில் (புளித்தமா பற்றிய உவமையில்), காட்சி அமைப்பானது, விவசாயி தனது நிலத்தில் விதைக்கும் காட்சியில் இருந்து, பெண்ணொருத்தி தனது வீட்டாருக்காக ரொட்டி தயாரிக்கும் காட்சிக்கு மாறிற்று. அப்பம் சுடுவதற்கு முன்பு, யீஸ்டு கொண்டு பிசையப்பட்ட மாவைப்பற்றி பழக்கம் இல்லாதவர்களுக்கு அதைப் பற்றிய ஒரு விளக்கம் அவசியமானதாக உள்ளது:[31] பெண்ணொருத்தி அப்பம் சுடுவதற்கு முன்பு, மாவின் ஒரு சிறு துண்டைப் பிய்த்து எடுத்து அதை ஒரு வெப்பமான இடத்தில் மூடிவைப்பதுண்டு. அடுத்தமுறை அவள் அப்பம் தயாரிக்கும்

போது, அவள் இந்தச் சிறுதுண்டை மாவுடன் சேர்த்துப் பிசைந்து அந்த மாவை அப்பம் சுடத் தயாரிப்பது வழக்கம். புளித்தமாவானது, மா முழுவதும் பரவும், அது மாவைப் பொங்கப்பண்ணும். பின்பு அவள் அந்த மாவில் இருந்து சிறிது மாவை பிய்த்தெடுத்து, அடுத்த முறை அப்பம் சுட மாவைத் தயாரிக்க உதவுவதற்கென்று வைத்துக் கொள்வது வழக்கம். [இது நாம் பாலில் உறைமோர் ஊற்றி அதைத் தயிராக்கி, பின்பு அந்தத் தயிரில் இருந்து சிறிது உறைமோர் எடுத்து வைத்து அடுத்தமுறை பாலைத் தயிராக்கப் பயன்படுத்துவதற்கு ஒப்பானதாக உள்ளது.] நேரமாகும்போது, புளித்தமாவின் ஒரு சிறிய பகுதியானது நூற்றுக்கணக்கான, ஆயிரக் கணக்கான அப்பங்களைக் கூடப் புளிப்பேறச் செய்து விடும்.

இந்தக் கற்பனையுரு மாறுபட்டதாக இருந்தபோதிலும், இதன் செய்தியானது அடிப்படையில், கடுகு விதை உவமையின் செய்தியைப் போன்றதாகவே காணப்படுகிறது: வசனமானது தனக்குள்ளாகவே, பரவ மற்றும் வளரக்கூடிய சக்தியைக் கொண்டுள்ளது.[32] இந்த சத்தியம், சுவிசேஷத்தைப் பரப்ப முயற்சி செய்கின்றவர்களை ஊக்கப்படுத்துகிறது. இது இன்றைக்கான சத்தியம் பத்திரிகையில் பணியாற்றுபவர்களுக்கு விசேஷித்த தனிச்சிறப்பான குறிப்புகளைக் கொண்டுள்ளது.

### நிலத்தில் மறைந்துள்ள பொக்கிஷம் மற்றும் விலையேறிய முத்து ஆகியவற்றின் உவமைகள் (மத். 13:44-46)

மத்தேயு 13ல் எஞ்சியுள்ள உவமைகள் சீஷர்களுக்குத் தனியாக உரைக்கப்பட்டவைகளாய் இருக்கலாம் (வ. 36). இவற்றில் முதலாவதாக வருபவை ஒன்றாக உள்ளன: இவ்விரண்டுமே மாபெரும் மதிப்பு உடைய ஒன்றைக் கண்டுபிடித்த மனிதர்களைப் பற்றியதாக உள்ளன. முதலாமவர், தற்செயலாக ஒரு பொக்கிஷத்தைத் தோண்டி எடுத்தார் (வ. 44), இரண்டாமவர் நீண்ட நாட்களாகத் தேடிய விலையுயர்ந்த கல்லைக் கண்டுபிடிக்கின்றார் (வ. 45, 46).[33] இவ்விஷயங்கள் ஒவ்வொன்றிலும், அம்மனிதர் தாம் கண்டறிந்த பொருளின் மதிப்பை உணர்ந்து, அதைப் பெறுவதற்கான விலையைச் செலுத்தினார். இந்த உவமையில் இருந்து பல பாடங்களைத் தரவழைக்க முடியும், ஆனால் இயேசுவைப் பின்பற்றுபவர் களை உற்சாகப்படுத்துதல் என்பது நிச்சயமாகவே ஒரு நோக்கமாக இருந்தது என்பது உறுதி. அவர்களுக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த அறை கூவலானது அதைச் சந்திப்பதற்கு ஒவ்வொரு தியாகத்தையும் செய்யத் தகுதி வாய்ந்ததாக இருந்தது.

### மீன்பிடி வலையின் உவமை (மத். 13:47-50)

உவமைகளின் வரிசைத் தொடரானது, கலிலேயாக் கடலில் நல்ல மற்றும் மோசமான மீன்கள் எல்லாவற்றையும் சேகரிக்கும் மீன்பிடி வலையைக் கொண்டு மீன்பிடித்தல் பற்றிய ஒரு கதையுடன் முடிவடைந்தது. ஒரு யூதர், "நல்ல" மற்றும் "மோசமான" என்பவற்றைக் கேட்டபோது, அவர் அநேகமாக, "சுத்தமான" மற்றும் "அசுத்தமான" என்பவற்றைப் பற்றி நினைத்திருக்கலாம். அவர் துடுப்புக்களும் செதில்களும்

*உள்ள மீன்களை மட்டுமே உண்பதற்கு அவரை நியாயப்பிரமாணம் அனுமதித்தது (லேவி. 11:9-12). மீன்பிடி வலையானது சுத்தமான மற்றும் அசுத்தமான மீன்களைப் பிடித்ததால், உண்ணத் தகுதியானவைகள் மற்றும் தகுதியற்றவைகளைப் பிரித்தல் என்பது மீனவர்களுக்கு அவசியமானதாக இருந்தது. பிரித்தலின் இந்தச் செயல்முறையை இயேசு கடைசி நியாயத் தீர்ப்புக்கு ஒப்பிட்டார். இந்தக் கருத்துணர்வில், இவ்வுவமையானது களைகளின் உவமையைப் போன்றதாக உள்ளது. இதில் சீஷர்களுக்கு ஒரு கூடுதலான பாடமும் இருந்திருக்கலாம். இயேசு, "நான் உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்று கூறியிருந்தார் (மத். 4:19). இப்போது ஒருவேளை, அவர்கள் தங்கள் போதனை "பிடித்துக் கொண்டு வரும் மீன்பாடு" பற்றி வியப்படைய வேண்டாம் என்று அவர் கூறியிருக்கலாம்.*

## *முடிவுரை*

*அந்த நாளில் இயேசு, உவமைகள் என்று பொதுவாக வகைப்படுத்தப்படும் மற்ற விவரிப்புகளில் குறைந்தபட்சம் இரண்டைப் பயன்படுத்தினார்: விளக்குத் தண்டின்மீது வைக்கப்படும் விளக்கு பற்றிய குறிப்பு (மாற். 4:21, 22; லூக். 8:16, 17) மற்றும் ஒரு மனிதன் தன் பொக்கிஷத்திலிருந்து பழையவைகளையும் புதியவைகளையும் எடுத்துக் கொடுத்தலின் உதாரணம் (மத். 13:52). ஆயினும், நாம் இந்தப் பாடத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டியுள்ளது. அடுத்த பாடத்தில் நாம், கலிலேயாக் கடலினூடே கிறிஸ்துவின் பயணம்பற்றியும் அந்தப் பயணத்தில் அடங்கியிருந்த அருஞ்செயல்கள் பற்றியும் படிக்கையில் "மும்முரமான நாள்" பற்றிய நமது மறுகண்ணோட்டத்தை முடிப்போம்.*

*இயேசு இந்த உவமைகளைப் பேசிய பின்பு, அவர் தம்மைப் பின்பற்றியவர்களிடத்தில் ஒரு கேள்வியைக் கேட்டார். அவர்களின் பதிலானது என்னைப் புன்சிரிக்க வைக்கிறது. அவர், "இவைகளையெல்லாம் அறிந்துகொண்டீர்களா?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "ஆம்" என்று பதில் அளித்தார்கள் (மத். 13:51). அவர்கள் ஒரு பகுதி புரிந்துகொண்டிருக்கலாம், ஆனால் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சிகள், அவர்களின் புரிந்து கொள்ளுதல் எல்லைக்கு உட்பட்டிருந்ததைச் சுட்டிக்காண்பிக்கின்றன. நீங்களும் நானும் இந்தப் பாடத்திலிருந்து - மற்றும் இந்தத் தொடரின் எல்லாப் பாடங்களில் இருந்தும் - பயன் அடைய வேண்டுமென்றால், கர்த்தரிடமிருந்து வரும் இரண்டு எச்சரிக்கைகளை நாம் கவனிக்க வேண்டும்: "நீங்கள் கேட்கிறதைக் கவனியுங்கள்" (மாற். 4:24) மற்றும் "நீங்கள் கேட்கிற விதத்தைக் குறித்துக் கவனியுங்கள்" (லூக். 8:18). "கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" (மாற். 4:9; வ. 23ஐக் காணவும்).*

குறிப்புகள்

*[1]மொத்தத்தில் உவமைகளின் "மாபெரும் தொகுப்புகள்" மூன்று உள்ளன. இரண்டாவது தொகுப்பானது லூக்கா 15:1-16:31ல் காணப்படுகிறது. மூன்றாவது தொகுப்பானது மத்தேயு 21:23-22:14லும் மாற்கு மற்றும் லூக்கா சுவிசேஷங்களில் இது தொடர்பான வேத வசனப்பகுதிகளிலும் காணப்படுகிறது. [2]கடன்பட்டவர்கள் இருவரைப் பற்றிய கதையானது வேதவசனப்பகுதியில் ''உவமை'' என்று குறிப்பிடப்படாது இருந்தாலும், இந்தக் கதை ஒரு உவமையே என்று பெரும்பான்மையானவர்கள் ஒப்புக்கொள்ளுகின்றார்கள். [3]கர்த்தரால் பயன்படுத்தப்பட்ட பிற விவரிப்புகளும் "உவமைகள்" என்று குறிப்பிடப்பட முடியும். எடுத்துக்காட்டாக, மத்தேயு 11:16-19 ஒரு உவமை என்று வகைப்படுத்தப்படலாம். [4]கலிலேயாக் கடலருகில் இவ்வேளையில் இயேசுவின் போதனைக்கான ஒரு குறிப்புதான் "உவமைகளினாலேயன்றி, அவர்களோடே பேசவில்லை'' என்ற கூற்றின் அடிப்படை வலியுறுத்தமாயிருந்தது. அதைத் தொடர்ந்து கிறிஸ்து மக்கள் கூட்டத்திற்கு உவமைகளை உரைத்தல் என்பது தவிர மற்ற முறைமைகளைப் பயன்படுத்தி உரையாற்றினார். இருந்தபோதிலும், அந்த வேளையிலிருந்து, அவரது போதனையில் உவமைகள் பெரும்பங்கு வகித்தன. [5]நமது வேத வசனப்பகுதியில் (மத். 13:35ல்) சங்கீதம் 78:2 மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ளது. ஆசாப் என்ற சங்கீதக்காரர் கூறியது, இயேசு பிற்பாடு செய்தவற்றின் மாதிரியாக உள்ளது.* [6]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 338. [7]F. LaGard Smith, *The Narrated Bible in Chronological Order* (Eugene, Oreg.: Harvest House Publishers, 1984), 1394. [8]H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 147. Hester quoted William Sanday (1843-1920), an English preacher, author and professor at Cambridge. *[9]"வசனத்தை முறையாகப் புரிந்துகொள்ளுதல்" என்பது வேத வசனங்களுக்கு எவ்வாறு விளக்கம் தருவது என்பது பற்றிய படிப்பைக் குறிக்கிறது. [10]இது "விரிவாக்கப்பட்ட உருவகம்" என்று விளக்கப்படும் ஒப்புவமைக்கு நேரெதிராக உள்ளது. உருவகம் என்பது "போல" அல்லது "வகையில்" போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தாத ஒரு ஒப்பீடாக உள்ளது.*

*[11]புதிய ஏற்பாட்டில் "உவமைகள்" என்ற சொற்றொடரின் பரவலான பயன்பாட்டின் காரணமாக, இயேசுவின் உவமைகள் பற்றிய [எந்த] இரு பட்டியல்களும் முற்றிலும் ஒத்துப் போவதைக் காண்பது மிகவும் கடினமானதாக உள்ளது. [12]ஆங்கில மொழியில் ''பழமொழி'' (நாம் மரபுக்கூற்று ஒன்றை ''பழமொழி'' என்று அழைப்போம்) என்றுள்ளது, ஆனால் கிரேக்க வேத வசனத்தில் parabole ("உவமை") என்றே உள்ளது. [13]சட்டப்படி, இயேசுவின் உவமைகள், அவரது உரையைக் கேட்டவர்களால் அவர்களின் குடும்பங்களிலும் வியாபாரங்களிலும் எதிர்கொள்ளப்பட்ட அன்றாட நிகழ்ச்சிகள், சூழ்நிலைகளைப் பற்றியவையாக இருக்கின்றன. சில வேளைகளில் அவர் - அசுத்த ஆவிகளின் உலகம் (லூக். 11:24-26) அல்லது மரித்தவர்களின் நிலை (லூக். 16:19-31) போன்ற - பழக்கத்தில் குறைவான கருத்துக்களைப் பயன்படுத்தினார், ஆனால் உவமைகளில் எதுவும் "தேவதைக் கதைகள்" என்ற வகையில் நோக்கப்படக் கூடாது. அவை யாவும் உண்மை நிலையின் அடிப்படையிலேயே அமைந்திருந்தன. [14]நம்மில் பிரசங்கம் செய்கின்றவர்கள் அநேகமாக மற்றும் எவரைக் காட்டிலும் இச்செயலில் அதிகம் குற்ற உணர்வு உடையவர்களாக இருக்கலாம். [15]"கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தின் இறுதிப்பகுதியில் உள்ள ''பரலோக இராஜ்யம்'' என்ற துணைப்பாடத்தைக் காணவும்.* [16]John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* (Nashville: Broadman Press, 1961), 89. *[17]யாரோ ஒருவர் இதை "உவமைகளைப் பற்றிய ஒரு உவமை" என்று*

*அழைத்துள்ளார். [18]*KJV *"வழியருகே" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறது (லூக். 8:5). எனது பிரசங்கத்தில் நான் இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்துவேன். [19]இந்த உவமையில் விதைப்பவரைப் பற்றி வலியுறுத்தாமல், நிலங்கள் பற்றி வலியுறுத்தப்படுவதால், விளக்க உரையாளர்களில் சிலர் இது "நிலங்களின் உவமை" என்று அழைக்கப்படலாம் என்பதாக கருத்துத் தெரிவித்துள்ளார்கள். ஆயினும், இயேசு "... விதைக்கிறவனைப் பற்றிய உவமையைக் கேளுங்கள்" என்றே கூறினார் (மத். 13:18). எனவே நாமும் அதே சிறப்புப் பெயரையே பயன்படுத்துகின்றோம். [20]விதைப்பவன் உவமையின் விளக்கம் அந்த உவமையைத் தொடர்ந்து உடனே இடம் பெற்றிருந்தாலும், இயேசு தாமும் தமது சீஷர்களும் ஓய்ந்திருக்கும்படி விலகிச் செல்லுமுன்பு மக்கள் கூட்டத்திற்குத் தமது உவமைகளினாலான உரையை அநேகமாக முடித்திருப்பார். அந்த வேளையில், அவர் விதைப்பவன் உவமையையும் களைகளின் உவமையையும் விளக்கியுரைத்து - பின்பு சீஷர்களுக்கு மாத்திரம் போதிக்க நோக்கங்கொண்ட ஒரு சில உவமைகளைக் கூடுதலாகக் கூறியிருப்பார்.*

*[21]இரண்டே இரண்டு உவமைகளின் (விதைப்பவன் உவமை மற்றும் களைகளின் உவமை) விரிவான விளக்கம் மட்டும் வேதாகமத்தில் பதிவு செய்யப் பட்டிருந்தாலும், மாற்கு 4:34 "அவர் தம்முடைய சீஷரோடே தனித்திருக்கும்போது, அவர்களுக்கு எல்லாவற்றையும் விவரித்துச் சொன்னார்" என்று கூறுகிறது. [22]இந்த உவமை சில வேளைகளில், "தானாகவே வளரும் விதையின் உவமை" என்று அழைக்கப்படுகிறது. [23][பலஸ்தீன நாட்டில்] பெரும்பாலான தானிய வயல்கள் நடுதல் மற்றும் அறுவடை ஆகியவற்றிற்கு இடையில் பண்படுத்தப் (களை எடுக்கப்) படுவது இல்லை. அவைகளுக்கு நீர் பாய்ச்சப்பட்டு உரமிடப்படலாம், ஆனால் பண்படுத்த (களை எடுக்கச்) செய்யப்படும் முயற்சியானது செடிகளை வேருடன் பிடுங்குவதாகிவிடும். [24]எனது* NASB *வேதாகமப் பிரதியில், "களைகள்" பற்றிப் பின்வரும் பக்கக் குறிப்பு உள்ளது:* "Or *darnel,* a weed resembling wheat." *("கோதுமைபோல் தோற்றம் அளிக்கும் ஒரு களைச் செடி"). [25]இன்னொன்று மீன்படி வலையின் உவமையாக உள்ளது. [26]*McGarvey and Pendleton, 339. *[27]*Carter, 132. *[28]உவமைகளின் இந்த வரிசைத் தொடரில் பல ஜோடிகள் ஒன்றுடன் ஒன்றாகப் பொருந்துகின்றன; இது அந்த ஜோடிகளில் ஒன்றாக உள்ளது. [29]"கடுகு விதையானது மற்ற எல்லா விதைகளிலும் சிறியதாக உள்ளது" என்ற இயேசுவின் கூற்றானது அந்தக் காலத்திற்கும் அந்த இடத்திற்கும் நடைமுறைக்கு ஏற்புடையதாக இருந்தது, அது எல்லாக் காலத்திற்கும் எல்லா இடங்களுக்கும் நடைமுறைக்கு ஏற்றதாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. நீங்கள் வாழும் இடத்தில் கடுகு விதை வாங்க முடியுமென்றால், நீங்கள் அவற்றை வாங்கி அவ்விதை எவ்வளவு சிறியதாக உள்ளது என்று உங்கள் உரையைக் கவனிப்பவர்களுக்குக் காண்பிக்க விரும்பலாம். [30]மீண்டும், அந்தக் காலத்திலும் அந்த இடத்திலும் இருந்த கடுகுத் தாவரத்தைப் பற்றி நினைத்துப் பாருங்கள், இது நீங்கள் வாழ்கின்ற இடத்தில் கடுகு விதை வளரும் அதே வழிமுறையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இயேசுவால் குறிப்பிடப்பட்ட கடுகுத் தாவரங்கள் ஒரு குதிரையின் முதுகில் அமர்ந்து இருக்கும் மனிதனின் உயரம் அளவுக்கு வளர்ந்தன என்று* J. W. *இராபர்ட்ஸ் அவர்கள் தமது வகுப்பில் குறிப்பிட்டார்.*

*[31]இந்த நாட்கள், பையில் அடைக்கப்பட்ட ரொட்டிகளும் வீடுகளில் ரொட்டி செய்யும் இயந்திரங்களும் வாங்கப்படுவதற்கு முந்திய நாட்களாய் இருந்தன. [32]சட்டப்படியாக, புதிய ஏற்பாட்டில் புளித்தமா என்பது விரும்பத்தகாத செல்வாக்கு ஒன்றை விவரிப்பதற்கு, மோசமான கருத்தில் பயன்படுத்தப்பட்டது (மத். 16:6; 1 கொரி. 5:6-8; கலா. 5:9). கடுகு விதை மற்றும் புளித்தமா ஆகிய இரு உவமைகளுமே பொல்லாங்கின் சிதிலப்படுத்தும் செல்வாக்கிற்கு எதிராக சீஷர்களை*

எச்சரிப்பதற்கானவைகளாயிருக்கலாம். ஆயினும் சந்தர்ப்பப் பொருளில், இவ்விரு உவமைகளிலும் ஒரு நேர்மறையான கண்ணோட்டம் நோக்கங் கொண்டுள்ளதாகக் காணப்படுகிறது. [33]சிலர் தற்செயலாக சுவிசேஷ "பொக்கிஷத்தை" கண்டறிவதும், மற்ற சிலர் தாங்கள் அதைத் தேடியதால் கண்டறிவதும் எவ்வாறு என்பதற்கு உதாரணங்களைத் தர நீங்கள் விரும்பலாம். ஒருவேளை, மக்கள் தங்கள் நண்பர் அல்லது ஒரு துணையுடன் கொண்டுள்ள நட்புறவினால் சத்தியத்தைத் தாங்கள் உண்மையிலேயே தேடாதபோதே கண்டறிதல் என்பதே மிகவும் பொதுவான வழிமுறையாக இருக்கலாம்.

# 33

# “விதைப்பவன் உவமையைக் கேளுங்கள்”

## மத். 13:3-10, 18-23; மாற். 4:2-10, 13-20; லூக். 8:4-9, 11-15, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*நான் எவ்வளவு அதிக நேரம் பிரசங்கிக்கின்றேனோ, அவ்வளவுக்கு அதிகமாக, உரையைக் கேட்பவர்கள் எந்த ஒரு பிரசங்கத்தின் செயல் விளைவையும் மாபெரும் அளவில் தீர்மானிக்கின்றார்கள் என்று நான் அதிகமாய் நம்புகின்றேன். ஒரு இடத்தில் நான் ஒரு பிரசங்கத்தைப் பிரசங்கித்து, மக்கள் அதை மிகச் சிறந்தது என்று சொல்லியிருக்கலாம்; நான் அதே பிரசங்கத்தை இன்னொரு இடத்தில் பிரசங்கித்து, அதைக் கேட்டவர்களில் ஒரு சிலர் அதை இரண்டாந்தரமானது என்றோ அல்லது மோசமானது என்றோகூட சொல்லியிருக்கலாம். ஒரு இடத்தில் ஒரு பிரசங்கம் பல இருதயங்களைத் தொடலாம்; இன்னொரு இடத்தில் அதே பிரசங்கம் காணக்கூடிய பதில்செயல் எதையும் கொண்டிராமற்போகலாம். எனது எடுத்துரைப்பு ஓரளவுக்கு மாறும் என்பதை நான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றாலும், மக்கள் கூட்டத்தில்தான் பிரதானமான மாறுபாடு உள்ளதாகக் காணப்படுகிறது. ஒருமுறை இயேசு, சுவிசேஷத்தின் வெற்றியில் அதைக் கேட்பவர்கள் நிகழ்த்தும் பங்குப் பணி பற்றிய உவமை ஒன்றைப் போதித்தார்.[1]*

### உவமை

### *(மத். 13:3-9; மாற். 4:2-9; லூக். 8:4-8)*

இயேசு, “கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப் பட்டான்” என்று தொடங்கினார் (மத். 13:3ஆ).

#### *வழியருகான[2] நிலம்: கடினப்பட்டது*

*“அவன் விதைக்கையில், சில விதை வழியருகே விழுந்தது” (மத். 13:4அ).* அந்தக் காலத்தில் பலஸ்தீன நாட்டில் வயல்களுக்கு இடையில் வேலிகள் எதுவும் இருந்ததில்லை, வயல்களின் நடுவில் பாதைகள் அமைக்கப்பட்டு இருந்தன. இந்தப் பாதை வழிகள் அவற்றினூடே வயல்களுக்கு நடந்து செல்லும் பாதங்கள் பட்டுப்பட்டுக் கடினமாகியிருந்தன. விதையானது

இந்த மண்ணில் ஊடுருவிச் செல்ல முடியாது, எனவே அது மேற்பரப்பில் விழுந்து கிடக்கும். இதன் விளைவாக, "அது மிதியுண்டது, ஆகாயத்துப் பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது" (லூக். 8:5ஆ).[3]



**பாறை நிலம்: ஆழமற்றது**

"சில விதை அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்தது" (மத். 13:5அ). அது கீழே பாறையும் மேலாக சற்று மண்மூடியிருந்ததுமான நிலமாக இருந்தது.[4] இப்படிப்பட்ட இடங்கள் மலைப்பகுதிகள் யாவற்றிலும் இருப்பது போலவே பலஸ்தீனத்தின் வயல்களில் சாதாரணமானவைகளாய் இருந்திருக்கும். இந்த நிலமானது வழியருகான நிலம் போலவே கடினமானது, ஆனால் நல்ல நிலம் போன்ற தோற்றம் கொண்டதாக இருந்தது.

விதையானது இவ்வகைப்பட்ட நிலத்தில் விழுந்தபோது, அது நிலத்தினுள் ஒரு குறுகிய ஆழத்திற்கு ஊடுருவிச் செல்ல முடிந்தது மற்றும் அது வளரத் தொடங்கிற்று. ஆயினும், நிலமானது செடிகள் ஆழத்தில் வேர்பிடிக்கக் கூடாத அளவுக்கு மிகவும் ஆழமற்றதாக இருந்தது. "மண் ஆழமாயிராததினாலே அது சீக்கிரமாய் முளைத்தது'' (வ. 5ஆ). "... வெயில் ஏறின போதோ, தீய்ந்துபோய், வேரில்லாமையால் [''ஈரமில்லாததினால்''; லூக் 8:6], உலர்ந்து போயிற்று" என்பதே விளைவாயிற்று (மத். 13:6).



**முட்புதரான நிலம்: பிரிவுபட்டது**

"சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது" (மத். 13:7அ). இது நல்ல வளமான நிலமாக இருந்தது, ஆனால் ஏற்கனவே முட்கள் வளர்ந்திருந்த நிலமாக இருந்தது. மெக்கார்வீ அவர்கள், பலஸ்தீன நாட்டில் பதினாறு வகையான முட்செடிகள் இருந்தன என்றும் அவைகள் அடர்த்தியாக வளர்ந்துள்ள இடங்களில் அவைகளினூடே ஒரு மனிதர் குதிரையில் ஏறிக் கடந்துசெல்ல முடியாது என்றும் எழுதியுள்ளார்.[5]

இந்த நிலம் நல்ல நிலம் போன்ற தோற்றம் கொண்டிருக்கச் சாத்தியக் கூறு உள்ளது, ஏனென்றால் முட்செடிகளின் நுனிப்பகுதி வெட்டப் பட்டிருக்கலாம் - ஆனால் அவற்றின் வேர்கள் மேற்பரப்பிற்குக் கீழே எஞ்சியிருந்தன. நான் ஒரு சிறுபையனாக இருந்தபோது, எனது அப்பா என்னிடத்தில், தோட்டத்தில் சென்று களைபறிக்கும்படி கூறினார், சில வேளைகளில் நான் மேல்தரையிலிருந்து களைகளின் இலைகளை மாத்திரம் செதுக்கி எடுத்தேன் என்பதை உங்களுக்கு அறிவிக்கின்றேன். அவ்வாறு தோட்டமானது களைகள் பறிக்கப்பட்டதுபோல் காணப்படும், ஆனால் அந்த வேலை அதிக நாள் நிலைத்து இராது, மிகவும் விரைவிலேயே நான் தோட்டத்தில் மீண்டும் களை பறிக்க வேண்டும் என்பதே முடிவு விளைவாயிருந்தது!

இந்த நிலத்தில் விதை வளர முடிந்தது, அது ஒரு வேர்த் தொகுதியைக்

கூட ஏற்படுத்திக் கொள்ள முடிந்தது, ஆனால் "முள் கூட வளர்ந்து" (லூக். 8:7). இதன் விளைவாக, "முள் வளர்ந்து அதை நெருக்கிப்போட்டது" (மத். 13:7ஆ). ஒருமுறை நான் இந்த சத்தியத்தை நெடுநாள் மறக்கப்பட்டுள்ள ஆதாரமூலத்திலிருந்து குறிப்பெடுத்தேன்: "நிலமானது ஒரு குறிப்பிட்ட அளவுக்கே தாவரங்களைத் தாங்க முடியும், உயிருடன் உள்ள ஒவ்வொரு களையும் தானியச் செடியின் இலையொன்றை மூச்சுத் திணற வைப்பதாகவே அர்த்தப்படுகிறது." பாறை நிலத்தில் ஏற்படுவது போன்று, முட் செடிகள் தாவரங்களைக் கொல்லுவதில்லை. தாவரங்கள் வளருகின்றன, ஆனால் அவைகளின் வளர்ச்சி தடைப்படுகிறது. அவைகள் கதிர் விடுகின்றன,[6] ஆனால் அந்த கதிர்கள் வெறுமையாக உள்ளன - எனவே அந்தத் தாவரங்கள் "பலன் கொடுக்கவில்லை" (மாற். 4:7).



**நல்ல நிலம்: மென்மையானது, ஆழமானது மற்றும் சுத்தமானது**

"சில விதையோ நல்ல நிலத்தில் விழுந்து" (மத். 13:8அ). இது நல்ல வளமிகுந்த நிலமாக, தயார் செய்விக்கப்பட்டு விதையை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருந்த நிலமாகும். இது மற்ற நிலங்களுக்கு எதிரிடையானதாக இருந்தது. வழியருகான நிலமானது கடினமானதாக இருந்தது, ஆனால் இந்த நிலம் மென்மையானதாக இருந்தது. பாறை நிலமானது ஆழமற்றதாக இருந்தது, ஆனால் இந்த நிலம் ஆழமானதாக இருந்தது. முட்புதரான நிலமானது களைகள் நிறைந்திருந்தது, ஆனால் இந்த நிலம் சுத்தமானதாக இருந்தது. இங்கு விதையானது எவ்வித இடையூறுமின்றி ஊடுருவி வளர முடிந்தது. இதன் விளைவு என்னவாக இருந்தது? இந்த நிலமானது, "சிலது நூறாகவும், சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலன் தந்தது" (வ. 8ஆ).



இயேசு இந்த உவமையைக் கூறிய பின்பு, "கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவன்" என்று கூறினார் (வ. 9). அவர், இது கேட்டு மறப்பதற்கான கதையல்ல என்று வலியுறுத்தினார். இதன் அர்த்தத்தை புரிந்து உணரும்படி அவர் தமது உரையைக் கேட்டவர்களுக்கு அறைகூவல் விடுத்தார்.

## நடைமுறைப் பயன்பாடு (மத். 13:10, 18-23; மாற். 4:10, 13-20; லூக். 8:9, 11-15)

இயேசுவின் சீஷர்கள் அவரிடத்தில் வந்து, அவர் உவமைகளில் பேசுவது ஏன் என்றும் (மத். 13:10) இந்த உவமை எதை அர்த்தப்படுத்திற்று என்றும்

கேட்டார்கள் (லூக். 8:9). பின்பு கிறிஸ்து இதை விளக்கப்படுத்தினார். அவர், "ஆகையால் விதைக்கிறவனைப் பற்றிய உவமையைக் கேளுங்கள்" என்று தொடங்கினார் (மத். 13:18).

நிலங்களைப் பற்றிய அவரது விளக்கத்தை நாம் பார்ப்பதற்கு முன்பு, விதை, விதைப்பவன் மற்றும் நிலம் ஆகியவற்றின் தனிச்சிறப்புக்களின்மீது சற்று கவனம் செலுத்துவோம். முதலாவது, விதையைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்: இயேசு, "அந்த உவமையின் கருத்தாவது: விதை தேவனுடைய வசனம்" என்று கூறினார் (லூக். 8:11). மீண்டும் அவர், "விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான்" என்று கூறினார் (மாற். 4:14). விதை என்பது, "தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தாக" (1 பேது. 1:23) உள்ளது, மற்றும் விதைப்பவன் என்பவர் வசனத்தை விதைப்பவராக அல்லது பரப்புகின்ற வராக இருக்கின்றார் - இவர் போதகர் அல்லது பிரசங்கியார் என்பவராக உள்ளார். பவுல் தமது பிரசங்கித்தல் பற்றிப் பேசியபோது, "நான் நட்டேன்" (1 கொரி. 3:6அ) என்று கூறினார். நிலம் என்பது எது? இது மனிதரின் இருதயம் அல்லது மனம் என்பதாக உள்ளது. மனதிற்கு வசனத்தை புரிந்து உணரக்கூடிய பக்குவம் இருக்கிறது. "வசனத்தைக் கேட்டு, அதை உண்மை யும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடன் பலன் கொடுக்கிறவர்களை" (லூக். 8:15) இயேசு "நல்ல நிலம்" போன்றவர்கள் என்று விளக்கப்படுத்தினார்.

இவ்விடத்தில் உவமையின் வலிவார்ந்த கருத்து உள்ளது: விதைப் பவனும் விதையும் ஒவ்வொரு நிலவகையிலும் ஒன்று போலவே உள்ளார்கள்; நிலங்களில்தான் மாறுபாடு உள்ளது.[7] அவை ஒவ்வொன்றும் விதையை ஏற்றுக்கொள்வதற்கு மாறுபட்ட நிலைமையைப் பெற்றிருந்தன, எனவே ஒவ்வொரு விஷயத்திலும் விளைவு மாறுபட்டதாக இருந்தது. இந்த உவமை, நாம் ஒவ்வொருவரும் நம்மையே, "எனது இருதயத்தின் நிலைமை என்ன? நான் வசனத்தை எவ்வாறு ஏற்றுக்கொள்ளுகின்றேன்?" என்று கேட்டுக் கொள்ளக் காரணமாக வேண்டும்.

இப்போது நாம், மாறுபட்ட நான்கு வகையான இருதய நிலங்கள் பற்றி இயேசு அளித்த விளக்கத்தை கண்ணோக்குவோம்.

**வழியருகான நிலம்: கடினப்பட்ட இருதயம்**

வழியருகான நிலம் என்பது கடினப்பட்ட இருதயத்தை - மாறுபட்ட நிலை அல்லது தப்பெண்ணத்தினால் மிதிக்கப்பட்டு "பாவத்தின் வஞ்சனை யினால் கடினப்பட்ட" (எபி. 3:13) - இருதயத்தைக் குறிக்கிறது. நீங்கள் எப்போதாவது மக்களுக்குப் போதிக்க முயற்சி செய்து, பின்பு அநேகமாக சுவிசேஷத்தின்மீது ஆர்வமே இல்லாதவர்களைச் சந்தித்திருக்கலாம். இவ்வகையான நபரைப் பற்றிப் பவுல் 1 கொரிந்தியர் 2:14ல் பின்வருமாறு கூறினார்: "ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவை களை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப் படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்." இவர்கள் "சத்தியத்தின் மீதுள்ள அன்பில்" (2 தெச. 2:10) குறைவுபடுகின்றார்கள்.

*வசனமாகிய விதையானது இவர்களின் இருதயங்களில் ஊடுருவிச் செல்ல முடியாது.*

*இவ்விதமாக இயேசு, "ஒருவன் ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும்போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக் கொள்ளுகிறான்; அவனே வழியருகே விதைக்கப்பட்டவன்" என்று கூறினார் (மத். 13:19). வழியருகில் இருந்து விதைகளைப் பறவைகள் பொறுக்கிக்கொண்டு செல்லுகிறதுபோலவே, பிசாசானவன், கடினமான இருதயம் கொண்ட மனிதனிடமிருந்து வசனத்தைப் பொறுக்கிச் செல்லுகின்றான். எவ்வாறு? மனதில் உடனடியாக ஆயிரக்கணக்கான மற்ற சிந்தனைகளை இட்டு நிரப்புதல் என்பது எளிய மற்றும் மிகப்பொதுவான வழிவகையாக உள்ளது. சாத்தான் ஏன் இதைச் செய்கின்றான்? "... அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப்படாதபடிக்கு" (லூக். 8:12). விசுவாசம் தேவனுடைய வசனத்தினால் வருகிறது (ரோமர் 10:17), மற்றும் மக்கள் வசனத்தைக் கேட்டு விசுவாசிப்பதைப் பிசாசானவன் விரும்புவதில்லை. அவன் தன்னுடன் முடிந்த அளவுக்கு அதிகமான மக்கள் நரகத்தில் இருப்பதையே விரும்புகின்றான்.*

*இந்த வார்த்தைகளை வாசிக்கின்ற யாராவது இவ்வகையான இருதயத்தைக் கொண்டிருக்கச் சாத்தியமுள்ளதா? யாராவது வசனத்தை ஏற்றுக்கொள்வதற்கு எதிராகத் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்து வதற்குச் சாத்தியக்கூறு உள்ளதா? வேதாகமம், "இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தா திருங்கள்" என்று வேண்டுகோள் விடுக்கிறது (எபி. 4:7ஆ). மாறாக, "உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங் கள்" (யாக். 1:21). இதை நினைவில் வையுங்கள்: விதையை இழத்தல் என்றால் ஜீவனை இழத்தல் என்பதாகிறது ... ஏனெனில் ஆவிக்குரிய வாழ்வு விதையில்தான் உள்ளது!*

***பாறை நிலம்: ஆழமற்ற இருதயம்***

*பின்பு, பாறை நிலத்தின் அர்த்தத்தை இயேசு விளக்கப்படுத்தினார்: "கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக்கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்ளுகிறான்" (மத். 13:20). பாறை நிலம் என்பது ஆழமற்ற, மேலோட்டமான சிந்தைகொண்ட தனிநபர்களைச் சித்தரிக்கிறது. ஒருவேளை இவ்வகைப்பட்ட நபரை நீங்கள் சந்தித்திருக்கலாம்: இவர் சத்தியத்தைச் சந்தோஷமாக ஏற்றுக்கொள்பவராகக் காணப்படுகின்றார். இவர் விரைவாக சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகின்றார், மற்றும் நாம் ஒவ்வொருவரும் மகிழ்ச்சியடைகின்றோம்: "இவர் இவ்வளவு குறுகிய காலத்தில் கிறிஸ்தவரானது ஆச்சரியமான விஷயமல்லவா!" பின்பு, அதே விரைவில் அவரது ஆர்வம் இறக்கிறது, நமது இருதயங்கள் உடைகின்றன. இந்த நபர், பூமியின் மண் ஆழமிராதபடியால் விரைவாக முளைத்து எழும்பிய செடிக்கு ஒப்பாக இருக்கின்றார். எந்தக் காரணத்தினாலோ, இந்தத் தனிநபர் சத்தியத்தில் வேர்கொண்டவராகவில்லை.[8] இவர் கிறிஸ்தவத்தின் உண்மையான*

*தனிச்சிறப்பை உய்த்துணரத் தவறியுள்ளார்.*

*இயேசுவின் விவரிப்புப்படி, இப்படிப்பட்ட தனிநபர், "தனக்குள்ளே வேரில்லாதவனாய், கொஞ்சக் காலமாத்திரம் நிலைத்திருப்பான்" (மத். 13:21அ).* KJV*யானது, இவர் "கொஞ்சக் காலமாத்திரம் நிலைத்திருப்பார்" என்று கூறுகிறது. இவர் முதல் வகை நிலத்தைக் காட்டிலும் சற்று மேன்மையான தோற்றம் ஒன்றை முன்னிறுத்துகின்றார், ஆனால் இவர் "முடிவு பரியந்தம்" நிலைத்திருப்பதில்லை (மத். 10:22). எனவே இதன் முடிவு விளைவும் ஒன்றாகவே உள்ளது: "... வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான்" (மத். 13:21). ஆழமில்லாமல் வேர்கொண்டுள்ள செடி சூரியனின் முன்னிலையில் உலர்ந்துபோவது போல், இந்தத் தனிநபரும் துன்பம் மற்றும் உபத்திரவத்தின் முன்னிலையில் வாடிப்போகின்றார். சூரியன், ஆழமாக வேர்கொண்டுள்ள செடிகளைப் பெலப்படுத்தி, ஆழமற்ற வேர்கொண்டுள்ள செடிகளை உலர்த்துவது போலவே, உபத்திரவமானது, கிறிஸ்துவுக்குள் ஆழமாக வேர்கொண்டுள்ள*[9] *கிறிஸ்தவர்களைப் பெலப்படுத்தி மேலோட்டமான சீஷனை உலர்த்துகிறது.*[10]

*உவமையில் திரும்பத்திரும்பக் கூறப்பட்ட ''உடனே'' என்ற வார்த்தையைக் கவனியுங்கள்: அவன் வசனத்தைக் கேட்டு, "உடனே" அதை சந்தோஷத்தோடே ஏற்றுக்கொண்டான், ஆனால் வசனத்தோடே உபத்திரவமும் வந்ததைக் கண்ட ''உடனே'' இடறலடைந்தான். கிரீடத்திற்கு முன்னே சிலுவை வரவேண்டியதைக் கண்ட உடனே, சிலுவையைத் தவிர்ப்பதற்காக கிரீடத்தைத் துறந்தான்.*

*இது உங்களைப் பற்றி விவரிப்பதில்லை என்று நான் நம்புகின்றேன். நீங்கள் எவ்வளவு "ஆழமாக வேர்கொண்டு" இருக்கின்றீர்கள் என்பதைக் காண்பதற்கு, நீங்கள் உபத்திரவத்தில் எப்படி பதில்செயல் செய்கின்றீர்கள் என்பதைக் காண்பது மிகச்சிறந்த வழிமுறைகளில் ஒன்றாக உள்ளது. இயேசுவைப் பின்பற்றுபவராக இருத்தல் என்பது கடினமாகின்ற வரையிலும், தேவனுக்குக் கீழ்ப்படியாதிருத்தல் என்பது அவருக்குக் கீழ்ப்படிந்திருத்தலைக் காட்டிலும் சுலபமாகும் வரையிலும், ஆழமற்ற கிறிஸ்தவர் பெரும்பாலும் பிற கிறிஸ்தவர்களை விட "ஆரோக்கியமானவராகவே" காணப்படுகின்றார்:*

- *வேதாகமப் பாட வகுப்பிற்குச் செல்லுதலைக் காட்டிலும் படுக்கையில் இருத்தல் என்பது சுலபமானதாக இருக்கும் வரையிலும்.*
- *ஆராதனை ஊழியத்திற்குச் செல்லுதலைக் காட்டிலும் மீன்பிடிக்கச் செல்லுதல் சுலபமானதாக இருக்கும் வரையிலும்.*
- *சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளுவதைக்காட்டிலும் அமைதியாக இருத்தல் என்பது சுலபமானதாக இருக்கும் வரையிலும்.*
- *"உலகத்திற்கு வெளிச்சமாக" இருப்பதைக்காட்டிலும் உலகத்துடன் ஒட்டிச் சென்றுவிடுதல் என்பது சுலபமானதாக இருக்கும் வரையிலும்.*
- *சத்தியத்திற்காக நிற்பதைக்காட்டிலும் தவறைக் கவனிக்காது செல்ல அனுமதித்தல் என்பது சுபலமானதாக இருக்கும் வரையிலும்.*[11]

*“வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் எழுகின்றபோது” உங்கள் பதில்செயல் என்னவாக உள்ளது? நீங்கள் ஆழமற்ற கிறிஸ்தவராக இருந்தால், நீங்கள் உங்கள் வாழ்வை மறுஅர்ப்பணம் செய்யவும் தேவனுடைய வசனத்தில் நீங்கள் ஆழமாய் வேரூன்றவும் வேண்டுமென்று நான் உங்களுக்காக ஜெபிக்கின்றேன்.*

### *முட்புதரான நிலம்: பிரிவுபட்ட இருதயம்*[12]

*அடுத்ததாக நாம் முட்புதரான நிலத்திற்கு வருகின்றோம். இவ்வகையான நிலத்தைப் பற்றி இயேசு பின்வரும் விளக்கத்தைக் கொடுத்தார்: “முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக் கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான்” (மத். 13:22).*

*இது, என்னைப் பொறுத்தமட்டில், இந்த உவமையில் விவரிக்கப்பட்டுள்ள சூழ்நிலைகளிலேயே மிகவும் கவலைக்குரியதாக உள்ளது. நிலமானது வளமும் வண்டல் மண்வாகும் உள்ளதாகச் சித்தரிக்கப்பட்டிருப்பது போலவே, இந்த நபரும் அதிகமான வாக்குறுதியை காண்பிக்கின்றார். இவர் கடின இருதயம் கொண்டவரல்ல, அல்லது ஆழமற்றவருமல்ல; இவர் பண்பின் செழுமையும் ஆளுமைத் தன்மையின் ஆழமும் உடையவராக இருக்கின்றார். இவர் தேவனுக்கென்று கனிகொடுக்கும் பிள்ளையாக சாத்தியக்கூறுள்ளவராக இருக்கின்றார். துரதிர்ஷ்டவசமாக இவரது இருதயம் உலகப்பிரகாரமான “முள்ளுகளினால்” நிறைந்துள்ளது. நான் ஒரு சிறுபையனாக இருந்தபோது செய்த களையெடுக்கும் பணி போலவே, இவரும் அவைகள் மேலாகத் தெரியாதபடிக்கு “செதுக்கியிருக்கலாம்” ஆனால் உலகத்துடனான இவரது பிணைப்பு இன்னமும் இவரது இருதயத்தில் உள்ளது.*

*இந்தத் தனிநபர் கிறிஸ்தவராகும்போது, உண்மையான மனமாற்றத்திற்கான ஒவ்வொரு குறிப்பும் இருக்கிறது. ஆயினும், இவர் தமது இருதயத்தில் கிறிஸ்துவுக்கு முதலிடம் கொடுப்பதற்குப் பதிலாக (மத். 6:33), இவர் இந்த உலகத்தின் கவலைகளினால் நிறைந்தவராகக் காணப்படுகின்றார் (13:22), “ஐசுவரியத்தின் மயக்கமும்” (வ. 22), “பிரபஞ்சத்திற்குரிய … சிற்றின்பங்களினாலும்” (லூக். 8:14), “மற்றவைகளைப் பற்றி உண்டாகிற இச்சைகளும்” (மாற். 4:19) இவரது இருதயத்தில் நிறைந்து காணப்படுகிறது. நிலமும்கூட ஓரளவுக்கே அதிக தாவரத்தைத் தாங்க முடிகிறதுபோல, ஒருவரின் சுய விருப்பங்கள் நிறைந்த இருதயத்தின் நிலையும் மிகமோசமாகவே உள்ளது: “தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது” (மத். 6:24ஆ) - அல்லது தேவனுக்கும் இன்பத்திற்கும், அல்லது தேவனுக்கும் வேறு எதற்கும் ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது.*

*இவரது இருதயத்தின் இயல்பின் காரணமாக, வசனமானது இவரது இருதயத்திற்குள்ளாகவே நெருக்கப்படுகிறது. இது கொல்லப்படுவதோ அல்லது அழிக்கப்படுவதோ இல்லை, ஆனால் இது நெருக்கப்படுகிறது. முள்செடிகள் தங்கள் நடுவில் உள்ள பிறசெடிகளின் முளைப்புத் திறனை ஒடுக்குவது போல, இந்த மனிதரும் தமது ஆவிக்குரிய வைராக்கியத்தில்*

*வடிந்துபோகின்றார். இவரது திறமைகளைக் கொண்டு இவர் ஒரு மாபெரும் கிறிஸ்தவராகியிருக்க முடியும், ஆனால் ஒரு மாபெரும் வர்த்தகராவது அல்லது ஒரு மாபெரும் அரசியல்வாதியாவது அல்லது வேறு எவ்வகையிலாவது ஒரு மாபெரும் நபராவது என்பதே இவரது ஒரே விருப்பமாக உள்ளது.*

*இவர் கர்த்தருக்கு ஊழியம் செய்வதில் பலனற்றவராகிறார் என்பதே விளைவாக உள்ளது. இந்தத் தனிநபர், ''நெருக்கப்பட்டு, பலன் கொடாதிருக்கிறார்கள்'' என்று கிறிஸ்து கூறினார் (லூக். 8:14). தானியச் செடியின் தானியமற்ற வெறுங்கதிரானது தானியம் உள்ளதைப் போன்று தோற்றம் அளிப்பதுபோலவே, இந்தத் தனிநபரும் கிறிஸ்தவத்தின் வெளித்தோற்ற வடிவங்களைக் காட்சிப்படுத்துகின்றார், ஆனால் உண்மையில் இவரது வாழ்வானது வெறுமையான கூடாக உள்ளது. இவர் கிறிஸ்துவுக்கென்று கனி கொடுப்பதில்லை.[13] முடிவில், இவர் உலகத்தை ஆதாயப்படுத்தியவராக, ஆனால் ஆத்துமாவை இழந்துபோனவராகத் தம்மைக் காண்பார் (மாற். 8:36).*

*மீண்டுமாக, இது சுயபரிசோதனைக்கான வேளையாக உள்ளது. நாம் நமது ஆவிக்குரிய வலிவுத் தன்மையைச் சேதப்படுத்தும்படிக்கு இந்தப் பிரச்சனைகளில் எதையாவது அனுமதித்துள்ளோமா?*

*(1) உலக கலக்கங்களும் கவலைகளும். நம்மை நாம் கர்த்தருக்கென்று முழு இருதயத்தோடு அர்ப்பணித்தலில் இருந்து நம்மை விலக்குவதற்கு, அற்பமான விஷயங்களை அனுமதித்துள்ளோமா? உண்மையிலேயே ''தேவையான''தாக இருப்பதை (லூக். 10:41, 42) நாம் மறந்து போகுமளவுக்கு மார்த்தாளைப் போல நாம், ''அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டு'' கலங்குகின்றோமா (லூக். 10:41)?*

*(2) வஞ்சனையான செல்வங்கள். செல்வங்களைச் சேர்த்தலே மிகவும் முக்கியமானது என்று நினைக்குமளவுக்கு செல்வங்கள் நம்மை வஞ்சிக்க அனுமதித்துள்ளோமா? நமக்கு சிறிதளவே தேவை - மற்றும் சற்று காலத்திற்கே நமக்கு இவை தேவை. ''முன்னேறிச் செல்லுதல்'' என்ற நமது பைத்தியக்காரத்தனமான அவசர கதியில், முக்கியமான விஷயங்களை நாம் ஒருக்காலும் மறந்து விடக்கூடாது.*

*(3) இன்பங்களும் இச்சைகளும். உலகப்பிரகாரமான தன்மை என்பது நமது ஆவிக்குரிய வாழ்வை சேதப்படுத்தச் சாத்தியக்கூறு உள்ளதா? நமது இருதயங்களில் உலகம் தங்கியுள்ளதா? நாம் தேவனுக்கும் மனிதருக்கும் ஊழியம் செய்வதைக் காட்டிலும் அதிகமான நேரத்தையும் சக்தியையும் ''கேளிக்கை பெறுவதில்'' செலவிடுகின்றோமா?*

*பிரிவுபட்ட இருதயம் என்ற இந்த வகைப்பாட்டில் நம்மில் பலர் விழுந்து விடுகின்றோம். தேவனுக்குப் பயன்படுத்தக்கூடுவதற்கென்று நம்மிடத்தில் தாலந்துகளும் சாத்தியக்கூறுகளும் உள்ளன, ஆனால் நாம் அவர்மீது கொண்டுள்ள அன்பை மற்ற ஆர்வங்கள் சூழ்ந்துகொள்ளும்படி அனுமதிக்கின்றோம். நமது இருதயங்கள் கர்த்தரை நோக்கி நிலைத்திருக்கும் படி கவனித்துக் கொள்வோமாக. இயேசு, ''இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்'' என்று கூறினார் (மத். 5:8அ). பவுல், ''நீங்கள் கிறிஸ்துவுடனே கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலது*

*பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்'' என்று எழுதினார் (கொலோ. 3:1, 2).*

***நல்ல நிலம்: உண்மையும் நன்மையுமான இருதயம்***

*கடைசியாக நாம் "நல்ல நிலத்திற்கு'' வருகின்றோம், இதை இயேசு "உண்மையும் நன்மையுமான" இருதயங்கள் என்று அடையாளப்படுத்தினார் (லூக். 8:15). இவர்களின் இருதயங்கள் கடினமானதாகவோ, ஆழமற்றதாகவோ அல்லது பிரிவுபட்டதாகவோ இருப்பதில்லை. இவர்கள் "வசனத்தைக் கேட்டு அதை ஏற்றுக்கொள்ளுகின்றார்கள்'' (மாற். 4:20). இவர்கள் வசனத்தைப் "புரிந்துகொள்வதற்கு" அவசியமான முயற்சியை மேற்கொள்ளுகின்றார்கள் (மத். 13:23). இவர்கள் வசனத்தை பெற்றுக் கொண்டவுடன் "அதை உறுதியாய்ப் பற்றிக் கொள்ளுகின்றார்கள்'' (லூக். 8:15). இவர்கள் சங்கீதக்காரரால் பின்வருமாறு விவரிக்கப்பட்ட மனிதரைப் போல் இருக்கின்றார்கள்: இவர்கள் "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாய் இருக்கின்றார்கள்" (சங். 1:2).*

*இப்படிப்பட்ட இருதயத்தில், வசனமானது முளைத்து, வளர்ந்து, கடைசியில் கனியை உண்டாக்குகிறது. இயேசு, "நல்ல நிலத்தில் விதைக்கப் பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும், உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும் அறுபதாகவும் முப்பதாகவும் பலன் தருவான்'' என்று கூறினார் (மத். 13:23). மாறுபட்ட நிலங்கள் மாறுபட்ட சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளன, எனவே விளைச்சலின் விகிதம் மாறுபடுகிறது, ஆனால் இவை யாவையும் - நூறு மடங்கு, அறுபது மடங்கு, முப்பது மடங்கு என்பவை யாவையும் - நல்ல விளைவாகவே உள்ளன. இங்கு கடைசியாக, விதைவிதைத்தலில் இருந்து விரும்பத்தக்க விளைவு உள்ளது: பக்குவமடைந்த ஒரு கிறிஸ்தவர் தமது வாழ்வில் ஆவிக்குரிய கனி தருகிறார்!*

*மீண்டும் ஒருமுறை, நாம் ஒவ்வொருவரும் நம்மையே கண்ணோக்கு வோம். ஒவ்வொருவரும், "நான் உண்மையும் நன்மையுமான இருதயத்தைக் கொண்டுள்ளேனா? நான் தேவனுடைய வசனத்தை ஆவலுடன் ஏற்றுக்கொள்கின்றேனா? நான் ஒவ்வொரு வழியிலும் அவருக்குக் கீழ்ப்படிய விருப்பம் கொண்டுள்ளேனா?'' என்று கேட்டுக் கொள்வோம்.*

*"கனி பரிசோதனையை'' மேற்கொள்ளுதல் என்பது அந்தக் கேள்வி களுக்குப் பதில்தரும் ஒரு வழியாக உள்ளது. இயேசு, "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்'' என்று கூறினார் (மத். 7:16அ). நாம் நமது வாழ்வில் கனி கொடுத்துள்ளோமா? நமது வாழ்வில் கனிகளைக் காண்பதற்குத் தேவன் உரிமை நிறைவுடன் எதிர்பார்க்கப் போதுமான கால அளவுக்கு நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருந்துள்ளோமா?[14] கிறிஸ்து, "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்'' என்று கூறினார் (யோவா. 15:8). நாம் "தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி'' (ரோமர் 7:4) கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டுள்ளதாகப் பவுல் எழுதினார். அவர், "சகல வித நற்கிரியை களுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ள"*

*வேண்டும் என்று நம்மிடத்தில் வேண்டுகோள் விடுத்தார் (கொலோ. 1:10).*

*“கனி கொடுத்தல்” என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? “கனி” என்ற வார்த்தையானது “விளைவு,” பயன் என்பதை அர்த்தப்படுத்த முடியும்.*[15] *கர்த்தருக்கென்று “கனி கொடுத்தல்” என்பது, வசனமானது, நம் வாழ்வில் விரும்பத்தக்க விளைவைக் கொண்டுள்ளது என்றும், நாம் வாழ்கின்ற முறையில் மக்கள் வசனத்தின் நடைமுறை விளைவைக் காண முடியும் என்றும் அர்த்தப்படுகிறது. நமது நடத்தையானது இயேசுவின் பண்பைப் பிரதிபலிக்கையில் நாம் “கனி கொடுக்கின்றோம்.” நாம் மக்களை மாபெரும் இரக்கத்துடன் நடத்துகையில், நாம் பிறருக்கு உதவுகையில் ‘‘கனி கொடுக்கின்றவர்களாய்’’ இருக்கின்றோம். ஆவிக்குரிய விஷயங்களின் மீதான நமது அன்பு நமது உண்மை நிறைந்த ஆராதனையிலும் பெருகுகின்ற ஊழியத்திலும் உறுதியானதாக வெளிப்படுகின்றபோது நாம் ‘‘கனி கொடுக்கின்றவர்களாய்’’ இருக்கின்றோம். நாம் சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொண்டு மற்றவர்களைக் கர்த்தரிடத்தில் நெருக்கமாய்க்கொண்டு வந்து சேர்க்கையில் “கனி கொடுக்கின்றவர்களாய்” இருக்கின்றோம்.*[16]

*மீண்டுமாக நாம் கிறிஸ்துவின் வார்த்தைகளையே திரும்பக் கூறுகின்றோம்: “கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவன்” (மத். 13:9). இது புரிந்துகொள்ளுதலுக்கான ஒரு அழைப்பாகப் பணி செய்வது மட்டுமின்றி, இப்பாடத்தின் தொகுப்பாகவும் பணி செய்ய முடியும்: கிறிஸ்துவின் வசனத்தை கேட்டு ஏற்றுக்கொள்ளுங்கள், நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்!*

## *முடிவுரை*

*நீங்கள் கடந்த காலத்தில் வசனத்தை ஏற்று இருக்கின்றீர்களா இல்லையா என்பது எனக்குத் தெரியாது, ஆனால் யாக்கோபுவால் பரிந்துரைக்கப்படும் பின்வரும் இருதயத்தின் எண்ணப்போக்குடன் நீங்கள் இப்பொழுது வசனத்தை ஏற்றுக்கொள்ளும்படி நான் உங்களை உற்சாகப் படுத்துகின்றேன்:*

> *ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள். அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள் (யாக். 1:21, 22).*

*இங்கு, உங்களுக்குப் பழக்கப்பட்டதாகவோ அல்லது பழக்கப்படாத தாகவோ உள்ள முக்கியமான சில வேத வசனப்பகுதிகள் தரப்படுகின்றன:*

> *“விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படுவான்” (மாற். 16:16).*

> *“நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று*

*இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப். 2:38).*

*"இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (அப். 22:16).*

*"... மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" (வெளி. 2:10).*[17]

*நீங்கள் உண்மையும் நன்மையுமான இருதயத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக - அதாவது, நீங்கள் இவ்வசனப் பகுதிகளைக் கேள்விப்பட வேண்டும், இவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும், விளங்கிக் கொள்ள வேண்டும், கீழ்ப்படிய வேண்டும். பின்பு, இவைகளை உங்கள் இருதயங்களில் உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்காக - நான் ஜெபிக்கின்றேன்!*

## குறிப்புகள்

*ஒரு கருத்தறிவில், இந்தப் பிரசங்கத்தின் செய்தி எளிமையானதாக உள்ளது; இன்னொரு கருத்தமைவில் இது ஆழ்ந்தறிவுடையதாக உள்ளது. நம் எல்லாருக்குமே அவ்வப்போது, விதைப்பவன் உவமையிலிருந்து சத்தியங்களை நினைவூட்ட வேண்டியது அவசியமாக உள்ளது.*

*நான் இந்தப் பிரசங்கத்தைப் பிரசங்கித்தபோது, நான் ஃபிளானல் போர்டு விவரிப்பைப் பயன்படுத்தினேன். பிரசங்கம் தொடங்குகையில் தலைப்பானது பலகையின் மேல்பகுதியிலும், விதைப்பவர் ஒருவருடைய படம் பலகையின் மையப்பகுதியிலும் இருக்கும். பலகையானது கருப்பு நிற நூல்கொண்டு நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும்.*

*நான் முதலில் உவமையை விவரித்து, இயேசுவால் கூறப்பட்ட கருத்துக்களை விவரிப்பதற்காக சிறு படத்துண்டுகளைப் பயன்படுத்தினேன். பிரசங்கம் வளருகையில் நான் சிறு படத்துண்டுகள் பலவற்றை பயன்படுத்தினேன். எடுத்துக்காட்டாக, கடினப்பட்ட இருதயம் பற்றிய சித்தரிப்பைப் பலகையில் பெயரிடுவதுடன் நான் தொடங்கினேன். பின்பு "நிலத்தின்மீது" நான் "விதையை" இட்டேன். கடைசியாக, அந்த விதையைக் கொத்திக் கொண்டுபோக தயாராக உள்ள ஒரு பறவையை சேர்த்தேன். இதே விதமான அணுகு முறையை நான் எல்லா நிலங்களுக்கும் பயன்படுத்தினேன்: மண் ஆழமாயிராத நிலத்தில் நான் முதலில் ஒரு சிறு செடியின் படத்தைப் பயன்படுத்தினேன்; பின்பு சூரியனின் படத்தை அதில் சேர்த்து, ஏற்கனவே இருந்த செடிக்குப் பதிலாக உலர்ந்த செடியின் படத்தைப் பயன்படுத்தினேன். பிற நிலங்களுக்கும் நான் இதே விஷயத்தைச் செய்தேன். பிரசங்கத்தில் உவமையைத் தருகிற பகுதியை நான் முடித்தபோது, ஃபிளானல் பலகையானது பின்வருமாறு காட்சியளித்தது:*




உவமையைப் பற்றிய இயேசுவின் விளக்கத்தை நான் கலந்துரையாடுகையில், நிலங்களின் கீழுள்ள பெயர்களை எடுத்துவிட்டு அவற்றிற்குப் பதிலாக தேவையான விவரிப்பு வார்த்தைகளைக் கூட்டினேன். பலகையின் கீழே சுயபரிசோதனையை ஊக்குவிக்கும் கேள்வியொன்றை வைத்தேன். கீழே உள்ள படமானது, பிரசங்கத்தின் முடிவில் ஃபிளானல் போர்டின் தோற்றத்தை விவரிக்கிறது:



குறிப்புகள்

[1]இந்தப் பாடத்திற்கான எனது குறிப்பு, பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது, எனவே இதற்கு நான் பயன்படுத்திய ஆதாரமூலங்கள் எல்லாவற்றையும் என்னால் நினைவுகூர இயலவில்லை. மெக்கார்வீ அவர்களின் Fourfold Gospel என்ற புத்தகம் பிரதான ஆதாரமூலமாக இருந்தது என்பது என் நினைவில் உள்ளது, மற்றும் நான், ஒரு ஃபிளானல்கிராப் [flannelgraph] பாக்கெட் எனக்கு நடைமுறைப் பயன்பாடு மற்றும் விவரித்தல் ஆகியவற்றிற்குக் கருத்துக்களை அளித்தது என்பதையும் நினைவுகூருகின்றேன். அதைத் தவிர, நான் யாருக்கு நன்றிகூற வேண்டும் என்பதை அறியாதிருக்கின்றேன். உரியவருக்கு உரிய வகையில் மதிப்பளிக்கத் தவறியிருந்தால் அதற்கு நான் மன்னிப்பை வேண்டுகின்றேன். [2]சில விதைகள் "வழியோரமாக" விழுந்தன என்று KJV கூறுகிறது. நீங்கள் NASBயின் சொற்றொடரில் நிலைத்திருக்க விரும்பினால், ''சாலையோரமாக'' என்ற வார்த்தையைப் பயன்படுத்த விரும்பலாம். [3]நீங்கள் பேசுகையில், நிலங்களின் மாறுபட்ட வகைகளின் விவரிப்புகளைக் காண்பிக்க விரும்பலாம். [4]இந்த நிலம் பல்வேறு அளவுள்ள பாறைகளால் நிறைந்திருந்தது என்று நினைக்க வேண்டாம், ஆனால் அதற்கு மாறாக இது ஒரு பாறை அடுக்கின்மீது, மெல்லியதான மண் அடுக்கு உடையதாக இருந்தது. [5]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 330. [6]நான் வாழும் இடத்தில், கோதுமைக் கதிர் அல்லது மக்காச்சோளக் கதிர் பற்றி நான் பேச முடியும். உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு நன்கு பழக்கப்பட்ட ஒரு சொற்றொடரை [உதாரணமாக, நமது நாட்டில் ''நெற்கதிர்'' என்று] பயன் படுத்துங்கள். [7]நிலமானது (இருதயம்) விதைப்பவரால் (போதகரால்) தயார் செய்விக்கப்பட்டு சுத்தமாய்க் காத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பது உண்மையே, ஆனாலும் இந்த உவமையில் நிலத்தின் (இருதயத்தின்) நிலை மட்டுமே கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. [8]கொலோசெயர் 1:23ஐ வாசிக்கவும். [9]கொலோசெயர் 2:7ஐ வாசிக்கவும். [10]இந்த வாக்கியம் மெக்கார்வி மற்றும் பென்ட்லெட்டன் ஆகியோரின் புத்தகத்தில் பக்கம் 334ல் இருந்து தழுவப்பட்டுள்ளது.

[11]எனது நடைமுறைப் பயன்பாடுகள் நான் வாழும் இடத்திற்குப் பொருந்துகின்றன. உங்கள் இடம் மற்றும் உரையைக் கேட்பவர்களுக்குத் தக்காற்போன்று இவற்றைத் தழுவியமைத்துக் கொள்ளுங்கள். [12]''திசை திருப்பப்பட்ட இருதயம்'' என்ற இன்னொரு சொற்றொடரும் பயன் படுத்தப்படக்கூடும். [13]கர்த்தருக்கென்று ''கனி கொடுத்தல்'' என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்று நீங்கள் விளக்கம் தர வேண்டியது அவசியமாயிருக்கும். இது இப்பாடத்தின் முடிவுப் பகுதிக்கு அண்மையில் சுருக்கமாகக் கலந்துரையாடப்படுகிறது. [14]உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கப்பட்ட தாவரங்களைப் பயன்படுத்தி இந்தச் சிந்தனையை நீங்கள் விவரிக்க விரும்பலாம். என்னிடத்தில் நன்கு வளர்ந்த ஏழு பெக்கான் மரங்களும், இரண்டு இளம் மரங்களும் உள்ளன. அவ்விரண்டு மரங்களில் இருந்து உடனடியாக நான் பெக்கானை எதிர்பார்க்கவில்லை, ஆனால் இந்த ஆண்டு சில கனிகளைக் காண்பதற்கான காலமாயிற்று. ஒரு சில பருவகாலங்கள் கடந்து சென்று, கனி எதுவும் கிடைக்காதிருந்தால், அவைகள் வெட்டி வீழ்த்தப்படும். (இந்த ஆண்டு முதன்முறையாக அவற்றில் சில பெக்கான்கள் இருந்தன, எனவே அவைகள் பாதுகாப்பாக உள்ளன.) [பெக்கான் என்ற மரம் நம் நாட்டில் இல்லாதது. எனவே அதற்குப் பதிலாக பப்பாளி மரம் என்ற உதாரணத்தைப் பயன்படுத்தலாம். பப்பாளி மரத்தில் ஆண்மரங்கள் கனி தருவதில்லை, எனவே பொதுவாக அவற்றை அதிகம்

*வைத்துக்கொள்ள மக்கள் விரும்புவதில்லை.*] [15]*American Heritage Dictionary,* 4th ed. (2001), s.v. "fruit." [16]*இந்தப் பத்தியை நீங்கள் வாழும் இடத்திற்குப் பொருத்தமான வகையில் தழுவி விரிவாக்கிக் கொள்ளுங்கள்.* [17]*உங்கள் உரையைக் கேட்பவர்களைப் பொறுத்து, தவறு செய்கின்ற கிறிஸ்தவர் எவ்வாறு மீளக்கட்டி எழுப்பப்படக்கூடும் என்பதற்கான வசனப்பகுதிகளையும் (அப். 8:22; யாக். 5:16; 1 யோவா. 1:9) நீங்கள் உள்ளடக்கலாம்.*

# *34*

# "இவர் யார்?"

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #13*

V. *இரண்டாம் பஸ்காவில் இருந்து மூன்றாம் பஸ்கா வரை (தொடர்ச்சி).*
   - P. *புயலை அமர்த்துதல் (மத். 8:18, 23-27; மாற். 4:35-41; லூக். 8:22-25).*
   - Q. *அசுத்த ஆவி பிடித்த இருவரைக் குணமாக்குதல் (மத். 8:28-34; 9:1; மாற். 5:1-21; லூக். 8:26-40).*
   - R. *பாவிகளுடன் உண்ணுதல் (மற்றும் உபவாசித்தல் பற்றிய உரை) (மத். 9:10-17; மாற். 2:15-22; லூக். 5:29-39).*

*இந்தப் பாடத்தில் நாம் "மும்முரமான நாள்" - பரிசேயர்களின் தேவதூஷணக் குற்றச்சாட்டுடன் தொடங்கி கலிலேயாக் கடலின் கிழக்குக்கரைக்கு இயேசு பின்திரும்பிச் சென்றதில் முடிவடைந்த நாள் - பற்றிய நமது படிப்பை முடிப்போம். கிறிஸ்து புயலை அமர்த்தியபோது சீஷர்கள் கூறிய வார்த்தைகளில், இந்தப் பாடத்தின் ஆய்வுக்கருத்து காணப் படுகிறது: "இவர் யாரோ? காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே" (மாற். 4:41; லூக். 8:25; மத். 8:27ஐக் காணவும்). "இவர் யார்?" என்ற கேள்வி இயேசுவின் ஊழிய நாட்கள் முழுவதிலும் எதிரொலித்தது - இது உண்மையில் அவர் யார் என்பதை உணர்ந்து அறிதல் மக்களுக்கு எவ்வளவு கடினமாக இருந்தது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. மேற்கூரையின் வழியே இறக்கி விடப்பட்ட மனிதனை கிறிஸ்து குணமாக்கியபோது, பரிசேயர்கள் "தேவதூஷணம் சொல்லுகிற இவன் யார்?" என்று கேட்டார் கள் (லூக். 5:21). இயேசு, தமது பாதங்களைக் கண்ணீரால் கழுவியிருந்த பெண்ணை மன்னித்தபோது, பிற விருந்தினர்கள், "பாவங்கள் மன்னிக்கிற இவன் யார்?" என்று கேட்டார்கள் (லூக். 7:49). கிறிஸ்துவின் செயல்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றை ஏரோது அரசரைச் சென்று சேர்ந்தபோது, அவர் "இவன் இப்படிப்பட்டவைகளைச் செய்கிறான் என்று கேள்விப்படு கிறேனே! இவன் யார்?" என்று கேட்டார் (லூக். 9:9). இயேசு எருசலேமுக்குள் வெற்றிப்பிரவேசமாக உள்நுழைந்தபோது, நகரத்தில் இருந்த யாவரும் ஆச்சரியப்பட்டு, "இவர் யார்?" என்று கேட்டார்கள் (மத். 21:10). கிறிஸ்து தம்மை நோக்கியவர்களைக் கலக்கமடைய வைத்த மூன்று வேளைகளைப் பற்றி இந்தப் பாடம் சித்தரிக்கும்.*

## *“புயலை அமர்த்துகின்ற இவர் யார்?”*[1]

## *(மத். 8:18, 23-27; மாற். 4:35-41; லூக். 8:22-25)*

*நமது முந்திய பாடம் “உவமைகளின் மாபெரும் முதல் குழு”வின் மீதானதாக இருந்தது. மத்தேயு சுவிசேஷ விவரத்தின்படி, “இயேசு இந்த உவமைகளைச் சொல்லி முடித்தபின்பு, அவ்விடம் விட்டு [புறப்பட்டார்]” (மத். 13:53).*[2] *அவர் கலிலேயாக் கடலின் கிழக்குக் கரைப்பகுதிக்குப் புறப்பட்டுச் சென்றதாக மாற்கு பதிவு செய்தார்: “அன்று அவர் [உவமை களினால் பேசிய அன்று (மாற். 4:34)] சாயங்காலத்தில்,*[3] *அவர் அவர்களை நோக்கி: ‘அக்கரைக்குப் போவோம் வாருங்கள்’ என்றார்” (மாற். 4:35). இது கடலின் கிழக்குப் பகுதிக்குக் கிறிஸ்து மேற்கொண்டதாகப் பதிவுசெய்யப் பட்டுள்ள பயணங்களில் முதலாவதாக இருந்தது. மாற்கு, “அவர்கள் ஜனங்களை அனுப்பிவிட்டு, அவர் படவிலிருந்தபடியே அவரைக் கொண்டு போனார்கள்” என்று எழுதினார் (மாற். 4:36அ) - அதாவது, அவர்கள் ஆயத்தம் எதுவுமின்றி, உணவுப் பொருட்கள் எதுவுமின்றி உடனடியாகப் புறப்பட்டார்கள். மாற்கு, “வேறே படவுகளும் அவரோட கூட இருந்தது” என்றும் கூடுதலாகக் கூறினார் (மாற். 4:36ஆ). இந்தப் படகுகள், இயேசு உரைப்பதை அதிகமான மக்கள் கேட்கும்படியாக, அவர் இருந்த படகின் அருகில் கொண்டு வரப்பட்டு இருந்திருக்கலாம் (மாற். 4:1). புயல் விரைவில் எழுந்து விரைவில் அமர்ந்ததைக் கண்ட மற்ற சாட்சிகள் இருந்தார்கள் என்று காண்பிப்பதற்காக இந்த விவரம் இவ்விடத்தில் இடைச் செருகப்பட்டு இருக்கலாம்.*

*கூட்டத்திலிருந்து கிறிஸ்துவுக்குச் சற்று ஓய்வளித்தல் என்பதே அவரது இந்தப் பயணத்திற்கான காரணமாயிருந்தது (மத். 8:18; மாற். 4:36ஐக் காணவும்). அவர் முழுவதும் தேவனாக இருந்தாலும், அவர் முழுவதும் மனிதராகவும் இருந்தார்,*[4] *மற்றும் “ஒரு மும்முரமான நாளானது” அவரை இளைப்படையச் செய்திருந்தது. அவர் விரைவிலேயே உறக்கத்தில் ஆழ்ந்தார் (லூக். 8:23). மாற்கு, “கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார்” என்று கவனித்துள்ளார் (மாற். 4:38). பின்னணியம் என்பது படகின் பின்புறத்தில் இருந்தது, அங்கு அதிக இடம் இருந்தது. “தலையணை” என்பது அநேகமாக ஒரு இலக்கை மேலுறையாக, ஒருவேளை தலையணையாகப் பயன்படுவதற்காகச் சுருட்டி வைத்துக்கொள்ளக்கூடிய மயிர்த்தோலாக இருக்கலாம். J. W. ஷெப்பர்டு அவர்கள், பின்வருமாறு எழுதினார்:*

> *இயேசுவின் மனித சரீரத்தின்மீது, மயக்கம், களைப்பு மற்றும் இளைப்பு ஆகியவை செல்வாக்குச் செலுத்தின, அவர் ஏரியின் சுகமான காற்று தாலாட்ட, படகின் மென்மையான ஒத்திசைவு ஆட்டம் சீராட்ட, ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கினார் ... அவருக்கு அருகாமையில், அவரது சீஷர்கள், அந்த நாளில் நடந்தவை பற்றி அமிழ்ந்துபோன குரல்களில் உரையாடிக் கொண்டிருக்கையில், மற்றவர்கள் அமைதி யாகப் பாய்மரங்களைச் சரிசெய்து கொண்டு சலனமற்ற தண்ணீரின் மேல் சறுக்கிச்சென்ற படகை வழிநடத்திக் கொண்டிருந்தார்கள்.*[5]

*கப்பர்நகூமில் இருந்து "கெர்கெனேசர் நாட்டிற்கு" தண்ணீரின் குறுக்கே ஒரு சில மைல்கள் தூரமே இருந்தது.[6] சாதகமான சூழ்நிலைகளில், இந்தப் பயணம் இரண்டு அல்லது மூன்று மணிநேரத்தில் முடிவடைந்து விடும்.*

*இந்தப் பயணம் சாதகமான சூழ்நிலைகளின் கீழ் இருக்கவில்லை. விரைவிலேயே ஒரு புயல் ஏற்பட்டது "... கடலின் பெருங்காற்று உண்டாயிற்று; கடலிலே சுழற்காற்றுண்டாயிற்று" (மத். 8:24; லூக். 8:23அ). "பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக, அலைகள் மோதிற்று" (மாற். 4:37). "அவர்கள் மோசமடையத்தக்கதாய்ப் படவு ஜலத்தினால் நிறைந்தது" (லூக். 8:23).*

*கலிலேயாக் கடலில் திடீர்ப் புயல்கள் ஏற்படுவது வழக்கம். அது கடல் மட்டத்திலிருந்து எழுநூறு அடிகள் கீழே இருந்தது மற்றும் மலைப் பகுதியால் சுழப்பட்டிருந்தது. மலைப் பகுதிகளில் இருந்து குளுமையான காற்று கடலினுள் வீசும்போது, ஒரு சில நொடிகளிலேயே அமைதியான மேற்பரப்பானது நுரைதள்ளும் அலைகள் கொந்தளிக்கும் கூட்டமாக மாறிவிடும். படகில் இருந்தவர்களில் சிலர் மீனவர்களாக இருந்தார்கள், இவர்கள் இந்தக் கடலில் பல புயல்களைக் கண்டிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. இப்படிப்பட்டவர்கள்கூட பயந்தார்கள் என்ற உண்மை யானது, இது சாதாரணக்காற்று அல்ல என்பதை சுட்டிக்காண்பிக்கிறது.*

*படகு அலைகளினால் பந்தாடப்பட்டுக் கொண்டிருந்தபோது, இயேசு தொடர்ந்து உறங்கிக்கொண்டு இருந்தார். "புயலடிக்கும்போது உறங்கக் கூடியவராயிருந்த இவர் யார்?" என்று நாம் கேட்க முடியும். "முற்றிலும் இளைப்படைந்த ஒரு மனிதர்" என்பதே நமது முதல் பதிலாயிருக்கும். "தமது தேவன்மீது நம்பிக்கை கொண்டுள்ள, முற்றிலும் இளைப்படைந்த ஒரு மனிதர்" என்பதே அதிகம் முழுமையான பதிலாக இருக்கும்.*

*இயேசு புயலினால் கலவரமடையவில்லை, ஆனால் அவரது சீஷர்கள் கலவரம் அடைந்தார்கள். ஒப்பீட்டு எழுத்தாளர்கள், "குழப்பமுற்ற குரல்களில் உளறல் ஒன்றை"[7] பதிவுசெய்தார்கள். "அவர்கள் இயேசுவிடம் வந்து, அவரை எழுப்பி, 'ஐயரே, ஐயரே, மடிந்து போகிறோம்' என்று கூறினார்கள்" (லூக். 8:24); "அவர்கள் அவரிடத்தில் வந்து ... 'ஆண்டவரே! எங்களை இரட்சியும், மடிந்துபோகிறோம்' என்றார்கள்" (மத். 8:25); "... அவர்கள் அவரை எழுப்பி: 'போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா' என்றார்கள்" (மாற். 4:38).*

*இயேசு என்ன செய்யும்படி அவர்கள் எதிர்பார்த்தார்கள் என்பது நமக்கு நிச்சயமாகத் தெரியவில்லை அவர் இதற்கு முன்பு ஒரு புயலை அமர்த்தியிருந்ததை அவர்கள் ஒருபோதும் கண்டிருக்கவில்லை, மற்றும் அவர் இதை அமர்த்தியபோது, அவர்கள் திகைப்படைந்தார்கள் என்பது உறுதி (மத். 8:27; மாற். 4:41; லூக். 8:25). ஒருவேளை அவர்கள், பயமடைந்து பெற்றோரிடம் "ஏதாவது செய்யுங்கள்" - இந்த "ஏதாவது" என்பது என்ன என்பதையே அறியாமல் இவ்வாறு - கதறும் குழந்தையைப் போன்று இருந்திருக்கலாம்.[8]*

*சீஷர்கள் பயமடைந்தார்கள், ஆனால் கிறிஸ்து பயமடையவில்லை. முதலில் அவர் சீஷர்களைக் கடிந்துகொண்டார்: "அற்ப விசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள்?" (மத். 8:26அ).[9] பின்பு அவர், "காற்றையும் கொந்தளிக்கும் அலைகளையும் அதட்டி: 'இரையாதே, அமைதலாயிரு' என்றார்" (லூக். 8:24ஆ; மாற். 4:39அ). அலைகள் "நின்றன"; "அவைகள் நின்றுபோய் அமைதலுண்டாயிற்று" (லூக். 8:24இ; மாற். 4:39ஆ). காற்று நின்ற பின்பும் கூட தண்ணீரின் மேற்பரப்பானது சற்று நேரத்திற்குக் கொந்தளித்துக் கொண்டுதான் இருக்கும், எனவே காற்றும் அலைகளும் உடனடியாக நின்றுபோனது என்பது ஒரு இரட்டை அற்புதமாக இருந்தது.*

*கலிலேயாக் கடலில் புயல்கள் வந்து சென்றதை இயேசுவின் சீஷர்கள் கண்டிருந்தார்கள், ஆனால் அவர்கள் இதுபோன்ற ஒன்றை ஒருக்காலும் கண்டதில்லை. அவர்கள் திகைப்பில் மூழ்கியவர்களாய்[10] "இவர் எப்படிப் பட்டவரோ?" என்று கூவினார்கள் (மத். 8:27); "இவர் யாரோ, காற்றுக்கும் ஜலத்துக்கும் கட்டளையிடுகிறார், அவைகளும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே" என்று கூறிக்கொண்டார்கள் (லூக். 8:25ஆ). "வல்லமையின் மனிதர்" என்பதே அவர்களின் கேள்விக்குப் பதிலாக உள்ளது (லூக். 4:14; 5:17; 6:19; 8:46; 1 கொரி. 5:4; 2 கொரி. 12:9 ஆகியவற்றைக் காணவும்).*

*இந்த வரலாறு உங்களுக்கும் எனக்கும் நடைமுறைப் பயன்பாடு ஒன்றைக் கொண்டுள்ளது. நாம் யாவரும் வாழ்வின் புயல்களினால் ஆட்டுவிக்கப்பட்டுக் கொண்டுள்ளோம். சில வேளைகளில், நாம், அந்த சீஷர்களைப் போலவே, நமது விசுவாசத்தை வீழ்ந்துபோக அனுமதித்து விட்டு, "போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலை யில்லையா?" என்று கதறுகின்றோம் (மாற். 4:38). அவர் கலிலேயாவின் அலைகளை அமைதிப்படுத்தியது போலவே, கிறிஸ்தவர்களின் மார்பில் ஏற்படும் கலக்கத்தையும் அமைதிப்படுத்த முடியும் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டிய அவசியமாகிறது.[11]*

## "உடல்களையும் ஆத்துமாக்களையும் குணமாக்குகின்ற இவர் யார்?" (மத். 8:28-34; மாற். 5:1-21; லூக். 8:26-40)

*கடைசியாக, இயேசுவும் அவரது சீஷர்களும் கலிலேயாக் கடலின் கிழக்குப் பகுதியில் தங்கள் அடைவிடம் சென்று சேர்ந்தார்கள். அவர்கள் "கெர்கெசேனர் நாட்டில்" சேர்ந்தார்கள் என்று மத்தேயு கூறினார் (மத். 8:28), மாற்குவும் லூக்காவும் அப்பகுதியை "கதரேனருடைய நாடு" என்று அழைத்தார்கள் (மாற். 5:1; லூக். 8:26).[12] கெரேசா (இது கெர்கேசா என்றும் அறியப்பட்டது) என்பது கலிலேயாக் கடலின் கிழக்குக் கரையில் இருந்த கிராமம் ஆகும். அந்தப் பகுதி முழுவதும் தென்கிழக்கில் ஒரு சில மைல்கள் தொலைவில் இருந்த கதரேனியர்களால் ஆளப்பட்டது. ஆகையால் இது "கெர்கெசேனர் நாடு" என்றும் "கதரேனருடைய நாடு" என்றும் அறியப் பட்டது.[13]*

*தனிமையான அந்த இடத்தில் ஓய்வெடுக்கலாம் என்று இயேசு நம்பிக்கையாய் இருந்தார் என்றால், ஓய்வு அவருக்கு மறுக்கப்பட்டது; ஏனெனில் அவர் ஒரு வினோதமான வரவேற்புக் குழுவால் வரவேற்கப் பட்டார். "அவர் அக்கரையிலே கெர்கெசேனர் நாட்டில் வந்தபோது, பிசாசு பிடித்திருந்த இரண்டுபேர் பிரேதக் கல்லறைகளிலிருந்து புறப்பட்டு, அவருக்கு எதிராக வந்தார்கள்" (மத். 8:28அ).[14] அசுத்த ஆவி பிடித்திருந்த இருவரைப் பற்றி மத்தேயு கூறுகையில், மாற்குவும், லூக்காவும், அசுத்த ஆவி பிடித்திருந்த அவ்விருவரில் மிகவும் மோசமானவர்மீது கவனம் செலுத்தினார்கள்.[15]*

*அந்த மனிதர்களிடமிருந்து அசுத்த ஆவிகளை இயேசு துரத்தத் தொடங்கியபோது, அசுத்த ஆவிகள் அவரிடத்தில், அருகிலிருந்த மலை யடிவாரத்தில்[16] மேய்ந்துகொண்டிருந்த பன்றிக் கூட்டத்திற்குள்[17] பிரவேசிக்கத் தங்களை அனுமதிக்கும்படி கேட்டுக்கொண்டன. அசுத்த ஆவிகள் பன்றிகளுக்குள் நுழைந்தபோது, அந்தப் பன்றிக்கூட்டம் பித்துப் பிடித்தவை போலாகி, மலையிலிருந்து துரிதமாய் ஓடி கடலுக்குள் விழுந்து இறந்துபோயின.*

*பல ஆண்டுகளுக்கு முன்பு, ஜான் எஸ். ஸ்வீனி அவர்கள், ஞானஸ் நானம் பெறும் முறையைப் பற்றி நாமகரணக்கூட்டத்துப் பிரசங்கியார் ஒருவருடன் வாதம் செய்துகொண்டிருந்தார். புதிய ஏற்பாடு, ஞானஸ் நானம் என்பது முழுக்காட்டுதலாகச் செய்விக்கப்பட வேண்டும் என்று கூறுகிறதா அல்லது தெளித்தல் மூலம் செய்விக்கப்பட வேண்டும் என்று கூறுகிறதா என்பதே அவர்களின் வாதமாயிருந்தது. நாமகரணக்கூட்டத்தின் பிரசங்கியார், புதிய ஏற்பாட்டில் முழுக்காட்டுதலுக்கான உதாரணங்கள் எதுவுமேயில்லை என்ற உச்சகட்டமான நிலைப்பாட்டைக் கொண்டிருந் தார். நகைச்சுவையாகக் கூறும் முயற்சியில், அவர் "நன்று, புதிய ஏற்பாட்டில் முழுக்காட்டுதலுக்கான ஒரே ஒரு நிகழ்ச்சி உள்ளது" என்று கூறிய அவர், இரண்டாயிரம் பன்றிகள் கடலில் மூழ்கிய வரலாற்றைக் குறிப்பிட்டார். சகோதரர் ஸ்வீனீ அவர்கள் விவாத மேடைக்கு வந்தபோது, "ஆம், அது முழுக்காட்டுதலுக்கான நிகழ்ச்சியாக இருந்தது - மற்றும் இந்த செயல் வகையில் பிசாசானவன் தனது இறைச்சியை இழந்து விட்டபடியால், அவன் அன்றிலிருந்து இம்முறையை மாற்ற முயற்சி செய்து கொண்டிருக் கின்றான்!" என்று பதில் அளித்தார்.[18]*

*நடந்தவற்றை அந்தப்பகுதியில் இருந்த மக்கள் அறிந்தபோது, அவர்கள் கிறிஸ்துவை அவ்விடத்தை விட்டுச் சென்றுவிடும்படி கெஞ்சினார்கள். (அவர்கள் தங்களின் கால்நடைகளில் அதிகமானவற்றை இழந்து விடுவோமோ என்று பயம் நிறைந்தவர்களாகியிருப்பார்கள் என்று நான் யூகிக்கின்றேன்.) அவர்களின் வேண்டுகோளுக்கு இயேசு இணங்கத் தயாராகிக் கொண்டிருந்தபோது, குணமாக்கப்பட்ட மனிதர்களில் ஒருவன், இயேசுவுடன் தான் வருவதற்கு வேண்டுகோள் விடுத்தான் (மாற். 5:18). அதற்கு இயேசு, "நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப் போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவியென்று சொன்னார்" (மாற். 5:19).*

*நடந்தது என்ன என்பதை ஒருவருக்கும் கூறவேண்டாம் என்று இயேசு மற்றவர்களிடத்தில் அறிவுறுத்தியிருக்கையில் (மாற். 1:43, 44), அவர் இந்த மனிதனிடம் அதைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளும்படி கூறியது ஏன் என்று நாம் வியப்படையலாம். இந்த குணமாக்குதல், பரிசேயர்கள் மற்றும் வேதபாரகர்களின் செல்வாக்கு வட்டாரத்திற்கு அப்பால் நடந்தது என்பது ஒரு காரணமாக இருக்கலாம். இந்தப் பகுதியில் விளம்பரம் என்பது அவரது விரோதிகளிடத்தில் மிகக் குறைவாகவே பகைமை உணர்வைத் தூண்டி விடுவதாக இருக்கும். இயேசு தாம் பிரசங்கிக்க முடிவதற்கு முன்பே அங்கிருந்து வெளியேறுமாறு கட்டாயப்படுத்தப்பட்டிருந்ததால், அவர் இந்த இடத்தில் ஒரு சாட்சியை விட்டுச் செல்ல விரும்பினார் என்பது சாத்தியக்கூறுள்ள இன்னொரு காரணமாக உள்ளது.*

*இந்த மனிதர், தாம் செய்யும்படி தம்மிடத்தில் கர்த்தர் கேட்டுக் கொண்டதைச் செய்தார்: "அந்தப்படியே அவன் போய், இயேசு தனக்குச் செய்தவைகளையெல்லாம் தெக்கப்போலி[19] என்னும் நாட்டில் பிரசித்தம் பண்ணத்தொடங்கினான்; எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்" (மாற். 5:20). இதன் விளைவாக, கிறிஸ்து அடுத்த முறை அந்தப் பகுதிக்கு வந்தபோது, அவர் மிகவும் சாதகமான வரவேற்பைப் பெற்றார் (மாற். 7:31-37).*

*இது திகைப்பும், இருதயத்தை அசையச் செய்வதுமான வரலாறாக உள்ளது. இதனை நாம் நமது சிந்தைக்குள் மறுகண்ணோட்டமிடுகையில் நாம், "அன்புகூரப்படாதவர்கள் மற்றும் அன்புகூராதவர்கள் ஆகியோரைச் சென்று அடைகிற இவர் யார்? உடல்களையும் மனங்களையும் குணமாக்குகின்ற இவர் யார்?" என்று கேட்கின்றோம். "பரிவிரக்கம் உள்ள ஒரு மனிதர்" என்பதே பதிலாக உள்ளது.*

*இந்த விவரத்திலிருந்து, இயேசு ஒவ்வொருவர் மீதும் அன்பு கூருகின்றார் என்பதைக் கற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் யாராக மற்றும் என்னவாக இருக்கின்றீர்களோ, அதனிமித்தமாக இயேசு உங்கள்மீது ஒருக்காலும் அன்புகூர முடியாது என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? இருளிலிருந்து கிறிஸ்துவிடத்தில் தாவிக்குதித்த அந்த அழுக்கான, வெறுக்கத்தக்க, பண்பற்ற மனிதர்களை நினைத்துப் பாருங்கள். இயேசு அவர்கள்மீது அன்புகூர்ந்தார் - அவர் உங்கள் மீது[ம்] அன்புகூருகின்றார்! (வெளி. 1:5ஐக் காணவும்.)*

## *"பாவிகளுடன் உண்ணுகின்ற இவர் யார்?" (மத். 9:1, 10-17; மாற். 2:15-22; லூக். 5:29-39)*

*கெர்கெசேனில்[20] இருந்த மக்கள் அவரை சென்றுவிடும்படி கேட்டுக் கொண்டபோது, "அவர் [இயேசு] படவில் ஏறி, இக்கரைப்பட்டுத் தம்முடைய பட்டணத்திற்கு வந்தார்" (மத். 9:1). அதாவது, அவர் கப்பர் நகூமுக்குத் திரும்பி வந்தார். அங்கு திரளான கூட்டத்தார் அவரைச் சந்தித்தார்கள் (மாற். 5:21; லூக். 8:40ஐக் காணவும்). அடுத்து, துல்லியமாக நடந்தது என்ன என்பதைக் கூறுவது கடினமாக இருக்கிறது. அவர் திரும்பி வந்த உடனே, யாவீருவின் மகளை மரித்தோரில் இருந்து எழுப்பினார் (மத்.*

*9:18-26; மாற். 5:22-43; லூக். 8:41-56). அந்த நிகழ்ச்சியைப் பற்றி நாம் அடுத்த பாடத்தில் படிப்போம், ஆனால் இந்தப் பாடத்தை, நாம் இவ்விடத்தில் மத்தேயுவால் இடைச் செருக்கப்பட்ட ஒரு வரலாற்றுடன் முடிக்க விரும்புகின்றோம்.[21] மத்தேயு சீஷத்துவத்திற்கான அவரது அழைப்பைப் பதிவு செய்தவுடன், தாம் கிறிஸ்துவைக் கனப்படுத்துவதற்காகக் கொடுத்த விருந்தைப் பற்றிக் கூறினார். ஒப்பீட்டு சுவிசேஷங்களின் எழுத்தாளர்கள் யாவரும், கனத்திற்குரிய விருந்தினரிடம் அதிகம் விமர்சனத்தை விளைவித்த இந்த விருந்துக் கூட்டம் பற்றிய நிகழ்ச்சியைக் கூறினார்கள்.*

### *விமர்சன எண் 1: பாவிகளுடன் உண்ணுதல்*

*"அந்த லேவி [அதாவது மத்தேயு] என்பவன் தன் வீட்டிலே அவருக்குப் பெரிய விருந்து பண்ணினான்" (லூக். 5:29அ). மத்தேயு இயல்பாகவே, தமது பழைய நண்பர்களையும் முன்னாள் உடன் பணியாளர்களையும் அழைத்திருந்தார். விரைவிலேயே அவரது வீடு வரிவசூலிப்பவர்கள் மற்றும் சமூகத்தில் ஒதுக்கப்பட்டிருந்த பிறர் ஆகியோரால் நிறைந்தது: "... அநேக ஆயக்காரரும் பாவிகளும் அவரோடு கூடவந்திருந்தபடியால், அவர்களும் இயேசுவோடும் அவர் சீஷரோடுங் கூடப் பந்தியிருந்தார்கள்" (மாற். 2:15).[22]*

*கர்த்தரை விடாது பின்தொடர்ந்து கொண்டிருந்த பரிசேயர்கள் முறு முறுக்கத் தொடங்கினார்கள் (லூக். 5:30அ). அவர்கள், அவரது சீஷர்களிடத் தில், "உங்கள் போதகர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம் பண்ணுகிறதென்னவென்று கேட்டார்கள்" (மத். 9:11). கிறிஸ்துவின் பதில் தனிச்சிறந்ததாக இருந்தது. "பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதே யல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. நீதிமான்களையல்ல,[23] பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" (லூக். 5:31, 32).[24]*

### *விமர்சன எண் 2: உபவாசம் இராதிருத்தல்*

*விமர்சிப்பதில் ஊக்கம் குறையாமல், பரிசேயர்கள் இரண்டாவது விமர்சனம் ஒன்றை ஏவினார்கள், ஒருவேளை இது இயேசுவும் அவரது சீஷர் களும் மத்தேயு அளித்த விருந்தை மகிழ்வுடன் அனுபவித்தார்கள் என்ற உண்மையினால் தூண்டப்பட்டிருக்கலாம்: "யோவானுடைய சீஷரும் பரிசேயருடைய சீஷரும் உபவாசிக்கிறார்களே, உம்முடைய சீஷர் உபவாசியாமலிருக்கிறதென்ன?" (மாற். 2:18). யோவானின் சீஷர்களில் சிலர் அங்கிருந்தார்கள், "என்ன? [ஏன்?]" என்று கேட்டதில் அவர்களின் குரல் மணியோசை போல் ஒலித்தது (மத். 9:14).[25]*

*"நீண்ட காலத்திற்கு முன்னதாக நமது முன்னோர்கள் தொடங்கிய பாரம்பரியத்தை நீர் ஏன் தொடர்வதில்லை?"[26] என்பதே இக்கேள்வியின் சாராம்சமாக இருந்தது. மேசியாவின் வருகையானது ஒரு புதிய யுகத்தைத் தொடங்கி வைத்தது, ஒருவர் எப்போதுமே கடந்த காலப் பாரம்பரியங் களுடன் இணக்கம் கொண்டிருப்பதில்லை என்ற கருத்து கிறிஸ்துவின் பதிலில் இருந்தது. இயேசுவின் பதில் இரண்டு பாகங்களைக் கொண்டிருந் தது. உபவாசம் பற்றிய பாரம்பரியம் தமது சீஷர்களுக்கு ஏற்புடையதல்ல என்பது முதல் பாகமாயிருந்தது. அவர் மேசியாவின் வருகையை ஒரு*

*திருமண வைபவத்துடன் ஒப்பிட்டார் (மத். 9:15; மாற். 2:19, 20; லூக். 5:34, 35): இப்படிப்பட்ட வைபவங்கள் களிகூரும் வேளைகளாக இருந்தன, இவைகள் புலம்பி அழும் வேளைகளாயிருந்ததில்லை.[27] (உபவாசம் என்பது யூதர்களுக்கு மனஸ்தாபம் மற்றும் துயருறுதல் ஆகியவற்றின் அடையாள மாக இருந்தது.)*

*மனிதரால் ஏற்படுத்தப்பட்ட பாரம்பரியங்களை உள்ளிணைத்தல் என்பது மேசியாவின் ஆளுகைக்கு அழிவைக் கொண்டுவருவதாகும் என்பது அவரது பதிலின் இரண்டாவது பாகமாக இருந்தது. அவரது போதனையுடன் பரிசேயர்களின் பாரம்பரியங்களை இணைத்தல் என்பது, புதிய துணி ஒன்றுடன் பழந்துணியை ஒட்டுப்போட்டுத் தைப்பது போன்றதாகும் (லூக். 5:36). புதிய துணி சுருங்கும்போது, அது பழந்துணியைக் கிழித்து விடும். மீண்டுமாக, அவரது புதிய மார்க்கத்துடன் பழைய பாரம்பரியங்களை இணைக்க முயற்சி செய்தல் என்பது புதிய திராட்ச இரசத்தைப் பழைய துருத்திகளில்[28] ஊற்றி வைப்பதற்கு ஒப்பானதாகும். பழைய துருத்திகளின் அடிப்பகுதியில் உள்ள [பழைய திராட்ச இரசத்தின்] எச்சங்கள் புதிய திராட்ச இரசத்தை நொதித்துப் பொங்கச் செய்துவிடும், இது பழைய, நொறுங்கும் நிலையில் உள்ள துருத்திகளைக் கிழித்துப்போடும் (லூக். 5:37).[29]*

*இயேசுவின் புதிய மார்க்கத்தைப் பரிசேயர்கள் ஏற்றுக்கொள்ள மன விருப்பம் இல்லாதிருப்பார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். மாற்றத் தைப் பற்றி சற்றும் கருதாமல், "பழையதே நல்லது" (லூக். 5:39)[30] என்று கூறுபவர்களைப் பற்றி அவர் பேசியது கவலைக்குரியதாகும்.*

*நாம் இந்த வரலாற்றை விட்டுச் செல்வதற்கு முன்பு நான், கர்த்தர் மீதான விமர்சனத்தைத் தூண்டி விட்ட நிகழ்ச்சிக்குத் திரும்ப விரும்பு கின்றேன்: அது, அவர் ஆயக்காரர்களுடனும் பாவம் நிறைந்த மற்ற மனிதர் களுடனும் உணவு உண்ட நிகழ்ச்சியாகும். "பாவிகளுடன் உணவு உண்ணு கின்ற இவர் யார்?" "நோக்கத்துடன் இருந்த ஒரு மனிதர்" என்பதே இதற்கு பதிலாக உள்ளது. இயேசு, "நீதிமான்களையல்ல பாவிகளையே மனந்திரும்பு கிறதற்கு அழைக்க வந்தேன்" என்று கூறினார் (லூக். 5:32). வேறு ஒரு இடத்தில் இயேசு, "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார்" என்று கூறினார் (லூக். 19:10).*

*நீங்கள் ஒரு பாவியாக இருக்கின்றீர்களா? அவர் உங்கள்மீது அக்கறை கொண்டுள்ளாரா என்று நீங்கள் கேள்வி எழுப்புகின்றீர்களா? மத்தேயுவின் விருந்தில் அவர், சமுதாயத்தின் கேடுபாடுமிக்கவர்கள் என்று யூதர்களால் கருதப்பட்டவர்களுடன் உண்டு, பேசி, சிரித்திருந்ததைக் காணுங்கள். அவர் பாவிகளை நேசிக்கின்றார்! அவர் உங்களை நேசிக்கின்றார்!*

## முடிவுரை

*கிறிஸ்து, தம்மைப் பற்றிசுற்றியிருந்தவர்களை எவ்வாறு திகைப்புக் குள்ளாக்கினார் என்பது பற்றி நாம் மூன்று உதாரணங்களைப் படித்துள்ளோம்:*

- *“புயலை அமர்த்துகின்ற இவர் யார்?” வல்லமையின் மனிதர்.*
- *“உடல்களையும் ஆத்துமாக்களையும் குணமாக்குகின்ற இவர் யார்?” பரிவிரக்கத்தின் மனிதர்.*
- *“பாவிகளுடன் உண்ணுகின்ற இவர் யார்?” நோக்கத்தின் மனிதர்.*

*பாவிகளை மனந்திரும்பும்படி அழைத்தல் என்பதே அந்த நோக்கமாக இருந்தது. நீங்கள் இன்னமும் உங்கள் பாவங்களிலேயே இருந்தால், இந்தப் பாடம் உங்களைத் தாழ்மையிலும் மனஸ்தாபத்திலும் அவரிடத்தில் வரும்படி அசைக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன். உங்கள் சுய இருதயத்தில் நீங்கள் “இவர் யார்?” என்ற கேள்விக்குப் பின்வரும் உணர்வுக் கருத்துடன் பதில் அளியுங்கள்: “அவர் என்னில் அன்புகூருகிறவராக இருக்கிறார் மற்றும் எனக்காகவே மரித்தவராயிருக்கிறார்!”*

## குறிப்புகள்

*இந்தப் பாடத்தில் உள்ள வரலாறு ஒவ்வொன்றும் ஒரு பிரசங்கத்திற்கு அடிப்படையாகப் பயன்பட முடியும். இதைத் தொடர்ந்து வருகிற பிரசங்கம் கெர்கெசேனில் பிசாசு பிடித்திருந்தவர்களில் ஒருவரை இயேசு குணமாக்கியது பற்றியதாக உள்ளது.*

*இயேசு புயலை அமர்த்தியது பற்றிப் பல பிரசங்கங்கள் பிரசங்கிக்கப் பட்டுள்ளன. சமீபத்தில் நான் “வாழ்க்கையின் புயல்கள்” என்பது பற்றி உரையாற்றினேன். முதலில் நான் எனது உரையைக் கேட்பவர்களுக்கு நன்கு பழக்கமாகியுள்ள இயல்பான புயல்களைப் பற்றிக் குறிப்பிட்டேன், பின்பு அவர்கள் சகித்துக் கொண்டிருக்க வேண்டிய வாழ்வின் புயல்களைப் பற்றிக் குறிப்பிட்டேன். நாம் சில வேளைகளில் சீஷர்களைப் போன்று உணர்ந் திருக்கலாம் என்று குறிப்பிட்டேன்: “ஆண்டவரே, நாங்கள் அழிந்து போகிறது உமக்குக் கவலையில்லையா?” அப்போஸ்தலர்கள் கேட்ட கேள்வியின்மீது எனது கவனம் இருந்தது: “இவர் எப்படிப்பட்டவரோ?” (மத். 8:27). நான் பின்வருமாறு பதில் அளித்தேன்: (1) அவர் உங்களை நேசிக்கின்ற வகையான மனிதர் (வெளி. 1:5); (2) அவர் உங்களுடன்கூட இருப்பதாக வாக்குத்தத்தம் செய்த வகையான மனிதர் (மத். 28:20); (3) அவர் உங்களுக்கு பெலம் கொடுக்கின்ற வகையான மனிதர் (எபே. 3:16); (4) அவர் மோசமானதிலிருந்து நன்மையை ஏற்படுத்துகின்ற வகையான மனிதர் (ரோமர் 8:28); (5) சுருக்கமாகச் சொல்வதென்றால், கடலின் புயலை அமர்த்தியது போன்று உங்கள் இதயத்தின் புயல்களையும் அமர்த்தக் கூடிய வகையான மனிதர். இந்த வரலாறு பற்றிய பிரசங்கத்திற்குச் சாத்தியமாகக் கூடிய தலைப்புக்களில், “நாங்கள் அழிவது உமக்குக் கவலை இல்லையா?” மற்றும், “இரையாதே, அமைதலாயிரு” என்பவைகளும் உள்ளடங்கும். உங்கள் பாடல் புத்தகத்தில் “கடல் கொந்தளித்துப் பொங்க” என்ற பாடல் இருக்குமென்றால், (“இரையாதே அமைதலாயிரு” என்றும் அழைக்கப் படும்) அதை நீங்கள் இந்த எடுத்துரைப்பில் ஒன்றிணைக்க விரும்பலாம்.*

*நமது வேதபாடப் பகுதியின் பிரிவுகளின் அடிப்படையிலும் பிரசங்கங்*

கள் அமைந்துள்ளன. இயேசுவை, "அவர் இருந்தபடியான நிலையிலேயே" சீஷர்கள் (மாற். 4:36) ஏற்றுக்கொண்டார்கள் என்ற உண்மையை, நாம் இயேசுவை, அவரது சபையை, மற்றும் அவரது உபதேசத்தை "அது உள்ள நிலையிலேயே" ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தப் பயன்படுத்தியுள்ளார்கள். (நீங்கள் இந்தக் கருத்தைப் பயன்படுத்தினால், வேத பாடப் பகுதியின் தொடக்க அர்த்தத்தை விளக்குவதில் கவனமாயிருங்கள்.) மேலும், "மருத்துவர் ஒருவர்" தேவை என்பது பற்றிய கிறிஸ்துவின் வார்த்தைகள் (மத். 9:12), "மாபெரும் மருத்துவர்" மீதான பிரசங்கங்களை ஏவியுள்ளன. (அந்தத் தலைப்பில் ஒரு பாடலும் உள்ளது.) [தமிழில், "எல்லாம் இயேசுவே" என்ற பாடலின் இடைவரி ஒன்றில், "வைத்தியர்" என்ற வார்த்தை வருகிறது.]

---

குறிப்புகள்

[1]இயேசு இரண்டு புயல்களை அமர்த்தியிருந்தார். இது முதலாவதாயிருந்தது. [2]எடுத்துரைப்பின் இவ்வேளையில் மத்தேயு, சீஷர்களாகப் போகின்றவர்களைப் பற்றிக் கூறினார் (மத். 8:19-22). இதே நிகழ்ச்சியை அல்லது இது போன்ற இன்னொரு நிகழ்ச்சியை, லூக்கா மிகவும் பிற்பாடு லூக்கா 9:57-62ல் பதிவு செய்தார். இந்த நிகழ்ச்சியைப் பற்றிப் படிப்பதற்கு நாம் லூக்கா 9ஐ அடையும் வரையில் காத்திருப்போம். [3]"சாயங்காலம்" என்பது வளைக்கக்கூடிய ஒரு சொற்றொடராக உள்ளது. இது மாலையின் முந்தின வேளையாகவோ அல்லது பிந்தின வேளையாகவோ இருக்கலாம். கடைசியில் அவர்கள் அடுத்த கரைக்குச் சென்று சேர்ந்தபோது, பிசாசு பிடித்திருந்தவர்களில் ஒருவனால் அவர்கள் தூரத்தில் இருக்கையிலேயே காண முடிந்தது (மாற். 5:6). ஒருவேளை அவர்கள், மாலையில் சீக்கிரத்திலேயே புறப்பட்டு, அடுத்த கரையை அடைந்தபோது இன்னும் இருட்டாகாமல் இருந்திருக்கலாம். ஒருவேளை அவர்கள் மாலையில் புறப்பட்டு புயலின் காரணமாக இரவு முழுவதிலும் பயணப்பட்டு அடுத்த நாள் காலையில் அங்கு சென்று சேர்ந்திருக்கலாம். முதல் சாத்தியக்கூற்றுக்கு அதிகம் வாய்ப்பு உள்ளது. [4]திருஅவதாரத்தின் இரகசியம் பற்றி நாம் ஏற்கனவே கலந்துரையாடியுள்ளோம். ("கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில் "கிறிஸ்து வருகின்றார்!" என்ற பாடத்தில் காணவும்.) [5]J .W. Shepard, *The Christ of the Gospels* (Nashville: Parthenon Press, 1939), 232; quoted in H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 148. [6]"கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில் கலிலேயாக் கடலைச் சுற்றியிருந்த பகுதிகளின் வரைபடத்தைக் காணவும். [7]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 343. [8]அவர்கள், தாங்கள் கவலைப்பட்டது போலவே இயேசுவும் கவலைப்பட வேண்டும் என்று விரும்பியிருக்கவும் சாத்தியக்கூறு உண்டு. நாம் கவலைப்படுகின்ற போது, நம்மில் பலர் துணையை விரும்புகின்றோம். [9]புயல் அமர்த்தப்பட்ட பின்பு இந்தக் கடிந்துகொள்ளுதலை (அல்லது ஒரு இரண்டாவது கடிந்துகொள்ளுதலை) மாற்குவும் லூக்காவும் பதிவுசெய்துள்ளார்கள் (மாற். 4:40; லூக். 8:25). [10]பல்வேறு காரணங்களினால், சில உவமைகள் மற்ற உவமைகளைக் காட்டிலும், மக்கள்மீது அதிகமாக செயல்விளைவை ஏற்படுத்தின.

[11]"கடல் கொந்தளித்துப் பொங்க கப்பல் ஆடிச் செல்கையில்" என்ற பாடல்

*உள்ள பாடல் புத்தகம் உங்களிடம் இருந்தால், அதைப் பாடுவதற்கோ அல்லது அதன் வரிகளை வாசிப்பதற்கோ இவ்விடத்தில் நீங்கள் சற்று நேரம் தாமதிக்க விரும்பலாம்.* [12]KJV*யானது இவ்விரு பெயர்களையும் மாற்றி, இப்பெயர்களில் ஒன்றில், மாறுபட்ட எழுத்துக்களைப் பயன்படுத்துகிறது. இது ஒரு முக்கியமான வேறுபாடு அல்ல.* [13]*''கெராசாவின்'' (அதாவது கெர்கெசேனின்) சிதிலங்கள் கண்டறியப்படும் வரைக்கும், இதை ஒரு முரண்பாடு என்பதாக வேதாகமத்தைக் குறைகூறுபவர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.* [14]*இந்த நிகழ்ச்சியின் மிக விவரமான ஒரு படிப்பிற்கு, விசேஷமாக பிசாசு பிடித்தவர்கள் என்று நன்றாய் அறியப்பட்டிருந்தவர்களின் கண்ணோக்கில் அப்படிப்பட்ட படிப்பிற்கு, இந்தப் பாடத்தைத் தொடர்ந்து வரும் பிரசங்கத்தைக் காணவும்.* [15]*இது சுவிசேஷ விவரங்களில் பொதுவான ஒரு நிகழ்வாக உள்ளது.* [16]*கெரேசாவின் (குறிப்பு எண் 13ஐக் காணவும்) சிதிலங்களில் இருந்து தெற்கே ஒருமைல் தூரத்தில் கடற்கரையை ஒட்டி ஒரு மலைமுகடு நீட்டிக் கொண்டுள்ளது.* [17]*அவைகள் இந்த வேண்டுகோளை விடுத்தது ஏன் என்பது பற்றிய யூகத்திற்கு, இதைத் தொடர்ந்து வரும் பிரசங்கத்தில் காணவும்.* [18]*இந்த நிகழ்ச்சி, கிறிஸ்துவின் வாழ்வு பற்றி சகோ.* J. W. *இராபர்ட்ஸ் அவர்கள் நடத்திய வகுப்பில் நான் எழுதி வைத்த குறிப்பில் இருந்து தழுவப்பட்டது. சகோ. ஸ்வீனீ அவர்கள் தமது நாட்களில் நன்கு அறியப்பட்ட விவாதம் செய்பவர்களின் பட்டியலில் ஒருவராக சகோ. ஏர்ல் வெஸ்ட் அவர்களால் குறிப்பிடப்பட்டுள்ளார்* (Earl I. West, *The Search for the Ancient Order, vol. 4, A History of The Restoration Movement 1919-1950* (Germantown, Tenn.: Religious Book Service, 1987), 214. [19]*"தெக்கப்போலி" என்பது "பத்து நகரங்களின் பகுதி" என்பதாக இருந்தது. இந்தப் புத்தகத்தில், ''இயேசுவின் ஊழியத்தின்போது பலஸ்தீனம்'' என்ற வரைபடத்தில் காணவும்.* [20]*மத்தேயு சுவிசேஷத்தில் ''கதரேனருடைய நாடு'' என்றுள்ளது, ஆனால் நான் இதற்கு முந்திய பிரிவில் "கெர்கெனேசர்" என்பதைப் பயன்படுத்தினேன், எனவே இவ்விடத்திலும் அதையே தொடர்ந்து பயன்படுத்தியுள்ளேன். முன்பே குறிப்பிட்ட படி, இந்தப் பகுதி, இரண்டு குறிப்புப் பெயர்களைக் கொண்டிருந்தது.*

[21]*பல ஒப்பீடுகள், இயேசு [கலிலேயாக்] கடலின் மேற்குப் பகுதிக்குத் திரும்பி வந்த பின்பு உடனடியாக, யாவீருவின் மகளைப் பற்றிய வரலாற்றைக் கொண்டுள்ளன. மற்றவர்கள், மத்தேயுவின் விருந்தில் இயேசுவின் உரையாடல் யாவீருவால் இடைமறிக்கப்பட்டது என்று சுட்டிக்காண்பிக்கும் மத்தேயு 9:18 வசனத்தின் அடிப்படையில், யாவீருவின் இவ்வரலாற்றிற்கு முன்பு மத்தேயுவின் விருந்து பற்றிய வரலாற்றை இடைச் செருகுகின்றார்கள். இந்தப் பிந்திய அணுகு முறையைப் பின்பற்றிய ஜான் பிரோடஸ் அவர்கள், பின்வரும் குறிப்பை இடைச் செருகினார்: "[மத்தேயுவின் விருந்து பற்றிய வரலாற்றின்] நிலைப்பாடு பற்றிய கேள்வியானது தீர்த்துவைக்கப்பட முடியாததாக உள்ளது, மற்றும் இது இப்பிரிவின் பொருளடக்கத்தைப் புரிந்துகொள்ளுவதில் எவ்வித மாறுபாட்டையும் ஏற்படுத்து வது இல்லை"* (John A. Broadus, *Harmony of the Gospels in the Revised Edition* [New York: A. C. Armstrong & Son, 1906], 36; quoted in John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* [Nashville: Broadman Press, 1961], 138). *நீங்கள் இதற்கு முன்பு மத்தேயுவின் விருந்து பற்றிய வரலாற்றைப் படித்து இருந்தால் இவ்வேளையில் யாவீருவின் வரலாற்றைப் படிக்கச் சொல்லுங்கள். (இதற்கு அடுத்த வரும் பாடத்தைக் காணவும்.)* [22]*இந்த சூழ்நிலையில் இயேசுவின் செயல்களும் விவாதங்களும் "நன்மை செய்வது - அதாவது ஆத்தும வைத்தியராகச் செயல்படுவது - என்பது தவிர வேறு எந்த நோக்கத்திற்காகவும் நாம் மோசமான மனிதர்களுடன் சேர்ந்திருப்பது என்பதை நியாயப்படுத்துவதில்லை" என்று மெக்கார்வீ அவர்கள் வலியுறுத்தினார்* (McGarvey and Pendleton, 350). *1 கொரிந்தியர் 15:33ஐக் காணவும்.*

*[23]இந்த சந்தர்ப்பப் பொருளில், "நீதிமான்கள்" என்பது தங்களை நீதிமான்கள் என்று நினைத்துக்கொண்டு, அதினால் தாங்கள் மனந்திரும்ப அவசியமில்லை என்று கருதியிருந்தவர்களை - வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், வேதபாரகர் களையும் பரிசேயர்களையும் குறிக்கிறது. [24]இயேசுவின் பதில் பற்றிய மத்தேயுவின் விவரத்தில் (மத். 9:12, 13) ஓசியா 6:6ல் இருந்து மேற்கோள் உள்ளடங்கி இருக்கிறது. மனிதர்கள் பசியைத் திருப்திப்படுத்த அனுமதித்தல் என்பது இரக்கம் காண்பித்தலாக உள்ளது என்பதை வலியுறுத்துவதற்கு இன்னொரு சந்தர்ப்பப் பொருளில் கிறிஸ்து இந்த மேற்கோளைப் பயன்படுத்தினார் என்று நாம் முந்திய பாடம் ஒன்றில் குறிப்பிட்டோம். மத்தேயு 9ல், பாவிகளை மனந்திரும்பும்படி ஊக்கப்படுத்துதல் என்பது இரக்கம் காண்பித்தலாக உள்ளது என்பதே அவரது கருத்தாக உள்ளது. [25]இந்தக் கேள்வியைக் கேட்க பரிசேயர்களுடன் யோவானின் சீஷர்கள் வரிசையில் நின்றது கவலைக்குரியது. [26]பரிசேயர்களின் உபவாச பழக்கங்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தினால் கட்டளையிடப்படவில்லை, ஆனால் அவைகள் மனிதப் பாரம்பரியத்தின் விளைவுகளாய் இருந்தன. "கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில் "ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்ற பாடத்தில் உபவாசித்தல் பற்றிய சுருக்கமான கலந்துரையாடலைக் காணவும். வேறொரு இடத்தில் வலியுறுத்தப்பட்டபடி, உண்மையில் உபவாசம் என்பது சீஷர்களின் விருப்பத் தேர்வான விஷயமாயிருந்தது என்று இயேசு கூறினார். தேவபக்தியைப் பராமரிக்க உபவாசம் என்பது அத்தியாவசியமான உட்பொருளாக இருப்பதில்லை என்பதை நிரூபிப்பதற்கு, இயேசு தாமே அடிக்கடி உபவாசித்தது இல்லை என்ற உண்மையே போதுமானதாக உள்ளது. [27]இயேசுவின் விவரிப்பு, உவமை என்று அழைக்கப்படக்கூடும். இந்த உவமையில், அவர் மணவாளனாக இருக்கின்றார், அவரது சீஷர்களே அவரது தோழர்களாக இருக்கின்றார்கள். மணவாளன் "எடுத்துக் கொள்ளப்படுதல்" என்பது அவரது மரணத்தைக் குறிப்பிடும் ஒரு மறைவான மேற்கோளாக உள்ளது. "அந்த நாளில் அவர்கள் உபவாசிப்பார்கள்" என்ற கூற்று, கிறிஸ்து மரித்தபோது சீஷர்களின் துக்கத்தைக் குறிப்பிடுகிறது. [28]அந்த நாட்களில் திரவப் பொருட்களை ஊற்றி வைப்பதற்கு விலங்குகளின் தோல்கள் பயன்படுத்தப்பட்டன. இது உலகின் சில பகுதிகளில் இன்னமும் நடைமுறையில் உள்ளது. நாட்கள் செல்லச் செல்ல இந்தத் தோல்கள் உலர்ந்து, உடைந்து நொறுங்கக் கூடியவைகளாகும். [29]இந்த விவரிப்புகளை லூக்கா 5:36 வசனம் உவமைகள் என்று அழைக்கிறது. இவற்றை, இயேசுவின் பின்வரும் தெளிவான கருத்தை போதிப்பது தவிர வேறு எதையும் வலியுறுத்தப் பயன்படுத்தாதீர்கள்: மனிதனால் ஏற்படுத்தப்பட்ட பாரம்பரியங்களை அவரது [இயேசுவின்] போதனையுடன் கலக்க முயற்சித்தல் என்பது அழிவை ஏற்படுத்தும். [30]ஏவப்பட்டிராத பழைய பாரம்பரியங்களில் இருந்து ஏவப்பட்டிராத புதிய பாரம்பரியங்களுக்கு மாற மனவிருப்பம் இல்லாதவர்களைப் பற்றி இயேசு இவ்விடத்தில் பேசவில்லை. மாறாக, கிறிஸ்துவின் வழியைத் தழுவக்கூடும்படிக்குத் தங்கள் பாரம்பரியங்களை விட்டுவிட மனவிருப்பம் இல்லாதிருந்த பரிசேயர்களையே அவர் குறிப்பிட்டார்.*

# 35

# அன்புகூரப்பட முடியாதவர்களை அடைதல்

## மாற். 5:1-20, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*பல ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு தொலைபேசிக் கம்பெனி, செய்வலிவான ஒரு தொலைக்காட்சி விளம்பர சுலோகத்தை கொண்டிருந்தது: "யாரேனும் ஒருவரைச் சென்றடைந்து தொடுங்கள்."[1] இதன் கருத்து என்னவெனில், தொலைக்காட்சியைப் பார்ப்பவரிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்புக்காக யாரோ ஒருவர் காத்திருக்கின்றார், அவர் அப்படிப்பட்ட அழைப்பினால் அதிகம் மகிழ்வடைவார் என்பதேயாகும். எனது தொலைபேசிக் கட்டணத்தின் அளவில் இருந்து, எனது வீட்டார், அதிகமான மக்களை "அடைந்து தொட" வேண்டும் என்று நம்பினார்கள் என்று நீங்கள் கூறமுடியும்.*

*பிறரைச் சென்றடைதல் என்ற கருத்து புதிதானதாக இருப்பதில்லை. வாழ்ந்தவர்களிலேயே மாபெரும் அளவில் "வெளிச்சென்று அடைந்தவர்" இயேசு கிறிஸ்துவே ஆவார். அவர் தாம் சென்ற இடங்களில் எல்லாம் - நோயாளிகள், பார்வையற்றவர்கள், முடவர்கள், துக்கப்பட்டுப் புலம்பு பவர்கள், பாவம் நிறைந்தவர்கள் என்று பல்வேறுபட்ட - மக்களைச் சென்றடைந்தார், அவர் தொட்ட மக்கள் முன்பு இருந்தது போலவே மீண்டும் [பின்பு] ஒருக்காலும் இருந்ததில்லை.[2] சபையில் நாம் இயேசுவைப் பின்பற்றுபவர்களாக இருக்க வேண்டும் (1 பேது. 2:21). அவர் நமது தலையாக இருக்கின்றார் (எபே. 1:21, 22), மற்றும் நாம் அவரது கரங்களாக, அவரது பாதங்களாக, அவரது உதடுகளாக இருக்க வேண்டும்.[3] பிரதான கட்டளையின்படி (மத். 28:18-20), நாம் நமது வாழ்க்கையினாலும், சுவிசேஷத்தினாலும் மக்களைச் சென்றடையாவிட்டால் நாம் கர்த்தருடைய சபையாகச் செயல்படத் தவறியவர்களாகின்றோம்.*

*மாற்கு 5ம் அதிகாரமானது, இயேசு ஒரு மனிதரிடம் - அன்புகூராத வராக மற்றும் அன்புகூரப்பட முடியாதவராக இருந்த மனிதரிடம் - சென்று அவரைத் தொட்டது பற்றிய வரலாற்றை முன்வைக்கிறது. இந்த நிகழ்ச்சி பற்றி மத்தேயு கூறும் விவரம் பிசாசு பிடித்த இருவரைப் பற்றிக் கூறுகையில், மாற்குவும் லூக்காவும் கூறும் விவரங்கள் பிசாசு பிடித்த இருவரில் முக்கியமான ஒருவரைப் பற்றி மட்டும் கூறுகின்றன. மாற்குவைப் போலவே நானும் அவ்விருவரில் மிகவும் கெட்டவரான ஒருவர்மீது மட்டுமே கவனத்தைச் செலுத்துவேன். இந்த வரலாற்றில் நமக்கு முக்கியத்துவம் வாய்ந்த பாடங்கள் உள்ளன.*

# *உண்மை நிலை (வ. 1-5)*

***உண்மையான பிரச்சனைகள்***

*நமது வேதபாடப் பகுதி பின்வருமாறு தொடங்குகிறது:*

> *பின்பு அவர்கள் கடலுக்கு அக்கரையிலுள்ள கதரேனருடைய நாட்டில் வந்தார்கள். அவர் படவிலிருந்து இறங்கினவுடனே, அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் பிரேதக் கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிராக வந்தான். அவனுடைய குடியிருப்பு கல்லறைகளிலே இருந்தது. அவனைச் சங்கிலிகளினாலும் கட்ட ஒருவனாலும் கூடாதிருந்தது. அவன் அநேகந்தரம் விலங்குகளினாலும் சங்கிலிகளினாலும் கட்டப் பட்டிருந்தும், சங்கிலிகளை முறித்து, விலங்குகளைத் தகர்த்துப் போடுவான். அவனையடக்க ஒருவனாலும் கூடாதிருந்தது. அவன் எப்பொழுதும் இரவும் பகலும் மலைகளிலும் கல்லறைகளிலும் இருந்து கூக்குரலிட்டு, கல்லுகளினாலே தன்னைக் காயப்படுத்திக் கொண்டிருந்தான் (வ. 1-5).*

*காட்சியை சிந்தையில் பெற்றுக்கொள்ளுங்கள்: ஒரு நீண்ட, தீவிரமான [பணி] நாளுக்குப் பின்பு, கடைசியாக மாலைவேளை வந்திருந்தது (4:35அ). கிறிஸ்து தமது சீஷர்களிடத்தில், "அக்கரைக்குப் [அதாவது கலிலேயாக் கடலின் அக்கரைக்கு (4:36; 5:1ஐக் காணவும்)] போவோம் வாருங்கள்" என்று கூறியிருந்தார் (4:35ஆ). அவர் கூட்டத்திலிருந்து விலகியிருப்பதற்காக அவ்வப்போது இவ்வாறு செய்து வந்தார். அவர்கள் தங்கள் பயணத்தைத் தொடங்கியபோது, இளைப்படைந்திருந்த இயேசு உறக்கத்தில் ஆழ்ந்தார் (4:38). அந்தப் பயணத்தின்போது, வன்மையான புயல் ஒன்று எழும்பிற்று, அதைக் கிறிஸ்து அமர்த்தினார் (4:36-41). நாம் படிக்கும் இவ்வரலாறு தொடங்குகையில், கர்த்தரும் அவரது சீஷர்களும் குறைந்தது ஐந்து அல்லது அதற்கு ஏறக்குறையச் சமமான மைல்கள் கடந்து - கடலின் கிழக்குப் பகுதியில் இருந்த கதரேனருடைய நாட்டிற்கு வந்திருந்தார்கள் (5:1).*

*மக்கள் நெருக்கம் குறைந்த இப்பகுதிக்கு ஓய்வெடுக்கும்படியாக இயேசு வந்திருந்தாரென்றால், அதுதான் அவருக்குக் கிடைக்கவில்லை. நமது வேத பாடப் பகுதியானது, "அவர் படவிலிருந்து இறங்கினவுடனே அசுத்த ஆவியுள்ள[4] ஒரு மனுஷன் பிரேதக் கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிராக வந்தான்" என்று கூறுகிறது (வ. 2). ஜோ ஸ்கூபெர்ட் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> *கலிலேயாக் கடலின் மேற்புறம் இருந்த குன்றுகளின் சுண்ணாம்புப் பாறையில் பல குகைகள் இருந்த அக்கடலின் பகுதியில் அவர்கள் இருந்தார்கள். இந்தக் குகைகளில் இறந்தவர்களின் உடல்கள் வைக்கப்பட்டிருந்த பல கல்லறைகள் இருந்தன. காலங்களின் மிகச் சிறந்த வேளையில் இது ஒரு அச்சமூட்டும் இடமாக இருந்திருக்கும். ஆனால் இரவு வேளையில்[5] இது திகிலூட்டுவதாக இருந்திருக்க வேண்டும். அந்தக் கல்லறைகளிலிருந்து அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரு மனிதன் வந்தான் ...[6]*

அந்த மனிதன் கல்லறைகளில் வாழ்ந்தது ஏன்? ஏனென்றால் அவன் சமுதாயத்தை விட்டு துரத்தப்பட்டிருந்தான். அப்பகுதியிலிருந்த மக்கள் அவனைச் சங்கிலிகளினாலும் விலங்குகளினாலும் கட்டி வைக்க முயற்சி செய்திருந்தார்கள், ஆனால் எந்த ஒரு கட்டும் அவனைப் பிடித்து வைக்க முடியாது இருந்தது. கடைசியில் அவன் அவ்விடம் விட்டுச் சென்றுவிடும் படி அவர்கள் கட்டாயப்படுத்தியிருந்தார்கள் என்பது உறுதி.

வசனங்கள் 1 முதல் 5 வரையுள்ள பகுதியின் சித்தரிப்பை உங்கள் சிந்தையில் கொண்டுள்ளீர்களா? இயேசு படகில் இருந்து வெளியே அடியெடுத்து வைத்த வேளையில், பித்தம்கொண்ட மனிதன் இருளில் இருந்து வெளித்தோன்றினான். அவன் நிர்வாணமாகவும் அழுக்காகவும் இருந்தான். அவனது உடலில் அவனாகவே சேதப்படுத்திக் கொண்டதினால் ஏற்பட்டிருந்த இரத்தம் ஒழுகும் காயங்கள் நிறைந்து இருந்தன. அவன் தலைமயிர் சிக்கலாயிருந்தது; அவன் கண்கள் காட்டுத்தனமானவைகளாக இருந்தன. இயேசு தேடிக் கண்டடைய வேண்டியவனாக இருந்தவன் இவன்தான். மற்றவர்களைச் சென்றடைவதில் கிறிஸ்துவின் விருப்பத்திற்கான பரிசோதனையாக இது இருந்தது.

**யூகிக்கப்பட்ட சாக்குப்போக்குகள்**

கிறிஸ்து இந்தத் தேவைக்கு எவ்வாறெல்லாம் பதில் அளித்திருக்கலாம் என்று நினைத்துப் பாருங்கள்.

(1) அவர், "எனக்கு மிகவும் களைப்பாயுள்ளது. அதிகம் தாமதமாகியும் விட்டது. இன்றைக்கு நான் மிக நீண்ட, கடினமான நாளைப் பெற்றிருந்தேன்!" என்று கூறியிருக்கலாம். அன்றைக்கு இயேசு அப்படிப்பட்ட ஒரு நாளைத்தான் அனுபவித்திருந்தார். இளைப்படைந்திருக்கும்போது நாம் எவ்வாறு உணர்கிறோம் என்பதை நாம் புரிந்திருக்கின்றோம். பலர் நம் அருகாமையில் உள்ளவர்களுடன் "தொடர்ந்து சமாளிக்கும்படி" முயற்சி செய்துள்ளார்கள்.[7] சிலர் தங்கள் செலவுகளுக்குச் செலுத்துவதற்காக நீண்ட நேரம் வேலை செய்கின்றார்கள். பல குடும்பங்களில் தாய்மார்கள் வீட்டிற்கு வெளியே[யும்] வேலை செய்கின்றார்கள். இதன் விளைவாக, ஒரு நாளின் வேலை முடிந்தபின்பு, நமது நேரமும் சக்தியும் தீர்ந்து போய் விடுகின்றன. மற்றவர்களைச் சென்று அடைவதற்குச் சிறிதளவே எஞ்சியிருக்கிறது; சபை ஊழியங்கள் எனப்படுபவைகள் நமது சுறுசுறுப்பான, களைப்படைய வைக்கும் பணி அட்டவணைகளில் இடம் பெறப் பொருத்தமுள்ளவைகளாய் இருப்பதில்லை.

(2) அவர், "இது எனது பொறுப்பு அல்ல" என்று கூறியிருக்கலாம். இம்மனிதன் அப்பகுதியில் தன் குடும்பத்தைக் கொண்டிருந்தான் (மாற். 5:19; லூக். 8:39ஐக் காணவும்), எனவே அவர் [இயேசு], "இது அவர்களின் பொறுப்பாக உள்ளது. நான் கலிலேயாவில் கடின ஊழியம் செய்திருந்தேன், இங்கு நான் சற்று ஓய்வெடுக்கலாம் என்றுதான் வந்தேன். அந்த மனிதனைக் குறித்து வேறு யாராவது அக்கறை கொள்ளட்டும்!" என்ற கூறியிருக்கலாம். தனிப்பட்ட பொறுப்பை உணருதல் என்பது நமது சமுதாயத்தின் மாபெரும் தேவைகளில் ஒன்றாக உள்ளது.[8] தனிப்பட்ட பொறுப்பை உணருதல்

*என்பது சபையின் மாபெரும் தேவைகளில் ஒன்றாக உள்ளது.*[9]

*(3) அவர், "இந்த மனிதன் மனமாற்றமடையும்படி எதிர்பார்க்கத் தகுதியானவன் அல்ல" என்று கூறியிருக்கலாம். ஒருவேளை நாம், சுவிசேஷத்தில் ஆர்வம் கொண்டுள்ள மக்களைக் கண்டறிவதற்காக நமது சமூகத்தில் வீடுவீடாகச் செல்ல முடிவு செய்துள்ளோம் என்று வைத்துக் கொள்வோம். பின்பு, ஊழியர்களில் இருவர் தெருவில் செல்லும்போது, மாற்கு 5ல் நாம் காணுகின்ற அசுத்த ஆவிகொண்ட மனிதரைப் போல் காட்டுத்தனமான ஒரு மனிதர் இருளில் இருந்து தாவிக்குதிக்கின்றார் என்று வைத்துக் கொள்வோம். இந்த இரண்டு ஊழியர்களும் திரும்பி வந்து, இம்மனிதர் போதிக்கப்படத் தகுதி வாய்ந்தவர் என்று கூறமாட்டார்கள் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்க முடியும்! ஏறக்குறைய நம்மைப் போலவே உள்ள மற்றும் சத்தியத்தைக் கற்றுக்கொள்ள ஆவலுடன் உள்ள தனிநபர்களைக் கண்டறியத்தான் நம்மில் பலர் விரும்புகின்றோம். நம்மில் பலர், இம்மனிதரைப் போல் பிரச்சனைகளைச் சுமந்து இருப்பவர்களுக்குச் சத்தியத்தைப் போதிக்க விரும்புவதில்லை.*

*(4) அவர், "இதில் இடர்ப்பாடு அடங்கியுள்ளது என்று உங்களுக்குத் தெரியாதா? இம்மனிதனுக்கு உதவ நான் முயற்சி செய்தால், அது அநேகமாக எந்த நன்மையையும் ஏற்படுத்தப்போவதில்லை, நான் என்னுடன் இருக்கும் மக்களை மகிழ்வற்றவர்கள் ஆக்குவதே முடிவுச் செயலாக இருக்கும்" என்று கூறியிருக்கலாம். உங்கள் கையில் அடிவாங்கக்கூடும் என்பது இன்னொருவரைச் சென்று அடைவதில் உள்ள இடர்ப்பாடுகளில் ஒன்றாக உள்ளது! நமது நண்பர்கள் மற்றும் அயலகத்தார்களிடத்தில் சில வேளைகளில் நாம் சுவிசேஷத்தை எடுத்துரைத்தால் அவர்கள் நம்முடன் நட்புறவாயிருப்பதை விட்டு விடுவார்களோ என்று பயப்படுவதினால் நாம் அதை[சுவிசேஷத்தை]ப் பற்றிப் பேசத் தயங்குகின்றோம் என்பது உண்மையாக உள்ளதல்லவா? நாம் காணப்போகின்றபடி, கதரேனருடைய நாட்டில் இருந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள், கிறிஸ்து இந்த அசுத்த ஆவி பிடித்திருந்தவனைச் சென்று அடைந்தது பற்றி அவரைப் பாராட்டவில்லை மற்றும் அவரை அவ்விடம் விட்டுச் சென்று விடும்படி அவர்கள் கெஞ்சினார்கள் (மாற். 5:17).*

***உண்மையான அக்கறை***

*மேலே நான் குறிப்பிட்ட ஒவ்வொரு சாக்குபோக்கையும் இயேசு கொடுத்திருக்க முடியும் - ஆனால் அவர் அவ்வாறு எதுவும் கொடுக்கவில்லை. இந்த மனிதனைச் சென்று சேர்வதில் குறிப்பாக இருந்த இயல்பான தடைகளை அவர் [இயேசு] எவ்வாறு வெற்றிகொள்ள முடிந்தது? மக்கள்மீது அவருக்கிருந்த அன்பு என்பதே காரணமாகும். கிறிஸ்து மக்களுக்காகப் பணியாற்றுபவராயிருந்தார்; அவர் மக்கள்மீது அக்கறைகொண்டு பராமரித்தார். இம்மனிதனுக்கு அவர் [இயேசு] தேவைப்பட்டார். ஆம், இம்மனிதன் அன்புகூரப்படாதவனாக, அன்புகூரப்பட முடியாதவனாக இருந்தான். அவன் [மக்களுடன் பழகும்] பழக்கத்தில் இருந்து அகற்றப்பட்டவனாக இருந்தான்; அவனது வாழ்வு கட்டுப்பாட்டை இழந்திருந்தது.*

*அவன் தன்னையே அழித்துக் கொள்பவனாக இருந்தான், தற்கொலை செய்துகொள்ள முயற்சிப்பவனாகவும் கூட இருந்தான். இருந்தபோதிலும், அவன் தேவைகள் உள்ள மனிதனாக இருந்தான். இவ்விதமாக, இயேசு களைப்படைந்திருந்தார் என்ற உண்மையும், இந்த மனிதன் வசீகரமற்ற வனாக இருந்தான் என்ற உண்மையும், மற்றவர்கள் ஒருவேளை தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றவில்லை என்ற உண்மையும் இருந்தபோதிலும், கிறிஸ்து இடர்ப்பாட்டை மேற்கொண்டு இவனைச் சென்று அடைந்தார்.*

## *பதில்செயல் (வ. 6-16)*

**இயேசுவின் வல்லமை**

*நமது வேதபாட வாசிப்பு பின்வருமாறு தொடருகிறது: "அவன் [அசுத்த ஆவியுள்ள மனிதன்] இயேசுவைத் தூரத்திலே கண்டபோது, ஓடிவந்து, அவரைப் பணிந்துகொண்டு: 'இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன?' என்று மிகுந்த சத்தமிட்டு சொன்னான்" (வ. 6, 7அ). யாக்கோபு 2:19, "பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன ..." என்று வலியுறுத்துகிறது.*

*பின்வரும் வார்த்தைகள் அம்மனிதனின் வாயிலிருந்து வந்தன: "என்னை வேதனைப்படுத்தாதபடிக்குத் தேவன்பேரில் உமக்கு ஆணை" (வ. 7ஆ). இயேசு இம்மனிதனை வேதனைப்படுத்துவதற்கல்ல ஆனால் குணமாக்கவே வந்தார் என்பதால், இவ்வார்த்தைகள் வினோதமானவை களாகக் காணப்படுகின்றன - ஆனால் இது நிச்சயமாகவே இம்மனிதனின் மூலமாக அசுத்த ஆவிகள் பேசியதாயிருந்தது.*

*மத்தேயுவின் சுவிசேஷ விவரப்படி, அவைகள் [அசுத்த ஆவிகள்], "காலம் வருமுன்னே எங்களை வேதனைப்படுத்த இங்கே வந்தீரோ?" என்று கேட்டன (மத். 8:29). பிசாசின் சேனைகள் நியாயந்தீர்க்கப்பட்டு, தங்கள் எஜமானுடன் என்றென்றைக்கும் வாதிக்கப்படும்படி அக்கினிக்கடலில் தள்ளப்பட வேண்டிய காலம் ஒன்று உள்ளது (2 பேது. 2:4; வெளி. 19:20; 20:10ஐக் காணவும்). அசுத்த ஆவிகள் தங்கள் முடிவைக் குறித்துக் கவலைப்பட்டது ஏன் என்பதை வசனம் 8 கூறுகிறது: "ஏனெனில் அவர் அவனை நோக்கி: 'அசுத்த ஆவியே, இந்த மனுஷனை விட்டுப் புறப்பட்டுப் போ' என்று சொல்லியிருந்தார்!"*

*இயேசு, "உன் பேர் என்ன?" என்று கேட்டார். அதற்கு அவன்: "நாங்கள் அநேகராயிருக்கிறபடியால் என் பேர் லேகியோன்" என்று சொன்னான் (வ. 9). லேகியோன் என்பது ஏறக்குறைய ஆறாயிரம் படை வீரர்களைக் கொண்ட ரோமாபுரிப் படைப்பிரிவுகளில் ஒன்றாக இருந்தது. இந்த மனிதன் தனக்குள் ஆறாயிரம் அசுத்த ஆவிகளைக் கொண்டிருந்திருக்க வேண்டும் என்று அவசியமில்லை, ஆனால் இவன் எண்ணற்ற அசுத்த ஆவிகளைக் கொண்டிருந்தான் என்பதை இச்சொற்றோடர் சுட்டிக் காண்பிக்கிறது. (விரைவிலேயே இவைகள் இரண்டாயிரம் பன்றிகளுக்குள் செல்லவிருந்தன [வ. 13].)*

*முதலில் இந்த மனிதன் ஒருமைப் பெயர்ச் சொல்லைப் பயன் படுத்தினான் என்பதைக் கவனியுங்கள்: "என் பேர் லேகியோன்." பின்பு அவன் பன்மைப் பெயர்ச் சொல்லைப் பயன்படுத்தினான்: "நாங்கள் அநேகராயிருக்கிறபடியால்." அசுத்த ஆவிகளின் சேனைகளினால் உடலும் மனமும் கட்டுப்படுத்தப்பட்ட ஒருவருக்குள் நிலவிய இக்குழப்பத்தை என்னால் கற்பனை செய்தும் பார்க்க இயலவில்லை. இது ஒரு மனிதனைப் பைத்தியக்காரனாக்கியிருக்கும்.[10]*

*பிசாசுகள், "தங்களை அந்தத் திசையிலிருந்து துரத்திவிடாதபடிக்கு, அவரை [கிறிஸ்துவை] மிகவும் வேண்டிக்கொண்டன" (வ. 10). லூக்கா, "தங்களைப் பாதாளத்திலே[11] போகக் கட்டளையிடாதபடிக்கு அவைகள் அவரை வேண்டிக் கொண்டன" என்று எழுதினார் (லூக். 8:31). "பாதாளம்" என்பது அசுத்த ஆவிகள் வழக்கமாக தங்குமிடமாக இருந்தது, ஆனால் அவைகள் தங்களைக் கர்த்தர், இப்போதே அவ்விடத்திற்கு வலிந்து தள்ளுவதை விரும்பாதிருந்தன. அவைகள் தங்கள் நடவடிக்கையை சற்றுக்காலம் தொடர விரும்பின.*

*''அப்பொழுது, அவ்விடத்தில் மலையருகே அநேகம் பன்றிகள் கூட்டமாக மேய்ந்துகொண்டிருந்தது'' (மாற். 5:11). அசுத்த ஆவிகள் கிறிஸ்துவிடம், "பன்றிகளுக்குள்ளே போகும்படி, அவைகளுக்குள்ளே எங்களை அனுப்பும்" என்று வேண்டிக் கொண்டன (வ. 12). அவைகள் இந்த வினோதமான வேண்டுகோளை விடுத்தது ஏன்? ஒருவேளை, அநேக அசுத்த ஆவிகள் பாதாளத்தை விட்டு வெளியே, சேர்ந்து செயல்படுவதே ஒரே வழியாக இருக்கலாம். சூடான இரத்தம் கொண்ட உடலின்றி நீண்ட காலம் வாழ முடியாத ஈக்கள் என் நினைவுக்கு வருகின்றன. அப்படிப்பட்ட ஒரு உடல் இழந்துபோகப்பட்டது என்றால், அவைகள் பொருத்தமான சில அல்லது அநேக அசுத்த ஆவிகள் வரும் வரையிலும் தங்கள் நடவடிக்கை களை அடக்கி வைக்கின்றன. பின்பு அந்த உடலின் வெப்பத்தை அவை உணரும்போது, அவைகள் அதன்மீது தாவிக் குதித்து ஈக்களாக இருக்கும் தங்களின் தொல்லைதரும் வேலையை மீண்டும் தொடங்குகின்றன. ஒருவேளை, அசுத்த ஆவிகள் இதேவிதமான கட்டுப்பாடுகளைக் கொண்டிருந்திருக்கலாம். எவ்வகையிலும், அவைகள் தங்களைப் பன்றி களுக்குள் செல்லும்படி அனுமதிக்க வேண்டின. "இயேசு அவைகளுக்கு உத்தரவு கொடுத்தவுடனே, அசுத்த ஆவிகள் புறப்பட்டுப் பன்றிகளுக்குள் போயின" (வ. 13அ).*

*அசுத்த ஆவிகளின் சேனை தங்கள் பேய்த்தனமான நடவடிக்கையைத் தொடருவதற்காகத் தங்களின் வேண்டுகோள்களை ஏற்படுத்தியிருந்தன என்றால், அவைகள் ஏமாற்றத்திற்குள்ளாகும்படி அழிவைக் கண்டன; ஏனென்றால், அவைகள் தங்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய புதிய உயிரினங் களுக்குள் புதிய அநேக அசுத்த ஆவிகள் புகுந்தவுடனே, அந்தப் பன்றிகள் பைத்தியம் பிடித்தவையாக மாறிப்போயின. ''உடனே, ஏறக்குறைய இரண்டாயிரம் பன்றிகளுள்ள அந்தக் கூட்டம் உயர்ந்த மேட்டிலிருந்து ஓடி, கடலிலே பாய்ந்து, கடலில் அமிழ்ந்து மாண்டது" (13ஆ). என்ன ஒரு காட்சி! என்ன ஒரு இரைச்சல்! நீங்கள் எப்போதாவது ஒரு பண்ணையில்*

*வாழ்ந்திருந்தால், ஒரு பன்றி எவ்வாறு கத்தும் என்று அறிந்திருப்பீர்கள். அந்தக் கத்துதல் சத்தமானது உங்கள் பின்னந்தலையில் உள்ள முடிகளைச் செங்குத்தாக நிற்கச் செய்வதாயிருக்கும்.*[12] *இரண்டாயிரம் பன்றிகள் கத்துகின்ற காட்சியையும் சத்தத்தையும் ... மலைப் பகுதியில் அவை தடதடவென்று ஓடுவதையும் ... தண்ணீருக்குள் அவை குதித்து விழுவதையும் ... கற்பனை செய்து பாருங்கள்!*

*அச்சமூட்டும் இக்காட்சியைக் கண்டவர்களில், அருகாமையிலிருந்த நகரக் குடிமக்களுக்காக அந்தப் பன்றிகளை மேய்த்தவர்களும் இருந்தார்கள்.*[13] *உடனடியாக, "பன்றிகளை மேய்த்தவர்கள் ஓடி, இதைப் பட்டணத்திலும் சுற்றுப்புறங்களிலும் அறிவித்தார்கள்" (வ. 14அ). அவர்கள், "பிசாசுகள் பிடித்திருந்தவனுக்கும் பன்றிகளுக்கும் சம்பவித்ததைக் கண்டவர்களும் அவர்களுக்கு விவரமாய்ச் சொன்னார்கள்" (வ. 16).*

> *அப்பொழுது சம்பவித்ததைப் பார்க்கும்படி ஜனங்கள் புறப்பட்டு, இயேசுவினிடத்தில் வந்து, "லேகியோனாகிய" பிசாசுகள் பிடித்திருந்தவன் வஸ்திரந்தரித்து, உட்கார்ந்து, புத்தி தெளிந்திருக்கிறதைக் கண்டு பயந்தார்கள் (வ. 14ஆ, 15).*

*முன்பு சித்தம் கலங்கிய நிலையில் இருந்த மனிதன் இப்போது "அமைதியாக" உட்கார்ந்து இருப்பதை அவர்கள் பார்த்தார்கள். இப்போது அவன் நிர்வாணியாயில்லை, ஆனால் "உடை அணிந்தவனாக" இருந்தான். இப்போது அவன் சித்தம் கலங்கியவனாக இல்லை, ஆனால் "தனது சரியான மனநிலையில்'' இருந்தான். இயேசு, அன்புகூரப்பட முடியாத ஒரு தனிநபரை அடைந்தார் - மற்றும் அந்த நபரின் வாழ்வு முற்றிலுமாக மாற்றப்பட்டது!*

### இயேசுவின் நோக்கம்

*அன்புகூரப்பட முடியாதவர்களை இயேசு அடைய முடிந்தது எவ்வாறு? அவர் மக்களை நேசித்ததால் இதைச் செய்தார் என்று நான் முன்பு குறிப்பிட்டேன், ஆனால் அத்துடன் ஒரு சில சிந்தனைகளை கூடுதலாகக் கூற என்னை அனுமதியுங்கள்:*

*(1) அவர், மக்களின் தேவைகள் பற்றிக் கூருணர்வுள்ளவராக இருந்தார். அவர் உதவி செய்வதற்கு எப்போதும் ஒரு வாய்ப்பை எதிர்பார்த்தவராக இருந்தார். அசுத்த ஆவி பிடித்திருந்தவன் பார்வைக்கு நல்லவனாக இருந்ததில்லை, ஆனால் அவன் தேவையில் இருந்த ஒரு ஆத்துமாவாக இருந்தான், எனவே இது ஒரு வாய்ப்பாக இருந்தது.*

*(2) அவர், தேவையில் இருந்த நபர் எங்கிருக்க வேண்டுமென்று தாம் விரும்பினாரோ, அங்கிருந்து தொடங்காமல், அந்த நபர் இருந்த இடத்திலிருந்தே தொடங்கினார். அந்தக் காட்டுத்தனமான மனிதரிடத்தில் அவர், "நான் உன்னைச் சுத்தம் செய்து உனக்குச் சில உடைகளை உடுத்துவிக்கிறேன், பின்பு உன்னிடம் உள்ள அசுத்த ஆவி பற்றிய பிரச்சனையைக் குறித்துப் பேசுவோம்" என்று கூறியிருக்கலாம். [ஆனால்] அதற்குப் பதிலாக, அவர் அந்த மனிதனின் தோற்றத்தைக் காணாது, அசுத்த ஆவிகளை*

*அவனிடமிருந்து துரத்தினார். பின்பு அம்மனிதன் உடுத்துவிக்கப்பட்டான் என்று வேதபாடப் பகுதி கூறுகிறது. சிலவேளைகளில், நாம் மக்களைச் சென்றடைகையில், அவர்கள் முதலில் தங்கள் வாழ்வில் குறைவாயுள்ள வற்றைப் பெற உதவ வேண்டியதாக உள்ளது, பின்பு அவர்கள் கர்த்தருடைய சித்தத்தைப் புரிந்துகொள்ள உதவ வேண்டியதாக உள்ளது. நாம் மக்களை அவர்கள் இருக்கும்படி நாம் விரும்பும் இடத்திலிருந்து அல்ல, ஆனால் அவர்கள் இருக்கும் இடத்தில் இருந்தே நமது ஊழியத்தைத் தொடங்க வேண்டியதாக உள்ளது.*

*(3) அவர் அம்மனிதனிடத்தில் பேச - மற்றும் அவனது பிரச்சனைகளைக் கவனிக்க - விருப்பம் உள்ளவராயிருந்தார். அவர் பல ஆயிரம் அசுத்த ஆவிகள் பேசியதைக் கூடக் கவனித்துக் கேட்டார்! கவனித்தல் என்பது புரிந்துகொள்வதற்கான விருப்பத்தைச் செயல்விளக்கப்படுத்துகிறது. கவனித்தல் என்பது ஏறக்குறைய இழந்துபோகப்பட்டுள்ள ஒரு கலையாக உள்ளது, ஆனால் கவனித்தலை, உண்மையான கவனித்தலைக் காட்டிலும் அதிகமாக வேறு எதுவும் "நான் உங்களை நேசிக்கின்றேன்" என்பதைக் கூறுவதில்லை.*

*(4) அவர் தேவனுடைய வல்லமையைச் சார்ந்திருக்க விரும்பினார். அம்மனிதனின் வாழ்வானது மனிதனின் மனோதத்துவத்தால் அல்ல ஆனால் தெய்வீக வல்லமையினாலேயே மாற்றப்பட்டது. நீங்களும் நானும், இயேசு கொண்டிருந்த அற்புத வல்லமையைக் கொண்டிருப்பதில்லை, ஆனால் தேவன் இன்னமும் நம்மை வல்லமையால் அணிசெய்துள்ளார். நாம் வசனத்தின் வல்லமையைக் கொண்டுள்ளோம் (ரோமர் 1:16) மற்றும் நமது வாழ்வில் தேவனுடைய வல்லமை செயல்படுகிறது (எபே. 3:20). நாம் வரையரைக்குட்பட்ட நமது ஆதாரமூலங்களைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாக அவரைச் சார்ந்திருக்கக் கற்றுக்கொள்வோம்.*

## *விளைவுகள் (வ. 15-20)*

*அன்புகூரப்பட முடியாதவர்களை இயேசு சென்று அடைந்ததன் விளைவு என்னவாக இருந்தது?*

### *மாற்றப்பட்ட ஒரு மனிதன்*

*நாம் ஒரு சில விளைவுகளை ஏற்கனவே பார்த்திருக்கின்றோம். எடுத்துக்காட்டாக, ஒரு வாழ்வு முற்றிலுமாகத் திருப்பப்பட்டிருந்தது. இம்மனிதன் இயேசுவைச் சந்திப்பதற்கு முன்னும் சந்தித்த பின்னும் இருந்த நேர்மாறான நிலையைக் காட்டிலும் பெரிய நேர்மாறு ஒன்றைக் கற்பனை செய்து பார்த்தல் என்பது கடினமாக இருக்கும்.*

### *தொடப்படாத மனிதர்கள்*

*முன்பே கருத்துத் தெரிவிக்கப்பட்டபடி, நடந்த விஷயங்கள் குறித்துச் சிலர் சற்றும் மகிழ்ச்சியடையவில்லை. சகமனிதன் ஒருவன் இரட்சிக்கப் பட்டான் என்பது பற்றி உணர்வெழுச்சி அடைவதற்குப் பதில், "அவர்கள் ...*

பயந்தார்கள்" (வ. 15ஆ). அவர்கள் இன்னும் அதிகமான பன்றிகளை இழந்து விடுவோமோ என்று பயந்தார்கள் என்பது உறுதி. அவர்கள் மக்களைக் காட்டிலும் பன்றிகளைப் பற்றியே அதிகமாய் நினைத்தார்கள் என்பதற்கு ஒவ்வொரு சுட்டிக்காண்பித்தலும் உள்ளது. ஆத்துமாக்களைக் காட்டிலும் அவர்களுக்குப் பன்றிகள் மிகவும் முக்கியமானவைகளாக இருந்தன. பன்றியிறைச்சியானது விசுவாசத்திற்கு முந்திய இடத்தைப் பிடித்திருந்தது.

மக்கள், "தங்கள் எல்லைகளை விட்டுப்போகும்படி அவரை வேண்டிக் கொள்ளத் தொடங்கினார்கள்" (வ. 17). அவர்கள் அசுத்த ஆவி பிடித்திருந்த வேறு எந்தக் குடிமகனையாவது மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வர உதவும்படி அங்கு தங்கியிருக்குமாறு கிறிஸ்துவிடம் வேண்டுகோள் விடுக்கவில்லை. மாறாக, அவர்கள் உண்மையில் "வெளியேறுக!" என்றே கூறினார்கள்.

அவர்களே கேட்டுக் கொண்டதை இயேசு செய்தார். அவர்கள் இதைக்காட்டிலும் அதிக துன்பமான வேண்டுகோளை ஏற்படுத்தியிருக்க முடியாதிருந்தது, ஆனால் கிறிஸ்து அதற்கு இணங்கினார். அவர் தம்மை விரும்பாத இடத்தில் ஒருக்காலும் தங்கியிருந்தது இல்லை, மற்றும் அவர் தேவனுடைய வழியை ஒருவர்மீதும் ஒருக்காலும் வலுக்கட்டாயப் படுத்தியது இல்லை. நாமும் அவ்வாறு செய்யமுடியாது. நாம் வசனத்தி லிருந்து நம்மால் இயன்ற அளவுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும்; பின்பு மக்கள் "வெளியேறுக!" என்று கூறினால், நாம் வெளியேறி விட வேண்டும்.

### போதிக்கப்பட்ட ஒரு பகுதி

கடைசியான ஒரு விளைவு குறிப்பிடப்படுதல் அவசியமாக உள்ளது: சென்றடைதல் என்பது சென்றடைதலைப் பெறுகிறது. இவ்வரலாற்றின் எஞ்சிய பகுதியைக் கவனியுங்கள்:

> அப்படியே அவர் படவில் ஏறுகிறபொழுது, பிசாசு பிடித்திருந்தவன், அவரோடேகூட இருக்கும்படி தனக்கு உத்தரவுகொடுக்க அவரை வேண்டிக்கொண்டான். இயேசு அவனுக்கு உத்தரவுகொடாமல்: "நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப்போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவி யென்று" சொன்னார். அந்தப்படி அவன் போய், இயேசு தனக்குச் செய்தவைகளையெல்லாம் தெக்கப்போலி என்னும் நாட்டில் பிரசித்தம் பண்ணத்தொடங்கினான்; எல்லாரும் ஆச்சரியப் பட்டார்கள் (வ. 18-20).

இயேசு நம்மிடத்திலும், "நீங்கள் உங்கள் மக்களிடத்தில் - உங்கள் நண்பர்கள், குடும்பத்தார், மற்றும் அயலகத்தார் ஆகியோரிடத்தில் - சென்று கர்த்தர் உங்களுக்குச்செய்த மாபெரும் விஷயத்தையும் அவர் உங்கள்மீது இரக்கம் கொண்டுள்ளதையும் அவர்களுக்குச் சொல்லுங்கள்" என்று கூறுவார். ஒரு சிலர், "ஆனால் சபை உறுப்பினர்கள் அல்லாத எந்த ஒரு நெருங்கிய நண்பரும் எனக்கு இல்லையே" என்று மறுப்புத் தெரிவிக்கலாம். விஷயம் அப்படியென்றால், யாரேனும் சிலரைக் கண்டறியுங்கள். உங்கள்

அயலகத்தில் ஒரு நண்பராயிருங்கள். நீங்கள் பணியாற்றும் இடத்தில் ஒரு நண்பராயிருங்கள். பள்ளியில் ஒரு நண்பராயிருங்கள். அப்போது நீங்கள் பகிர்ந்துகொள்ள முடியும். சுவிசேஷ ஊழியம் என்பது இருவருக்கும் உணவு எங்கு கிடைக்கும் என்று ஒரு பிச்சைக்காரர் இன்னொரு பிச்சைக்காரருக்குச் சொல்லுதல் போன்றதுதான் என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார். நமது வேதபாடப் பகுதியானது, சுவிசேஷ ஊழியம் என்பது, துன்புறும் ஒருவர், துன்புறும் இன்னொருவருக்கு, அவர்கள் இருவரும் நிம்மதியை எங்கு கண்டறிய இயலும் என்று கூறுதல்தான் என்று அறிவிக்கிறது.

## முடிவுரை

சார்லஸ் ஹோட்ஜ் அவர்கள் சில வேளைகளில் பதினெட்டு அங்குல அளவுகோலை எடுத்துக் கொண்டு பிரசங்க மேடைக்கு வருவதுண்டு. அவர் அதைக் கையில் பிடித்து, அதன் நீளத்தைக் கவனித்து, "சில கிறிஸ்தவர்கள் பரலோகத்தை இவ்வளவு தொலைவே தவறவிடுவார்கள்" என்று கூறுவார். பின்பு, அந்த அளவுகோலின் ஒரு முனையைத் தமது தலையிலும் இன்னொரு முனையைத் தமது மார்பிலும் வைத்துக்கொண்டு, "அதாவது, தலையிலிருந்து இருதயத்திற்கு உள்ள தூரம் அளவுக்கு அவர்கள் தவற விடுவார்கள்" என்று கூறுவார்.[14]

நாம் மற்றவர்களின் தேவைகளில் உதவவும் அவர்களுடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளவும் மற்றவர்களை - அன்புகூரப்பட முடியாதவர்களையும் கூட - சென்றடைய வேண்டும் என்று நம்மில் பலர் நமது தலையில் (மதிநுட்ப அளவில்) அறிந்திருக்கச் சாத்தியம் உண்டு. அதே வேளையில், அந்தச் செய்தியானது நமது இருதயத்தைச் சென்று அடையாதிருக்கவும் சாத்தியம் உண்டு. ஒருவேளை நாம் மற்றவர்களைச் சென்றடைவதற்குத் தேவையானவற்றை - அதாவது, நமது பணி அட்டவணைகளை மாற்றியமைத்தல், நமது பயங்களை அல்லது நாம் செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் நம்மைத் தடை செய்பவற்றை வெல்லுதல் போன்றவற்றை - செய்யும்படி தூண்டப்படாது இருக்கலாம். நம்மில் சிலர் "பரலோகத்தைப் பதினெட்டு அங்குல அளவில்" தவறவிடவும் சாத்தியக்கூறு உள்ளது.[15]

நாம் இந்தப் பிரசங்கத்தை முடிக்கும் இவ்வேளையில், இந்தப் பாடத்தை இயன்ற அளவுக்குத் தனிப்பட்டதாக்க என்னை அனுமதியுங்கள். இயேசு உங்கள் வாழ்வைத் தொட விரும்புகின்றார், ஆனால் அவர் கதரேனருடைய நாட்டில் இருந்த மக்களிடத்தில் தம்மை வலுக்கட்டாயமாய் திணிக்காதது போல் உங்களிடத்திலும் தம்மை வலுக்கட்டாயமாய்த் திணிக்க மாட்டார். அவர் உங்களை ஞானஸ்நானம் பெறும்படி தண்ணீருக்கருகில் தள்ளிச் செல்ல மாட்டார் (மாற். 16:15, 16ஐக் காணவும்). நீங்கள் உங்கள் தவறுகளை அறிக்கையிடும்படியும் மீண்டும் கட்டுவிக்கப்படும்படியும் அவர் உங்கள் கைகளைப் பிடித்து திருக மாட்டார் (யாக். 5:16). நீங்கள் கீழ்ப்படிதலுடன் அவரது பாதங்களில் விழுந்து, அவர் உங்கள் வாழ்வுக்குள் வருமாறு அவரிடத்தில் கேட்க வேண்டும். நீங்கள் அவருக்குப் பதில்செயல் செய்யத் தேவையானால், அதை இப்பொழுதே செய்யுங்கள்.

# குறிப்புகள்

*வரவிருந்த ஒரு சுவிசேஷ ஊழிய முகாமுக்கு ஒரு உள்ளூர் சபையைத் தயார் செய்யும்படிக்கு நான் இந்தப் பிரசங்கத்தை அடிக்கடி பயன்படுத்தியுள்ளேன். நான் அவர்களிடம், "இந்த முகாம் நம் ஒவ்வொருவருக்கும் மற்றவர்களை - அன்புகூரப்பட முடியாதவர்களைக்கூட - சென்று அடைய வாய்ப்பளிக்கும்" என்று கூறுவதுண்டு.*

*நீங்கள் ஒருவேளை பதினெட்டு அங்குல அளவுகோல் ஒன்றைச் செய்ய விரும்பலாம் - இது நாம் சாதாரணமாகப் பயன்படுத்தும் பன்னிரெண்டு அங்குல அளவுகோலைவிட அரைமடங்கு பெரியது ஆகும். நீங்கள் மீட்டர் அளவுகோலையும் கூடப் பயன்படுத்தலாம். அல்லது நீங்கள் தோராயமாக பதினெட்டு அங்குலம் நீளம்கொண்ட ஒரு குச்சியைக் கூடப் பயன்படுத்தி, "இந்தக் குச்சியானது ஏறக்குறையப் பதினெட்டு அங்குல நீளமுடையது - இந்த அளவுக்குத்தான் சிலர் பரலோகத்தைத் தவற விடுவார்கள்" என்று கூறலாம்.*

---

*குறிப்புகள்*

[1]*இந்த எடுத்துரைப்பிற்கான கருத்து, Sermons for Today,* vol. 2 (Abilene, Tex.: Biblical Research Press, 1981), 134-41 *என்ற புத்தகத்தில் உள்ள பிரென்டிஸ் மெடோர், அவர்களின் பிரசங்கம் ஒன்றிலிருந்து வந்தது. "சென்று அடையுங்கள், சென்று அடையுங்கள் மற்றும் யாரையேனும் தொடுங்கள்" என்று தலைப்பிடப்பட்ட அவரது பிரசங்கத்திலிருந்து சிந்தனைகளும் கருத்துக்களும் இந்த எடுத்துரைப்பு முழுவதிலும் சிதறியுள்ளன.* [2]*விரும்பப்பட்டால், அவர் சென்றடைந்தவர்கள் பற்றிய குறிப்பான பின்வரும் உதாரணங்களை நீங்கள் தர முடியும்: அப்போஸ்தலர்கள், பத்து தொழுநோயாளிகள், கிணற்றண்டையில் இருந்த பெண், செல்வந்தனான இளம் அதிகாரி, சகேயு, சிலுவையில் தொங்கிய கள்ளன், மற்றும் பிற.* [3]*நாம் அவரது சரீரத்தின் அவயவங்களாய் (உறுப்புக்களாய்) இருக்க வேண்டும் (ரோமர் 12:5).* [4]*அசுத்த ஆவி பிடித்தல் பற்றி இரண்டொரு வார்த்தைகளைக் கூற நீங்கள் விரும்பலாம்: அதாவது, இது கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்களின் நாட்களில் நடைபெற்றது, ஆனால் இன்றைய நாட்களில் நடைபெறுவதில்லை.* [5]*அப்பொழுது முற்றிலும் இருட்டாகி இருந்திருக்காது, இல்லையென்றால் அம்மனிதன் அவர்களை "தூரத்திலே" (மாற். 5:6) கண்டிருக்க முடியாது; ஆனால் அது ஏறக்குறைய இருட்டு வேளையாக இருந்திருக்கக் கூடும் அல்லது சந்திரன் மிகுந்த பிரகாசமாய் ஒளிவீசியிருக்கலாம்.* [6]Joe Schubert, "Overcoming Fear," *Preacher's Periodical* (December 1983): 27. [7]*மற்றவர்களுடன் "தொடர்ந்து சமாளித்தல்" என்பது, "உங்கள் அயலகத்தவர்கள் போலவே வளமிக்கவர்களாகத் தோற்றம் அளிக்க முயற்சி செய்தல்" என்று அர்த்தப்படுகிறது.* [8]*பிரச்சனையுள்ள ஓரிடத்தில் அந்தப் பிரச்சனைக்குத் தனிப்பட்ட வகையில் பொறுப்பை மேற்கொள்வதற்கு மாறாக, "நாம் இதைக் கவனிக்க அரசின் இன்னொரு திட்டத்தைத் தொடங்குவோம்" என்று கூறுவது சமுதாயத்தின் பொதுவான எண்ணப்போக்காக உள்ளது. இதை, நீங்கள் வாழும் சமுதாய மற்றும் அரசியல் சூழ்நிலைக்குத் தக்காற்போன்று தழுவியமைத்துக் கொள்ளுங்கள்.* [9]Meador, 138. *சில சபைகள் "வாடகைத் துப்பாக்கி" எண்ணப்போக்கினால் துன்புறுகின்றன என்று சகோ. மெடோர் அவர்கள் கருத்துத்*

*தெரிவித்தார். அமெரிக்காவில் பழங்காலத்தில் மேற்குப்பகுதியில், மனிதர்கள் தங்கள் பிரச்சனைகளைக் கவனித்துக் கொள்வதற்கு, சில வேளைகளில் "துப்பாக்கிகளை" (அதாவது, துப்பாக்கியுடன் உள்ள மனிதர்களை) வாடகைக்கு அமர்த்திக் கொண்டார்கள். இதை சபைக்கு நடைமுறைப்படுத்தினால், "வாடகைத் துப்பாக்கி" மனநிலை என்பது, "நாம் நமக்காக ஊழியம் செய்யும்படிக்கு ஒரு பிரசங்கியாரை ஊதியம் கொடுத்து நியமித்துக் கொள்ளுவோம். அது பணியைச் செய்யவில்லை என்றால், நாம் அதிகமான ஊழியர்களை (அதாவது அதிகமான சபை ஊழியர்களை) ஊதியத்திற்கு அமர்த்திக் கொள்வோம்" என்பதாக உள்ளது. நீங்கள் அறிந்துள்ளபடி, ஊதியம் பெறும் எந்த ஒரு ஊழியரும் வேறு எவருடைய ஊழியத்தையும் அவருக் காகச் செய்யமுடியாது. நாம் ஒவ்வொருவரும் தத்தமது சொந்த ஊழியத்தைச் செய்தாக வேண்டும். [10]அந்த மனிதன் தன்னிடத்திலிருந்து அசுத்த ஆவிகள் வெளியேறிய பின்பு, "புத்தி தெளிந்து" இருந்தான் என்று மாற்கு 5:15 குறிப்பிடுகிறது.*

[11]KJV *மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பில்* "the deep" *அதாவது "பாதாளம்" என்றுள்ளது, ஆனால் கிரேக்க மொழியில் abusson (வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால்* "abyss"*) என்றுள்ளது. [12]பன்றிகள் கத்தும் சத்தம் என்பது பயங்கரக் காட்சிகள் கொண்ட திரைப் படங்களைத் தயாரிப்பவர்கள் தங்கள் திரைப்படங்களில் காட்டும் இராட்சசப் பிராணிகளின் மயிர்க்கூச்செரியும் அலறுதல்களுக்குப் பயன்படுத்தும் சத்தங்களில் ஒன்றாக உள்ளது. [13]அமெரிக்காவில் பொதுவாக, பன்றிகள் தொழுவில் அடைத்து வைக்கப்பட்டு உணவு தரப்படுகின்றன. வேலியற்ற நிலங்களில் பன்றிகள் நிலத்தில் உள்ளவற்றை மேயும்படி மாடுகள் மற்றும் ஆடுகளைப் போன்று மேய்க்கப்பட்டன. [14]வேதாகமத்தில் பேசப்படுகின்ற "இருதயம்" என்பது நமது மார்புப் பகுதியில் உள்ள உறுப்பு அல்ல ஆனாலும் இந்த விவரிப்பானது ஒரு மதிப்புமிக்க கருத்தை ஏற்படுத்துகிறது. [15]இந்த வேளையில், நான் பொதுவாக சபையின் முன்பாகக் குறிப்பிட்ட சில அறைகூவல்களை இடுவதுண்டு, அந்த அறைகூவலில் "மற்றவர்களைச் சென்று அடைவதற்கு" அவர்களுக்கு வாய்ப்பளிக்கும் ஒரு நேரமும், இடமும் மற்றும் சூழ்நிலையும் இருக்கும்.*

# 36

# “நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா?”

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #14*

V. *இரண்டாம் பஸ்காவில் இருந்து மூன்றாம் பஸ்கா வரை (தொடர்ச்சி).*
   S. *யவீருவின் மகளை உயிர்ப்பித்தல் (மற்றும் பெரும்பாடு உள்ள ஒரு பெண்ணைக் குணமாக்குதல்) (மத். 9:18-26; மாற். 5:22-43; லூக். 8:41-56).*
   T. *பார்வையற்றவரையும் அசுத்த ஆவி பிடித்தவரையும் குணமாக்குதல் (மற்றும் விமர்சிக்கப்படுதல்) (மத். 9:27-34).*
   U. *நாசரேத்தூருக்கு வருதல் (மற்றும் புறக்கணிக்கப்படுதல்) (மத். 13:54-58; மாற். 6:1-6; லூக். 4:16-31).*

இயேசு கலிலேயாக் கடலின் மேற்குக் கரைக்குத் திரும்பி வந்தபோது, ஒரு கூட்டம் அவருக்காகக் காத்திருந்தது (மாற். 5:21; லூக். 8:40). அந்த வேளையில், அவர் ஒரு பெண்ணை மரித்தோரிலிருந்து எழுப்பியது உட்படக் குறிப்பிடத்தக்க பல அற்புதங்களை நிகழ்த்தினார். இதற்குச் சற்றுப் பின்பு, அவர் தமது சொந்த ஊரான நாசரேத்தூரில் தொடங்கி மூன்றாவது கலிலேயப் பயணத்தை மேற்கொண்டார்.

“நம்பிக்கை” அல்லது “விசுவாசம்” என்பது இந்தப் பாடத்தின் திறவு கோல் வார்த்தையாக உள்ளது.[1] கிறிஸ்து ஒரு பெண்ணைக் குணமாக்கிய போது, அவர் “... உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது” என்று கூறினார் (மத். 9:22). அவர் ஜெப ஆலயத் தலைவனிடத்தில், “பயப்படாதே, விசுவாச முள்ளவனாயிரு” என்று கூறினார் (மாற். 5:36). அவர், பார்வையற்ற இருவரிடம் அவரால் அவர்களைக் குணமாக்க முடியும் என்று விசுவாசிக் கிறார்களா என்று கேட்டார். அவர்கள், “ஆம் ஆண்டவரே” என்று பதில் அளித்தபோது, அவர் “உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது” என்று கூறினார் (மத். 9:28, 29). அவர் நாசரேத்தூரில் புறக்கணிக்கப்பட்ட போது, “அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்” (மாற். 6:6).

அற்புத வல்லமைகள் கொண்டுள்ளதாக உரிமைகோருகின்ற சிலர், முதலில் மக்கள் விசுவாசம் கொண்டிராத வரை இயேசுவே கூட அற்புதங் களைச் செய்ய முடியாதிருந்தது என்று போதிப்பதற்கு இந்த வசனங்களைப்

*பயன்படுத்துகின்றார்கள். பின்பு, குணமாக்கப்படாதவர்கள் "போதுமான அளவு விசுவாசம் கொண்டிருக்கவில்லை" என்று கூறுவதன் மூலம், அவர்கள் தங்கள் தோல்விகளுக்குச் சாக்குப்போக்குக் கூறுகின்றார்கள். இவ்வசனப் பகுதிகளில் விசுவாசம் வலியுறுத்தப்பட்டுள்ளது உண்மையே, ஆனால் அற்புதங்களை நிகழ்த்துவதற்கான இயேசுவின் வல்லமையானது அவர் உதவி செய்த மக்களின் விசுவாசத்தைச் சார்ந்திருந்தது என்பது உண்மை யல்ல. இதுவரையிலும் நமது படிப்பில் நாம், விசுவாசம் முன் வைக்கப் படாத அல்லது அது சாத்தியமாகவும் இராத பல நிகழ்ச்சிகளை நாம் கண்டுள்ளோம்.[2] இந்தப் பாடத்தில், மரித்துப்போன ஒரு பெண் உயிர்ப் பிக்கப்பட்டதைப் படிக்கவிருக்கின்றோம், அவள் தனது உயிர்த்தெழு தலுக்கு முன்பு விசுவாசம் கொண்டிருக்கவில்லை என்பது நிச்சயம்.*

*பின்பு, இந்த நிகழ்ச்சிகளின்போது விசுவாசம் வலியுறுத்தப்பட்டது ஏன்? இயேசு தமது ஊழியத்தில் மிகவும் முக்கியமான ஒரு பகுதியை அடைந்திருந்தார். அவர் அந்த வேளைக்கு முன்பு பல அற்புதங்களைச் செய்திருந்தார், விசுவாசத்தை உண்டாக்குதல் என்பது அந்த அற்புதங்களின் ஒரு நோக்கமாயிருந்தது (யோவா. 20:30, 31). அவர் ஒரு சில மாதங்களில் தாம் இப்பூமியை விட்டு நீங்கிச் செல்ல வேண்டியிருப்பதை அறிந்திருந்தார். அவ்வாறு அவர் செல்லும்போது, அவர் விசுவாசிகளின் பலத்த முக்கிய குழுவை தமக்குப் பின்னால் இப்பூமியில் விட்டுச் செல்ல வேண்டியது அவசியமாயிருந்தது. இவ்விதமாக, அவர் மக்களை அதிகம் அதிகமாகத் தம்மீது விசுவாசம் கொள்ளும்படி வற்புறுத்தினார்.*

*இந்தப் பாடத்தின் ஒவ்வொரு பிரிவிலும், விசுவாசம் மற்றும் அவிசுவாசம் ஆகியவற்றிற்கு இடையில் ஒரு நேர்மாறு ஒப்பீடு உள்ளது. நீங்களும் நானும் விசுவாசிக்கின்றோமா இல்லையா என்பதே மிகவும் இன்றியமையாத கேள்வியாக உள்ளது.*

## *"யவீருவே, நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா?" (மத். 9:18-26; மாற். 5:22-43; லூக். 8:41-56)*

***விசுவாசம் விளக்கப்படுத்தப்பட்டது***
***(மத். 9:18, 19; மாற். 5:22-24; லூக். 8:41, 42)***

*யவீரு என்ற பெயர்கொண்ட ஒரு மனிதர் இயேசுவிடம் வந்தார்.* NASB *வேதாகமம் இம்மனிதரை "ஜெப ஆலய அலுவலரில் ஒருவர்"[3] என்று அழைக்கிறது (மாற். 5:22; லூக். 8:41ஐக் காணவும்).* KJV *வேதாகமம் இவரை "ஜெப ஆலயத் தலைவரில் ஒருவர்" என்று குறிப்பிடுகிறது. ஜெப ஆலயத்தின் "அதிகாரி" அல்லது "தலைவர்" என்பவர் ஜெப ஆலயத்திற்குப் பொறுப் பாளர்களாயிருந்த "மூப்பர்கள்" குழுவின் அங்கமாயிருந்தார் (லூக். 7:3ஐக் காணவும்).[4] "அதிகாரி" என்பவர் ஜெப ஆலயத்தின் முறைமையைப் பராமரித்தல் (லூக். 13:14ஐக் காணவும்) மற்றும் வாசிக்க அல்லது பேச ஆண்களை அழைத்தல் (அப். 13:15ஐக் காணவும்) உட்பட ஜெப ஆலயத் தின் ஊழியங்களுக்குப் பொறுப்பைக் கொண்டிருந்தார்.[5] யூதர்களின்*

*நகரத்தில் ஜெப ஆலயத் தலைவர் என்பவர் உயர்வாக மதிக்கப்பட்ட தனிநபராக இருந்தார்.*

*யவீரு கிறிஸ்துவை அணுகியபோது, அவர் [யவீரு] "அவர் பாதத்திலே விழுந்து" "அவரை பணிந்து" அவர் தம்முடன் வந்து, "மரண அவஸ்தை யாயிருக்கும்" தனது பன்னிரெண்டு வயதான மகளைக் குணமாக்கும்படி வேண்டிக் கொண்டார் (மாற். 5:22; மத். 9:18; மாற். 5:23).*[6] *அந்த அலுவலர், கப்பர்நகூமில்,*[7] *ராஜாவின் மனிதர்களில் ஒருவருடைய மகனை இயேசு குணமாக்கியிருந்ததையும் (யோவா. 4:46-53), அதே நகரத்தில் ஒரு நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரனைக் குணமாக்கியிருந்ததையும் கேள்விப் பட்டிருக்கலாம் (லூக். 7:1-10). அவர் [யவீரு] கௌரவத்தைப் பார்க்காமல், கர்த்தருடைய பாதங்களில் விழுந்து, தமது "ஒரே மகளுக்கு" உதவும்படி கெஞ்சினார் (லூக். 8:42).* J. W. *மெக்கார்வீ அவர்களின் கூற்றுப்படி, "அவரது தேவைகள் அவரது கௌரவத்தை விடப் பெரியவைகளாய் இருந்தன."*[8] *உங்களுக்குப் பிள்ளைகள் இருக்கின்றார்களா? இருக்கின்றார்கள் என்றால், நீங்கள் யவீருவின் இருதயத்தில் இருந்த வேதனையைப் புரிந்து கொள்வீர்கள்.*

*இயேசு தயங்கவில்லை. அவர் [இயேசு], [ஜெப ஆலயத்] தலைவரைப் பின்தொடர்ந்து, அவரது [யவீருவின்] வீட்டை நோக்கிச் செல்லத் தொடங்கி னார். அவர்களின் நடைவேகம் மெதுவாயிருந்தது;* Living Bible *என்ற வேதாகமத்தில், அவர்கள் "மக்கள் கூட்டத்தில் நெருக்கிக்கொண்டு" செல்ல வேண்டியிருந்ததென்று கூறப்படுகிறது (லூக். 8:42; மாற். 5:24, 31ஐயும் காணவும்).*

### *விசுவாசம் சோதிக்கப்பட்டது*
### *(மத். 9:20-22; மாற். 5:25-36; லூக். 8:43-50)*

*யவீருவின் வீட்டிற்குச் செல்லும் வழியில், வழக்கத்திற்கு மாறான ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. இது "இடைநிலை அற்புதம்" என்று அழைக்கப் பட்டுள்ளது, ஏனெனில் அற்புதமான நிகழ்ச்சி ஒன்று இன்னொரு அற்புதமான நிகழ்ச்சியின் விவரத்திற்குள் சொருகப்பட்டுள்ளது.*

*கூட்டத்தினூடே இயேசு சென்று கொண்டிருந்தபோது, பெரும் பாடுள்ள பெண்ணொருத்தி, தீர்மானத்துடன், கிறிஸ்துவை அடையும்வரை நெருங்கி நின்ற மக்கள் கூட்டத்தை விலக்கிச் சென்றாள். மருத்துவரான லூக்கா, அவள் "பன்னிரெண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ளவளாயிருந்து, தன் ஆஸ்திகளையெல்லாம் வைத்தியர்களுக்குச் செலவழித்தும், ஒருவனா லும் சொஸ்தமாக்கப்படாதிருந்த ஒரு ஸ்திரீ" என்று விவரித்தார் (லூக். 8:43). மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி, அவள் என்றென்றைக்கும் அல்லது முற்றிலுமாக "அசுத்தமானவளாக" இருந்திருப்பாள் (லேவி. 15:19, 26ஐக் காணவும்).*[9]

*மாற்குவின் தொகுப்புரையானது, லூக்காவின் சக வைத்தியர்களைப் பற்றி இரக்கத்துடன் கூறப்படவில்லை. அவர் [மாற்கு], அந்தப் பெண், "அநேக வைத்தியர்களால் மிகவும் வருத்தப்பட்டு, தனக்கு உண்டானவை களையெல்லாம் செலவழித்தும், சற்றாகிலும் குணமடையாமல் அதிக*

வருத்தப்படுகிறபொழுது" என்று கூறினார் (மாற். 5:26). அந்த நாட்களில், பெரும்பாலான மருத்துவர்கள் ''ஒரு சிட்டிகை அளவு'' அடிப்படை உடற்கூறியலை[10] "ஒரு சிறுபாத்திரம் அளவு" மூலிகை மருந்துடனும் "ஒரு தொட்டி நிறைய" மூடநம்பிக்கையான சடங்காச்சாரத்துடனும் கலந்து கொடுப்பவர்களாக இருந்தார்கள்.

ஒருவேளை நீங்கள், பல ஆண்டுகளாக நோய்வாய்ப்பட்டுள்ள ஒருவரை அறிந்திருக்கலாம், மற்றும் இந்தப் பெண் எவ்வாறு உபத்திரவப் பட்டாள் என்பதைக் கற்பனை செய்யக்கூடியவராக இருக்கலாம். இவள் அநேகமாக, வெளுத்துப் போய், உடல் மெலிந்து, வேதனையினால் உடல் வளைந்து துன்புற்றுக்கொண்டிருந்திருக்கலாம். ஆயினும், இவள் அவ்வழி யாகக் கர்த்தர் வருகின்றார் என்று கேள்விப்பட்டபோது, மறைந்திருந்த சக்தியைக் கண்டாள். அவருக்கு நேர் பின்னால் சென்று நிற்கும் வரைக்கும், அவரிடம் சென்றடைந்து அவரைத்தொடப் போதுமான அளவு அருகாமை யில் நிற்கும் வரைக்கும் இவள் கூட்டத்தினூடே வலிந்து தள்ளித் தனக்கு வழியை ஏற்படுத்திக் கொண்டு சென்றாள்.

இவள் தனக்குள்ளாகப் பின்வருமாறு நினைத்துக் கொண்டாள்: "நான் அவருடைய வஸ்திரத்தையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன்" (மத். 9:21; மாற். 5:27ஐக் காணவும்). அற்புதம் செய்பவர் தொட்டுப் பயன் படுத்தும் பொருட்கள் அற்புத வல்லமையைக் கொண்டிருந்தன என்று பொதுவாக நம்பப்பட்டிருந்தது (மத். 14:36; அப். 19:11, 12ஐக் காணவும்). ஒருவேளை இந்தப் பெண், இயேசுவைத் தொந்தரவு செய்வது அடாத செயலாக இருக்கும் என்று நினைத்திருக்கலாம், ஆதலால் அவரது வஸ்திரத்தை தொட மட்டும் முடிவு செய்திருக்கலாம். இவளது நியாயப் படுத்துதல் எதுவாயிருப்பினும், இப்பெண் கிறிஸ்துவின் வல்லமையின்மீது விசுவாசம் கொண்டிருந்தாள்.

இவள் சென்றடைந்து, ''அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்'' (மத். 9:21).[11] இவள் அவ்வாறு செய்தபோது, "உடனே, அவளுடைய உதிரத்தின் ஊறல் நின்றுபோயிற்று; அந்த வேதனை நீங்கி ஆரோக்கியமடைந்ததை அவள் தன் சரீரத்தில் உணர்ந்தாள்" (மாற். 5:29). உலகில் நான் வாழும் பகுதியில், நாங்கள் வியாதியாயிருக்கும்போது, "feeling bad" என்றும், வியாதி நீங்கும்போது "feeling good" என்றும் பேசுகின் றோம். [நமது நாட்டில், "உடம்பு சரியில்லை" மற்றும் "நன்றாயிருக்கின் றேன்" என்ற சொல்வழக்குகள் பயன்படுத்தப்படுகின்றன.] இந்தப் பெண் "உடல் சரியில்லாத" நிலையில் இருந்து உடனடியாக "நன்றாயிருக்கும்" நிலைக்குச் சென்றாள்! இவளது உடல் நேரானதை, இவளது கன்னங்களில் [செந்]நிறம் திரும்ப வந்ததை, இவளது முகத்தில் புன்னகை பரவியதை என்னால் [கற்பனையில்] காணமுடிகிறது.

இயேசு தம்மில் இருந்து வல்லமை புறப்பட்டுச் சென்றதை உடனடி யாக உணர்ந்தார் (மாற். 5:30அ; லூக். 8:46). வரையரைக்குட்பட்ட மனிதப் பிறவி என்ற வகையில் என்னால் தெய்வீக வல்லமையைப் புரிந்துகொள்ள முடியாததாகையால் இவ்விடத்தில் தாமதிக்க நான் விரும்பவில்லை - ஆனாலும் விவரங்கள் என்னை ஈர்க்கின்றன. நான் ஒருவேளை இவ்வசனங்

*களில் அதிகமாக வாசிக்கக்கூடும், ஆனால் அற்புதங்களை நிகழ்த்துவதற்குக் கிறிஸ்து சற்றே தம்மிடம் இருந்தவற்றைக் கொடுக்க வேண்டியிருந்தது என்று இவைகள் எனக்குக் கருத்துத் தெரிவிக்கின்றன. ஒருவேளை, அவர் நிகழ்த்திய ஒவ்வொரு அற்புதமும் அவரை ஏதோ ஒரு வழியில் சக்தியிழக்கச் செய்திருக்கலாம்,[12] ஆயினும் அவர் ஒருக்காலும் இதன் விலையை எண்ணிக் கொண்டு இருந்ததில்லை; அவர் மற்றவர்களைச் சென்று அடைவதற்கு ஒருக்காலும் தயங்கியதில்லை.*

*வல்லமை தம்மிடத்திலிருந்து புறப்பட்டதை இயேசு உணர்ந்தபோது, அவர் நின்று, "என் வஸ்திரங்களைத் தொட்டது யார்?" என்று கேட்டார் (மாற். 5:30ஆ). இது அவரது சீஷர்களைத் திகைக்கச் செய்தது. அவர்கள், "திரளான ஜனங்கள் உம்மை நெருக்கிக் கொண்டிருக்கிறதை நீர் கண்டும், 'என்னைத் தொட்டது யார்' என்று கேட்கிறீரே" என்றார்கள் (மாற். 5:31). இது நம்மையும் சற்றே கலக்கமடையச் செய்கிறது. இது, அந்தப் பெண் யார் என்று இயேசு அறியவில்லை என்று அர்த்தப்படுத்துகிறதா? அந்தப் பெண் யார் என்றும், அவள் செய்திருந்தது என்ன என்றும் அவள் ஏன் அதைச் செய்தாள் என்றும் இயேசு அறிந்திருந்தார் என்பதாகவே மத்தேயு, மாற்கு சுவிசேஷங்கள் மறைவாக உணர்த்துகின்றன. சற்றே தயக்கத்துடனோ அல்லது தயக்கம் எதுவும் இன்றியோ இயேசு திரும்பி அந்தப் பெண்ணைக் கண்ணோக்கினார் என்று அவை சுட்டிக்காண்பிக்கின்றன (மத். 9:22; மாற். 5:32).*

*கிறிஸ்துவின் கேள்விகள் பெரும்பாலும் தகவலைப் பெறும் நோக்கம் கொண்டவைகளாயிராமல், அதற்கு மாறாக, பிறரின் மனதில் சத்தியங்களை ஆழப்பதியச் செய்வதற்கானவைகளாக இருந்தன.[13] இவ்வேளையிலும் விஷயம் இதுவாகவே இருந்திருக்கலாம். ஒருவேளை அவர் தம்மைச் சுற்றியிருந்தவர்கள் இந்தப் பெண்ணின் விசுவாசத்தை - மற்றும் இவளது விசுவாசம் எவ்வாறு இவளது வாழ்வில் ஆசீர்வாதத்தை விளைவித்தது என்பதை - அறிய வேண்டும் என்று விரும்பியிருக்கலாம். ஒருவேளை அவர், என்ன நடந்தது என்றும் மற்றும் அது ஏன் நடந்தது என்பதைப் பற்றியும் இந்தப் பெண் ஒரு தெளிவான கருத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று விரும்பியிருக்கலாம். லூக்கா பின்வருமாறு எழுதினார்:*

> *அப்பொழுது அந்த ஸ்திரீ தான் மறைந்திருக்கவில்லையென்று கண்டு, நடுங்கிவந்து,[14] அவர் முன்பாக விழுந்து, தான் அவரைத் தொட்ட காரணத்தையும் உடனே தான் சொஸ்தமானதையும் எல்லா ஜனங் களுக்கும் முன்பாக அவருக்கு அறிவித்தாள். அவர் அவளைப் பார்த்து: "மகளே திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ" என்றார் (லூக். 8:47, 48).*

*"சமாதானத்தோடே போ" என்ற ஆசீர்வாதமானது, குணமாகுதல் என்றென்றைக்குமானதென்றும் அவளுடைய உபாதைகள் திரும்பவும் வராதென்றும் நிச்சயத்தைக் கொடுத்தன.*

*அந்தப்பெண் அவ்விடம் விட்டுச் செல்லுவதை சித்தரித்துக்கொண்டு - பின்பு உங்கள் பார்வையை யவீருவை நோக்கித் திருப்புங்கள். அவர் தமது மகள் மரணவாயிலில் காத்திருந்த இடமான தமது வீட்டிற்கு இயேசுவை*

*அவசரமாய் அழைத்துச் செல்ல விரும்பினார். அவர் கூட்டத்தை விலக்கிக்கொண்டு செல்லுகையில், பின்வரும் ஜெபத்தை மீண்டும் மீண்டும் அமைதியாகக் கூறியிருப்பார்: "ஆண்டவரே, நாங்கள் தாமதப்படாதபடிக்கு உதவி செய்யும். தேவனே அவள் இறக்கும் முன்பு நாங்கள் அங்கு சென்று சேர எங்களுக்கு உதவும்!" இப்பொழுது அவர், கிறிஸ்து பெரும்பாடுள்ள பெண்ணிடம் பேசிமுடிக்கும் வரைக்கும் காத்திருக்கும்படி நிர்ப்பந்திக்கப் பட்டார். நான் யவீருவாக இருந்திருந்தால், "இயேசுவே, இவளுக்கு நீர் பின்பு உதவி செய்யும்! இவள் பன்னிரெண்டு ஆண்டுகளாக வியாதிப்பட்டு இருக்கின்றாள். இன்னும் இரண்டொரு நாட்கள் இந்நிலை நீடித்தல் அது ஒன்றையும் செய்யப் போவதில்லை. எனது சிறுபெண்ணுக்கு இப்போதே நீர் தேவை!" என்று கதறும்படி சோதிக்கப்பட்டிருப்பேன்.*

*தாமதத்தினால் அந்த [ஜெப ஆலயத்] தலைவன் சலிப்புற்று இருந்தால், சலிப்பு வருத்தமாக மாறியது, ஏனெனில் அவருக்குப் பின்வரும் வார்த்தை வந்துசேர்ந்தது: "உம்முடைய குமாரத்தி மரித்துப் போனாள், போதகரை வருத்தப்படுத்த வேண்டாம்'' (லூக். 8:49ஆ). தந்தையின் இருதயம் அவருக்குள்ளாகச் செத்திருக்க வேண்டும். நான் எதனை அர்த்தப்படுத்து கின்றேன் என்பதை உங்களில் சிலர் அறிந்திருப்பீர்கள்.*

*யவீருவின் ஏக்கத்தைப் பற்றி இயேசு அறிந்திருக்க வேண்டும். அவரிடத்தில் [யவீருவிடத்தில்] அவர் [இயேசு], "பயப்படாதே; விசுவாச முள்ளவனாயிரு, அப்பொழுது அவள் இரட்சிக்கப்படுவாள்''[15] என்று கூறினார் (லூக். 8:50; மாற். 5:36ஐக் காணவும்). விசுவாசத்திற்கு என்ன ஒரு சோதனை!*

***விசுவாசத்திற்கு பலனளிக்கப்பட்டது***
***(மத். 9:23-26; மாற். 5:37-43; லூக். 8:51-56)***

*இயேசு யவீருவுடன் அவரது வீட்டிற்குச் செல்லத் தொடர்ந்தார். அவர்கள் வந்து சேர்ந்தபோது, அவரது [யவீருவின்] மகள் சற்று முன்புதான் இறந்து போயிருந்தாலும், சவ அடக்கச் செயல்முறைகள் ஏற்கனவே நடக்கத் தொடங்கியிருந்தன. அந்தக் காலம் மற்றும் இடத்தில், சவ அடக்கமானது சாதாரணமாக [ஒருவர் இறந்த] அந்த நாளிலேயே நடத்தப்படும். ஒரு குடும்பத்தின் சமுதாயத்தகுதி நிலையானது, அவர்கள் வாடகைக்கு அமர்த்த இயலக்கூடிய தொழில்முறைப் புலம்புபவர்களின் எண்ணிக்கை மற்றும் அந்தப் புலம்புபவர்கள் ஏற்படுத்த இயலக்கூடிய சத்தத்தின் அளவு ஆகியவற்றினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டது.[16] இவ்விதமாக, அந்த அலுவலரின் வீட்டில் நுழைகையில், கிறிஸ்து "சந்தடியையும்'' "இரைகிற ஜனங்களையும்'' கண்டார் (மாற். 5:38; மத். 9:23). அங்கு "தாரை ஊதுபவர் களின்'' சோககீத ஒலியும் "மிகவும் அழுது புலம்புகிறவர்களின்'' நெஞ்சைப் பிளக்கும் கதறல்களும் இருந்தன (மத். 9:23; மாற். 5:38).*

*சத்தமிடும் அந்த மக்கள் கூட்டத்தாரை இயேசு சொல்வதைக் கவனிக்கப் போதுமான அளவுக்கு அவர்களை அமர்த்துதல் என்பது அந்த நாளில் இயேசுவின் மிகக் கடினமான பணியாக இருந்திருக்கலாம். அவர்கள் அவரைக் கவனித்தபோது, அவர்களிடத்தில் அவர், ''அழாதேயுங்கள்''*

என்றும் "வெளியேறும்படியும்" கூறினார். அவர், "அவள் மரித்துப்போக வில்லை, நித்திரையாயிருக்கிறாள்"[17] என்றார் (லூக். 8:52; மத். 9:24; மாற். 5:39). அவர் அவ்வாறு கூறியபோது, அழுகையினால் நிறைந்திருந்த அவ்வீடு நகைப்பினால் குலுங்கிற்று (மத். 9:24; மாற். 5:40).[18] லூக்கா, "அவள் மரித்துப் போனாளென்று அவர்கள் அறிந்ததினால், அவரைப் பார்த்து நகைத்தார் கள்" என்று கூறினார் (8:53). தொழில்முறைப் புலம்புபவர்களில் ஒருவருக்கு மேற்பட்டவர்கள், "அது மதியீனமானது! நான் இந்த ஆண்டில் ஐம்பது சவ அடக்கங்களில் இருந்துள்ளேன், ஒருவரைப் பார்க்கும்போதே, அவர் இறந்த நபர் என்பது எனக்குத் தெரியும்!" என்று கூறியிருப்பார் என்பதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது.

ஏளனம் செய்பவர்கள் மற்றும் அவிசுவாசிகள் ஆகியோருக்குக் கதவைக் காட்டிய பின்பு (மாற். 5:40அ), கிறிஸ்து யவீருவையும் அவரது மனைவியை யும், தமது மூன்று சீஷர்களுடன் - பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோருடன் (மாற். 5:37) - பிள்ளையின் உடல் கிடத்தப்பட்டிருந்த அறைக்கு அழைத்துச் சென்றார். பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோர் அப்போஸ்தலர்களில் "உள்வட்டத்தினர்" என்று அழைக்கப்பட்டுள்ளார் கள். இவர்களை சிறப்புக் கவனிப்பிற்காக இயேசு தனியே அழைத்ததாக பதிவு செய்யப்பட்ட மூன்று சந்தர்ப்பங்களில் இதுவே முதன்முறையாக இருந்தது.[19]

பின்வரும் நாடகம் போன்ற காட்சியை உங்கள் மனதில் சித்தரியுங்கள்: சிறுமியின் உயிரற்ற உடல் இருந்த இடத்திற்கு நடந்து சென்ற கிறிஸ்து, ஏற்கனவே மரணத்தினால் குளிர்ந்திருந்த அவளது கையைப் பிடித்தார். அவர் மென்மையாக, "தலீத்தாகூமி!" - "சிறு பெண்ணே எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன்'' என்று அர்த்தப்படும் அரமாயிக் மொழி வார்த்தைகளைக் கூறினார் (மாற். 5:41). அவ்வார்த்தைகள் எளிமையான வைகளாக, காலையில் ஒரு சிறுமியை எழுப்புவதற்கு ஒருவர் பயன் படுத்தும் வார்த்தைகளாக இருந்தன.[20]

உடனடியாக, அந்தச் சிறுமியின் "உயிர் திரும்ப வந்தது" (லூக். 8:55).[21] அவளது கண்கள் படபடப்புடன் திறப்பதை உங்களால் காண முடிகிறதா? அவளது பெற்றோர்களின் நிம்மதிப் பெருமூச்சை உங்களால் கேட்க முடிகிறதா? மாற்கு 5:42 வசனம், "உடனே, சிறுபெண் எழுந்து நடக்கத் தொடங்கினாள்" என்று கூறுகிறது.[22] அவள் தனது தாய் மற்றும் தந்தையின் கைகளுக்குள் ஓடிச் சேர்ந்ததை உங்களால் காண முடிகிறதா? இயேசு புன்னகை புரிவதையும், பதற்றத்துடன் இருந்த அவளது தாயிடம், அவளது மகளுக்கு உணவு தயாரித்துக் கொடுக்கும்படியும் கூறியதை நீங்கள் சித்தரிக்க முடிகிறதா (மாற். 5:43; லூக். 8:55)?[23]

பரிசேயர்களின் வளர்ந்துகொண்டிருந்த பகைமை உணர்ச்சியின் காரணமாக, இது ஒரு தனிப்பட்ட விஷயமாயிருக்க வேண்டும் என்று இயேசு விரும்பியிருந்தார். அவர் திருமதி மற்றும் திரு. யவீருக்கு, "அதை ஒருவருக்கும் அறிவியாதபடி ... உறுதியாகக் கட்டளையிட்டார்" (மாற். 5:43; லூக். 8:56ஐக் காணவும்) - ஆனால், வழக்கம்போலவே, விரைவிலேயே இந்த நிகழ்ச்சி பற்றிய செய்தியானது "அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று" (மத். 9:26).

*ஆயினும், உற்றுப்பார்க்கும் ஒரு தந்தை கண்ணோக்கிய நிலையில், பிரம்மித்து நின்ற ஒரு தாய் தன் மகளை உணவு உண்ணும்படி வற்புறுத்திய காட்சியையே நான் உங்களுக்கு விட்டுச் செல்ல விரும்புகின்றேன். "யவீருவே, நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா?" என்று நீங்கள் அந்த மனிதரிடம் கேட்பீர்களாயின், "ஆம்!" என்பதே மீண்டும் ஒலிக்கும் பதிலாக இருக்கும்.*

## *"பார்வையற்ற மனிதர்களே, நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா?" (மத். 9:27-34)*

***உடல் ரீதியாகப் பார்வையற்றவர்களின் விசுவாசம் (வ. 27-31)***

*மத்தேயு சுவிசேஷத்தின்படி, இயேசு யவீருவின் வீட்டை விட்டுப் புறப்படுகையில், பார்வையற்ற இரு மனிதர்கள், "தாவீதின் குமாரனே,[24] எங்களுக்கு இரங்கும்" (வ. 27) என்று சத்தமிட்டுக்கொண்டே அவரைப் பின் தொடர்ந்தார்கள். அவர்கள் அவர் தங்கியிருந்த வீடு வரைக்கும்கூட அவரைப் பின்தொடர்ந்தார்கள் (வ. 28அ). கடைசியாக, கிறிஸ்து அவர்களிடம் திரும்பி, " 'இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கின்றீர்களா?' என்று கேட்டார். அதற்கு அவர்கள்: 'ஆம் விசுவாசிக்கிறோம் ஆண்டவரே' என்றார்கள். அப்பொழுது அவர்களுடைய கண்களை அவர் தொட்டு,[25] 'உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது' என்றார். உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது" (மத். 9:28ஆ-30அ). மீண்டும் ஒருமுறை, இதை யாருக்கும் சொல்ல வேண்டாம் என்று இயேசு சொன்னார் (வ. 30ஆ) - மற்றும் மீண்டும் ஒருமுறை இச்செய்தியானது எங்கும் பரவிற்று (வ. 31).*

***ஆவிக்குரிய வகையில் பார்வையற்றவர்களின் அவிசுவாசம் (வ. 32-34)***

*கிறிஸ்து வீட்டை விட்டு வெளியே வந்தபோது, அவர் திரளான கூட்டத்தாரால் உடனடியாகச் சூழ்ந்துகொள்ளப்பட்டார், மற்றும் அவர் தமது போதித்தல் மற்றும் குணமாக்கும் ஊழியத்தை மீண்டும் தொடர்ந்தார். பிசாசு பிடித்த, வாய்பேச முடியாத[26] ஒரு மனிதன் அவரிடத்தில் கொண்டுவரப்பட்டான் (வ. 32). இயேசு பிசாசைத் துரத்தின பின்பு, அம்மனிதன் பேசத்தொடங்கினான். "ஜனங்கள் ஆச்சரியப்பட்டு, 'இஸ்ரவேலில் இப்படி ஒருக்காலும் காணப்படவில்லை' என்றார்கள்" (வ. 33).*

*வழக்கம்போலவே, கர்த்தரை விமர்சனம் செய்பவர்களும் அங்கிருந்தார்கள். அவர்கள் தங்களது தேவதூஷணக் குற்றச்சாட்டை மீண்டும் கூறினார்கள்: ''இவன் பிசாசுகளின் தலைவனாலே பிசாசுகளைத் துரத்துகிறான்" (வ. 34). தப்பெண்ணமானது அவர்களின் காதுகளை மூடி, அவர்களின் இருதயங்களைப் பார்வையற்றதாக்கியிருந்தது (மத். 13:15ஐக் காணவும்). கிறிஸ்து என்ன செய்தாலும், அவர்கள் அவரை விசுவாசிக்க மறுத்து விட்டார்கள்.*

## “நாசரேத்தூர் குடிமக்களே, நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா?”

## (மத். 13:54-58; மாற். 6:1-6; லூக். 4:16-30)

*இயேசு யவீருவின் மகளைக் குணமாக்கிய பின்பு (மாற். 5:37-43), விரைவிலேயே அவர் தாம் வளர்ந்த ஊரான நாசரேத்தூருக்குச் சென்றார் (மாற். 6:1). இது அநேகமாக, கலிலேயாவில் அவரது மூன்றாம் பயணத்தில் முதல் நிறுத்தமாக இருந்திருக்கலாம்[27] (மாற். 6:6; மத். 9:35ஐக் காணவும்).*

*கலிலேய ஊழியத்தின்போது நாசரேத்தூர் அல்ல ஆனால் கப்பர் நகூம்தான் இயேசுவின் தலைமையகமாகச் செயல்பட்டது என்பது ஏன் என்று விளக்குவதற்காக, லூக்கா தமது சுவிசேஷ விவரத்தில் இதற்கு முன்பே, நாசரேத்தூரில் கிறிஸ்து புறக்கணிக்கப்பட்டது பற்றி எழுதினார் என்பது உறுதி (லூக். 4:16-31ஐக் காணவும்). ஆகையால், பல எழுத்தாளர்கள், இயேசு நாசரேத்தூரில் இருமுறை புறக்கணிக்கப்பட்டார் என்று நம்புகின்றார்கள்: அவரது கலிலேய ஊழியத்தின் தொடக்கத்திலும், அந்த ஊழியத்தின் முடிவுக்கு அண்மையிலும் அவ்வாறு அவர் புறக்கணிக்கப்பட்டார். அதுவே விஷயமாக இருக்கலாம்,[28] ஆனால் மத்தேயு மற்றும் மாற்கு ஆகியோரின் சுவிசேஷ விவரங்கள் லூக்காவின் சுவிசேஷ விவரத்தை நிறைவாக்கும் கருத்தளிப்பதாக எனக்குக் காணப்படுகிறது: அவை ஒவ்வொன்றிலும், இயேசு ஜெப ஆலயத்திற்குச் சென்று அங்கு போதிக்கத் தொடங்கினார் (மத். 13:54; மாற். 6:2; லூக். 4:16-21). அவை ஒவ்வொன்றிலும், மக்கள் முதலில் அவரது வார்த்தைகளினால் மனம் ஈர்க்கப்பட்டார்கள் (மத். 13:54; மாற். 6:2; லூக். 4:22) மற்றும் பின்பு அவர் (பொழிப்புரையாகக் கூறுவதென்றால்) ஒரு “உள்ளூர்ப் பையனாக”வே இருந்தார் என்பதால் அவரது மனதைப் புண்படுத்தினார்கள் (மத். 13:55-57; மாற். 6:3, 4; லூக். 4:22 ஆகியவற்றைக் காணவும்). மத்தேயுவும் மாற்குவும், லூக்கா தராத விவரங்களைத் தருகின்றார்கள் என்பது உண்மையே, அதே வேளையில் மத்தேயு மற்றும் மாற்கு சுவிசேஷங்களில் காணப்படாத தகவலை லூக்கா அளிக்கின்றார்; ஆனால் இந்த விவரமானது முரண்பாடாக இருப்பதில்லை - இவை ஒன்றுக்கொன்று நிறைவாக்குபவைகளாகவே உள்ளன.*

*எவ்வகையிலும், இம்மூன்று சுவிசேஷ விவரங்களும் ஒன்றுகூட்டிப் படிக்கப்பட்டால் பயன்தரப் போதுமான அளவுக்கு ஒன்றுபோல் உள்ளன. இந்த நிகழ்ச்சியானது இப்புத்தகத்தில் அடுத்துத் தொடர்ந்து வரும் பிரசங்கத்தில் ஓரளவுக்குக் கூறி முடிக்கப்பட்டுள்ளது, ஆனால் இவ்வேளையில் ஒரு சில குறிப்புகள் - விசேஷமாக, விசுவாசத்தின் முக்கியத்துவம் பற்றிய நமது ஆய்வுக்கருத்திற்குத் தொடர்புடைய சில குறிப்புகள் - அவசியமாகின்றன.*

### *விசுவாசம் சாத்தியமாகுதல் (மத். 13:54; மாற். 6:1, 2; லூக். 4:16-22)*

*இயேசு தாம் வளர்ந்த ஊரான நாசரேத்தூருக்குத் திரும்பி வந்து, ஜெப ஆலய ஆராதனையொன்றில் கலந்துகொண்டார்.[29] பங்கேற்பதற்கு அவருக்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டபோது, அவர் ஏசாயா 61ல் இருந்து வாசித்தார், இது மேசியாவின் வருகையைக் குறித்த மாபெரும் தீர்க்க*

தரிசனக் கூற்றாக இருந்தது. பின்பு அவர், "உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று" என்றார் (லூக். 4:21). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், தீர்க்கதரிசியானவரால் உரைக்கப்பட்டவர் தாமே என்று அவர் உரிமைகோரினார்.

***விசுவாசம் புறக்கணிக்கப்பட்டது***
***(மத். 13:54-58; மாற். 6:2-6; லூக். 4:22-30)***

பதில்செய்கையானது கலவையாக இருந்தது. அவரது உரையைக் கேட்டவர்கள், தங்கள் "உள்ளூர்ப் பையன் பெரிய காரியத்தைச் செய்திருந்ததற்காக" பெருமைப்பட்டார்கள், அதே வேளையில், அவரது உரிமை கோருதல் அவர்களை கோபவெறி கொள்ளும்படி தாக்கிற்று. அவர்களின் சிந்தைகளில் கடந்து சென்றிருக்கும் எண்ணங்களின் வகை பற்றி கற்பனை செய்வது கடினமானதல்ல: "இவன் ஒரு குழந்தையாக இருந்தபோது, என் பிள்ளையுடன் விளையாடினான்! இவன் தன்னை யார் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றான்?" NASBயில் "அவர் தங்களை மனம்புண்படச் செய்தார் என்று அவர்கள் எடுத்துக்கொண்டார்கள்" என்றுள்ளது (மத். 13:57). The New Century Version[30] என்ற வேதாகமத்தில் "மக்கள் இயேசுவின் கூற்றினால் அதிர்ச்சி/கலக்கம் அடைந்தார்கள்" என்றுள்ளது.

பதினாறு அல்லது அதற்குக் குறைவான மைல்கள் தொலைவில் இருந்த கப்பர்நகூமில், அவர் செய்த வியப்புக்குரிய விஷயங்களை அவர்கள் அறிந்திருந்தார்கள், தங்களுக்கும் அவர் வியப்பூட்டும் விஷயங்களைச் செய்ய வேண்டும் என்று விரும்பினார்கள் (லூக். 4:23ஐக் காணவும்). அவர்கள் பரிசேயர்களைப் போலவே "ஒரு அடையாளத்தை" விரும்பினார்கள் (மத். 12:38-42ஐக் காணவும்). அவர்களின் விருப்பமானது விசுவாசத்தின் அடையாளக் குறிப்பாயிராமல் அவிசுவாசத்தின் அடையாளக் குறிப்பாக இருந்தது. கிறிஸ்து நாசரேத்தூரில் சில அற்புதங்களை நிகழ்த்தினார் - "அங்கே அவர் சில நோயாளிகள்மேல் கைகளை வைத்து, அவர்களைக் குணமாக்கி[னார்]" (மாற். 6:5)[31] - ஆனால் "அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை" (மத். 13:58).

மக்கள் கும்பலாகி இயேசுவைக் கொல்லும்படி தொடர்ந்து முயற்சித்தபோது, இயேசு அவர்களிடத்தில், தீர்க்கதரிசிக்குத் தமது சொந்த நாட்டில்/ஊரில் மதிப்புத் தரப்படுவதில்லை என்று கவலையுடன் கூறினார் (மத். 13:57; மாற். 6:4; யோவா. 4:44ஐக் காணவும்). இந்த மக்களை இயேசு அறிந்திருந்தார். இவர்களில் பலருடன் அவர் வளர்ந்திருந்தார், அவர்களுடன் வாழ்ந்திருந்தார், அவர்களுடன் வேலை செய்திருந்தார், அவர்களுக்கு உதவி செய்திருந்தார். அவர்களை அவர் நேசித்திருந்தார். அவர்கள் அவரில் விசுவாசிக்க மறுத்தார்கள் என்பது அவரது இருதயத்தை உடைந்துபோகச் செய்திருக்கும். NASB வேதாகமம், "அவர்களின் அவிசுவாசத்தைக் குறித்து அவர் ஆச்சரியப்பட்டார்" என்று கூறுகிறது (மாற். 6:6). ஒரு பொழிப்புரையானது, "அவர்கள் தம்மில் விசுவாசம் கொள்ளவில்லை என்ற உண்மையை ஏற்றுக்கொள்வது அவருக்குக் கடினமாயிருந்தது" என்று கூறுகிறது (Living Bible).

## *முடிவுரை*

*ஒரு புறத்தில், நாம் யவீருவின் விசுவாசத்தை, பெரும்பாடுள்ள பெண்ணின் விசுவாசத்தை, மற்றும் பார்வையற்ற இரு மனிதர்களின் விசுவாசத்தைக் கண்டுள்ளோம். மறுபுறத்தில், நாம் யவீருவின் வீட்டில் புலம்பிக் கொண்டிருந்தவர்களின் அவிசுவாசத்தை, பரிசேயர்களின் அவிசுவாசத்தை, மற்றும் நாசரேத்தூரின் குடிமக்களின் அவிசுவாசத்தைக் கண்டுள்ளோம். வாழ்க்கையில் பின்வரும் கேள்வியைக் காட்டிலும் முக்கியமான கேள்வி வேறு எதுவும் இருப்பதில்லை: நாம் உண்மையிலேயே இயேசுவில் விசுவாசம் கொண்டுள்ளோமா? நாம் விசுவாசம் கொண்டிராத வரையில் கர்த்தர் நமது வாழ்வை ஆசீர்வதிக்க முடியாது (மாற். 6:5ஐக் காணவும்). நாம் கிறிஸ்துவைப் பற்றிய நமது படிப்பைத் தொடருகையில், அவருக்குள் நீங்கள் கொண்டுள்ள விசுவாசம் வளர வேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன் (யோவா. 20:30, 31; ரோமர் 10:17).*

## *குறிப்புகள்*

*வழக்கம்போல, நமது பாடத்தின் ஒவ்வொரு பகுதியும் ஒரு பிரசங்கத் திற்குப் போதுமானதற்கும் அதிகமான விஷயங்களைக் கொண்டுள்ளது. நான் யவீருவின் மகளை உயிருடன் எழுப்பிய வரலாற்றிலும், "இடை நிகழ்வான அற்புதத்திலும்" பிடிபட்டிருந்தேன் என்று நீங்கள் அநேகமாகக் கூறக்கூடும். இந்த நிகழ்ச்சிகள் பற்றி நான் பிரசங்கிக்க வேண்டியிருந்தால், நான் அநேகமாக இந்தப் பிரசங்கத்தை, "இனியும் நீங்கள் பயப்படாதீர்கள்" என்று அழைப்பேன். யவீரு தனது மகளான சிறுபெண் உயிர் பிழைப்பதற் காகத் தன்னால் இயன்ற எல்லாவற்றையும் செய்திருந்தும், அவள் மரித்துப் போனாள் என்ற செய்தி வந்தபோது, அவரது [யவீருவின்] மனச்சோர்வை யும் ஏமாற்றத்தையும் நான் வலியுறுத்த விரும்புவேன். அந்த வேளையில் இயேசு, "பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு" என்று கூறினார் (மாற். 5:36; லூக். 8:50). நம்மால் முடிந்த எல்லாவற்றையும் செய்திருந்து, நாம் நமது ஆதாரமூலங்களின் முடிவில் வந்துசேர்ந்து, நமது ஜெபங்கள் பதில் அளிக்கப்படாததுபோல் காணப்பட்டு இருக்கும்போதுதான் நமக்கு விசுவாசம் மிகவும் தேவைப்படுகிறது. எனது நடைமுறைப் பயன்பாடு, "விசுவாசமுள்ளவனாக மாத்திரம் இருங்கள்" என்ற வார்த்தையைப் பற்றிக் கொண்டிருக்கலாம்: "உங்களை நேசிக்கின்ற ஒரு தேவன்மீது மாத்திரம் விசுவாசமுள்ளவர்களாய் இருங்கள்"; "சகலத்தையும் நன்மைக்கேதுவாகச் செய்ய வல்லமையுள்ள ஒரு தேவன்மீது மாத்திரம் விசுவாசமுள்ளவர்களாய் இருங்கள்"; இன்னும் இதுபோன்ற பிற.*

*பார்வையற்ற இருமனிதர்களை இயேசு குணமாக்கிய சுருக்கமான வரலாறு ஒரு பிரசங்கத்திற்கு அடிப்படையாகச் செயல்பட முடியும் - ஆனால் பார்வையற்றவரை இயேசு குணமாக்கியது பற்றிய விவரத்தை அதிக நாடகத்துவப் பாணியில் நாம் பிற்பாடு காணவிருக்கின்றோம்: அது பர்த்திமேயு மற்றும் அவரது தோழர் ஆகியவர்களை உள்ளடக்கியிருக்கும் (மத். 20:29-34; மாற். 10:46-52; லூக். 18:35-43).*

*நாசரேத்தூரில் இயேசு புறக்கணிக்கப்பட்டது பற்றிய ஒரு பிரசங்கம் இப்பாடத்தைத் தொடர்ந்து வருகிறது. இவ்வரலாறு பற்றி* "No More 'HoHum' Sundays" *என்ற தலைப்பில் ஜோ பர்னெட் அவர்கள் ஒரு பிரசங்கத்தை எழுதியுள்ளார்.*[32]

---

*குறிப்புகள்*

[1]*ஒரே கிரேக்க வார்த்தையானது சிலவேளைகளில் "நம்பிக்கை" என்றும் சில வேளைகளில் "விசுவாசம்" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* [2]*இதைப் பற்றிய ஒரு கலந்துரையாடலை "கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில் அவர்கள் எல்லாரும் ஆச்சரியப்பட்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள் என்ற பாடத்தில் காணவும்.* [3]*''ஜெப ஆலய அலுவலர்கள்'' என்பது ''ஜெப ஆலயத்தின்மேல் அதிகாரிகளாய் உள்ளவர்கள்" என்று நேரடியான அர்த்தம் தரும் கிரேக்க வார்த்தை ஒன்றிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* [4]*சுவிசேஷ விவரங்களில் "மூப்பர்" என்ற வார்த்தை சில வேளைகளில் ''முன்னோர்'' (மத். 15:2) என்பதை அர்த்தப்படுத்துகிறது, ஆனால் இது வழக்கமாக அப்பொழுது வாழ்ந்து கொண்டிருந்த யூதத்துவத் தலைவர் ஒருவரையே குறிப்பிடுகிறது. யூதத்துவ அதிகாரப் படிநிலையில், ஜெப ஆலயத்தின் மூப்பர்கள், வேதபாரகர்களைக் காட்டிலும் கீழ்ப்பட்ட தகுதி நிலையில் வைக்கப்பட்டிருந்தார்கள். "மூப்பர்" என்ற வார்த்தையானது பொதுவாக மதத்தலைவர்களைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது. இயேசு, "மூப்பர்களாலும், பிரதான ஆசாரியர்களாலும் வேதபாரகர்களாலும்" புறக்கணிக்கப்பட்டார் என்று அடிக்கடி குறிப்பிட்டார் (மத். 16:21; 21:23ஐக் காணவும்). சனதெரீன் சங்கம் சில வேளைகளில் "மூப்பர்களின் சங்கம்" (லூக். 22:66; தமிழில் இது "ஆலோசனைச் சங்கம்" என்றுள்ளது) என்று அழைக்கப்பட்டது.* [5]*ஜெப ஆலயத்தில் கீழ்நிலைப் பணியாளர் ஒருவர் "பணிவிடைக்காரர்" என்று அழைக்கப்பட்டார் (இந்தப் பாடத்தில் பிற்பாடு, லூக். 4:20ல் காணவும்).* [6]*மத்தேயு சுவிசேஷ விவரத்தில், யவீரு தனது மகள் ''இப்பொழுதுதான் மரித்துப் போனாள்'' என்று கூறினார் (மத். 9:18). இது அநேகமாக, துக்கத்தில் உள்ள ஒரு தந்தை, "நான் வீட்டை விட்டு வரும்போது அவள் ஏறக்குறைய மரித்த நிலையில் இருந்தாள், இப்போது அவள் ஏற்கனவே இறந்திருப்பாள். எனவே நாம் அவசரமாய்ச் செல்ல வேண்டும்!" என்று கூறுகின்ற விதமாயிருக்கலாம். மருத்துவர் லூக்கா, "அவள் மரண அவஸ்தையாயிருந்தாள்" என்று வலியுறுத்தினார் (லூக். 8:41).* [7]*இயேசு அநேகமாகக் கப்பர்நகூமுக்குத் திரும்பி வந்திருப்பார். "இவர் யார்?" என்ற பாடத்தில், "பாவிகளுடன் உண்ணுகின்ற இவர் யார்?'' என்ற உட்தலைப்பின் கீழ்வரும் கலந்துரையாடலை மறுகண்ணோட்டமிடவும்.* [8]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 352. [9]*"அசுத்தம்" பற்றிய அறிவிப்பு ஒரு நடைமுறைப் பக்கத்தைக் கொண்டிருந்தது: சிலவேளைகளில், சடங்காச்சாரமான ''அசுத்தம்'' என்பதை உண்டாக்கிய விஷயமானது, நோய்த் தொற்றுள்ளதாக இருந்தது. "சுத்தம்" மற்றும் "அசுத்தம்" பற்றிய பிரமாணமானது வியாதி பரவுவதைத் தடை செய்ய உதவிற்று.* [10]*உடற்கூறியல் என்பது "உயிருள்ளவற்றின் செயல்முறைகள், நடவடிக்கைகள் மற்றும் செயல் வகைகள் ஆகியவற்றைப் பற்றிய உயிரியல் விஞ்ஞானம் ஆகும்"* (*American Heritage Dictionary,* 4th ed. [2001], s.v. "physiology"). *முதல் நூற்றாண்டில்,*

*உடற்கூறியல் பற்றிய அறிவானது மிகவும் அடிப்படையானதாக இருந்தது.*

[11]"The fringe" *(ஓரம்) என்பது நியாயப்பிரமாணத்தைப் பற்றி மக்களுக்கு நினைவூட்டுவதற்கான குஞ்சங்களில் ஒன்றாக இருந்திருக்கலாம் (உபா. 22:12).* KJV*யில்* "the hem of his garment" [*தமிழில் "வஸ்திரத்தின் ஓரம்"*] *என்றுள்ளது, இது பின்வரும் பேச்சு வழக்குச் சொற்றொடராயிற்று: "வஸ்திரத்தின் ஓரத்தைத் தொடுதல்" என்பது, தனிநபர் ஒருவர் சில தலைப்புகளை விளக்க அல்லது சில இலக்குகளைச் சாதிக்கத் தொடங்கி மட்டும் இருக்கின்றார் என்று சுட்டிக் காண்பிக்கிறது.* [12]*இது அவருக்கு அவ்வப்போது இளைப்பாறுதல் தேவைப்பட்டது ஏன் என்பதையும், ஜெபம் அவருக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது ஏன் என்பதையும் விளக்க உதவலாம்.* [13]*இதற்கு யோவான் 6:5, 6ல் ஒரு உதாரணம் உள்ளது.* [14]*இவள் யாரையேனும் தொட்டது என்பது அவர்களையும் "அசுத்தமாக்கியிருக்கும்" என்பதை அறிந்திருந்தாள் என்பதும் கூட இவளைப் பயமடையச் செய்திருக்கலாம் (லேவி. 15:19). ரபீக்கள் இவளைக் கண்டனம் செய்திருக்கலாம், ஆனால் இயேசு அவ்வாறு செய்யவில்லை.* [15]*அந்தப்பெண் வியாதிப்பட்டு "மட்டும்" இருந்திருந்தால், "நலமாவாள்" என்பதே எதிர்பார்க்கப்பட்ட சொல் விளக்கமாக இருந்திருக்கும். மரித்தோரில் இருந்து எழுப்புதல் என்பது நோயாளிகளைக் குணமாக்குதல் போன்ற அற்புதத்துடன் வகைப்படுத்த வேண்டிய அற்புதமே என்பதை நான் மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகின்றேன். அற்புதமாகக் குணமாக்க முடியும் என்று உரிமைகோருகின்றவர்கள் தங்கள் உரிமைகோருதலை, மரித்தவர்களை உயிருடன் எழுப்புவதினால் பலப்படுத்தவும் ஆயத்தமாயிருக்க வேண்டும்.* [16]*ஏழைகளும் கூட, குறைந்தபட்சம் ஒரு அழுகின்ற பெண்ணையாவது மரணநேரங்களில் கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டார்கள்.* [17]*"நித்திரை" என்பது மரணம் என்பதற்கான பொதுவான மங்கல வழக்கு சொல்லாக உள்ளது (யோவா. 11:11-14ஐக் காணவும்).* "Cemetery" *என்ற வார்த்தையானது "தூங்கும் இடம்" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது.* [18]*சிரிப்பு என்பது ஏளனம் செய்தல் மற்றும் எரிச்சலைத் தெரிவித்தல் என்பதாக இருந்திருக்கும். இயேசுவின் கூற்றுக்கு தொழில்முறை புலம்புபவர்களிடமிருந்து வந்த பதில்செயலின் ஒரு பகுதி, அவர்களுக்கு ஊதியம் அளிக்கப்பட மாட்டாதோ என்ற பயத்தினால் ஏற்பட்டதாயிருக்கலாம்.* [19]*மறுரூபமடைதல் மற்றும் கெத்சமெனே தோட்டம் ஆகியவை மற்ற இரு வேளைகளாயிருந்தன (மத். 17:1; மாற். 14:33). இந்த மூவர் இயேசுவுக்கு விசேஷித்தவர்களாய் இருந்தது ஏன் என்று நமக்குத் தெரியாது. ஒருவேளை இது அவர்களின் எதிர்காலப் பணிப்பொறுப்பினிமித்தமாக இப்படி இருந்திருக்கலாம்: பேதுரு, ஆதி சபையில் முன்னோடி நடத்துனராக இருந்தார்; யாக்கோபு முதல் இரத்தசாட்சியாக மரணம் அடைந்தார்; நாம் அறிந்துள்ள வரையில், யோவான் வேறு எந்த அப்போஸ்தலரைப் பார்க்கிலும் அதிகமாக தமது ஊழியத்தைத் தொடர்ந்தார். இந்த மூவரும் அவரை [இயேசுவை] முதன்முதலாக விசுவாசித்தவர்களாயிருந்தார்கள்.* [20]*இந்த வாக்கியம்* McGarvey and Pendleton, *356ல் இருந்து தழுவியமைக்கப் பட்டது.*

[21]*இது மரித்தோரை இயேசு உயிருடன் எழுப்பியதாகப் பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளில் இரண்டாவதாக இருந்தது. நாயீன் நகரத்து விதவையின் மகனை உயிருடன் எழுப்பியது முதலாவது நிகழ்ச்சியாக இருந்தது (லூக். 7). லாசரு உயிருடன் எழுப்பப்பட்டது மூன்றாவது நிகழ்ச்சியாகும் (யோவா. 11).* [22]*சிறு பெண்பிள்ளைகளின் இயல்பை அறிந்துள்ளவன் என்ற வகையில் நான், அவள் சற்றுக் குதித்திருப்பாள் என்று கூறுகின்றேன்.* [23]*அந்தச் சிறுமி நோய்வாய்ப்பட்டபோது அநேகமாகத் தன் பசியை இழந்து போயிருப்பாள், மற்றும் அவள் சற்றுக்காலம் உணவு உண்ணாது இருந்திருக்கலாம். இது, நமக்கு நாம் செய்து கொள்ளக்கூடிய*

*விஷயங்களைத் தேவன் நமக்காகச் செய்வதில்லை என்பதற்கு அளவியல் ரீதியான விவரிப்பாக இருக்கலாம். [24]"தாவீதின் குமாரன்" என்பது 2 சாமுவேல் 7:12ன் அடிப்படையில் யூதர்களால் பயன்படுத்தப்பட்ட மேசியாத்துவப் பட்டப்பெயராக இருந்தது. [25]இயேசு சில வேளைகளில் தொட்டும் சில வேளைகளில் தொடாமலும் குணமாக்கியுள்ளார். வல்லமை என்பது செயல்முறையில் அல்ல ஆனால் அவரது நபர்த்துவத்திலேயே இருந்தது. [26]இம்மனிதன் பிசாசினால் பிடிக்கப்பட்டு இருந்ததுடன் கூட, உடல் ரீதியாக பிணியுற்று இருந்திருக்கலாம் (பேசமுடியாமையை விளைவித்ததான கேட்க முடியாத தன்மை), ஆனால் அநேகமாக இவனது ஊமைத்தன்மையானது பிசாசு பிடித்திருந்ததினால் விளைந்திருக்கும் (மாற். 9:17ஐக் காணவும்). [27]மூன்றாவது பயணத்தைப் பற்றி நாம் அடுத்த பாடத்தில் படிப்போம். [28]நாசரேத்தூருக்குத் திரும்ப வந்து அவர்களுக்கு இன்னொரு வாய்ப்புத் தருதல் என்பது இயேசுவின் பரிவிரக்கம் கொண்ட இயல்புக்குப் பொருத்தமானதாகவே இருந்திருக்கும் என்பது உறுதி. [29]லூக்கா சுவிசேஷ விவரமானது அந்தக் காலம் வரையிலும் இருந்த ஜெப ஆலய ஆராதனையின் மிகவும் முழுமையான சித்தரிப்பைத் தருகிறது. ஜெப ஆலய ஆராதனைகள் பற்றி நாம் அறிகின்றவற்றில் பெரும்பான்மையானவைகள் பல ஆண்டுகளுக்குப் பின்பு எழுதப்பட்ட ஏவுதல் பெற்றிராத ஆதார மூலங்களில் இருந்து வருகின்றன. [30]The Answer* (Dallas: Word Bibles, 1993), 980.

[31]*மாற்கு சுவிசேஷ விவரமானது, "அங்கே அவர்* [*இயேசு*] *சில நோயாளிகள் மேல் கைகளை வைத்து, அவர்களைக் குணமாக்கினதேயன்றி, வேறொரு அற்புதமும் செய்யக் கூடாமல்" என்று கூறுகிறது (மாற். 6:5). தேவன் (அல்லது இயேசு) சிலவற்றைச் செய்யக்கூடாமற்போனது என்று வேதாகமம் கூறும் எந்த வேளையிலும், "அதைச் செய்தல் என்பது அவரது சித்தம் மற்றும் தீர்மானம் ஆகியவற்றுடன் சீர்பொருந்துவதில்லை" என்று அக்கூற்று அர்த்தப்படுத்துகிறது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.* [32]Joe Barnett, *Live! With Peace, Power, and Purpose,* 20th Century Sermons Series, vol. 11 (Abilene, Tex: Biblical Research Press, 1978), 118-25.

## 37

# புறக்கணித்தலைக் கையாள்வது எப்படி

## லூக். 4:16–31, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*வரவிருந்த மேசியாவைப் பற்றிய பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனம் அவரது மகிமை, அவரது வல்லமை, மற்றும் அவர் செய்யவிருந்த அற்புதமான விஷயங்கள் ஆகியவற்றைப் பற்றிக் கூறுகிறது. இருப்பினும், உணர்வெழுச்சிமிக்க இந்த முன்னுரைத்தல்களின் மத்தியில், வினோதமான குறிப்பு ஒன்றைத் தருகிற வசனப்பகுதி ஒன்றுள்ளது: ஏசாயா 53:3, அவர் ''அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவருமாக'' இருப்பார் என்று கூறுகிறது. KJV வேதாகமம், அவர் ''மனிதர்களால் புறக்கணிக்கப்படுவார்'' என்று கூறுகிறது. மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்களினூடாக, புறக்கணிக்கப்படுதல் என்ற ஆய்வுப் பொருளாகிய நூலிழை ஓடுகிறது.*

*அந்தப் புறக்கணித்தல் பற்றிக் கிறிஸ்துவே பேசியுள்ளார். வரவிருந்தவற்றிற்கு அவர் தமது சீஷர்களைத் தயார் செய்து கொண்டிருக்கையில், ''அல்லாமலும், மனுஷகுமாரன் பல பாடுகள்பட்டு, மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்பட்டு, கொல்லப்பட்டு, மூன்று நாளைக்குப் பின்பு உயிர்த்தெழுந்திருக்க வேண்டும்'' என்று கூறினார் (மாற். 8:31). அவர், ''... அவர் அநேகம் பாடுபட்டு, இந்தச் சந்ததியினால் ஆகாதவனென்று தள்ளப்பட வேண்டியதாயிருக்கிறது'' என்று கூறினார் (லூக். 17:25).*

*புறக்கணிக்கப்பட்ட தேவனுடைய ஊழியக்காரர்களில் இயேசு முதலாமவரல்ல. எரேமியா, எசேக்கியேல் போன்ற தீர்க்கதரிசிகள் பிரசங்கிக்கும்படி கட்டளையிடப்பட்டார்கள், ஆயினும் அவர்களையும் அவர்கள் செய்திகளையும் மக்கள் புறக்கணிப்பார்கள் என்றும் அவர்களுக்குக் கூறப்பட்டது. இதனுடன் அவர்கள் போராடினார்கள். மீண்டும் மீண்டுமாக எரேமியா உண்மையில், ''நான் எனது ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய விரும்புகின்றேன்!'' என்று கூறினார்.[1]*

*நம்மில் பெரும்பான்மையானோரின் விருப்பப்படாத விஷயங்கள் எல்லாவற்றிலும், புறக்கணிக்கப்படுதல் என்பது பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.[2] நான் ஒரு சிறுவனாக இருந்தபோது, பல்வகையான உற்பத்திப் பொருட்களை அவற்றின் உற்பத்தியாளர்களால் அளிக்கப்படும் பரிசுகளைப் பெற்றுக் கொள்வதற்காக, வீடுவீடாகச் சென்று விற்றேன். நான்*

மருந்து எண்ணெய், விதைகள், வாழ்த்து அட்டைகள் மற்றும் வீடு பராமரிப்பு பற்றிய பத்திரிகைகள் ஆகியவற்றை விற்றேன். இந்த விற்பனையின்போது, “வேண்டாம்” என்று சொல்லப்படுவதுதான் மிகவும் கடினமான பகுதியாக இருந்தது. கதவருகில் நடந்துசென்று, படபடக்கும் குரலில், “நீங்கள் இதை வாங்கவிரும்புவதில்லையா?” என்று கூறுவதே எனது அடிப்படையான அணுகுமுறையாக இருந்தது. புறக்கணித்தலை நான் வெறுக்கின்றேன்.

நான் மீண்டும் முப்பது அல்லது நாற்பது வயதுள்ளவனாயிருத்தல் பற்றிப் பொருட்படுத்த மாட்டேன் ஆனால் நான் மீண்டும் என் வாலிபப் பிராயத்திற்குத் திரும்புவதற்குப் போதுமானதை உங்களால் எனக்குச் செலுத்த இயலாது ... ஏனென்றால், வாலிபப் பிராயத்துப் பையன்கள் வாலிபப் பெண்களிடம் தங்கள் நேசத்தைக் கூற வேண்டியுள்ளது ... இது புறக்கணித்தலை வரவேற்பதாயிருக்கும். நான் எப்படியோ தைரியத்துடன் ஒரு பெண்ணிடம் அவளை விருந்துக்கு அழைத்த அந்த ஒரு வருத்தமான நிகழ்ச்சி இன்னும் என் ஞாபகத்தில் இருக்கிறது. அவள் ‘‘இல்லை’’ “முடியாது” என்று கூறிவிட்டாள். புறக்கணித்தலை நான் வெறுக்கின்றேன்.

இன்றைக்கான சத்தியம் பத்திரிக்கைக்கான என் பணிகளுடன் கூடுதலாக, நான் தன்னிச்சையாகவும் எழுதி வருகின்றேன். எழுதுவது என்பது [எனக்கு] கடினமான பணியாக இருப்பதில்லை; ஆனால் புறக்கணித்தலின் சிறு காகிதத் துண்டுகளே கடினமானவைகளாக உள்ளன - அந்தக் குளிர்வான, உணர்வற்ற சிறு காகிதத் துண்டுகள், “நீங்கள் எழுதி யுள்ளவற்றின்மீது நாங்கள் ஆர்வமாயிருக்கவில்லை” என்று கூறுகின்றன. புறக்கணித்தலை நான் வெறுக்கின்றேன்.

புறக்கணித்தலை நீங்களும் விரும்புவதில்லை என்று நான் யூகிக்கப் போகின்றேன். விற்பதைப் பற்றியோ, அல்லது ஒரு வேலைக்கு விண்ணப் பிப்பது பற்றியோ அல்லது நமது திருமண உறவினர்களுடன் நட்புறவா யிருத்தல் பற்றியோ எதைப் பற்றிப் பேசினாலும், புறக்கணிக்கப்படுதலை எவரொருவரும் விரும்புவதில்லை. உங்களில் சிலர், உங்கள் பெற்றோரால் அல்லது உங்கள் வாழ்க்கைத் துணையால் அல்லது உங்கள் பிள்ளைகளால் புறக்கணிக்கப்படுதல் என்றால் எப்படியிருக்கும் என்பதை அறிந்திருக்க லாம். புறக்கணிக்கப்படுதல் என்பது வேதனைமிகுந்ததாக உள்ளது, அல்லவா?

லூக்கா 4:16-31ல், இயேசு தமது சொந்த ஊரான நாசரேத்தூரில் புறக்கணிக்கப்பட்டது பற்றிய வரலாற்றை நாம் காண்கின்றோம். 1955ம் ஆண்டில், ஒக்லஹாமாவில் உள்ள லோன் வுல்ஃப் என்ற இடத்தில் எனது முதல் சுவிசேஷக் கூட்டம் நடைபெற்றது. நான் வளர்ந்துகொண்டிருந்த காலத்தில், எங்கள் குடும்பமானது பல இடங்களில் மாற்றி மாற்றி வாழ்ந்து கொண்டிருந்தது, ஆனால் நான் ஐந்து ஆண்டுகள் அளவாக, லோன் வுல்ஃப் என்ற இடத்தில் பள்ளியில் பயின்றேன். எனது சிறு வயதுப் பருவத்துச் சொந்த ஊர் என்று எந்த ஊராவது தகுதிப்படுத்துப்படுமென்றால், அது லோன் வுல்ஃப் என்ற ஊராகவே இருக்கும். லோன் வுல்ஃப் என்ற ஊரில் நான் எனது தொடக்க காலப் பிரசங்க முயற்சிகளுடன் போராடிக்

*கொண்டிருக்கையில், அங்கிருந்த கிறிஸ்தவர்கள் எனக்கு மிகவும் ஆதரவு அளித்தார்கள் - ஆனால், அவர்கள் என்னைப் புறக்கணித்திருந்தால், என்ன நடந்திருக்கும்? ஒருவேளை இன்றைக்கு நான் பிரசங்கித்துக் கொண்டிருக்க மாட்டேன். இயேசு தமது "சொந்த ஊருக்கு" பிரசங்கிக்கச் சென்றபோது, அவர் புறக்கணிக்கப்பட்டார். ஒரு வகையில், நாசரேத்தூரில் இயேசு புறக்கணிக்கப்பட்ட விஷயமானது, அவர் யூத மக்களால் கடைசியில் புறக்கணிக்கப்படுவார் என்பதற்கு முன்கண்ணோட்டமாக இருந்தது.*

*கிறிஸ்து புறக்கணிக்கப்பட்டது பற்றிய வரலாறு, ஒப்பீட்டு சுவிசேஷங்கள் மூன்றிலும் காணப்படுகின்றது.[3] இவற்றில் முழுமையான விவரங்களைக் கொண்டுள்ள லூக்கா சுவிசேஷத்தை, நான் அடிப்படையாகப் பயன்படுத்துவேன். முதலில் நாம் இவ்வரலாற்றிலிருந்து எதைப் பெறக்கூடும் என்று காண்பதற்கு இதைப் பொதுவாகப் படிப்போம். பின்பு நான் பின்வரும் குறிப்பான கேள்வியைக் கேட்க விரும்புகின்றேன்: "அந்தப் புறக்கணித்தலை இயேசு கையாளவும் தொடர்ந்து செல்லவும் முடிந்தது எவ்வாறு?"*

## இயேசு புறக்கணிக்கப்படுதல்

*நமது வேதபாடப்பகுதி, "தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு அவர் வந்து" என்று தொடங்குகிறது (வ. 16அ). நாசரேத்து என்பது இயேசு வளர்ந்த ஒரு சிறு ஊராயிருந்தது.[4] அது எருசலேமுக்கு வடக்கே, கலிலேயா மாகாணத்தில், யோர்தான் நதிக்கும் மத்திய தரைக்கடலுக்கும் ஏறக்குறைய நடுவில் இருந்தது.*

*"... தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெப ஆலயத்தில் பிரவேசித்து" (வ. 16ஆ). ஒவ்வொரு ஓய்வுநாளிலும் ஜெப ஆலயத்திற்குச் செல்லுதல் என்பது கிறிஸ்துவின் வழக்கமாயிருந்தது.* The New Century Version *என்ற வேதாகமத்தில், "அவர் எப்பொழுதும் செய்தது போலவே ஜெப ஆலயத்திற்குச் சென்றார்" என்றுள்ளது. ஆராதனைக்கு விசுவாச நிறைவுடன் செல்லுதல் என்பது ஒரு பழக்கமாக இருப்பது மட்டுமின்றி, நாம் மேற்கொள்வதற்கான ஒரு நல்ல பழக்கமாகவும் உள்ளது.*

*பிற்காலத்திய ரபீத்துவ எழுத்துக்களில் இருந்து நாம், ஜெப ஆலய ஆராதனைகள் பற்றிச் சிலவற்றை அறிகின்றோம். எல்லாரும் சேர்ந்து ஷேமாவை (உபா. 6:4-9ல் இருந்து[5]) மனப்பாடமாக உச்சரிப்பதுடன் ஆராதனை தொடங்கும். பல ஜெபங்களுக்குப் பின்பு, நியாயப்பிரமாணத்திலிருந்து ஒரு பகுதி வாசிக்கப்படும். அடுத்ததாக தீர்க்கதரிசனங்களில் இருந்து ஒரு வாசிப்பு இருக்கும். ஊழியத்தின் அந்தப் பகுதியைச் செய்யும்படி இயேசு தாமாகவே முன்வந்தார் அல்லது அதை செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார்.*

*"... வாசிக்க எழுந்து நின்றார். அப்போது ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம் அவரிடத்தில் கொடுக்கப்பட்டது" (வ. 16இ, 17அ). அவரிடத்தில் அது "பணிவிடைக்காரனால்" (வ. 20) கையளிக்கப்பட்டிருக்கும்.* KJV*யில்* "minister" *(ஊழியர்) என்றுள்ளது;* The New Century Version *என்ற வேதாகமத்தில்* "assistant" *(உதவியாளர்) என்றுள்ளது.[6] "உதவியாளர்"*

*என்பவர் கட்டிடம் மற்றும் வேத வசனத்தின் பிரதிகள் உட்பட, கட்டிடத்தில் உள்ள பொருட்களுக்குப் பொறுப்பாளராய் இருக்கும்படி ஊதியம் கொடுத்து நியமிக்கப்பட்டிருந்த வேலையாளாக இருந்தார்.[7] இந்தப் பதவியில் இருந்த மனிதர்கள் ஆராதனை ஊழியங்களில் உதவி செய்தார்கள் மற்றும் ஓய்வுநாள் பாடசாலைகளிலும் அடிக்கடி உதவி செய்தார்கள். சில வகையில் இவர்கள் நமது உதவிக்காரர்களைப் போல் இருந்தார்கள்.*

*பணிவிடைக்காரர், "பேழை" என்று அழைக்கப்பட்ட ஒரு பெட்டியிலிருந்து ஏசாயாவின் புத்தகச் சுருளை எடுத்திருப்பார். புத்தகச் சுருள்கள் பெரியவைகளாயிருந்தன; அவைகளின் உருளைகள் மூன்று அல்லது அதற்கு அதிகமான அடிகள் நீளம் கொண்டிருந்தன. நீண்ட புத்தகமான ஏசாயாவின் புத்தகம் மட்டுமே சாதாரணமாக ஒரு சுருளில் இருக்கும். அம்மனிதர் அப்புத்தகச் சுருளை இயேசுவிடம் கையளித்தார்.*

*"அவர் புஸ்தகத்தை விரித்தபோது" (வ. 17இ) "... என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு" (வ. 19ஆ). அவர் புத்தகச் சுருளை முன்பு வாசித்து முடித்திருந்த இடம் வரும் வரைக்கும் விரித்து, தாம் எதை வாசிக்க வேண்டும் என்பதைப் பரிசோதித்தறிந்து, தாம் வாசிக்க விரும்பிய வேத வசனப்பகுதியை கண்டறியும்படி புத்தகத்தை இடது அல்லது வலது புறமாகச் சுருட்டத் தொடங்கினார். அந்த நாட்களில் அதிகாரம் அல்லது வசனப்பகுதிகளைக் கொண்டிருந்தது இல்லை. கர்த்தர், தாம் விரும்பிய வசனப்பகுதியைத் தேர்ந்தெடுப்பதற்கு, ஏசாயாவின் புத்தகத்தில் அவர் எவ்வளவு நன்கு பழக்கப்பட்டவராக இருந்திருக்க வேண்டும் என்பதை நீங்கள் ஆழ்ந்து சிந்தித்திருக்கின்றீர்களா? அவர் தாம் தேடிய பகுதியை - இன்றைய நாட்களில் ஏசாயா 61:1, 2 என்று அறியப்படும் வேத வசனப்பகுதியை - கண்டுபிடித்து அதை வாசித்தார்:*

> *கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி[8] என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார் (வ. 18, 19).[9]*

*ஏசாயா புத்தகத்தின் குறிப்பிட்ட சில பகுதிகள் மேசியாவைக் குறித்தனவா அல்லவா என்பது பற்றிச் சில கருத்து வேறுபாடு உள்ளது, ஆனால் இவ்வசனப்பகுதியைக் குறித்து அவ்வித மாறுபட்ட கருத்து எதுவும் இருப்பதில்லை. ஒவ்வொரு ரபீயும், இவ்வசனங்கள் மேசியாவைப் பற்றியே பேசின என்று நம்பினார்: மேசியா வரும்போது, தேவனுடைய ஆவியானவர் அவர்மீது இருப்பார். அவர் ஏழைகளுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பார். அவர் "சிறைப்பட்டவர்களுக்கு" விடுதலையைக் கொண்டு வருவார். "சிறைப்பட்டவர்கள்" என்பதற்கான கிரேக்க வார்த்தையானது, யுத்தத்தில் சிறைப்பிடிக்கப்பட்டவர்களை விவரிக்கப் பயன்படுத்தப்பட்ட*

*வார்த்தையாக இருந்தது. அவர் பார்வையற்றவர்களுக்குப் பார்வையை மீட்டுத் தருவார்.*

*மேசியாவின் ஊழியம் பற்றிய இந்தப் பட்டியலை நீங்கள் வாசிக்கையில், முதலில் இந்தச் சொற்றொடர்களை அவற்றின் நேரடியான கருத்தில் நினைத்துப் பாருங்கள் - ஏனென்றால் இங்கு குறிப்பிடப்பட்ட வழிவகைகளில் மனிதர்களுக்கு இயேசு நேரடியாகவே உதவி செய்தார். பின்பு இவற்றை ஆவிக்குரிய கருத்தில் நினைத்துப் பாருங்கள். "சிறைப்பட்டவர்களுக்கு" விடுதலையைக் கொண்டு வருவார் என்ற மேசியாவைப் பற்றிய குறிப்பானது, சாத்தானால் சிறைப்பட்டவர்களைக் குறிப்பதற்கு விசேஷித்த தனிச்சிறப்பு கொண்டுள்ளது. அது போலவே, உடல் ரீதியாகப் பார்வையற்று இருந்தவர்களை மட்டுமின்றி, ஆவிக்குரிய வகையில் பார்வையற்றிருந்தவர்களையும் இயேசு குணமாக்கினார்.*

*வேதபாடத்தின் அடுத்த பகுதி ஆர்வமுள்ளதாக இருக்கிறது: மேசியா, "நொறுங்குண்டவர்களை விடுதலையாக்குவார்." இந்தச் சொற்றொடர் ஏசாயா 61:1, 2ல் இருந்து வருவதற்குப் பதிலாக, 58:6ல் இருந்து வருகிறது. இயேசு இவ்விடத்தில் சற்று நிறுத்தி, இந்தக் குறிப்பு வரையிலும் புத்தகச் சுருளைப் பின்னாகச் சுருட்டி, இதை வாசித்து, பின்பு நாம் அதிகாரம் 61 என்று அறிகிற பகுதிக்கு மீண்டும் முன்னோக்கி வந்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. இதைச் செய்வதற்கு, இயேசுவுக்கு ஏசாயாவின் புத்தகம் எவ்வளவு நன்கு பழக்கப்பட்டதாக இருந்திருக்க வேண்டும் என்பதை மீண்டும் சிந்தித்துப் பாருங்கள்.*

*ஏசாயா 61ல் உள்ள வசனப்பகுதியானது, மேசியா "கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்துவார்" என்ற வாக்குத்தத்தத்துடன் முடிவடைந்தது (லூக். 4:19). "கர்த்தருடைய அநுக்கிரக வருஷம்" என்ற சொற்றொடர், ஒரு நாட்காட்டி ஆண்டைக் குறிப்பதில்லை, ஆனால் அதற்கு மாறாக, ஒவ்வொரு விஷயமும் நேராக்கப்படும் ஒரு காலத்தைக் குறித்தது.*

*"கர்த்தருடைய அநுக்கிரக வருஷம்" என்ற கருத்து, யூபிலி ஆண்டு பற்றிய பழைய ஏற்பாட்டுப் போதனையின் அடிப்படையில் அமைந்திருக்கலாம்.[10] யூதர்கள் ஏழு ஆண்டுகளின் சுழற்சியின்படி இயங்க வேண்டியவர்களாய் இருந்தார்கள். ஒவ்வொரு ஏழாவது ஆண்டும், நிலமானது வெறுமையாக ஓய்ந்திருக்கும்படி விட்டுவிடப்பட வேண்டும். ஏழு ஆண்டுகளின் ஏழு சுழற்சிகளுக்குப் பின்பு - வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், நாற்பத்தி ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்பு - வரும் அடுத்த ஆண்டான, ஐம்பதாம் ஆண்டு, யூபிலி ஆண்டாக இருக்க வேண்டியது. அந்த ஆண்டில், கடன்கள் இரத்துச் செய்யப்பட வேண்டும், அடிமைகள் விடுதலையாக்கப்பட வேண்டும், மற்றும் காணியாட்சி நிலங்கள் தொடக்கத்தில் பிரித்துத் தரப்பட்டிருந்த குடும்பங்களுக்கு மீண்டும் ஒப்படைக்கப்பட வேண்டும். யூபிலி ஆண்டு என்பது மக்கள் [தங்கள் செயல்பாடுகளை] மீண்டும் தொடங்கும் ஆண்டாக இருந்தது. ஏழு ஆண்டு சுழற்சிகள் மற்றும் யூபிலி ஆண்டு ஆகியவை பற்றிய இந்த அறிவுறுத்துதல்களை யூதர்கள் எந்த அளவுக்குக் கடைப்பிடித்தார்கள் என்பது நமக்குத்*

*தெரியாது, ஆனால், மேசியா வந்து எல்லாவற்றையும் சரியாக்கும் ''ஆண்டினை'' அவர்கள் எதிர்நோக்கியிருந்தார்கள் என்பதை நாம் அறிகின்றோம்.*

*இயேசு, ஏசாயாவின் புத்தகத்திலிருந்து வாசித்து முடித்தபோது, "[அவர்] ... புஸ்தகத்தைச் சுருட்டி" (வ. 20அ); வேறுவார்த்தைகளில் சொல்லுவதென்றால், அவர் புத்தகச் சுருளைச் சுருட்டினார். அவர், "பணிவிடைக்காரனிடத்தில் [அதைக்] கொடுத்து," அவர் [பணிவிடைக் காரர்] அதை[புத்தகச் சுருளை]ப் பயபக்தியுடன் [பெட்டிக்குள்] வைத்திருப்பார்; பின்பு கர்த்தர் "உட்கார்ந்தார்" (வ. 20ஆ). (மனிதர்கள் வாசிக்க எழுந்து நின்று, போதிக்க உட்கார்ந்தார்கள்.) இயேசு, அப்பொழுது வாசிக்கப்பட்ட வசனப்பகுதிக்கு விளக்கம் தரத் தயாராயிருந்தார். "ஜெப ஆலயத்திலுள்ள எல்லாருடைய கண்களும் அவர்மேல் நோக்கமாயிருந்தது" (வ. 20இ). அவரைப் பற்றிய ஏதோ சில விஷயங்கள், அவர் வாசித்த முறைமை பற்றிய ஏதோ சில விஷயங்கள், அவர்களின் எதிர்பார்ப்பை அதிகப்படுத்தியிருந்தன. எதிர்பார்க்குதலின் காற்று சூழ்நிலை அங்கு இருந்தது. ஒவ்வொரு கண்ணும் இயேசுவின்மீது இருந்தது.*

*"அப்பொழுது அவர் அவர்களோடே பேசத் தொடங்கி, 'உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று' என்றார்" (வ. 21). உண்மையில் அவர், "இது கடந்த காலத்தில் நடந்த வற்றைப் பற்றியோ அல்லது எதிர்காலத்தில் நடக்க இருப்பவற்றைப் பற்றியோ பேசுவதில்லை. இதன் நடைமுறைப் பயன்பாடு எருசலேம் அல்லது வேறு சில இடத்தில் நடைபெறும் ஒரு நிகழ்ச்சிக்குரியதாக இருப்பதில்லை. இது இங்கேயே, இப்போதே குறிப்பிடுகிறது. இந்த வேதவசனம் இன்றைக்கு நீங்கள் கேட்க நிறைவேற்றப்பட்டுள்ளது" என்று கூறினார். எளிய சொற்றொடரில் கூறுவதென்றால், இயேசு தாம் செய்த செயலே அவ்வசனப் பகுதியின் நிறைவேற்றமாயிருந்தது என்று கூறினார் - அதாவது, தாமே மேசியா என்று அவர் கூறினார்!*

*கிறிஸ்து தமது வாழ்வில் ஏறக்குறைய முப்பது ஆண்டுகளாக நட்புறவு கொண்டிருந்த மக்களால் அந்த ஜெப ஆலயம் நிறைந்திருந்தது. அவர்களில் பலருடன் அவர் வளர்ந்திருந்தார். அவர்களை நேசிக்க அவர் கற்றிருந்தார். இது, அவர்கள் அவரை மேசியா என்று ஏற்றுக்கொண்டு, ஏசாயா எழுதி யிருந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கான அவர்களின் வாய்ப்பாக இருந்தது.*

*அவர்கள் எவ்வாறு பதில்செயல் செய்தார்கள்? முதலில் "எல்லாரும் அவருக்கு நற்சாட்சி கொடுத்து, அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டு: 'இவன் யோசேப்பின் குமாரன் அல்லவா' என்றார்கள்" (வ. 22). அவர்கள் தாங்கள் நன்கு அறிந்திருந்த பையன் மற்றும் இளைஞனைப் பற்றிப் பேசுகையில் அவர்களின் திகைப்பை என்னால் கற்பனை செய்து காணமுடிகிறது: "இவன் செய்து கொடுத்த அலமாரியொன்று என் வீட்டில் உள்ளது!"; "இவன் பழுது நீக்கிக் கொடுத்த கலப்பை ஒன்று என்னிடம் உள்ளது!"; "இன்றைக்கு இந்தப் பையன் நல்ல வேலை செய்திருக்கின்றான் அல்லவா! இவ்வளவு நன்றாகப்*

*பேச இவன் எப்படிக் கற்றுக்கொண்டான்?" பின்பு அவர்கள் சிந்தைகளில் சந்தேகம் ஏறிற்று. இவ்வரலாற்றின் இப்பகுதியைப் பற்றி மத்தேயு ஒரு விரிவான விவரத்தைக் கொடுக்கின்றார்:*

> *... அவர்கள் ஆச்சரியப்பட்டு: "இவனுக்கு இந்த ஞானமும் பலத்த செய்கைகளும் எப்படி வந்தது? இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா?[11] இவன் தாய் மரியாள் என்பவள் அல்லவா? யாக்கோபு யோசே சீமோன் யூதா என்பவர்கள் இவனுக்குச் சகோதரர் அல்லவா? இவன் சகோதரிகளெல்லாரும் நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? இப்படியிருக்க, இதெல்லாம் இவனுக்கு எப்படி வந்தது?" என்று சொல்லி, அவரைக்குறித்து இடறலடைந்தார்கள் (மத். 13:54ஆ-57அ; மாற். 6:3ஐக் காணவும்).*

*அவர்கள் மத்தியில் இயேசுவின் தொடக்க கால வாழ்வு பற்றிய உலகுசார்ந்த விவரங்கள், அவர் உண்மையில் யார் என்பதைக் காணாதபடி அவர்களைத் தடை செய்தன. அவர், அவர்களின் வீட்டு உபயோகப் பொருட்களைச் செய்து கொடுத்து அவர்களின் கருவிகளைப் பழுதுநீக்கிக் கொடுத்திருந்தார். அவர் நன்கு பேச முடிந்தது பற்றி அவர்கள் வியப்படைந்தார்கள், ஆனாலும் அவர் இன்னமும் "ஒரு உள்ளூர்ப் பையனாகவே" இருந்தார். அவர்கள் "இடறலடைந்தார்கள்," அவமானமடைந்தார்கள், கலக்கமடைந்தார்கள். "அவிசுவாசம்" என்பதே அவர்களின் பிரச்சனையாக இருந்தது என்று மத்தேயுவும் மாற்குவும் நமக்குக் கூறுகின்றார்கள் (மத். 13:58; மாற். 6:6). அவர்கள் கர்த்தரைப் பின்பற்றுவதற்கு வாய்ப்பை கொண்டிருந்தார்கள், ஆனால் அவர்கள் விசுவாசிக்க மறுத்தார்கள்.*

*அவர்களின் விமர்சனங்களை இயேசு அநேகமாகக் கேட்டிருக்கலாம். அத்துடன், அவர்களின் சிந்தனைகளை அவரால் வாசிக்க முடிந்தது (யோவா. 2:25). அவர், " 'வைத்தியனே, உன்னைத் தானே குணமாக்கிக் கொள்' என்கிற பழமொழியை ... நீங்கள் என்னுடன் சொல்லுவீர்கள்" என்பது நிச்சயம் என்று பதிலளித்தார் (லூக். 4:23ஆ, இ). அந்தப் பழமொழியானது, "எங்கள் பிரச்சனைகளைத் தீர்க்க முயற்சி செய்வதற்கு முன்பு உங்கள் சொந்தப் பிரச்சனைகளைக் கவனியுங்கள்" என்று சாதாரணமாக அர்த்தப்பட்டது. அது இவ்விடத்தில் சற்றே மாறுபட்ட கருத்துடன் பயன்படுத்தப்பட்டது. அவர்களின் சிந்தனைகளை எதிரொலிப்பதில் கிறிஸ்து தொடர்ந்து பின்வருமாறு கூறினார்: " 'கப்பர்நகூமில் உன்னால் செய்யப்பட்ட கிரியைகள் எவைகளோ அவைகளை உன் ஊராகிய இவ்விடத்திலும் செய்' என்று நீங்கள் என்னுடன் சொல்லுவீர்கள் என்பது நிச்சயம்" (வ. 23ஆ). "வைத்தியன்" பற்றிய பழமொழியானது, "நீ கப்பர் நகூமில் செய்ததுபோலவே இங்கும் அற்புதங்களைச் செய்து உன்னை ஒரு வைத்தியன் என்று நிரூபி" என்று அர்த்தப்படுத்தப் பயன்படுத்தப்பட்டது.*

*நாசரேத்தூரில் இருந்து இருபது மைல்களுக்கும் குறைவான தூரத்தில் இருந்த கப்பர்நகூமில், இயேசு செய்திருந்தவற்றை ஜெப ஆலயத்தில் இருந்தவர்கள் அறிந்திருந்தார்கள்.[12] அவர்கள் அநேகமாக அவரது பிற அற்புதங்களைப் பற்றியும் கேள்விப்பட்டிருக்கலாம் (லூக். 7:17ஐக்*

*காணவும்). கிறிஸ்து அந்த மாகாணத்தில் பயணம் செய்து கொண்டிருக்கையில் அவரைக் காணவும் அவர் உரைத்தவற்றைக் கேட்கவும் எண்ணற்ற வாய்ப்புக்களைப் பெற்றிருந்து இருப்பார்கள் (லூக். 8:1ஐக் காணவும்).[13] இதில் எதுவும் போதுமானதாக இருக்கவில்லை. அவர்கள் ஒரு விசேஷித்த அடையாளத்தை, தாங்கள் பார்க்க தங்களுக்காக மாத்திரமே ஒரு அற்புதத்தைக் கேட்டார்கள். இது விசுவாசத்தின் வெளிப்பாடாக இராமல், அவிசுவாசத்தின் வெளிப்பாடாகவே இருந்தது.*

*அவர்களிடத்தில் இயேசு, "ஆனாலும் தீர்க்கதரிசி ஒருவனும் தன் ஊரிலே அங்கீகரிக்கப்பட மாட்டான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார் (லூக். 4:24). மாற்கு சுவிசேஷத்தின்படி, "தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் இனத்திலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான்" என்றார் (மாற். 6:4). இந்தப் பழமொழி எப்போதுமே உண்மையாக இருப்பதில்லை, ஆனால் இது பொதுவாக உண்மையாக இருக்கிறது. அடிக்கடி, நாம் நமது வாழ்வு முழுவதிலும் அறிந்த நபர்களாயிருக்கும்போது, அவர்களின் சாதனைகளை ஏற்றுக்கொண்டு பாராட்டுதல் என்பது நமக்குக் கடினமானதாக உள்ளது.*

*கிறிஸ்து பின்வருமாறு தொடர்ந்து கூறினார்,*

> *அன்றியும் எலியாவின் நாட்களிலே மூன்று வருஷமும் ஆறு மாதமும் வானம் அடைபட்டு, தேசமெங்கும் மிகுந்த பஞ்சம் உண்டாயிருந்த போது, இஸ்ரவேலருக்குள் அநேகம் விதவைகள் இருந்தார்கள். ஆயினும் எலியா சீதோன் நாட்டிலுள்ள சரெப்தா ஊரிலிருந்த ஒரு விதவையினிடத்திற்கு அனுப்பப்பட்டானேயல்லாமல் மற்றொருத்தியினிடத்திற்கும் அனுப்பப்படவில்லை (லூக். 4:25, 26).*

*உண்மையில் அவர், "நான் தீர்க்கதரிசிகளின் ஆவியில் வந்திருக்கின்றேன். எலியாவின் நாட்களில், தேவன் தீர்க்கதரிசியை நாட்டிற்கு வெளியே அனுப்பியிருந்தார். எலியா யூதர்களின் விதவைகளுக்கு உதவியிருக்க முடியும், ஆனால் அதற்குப் பதிலாகத் தேவன் சரெப்தா ஊரிலிருந்த ஒரு விதவைக்கு உதவும்படிக்கு அவரை [எலியாவை] அனுப்பினார்" என்றே கூறினார்.[14]*

*கிறிஸ்து இன்னொரு விவரிப்பையும் கொடுத்தார்: "அல்லாமலும், எலிசா தீர்க்கதரிசியின் காலத்திலே இஸ்ரவேலருக்குள்ளே அநேகம் குஷ்டரோகிகள் இருந்தார்கள்; ஆயினும், சீரியா தேசத்தானாகிய நாகமானேயல்லாமல் அவர்களில் வேறொருவனும் சுத்தமாக்கப்படவில்லை" (வ. 27). எலிசா, எலியாவின் பின்வரும் பதிலாளராக இருந்தார். அவர் யூதர்களில் இருந்த பல தொழுநோயாளர்களைக் குணமாக்கியிருக்க முடியும்; அதற்குப் பதிலாக, அவர் தேவனுடைய அருளிரக்கத்தினால், புறஜாதியாரான ஒரு தொழுநோயாளரைக் குணமாக்கினார். இயேசுவின் நாட்களில், நீங்கள் ஒரு யூதரைக் கோபப்படுத்த வேண்டுமென்றால், நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், தேவன் புறஜாதியார் மீதும் அக்கறை கொண்டுள்ளார் என்று மறைமுகமாய் உணர்த்துவதேயாகும்!*

*கிறிஸ்துவின் உதாரணங்களுக்கு மக்கள் எவ்வாறு பதில்செயல்*

*செய்தார்கள்? "ஜெப ஆலயத்திலிருந்த எல்லாரும், இவைகளைக் கேட்ட பொழுது, விசுவாசத்தினால் நிறைந்தார்கள்!" என்று வேதாகமம் கூறுகிறதா? மிகவும் அரிது! [இல்லவே இல்லை!] "ஜெப ஆலயத்திலிருந்த எல்லாரும், இவைகளைக் கேட்டபோது, கோபமூண்டு" என்று வாசிக்கின்றோம் (வ. 28).*

*"அவர்கள் ஜெப ஆலய ஆராதனையில் சாதாரணமாக நல்லொழுக்கம் உடையவர்களாய்க் கூடியிருந்ததை அவர்கள் கைவிட்டு, சிந்தையற்ற கும்பலாக மாறினார்கள்."[15] "எழுந்திருந்து, அவரை ஊருக்குப் புறம்பே தள்ளி, தங்கள் ஊர் கட்டப்பட்டிருந்த செங்குத்தான மலையின் சிகரத்தி[ற்கு]க் கொண்டுபோனார்கள்" (வ. 29அ). நாசரேத்தூர், கலிலேயாவின் தெற்குப்பகுதியில் நீட்டிக்கொண்டிருந்த லீபனோனின் முகட்டில் கட்டப்பட்டிருந்தது. அந்தப்பகுதியில் இருந்த உயரமான பல இடங்கள் அவர்களின் கொலை வெறிமிக்க நோக்கத்திற்குப் பயன்பட்டிருக்கும்.*

*அவர்கள் இயேசுவை, "மலையின் சிகரத்திலிருந்து [அவரைத்] தலைகீழாய்த் தள்ளிவிடும்படிக்கு அவ்விடத்திற்குக் கொண்டு போனார்கள்" (வ. 29ஆ). தாமே மேசியா என்று அவர் மறைமுகமாக உணர்த்தியிருந்ததால், அவர்கள் ஒருவேளை அவரை தேவதூஷணத்தின் குற்றவாளி என்று தீர்ப்பிட்டிருக்கலாம், அது கல்லெறிந்து கொல்லப்பட வேண்டிய பாவமாக இருந்தது (லேவி. 24:16). பொதுவாகக் கல்லெறிதல் என்பது கல்லுகளைப் பொறுக்கி, குற்றவாளியின்மீது வீசியடிப்பதினால் நிறைவேற்றப்பட்டது. ஆயினும் சிலவேளைகளில், குற்றவாளியை மலைச் சிகரத்திலிருந்து தள்ளிவிட்டு, அவர்மீது பெருங்கற்கள் உருட்டி விடப்படுவதுண்டு. பிந்திய இந்தத் தண்டனைதான் நாசரேத்தூரின் குடிமக்களின் சிந்தையில் இருந்திருக்கும்.*

*அவர்களின் நோக்கம் எதுவாயிருப்பினும், வசனம் 30, "அவரோ அவர்கள் நடுவினின்று கடந்து போய்விட்டார்" என்று கூறுகிறது. அவர் (தேவாலயத்தைச் சுத்திகரித்தபோது காசுக்கடைக்காரர்கள் இருந்தது போன்ற நிலையில்) அவரைக் கண்டவர்கள் அதிர்ச்சியில் மூழ்கி ஒன்றும் செய்ய முடியாதவர்களாகும்படிக்கு தமது ஆளுமைத்தன்மையின் முழு செயல்தாக்கமும் காணப்படும்படி அனுமதித்தாரா?[16] அல்லது அவர் ஒரு அற்புதத்தை நிகழ்த்தினாரா? நாம் ஒருக்காலும் - குறைந்தபட்சம் இந்த வாழ்வில் - இதைப்பற்றி அறியமாட்டோம். அவரது "வேளை" இன்னும் வராதிருந்தபடியால் (யோவா. 7:30; 8:20 ஆகிய வசனங்களைக் காணவும்), அவசியமானது எதுவோ, அதை அவர் செய்தார். பின்பு அவர் நாசரேத்தூரை விட்டுப் புறப்பட்டுச் சென்றார். நாம் அறிந்த வரையில் இதுவே அங்கு அவர் வந்த கடைசி முறையாக இருந்தது.[17]*

## புறக்கணிக்கப்பட்டதை இயேசு எவ்வாறு கையாண்டார்?

*என்ன ஒரு கவலைமிகுந்த வரலாறு: இயேசு தமது சொந்த ஊரில் புறக்கணிக்கப்பட்டார்! இயேசு இதனை எவ்வாறு கையாண்டார் என்பதே*

இவ்வேளையின் கேள்வியாக உள்ளது. கிறிஸ்துவை, புறக்கணித்தல் என்பதைச் சந்திக்கவும் வெற்றிகொள்ளவும் வல்லமையுள்ளவராக்கியது எது? நமது வழியில் புறக்கணித்தல் வரும்போது, நீங்களும் நானும் அதை எவ்வாறு கையாள முடியும்? இங்கு நமது வேத பாடப்பகுதியுடன் தொடர்பான ஏழு கருத்துக்கள் உள்ளன:[18]

1. அவர் புறக்கணிக்கப்படுதலை எதிர்பார்த்திருந்த காரணத்தினால், புறக்கணிக்கப்படுதலை அவரால் கையாள முடிந்தது (மாற். 8:31; லூக். 17:25ஐக் காணவும்). அது அவரது ஊழியத்தின் ஒரு பகுதியாக இருந்தது. எதையும் சாதிக்க முயற்சி செய்யாதிருப்பது ஒன்றுதான் புறக்கணிக்கப் படுதலைத் தவிர்ப்பதற்கான ஒரே வழியாகும். நீங்கள் உங்கள் கையை ஒருபோதும் வெளியை நீட்டாதிருந்தால், உங்கள் கை ஒருக்காலும் வெட்டப்படாது - ஆனால் நீங்கள் ஒன்றையும் சென்றடையவும் முடியாது. புறக்கணிக்கப்படுதலை எதிர்பார்த்திருந்தமையானது இயேசுவை மனரீதியாக ஆயத்தப்படுத்திற்று.

2. அவர் தேவனுடன் ஒரு விசேஷித்த உறவு கொண்டிருந்த காரணத்தினால், புறக்கணிக்கப்படுதலை அவரால் கையாள முடிந்தது. அந்த உறவு ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தில் உள்ளடக்கமாய் இருந்தது: ‘‘கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார், தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்” (லூக். 4:18; அப். 10:38ஐக் காணவும்). அந்த அபிஷேகம் இயேசுவின் ஞானஸ்நானத்தின்போது நடைபெற்றது, அப்போது ஆவியானவர் அவர்மீது இறங்கி வந்தார் (லூக். 3:22). அந்த வேளையிலிருந்து, கிறிஸ்து எப்போதும் ‘‘ஆவியானவரால் நிறைந்தவராய்’’ இருந்தார் என்று லூக்கா காண்பிக் கின்றார் (4:1; வ. 14ஐக் காணவும்). அவர் தமது ஜெப வாழ்வின் மூலம் அந்த உறவைத் தொடர்ந்து புதுப்பித்துக் கொண்டார் (5:16; 6:12; 9:28; 11:1). அவர் மனிதர்களால் புறக்கணிக்கப்பட்டாலும்கூட, தேவனால் புறக் கணிக்கப்பட்டிருந்ததில்லை என்பதை அவர் எப்போதும் அறிந்திருந்தார் (2 தீமோ. 4:16, 17ஐக் காணவும்).

3. அவர் தொடர்ந்து ஜெப ஆலய ஆராதனையில் கலந்துகொண்டிருந்த காரணத்தினால், புறக்கணிக்கப்படுதலை அவரால் கையாள முடிந்தது. ஜெப ஆலயத்திற்குச் செல்வது என்பது கிறிஸ்துவின் வழக்கமாக இருந்தது என்பதை நாம் முன்பே கண்டோம். ‘‘நான் பொதுவான ஆராதனை ஊழியத்தில் கலந்துகொள்ள வேண்டியது அவசியமில்லை’’ என்று யாரேனும் ஒருவரால் உண்மை நிறைவுடன் கூற முடியுமென்றால், அவர் இயேசுவாக மட்டுமே இருக்க முடியும். இருந்தபோதிலும், வேதாகமத்தைப் படிக்கவோ அல்லது தேவனை ஆராதிக்கவோ, தேவனுடைய மக்கள் ஒன்றுகூடியபோது, அவர்களுடன் இருக்க அவர் விரும்பினார்.

அந்தக் காலத்தில் இருந்த தேவனுடைய மக்களைப் பற்றிச் சில கேள்விகளுக்கு நீங்கள் பதில் தருவதற்குப் போதுமான அளவு, கிறிஸ்துவின் வாழ்வைப் பற்றிய நமது பாடத்தில் நாம் கடந்து வந்துள்ளோம்: முழுமை யான அளவில், இஸ்ரவேல் மக்கள் தேவபக்தியுள்ளவர்களாக இருந்தார் களா? அவர்கள் நேர்மையின் மக்களாக இருந்தார்களா? அவர்கள் தேவன்

மீதான அன்பினாலும் விசுவாசத்தினாலும் நிரப்பப்பட்டிருந்தார்களா அல்லது ஆவிக்குரிய தன்மையில் குறைவுபட்டு, நலிவுற்ற நிலையில் இருந்தார்களா? "ஜெப ஆலயம் மாயக்காரர்களால் நிரம்பியிருப்பதால் நான் அங்கு செல்லமாட்டேன்" என்று இயேசு சுலபமாகக் கூறியிருக்க முடியும். "அவர்களைக் காட்டிலும் நான் மேன்மையானவனாக இருக்கின்றேன்!" என்று அவர் நேர்மையுடன் கூறியிருக்க முடியும் - ஆனால் அவர் அவ்வாறெல்லாம் கூறவில்லை. ஜெப ஆலயத்தில் ஆராதித்தவர்கள் தேவனு டன் பரிபூரணப்பட்ட உறவு கொண்டிருந்தார்கள் என்பதால் கிறிஸ்து ஜெப ஆலயத்திற்குச் செல்லவில்லை; மாறாக, அவர் தேவனுடன் தமது சொந்த உறவை மேம்படுத்திக்கொள்ள விரும்பியதாலேயே அங்கு சென்றார்.

இன்றைய நாட்களில், நாம் ஜெப ஆலயத்தில் அல்ல, ஆனால் சபை யுடன் ஆராதிக்கின்றோம் - ஆனால் இன்னமும் நமக்குக் கர்த்தருடைய எண்ணப்போக்கு அவசியமாகிறது (1 பேது. 2:21). நாம் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துவதற்காக முறைப்படி/கிரமமாக நாம் ஒன்றுகூட வேண்டியுள்ளது (எபி. 10:24, 25). நாம் உலகத்தாரால் புறக்கணிக்கப் படும்போது, கிறிஸ்துவுக்குள்ளான நமது சகோதர சகோதரிகளின் ஆதரவு நமக்கு உதவக்கூடும்.

4. *அவர் வேதவசனங்களை அறிந்திருந்த காரணத்தினால், புறக்கணிக் கப்படுதலை அவரால் கையாள முடிந்தது.* மீண்டும் ஒருமுறை, அவரை புத்தகச் சுருளை சுருட்டுபவராக, விரிப்பவராக, தாம் வாசிக்க விரும்பிய வசனப்பகுதிகளுக்குத் திருப்புபவராகச் சித்தரித்துக் காணுங்கள். இந்தக் கருத்துக்கள் எங்கு வழிநடத்துகின்றன என்பதை நீங்கள் காண்கின்றீர்களா? தேவன் நம்மைப் பெலப்படுத்துவதற்கு பல ஆதாரமூலங்களை நமக்குக் கொடுத்துள்ளார். அவர் நமக்கு, அவருடனான உறவுமுறையில் அத்தியா வசியமான ஒரு பகுதியான ஜெபத்தைக் கொடுத்துள்ளார். நாம் அவரது ஆறுதல்தரும் குரலைக் கேட்கும்படியாக வாசிப்பதற்கு அவர் நமக்கு வேதாகமத்தைக் கொடுத்துள்ளார். நாம் ஒன்றுகூடவும் ஒருவர் மற்றவரை உற்சாகப்படுத்தவும் அவர் நமக்கு வாய்ப்பைக் கொடுத்துள்ளார். துரதிர்ஷ்டவசமாக, நம்மில் பலர் பரலோகத்தின் இந்த ஆதாரமூலங்களைப் பயன்படுத்திக் கொள்ளுவதில்லை. பின்பு நாம் புறக்கணிக்கப்படும்போது, ஏன் நொறுங்கிப் போய்விடுகின்றோம் என்று வியப்படைகின்றோம்.

5. *அவர், தாம் யார் என்பதையும் தேவனுடைய திட்டத்தில் தமது இடத்தையும் அறிந்திருந்த காரணத்தினால், புறக்கணிக்கப்படுதலை அவரால் கையாள முடிந்தது.* அவரால் ஏசாயா 61ஐ வாசித்து, உண்மையில், "அது என்னைப் பற்றிப் பேசுகிறது. நான் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகின்றாரோ, அதையே நான் செய்கின்றேன்" என்று கூற முடிந்தது. தனிப்பட்ட பாதுகாப்பின்மையினால், புறக்கணிக்கப்படுதலை நம்மால் அடிக்கடி கையாள முடியாமல் போகிறது. நாம் தேவனுடைய திட்டத்தினுள் எவ்வாறு பொருந்துகின்றோம் என்பதை எப்போதுமே நம்மால் காணமுடிவதில்லை. நாம் விசேஷித்தவர்கள், நாம் தேவனுடைய மக்கள் என்பதை நாம் உணர்ந்தறிவதில்லை. நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்தால், நீங்கள் தேவனுடைய ஆணாக அல்லது தேவனுடைய

பெண்ணாக இருக்கின்றீர்கள், உங்கள் வாழ்விற்குத் தேவன் ஒரு திட்டம் கொண்டுள்ளார். அந்த சத்தியத்தைப் பற்றிக்கொண்டிருங்கள்!

6. அவர், புறக்கணிக்கப்படலாம் என்ற சூழ்நிலையிலும் சரியானதைச் செய்வதற்கு ஒப்புக்கொடுத்தலுடன் இருந்த காரணத்தினால், புறக்கணிக்கப் படுதலை அவரால் கையாள முடிந்தது. அவர் நாசரேத்தூர் மக்களுக்கு உரையாற்றியபோது, தாம் கூறவேண்டியிருந்ததை அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதற்கான தனிப்பட்ட சாத்தியக் கூற்றினை அவர் அறிந்திருக்க வேண்டியதாயிருந்தது - ஆனாலும் அவர் அதை எப்படியோ உரைத்துவிட்டார். நாம் புறக்கணிக்கப்பட்டால் மற்றும் புறக்கணிக்கப்படும்போது, நாம் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்பினாரோ, அதைச் செய்துள்ளோம் என்று அறிவதில் ஆறுதல் உள்ளது.

7. அவர், புறக்கணிக்கப்படுதல் தம்மை வெளியேறிவிடுமளவுக்கு ஊக்கம் இழக்கச் செய்வதற்கு ஒருக்காலும் அனுமதிக்காத காரணத்தினால், புறக்கணிக்கப்படுதலை அவரால் கையாள முடிந்தது. விசுவாசமற்ற பல கிறிஸ்தவர்கள் இந்தப் பாடத்திலிருந்து பயனடைய முடியும்.

உலகத்தினால் புறக்கணிக்கப்படுதல் பற்றியே நான் இந்தப் பிரசங்கத் தின் மூலம் வலியுறுத்துகின்றேன். நமது வேதபாடப் பகுதியில், இயேசு உலகத்தாரால் அல்ல ஆனால் தேவனுடைய மக்கள் என்று உரிமைகோரிக் கொண்டிருந்த ஆண்கள் மற்றும் பெண்களாலேயே புறக்கணிக்கப்பட்டார். அவர் புறக்கணிக்கப்பட்டது சந்தையில் அல்ல ஆனால் தேவனுடைய ஆராதனைக்கென்று ஒப்புக்கொடுக்கப்பட்ட ஒரு கட்டிடத்திலேயே புறக்கணிக்கப்பட்டிருந்தார்.

ஒரு காலத்தில் தங்கள் ஆராதனையிலும் கர்த்தருக்கான ஊழியத்திலும் உண்மை நிறைவுடன் இருந்த பல கிறிஸ்தவர்களை எனக்குத் தெரியும். பின்பு, மற்ற கிறிஸ்தவர்களால் அவர்கள் "உணர்வுகள் புண்படுத்தப் பட்டவர்கள்" ஆனார்கள். இதன் விளைவாக, அவர்கள் "சபையை விட்டுச் சென்றுவிட்டார்கள்." அவர்கள் இனிமேல் கர்த்தருடைய மக்களுடன் ஒன்றும் வைத்துக்கொள்ளக்கூடாது என்று சபதம் செய்துள்ளார்கள்.

தேவனுடைய மக்களால் இயேசு புறக்கணிக்கப்பட்டது மட்டுமின்றி, அவர்கள் அவரைக் கொலை செய்யவும் முயற்சி செய்தார்கள். நான் அறிந்துள்ள வரையில், நான் சந்தித்துள்ள அவிசுவாசமான கிறிஸ்தவர்கள் எவரும் சபையின் மற்ற உறுப்பினர்களால், உயிரைப் பறித்துவிடப் போவதாகப் பயமுறுத்தப்பட்டிருக்கவில்லை. இது அவருக்கு [இயேசுவுக்கு] பொது ஆராதனையில் வெறுப்பை ஏற்படுத்திற்றா? அவர் இனி ஒருக்காலும் ஜெப ஆலயத்தில் மீண்டும் ஆராதிக்கக்கூடாது என்று முடிவு செய்தாரா? அவர், "நான் அங்கிருப்பதை அவர்கள் விரும்பவில்லையென்றால், அது எனக்கு நல்லதே" என்று கூறினாரா? லூக்காவினால் பதிவுசெய்யப்பட்ட அடுத்த வரலாற்றில், கிறிஸ்து கப்பர்நகூமில் இருந்த ஜெப ஆலயத்திற்குச் சென்றார் (4:31, 33).[19] ஒரு ஜெப ஆலய ஆராதனையில் அவர் புறக்கணிக்கப் பட்ட பின்பு அவர் இன்னொரு ஜெப ஆலய ஆராதனைக்குச் சென்றார்! சரியானவற்றைச் செய்வதற்கான கர்த்தரின் உறுதிப்பாட்டை, மனித பலவீனம் எதுவும் பாதிப்பதற்கு அவர் அனுமதிக்கவில்லை.

*புறக்கணிக்கப்படுதல் உங்களை எவ்வளவோ கலக்கம் அடையச் செய்தாலும், அது உறக்கமற்ற எத்தனையோ இரவுகளை உண்டாக்கியிருந் தாலும், எந்த ஒரு மனிதரும் நீங்கள் யாராயிருக்க வேண்டுமோ அதிலிருந்தும், நீங்கள் என்ன செய்ய வேண்டுமோ அதிலிருந்தும் உங்களை ஒருக்காலும் விலக்கி வைத்து விடக்கூடாது என்று தீர்மானம் செய்து கொள்ளுங்கள். கர்த்தருக்காக அவ்விதமான ஒப்புக்கொடுத்தலின் உறுதிப் பாட்டுடன், உங்கள் வாழ்வு கொண்டுவருகிற எவ்விதப் புறக்கணிக்கப் படுதலையும் நீங்கள் கையாள முடியும். என்னுடன் சேர்ந்து பின்வருமாறு ஜெபியுங்கள்:*

> *பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே, எங்களை அழிப்பதற்கும், கிறிஸ்துவுக்குள்ளான எங்கள் சகோதரர்களையும் சகோதரிகளையும் அழிப்பதற்கும் பிசாசானவன் தன்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்கின்றான் என்று நாங்கள் புரிந்துகொண்டுள்ளோம். அவன் எங்களை ஊக்கம் இழக்கச் செய்ய முயற்சி செய்வதையும், உமது வழியிலிருந்து திரும்பும்படி எங்களைத் தூண்டுவதையும் நாங்கள் அறிகின்றோம். எங்கள் சிந்தைகளின்மீது சாத்தான் அவ்விதமான பிடியைக் கொண்டிராதபடி எங்களை நீர் பலப்படுத்தும். உம்மில் அன்புகூரவும், நீர் எங்களுக்குச் செய்துள்ளதை மதிக்கவும் எங்களுக்கு உதவும். நாங்கள் புறக்கணிக்கப்படும்போது, அது எங்களை அழிக்காத படி அல்லது எங்களைத் தடுத்து நிறுத்தாதபடி, உம்முடன் எங்களுக் குள்ள உறவைப் பெலப்படுத்தும். இயேசுவின் நாமத்திலே, ஆமென்.*

## *முடிவுரை*

*புறக்கணிக்கப்படுதலை வெற்றி கொள்வதற்கு, உங்களுக்குக் கர்த்தருடன் ஒரு விசேஷித்த உறவுமுறை தேவைப்படுகிறது. அந்த உறவுமுறை ஞானஸ்நானத்தில் தொடங்குகிறது. இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது, தேவனுடைய ஆவியானவர் இயேசுவின்மீது இறங்கி வந்தார், தேவன் அவரைத் தம்முடைய குமாரன் என்று ஒப்புக்கொண்டார்/ அறிவித்தார் (மத். 3:16, 17). நீங்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் போது, தேவன் தமது ஆவியை உங்கள் இருதயங்களுக்குள் அனுப்புகின்றார் மற்றும் அவர் உங்களைத் தமது மகன்/மகள் என்று அழைக்கின்றார் (அப். 2:38; கலா. 4:6, 7).[20] நீங்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட பின்பு, கர்த்தருக்கு உண்மையுடன் இருப்பதன்மூலம் அந்த உறவை நீங்கள் பராமரித்து காத்துக்கொள்ள வேண்டும். அந்த வழிமுறையில் மட்டுமே நீங்கள் புறக்கணிக்கப்படுதலைக் கையாளப் போதுமான பெலத்துடன் இருப்பீர்கள்.*

*நீங்கள் விசுவாசத்தினாலும் கீழ்ப்படிதலினாலும் தேவனுடைய பிள்ளையாகி இருக்கின்றீர்களா? நீங்கள் ஏற்கனவே தேவனுடைய பிள்ளையாக இருந்தால், நீங்கள் புறக்கணிக்கப்பட்ட விஷயமானது உங்களை அவிசுவாசமானவராக அல்லது கனிகொடுக்காதவராக ஆக்குமளவுக்கு ஊக்கம் இழக்கச் செய்திருக்கிறதா? இயேசு, “ஆத்துமாவைக்*

*கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்'' என்று கூறினார் (மத். 10:28). கிறிஸ்துவின் சிந்தனையை நான் ஏற்புடையதாக்குகின்ற நிலையில் இருந்தால், பின்வருவதை இத்துடன் சேர்க்க அனுமதியுங்கள்: "இவ்வாழ்வில் மட்டும் உங்களைப் புறக்கணிக்கக் கூடியவர்களுக்குப் பயப்பட வேண்டாம், நித்தியத்திற்கும் உங்களைப் புறக்கணிக்கக் கூடியவருக்கே பயப்படுங்கள்.'' நீங்கள் ஞானஸ்நானம் பெற வேண்டியிருந்தால் (கலா. 3:26, 27) அல்லது "ஆதியில் நீங்கள் கொண்டிருந்த அன்பை" மீண்டும் கட்டியெழுப்ப வேண்டியிருந்தால் (வெளி. 2:4), உங்கள் கீழ்ப்படிதலை - ஒரு கணம்கூட - தாமதப்படுத்தாதீர்கள்.*

---

*குறிப்புகள்*

*[1]எரேமியா 20:7, 8ஐக் காணவும். எரேமியாவின் புத்தகத்தில் குறைந்தபட்சம் ஐந்து "முறையீட்டுப் பகுதிகள்" உள்ளன. [2]புறக்கணிக்கப்படுதலுக்கு என்னுடைய உதாரணங்களுக்குப் பதிலாக நீங்கள் உங்கள் சொந்த உதாரணங்களைப் பயன்படுத்த விரும்பலாம். [3]மத்தேயும் மாற்குவும் மாறுபட்ட நிகழ்வைச் சித்தரிப்பதாகச் சிலர் நினைக்கின்றார்கள், ஆனால் நான், இம்மூவருமே ஒரே நிகழ்வைப் பற்றிப் பேசுகின்றார்கள் என்றே நினைக்கின்றேன். (இதற்கு முந்திய பாடத்தின் கடைசிப் பகுதியில் உள்ள கலந்துரையாடலை மறு கண்ணோட்டமிடவும்.) [4]"கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில், "கிறிஸ்து வருகின்றார்!" என்ற பாடத்திலும், "தேவன் மரியாளைத் தேர்ந்துகொண்டது ஏன்?" என்ற பிரசங்கத்திலும், நாசரேத்தூர் பற்றிய விளக்கங்களைக் காணவும். [5]Shema என்பது "காதால் கேள்" என்று அர்த்தப்படும் எபிரெய வார்த்தையாக உள்ளது, இது தன் மிகக் குறுகிய கருத்தமைவில் உபாகமம் 6:4ஐக் குறிக்கிறது. அன்றாட ஜெபத்தில் உச்சரிக்கப்படும்போது, ஷேமாவானது உபாகமம் 6:4-9 மற்றும் 11:13-21, எண்ணாகமம் 15:37-41 மற்றும் பல கூடுதலான ஆசீர்வாதங்களை உள்ளடக்குகிறது. [6]''பணிவிடைக்காரன்,'' ''ஊழியன்'' மற்றும் ''உதவியாள்'' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "கீழ்வரிசையாளர்'' என்று நேரடியாக அர்த்தப்படுகிறது. இது தோற்றப் பொருளில், பெரிய துடுப்புகளினால் வலிந்து செலுத்தப்பட்ட கப்பல்களில் கீழ்த்தளத்திலிருந்து வேலை செய்யும் துடுப்பு வலிப்பவர்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது. இது கடினமான, மதிக்கப் படாத வேலையைச் செய்த ஒருவரைக் குறிக்கப் பயன்பட்டிருந்தது. [7]இம்மனிதர் ''ஜெப ஆலயத் தலைவர்'' அல்ல (லூக். 8:41; KJV); அது வேறொரு பணிப்பதவியாயிருந்தது. ஜெப ஆலயத்தின் "அதிகாரிகள்" அல்லது "அலுவலர்கள்" பற்றிய விவரத்திற்கு "நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா?" என்ற பாடத்தின் தொடக்கப் பகுதியில் காணவும். [8]இருதயம் உடைந்தவர்களை மேசியா குணமாக்குதல் பற்றிய ஒரு சொற்றொடரை KJV கூடுதலாகக் கூறுகிறது. இது லூக்காவின் மேற்கோளை ஏசாயா 61:1க்கு மிகவும் நெருங்கி உறுதிப்படுத்துவதற்காகக் கூட்டப்பட்டிருக்கலாம். அந்தச் சொற்றொடர், லூக்கா சுவிசேஷத்தின் மூலவசனப் பிரதிகளில் காணப்படவில்லை யென்றாலும், இதுவும் மேசியா செய்ய வேண்டிய ஒரு ஊழியமாகவே இருந்தது. [9]இவ்விடத்தில் நீங்கள் சற்றே நிதானித்து, மேசியா*

*"தரித்திரர்," "சிறைப்பட்டவர்கள்," "பார்வையற்றவர்கள்," "ஒடுக்கப்பட்டவர்கள்" ஆகியோர்மீது அக்கறையாக உள்ளார் என்று குறிப்பிட விரும்பலாம். இப்படிப்பட்ட மக்கள்மீது அவர் ஆர்வம் கொண்டிருந்தார் என்ற உண்மையானது, நாமும் அவ்வாறு இருக்க வேண்டும் என்று சுட்டிக்காண்பிக்கிறது. [10]அந்த ஆண்டு பற்றிய அடிப்படைப் போதனைக்கு லேவியராகமம் 25 மற்றும் 27ம் அதிகாரங்களைக் காணவும்.*

*[11]அவர்கள், "இவன் தச்சனல்லவா? ..." (மாற். 6:3) என்று கேட்டார்கள். இயேசுவின் சட்டப்பூர்வமான தந்தை ஒரு தச்சராக இருந்தார் என்பதோடு, அவரும் (இயேசுவும்) தாமே அத்தொழிலைக் கற்றுக்கொண்டார். [12]கப்பர்நகூம் நாசரேத்தூரின் வடகிழக்குப் பகுதியில் இருந்தது. இக்குறிப்புகளுக்குப் பின்பு உள்ள வரைபடத்தில் காணவும். [13]நமது ஒப்பீட்டில், நாம் லூக்கா 4ன் நிகழ்ச்சியை 7 மற்றும் 8 ஆகியவற்றின் நிகழ்ச்சிகளுக்குப் பின்பு வைத்திருக்கின்றோம். [14]இயேசுவின் விவரிப்பானது, தேவன் புறஜாதியார் மீதும் அக்கறையுடையவராக இருக்கின்றார் என்று காண்பிக்கின்றன, இது மேசியா யூதர்களுக்காக மட்டுமின்றி புறஜாதியாருக்காகவும் வந்தார் என்று மறைமுகமாக உணர்த்துகிறது. [15]இதை, சனதெரீன் சங்கம் ஸ்தேவானின் உரைக்குப் பதில்செயல் செய்த விதத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள் (அப். 7:54, 57-59அ). [16]அவர் ஒரு அற்புதத்தை நிகழ்த்தியிருந்தால், அவர்கள் தாங்கள் கேட்டதைப் பெற்றிருப்பார்கள் ஆனால் தாங்கள் விரும்பியதைப் பெற்றிருக்க மாட்டார்கள். [17]அவர்கள் அவரைப் புறக்கணித்திருந்தார்கள்; இப்போது அவர் அவர்களைப் புறக்கணித்தார். [18]எனது கருத்துக்கள் நமது வேத பாடப்பகுதியை முற்றிலும் எடுத்துரைத்து முடிப்பதில்லை. இவ்வசனப் பகுதியின்மீது நேரம் செலவிட்டு, இயேசு புறக்கணிக்கப்படுதலை எவ்வாறு சந்தித்தார் என்று சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் அநேகமாக கூடுதலான சிந்தனைகள் கிடைக்கப்பெறுவீர்கள். [19]நமது ஒப்பீட்டில், நாம் லூக்கா 4:31ல் தொடங்கும் வரலாற்றை இயேசுவின் வாழ்வின் முற்பகுதியில் வைத்துள்ளோம், ஆனால் நான் இங்கு குறிப்பிடும் கருத்து இன்னமும் மதிப்புள்ளதாக இருக்கிறது. [20]நாம் ஞானஸ்நானம் பெறும்போது ஆவியானவரைப் பெறுவதற்கும், இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது ஆவியானவரைப் பெற்றதற்கும் இடையில் ஒரு முக்கியமான வேறுபாடு உள்ளது. அவருக்குக் கிடைத்த கொடையானது அவர் அற்புதங்கள் நிகழ்த்துதலுடன் தொடர்புடையதாயிருந்தது, நாம் ஆவியானவரைப் பெற்றுக்கொண்டது அற்புதங்கள் செய்வதற்காக அல்ல. இருந்தபோதிலும், இரு நிகழ்வுகளும் ஆர்வத்திற்குரிய சில இணைவுகளைக் கொண்டுள்ளன.*

# 38

# வெற்றியின் அபாயம்

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #15*

V. *இரண்டாம் பஸ்காவில் இருந்து மூன்றாம் பஸ்கா வரை (தொடர்ச்சி).*

   V. *கலிலேயாவுக்கு இயேசுவின் மூன்றாம் பயணம் (மற்றும் பன்னிருவருக்கு அறிவுறுத்துதல்) (மத். 9:35-38; 10:1-42;[1] 11:1; மாற். 6:6-13; லூக். 9:1-6).*

   W. *இயேசுவின்மீது ஏரோதுவின் ஆர்வம் (மற்றும் யோவான் ஸ்நானனின் மரணம் பற்றிய விவரம்) (மத். 14:1-12அ; மாற். 6:14-29; லூக். 9:7-9).*

   X. *ஏரோதுவின் ஆளுகைப் பகுதியில் இருந்து இயேசு விலகிச் செல்லுதல் (மற்றும் திரும்பி வருதல்).*

      1. *பன்னிருவர் திரும்பி வருதலும் கலிலேயாக் கடலின் கிழக்குக் கரைப் பகுதிக்குப் போய் ஓய்வெடுத்தலும் (மத். 14:12ஆ, 13; மாற். 6:30-32; லூக். 9:10; யோவா. 6:1).*

## அறிமுகம்

*நாம், மாபெரும் கலிலேய ஊழியத்தின் முடிவை நெருங்கிக் கொண்டிருக்கின்றோம். இந்தப் பாடத்தில் நாம், இயேசுவும் அவரது சீஷர்களும் கலிலேயாவில் கடைசி முறையாகப் பயணம் மேற்கொள்வதைக் காண்போம்.[2] அந்தப் பயணம் ஒரு வெற்றிகரமான பயணமாயிருந்தது, ஆனால் வெற்றி அபாயத்தைக் கொண்டுவந்தது. - ஏனென்றால் அது கிறிஸ்துவை அந்தப் பகுதியில் ஆண்டுகொண்டிருந்த கொடுங்கோலனான ஏரோதுவின்[3] கவனத்திற்குக் கொண்டுவந்தது. ஏரோது அரசன் சமீபத்தில் தான் யோவான் ஸ்நானனின் தலையை வெட்டியிருந்தான், அதன் பதட்டமான சூழ்நிலை அங்கு நிலவிக் கொண்டிருந்தது. இயேசுவின் சீஷர்கள் அந்த மாகாணத்தில் பயணம் செய்து முடித்து திரும்பிய உடனே, அவர்கள் அந்த அரசனின் ஆளுகைப் பகுதியிலிருந்து பின்வாங்கி - கலிலேயாக் கடலின் கிழக்குக் கரைப் பகுதிக்கு சென்றார்கள். அங்கு இயேசு ஐயாயிரம் பேருக்கும் அதிகமான மக்களுக்கு உணவளித்தார்.[4] இது அவரது பிரபலத் தன்மையின் உச்சகட்ட வேளையாக இருந்தது.*

*இயேசு ஐயாயிரம் பேருக்கு உணவளித்தது பற்றியும் அதைத் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும், நாம் நமது அடுத்த பாடத்தில் படிப்போம். இந்தப் பாடத்தில் நாம், மூன்றாவது கலிலேயப் பயணத்தின்*

*வெற்றியைப் பற்றியும் கிறிஸ்து மற்றும் அவரது சீஷர்களுக்கு அது கொண்டு வந்த அபாயத்தைப் பற்றியும் கவனம் செலுத்துவோம்.*

## *வெற்றிகரமான ஒரு பயணம் (மத். 9:35-38; 10:1-42; 11:1; மாற். 6:6-13; லூக். 9:1-6)*

***பணிப்பொறுப்பின் அளவு (மத். 9:35-38; மாற். 6:6)***

*இயேசு, தமது நேரம் குறுகிக்கொண்டிருப்பதை அறிந்தவராய், கலிலேயாவின் குடிமக்கள் ஒவ்வொருவருக்கும், தம்மைப் பின்பற்ற ஒரு வாய்ப்பளிக்கும்படி அம்மாகாணத்தில் இன்னொரு பயணத்தை மேற்கொள்ள விரும்பினார். மாற்கு 6:6ஆ, "கிராமங்களிலே சுற்றித்திரிந்து உபதேசம் பண்ணினார்" என்று எளிமையாகக் கூறுகிறது. மத்தேயு சுவிசேஷ விவரம் இன்னும் அதிக விவரமான தொகுப்புரையொன்றைத் தருகிறது: "பின்பு இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார்" (9:35).*

*இயேசு தமது உரையைக் கேட்க வந்தவர்களைக் கண்ணோக்குகையில், "அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகினார்" (மத். 9:36).[5] பழைய ஏற்பாட்டில் தேவனுடைய மக்கள் ஆவிக்குரிய நடத்துவத்துவம் இல்லாமல் துன்புற்றபோது அவர்களுக்கு இதே போன்ற மொழிநடை பயன்படுத்தப்பட்டிருந்தது (எண். 27:16; 1 இரா. 22:17; எசே. 34:5).*

*இதற்கு முன்பே, இயேசு சமாரியர்களைப் பற்றித் தமது சீஷர்களிடத்தில், "... இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் ..." என்று கூறியிருந்தார் (யோவா. 4:35ஆ). இங்கு அவர் கலிலேயர்களைப் பற்றி அதற்கிணையான உருவகமொன்றைப் பயன்படுத்தினார் - "அறுப்பு மிகுதி" - அத்துடன் பின்வரும், கவலைக்குரிய குறிப்பைக் கூடுதலாகக் கூறினார்: "வேலையாட்களோ கொஞ்சம்" (மத். 9:37). அவர், "ஆதலால், அறுப்புக்கு எஜமான்[6] தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" என்றார் (மத். 9:38). கிறிஸ்துவுக்கு அவரது சக நாட்டு மனிதர்களைச் சென்று அடைய உதவி தேவைப்பட்டது.*

***இக்கட்டான நிலைக்குத் தீர்வு***
***(மத். 10:1-42; மாற். 6:7-11; லூக். 9:1-5)***

*இயேசு தமது பன்னிரு அப்போஸ்தலர்களை அப்பகுதியின் நகரங்களுக்கு அனுப்புதல் என்பதே, அறுவடையாட்கள் குறைவுக்கு அவரது தீர்வாக இருந்தது. இது இரு நோக்கங்களுக்குப் பயன்பட்டது. முதலாவது, இது அந்தப் பகுதியில் இருந்த யாவரும் "இராஜ்யத்தின் சுவிசேஷத்தை" (மத்.*

*9:35) கேள்விப்படுவதற்கான வாய்ப்பை உத்தரவாதப்படுத்திற்று. இரண்டாவது, இது பன்னிருவருக்கும் மதிப்புமிக்க பயிற்சியை - கிறிஸ்து அவர்களுடன் [சரீரத்தில்] இல்லாது போகும் நாட்களுக்கு அவசியமான அனுபவம் ஒன்றை - அளித்தது. கலிலேயாவில் இயேசுவின் முதல் பயணத்தின்போது, அவர் ஒரு சில சீஷர்களை மட்டுமே கொண்டிருந்தார்.*[7] *இரண்டாவது பயணத்தில், அவர் எவ்வாறு போதித்து ஊழியம் செய்தார் என்பதைக் கவனிக்கப் பன்னிருவரும்*[8] *அவருடன் இருந்தார்கள். அவர்கள் தாங்களாகவே போதிக்கும்படியாக அனுப்பவேண்டிய வேளை வந்திருந்தது.*[9]

*வெற்றியடைவதற்கு ஆயத்தப்படுத்துதல் என்பது இன்றியமையாத தாக உள்ளது. கிறிஸ்து தமது ஊழியர்களின் முக்கியமான ஊழியத்திற்கு அவர்களை ஆயத்தப்படுத்தத் தவறவில்லை:*

*(1) அவர் அப்போஸ்தலர்களை ஆயத்தப்படுத்துவதற்கு, அவர்களை ஒருங்கமைத்தார். அவர்களை அவர் இருவர் கொண்ட குழுக்களாகப் பிரித்தார் (மாற். 6:7). மத்தேயு 10:2-4ல் உள்ள அப்போஸ்தலர்களின் பட்டியலை ஆய்வுசெய்து பாருங்கள், அவர்கள் ஜோடிகளாகக் குழுவமைக்கப்பட்டுள்ளதை நீங்கள் காண்பீர்கள். இது, இயேசு அவர்களை எவ்வாறு அனுப்பினார் என்பதைச் சுட்டிக் காண்பிக்கலாம். இருவர் இருவராக அவர்களை அனுப்பியது என்பதுஅவர்களின் செய்திக்கு கனம் கொடுத்தது (உபா. 17:6; 19:15; மத். 18:16; யோவா. 8:17; 2 கொரி. 13:1; 1 தீமோ. 5:19). இது பரஸ்பரம் பலத்தையும் அளித்தது (பிர. 4:12ஐக் காணவும்). இருவராகச் செல்லும்போது, அவர்கள் ஒருவருக்கொருவர் ஊழியத்தில் துணையாயிருக்கவும் ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்திக் கொள்ளவும் முடியும்.*

*ஒவ்வொரு குழுவும் எங்கு செல்லவேண்டும் என்பதைப் பற்றியும் இயேசு அறிவுறுத்துதல்களை ஏற்படுத்தியிருக்கலாம். மத்தேயு 11:1, இயேசு தாமே சென்று "அவர்களுடைய பட்டணங்களில்" பிரசங்கித்தார் என்று கூறுகிறது, இது அவர்களுக்கு குறிக்கப்பட்டிருந்த "பட்டணங்களை" குறிப்பிடுவதாக இருக்க முடியும்*[10] *(இதை லூக். 10:1உடன் ஒப்பிடவும்). இந்தப் பயணம் எவ்வளவு நாட்கள் நீடிக்க வேண்டும் என்றும் மற்றும் அது முடிந்தவுடன் அப்போஸ்தலர்கள் எங்கு சென்று சேர வேண்டும் என்பது பற்றியும் ஒரு வகையான கருத்தொருமைப்பாடு இருந்திருக்கலாம் (மாற். 6:30; லூக். 9:10ஐக் காணவும்).*

*(2) அவர், அப்போஸ்தலர்களை ஆயத்தப்படுத்துவதற்கு, அவர்களுக்கு அறிவுறுத்தினார்.*[11] *இயேசுவின் விரிவான அறிவுறுத்துதல் என்பது ஆயத்தப் படுத்துதலின் மிகவும் முக்கியமான பாகமாக இருந்தது.*

*என்ன செய்ய வேண்டும் என்று அவர்களுக்கு அவர் கூறினார். அவர்கள் யூதர்களிடம் மட்டும் செல்ல வேண்டியதாயிருந்தது (மத். 10:5, 6). பிற்பாடு, அவர்கள் "மற்ற ஆடுகளை" (புறஜாதியார்; யோவா. 10:16ஐக் காணவும்) குறித்து அக்கறை கொள்ளலாம். ஆயினும் இந்தப் பயணத்தில், அவர்கள் "மேய்ப்பனில்லாத ஆடுகள்" (மத். 9:36) - அதாவது "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரின்" மீதே கவனம் செலுத்த வேண்டிய தாயிருந்தது (மத். 10:6).*[12]

பன்னிருவரும் யூதர்களிடம் சென்றபோது, அவர்கள் போதிக்க வேண்டியதாயிருந்தது. அவர்கள், "சமீபித்திருந்த" (மத். 10:7) இராஜ்யத்தைக் குறித்த நற்செய்தியைப் பிரசங்கிக்க வேண்டியிருந்தது. அவர்கள் மக்களை "மனந்திரும்புங்கள்" என்று கட்டளையிட வேண்டியிருந்தது (மாற். 6:12; மத். 4:17ஐக் காணவும்). அவர்கள் மக்களிடம் இயேசுவைப் பற்றிக் கூற வேண்டியிருந்தது.[13]

மற்றும், அவர்கள் பயணம் செய்து போதிக்கையில், அற்புதங்கள் செய்ய வேண்டியிருந்தது (லூக். 9:6ஐக் காணவும்). இயேசு அவர்களிடம், "வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், மரித்தோரை எழுப்புங்கள்,[14] குஷ்டரோகிகளைச் சுத்தம் பண்ணுங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள்" என்று கூறினார் (மத். 10:8அ). இன்னும் சற்று நேரத்தில் அதைப் பற்றி நான் அதிகமான கருத்துக்களைக் கூறுவேன்.

அவர்கள் எவற்றை எடுத்துச் செல்ல வேண்டும் என்று அவர் கூறினார். அவர்கள் மிகவும் அத்தியாவசியமானவற்றை மட்டும் எடுத்துச் செல்ல வேண்டும், மற்றும் தாங்கள் செல்லும் இடங்களில் தங்களை ஏற்றுக் கொள்பவர்களின் உபசரிப்புத்தன்மையைச் சார்ந்தவர்களாய் இருக்க வேண்டும்.[15] "வேலையாள் தன் ஆகாரத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான்" என்று அவர் கூறினார் (மத். 10:10ஆ). இவ்வாறு, கிறிஸ்து அவர்களது பணிப்பொறுப்பின் அவசரத் தன்மையை வலியுறுத்தினார். வாழ்வின் அத்தியாவசியத் தேவைகளுக்கு அவர்கள் கர்த்தரை நம்பியிருக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு அவர் போதித்தார் (லூக். 22:35; மத். 6:33ஐக் காணவும்).

அவர்கள் எதிர்பார்க்க வேண்டியது என்ன என்பதை அவர் கூறினார். அவர்களின் செய்தியைச் சிலர் ஏற்றுக்கொள்வார்கள் (மத். 10:11, 13அ), ஆனால் பலர் அதைப் புறக்கணிப்பார்கள் (மத். 10:13ஆ, 14, 16, 17, 21, 22, 24, 25).

அவர்கள் எவ்வாறு பதில்செயல் செய்ய வேண்டும் என்பதை அவர் கூறினார். அவர்கள் செய்யக் கூடாத சில வேலைகள் இருந்தன. அவர்கள் தங்களையும் தங்கள் செய்தியையும் புறக்கணித்தவர்களிடத்தில் தங்கள் நேரத்தை வீணாக்கக் கூடாதிருந்தது. இயேசு, "எவனாகிலும் உங்களை ஏற்றுக்கொள்ளாமலும், உங்கள் வார்த்தைகளைக் கேளாமலும் போனால், அந்த வீட்டையாவது பட்டணத்தையாவது விட்டுப் புறப்படும்போது, உங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப்போடுங்கள்" என்று கூறினார் (மத். 10:14). அந்நாட்களில், கால்களில் படிந்த தூசியை உதறிப்போடுதல் என்பது புறக்கணித்தலுக்கான அடையாளச் செய்கையாக இருந்தது.[16] அது, மக்கள் தேவனுடைய செய்தியைப் புறக்கணித்தபோது, தேவன் அவர்களைப் புறக்கணித்தார் என்பதைச் சுட்டிக்காண்பித்தது.

அவர்கள் புறக்கணிக்கப்படுதலினால் பயமடைந்து விடாமல் இருக்க வேண்டியிருந்தது (மத். 10:26, 28). அவர்களின் விசுவாசத்தைப் பற்றி அவர்கள் தைரியமாகப் பேச வேண்டும் என்று கிறிஸ்து அவர்களுக்கு அறைகூவல் விடுத்திருந்தார் (மத். 10:27), மற்றும் "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன். மனுஷர்

*முன்பாக என்னை மறுத்தலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத் திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்" என்று வாக்குறுதியும் அளித்தார் (மத். 10:32, 33). இந்த வாக்குத்தத்தங்கள் கர்த்தரைப் பற்றிய எந்த அறிக்கையிடுதலுக்கும் (அல்லது மறுதலித்தலுக்கும்)[17] நடைமுறைப் படுவதாக உள்ளது, இந்த சந்தர்ப்பப் பொருளில் இவைகள், அன்றாட வாழ்க்கையில் மனிதர்களுக்கு முன்பாக அவரை அறிக்கையிடுதலுக்கு (அல்லது மறுதலித்தலுக்கு) விசேஷித்த நடைமுறைப்பயன்பாடு கொண்டுள்ளன.*

*புறக்கணிக்கப்படுதலுக்குப் பதில்செயலாகப் பன்னிருவரும் செய்ய வேண்டிய செயல்களும் இருந்தன. அவர்கள் மனிதர்களால் புறக்கணிக்கப் பட்டாலும், தேவனால் புறக்கணிக்கப்படவில்லை என்பதை அவர்கள் கற்றுக்கொள்வது அவசியமாக இருந்தது. அவர்கள்மீது தேவன் இன்னமும் அக்கறையுள்ளவராக இருப்பார் (மத். 10:29-31). அவர்களைப் புறக்கணித் தல் என்பது அவர்களை அனுப்பினவரைப் புறக்கணித்தலாக உள்ளது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டியிருந்தது (மத். 10:40ஐக் காணவும்). ஆகையால், அவர்களை ஏற்றுக்கொள்பவர்கள் ஆசீர்வதிக்கப் படுவார்கள், அவர்களைப் புறக்கணிப்பவர்கள் சபிக்கப்படுவார்கள் (மத். 10:13-15).*

*(3) அப்போஸ்தலர்களை ஆயத்தப்படுத்துவதற்கு, இயேசு அவர்களை ஒருங்கமைத்து அவர்களுக்கு அறிவுறுத்தியதுடன் மாத்திரம் நிறுத்தவில்லை; அவர்களுக்கு அவர் வல்லமையும் அளித்தார். அவர்கள் தங்கள் பணிப்பொறுப்பை நிறைவேற்றத் தேவையானவற்றை அவர் கொடுத்தார். அந்த வரையறைக்குட்பட்ட கட்டளையின்* (Limited Commission) *வேளை வரையிலும், இயேசு மாத்திரமே அற்புதங்களை நிகழ்த்தியிருந்தார், ஆனால் இப்போது அவர், பன்னிருவரும் அதேபோன்ற ஊழியங்களைச் செய்யும் படிக்கு அவர்களுக்கு வல்லமையளித்தார்: அவர், "... அசுத்த ஆவிகளைத்[18] துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" (மத். 10:1; மாற். 6:7; லூக். 9:1ஐக் காணவும்). மற்றும், அவசியமானது என்ற வகையில் அவர்களுக்கு ஏவுதலை வாக்களித்தார்:*

> *... எப்படிப் பேசுவோம் என்றும், என்னத்தைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள்; நீங்கள் பேசவேண்டுவது அந்நேரத்திலே உங்களுக்கு அருளப்படும். பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர் (மத். 10:19, 20).*

*இயேசு, அப்போஸ்தலர்களை எவ்வாறு ஆயத்தம் செய்தார் என்பதை நாம் ஆழ்ந்து சிந்திக்கும்போது, அவரது சிந்தையானது கலிலேயா மாகாணத்தில் அடுத்து வந்த இரண்டு அல்லது மூன்று வாரங்களில் நடைபெறவிருந்த பயணத்தைவிட அதிகமானவற்றின்மீது இருந்தது என்பது தெளிவு. "அதிபதிகளுக்கு முன்பாகவும், ராஜாக்களுக்கு முன்பாக வும்" மற்றும் "புறஜாதியாருக்கு முன்பாகவும்" என்ற குறிப்புகளும் (மத். 10:18) உபத்திரவம் பற்றிய இன்னும் பல முன்னுரைத்தல்களும் (மத். 10:17,*

*18, 21-23, 34-39), சபை நிலைநாட்டப்படுதலைத் தொடர்ந்து அப்போஸ் தலர்களின் ஊழியத்தையும் அவர்கள் நடத்தப்படவிருந்த விதத்தையும் சுட்டிக்காண்பித்தன.*[19]

*மத்தேயு 10ல், கிறிஸ்து இந்த வரையறைக்குட்பட்ட கட்டளையைக்*[20] *கொடுத்தபோது, அவர் விவரமான அறிவுறுத்துதல்களைக் கொடுத்தார்; ஆனால் மத்தேயு 28:18-20ல்,*[21] *பிரதான கட்டளையைக் கொடுத்தபோது, உண்மையில் அவர் "இதை அப்படியே செய்யுங்கள்!"*[22] *என்று கூறினார். இது ஒருவேளை, அவர் முன்னதாகவே தமது சீஷர்களிடத்தில் அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்றும், அவர்கள் பிரசங்கிக்கும்போது எதிர்பார்க்கப் பட்டவை எவை என்பதையும் - மத்தேயு 10 போன்ற வசனப்பகுதிகளில் - கூறியிருந்த காரணத்தினால் இவ்வாறு இருந்திருக்கலாம்.*

*மத்தேயு 10ன் சில விசேஷித்த அளிப்புகள் நமக்கு இன்றைய நாட்களில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. நாம் யூதர்களிடத்தில் மாத்திரம் செல்லுவதில்லை (மத். 28:19; மாற். 16:15). அப்போஸ்தலர்களைப் போல் நாம் அற்புதமான வல்லமை பெற்றிருப்பதில்லை, மற்றும் நாம் பேசுகின்றபோது அற்புதவிதமாக ஏவப்படுவதில்லை. நாம் பிரசங்கிப்பதற் காக எங்காவது செல்லும்போது சிறிதளவே பொருள்கள்/பணம் எடுத்துச் செல்ல வேண்டும் அல்லது ஒன்றும் எடுத்துச் செல்லக்கூடாது என்று நம்மிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுவதில்லை.*[23] *இருந்தபோதிலும், மத்தேயு 10ன் பல கொள்கைகள் இருபத்தியோராம் நூற்றாண்டில் இன்னமும் செல்லத் தக்கவையாகவே உள்ளன.*

*நாமும் கூட, இவ்வுலகத்திற்குச் சுவிசேஷத்தை எடுத்துச் செல்வதற்கு முன்பு திட்டமிட்டு ஒருங்கமைவுப் பணிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. இயேசுவின் ஒருங்கமைத்தல் என்பது விரிவானதாக இருந்ததில்லை. அதேபோல், நம்முடைய ஒருங்கமைத்தலும் இயன்ற அளவுக்கு எளிமையானதாக இருக்க வேண்டும். ஒருங்கமைத்தல் என்பது பணியைச் செய்ய அவசியமான குறைந்தபட்சத் தேவைகளைக் கருத்தில் கொண்டதாக இருக்க வேண்டும். எந்த ஒரு ஊழியத்தையும் எப்போதும் செய்யாமல், ''ஒருங்கமைப்பைச் செய்வதிலேயே'' அதிக நேரத்தை செலவிடும் சாத்தியக்கூறுள்ளது. பொது அறிவு என்பது நாளுக்கான ஒழுங்குமுறையாக உள்ளது. மத்தேயு 10:16ல் உள்ள ஞானமிக்க வார்த்தை களை ஆழ்ந்து சிந்தியுங்கள்.*

*கிறிஸ்து தமது அப்போஸ்தலர்களை இருவர் இருவராக அனுப்பிய விஷயம் மிகவும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய அவரது ஒருங்கமைப்பு அறிவுறுத்துதலின் ஒரு விவரமாக உள்ளது. விதிப்படி, ஊழியர்களைக் குழுக்களாக அனுப்புவதில் பயன் உள்ளது.*

*நாம் சுவிசேஷத்தைப் பிறருக்கு எடுத்துச் செல்லுவதற்கு முன்பு, இன்னமும் நமக்கு ஆயத்தப்படுதல் தேவைப்படுகிறது. இயேசு பன்னிரு வருக்கும் ''கட்டளையிட்ட/அறிவுறுத்திய பின்பு'' (வ. 5; 11:1ஐயும் காணவும்) அவர்களை அனுப்பினார். என்ன செய்ய வேண்டும் என்றும் எப்படிச் செய்ய வேண்டும் என்றும் ஒவ்வொருவரும் அறிந்துள்ளார்கள் என்று யூகித்துக் கொள்ள வேண்டாம். அறிவுறுத்துதலை ஒருக்காலும்*

*தேவைக்குக் குறைவாகத் தராதீர்கள்.[24] மற்றும், நாம் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லுகையில் தேவன் நம்மைக் கவனித்துக் கொண்டு இருக்கின்றார் என்பதை நாம் இன்னமும் உணர்ந்தறிய வேண்டியது அவசியமானதாக உள்ளது (மத். 10:28-31), மற்றும் நாம் முடிவு பரியந்தம் நிலைத்திருக்கும்படி ஊக்குவிக்கப்பட்டவர்களாயிருத்தல் என்பது இன்னமும் அவசியமானதாக உள்ளது (வ. 22).*

***முயற்சியின் வெற்றி (மத். 11:1; மாற். 6:12, 13; லூக். 9:6)***

*இயேசு தமது அறிவுறுத்துதல்களை முடித்தபின்பு, அப்போஸ்தலர்கள் இருவர் இருவராக ஆறு குழுக்களாகப் புறப்பட்டுச் சென்றார்கள். "அவர்கள் புறப்பட்டுப்போய்: மனந்திரும்புங்கள் என்று பிரசங்கித்து; அநேகம் பிசாசுகளைத் துரத்தி, அநேகம் நோயாளிகளை எண்ணெய் பூசிச் சொஸ்தமாக்கினார்கள்" (மாற். 6:12, 13). முதன் முறையாக அவர்கள், தங்கள் எஜமானர் செய்திருந்த அற்புதச் செயல்கள் பலவற்றைத் தாங்களும் செய்தார்கள். அவர்கள் உணர்வெழுச்சியடைந்தார்கள் என்று உங்களுக்குத் தெரியாதா![25]*

*அவர்கள் புறப்பட்டுச் சென்றபின்பு, கிறிஸ்து அப்பகுதியில் தமது சொந்தப் பயணத்தை மீண்டும் தொடர்ந்தார் (மத். 11:1). இப்போது, கலிலேயா மாகாணத்தில் ஒரு குழுவிற்குப் பதிலாக ஏழு குழுக்கள் பயணம் செய்து, பிரசங்கித்து குணமாக்கிக் கொண்டிருந்தன!*

## *தீவிரமான ஒரு பயமுறுத்துதல் (மத். 14:1-12அ; மாற். 6:14-29; லூக். 9:7-9)*

***ஏரோது திடீரென்று அறிந்துகொள்ளுதல்***

*முன்பே குறிப்பிட்டபடி, கலிலேயா மாகாணம் ஏரோது அரசனால் ஆளப்பட்டது. இவன் புகழ்ச்சியற்ற மகா ஏரோதுவின் ஒரு மகனான ஏரோது அந்திப்பா என்பவனாக இருந்தான்.[26] கிறிஸ்து பன்னிருவரை அனுப்புவதற்கு முன்பாக, இந்த அரசன் இயேசுவின் ஊழியத்தைக் குறித்துச் சிறிதளவே கவனம் செலுத்தினான் அல்லது கவனம் செலுத்தவேயில்லை என்பது தெளிவு. விதிப்படி, "குடிமைச் சீரமைப்பாளர்கள்" மக்களைக் கலகம் செய்யும்படி தூண்டாத வரையில், அவர்களைக் குறித்து அரசாங்கம் கவலையற்றிருந்தது. இப்போது, சுவிசேஷகர்களின் ஏழு குழுக்கள் அவனது [ஏரோதுவின்] எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குறுக்கும் நெடுக்கமாக ஊழியத்தில் ஈடுபட்டிருந்தன, இந்தப் புதிய இயக்கத்தை இனியும் கண்டு கொள்ளாமல் இருக்க ஏரோதுவினால் முடியாமற்போயிற்று.*

*மத்தேயு சுவிசேஷ விவரம், "அக்காலத்தில், காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோது இயேசுவின் கீர்த்தியைக் கேள்விப்பட்டு" என்று கூறுகிறது (14:1). மாற்கு சுவிசேஷ விவரத்தில், பன்னிருவரின் ஊழியம் (6:13) பற்றிய தொகுப்புரைக்குப் பின்பு, அவர் [மாற்கு], "அவருடைய பேர் [அதாவது இயேசுவின் பேர்] பிரசித்தமானபடியினால், ஏரோது ராஜா அவரைக்*

*குறித்துக் கேள்விப்பட்டு" என்று எழுதினார் (மாற். 6:14அ). லூக்கா, அப்போஸ்தலர்களின் வெற்றியைக் குறித்து எழுதிவிட்டு (9:6) பின்பு, "அப்பொழுது காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோது அவரால் செய்யப்பட்ட யாவையும் கேள்விப்பட்[டு] ... கலங்கினான்" என்று கூறினார் (9:7அ, 8).*

**ஏரோது வேதனைமிக்க வகையில் பதற்றமடைதல்**

*இயேசுவைப் பற்றி மக்கள் என்ன சொல்லிக் கொண்டிருந்தார்கள் என்ற விஷயங்கள் ஏரோதுவின் செவிகளுக்கு எட்டின: அவர் [இயேசு] எலியா என்று சிலர் கூறினார்கள்; தீர்க்கதரிசிகளில் ஒருவர் மரித்தோரி லிருந்து எழுந்தார் என்று மற்றவர்கள் நம்பினார்கள் (லூக். 9:8; மாற். 6:15).[27] ஆயினும் சிலர், "யோவான் ஸ்நானன் மரித்தோரிலிருந்து எழுந்தான்,[28] ஆகையால் அவனிடத்தில் இந்தப் பலத்த செய்கைகள் விளங்குகிறது"[29] என்று கூறியதுதான் அரசனை மிகவும் பதற்றத்துக்கு உள்ளாக்கிற்று (மாற். 6:14ஆ; லூக். 9:7ஆ - வைக் காணவும்). இந்த காற்பங்கு தேசாதிபதி யோவானைச் சற்றுக் காலத்திற்கு முன்புதான் சிரச்சேதம் செய்திருந்தான், எனவே இது அவனைப் பதற்றப்படுத்திற்று.[30]*

*ஒரு ஆண்டுக்கு அல்லது அதற்கு முந்திய காலகட்டத்தில்[31] ஏரோது, தனது மனைவியை [வைப்பாட்டியை] மகிழ்விப்பதற்காக, அந்தத் தீர்க்கதரிசியை [யோவான் ஸ்நானனை] சிறையில் அடைத்திருந்தான். அரசன் தனது அரை சகோதரனான பிலிப்புவின் மனைவியான ஏரோதியாளை, அவனை [பிலிப்புவை] விட்டு விலக்கித் தன் வசப்படுத்திக் கொண்டு அவளைத் திருமணம் செய்து கொண்டிருந்தான் (மத். 14:3). இந்த ஏரோதியாளே மகா ஏரோதுவின் வம்சத்தவளாக இருந்தாள்; அவள் ஏரோதுவின் ஒன்றுவிட்ட சகோதரியாக இருந்தாள்.[32] ஏரோது அந்திப்பாவு டன் அவள் செய்துகொண்ட "திருமணம்" லேவியத்துவ நியாயப்பிரமாண விதிகளில் பலவற்றை மீறிய செயலாக இருந்தது.[33] யோவான் [ஸ்நானன்] ஏரோதை நோக்கி, "நீர் அவளை வைத்துக்கொள்வது நியாயமல்ல" (மத். 14:4) என்று கூறும் துணிச்சல் கொண்டிருந்தார் - இது ஏரோதியாளுக்கு மிகுந்த கோபமூட்டியிருந்தது (மாற். 6:19).[34]*

*யோவானை மரணத்திற்குள்ளாக்க வேண்டும் என்று ஏரோதியாள் விரும்பியிருந்தபோதிலும் (மாற். 6:19), ஏரோது அவ்வளவு தூரம் செல்லத் தயங்கினான் - அந்தத் தீர்க்கதரிசியின் மரணதண்டனை ஒரு கலகத்தை உண்டாக்கும் என்று அவன் பயந்தான் (மத். 14:5ஐக் காணவும்). மேலும், அவன் யோவான்மீது மனக்குறைவுடன் கூடிய ஒரு மரியாதை வைத்திருந் தான். மாற்கு, "அதேனென்றால் யோவான் நீதியும் பரிசுத்தமுமுள்ள வனென்று ஏரோது அறிந்து, அவனுக்குப் பயந்து, அவனைப் பாதுகாத்து ..." என்று எழுதினார் (மாற். 6:20அ). பின்பு மாற்கு பின்வரும் வினோதமான குறிப்பைக் கூடுதலாக எழுதினார்: "அவன் யோசனையின்படி அநேக காரியங்களைச் செய்து, விருப்பத்தோடே அவன் சொல்லைக் கேட்டு வந்தான்" (6:20ஆ).[35] இராஜ உடையில் இருந்த ஏரோதுவின் முன்னிலையில் முரட்டு உடையில் யோவான் ஸ்நானன் அவனுக்கு முன்பாக நிற்பதைக் கற்பனை செய்வது கடினமானதாக இருக்காது. அந்தத் தீர்க்கதரிசி,*

அரசனின் பக்கமாய்த் தன் சுட்டுவிரலை ஆட்டியபோது, அரசனின் முகத்தில் கலவரம் நிறைந்த பார்வை வந்ததை நான் சித்தரித்துக் காண்கின்றேன். The Living Bible மொழிப்புரையில் “ஏரோது யோவான் ஸ்நானனுடன் பேசிய போதெல்லாம் கலவரம் அடைந்தான், ஆனாலும் கூட அவன் யோவான் ஸ்நானன் கூறுவதைக் கேட்க விரும்பினான்’’ என்றுள்ளது.

ஏரோது அரசன் - ஒரு பிறந்தநாள் விருந்து கொடுக்கத் தீர்மானித்து அந்த விதிவசமான நாள் வரும் வரையிலும் - யோவான் ஸ்நானனை ஏரோதியாளிடம் இருந்து பாதுகாத்தான் (மத். 14:6; மாற். 6:21). களியாட்டு விருந்தின் உச்சகட்டத்தில்,[36] ஏரோதியாளின் மகள் நடனமாடுவதற்காக விருந்து நடந்து கொண்டிருந்த அறைக்குள் வந்தாள் (மத். 14:6; மாற். 6:22). அந்தப்பெண்ணின் பெயர் சலோமி என்று யோசிப்பஸ் கூறினார். அவளது நடனத்தின் இயல்பைப் பற்றி வெளிப்படையாகக் கூறுவதற்கு எனது நாணம்/தன்னடக்கம் என்னைத் தடை செய்கிறது.[37] ஏரோதியாள் தனது பேய்த்தனமான திட்டத்தை முடித்து வைப்பதற்குத் தனது மகளை இவ்வாறு பயன்படுத்துவாள் என்ற உண்மையும்,[38] அத்துடன் அரசன் மதுபானம் பண்ணுவதில் தனது சகாக்களாயிருந்தவர்கள் முன்பாகத் தனது வளர்ப்பு மகளை இவ்விதமாகக் காட்சிப்படுத்த அனுமதிப்பான் என்பதும், ஏரோது குடும்பத்தின் ஒழுக்க[வீன]த்தைப் பற்றி அதிகம் வெளிப் படுத்துகிறது.

வேத பாடப் பகுதி, சலோமியின் நடனம் ‘‘ஏரோதுவையும் அவனோடே கூடப் பந்தியிருந்தவர்களையும் சந்தோஷப்படுத்தி[னது]’’ என்று கூறுகிறது (மாற். 6:22அ). அந்த நடனம் அவர்களை ஏன் “சந்தோஷப் படுத்தினது’’ என்று ஆய்ந்தறிவது கடினமானதல்ல. அரசன் அந்தப் பெண்ணிடம், ‘‘உனக்கு வேண்டியதை என்னிடத்தில் கேள், அதை உனக்குத் தருவேன்” என்று கூறினான் (மாற். 6:22ஆ). (அவனது குரலில் இருந்த குடிமயக்கத்தின் உளறலை என்னால் கேட்க முடிகிறது.) அவன் ஒரு வாக்குறுதியாக, “நீ என்னிடத்தில் எதைக்கேட்டாலும், அது என் ராஜ்யத் தில் பாதியானாலும், அதை உனக்குத் தருவேன்” என்று ஆணையிட்டான்[39] (மாற். 6:23; மத். 14:7ஐக் காணவும்).

என்ன ஒரு பரிசளிப்பு! ஒரு ராஜரீக அரசின் “பாதியளவு வரைக்கும்” உங்களுக்கு வாக்களிக்கப்பட்டிருந்தால் உங்கள் வேண்டுகோள் என்னவாக இருக்கும்?[40] சலோமி தயங்கவில்லை. “அவள் தன் தாயினால் ஏவப்பட்ட படியே: யோவான் ஸ்நானனுடைய தலையை இங்கே ஒரு தாலத்திலே எனக்குத் தாரும் என்று கேட்டாள்” (மத். 14:8).[41] ஏரோதியாள், அவரது [யோவான் ஸ்நானனின்] மரணம் பற்றிய ஒரு அறிக்கையை விரும்ப வில்லை; ஒருவேளை அவள் ஏமாற்றப்பட்டு விடலாம்.[42] அவள் அவரது உடலைக் காண விரும்பவில்லை; ஒரு மரணக்காட்சி அரங்கேற்றப்படக் கூடும். அவரது உடலில் இருந்து துண்டிக்கப்பட்ட தலையிலிருந்து வெட்டப்பட்ட பல இரத்தக்குழாய்களின் வழியே ஜீவ இரத்தம் வழிந்தோடுவதைக் காணும்போதுதான் அவள் திருப்தியடைவாள். மற்றும் அவள், அந்த தீர்க்கதரிசியின் தலையை [உடனே] “இப்பொழுதே” (மாற்.

*6:25) - ஏரோது தனது மனதை மாற்றிக்கொள்ள ஒரு வாய்ப்பைப் பெறுவதற்கு முன்பே - விரும்பினாள்.*

*அரசன் உடனே வருத்தப்பட்டான்; ஆனால், அவன் தனது ஆணையைக் கேட்டிருந்தவர்களுக்கு முன் "முகம் இழந்து" போவதற்கு மாறாக, யோவானின் தலையை வெட்டும்படி கட்டளையிட்டான். அந்தச் செயல் விரைவாகச் செய்யப்பட்டது:*

> *உடனே அவனுடைய தலையைக் கொண்டுவரும்படி சேவகனுக்குக் கட்டளையிட்டு அனுப்பினான். அந்தப்படி அவன்போய், காவற் கூடத்திலே அவனைச் சிரச்சேதம்பண்ணி, அவன் தலையை ஒரு தாலத்திலே கொண்டுவந்து, அதை அந்தச் சிறுபெண்ணுக்குக் கொடுத்தான்; அந்தச் சிறுபெண் அதைத் தன் தாயினிடத்தில் கொடுத்தாள் (மாற். 6:27, 28).*

*இந்தச் செயல் ஏரோதியாளை மகிழ்வித்து இருந்திருக்கலாம், ஆனால் இது ஏரோதுக்கு மனஅமைதியின்மையைக் கொண்டு வந்தது. அவன் தான் செய்தது குறித்து "துக்கமடைந்தான்" (மத். 14:9). மனச்சாட்சியுடன் உள்ள ஏரோது ஒருவனைக் கற்பனை செய்தல் என்பது மிகவும் கடினமானதாகும், ஆனால் அவன் குறைந்தபட்சம் மிகவும் சஞ்சலமாக இருந்தான். இவ்வித மாக, அவன் மக்கள் கூட்டத்தின் மூடநம்பிக்கையான யூகங்களைக் கேள்விப்பட்டபோது, அவன் ஆபத்தை முன்னால் அறியும் உணர்வினால் நிரப்பப்பட்டான். மாற்கு, "... அவன் நான் சிரச்சேதம் பண்ணின யோவான்தான்; அவன் மரித்தோரிலிருந்து எழுந்தான்" என்று ஏரோது கூறியதாகப் பதிவு செய்தார் (மாற். 6:16; மத். 14:2).*

***ஏரோது அபாயத்திற்குரிய வகையில் ஆர்வமாயிருத்தல்***

*இயேசு உண்மையிலேயே யோவானா அல்லவா என்பது பற்றி ஏரோது தனது மனதைத் திருப்திப்படுத்துவதற்காக, அவரை[இயேசுவை]க் காண்பது அவசியம் என்று முடிவு செய்தான் (லூக். 9:9அ). ஏரோது, "அவரைப் பார்க்க விரும்பினான்" என்று லூக்கா எழுதினார் (லூக். 9:9ஆ). நீங்கள் அந்த வார்த்தைகளை வாசிக்கும்போது, கலிலேயாவில் ஏரோதுவுக்குச் சாதகமாயிருந்த ஆதாரமூலங்களை மனதில் கொள்ளுங்கள். கிறிஸ்துவைப் போல் வெளிப்படையாக மக்களிடையில் ஊழியம் செய்கின்ற ஒருவரைக் கண்டுபிடித்தல் என்பது அரசனுக்குச் சாதாரணமாகக் கடினமாயிருந்திராது.*

*கேட்கப்படாத மற்றும் விரும்பப்படாத இந்த கவனம் செலுத்துத லானது இயேசுவுக்கு அபாயத்தைக் கொண்டு வந்தது. மாடு மேயும் ஒரு புல்வெளியினூடே நீங்கள் நடந்து சென்றால், மேய்ந்து கொண்டிருக்கும் காளையின் கவனத்தை ஈர்ப்பதற்கு நீங்கள் விரும்ப மாட்டீர்கள். ஒரு குளவிக்கூட்டின் அருகில் நீங்கள் இருந்தால், அந்தக் கொட்டும் பூச்சியின் கவனத்தை ஈர்த்தல் என்பது ஞானமற்ற செயலாக இருக்கும். எனது அயலகத்தில் ரவுடி ஒருவன் குடியிருந்தால், அவன் என்னிடம் கவனம் செலுத்துவதை நான் அநேகமாக விரும்ப மாட்டேன்.*

*இயேசுவைக் காண வேண்டும் என்ற ஏரோதின் தாகம் குறையா*

திருந்தது என்பதை நாம் பிற்பாடு அறிகின்றோம். கிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியத்தின் கடைசி வாரத்தில், அந்த அரசன் "இயேசுவைக் குறித்து அநேக காரியங்களைக் கேள்விப்பட்டிருந்ததினாலும், அவரால் செய்யப்படும் அடையாளத்தைப் பார்க்க வேண்டுமென்று விரும்பியிருந்ததினாலும், அவரைக் காணும்படி வெகு நாளாய் ஆசை கொண்டிருந்தான்" என்று நாம் வாசிக்கின்றோம் (லூக். 23:8). ஏரோது இயேசுவை விசாரணை செய்த பின்பு, கிறிஸ்து அவனுக்கு பயமுறுத்தலாக இருந்ததாக ஏரோது நிச்சயத்திருந்தால், அவன் நிச்சயமாக அவருக்கு மரண தண்டனையைக் கட்டளையிட்டிருப்பான் (லூக். 13:31-33ஐக் காணவும்).[43] ஆம், கிறிஸ்துவின் ஊழியத்தின்மீது அந்த அரசனுக்கு இருந்த ஆர்வம் உண்மையானதும் உடனடியான பயமுறுத்துதலாயும் இருந்தது.

## வியூகமான வகையில் விலகிச் செல்லுதல் (மத். 14:12ஆ, 13; மாற். 6:30-32; லூக். 9:10; யோவா. 6:1)

**அவசியப்பட்ட அறிக்கை**

அதே வேளையில், இயேசு தமது பயணத்தை முடித்தார், மற்றும் அவரும் அவரது சீஷர்களும் மீண்டும் குழுவாக இணைந்தார்கள்.[44] "அப்பொழுது அப்போஸ்தலர்கள் இயேசுவினிடத்தில் கூடிவந்து, தாங்கள் செய்தவைகள் உபதேசித்தவைகள் யாவையும் அவருக்கு அறிவித்தார்கள்" (லூக். 9:10அ; மாற். 6:30; மத். 14:12ஆ - வைக் காணவும்). இந்த "தகவல் சேகரிப்பு" என்பது அவர்களின் பயிற்சிக்கு இன்றியமையாததாக இருந்தது. அவர்கள், தாங்கள் செய்திருந்தவை என்ன, "செயல்பட்டது" என்ன மற்றும் செயல்படாதது என்ன என்பவற்றைப் பற்றிப் பேசுவது அவசியமாயிருந்தது. அவர்கள் தங்கள் தவறுகளை ஒப்புக்கொண்டு, "நாம் என்ன செய்திருக்க வேண்டும்?" என்று கேட்பது அவசியமாயிருந்தது. அவர்கள் கேட்பதற்கு டஜன் கணக்கில் கேள்விகளைக் கொண்டிருந்திருக்க வேண்டும்.

கிறிஸ்து தமது சீஷர்களுக்கு உதவ முயற்சி செய்த வேளையில்கூட, அவர்கள் மீண்டுமாக விடாப்பிடியான மக்கள் கூட்டத்தால் சூழப்பட்டார்கள். "வருகிறவர்களும் போகிறவர்களும் அநேகராயிருந்தபடியினால் போஜனம்பண்ணுகிறதற்கும் அவர்களுக்குச் சமயமில்லாதிருந்தது" (மாற். 6:31ஆ)[45] - அவர்களின் முதல் பிரசங்கப் பயணத்தை முடிக்கக்கூட சமயமில்லாதிருந்தது.

**கவலைக்குரிய அறிக்கை**

யோவானின் மரணத்திற்குப் பின்பு, வருத்தப்பட்டிருந்த அவரது சீஷர்கள், அவரது உடலை எடுத்துச் சென்று அதை ஒரு கல்லறைக்குள் வைக்க அனுமதிக்கப்பட்டார்கள் (மாற். 6:29; மத். 14:12அ - வைக் காணவும்). இதற்குப் பின்பு அவர்கள், இயேசுவினிடத்தில் அதைப் பற்றிக்

*கூறுவதற்காக, அப்போஸ்தலர்கள் வந்துசேர்ந்த அதே வேளையில் அவரிடத்தில் வந்தார்கள்*[46] *(மத். 14:12ஆ).*

***சூழ்நிலைக்கேற்ற ஓய்வு***

*"இயேசு அதைக்கேட்டு" (மத். 14:13அ), வனாந்தரமான ஓரிடத்தில் தனித்துச் சற்றே இளைப்பாறும்படி போகலாம் என்று தமது சீஷர் களிடத்தில்*[47] *முன்மொழிந்தார் (மாற். 6:31). இந்தப் பின்வாங்குதல் குறைந்தபட்சம் இரண்டு நோக்கங்களுக்கு உதவிற்று. முதலாவது இடத்தில், இது கிறிஸ்துவையும் அவரது பின்பற்றாளர்களையும் ஏரோதுவின் ஆட்சி எல்லைகளில் இருந்து நீக்கிப்போடும். இந்த வேளையிலிருந்து, இயேசு கலிலேயாவில் கொஞ்சக்காலமே செலவழிப்பார். அவர் அவ்வப்போது சுருக்கமான பயணங்களுக்காகத் திரும்பி வருவார், ஆனால் அந்த மாகாணத் தில் அவரது பெருமளவு ஊழியம் இப்போது முடிவடைந்திருந்தது.*

*இரண்டாவது இடத்தில், இந்தப் பின்வாங்குதல் கிறிஸ்துவுக்கு, அவரது சீஷர்களுடன் தனித்து இருப்பதற்குத் தேவையான காலத்தைக்கொடுக்க வேண்டும்.*[48] *அவர்கள் யாவரும் அப்போதுதான் ஒரு கடினமான பயணத் திலிருந்து திரும்பி வந்திருந்தார்கள், அவர்களின் உடல்கள் ஓய்வுக்காகக் கதறின (மாற். 6:31அ). மற்றும், கர்த்தருடன் அவர்கள் இருக்கும் வேளை யானது, அவர்களின் முதல் பிரசங்கப் பயணத்தில் நடந்திருந்த யாவற்றை யும் குறித்துக் கலந்துரையாட அவர்களுக்கு உதவியிருக்கும்.*

*மீண்டும் ஒருமுறை, அவர்கள் கலிலேயாக் கடலின் குறுக்கே பயணம் செய்து கிழக்கு நோக்கிச் சென்றார்கள்.*[49] *மத்தேயுவும் மாற்குவும், அவர்கள் "தனிமையான இடத்திற்கு" சென்றதாகக் கூறினார்கள் (மத். 14:13அ; மாற். 6:31அ), அதே வேளையில் லூக்கா, அவர்கள் "தனித்திருக்கும்படி பெத்சாயிதா என்னும் பட்டணத்தைச் சேர்ந்த வனாந்தரமான ஒரு இடத்துக்குப் போனதாக" சுட்டிக்காண்பித்தார் (லூக். 9:10ஆ). கடலுக்கு அருகில் பெத்சாயிதா என்ற பெயரில் குறைந்தது இரண்டு ஊர்கள் இருந்தன.*[50] *கப்பர்நகூம் அருகில் இருந்த [இப்பெயர்கொண்ட] ஒரு ஊரை, நாம் ஏற்கனவே அறிந்துள்ளோம் (மாற். 6:45).*[51] *இயேசுவும் பன்னிருவரும் இப்போது பயணம் சென்று சேர்ந்த இந்த இன்னொரு ஊர், கலிலேயாக் கடலின் வடகிழக்குப் பகுதியில் இருந்த ஒரு கிராமமாக இருந்தது. இதன் முழுப்பெயர், பெத்சாயிதா ஜுலியல் என்பதாயிருந்தது.*[52] *அவர்கள் சென்று சேர்ந்த இடம், கடற்கரையில் இருந்த ஒரு வனாந்தரப் பகுதியாக, ஊருக்கு அருகாமையிலிருந்த பகுதியாக இருந்தது என்பது தெளிவு.*

## *முடிவுரை*

*கிறிஸ்துவுக்கும் அவரது அப்போஸ்தலர்களுக்கும் இளைப்பாறுதலுக் கான நம்பிக்கைகள் எதையும் ஏமாற்றத்திற்குள்ளாக்கும் கூட்டம் ஒன்று அவர்களுக்காகக் காத்திருந்ததைப் பற்றிய வரலாறுடன் நாம் அடுத்தமுறை இவ்வேத வசனப்பகுதியைத் தொடருவோம். நமது படிப்பின் இப்பகுதியை நான் முடிக்கும் இவ்வேளையில், நமது பாடத்தில் இருந்த ஐந்து சிந்தனை*

*களை வெளிக்கொண்டு வர என்னை அனுமதியுங்கள்:*

*(1) "அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்" (மத். 9:37) என்பது இன்னமும் உண்மையானதாகவே இருக்கிறது. நாம் பதில்செயல் செய்யக் கடவோம், ஏனெனில் நமது தேவன் அழைக்கின்றார்.*

*(2) தேவன் "அறுப்புக்கு எஜமானாக" இருக்கின்றார் (மத். 9:38), மற்றும் அவரே விளையச் செய்கிறவர் (1 கொரி. 3:6) என்பது இன்னமும் உண்மை யானதாகவே இருக்கிறது. நாம் வைராக்கியமாய் இருக்கக்கடவோம், ஏனெனில் நமது தேவன் ஆசீர்வதிக்கின்றார்.*

*(3) நாம் "இலவசமாய்ப் பெற்றுள்ளோம்," நாம் "இலவசமாய்க் கொடுக்க வேண்டும்" (மத். 10:8) என்பது இன்னமும் உண்மையானதாகவே இருக்கிறது. நாம் பெருந்தன்மையைக் கற்றுக்கொள்ளக்கடவோம், ஏனெனில் நமது தேவன் பராமரிக்கின்றார்.*

*(4) ஆவிக்குரிய வெற்றியானது "பொல்லாத ஆவிகளின் சேனைகளிடத் திலிருந்து" (எபே. 6:12) அபாயத்தைக் கொண்டுவருகிறது என்பது இன்னமும் உண்மையானதாகவே இருக்கிறது. நாம் தைரியமாக நிலைத் திருக்கக்கடவோம், ஏனெனில் நமது தேவன் பாதுகாக்கின்றார்.*

*(5) சோதனைகள் வருகிறபோது, தப்பிக்கொள்ளும் போக்கைத் தேவன் உண்டாக்குகிறார் (1 கொரி. 10:13) என்பது - அது கலிலேயாக் கடலின் மறுபுறத்தில் இருந்தாலும் கூட - இன்னமும் உண்மையானதாகவே இருக்கிறது. நாம் விசுவாச நிறைவுடன் நிலைத்திருக்கக்கடவோம், ஏனெனில் நமது தேவன் [தேவையானவற்றை] அளிக்கின்றார்.*

*நமது பாடங்கள் யாவும் நம்மை இயேசுவினிடத்தில் நெருங்கிச் சேர்க்க வேண்டும் என்றும் தேவனுக்குள் நமது விசுவாசத்தைப் பெலப்படுத்த வேண்டும் என்றும் நான் ஜெபிக்கின்றேன்.*

## குறிப்புகள்

*இந்தப் பாடத்தில் நான் எனது வழக்கமான செயல்முறையை மாற்றிக் கொள்ளப் போகின்றேன். வேத பாடப்பகுதியுடன் தொடர்புடைய வகையில் ஒரு பிரசங்கத்தை மாத்திரம் கொடுப்பதற்குப் பதிலாக நான் இவ்விடத்தில் இரண்டு பிரசங்கங்களை உள்ளடக்குகின்றேன். முதலாவது பிரசங்கமானது, மத்தேயு 10ல் இயேசு தமது அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்த அறிவுறுத்தல்கள் பற்றியது; இந்தப் பாடத்தைத் தொடர்ந்து இப்பிரசங்கம் வருகிறது. இரண்டாவது மத்தேயு 14ல் மற்றும் அத்துடன் தொடர்புள்ள மற்ற சுவிசேஷ வசனப்பகுதிகளில் பதியப்பட்டுள்ள யோவான் ஸ்நானனின் மரணத்தைப் பற்றியது. இது யோவான் ஸ்நானனின் வாழ்வு பற்றிய ஒரு தொகுப்புரையாகும், முதல் பிரசங்கத்தைத் தொடர்ந்து இந்தப் பிரசங்கமும் தரப்பட்டுள்ளது.*

*"காணாமற்போன ஆடுகளை" (யூதர்களை) மீளக்கட்டுவிக்கும் அறை கூவலை, இன்றைய நாட்களில் "சத்தியத்திலிருந்து விலகிச் செல்பவர்களை" (அவிசுவாசியாகிப்போன கிறிஸ்தவர்களை; யாக். 5:19, 20; கலா. 6:1 ஆகியவற்றைக் காணவும்) மீண்டும் திருப்பிக்கொண்டுவரும் அவசியத்து*

*டன் ஒப்பிடுதல் என்பது மத்தேயு 10க்கான இன்னொரு அணுகுமுறையாக உள்ளது. நாம் பிரதான கட்டளையை (விலகியுள்ள பாவிகளுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்லுதல்) நிறைவேற்றுவதற்கு முன்பு "வரையறைக்குட்பட்ட கட்டளையை" (தவறுகின்ற கிறிஸ்தவர்களை மீளக்கட்டி எழுப்புதல்) நிறைவேற்ற வேண்டும் என்பது அவசியம் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*யோவானின் மரணத்தைச் சுற்றி நடந்த நிகழ்ச்சிகளை மட்டும் வைத்து ஒரு பிரசங்கம் பிரசங்கிக்கப்பட முடியும்.*

---

*குறிப்புகள்*

*[1]மத்தேயு 10:2-4ன் மீது அதிகமான படிப்பிற்கு, "கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில், "கூட்டத்தின் புயல்" என்ற பாடத்தில் காணவும். [2]நீங்கள் வாழ்கின்ற பகுதிகளில் பொருத்தமானதாக இருந்ததென்றால், "கடைசிப் பயணங்களை" மேற்கொள்ளும் இசைக்குழுக்களைப் பற்றி நீங்கள் குறிப்பிடலாம். சில வேளைகளில் இது உண்மையிலேயே அவர்களின் கடைசிப் பயணமாகி விடுகிறது. சில வேளைகளில் இது அவர்கள் தங்கள் இசை நிகழ்ச்சிகளுக்கு மக்களை கவர்ந்து இழுப்பதற்கான விளம்பரத் தந்திரமாக இருக்கிறது. ஆனால், இந்தப் பகுதியில் இது, உண்மையாகவே இயேசுவின் கடைசிப் பயணமாக இருந்தது. [3]"கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில் கிறிஸ்து வந்த வேளையில் இருந்த உலகம் என்ற பாடத்தில் ஏரோது பற்றிய தகவல்களைக் காணவும். [4]"ஸ்திரீகளும் பிள்ளைகளும் தவிர, சாப்பிட்ட புருஷர்கள் ஏறக்குறைய ஐயாயிரம் பேராயிருந்தார்கள்" (மத். 14:21). [5]"மேய்ப்பனில்லாத ஆடுகள்" என்ற சொற்றொடர், அவர்களின் ஆவிக்குரிய வகையிலான மாபெரும் தேவையைச் சுட்டிக்காண்பிக்கும் அளவை உருவகமாக உள்ளது. மேய்ப்பன் இல்லாத ஆடுகள், வழிகாட்டுதலும், போஷிப்பும் பாதுகாப்பும் இல்லாதவைகளாகிவிடுகின்றன. [6]தேவனே "விளையச் செய்கிறவராய்" இருக்கின்ற காரணத்தினால் (1 கொரி. 3:6, 7) அவரே "அறுப்புக்கு எஜமானாக" இருக்கின்றார். [7]"கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில், "அதிகாரம் உள்ளவராய்" என்ற பாடத்தில் காணவும். [8]"கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில், "ஒரு மும்முரமான நாள்" என்ற பாடத்தில் காணவும். [9]உலகில் நான் வாழும் பகுதியில் இந்தக் கருத்தை விளக்கும் சொற்றொடராக,* "Let them try their wings" *என்பது உள்ளது. பறவைகள் பற்றி பழக்கமுள்ள எவரும் இந்தக் கருத்தைப் புரிந்துகொள்ளுவார்கள். [10]இந்தச் சொற்றொடர் சீஷர்களின் சொந்த ஊர்களைக் குறிப்பிட்டிருக்கவும் சாத்தியக்கூறுண்டு.*

*[11]நான், மத்தேயு 10ன் அறிவுறுத்தல்களை இந்தப் பாடத்தில், இவ்வதிகாரத்திலிருந்து தேர்ந்துகொள்ளப்பட்ட வசனங்களின் மீதான துணைப்பாடத்தில், மற்றும் இதைத் தொடர்ந்து வரும் பிரசங்கத்தில் சுருக்கமாக ஆராய்ந்திருக்கின்றேன். இவ்விடத்தில் உள்ள அறிவுறுத்துதல்களை இயேசு எழுபது பேரை அனுப்பும்போது கொடுத்த அறிவுறுத்துதல்களுடன் ஒப்பிட்டுப்பார்த்தல் என்பது மதிப்புமிக்கதாக இருக்கும் (லூக். 10:1-16). [12]இந்த வரையறையின் காரணமாக, மத்தேயு 10 "வரையறைக்குட்பட்ட கட்டளை" என்று அழைக்கப்பட்டுள்ளது. இது (எல்லாருக்குமான) "பிரதான கட்டளையை" தருகிற மத்தேயு 28:18-20உடன் நேரெதிராக உள்ளது. [13]அவர்களின் பிரசங்கித்தலானது எல்லாப் பகுதிகளிலும் இயேசுவின் பெயரை நன்கு அறியச் செய்தது என்ற உண்மையினால் இது*

*மறைமுகமாய்க் குறிப்பிடப்படுகிறது (மத். 14:1; மாற். 6:13, 14ஐக் காணவும்).* [14]*மரித்தோரை உயிரோடெழுப்பும் வல்லமை, நோயாளிகளை அற்புதமாய்க் குணமாக்கும் வல்லமையுடன் பிணைக்கப்பட்டிருந்தது. நோயாளிகளை அற்புதமாய்க் குணமாக்குவதாக உரிமைகோரும் ஒருவர் மரித்தவர்களை உயிருடன் எழுப்பவும் வல்லமை கொண்டிருத்தல் என்பதே சீர்பொருந்தியதாக உள்ளது.* [15]*அறிவுறுத்துதல் பற்றிய மூன்று சுவிசேஷ விவரங்களும் ஒப்பிடப்படும்போது, உடுத்தத் தேவையானவற்றில் ஒன்றை மட்டும் அவர்கள் எடுத்துச் செல்ல கிறிஸ்து அனுமதித்தார், ஆனால் மாற்று உடையை அனுமதிக்கவில்லை என்று அவைகள் சுட்டிக்காண்பிப்பதாகக் காணப்படுகிறது. மேலும், அவர்கள் பணத்தையோ உணவுப் பொருட்களையோ எடுத்துச் செல்லக்கூடாது. இது அநேகமாக, ஒரு சிறிய பயணமாக, ஒரு சில வாரங்களில் முடிவடைவதாக இருந்திருக்கும் மற்றும் அவர்கள் உபசரிப்பை நடைமுறைப்படுத்தியிருந்த மக்களிடத்தில் சென்றார்கள் என்பதைச் சிந்தையில் வைத்துக் கொள்ளுங்கள். இந்தத் தடைகள் எல்லாப் பிரசங்கப் பயணங் களுக்கும் நடைமுறைப்படுத்தப்படவில்லை (லூக். 22:35, 36ஐக் கவனிக்கவும்).* [16]*"இயேசுவின் வரையறைக்குட்பட்ட கட்டளை பற்றிய குறிப்புகள்" என்ற [அடுத்துவரும்] துணைப்பாடத்தில் காணவும்.* [17]*இந்த வசனங்கள் சில வேளைகளில், ஞானஸ்நானத்திற்கு முன்பு கூறப்படும் விசுவாச அறிக்கையின் தொடர்பாகப் பயன்படுத்துகின்றன. இவ்வசனங்களின் வாக்குத்தத்தங்கள் அந்த அறிக்கைக்கு நடைமுறைப்படுகின்றன, ஆனால் இயேசுவை நாம் அறிக்கையிடுதல் என்பது நமது விசுவாசத்தை வெளிப்படையாக உறுதிப்படுத்திய செயலுடன் முடிவடைவதில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.* [18]*கிறிஸ்து, "சகல பிசாசுகளையும் துரத்தவும் ... அவர்களுக்கு வல்லமையும் அதிகாரம் கொடுத்து" என்று லூக்கா எழுதினார் (லூக். 9:1).* [19]*பட்டியலிடப்பட்டுள்ள வசனங்களுக்கு அப். நடபடிகள் புத்தகம் ஒரு நல்ல விளக்கவுரையாக உள்ளது.* [20]*வரையறைக்குட்பட்ட கட்டளையைப்பற்றிப் படிப்பதற்கான கூடுதல் ஆதாரமூலங்கள் குறிப்பு எண் 11ல் ஆலோசனையாகத் தரப்பட்டுள்ளன.*

[21]*மாற்கு 16:15, 16 வசனங்களிலும் பிரதான கட்டளை தரப்பட்டுள்ளது, மற்றும் இது லூக்கா 24:46, 47லும் மறைமுகமாக உணர்த்தப்பட்டுள்ளது.* [22]*அமெரிக்காவில் வாழ்பவர்கள், "இதை அப்படியே செய்யுங்கள்!"* ["just do it"] *என்ற நைக் கம்பெனியாரின் விளம்பரத்தைக் குறிப்பிட விரும்பலாம்.* [23]*பவுல் கொரிந்து நகரில் ஊழியம் செய்துகொண்டிருந்தபோது, பிற சபையாரிடத்திலிருந்து உதவி பெற்றார் (பிலி. 4:15).* [24]*"இராஜாவும் அவரது ஸ்தானாபதிகளும்" என்ற பிரசங்கத்தில், மத்தேயு 10ல் உள்ளவையும் இன்றைய நாட்களில் நடைமுறைக்கு ஏற்புடையதுமான சில அறிவுறுத்துதல்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றை நீங்கள் இந்தப் பாடத்தில் குறிப்பிட விரும்பலாம்.* [25]*இதே போன்ற பயணமாக பிற்பாடு அனுப் பப்பட்ட எழுபது பேர்களின் உணர்வெழுச்சியைக் காணவும் (லூக். 10:17).* [26]*"கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில் "ஏரோதுகளில் சிலர்" என்ற துணைப் பாடத்தைக் காணவும்.* [27]*இதனை மத்தேயு 16:13, 14உடன் ஒப்பிடவும். யூதர்கள் இயேசுவை மேசியா என்று நினைக்கவில்லை, ஏனென்றால் அவர்கள், மேசியா "பகட்டான சூழ்நிலைகளில்" வருவார் என்று எதிர்பார்த்திருந்தார்கள்; ஆனால் அவர் ஒரு தீர்க்கதரிசியாக இருக்கக்கூடும் என்று ஒப்புக்கொள்ள அவர்கள் மனவிருப்பமாக இருந்தார்கள். ஆண்டுகளினூடே, மனிதர்கள் [பலர்] இயேசுவைப் பற்றிய தங்களின் மதிப்பீடுகளில் சீராகக் குறைவுபட்டுள்ளார்கள்.* [28]*இவர்கள், இயேசுவும் யோவானும் ஒரே வேளையில் ஊழியம் செய்திருந்தார்கள் என்பதை அறிந்திருந்ததில்லை என்பது தெளிவு. அறியாமை என்பது மனிதர்களை அவர்கள் சொந்த யூகங்களை ஏற்படுத்துவதில் ஒருக்காலும் தடை செய்திருப்பதில்லை.*

*[29]யோவான் தமது வாழ்வுக் காலத்தின்போது, அற்புதம் எதுவும் செய்ததில்லை (யோவா. 10:41); ஆனால் ஒருவர் மரித்தோரிலிருந்து எழும்பக்கூடுமென்றால், அவர் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமைகள் கொண்டிருக்கவேண்டும் என்று சிலர் நம்பினார்கள். [30]இயேசு யோவானின் மரணத்தைப் பற்றிக் கேள்விப்பட்டபோது, அவர் கலிலேயாக் கடலினூடே கடந்து (அவர் ஐயாயிரம் பேர்களுக்கு உணவளித்த இடத்திற்குத் திரும்ப) பின்வாங்கிச் சென்றார் என்று மத்தேயு 14:13 கூறுகிறது. மாற்கு 6:30-32 வசனங்கள், சீஷர்கள் தங்களின் கலிலேயப் பயணத்தை முடித்துத் திரும்பி வந்தபின்பு உடனடியாக கடலின் மறுபுறத்திற்குப் பின்வாங்கிச் சென்றார்கள் என்று கூறுகிறது. இந்த விவரங்களை ஒப்பிட்டுப்படித்தலானது, யோவான் கொல்லப்பட்டபோது, இயேசுவும் அவரது சீஷர்களும் கலிலேயாவில் மூன்றாவது பயணத்தை மேற்கொண்டிருந்தார்கள் என்றும் அந்தப் பயணத்தின் முடிவில் யோவான் கொல்லப்பட்ட செய்தி கிறிஸ்துவை வந்தடைந்தது என்றும் சுட்டிக்காண்பிக்கிறது.*

*[31]"கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில் "கலிலேயாவுக்கு வடக்கில்" என்ற பாடத்தின் தொடக்கப் பகுதியில் காணவும். [32]ஏரோது (ஏரோது அந்திப்பா), பிலிப்பு (ஏரோது பிலிப்பு, I), மற்றும் ஏரோதியாள் ஆகியோரின் உறவுமுறையைப் பற்றி ''கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில் ''ஏரோதுகளில் சிலர்'' என்ற துணைப்பாடத்தில் காணவும். [33]நெருங்கிய உறவினர்களைத் திருமணம் செய்து கொள்வதை நியாயப்பிரமாணம் கண்டனம் பண்ணிற்று (லேவி. 18:1-18; 20:11-21). அது ஒரு மனிதன் தன் சகோதரன் உயிருடன் இருக்கையில் அவன் மனைவியை "திருமணம்" செய்து கொள்ளுவதையும் தடை செய்தது (லேவி. 18:16; உபா. 25:5-10). [34]அந்தச் செய்தியை யோவான் எப்பொழுது எப்படி எடுத்துரைத்தார் என்பதை மிகச் சரியாக நாம் அறிவதில்லை. இதன் சாத்தியக்கூறுகளுக்கு, ''வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய ஒரு சத்தம்'' என்ற பிரசங்கத்தைக் காணவும். [35]இந்த விவரிப்பை, அப். 24:24-26ல் பேலிக்ஸ், பவுலின் உரையைக் கவனித்தது பற்றிய விவரத்துடன் ஒப்பிட்டுக் காணவும். [36]அந்த நாட்களிலிருந்து புறதெய்வ வழிபாட்டாளர்களின் விருந்துகள் பற்றிய பொதுவான விவரங்களும், அத்துடன் ஏரோதுகளின் ஒழுக்கத் தராதரம் பற்றிய அறிவும் சேர்ந்து, இது எந்த வகையான விருந்தாயிருந்திருக்கும் என்பதில் எவ்வித சந்தேகத்தையும் விட்டு வைப்பதில்லை. [37]உலகப் பிரகாரமான எழுத்துக்களில் இருந்து நாம், இப்படிப்பட்ட விஷயங்களில் ''பொழுதுபோக்கு'' என்பதன் இயல்பைப் பற்றி அறிகின்றோம். புகழ்பெற்ற கற்பனைக் கதையொன்று சலோமியின் காட்சிப்படுத்துதலை "ஏழு முகத்திரைகளின் நடனம்'' என்று அழைக்கிறது. [38]''பின்பு சமயம் வாய்த்தது'' என்று மாற்கு 6:21 கூறுகிறது. இது ஏரோதியாளுக்குச் சமயம் வாய்த்ததைக் குறிப்பிடுகிறது. அவளது மகளின் நடனம் அந்த சமயம் வாய்த்ததின் ஒரு பகுதியாக இருந்தது. ஏரோதியாள் காம இச்சை நிறைந்த தனது கணவனை நன்கு அறிந்திருந்தாள். [39]இப்படிப்பட்ட ஊதாரித்தனமான வாக்களிப்புகள் கிழக்கத்திய ஆட்சியாளர் களுக்கே உரியவையாக இருந்தன (எஸ்தர் 5:3, 6; 7:2ஐக் காணவும்) - ஆனால் அப்படிப்பட்ட வாக்களிப்புகளை அனுகூலப்படுத்திக் கொண்டவர்களை ஆட்சியாளர்கள் இரக்கத்துடன் கண்ணோக்கியதில்லை. [40]கோடிஸ்வரரான ஹோவர்டு ஹியூக்கஸ் என்பவர், திருமணம் செய்து கொள்ளவிருந்த இளைஞன் ஒருவனுக்கு, ''அவன் விரும்புகின்ற எதுவும்'' தருவதாக வாக்களித்தது பற்றிய கதையொன்று கூறப்படுகிறது. அந்த இளைஞன், ஹோவர்டு ஹியூக்கஸ் மதித்துப் பாராட்டிய ஒரு சுவிசேஷ ஊழியரின் மகனாயிருந்தான். பிரசங்கியார்கள் இந்தக் கதையை ஒரு விவரிப்பாகப் பயன்படுத்தி, "ஹோவர்டு ஹியூக்கஸ் அப்படிப்பட்ட ஒரு வாக்களிப்பை உங்களுக்கு உறுதிப்படுத்தினால், நீங்கள் அவரிடத்தில் என்ன*

*கேட்பீர்கள்?'' என்று கேட்பதுண்டு. அந்தக் கதையின்படி, அந்த இளைஞன் தன்னடக்கத்துடன் வெள்ளிப்பொருட்கள் வேண்டுமென்று கேட்டான். உங்கள் உரையைக் கேட்பவர்கள் நன்கு அறிந்த ஒரு செல்வந்தரைப் பற்றி நீங்கள் குறிப்பிட்டு, ''அவர் உங்களுக்கு இவ்வாறு வாக்களித்தால், நீங்கள் என்ன கேட்பீர்கள்?'' என்று கேட்க விரும்பலாம்.*

*[41]மத்தேயு சுவிசேஷ விவரம், சலோமி எதைக் கேட்க வேண்டும் என்று ஏற்கனவே ஏரோதியாள் அவளுக்குப் பயிற்றுவித்திருந்தாள் என்ற கருத்தை குறிப்பிடுகையில், மாற்கு சுவிசேஷ விவரம், அந்த வாக்களிப்பு ஏற்படுத்தப்பட்ட பின்பு சலோமி தன் தாயிடம் சென்று என்ன கேட்கலாம் என்று கேட்டதாகக் குறிப்பிடுகிறது (மாற். 6:24). நிகழ்ச்சியின் மிகச் சரியான வரிசைமுறை முக்கியத்துவமற்றது. சலோமி தன் தாயிடம் சென்று கேட்டாள் என்பது, இது ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டது என்ற தோற்றத்தைத் தவிர்ப்பதற்காக நடிக்கப்பட்ட நாடகமாக இருக்கலாம். [42]சூழ்ச்சி செய்கின்ற மக்கள் மற்றவர்களிடத்தில் சூழ்ச்சி இருக்குமோவென்று சந்தேகப்படுகின்றார்கள். [43]இவனது தந்தையான மகா ஏரோது, இயேசுவின் பிறப்பு பற்றி அறிந்தபோது, எவ்வாறு பதில்செயல் செய்தான் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள் (மத். 21:3, 13). [44]அவர்கள் அநேகமாக, இயேசுவின் நடவடிக்கைகளின் மையப்பகுதியாகவும் அவரது பயணத்தின் முடிவில் வழக்கமாக வந்து சேரும் இடமாகவும் இருந்த கப்பர்நகூமுக்குத் திரும்பியிருக்கலாம். [45]இதை மாற்கு 3:20உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். [46]குறிப்பு எண் 30ஐ மறுகண்ணோட்டமிடவும். [47]மத்தேயுவின் சுவிசேஷ விவரம், "இயேசு ... தனியே போனார்'' (மத். 14:13) என்று கூறுகிறது, மாற்குவின் சுவிசேஷ விவரம், "அந்தப்படியே அவர்கள் [இயேசுவும், அப்போஸ்தலர்களும்] ... வனாந்தரமான ஓர் இடத்திற்குப் போனார்கள்" (மாற். 6:32) என்று கூறுகிறது. லூக்காவின் சுவிசேஷ விவரம் இவ்விரு சிந்தனைகளையும் ஒன்றிணைக்கிறது: ''அப்பொழுது அவர் அவர்களை[பன்னிருவரை]க் கூட்டிக் கொண்டு, தனித்திருக்கும்படி ... போனார்" (லூக். 9:10). [48]இந்தக் கணங்கள் இயேசுவுக்கு அவரது சீஷர்களுடன் இருக்க, "தரமான" மற்றும் "[போதுமான] அளவிலான" நேரத்தை அளித்திருக்கும் என்று அமெரிக்காவில் நாங்கள் கூறுவதுண்டு. [49]கடலின் கிழக்குக் கரைப்பகுதியில் முந்தின ஒரு பயணத்திற்கு, மாற்கு 4:35-5:21ஐ வாசிக்கவும். [50]இதற்கான நிரூபணம் என்ற வகையில் லூக்கா 9:10ஐக் காணவும். இயேசுவும் அவரது சீஷர்களும் கடலின் கிழக்குப் பகுதியில் இருந்த பெத்சாயிதா என்ற ஒரு ஊருக்குப் பயணம் சென்றார்கள்; ஆனால் அவர்கள் அங்கு சற்று நேரம் இருந்த பின்பு கிறிஸ்து தமது சீஷர்களை கடலின் மறுபுறத்தில் இருந்த இன்னொரு பெத்சாயிதா என்ற ஊருக்கு திரும்ப அனுப்பினார் (மாற். 6:45).*

*[51](அப்போஸ்தலரான) பிலிப்பு பெத்சாயிதாவிலிருந்து வந்தவர் என்றும், (யோவா. 1:44; 12:21), அதே பெத்சாயிதா ஊர், "அந்திரேயா பேதுரு என்பவர் களுடைய ஊர்" என்றும் (யோவா. 1:44) நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். இந்த பெத்சாயிதா யோர்தானுக்கு மேற்கில் கப்பர்நகூமிற்கு அருகில் இருந்திருக்க வேண்டும். [52]பக்கம் 245ல் உள்ள வரைபடத்தைக் காணவும்.*

*39*

# இராஜாவும் அவரது ஸ்தானாபதிகளும்

## மத். 10, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*மத்தேயுவின் சுவிசேஷ புத்தகத்தில், இராஜாவும் அவரது இராஜ்யமும் என்ற கருத்தின்மீது வலியுறுத்தம் செலுத்தப்படுகிறது.*[1] *நமது படிப்பில் இவ்விடம் வரைக்கும் மத்தேயு, இராஜாவின் மாண்புகளை வலியுறுத்தி, நிறைவேறின தீர்க்கதரிசனங்களையும் பலத்த அற்புதங்களையும் பற்றிய ஒரு பதிவேட்டை அளித்திருக்கிறார்.*

*ஆயினும், மத்தேயு 9ம் அதிகாரத்தின் முடிவில், இயேசு இராஜா ஒரு தேவையைக் கொண்டிருந்தார். அவர், "சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார்" (9:35). அவரது இருதயம் மக்கள் கூட்டத்தின்மீது மனமுருகியது (9:36); ஆனால் அறுவடை அதிகமாக இருந்தபோதிலும் வேலையாட்கள் குறைவாகவே இருந்தார்கள் (9:37). கிறிஸ்து இந்தப் பணிப்பொறுப்பைத் தனியாகச் செய்ய இயலாதிருந்தது; அவருக்கு உதவி தேவைப்பட்டது. செய்தியைப் பரப்புவதில் உதவி செய்வதற்கு அவர் பன்னிரெண்டு விசேஷ பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தார் (10:2-4).*[2]

*மத்தேயு 10ம் அதிகாரம், இயேசு அப்போஸ்தலர்களைக் கலிலேயாவில் பிரசங்கிக்க அனுப்புதல் பற்றிய விவரம் கொண்டதாக உள்ளது. இது இயேசு அவர்களுக்குக் கொடுத்த அறிவுறுத்துதல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது (மத். 10:5; 11:1ஐக் காணவும்). கட்டளைகளில் பெரும்பாலானவை அந்தக் குறிப்பிட்ட பயணத்துடன் தொடர்பு கொண்டிருந்தன. எடுத்துக்காட்டாக, பன்னிருவர் புறஜாதியாரிடமோ அல்லது சமாரியர்களிடமோ செல்லாமல் யூதர்களிடம் மாத்திரம் செல்ல வேண்டியிருந்தது (10:5, 6).*

*நாம் அதிகமாக நெருங்கிக் காணுகையில், கர்த்தர் அவர்களை ஒரு பிந்திய காலத்திற்கு, தாம் பரலோகத்திற்கு திரும்பச் சென்ற பின்பு அவர்கள் தமது பிரதிநிதிகளாக இந்த பூமியில் இருக்கும் காலத்திற்கு அவர்களைத் தயார் செய்வித்தார் என்றும் நாம் காண்கின்றோம். "அவர் நிமித்தம்" அவர்கள் "அதிபதிகளுக்கு முன்பாகவும், இராஜாக்களுக்கு முன்பாகவும்" கொண்டுபோகப்படுவது பற்றியும், அவர்கள் யூதர்களுக்கும் புறஜாதி*

களுக்கும் சாட்சிகளாக இருப்பார்கள் என்றும் அவர் [இயேசு] அவர்களை [அப்போஸ்தலர்களை]ப் பற்றிப் பேசினார் (வ. 18). புறஜாதியாரைத் தவிர்த்த இந்த நிகழ்ச்சி, இப்பயணத்தில் நடைபெறவில்லை. மாறாக, அந்தத் தீர்க்கதரிசனக் கூற்று, அப். நடபடிகள் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் (எடுத்துக்காட்டாக, அதிகாரங்கள் 23முதல் 26வரையில் காணவும்) போது நிறைவேற்றமடைந்தது. வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், அப்போஸ்தலர்களுக்கு இயேசுவின் அறிவுறுத்துதல் கள், அவர்களின் உடனடியான அறைகூவலுக்கு அப்பால் சென்றன.

அதிகாரம் 10, நமக்கும் பாடங்களைக் கொண்டுள்ளது. நான் இந்தப் பிரசங்கத்தில் இவ்வதிகாரத்தை முற்றிலுமாக எடுத்துரைத்து முடிக்க இயலாது, ஆனால் இதிலிருந்து கடந்த காலத்தில் இருந்த ஸ்தானாபதிகள் மற்றும் நிகழ்காலத்தில் இருக்கின்ற ஸ்தானாபதிகள் ஆகியோரைப் பற்றிய சிந்தனைகளை எடுத்துத்தர விரும்புகின்றேன்.

## கடந்த காலத்தில் ஸ்தானாபதிகள்

கடந்த காலத்தின் ஸ்தானாபதிகளுடன் நாம் தொடங்குவோம்: இவர்கள் கிறிஸ்துவுக்கென்று விசேஷித்த வகையில் ஒருவேளைக்காக ஸ்தானாபதிகளாயிருந்தவர்கள்.[3] இந்த மனிதர்கள் "அப்போஸ்தலர்கள்" என்று அழைக்கப்பட்டார்கள் (வ. 2). "அப்போஸ்தலர்" என்ற வார்த்தை யானது "அனுப்பப்பட்ட ஒருவர்" என்று நேரடியாக அர்த்தப்படும் கிரேக்க வார்த்தையின் ஒலி பெயர்ப்பு வார்த்தையாக உள்ளது. இந்த வார்த்தை சில வேளைகளில் அனுப்பப்பட்ட யாராவது ஒருவரைக் குறிப்பதற்காக பொதுவான அர்த்தத்தில் உபயோகப்படுத்தப்பட்டது - விசேஷமாகக் கர்த்தரால் அனுப்பப்பட்ட ஒருவரை (2 கொரி. 8:23; பிலி. 2:25), ஆனால் இந்தப் பன்னிரு மனிதர்களும் விசேஷித்தவர்களாய் இருந்தார்கள். இவர்கள் தனிச்சிறந்த தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டியிருந்தது (அப். 1:21, 22; 1 கொரி. 9:1; எபே. 4:11ஐக் காணவும்). இது பின்தொடர்ந்து வரும் சந்ததியினருக்கு பின்வைத்துச் செல்லப்படும் பதவியாக இருக்க முடியா திருந்தது.[4] வசனம் 2ல் இருந்து 4வரையுள்ள பகுதியில் இந்த விசேஷித்த ஸ்தானாபதிகள் பட்டியலிடப்பட்டுள்ளார்கள்:

> அந்தப் பன்னிரண்டு அப்போஸ்தலருடைய நாமங்களாவன: முந்தினவன் பேதுரு என்னப்பட்ட சீமோன், அவன் சகோதரன் அந்திரேயா, செபதேயுவின் குமாரன் யாக்கோபு, அவன் சகோதரன் யோவான், பிலிப்பு, பற்தொலொமேயு, தோமா, ஆயக்காரனாகிய மத்தேயு, அல்பேயுவின் குமாரன் யாக்கோபு, ததேயு என்னும் மறுநாமமுள்ள லெபேயு, கானானியனாகிய சீமோன், அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத்து என்பவைகளே.

இந்தப் பட்டியலை நாம் வாசிக்கையில், இரு உண்மைகள் நமக்கு உரைக்கின்றன: (1) உலகத்தின் நிலைப்பாட்டிலிருந்து கண்ணோக்குகையில், இவர்கள் சாதாரண மனிதர்களாய் இருந்தார்கள். இவர்கள், உயர்த்தப்

பட்ட சமூக அந்தஸ்து, விசேஷித்த பயிற்சி, தனிச்சிறப்பான திறமைகள் போன்ற எதுவும் இல்லாதவர்களாய் இருந்தார்கள். இவர்கள் ஒரு அசாதாரணமான பணிப்பொறுப்பை நிறைவேற்றுவதற்கென்று அழைக்கப் பட்ட சாதாரண மனிதர்களாய் இருந்தார்கள். கர்த்தர், எவரொருவரையும் மற்றும் ஒவ்வொருவரையும் பயன்படுத்த முடியும். (2) எந்த ஒரு நிலைப்பாட்டிலிருந்து நோக்கினாலும், இது ஒரு வினோதமான கலவையாக இருந்தது. எடுத்துக்காட்டாக, ரோமர்களுக்காக வரிவசூலித்துக் கொண்டிருந்த மத்தேயு, தீவிரவாதியான சீமோனுடன் சேர்ந்து ஊழியம் செய்துகொண்டிருந்தார். தீவிரவாதிகள் (இது ஆங்கில வேதாகமத்தில் Zealot என்றுள்ளது மற்றும், தமிழ் வேதாகமத்தில் செலோத்தே என்று ஒலிபெயர்க்கப்பட்டுள்ளது) என்பவர்கள் தீவிரவாதத்தில் பயிற்சிபெற்று, நாட்டினத்தின்மீது வைராக்கியமான கொள்கை கொண்டவர்களாய் இருந்தார்கள்.[5] அவர்கள் இயேசுவைச் சந்திப்பதற்கு முன்பு, சீமோன் ஒரு குறுவாளை மத்தேயுவின் நெஞ்சில் செருகக் கூடியவராக இருந்திருக்கலாம் - ஆனால் கர்த்தரோ எல்லா மக்களும் சமாதானத்தில் வாழ உதவி செய்ய முடியும்.

இவர்கள் விசேஷித்த ஸ்தானாபதிகளாய் இருந்ததால், மத்தேயு 10ன் எல்லா விஷயங்களும் நமக்கு நடைமுறைப்படும் என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது. இந்த அதிகாரம் அம்மனிதர்கள் மற்றும் அவர்களின் பணிப் பொறுப்பு பற்றி தனிச்சிறந்த பல அம்சங்களைக் கூறுகிறது.

### அவர்களின் விசேஷித்த மதிப்புகள் (வ. 1, 8)

அப்போஸ்தலர்களுக்கு விசேஷ மதிப்புகள் தரப்பட்டிருந்தன (அப். 2:43; 2 கொரி. 12:12; எபி. 2:1-4 ஆகிய வசனங்களைக் காணவும்). அவர்களுக்கு, பிசாசுகளைத் துரத்தவும், நோயாளிகளைக் குணமாக்கவும், மரித்தோரை எழுப்பவும் வல்லமையளிக்கப்பட்டிருந்தது (மத். 10:1, 8). இயேசு முதன்முறையாகத் தமது அற்புத வல்லமைகளைப் பகிர்ந்து கொண்டிருந்தார். தேவன் யாருக்கேனும் கட்டளை கொடுக்கிறபோது, அந்தக் கட்டளையை நிறைவேற்றுவதற்கு அவசியமான எல்லாவற்றையும் அவர்மீது பொழிகின்றார்.

பன்னிருவர் கொண்டிருந்த அதே வல்லமைகள் உங்களுக்கும் எனக்கும் தரப்பட்டிருப்பதில்லை, ஆனால் கொள்கை ஒன்றுபோலவே உள்ளது: தேவனுடைய கட்டளையை நிறைவேற்ற நமக்குத் தேவையானவற்றை அவர் நமக்குத் தருவார்.

### அவர்களுக்குத் தரப்பட்ட விசேஷித்த கட்டளை (வ. 5-7)

அப்போஸ்தலர்களுக்கு ஒரு விசேஷித்த கட்டளை தரப்பட்டது, இதை நாம் வரையறைக்குட்பட்ட கட்டளை என்று அழைக்கின்றோம். இது நோக்க அளவில் வரையறைக்கு உட்பட்டதாக உள்ளது: ஏற்கனவே குறிப்பிட்டபடி, அவர்கள் புறஜாதியாரிடத்திலோ அல்லது சமாரியர்களிடத் திலோ செல்லாமல், யூதர்களிடத்தில் மாத்திரம் செல்ல வேண்டியதா யிருந்தது (வ. 5, 6). இது தனது செய்தியிலும் வரையறைக்குட்பட்டதாக

*இருந்தது: அவர்கள், "பரலோக ராஜ்யம் சமீபத்திருக்கிறது" என்று பிரசங்கிக்க வேண்டியதாக இருந்தது (வ. 7). அவர்கள் வரவிருந்த ராஜ்யத்திற்கு மக்கள் தயாராவதற்காக மக்களை மனந்திரும்பும்படி கேட்டுக்கொள்ள வேண்டியதாக இருந்தது (மாற். 6:12; மத். 3:2; 4:17ஐக் காணவும்).*

*நமக்குத் தரப்பட்டுள்ள கட்டளை மாறுபட்டதாக உள்ளது; இதை நாம் பிரதான கட்டளை என்று அழைக்கின்றோம் (மத். 28:18-20; மாற். 16:15, 16). இது நோக்க அளவில் வரையறையற்றதாக உள்ளது: நாம் உலகமெங்கும் செல்ல வேண்டியதாயிருக்கிறது (மத். 28:19; மாற். 16:15). பிரதான கட்டளை தனது செய்தியிலும் வரையறையற்றதாக உள்ளது: நாம் சுவிசேஷத்தை அதன் நிறைவில் எல்லா மனிதர்களுக்கும் பிரசங்கிக்க வேண்டியதாயிருக்கிறது. கிறிஸ்து இராஜா வந்திருக்கின்றார் என்றும், அவரது இராஜ்யம்/சபை நிலைநாட்டப்பட்டுள்ளது என்றும், எவரொருவரும் அதற்குள் வரலாம் என்றும் நாம் கூறவேண்டியதாக இருக்கிறது!*

***அவர்களுக்குத் தரப்பட்ட விசேஷித்த அறிவுறுத்துதல் (வ. 9-16)***

*அப்போஸ்தலர்களுக்கு விசேஷித்த அறிவுறுத்துதல்கள் தரப்பட்டன: அவர்கள் இலகுவாக (பொருட்கள் எதுவும் எடுத்துச் செல்லாமல்) பயணம் செய்ய வேண்டியிருந்தது (மத். 10:9, 10) மற்றும் தங்களை ஏற்றுக் கொள்பவர்களின் வீடுகளில் தங்க வேண்டியிருந்தது (வ. 11-13அ). ஏற்றுக் கொள்ளாதவர்களிடம் அவர்கள் தங்கள் நேரத்தை வீணாக்காமல், புறக்கணிக்கப்படும்போது அவ்விடத்தை விட்டுக் கடந்து செல்ல வேண்டியதாக இருந்தது (வ. 13ஆ-15). அவர்கள் தங்கள் போதனையில் ஞானத்தை பயன்படுத்த வேண்டியதாயிருந்தது (வ. 16ஆ).*

*இந்த அறிவுறுத்துதல்கள் அவர்களுக்கென்றே குறிப்பாகத் தரப் பட்டன, ஆனால் உங்களுக்கும் எனக்கும் இவைகளைப் போன்ற பாடங்கள் அவசியமாக உள்ளன. நமக்குத் தேவையானவற்றை அளிக்கின்ற விஷயத் தில் நாம் கர்த்தரைச் சார்ந்திருக்க கற்றுக்கொள்ள வேண்டும். நாம் அவசர உணர்கருத்தினால் நிறைந்தவர்களாக இருக்க வேண்டும். நாம் கர்த்தருடைய ஊழியத்தில் முடிவெடுக்கும் விஷயங்களில் ஞானத்தையும் பகுத்தறிவையும் பயன்படுத்துவது அவசியமானது.*

***அவர்களின் விசேஷித்த ஊக்குவிப்பு (வ. 19, 20, 40-42)***

*கடைசியாக, அப்போஸ்தலர்களுக்கு விசேஷித்த ஊக்குவிப்பு தரப்பட்டிருந்தது: அவர்கள் கைது செய்யப்படும்போது, அவர்கள் என்ன பேசவேண்டும் என்பதைப் பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு கூறுவார் என்று உரைக்கப்பட்டதன் மூலம் அவர்கள் ஊக்கப்படுத்தப்பட்டார்கள் (வ. 19, 20). பர்ட்டன் காஃப்மேன் என்பவர், "இது புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தின ஏவுதலின் பலத்த கூற்றுக்களில் ஒன்றாக உள்ளது" என்று கூறினார்.[6] இதற்கு நேர்மாறாக, நீங்களும் நானும் மற்றவர்களுக்குப் "பதில் கொடுக்க" முடிபவர்களாய்*

*இருப்பதற்குப் படிக்க வேண்டியதாக உள்ளது (1 பேது. 3:15).*

*கிறிஸ்துவின் விசேஷித்த ஸ்தானாபதிகளாக அவர்கள் அவரைப் பிரதி நிதித்துவப்படுத்துவதாக கிறிஸ்துவின் நிச்சயப்படுத்துதலினாலும் அவர்கள் ஊக்கப்படுத்தப்பட்டார்கள். அவர்களை ஏற்றுக்கொள்ளுகின்ற எவரும் அவரையே [இயேசுவையே] ஏற்றுக்கொண்டார் என்று அவர்களுக்கு அவர் கூறினார் (வ. 40-42).[7] ஒரு நாட்டின் அரசர் அல்லது அதிபரால் கட்டளையிடப்படுதல் என்பது ஒரு மாபெரும் கனத்திற்குரிய விஷயமாக இருக்கும். "இராஜாதி இராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாக" (வெளி. 19:16) இருக்கின்றவரால் கட்டளையிடப்படுதல் என்பது இன்னும் எவ்வளவு அதிக கனத்திற்குரிய விஷயமாக இருக்கிறது!*

*அப்போஸ்தலர்கள் இயேசுவின் விசேஷித்த ஸ்தானாபதிகளாய் இருந்தார்கள் என்பதை நான் மீண்டும் உங்களுக்கு வலியுறுத்துகின்றேன். அவர்களுக்குத் தரப்பட்ட தனிப்பட்ட அறிவுறுத்துதல்கள் (தாங்கள் என்ன கூறவேண்டும் என்பதைப் பற்றி அவர்கள் எதையும் யோசிக்க வேண்டாம் என்பது போன்ற அறிவுறுத்துதல்கள்) நமக்கு நடைமுறைப்படுவதில்லை.*

## இப்போதைக்கான ஸ்தானாபதிகள்

*இந்த அதிகாரத்தில் நமக்கும் பாடங்கள் உள்ளன - எனவே நாம் நிகழ்காலத்தில் ஸ்தானாபதிகளாய் இருப்பவர்களிடமாய்த் திரும்புவோம்: இவர்கள் இயேசுவின் அன்றாட ஸ்தானாபதிகளாய் இருக்கின்றார்கள். நீங்களும் நானும், அப்போஸ்தலர்கள் இருந்தது போன்ற விசேஷித்த கருத்தறிவில் ஸ்தானாபதிகளாய் இருப்பதில்லை, ஆனாலும் நாம் இன்னமும் இப்பூமியில் கர்த்தரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றோம். பவுல் கொரிந்தியர்களுக்குப் பின்வருமாறு எழுதினார்:*

> *இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியா யிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புர வாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். அதென்ன வெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்குள் ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குத லின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.*
>
> *ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்தி சொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளா யிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம் (2 கொரி. 5:17-20).*

*பவுலின் வார்த்தைகள் அவரது சொந்த ஊழியத்திற்கு அடிப்படைக் குறிப்புக் கொண்டிருந்தன, ஆனால் சபை அதே போன்ற ஊழியத்தைக் கொண்டுள்ளது என்று - அதாவது, ஒவ்வொரு கிறிஸ்தவருமே மனிதர்களை யும் தேவனையும் ஒப்புரவாக்கும் பொறுப்புடையவர்களாக இருக்கின்றார் கள் மற்றும் நாம் அவ்வாறு செய்யும்போது, நாம் "கிறிஸ்துவுக்காக"ப்*

பேசுகின்றோம் என்று அது மறைமுகமாய் உணர்த்துவதாகக் காணப் படுகிறது.

இன்றைய நாட்களில் உண்மையான கிறிஸ்தவர்கள் இவ்வுலகில் இயேசுவின் பிரதிநிதிகளாக இருக்கின்றார்கள் என்று வேதவசனத்தின் பல பகுதிகள் வலியுறுத்துகின்றன; கிறிஸ்துவையும் அவரது உண்மையான பின்பற்றாளர்களையும் பிரித்தல் என்பது சாத்தியமற்றது என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது. யாரேனும் ஒருவர், இயேசுவின் சீஷர்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தாலும், அது அவர் இயேசுவுக்கே செய்த ஊழியமாகக் கருதப்படும் (மத். 10:42; 25:35, 40ஐக் காணவும்). சபையின் உறுப்பினர்களைச் சவுல் துன்புறுத்தியபோது (அப். 8:3), அவர் உண்மையில் கிறிஸ்துவையே துன்புறுத்திக் கொண்டிருந்தார் (அப். 9:4).

நாம் அவரது சரீரமான (1 கொரி. 12:13) சபைக்குள் ஞானஸ்நானம் பெற்றுள்ளோம், இது அவரது "நிறைவு" என்று கூறப்படுகிறது (எபே. 1:22, 23). நாம் ஞானஸ்நானம் பெறும்போது, நாம் கர்த்தரை "தரித்துக் கொள்ளுகின்றோம்" (கலா. 3:27). நாம் இயேசுவுக்குள் இருக்கின்றோம், மற்றும் அவர் நமக்குள் இருக்கின்றார் (ரோமர் 8:1; கொலோ. 1:27). நாம் ஒவ்வொருவரும், "... இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்று கூறமுடியும் (கலா. 2:20).

வில்லியம் பார்க்ளே என்பவர், "கிறிஸ்தவர் என்பவர், மனிதர்களுக்குக் கிறிஸ்துவின் ஸ்தானாபதியாக இருக்கின்றார். அவர் கிறிஸ்துவின் பிரசன்னத்திலிருந்து செல்லுகின்றார், தமது எஜமானரின் வசனத்தையும் வனப்பையும் தம்முடன் சுமந்து செல்லுகின்றார்" என்று எழுதினார்.[8] முன்பே குறிப்பிட்டபடி, நாம் அவரது கட்டளையைப் பெற்றிருக்கின் றோம்: கர்த்தருடைய பிரதிநிதிகளாக உலகம் முழுவதிலும் சென்று அவரது செய்தியை எல்லா மனிதர்களுக்கும் எடுத்துச் செல்லுதல் (மத். 28:18-20; மாற். 16:15, 16). இதைச் சிந்தையில் காத்துக்கொண்டவர்களாய், நாம் நமது வேத பாடப் பகுதிக்குத் திரும்பி அதிலிருந்து, கிறிஸ்துவின் நிகழ்கால ஸ்தானாபதிகளுக்கு நடைமுறைப்படக் கூடிய பொதுவான சத்தியங்களைத் தரவழைப்போம்.

**வாழ்வதற்கு ஒரு வாழ்க்கை (வ. 28, 32, 33, 37-39)**

கிறிஸ்துவின் ஸ்தானாபதிகள் என்ற வகையில், நாம் ஒரு விசேஷித்த வகையான வாழ்வை வாழ வேண்டும். நாம் இராஜாவை பிரதிநிதித்துவப் படுத்துகின்றோம் என்பதை நினைவில் வையுங்கள்!

இது தெய்வ பயம் என்ற பண்பைக் கொண்ட ஒரு வாழ்வாக இருக்க வேண்டும். இயேசு, "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப் படுங்கள்" என்று கூறினார் (மத். 10:28).

இது கர்த்தரை அறிவிப்பதில் தைரியம் என்ற பண்பைக் கொண்ட ஒரு வாழ்வாக இருக்க வேண்டும். கிறிஸ்து, "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற

*என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுத்தலிப்பேன்" என்று கூறினார் (வ. 32, 33). நாம் அவரை வார்த்தையினால் ஒப்புக்கொள்ள வேண்டும். பார்க்ளே என்பவர், "மிக அதிகமான மக்கள், தெளிவான/தைரியமான வார்த்தைகளைக் காட்டிலும் கோழைத்தனமான அமைதியினால் இயேசு கிறிஸ்துவை மறுதலிக்கின்றார்கள்" என்று கருத்துத் தெரிவித்தார்.[9] நாம் செய்கையினாலும் அவரை ஒப்புக்கொள்ள வேண்டும் (தீத்து 1:16ஐக் காணவும்). அமெரிக்காவின் அதிபர் தமக்கு இரகசிய சேவைகளைக் கொண்டிருக்கலாம்,[10] ஆனால் இயேசு அவ்வாறு எதையும் கொண்டிருப்பதில்லை. நீங்களும் நானும் நமது இராஜாவுக்கு நாம் ஊழியர்களாக இருக்கின்றோம் என்பதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள வேண்டும்!*

*இது சரியான முன்னுரிமைகள் என்ற பண்பைக் கொண்ட ஒரு வாழ்வாக இருக்க வேண்டும். தேவனும், இயேசுவும், இராஜ்யமும் எல்லாவற்றிற்கும் மேலாக வைக்கப்பட வேண்டும். அவர்கள் நமது குடும்பங்களைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக உள்ளனர். இயேசு, "தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல" என்று கூறினார் (வ. 37).[11] கர்த்தருடைய இராஜ்யமானது நமது உயிரைவிட/வாழ்வைவிட அதிகம் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. மீண்டும், கிறிஸ்து "என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்" என்று கூறினார் (வ. 39ஆ). தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் ரோமப் பேரரசின் உபத்திரவங்களை சந்தித்தபோது, இந்த வாக்குத்தத்தம் என்ன ஒரு ஆறுதலைக் கொடுத்திருந்தது!*

*இது சுயத்தை மறுத்தல் என்ற பண்பைக் கொண்ட ஒரு வாழ்வாக இருக்க வேண்டும். இயேசு, "தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல" என்று கூறினார் (வ. 38). இதுவே மத்தேயு சுவிசேஷத்தில் சிலுவையைப் பற்றி முதன்முதலாகக் குறிப்பிடும் இடமாக உள்ளது. பிற்பாடு இயேசு - நேரடி அர்த்தமாகவே - "தமது சிலுவையைத் தூக்கினார்." நாம் அவரைப் பின்பற்ற மனவிருப்பம் உள்ளவர்களாயிருக்க வேண்டும்.*

***சகிக்க வேண்டிய உபத்திரவம் (வ. 16-18, 21, 22, 34-36)***

*கிறிஸ்துவின் "ஸ்தானாபதிகள்" என்ற வகையில் நாம் உபத்திரவத்தை எதிர்பார்க்க முடியும். இயேசு தமது சீஷர்களிடத்தில், "ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்" என்று கூறினார் (வ. 16அ). கிறிஸ்து இராஜாதி இராஜாவாக இருப்பதால், இது வினோதமானதாக ஒலிக்கலாம், ஆனால் அதிகாரத்துவத்திற்கு எதிராகக் கலகம் செய்ததின் பதிவேடே வரலாறாக உள்ளது. அவர்கள் அவரை உபத்திரவப்படுத்தினார்கள் என்றால் (வ. 25), அவர்கள் ஏன் அவரது பின்பற்றாளர்களை உபத்திரவப்படுத்த மாட்டார்கள் (வ. 24)?*

*இவ்வதிகாரமானது மூன்று வகையான உபத்திரவங்களைக் குறிப்பிடு கிறது. முதலாவது, அந்த நாளில் இருந்த நிறுவனமயமாக்கப்பட்ட மதத்தி லிருந்து வந்த உபத்திரவமாக உள்ளது: "மனுஷரைக் குறித்து எச்சரிக்கை யாயிருங்கள்; அவர்கள் உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக் கொடுத்து, தங்கள் ஜெப ஆலயங்களில் உங்களை வாரினால் அடிப்பார்கள்" (வ. 17). நிறுவனமயமாக்கப்பட்ட மதத்தினால் உபத்திரவப்படுதல் என்றால் என்ன என்பதை இன்றைய நாட்களில் உலகின் சிலபகுதிகளில் வாழ்கின்ற கிறிஸ்தவர்கள் புரிந்துகொண்டுள்ளார்கள்.*

*இரண்டாவது, அரசாங்க அதிகாரிகளிடமிருந்து வந்த உபத்திரவமாக உள்ளது: "... என்னிமித்தம் அதிபதிகளுக்கு முன்பாகவும், இராஜாக்களுக்கு முன்பாகவும் கொண்டுபோகப்படுவீர்கள்'' (வ. 18அ). உடனே நாம், பவுலின் உபத்திரவத்தையும், முதல் இரத்தசாட்சிகளின் உபத்திரவத்தையும் நினைக்கின்றோம். மீண்டும், இன்றைய நாட்களில் உள்ள நமது சகோதரர் களில் சிலர் இவ்வகையிலான உபத்திரவத்தை அடைந்துள்ளார்கள், அடைகின்றார்கள்.[12]*

*மூன்றாவது வகையான உபத்திரவம் எதிர்பாராத ஆதாரமூலத்தில் இருந்து வருகிறதாக உள்ளது: இது குடும்பம் என்பதாகும்.[13]*

> *"சகோதரன் தன் சகோதரனையும், தகப்பன் தன் பிள்ளையையும், மரணத்துக்கு ஒப்புக்கொடுப்பார்கள்; பெற்றோருக்கு விரோதமாகப் பிள்ளைகள் எழும்பி அவர்களைக் கொலை செய்வார்கள்" (வ. 21).*
>
> *"பூமியின்மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணா திருங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன். எப்படியெனில், மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினையுண்டாக்க வந்தேன். ஒரு மனு ஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே" (வ. 34-36).*

*இயேசு தமது பின்பற்றாளர்களுக்குப் பின்வருமாறு எதார்த்தமாகக் கூறினார்: "என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர் கள்" (வ. 22அ). அவர்களிடத்தில் அவர் முற்றிலும் நேர்மை உள்ளவராயிருந் தார். அவர் பணிபற்றிய விவரிப்பைக் கொடுத்தார், பின்பு உண்மையில் அவர், "இந்தப் பணியை நீங்கள் விரும்புகின்றீர்களா?" என்று கேட்டார்.*

*புதிய ஏற்பாடு உபத்திரவத்தைப் பற்றி அதிகமாய்க் கூறுகிறபோது, நாம் ஏன் அதைப் பற்றி மிகவும் குறைவாகக் கூறுகின்றோம்?[14] தொடக்க கால சபையார் கூடிவந்தபோது, அவர்கள் கர்த்தருக்காக எதிர்கொள்ள வேண்டி யிருந்த அபாயங்களைப் பற்றிப் பேசினார்கள். நம்மில் சிலர், மிகவும் வேலை மும்முரமாக, மிகவும் களைப்பாக, மிகவும் வெயிலாக அல்லது மிகவும் குளிராக இருப்பதைப் பற்றி முறையிடுகின்றோம். நாம் வசதிக் குறைவுகளை விரும்பாதிருக்கும்போது, அவர்கள் உபத்திரவத்தைச் சகித்தார்கள். "இயேசு மாத்திரம் தனியே சிலுவையைச் சுமக்க வேண்டுமா?"*

*எதிர்பார்க்க வேண்டிய ஆதாரமூலங்கள் (வ. 26-31)*

*நான், மத்தேயு 10ல் கிறிஸ்துவின் வார்த்தைகள் எல்லாம் எதிர்மறையானவை என்ற மனப்பதிவை விட்டுச் செல்வதற்கு விரும்ப மாட்டேன். நாணயத்திற்கு மறுபக்கம் இருந்தது. இயேசுவின் "ஸ்தானாபதிகள்" என்ற வகையில், நாம் இராஜாவின் வல்லமைகளையும் ஆதார மூலங்களையும் நமது பயன்பாட்டிற்கென்று பெற்றுள்ளோம்.*

*இந்த அதிகாரத்தில் கர்த்தர், தமது சீஷர்களிடத்தில் பயப்பட வேண்டாம் என்று மூன்றுமுறை கூறினார்: உங்களுக்குக் கெடுதல் விளைவிக்கப்படும்போது நீங்கள் பயப்பட வேண்டாம், ஏனென்றால் முடிவில் சத்தியமே வெல்லும்: ''அவர்களுக்குப் பயப்படாதிருங்கள்; வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை; அறியப்படாத இரகசியமும் இல்லை" (வ. 26). சுவிசேஷம் "வீடுகளின் மேல்" அறிவிக்கப்படும் (வ. 27).[15]*

*உங்கள் உயிருக்கு/வாழ்வுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தப்படும்போது பயப்படாதிருங்கள், ஏனென்றால் உடலைக் கொல்வது மட்டுமே மனிதர்களால் செய்ய முடிந்த எல்லாமுமாக உள்ளது: "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்'' (வ. 28). யாரோ ஒருவர், ''பரிசுத்தவான்களே நீங்கள் அவருக்குப் பயப்படுங்கள், பின்பு நீங்கள் பயப்படுவதற்கு வேறு எதையும் கொண்டிருக்க மாட்டீர்கள்'' என்று எழுதியுள்ளார். ஜான் நாக்ஸ் என்பவரின் உடலைப் புதைத்தபோது, "இங்கு எந்த மனிதரையும் எதிர்கொள்ள ஒருபோதும் பயப்படாத அளவுக்கு தேவன்மீது அதிக பயபக்தி கொண்ட ஒருவர் உறங்குகின்றார்'' என்று கூறப்பட்டது.[16]*

*பயப்படாதீர்கள், ஏனென்றால் சர்வ வல்லமை நிறைந்த தேவன் உங்கள் பக்கம் இருக்கின்றார்!*

> *"ஒரு காசுக்கு[17] இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆதலால், பயப்படாதிருங்கள்; அநேக அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்" (வ. 29-31).*

## *முடிவுரை*

*இயேசு தமது அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்த அறைகூவல் - மற்றும் அவர் நமக்குக் கொடுக்கின்ற அறைகூவல் - வசனம் 39ல் தொகுத்துரைக்கப்படுகிறது: ''தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்." முதல் இரத்தசாட்சிகள் அக்கினி சுவாலைகளை அல்லது காட்டு மிருகங்களை தங்கள் உதடுகளில் பின்வரும் வார்த்தைகளுடன் எதிர்கொண்டார்கள்*

*என்று தொடக்க கால எழுத்தாளர்கள் நமக்குக் கூறுகின்றார்கள்: "என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்."*

*மத்தேயு 10:39 வசனம் இரத்த சாட்சிகளாக மரித்தவர்களுக்கு மாத்திரமான வசனமாக இருப்பதில்லை. இது நம் ஒவ்வொருவருக்கும் ஆனதாகவும் உள்ளது. இது, புதிய ஏற்பாட்டில் கர்த்தர் மிகவும் அடிக்கடி கூறியதாகப் பதிவு செய்யப்பட்டுள்ள கூற்றைக் கொண்டுள்ளது. இந்தக் கூற்று சுவிசேஷ விவரங்களில் ஆறுமுறை காணப்படுகிறது. (மற்ற ஐந்து முறைகளாவன: மத். 16:25; மாற். 8:35; லூக். 9:24; 17:33; யோவா. 12:25.) இயேசுவின் ஊழியத்தில் நாம் நமது ஜீவனை (உயிரை) இழப்பதன் முக்கியத்துவத்தை நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பு கின்றார். "தன் ஜீவனைக் கண்டடைகிறவன் அதை இழந்துபோகிறான், என்னிமித்தம் தன் ஜீவனை இழக்கிறவன் அதைக் கண்டடைவான்."*

*உங்களுக்கு விடுக்கப்பட்ட அழைப்பையும் உங்களுக்கு இடப்பட்ட கட்டளைகளையும் நீங்கள் புறக்கணித்தால், உங்கள் வாழ்வை உங்களுக் காக மட்டுமே சுயநலத்துடன் அபகரித்தால், நீங்கள் அதை இழந்து போவீர்கள். உங்கள் வாழ்வைக் கொண்டு நீங்கள் என்ன செய்வீர்கள்? இன்றைய நாள் அதைத் தீர்மானிக்கும் நாளாக உள்ளது.*[18]

---

*குறிப்புகள்*

*[1]"கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில் "நான்கு சுவிசேஷ விவரங்கள்" மற்றும் "மத்தேயு எழுதிய சுவிசேஷம்" என்ற பாடங்களில் காணவும். [2]"கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில் "கூட்டத்தின் புயல்" என்ற பாடத்தில் நாம் அப்போஸ்தலர்கள் தேர்ந்துகொள்ளப்பட்டதைப் பற்றி படித்தோம். [3]எபேசியர் 6:19ல் பவுல் தம்மைப் பற்றி "சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியாகிய நான்" என்று கூறினார். "ஸ்தானாபதி" என்ற வார்த்தை "முதிய" அல்லது "மிக முதிய" என்பதற்கான வார்த்தையின் வடிவம் ஒன்றில் இருந்து வருவதாக உள்ளது. சட்டப்படி, அந்த நாட்களில் உலகப் பிரகாரமான ஸ்தானாபதிகள் வயது முதிர்ந்த மனிதர்களாக இருந்தார்கள். பிலேமோன் 8ல் உள்ள "முதிர்வயதுள்ளவன்" என்ற வார்த்தை "ஸ்தானாபதி" என்றே மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று பல விளக்கவுரையாளர்கள் நினைக்கின்றனர். பவுல் ஒரு "ஸ்தானாபதியாக" இருந்திருந்தால், மற்ற அப்போஸ்தலர்களும் அவ்வாறே இருந்திருப்பார்கள். அப்போஸ்தலர்கள் இயேசுவைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்கள் என்று மத்தேயு 10 வலியுறுத்துகிறது. தம்மை அனுப்பினவரைப் பிரதிநிதித்துவப் படுத்துதல் என்பதே ஸ்தானாபதியின் அடிப்படைப் பணிப் பொறுப்பாக உள்ளது. [4]அப்போஸ்தலர்களைப் பற்றிய இந்தத் தகவல், இந்தப் பாடத்தொடரின் முந்தின பகுதியொன்றில் தரப்பட்டுள்ளது, ஆனாலும் அதைத் திரும்பக் கூறுவதில் மதிப்பு இருக்கக் கூடும். [5]தீவிரவாதிகள்* (Zealots) *என்பவர்கள் இயேசுவின் நாட்களில் இருந்த "பிற பிரிவினர்கள்" என்பதில் பட்டியலிடப்பட்டிருந்தார்கள். "கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில் கிறிஸ்து வந்த வேளையில் இருந்த உலகம் என்ற பாடத்தில் இதைப் பற்றிய விளக்கத்தைக் காணவும். [6]*James Burton Coffman, *Commentary on Matthew* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1968), 137. *[7]யோவான் 13:20ஐயும் காணவும். புதிய ஏற்பாட்டில் இயேசு கூறியுள்ளவை, அப்போஸ்தலர்கள்*

*எழுதியுள்ள அல்லது கூறியுள்ள விஷயங்களைக் காட்டிலும் கனம்மிக்கவை என்று சிலர் போதிக்கின்றார்கள். மத்தேயு 10:42 மற்றும் யோவா. 13:20 ஆகிய வசனங்கள் நாம் அப்போஸ்தலர்களின் போதனையை, அது இயேசுவின் போதனையாக இருப்பதால் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கின்றன. நாம் அப்போஸ்தலர்களை ஏற்றுக்கொண்டால், நாம் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுகின்றோம். இதற்கு மறுபுறத்தில், நாம் அவர்களை (மற்றும் அவர்களின் போதனையை)ப் புறக்கணித்தால், நாம் கிறிஸ்துவைப் புறக்கணிக்கின்றவர்கள் ஆகின்றோம்.* [8]William Barclay, *The Gospel of Matthew,* vol. 1, rev. ed., The Daily Bible Study Series (Philadelphia: Westminster Press, 1975), 361. [9]Ibid., 392. [10]U.S. Secret Service *என்பது அமெரிக்க நாட்டின் கருவூலத் துறையின் ஒரு முகமையாகும். மற்ற கடமைகளுடன் இந்தத் துறைக்கு அதிபரையும் அவரது குடும்பத்தையும் பாதுகாக்கும் பொறுப்பும் கட்டளையிடப்பட்டுள்ளது.*

[11]*மத்தேயு 10:37 மற்றும் அதன் மறைவான கருத்துக்கள் பற்றிய ஒரு சுருக்கமான கலந்துரையாடலுக்கு, "கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில் உள்ள "நமது இரண்டு குடும்பங்கள்" என்ற பாடத்தில் காணவும்.* [12]*அரசாங்கத்தாரால் உபத்திரவம் இல்லாத அமெரிக்க நாட்டில் நான் இதை பொதுவாக சமுதாயத்தினால் ஏற்படும் உபத்திரவத்திற்கு நடைமுறைப் படுத்துவதுண்டு.* [13]*வசனம் 34-36 வரையுள்ள பகுதிக்கான ஒரு சுருக்கமான கலந்துரையாடலுக்கு, "கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில் உள்ள "நமது இரண்டு குடும்பங்கள்" என்ற பாடத்தில் காணவும்.* [14]*பின்வரும் வசனங்களைக் காணவும்: ரோமர் 8:14-17; பிலி. 1:27-30; 1 பேது. 2:18-21; 5:8, 9; 2 தீமோ. 3:10-12.* [15]*டெக்ஸாஸின் கிளெபர்ன் என்ற இடத்தில் உள்ள வடக்கு ஆங்கிலின் தெரு கிறிஸ்துவின் சபை கூடிவரும் கட்டிடத்தில் ஒரு புறத்தில் ஏறக்குறைய சமதளமான மேற்கூரையொன்று உள்ளது. அந்தக் கூரையின்மீது பிரசங்கியார் பிரசங்கிக்க, சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதைக் கேட்பதற்கு மக்கள் அமர்வதற்காகக் கார்கள் நிறுத்துமிடத்தில் நாற்காலிகளைப்போட்டு அவர்கள் பல கூட்டங்களை நடத்தியிருக்கின்றார்கள்.* [16]Barclay, 386. [17]*"காசு" என்று இவ்விடத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது ரோமாபுரி அரசின் மிகச் சிறுமதிப்புள்ள செம்பு நாணயத்தைக் குறித்தது. இது ஏறக்குறைய ஒரு தினேரியத்தில் 1/15 பங்காக இருந்தது. (தினேரியம் என்பது ஒருநாள் உழைப்பிற்கான சராசரிக் கூலியாக இருந்தது.)* [18]*நீங்கள் இந்த பிரசங்கத்தைப் பயன்படுத்தும்போது, உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு, கர்த்தரிடத்தில் வருவது எப்படி என்றும் (மாற். 16:15, 16; அப். 2:37, 38), அவர்கள் வழிவிலகிச் சென்றிருந்தால் கர்த்தரிடத்தில் திரும்புவது எப்படி என்றும் (அப். 8:22; யாக். 5:16) கூற விரும்பலாம்.*

*40*

# வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய ஒரு சத்தம்

## யோவான் ஸ்நானனின் ஊழியம், ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*காலம், கி.பி. சுமார் 26ஆம் ஆண்டாக இருந்தது; இடம், யோர்தானுக்கு அப்பால் இருந்த பெத்தானி என்ற ஊராக இருந்தது. சுமார் முப்பது வயதே மதிக்கத்தக்க ஒரு பிரசங்கியார், சவக்கடலின் இருபுறமும் வாழ்ந்து கொண்டிருந்த மக்களைக் கலக்கிக் கொண்டிருந்தார். அவரிடத்தில், "நீர் யார்?" என்று கேட்பதற்காக ஆசாரியர்கள் மற்றும் லேவியர்கள் கொண்ட குழு ஒன்று வந்தது (யோவா. 1:19ஆ). அவர்களின் கேள்விக்கான காரணத்தைப் புரிந்து கொண்ட அந்தப் பிரசங்கியார், "நான் கிறிஸ்து அல்ல" (யோவா. 1:20ஆ) என்று பதில் அளித்தார். அவர்கள் தங்கள் விசாரணையில் விடாப்பிடியாக இருந்தார்கள்:*

> *அப்பொழுது அவர்கள்: ''பின்னை யார்? நீர் எலியாவா'' என்று கேட்டார்கள். அதற்கு: "நான் அவன் அல்ல" என்றான். "நீர் தீர்க்கதரிசியானவரா" என்று கேட்டார்கள். அதற்கும்: "அல்ல" என்றான். அவர்கள் பின்னும் அவனை நோக்கி: "நீர் யார்? எங்களை அனுப்பினவர்களுக்கு நாங்கள் உத்தரவு சொல்லும்படிக்கு, உம்மைக்குறித்து என்ன சொல்லுகிறீர்" என்று கேட்டார்கள் (யோவா. 1:21, 22).*

*பின்பு, புலனாகாத வகையிலான பின்வரும் பதில் வந்தது: ''நான் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன்" (யோவா. 1:23ஆ).*

*"வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன்" என்று தம்மையே அழைத்துக் கொண்ட அந்த இளைஞரின் பெயர் யோவான் ஸ்நானன் என்பதாக இருந்தது.[1] அவரது துறைச் சொல்லானது மேசியாவுக்கு முன்னோடுபவரைப் பற்றிக் கூறிய ஏசாயா 40ல் இருந்து வந்தது:*

> *''கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவாந்தர*

*வெளியிலே நம்முடைய தேவனுக்குப் பாதையைச் செவ்வை பண்ணுங்கள் என்றும், பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு சகல மலையும் குன்றும் தாழ்த்தப்பட்டு, கோணலானது செவ்வையாகி, கரடு முரடானவை சமமாக்கப்படும் என்றும் ..." வனாந்தரத்திலே கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று (ஏசா. 40:3-5).*[2]

யோவான் 1:23ல் உள்ள "வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம்" என்ற சொற்றொடர், யோவானின் கோட்பாட்டைத் தொகுத் துரைக்கிறது: முதலாவதாக மற்றும் முதன்மையானதாக, அவர் ஒரு குரலாக இருந்தார்; அவர் ஒரு செய்தியுடன் இருந்த மனிதராயிருந்தார். அந்தச் செய்தியானது தனிச்சிறப்பான ஒரு காட்சியமைவில் முன் வைக்கப்பட வேண்டியதாக இருந்தது: அது *வனாந்தரத்திலே* என்ற காட்சியமைவாக இருந்தது. யோவான் இயல்பான வனாந்தரப்பகுதி ஒன்றில் நேரடியாகப் பிரசங்கித்தார், ஆனால் ஏசாயா 40 மற்றும் யோவான் 1 ஆகிய அதிகாரங் களில் குறிப்பிடப்பட்ட "வனாந்தரம்" என்பது பாறைகளும் மணலும் தேள்களும் உள்ள பகுதிகளுக்கும் அதிகமானதாக இருந்தது. யோவான், பாவத்தின் வனாந்தரத்திலும் பிரசங்கித்தார். மற்ற எல்லாக் குரல்களும் அடக்கப்பட்டிருந்த ஒரு இடத்தில், அவர் ஒரு குரலாக இருப்பதற்குத் துணிந்தார்.

யோவான் என்ற மனிதரையும் அவர் தமது மற்றும் நமது நாட்களுக்குக் கொண்டிருந்த செய்தியையும் மதித்துப் பாராட்டுவதற்காக நாம் இந்தப் பிரசங்கத்தில், யோவானின் வாழ்க்கையைப் பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.[3]

## சுயத்தைச் சீராட்டிய ஒரு வனாந்தரத்தில் "உங்களை மறுத்து விடுங்கள்" என்று கூப்பிட்ட ஒரு குரல்

நான் யோவானைப் பற்றி நினைக்கும்போது, காற்றினாலே அலைவுபட்ட முடியும் வெயிலினால் கறுத்துப்போன தோலும் கொண்ட ஒரு மனிதரையே நினைத்துப் பார்க்கின்றேன். அவரது முரடான உடை ஒட்டக முடியினால் செய்யப்பட்டதாக இருந்தது. அவரது இடுப்பைச் சுற்றி ஒரு அகலமான தோல் கச்சை இருந்தது. அவர் நாட்டை விட்டு வெளியே வாழ்ந்து வந்தார், வெட்டுக்கிளியும்[4] காட்டுத் தேனுமே அவரது உணவாக இருந்தன. அவர், சுயமறுப்பு மற்றும் சுய ஒழுங்கு ஆகியவற்றின் தொகுப்புரையாக இருந்தார்.

இது போன்றதொரு மனிதரை உண்டாக்கியது எது? தேவபக்தியுள்ள பெற்றோர்கள் என்பது ஒரு காரணியாக இருந்தது. சகரியா என்ற பெயர் கொண்ட அவரது தந்தை, ஒரு ஆசாரியராக இருந்தார்: அவரது தாயார் எலிசபெத்து என்ற பெண்மணியாவார் (லூக். 1:5). அவர்களின் வாழ்க்கை யைப் பற்றி லூக்கா 1:6 பின்வருமாறு தொகுத்துரைக்கிறது: "அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படி

யேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களா யிருந்தார்கள்.” “அவர்களிருவரும்” என்பதுதான் அவ்வசனத்தின் மிகவும் வலிவார்ந்த பாகமாக உள்ளது. சிலர் தேவபக்தியுள்ள தாயைக் கொண்டிருந்து, ஆனால் தேவபக்தியுள்ள தந்தையைக் கொண்டிராமல் இருந்துள்ளார்கள். ஒரு சிலர், தேவபக்தியுள்ள தந்தையைக் கொண்டிருந்து, ஆனால் தேவபக்தியுள்ள தாயைக் கொண்டிராமல் இருந்துள்ளார்கள். யோவானின் பெற்றோர் இருவருமே [தந்தையும் தாயும்] கர்த்தர்மீது அன்புகூர்ந்து, அவரிட்ட கட்டளைப்படியே வாழ்ந்தார்கள். இதைக் காட்டிலும் பெரிய பரம்பரைச் சொத்து வேறு எதுவும் ஒரு மனிதனுக்கு இருக்க முடியாது.[5]

தேவபக்தியான ஒரு நோக்கம் என்பது இன்னொரு காரணியாக இருந்தது. நீங்கள் சகரியா மற்றும் எலிசபெத்து ஆகியோரின் வரலாற்றை நினைவில் வைத்திருக்கலாம்: அவர்கள் குழந்தைக்காக எப்படி ஏங்கினார் கள், சகரியாவுக்கு எப்படி ஒரு தூதன் தோன்றினார், கடைசியில் எலிசபெத்திடமிருந்து யோவான் எப்படிப் பிறந்தார் போன்ற விவரங்கள் உங்கள் நினைவில் இருக்கலாம்.[6] அந்த முதிர்வயதான ஆசாரியருக்கு, தேவாலயத்தில் தூதன் கூறிய வார்த்தைகள்மீது நான் கவனம் செலுத்த அனு மதியுங்கள்:

> சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது; உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக. உனக்குச் சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும். அவன் பிறப்பினிமித்தம் அநேகர் சந்தோஷப்படுவார்கள். அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனா யிருப்பான், திராட்ச ரசமும் மதுவும் குடியான், தன் தாயின் வயிற்றி லிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான். அவன் இஸ்ரவேல் சந்ததியாரில் அநேகரை அவர்கள் தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திருப்புவான். பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் (லூக். 1:13-17).

யோவானின் வாழ்வின் தொடக்கத்தில் இருந்தே, அவர் யார் என்பது பற்றியும், அவரது வாழ்வின் நோக்கம் என்னவாக இருந்தது என்பது பற்றியும் கேள்வி எதுவும் இருந்தது இல்லை. ஒவ்வொரு பிள்ளைக்கும் அவனது அல்லது அவளது வாழ்விற்குத் தேவன் ஒரு நோக்கம் கொண்டுள்ளார் என்பது அப்பிள்ளைக்கு அதன் பெற்றோரால் கூறப்பட வேண்டியது அவசியமாக உள்ளது.

தேவபக்தியின் பயிற்சி என்பது மூன்றாவது காரணியாக இருந்தது. [யோவானுக்கு] அந்தப் பயிற்சி தரப்பட்டது பற்றி நமக்குச் சிறிதளவே கூறப்பட்டுள்ளது, ஆயினும் கூட, அவர் சிறுபையனாக இருந்த வேளையில் சகரியாவும் எலிசபெத்தும் தூதன் கூறியிருந்ததை அந்தப் பையனிடம்

*பகிர்ந்து கொண்டு, கர்த்தர்மீது அன்புகூர்ந்து அவருக்குக் கீழ்ப்படியும்படி அவனை உற்சாகப்படுத்தியிருப்பார்கள் என்பதை கற்பனை செய்வது கடினமல்ல. வேத பாடப் பகுதியைப் பொறுத்தமட்டில், அவரது தொடக்க கால வாழ்வு பற்றி பின்வரும் மிகக் குறைவான விவரங்களே நமக்குத் தரப்பட்டுள்ளன: "அந்தப் பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பலங்கொண்டு, இஸ்ரவேலுக்குத் தன்னைக் காண்பிக்கும் நாள்வரைக்கும் வனாந்தரங் களிலே[7] இருந்தான்" (லூக். 1:80). சவக்கடலைச் சுற்றிலுமிருந்த அந்தத் தனிமையான பகுதிக்கு யோவான் எப்பொழுது அல்லது ஏன் சென்றார் என்று நாம் அறிவதில்லை[8] - ஆனால் தேவனுடைய ஞானத்தில், வனாந்தரப் பகுதி அவருக்குப் பயிற்சி முகாமாகத் தேர்ந்துகொள்ளப்பட்டது. அவரால் அந்த அடிப்படையான பகுதியிலிருந்து, சோதோம் கொமோரா என்ற பெருமையான பட்டணங்கள் ஒரு காலத்தில் இருந்த இடத்தைக் காண முடிந்தது,[9] இவைகள் சுய சீராட்டுதலின் விளைவுகளுக்கு மிகச் சரியான உதாரணங்களாக இருந்தன.*

*பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல சூழ்நிலையை விரும்பு கின்றார்கள். நம்மில் பலர், "நல்ல சூழ்நிலை" ஒன்றுக்கு, ஆரோக்கியமும் ஒத்திசைவுமான அமைவு தேவை என்று நினைக்கின்றோம். கிழக்கு யூதேயாவின் கரடுமுரடான வனப்பகுதியே யோவானின் தொடக்க கால சூழ்நிலையாக இருந்தது. அங்கு அவர் சுய ஒழுக்கத்தைக் கற்றுக் கொண்டார். அந்த இடத்திலிருந்து, சுய சீராட்டுதலின் வனாந்தரத்தில் "சுயத்தை மறுத்துவிடும்படியான" ஒரு குரலொலி எழுந்தது.*

*அந்தக் குரலை நாம் இன்று கேட்க முடியுமா? நாம் சுய சீராட்டுதலின் உலகத்தில் வாழ்கின்றோம்,[10] நமக்கு யோவானின் செய்தி மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. இயேசு, "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்றல்லவா கூறினார் (மத். 16:24).*

*யோவானின் கண்டிப்பான தன்னொழுக்க வாழ்வுமுறையின் காரணமாக (லூக். 7:33), அவர் பிசாசு பிடித்தவராயிருந்தார் என்று சிலர் நினைத்தார்கள். இந்த எச்சரிக்கை வார்த்தையைக் கேளுங்கள்: நாம் நம்மீது அக்கறை கொள்வதற்கு மாறாக பிறர்மீது அக்கறை கொண்டிருந்தால், நாமும் கூடப் பைத்தியம் பிடித்தவர்கள் என்றே இந்த உலகம் நினைக்கும். ஆயினும் அப்படிப்பட்ட ஒரு வாழ்வை இயேசு வலியுறுத்தினார். ஸ்நானனைக் குறித்துப் பேசும்போது அவர் [இயேசு] தம் உரையைக் கேட்டவர்களிடத்தில், "அல்லவென்றால், எதைப் பார்க்கப் போனீர்கள்? மெல்லிய வஸ்திரந்தரித்த மனுஷனையோ? அலங்கார வஸ்திரந்தரித்துச் செல்வமாய் வாழ்கிறவர்கள் அரசர் மாளிகைகளிலே இருக்கிறார்கள்" என்று கூறினார் (லூக். 7:25). யோவான் சொகுசான வாழ்வின்மீது ஆர்வமாக இருந்ததில்லை; அரசர்கள் தங்கள் கோட்டைகளில் தங்கள் ஆடம்பர வசதிகளைக் காத்துக் கொண்டு இருக்கட்டும். இயேசு பின்வரும் திகைப்புக்கு உரிய கூற்றையும் உரைத்தார்: "ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர் களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனு*

*மில்லை" (லூக். 7:28அ). இது, வனாந்தரத்தில் கூப்பிட்ட சத்தத்திற்கு எப்படிப்பட்ட பாராட்டாக இருந்தது!*

*நாம் ஒவ்வொருவரும் நமது வாழ்வை யோவானின் வாழ்வுடன் ஒப்பிட்டுப் பார்த்து, "நான் சுய ஒழுக்கமும் சுயமறுப்பும் உள்ள வாழ்வை வாழ்கின்றேனா?" என்று கேட்கக் கடவோம்.*

## மனநிறைவின் ஒரு வனாந்தரத்தில் "உங்கள் வழிகளை மாற்றுங்கள்" என்று கூப்பிட்ட ஒரு குரல்

*"காலம் நிறைவேறினபோது,"[11] "வனாந்தரத்திலே சகரியாவின் குமாரனாகிய யோவானுக்குத் தேவனுடைய வார்த்தை உண்டாயிற்று" (லூக். 3:2). யோவானின் வாழ்வில், தேவனுடைய வார்த்தையானது, ஓட்டப் பந்தய வீரருக்கு ஓட்டத்தைத் தொடங்க அறிவிக்கும் துப்பாக்கியின் பேரொலி போன்று, போராளிக்கு மணியோசை போன்று, வேட்டை நாய்க்கு விடுக்கப்படும் "சூ!" என்ற ஒலியைப் போன்று* ["Sic'im"[12]] *இருந்தது.*

*உடனடியாக யோவான் பிரசங்கிக்கத் தொடங்கினார், "அந்நாட்களில் யோவான் ஸ்நானான் யூதேயாவின் வனாந்தரங்களில் வந்து: 'மனந் திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது' என்று பிரசங்கம் பண்ணினான்" (மத். 3:1, 2). வரவிருந்த மேசியாவுக்காகவும் அவரது இராஜ்யத்திற்காகவும் மக்களைத் தயார் செய்வித்தல் என்பதே அவரது பணிப்பொறுப்பாக இருந்தது. அந்தப் பிரசங்கியார் தமது உரையைக் கேட்டவர்கள் தங்கள் வாழ்வைப் பழுது நீக்குவதற்கு செய்ய வேண்டிய அவசியமான செயல்கள் பற்றிக் கூறுகையில் வார்த்தைகளில் பளபளப்பு எதையும் ஏற்றவில்லை:*

> *அவன் தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படிக்குப் புறப்பட்டு வந்த திரளான ஜனங்களை நோக்கி: "விரியன்பாம்புக் குட்டிகளே! வருங்கோபத்திற்குத் தப்பித்துக்கொள்ள உங்களுக்கு வகை காட்டினவன் யார்? மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்; 'ஆபிரகாம் எங்களுக்கு தகப்பன்' என்று உங்களுக்குள்ளே சொல்லத் தொடங்காதிருங்கள்; தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்கு சொல்லுகிறேன்" (லூக். 3:7, 8).*

*நீண்ட காலமாகவே [யூத] மக்கள், தாங்கள் யூதர்களாக இருப்பதினாலேயே தேவன் தங்களை ஏற்றுக்கொள்வார் என்று நினைத்திருந்தார்கள். யோவானின் செய்தியானது ஒரு விழித்தெழ வைக்கும் கடியார மணிபோன்ற செய்தியாக இருந்தது - இது அவர்களை விழித்தெழும்படி செய்வதற்கு வடிவமைக்கப்பட்டிருந்தது! உண்மையில் அவர் அவர்களிடத்தில், அவர்கள் தங்கள் வாழ்வில் பிரதான மாற்றங்களை மேற்கொள்ளா*

*விட்டால், அவர்கள் "தேவனுடைய இராஜ்யத்திற்குத் தகுதியானவர்கள்" அல்ல என்றே கூறினார் (லூக். 9:62).*

> *அப்பொழுது ஜனங்கள் அவனை நோக்கி: "அப்படியானால் நாங்கள் என்ன செய்யவேண்டும்" என்று கேட்டார்கள். அவர்களுக்கு அவன் பிரதியுத்தரமாக: "இரண்டு அங்கிகளையுடையவன் இல்லாதவனுக்கு கொடுக்கக்கடவன்; ஆகாரத்தை உடையவனும் அப்படியே செய்யக்கடவன்" என்றான். ஆயக்காரரும் ஞானஸ்நானம் பெறவந்து, அவனை நோக்கி: "போதகரே, நாங்கள் என்னசெய்யவேண்டும்" என்று கேட்டார்கள். அதற்கு அவன்: "உங்களுக்குக் கட்டளை யிட்டிருக்கிறதற்கு அதிகமாய் ஒன்றும் வாங்காதிருங்கள்" என்றான். போர்ச்சேவகரும் அவனை நோக்கி: "நாங்கள் என்னசெய்ய வேண்டும்" என்று கேட்டார்கள். அதற்கு அவன்: "நீங்கள் ஒருவருக் கும் இடுக்கண்செய்யாமலும், பொய்யாய்க் குற்றஞ்சாட்டாமலும், உங்கள் சம்பளமே போதுமென்றும் இருங்கள்" என்றான் (லூக். 3:10-14).[13]*

*இன்றைய நாட்களில் நாமும் கூட இன்னமும் நேரடியாக உண்மைத் தன்மையை நேர்மையுடன் எடுத்துரைத்துப் பிரசங்கிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. நம்மை விழித்தெழுப்பி, நம்மைப் பரலோகத்திற்குத் தயாராக்கும் வகையிலான பிரசங்கித்தல் நமக்கு தேவைப்படுகிறது. எந்த ஒரு பாவியும் தனது பாவத்தைக் குறித்து ஒருபோதும் குற்ற உணர்வு அடையாதபடி பொதுவான சொற்றொடர்களில் பாவத்தைக் கண்டனம் பண்ணுதல் என்பது சாத்தியமானதாகவே உள்ளது. யோவானின் பிரசங்கித்தல் சுட்டிக்காண்பிப்பதாகவும் நடைமுறைக்கு உகந்ததாகவும் இருந்தது.*

*லூக்கா 3:18, "வேறு அநேக புத்திமதிகளையும் அவன் [யோவான்] ஜனங்களுக்குச் சொல்லி சுவிசேஷத்தைப் பிரசங்கித்தான்" என்று கூறுகிறது. "சுவிசேஷம்" என்ற வார்த்தை "நற்செய்தி" என்று அர்த்தப்படுகிறது. மக்கள் சுயநலத்துடன் இருக்கக் கூடாது, நேர்மையற்றவர்களாக இருக்கக் கூடாது, தங்கள் அதிகாரத்தை துர்ப்பிரயோகம் செய்யக் கூடாது என்று மக்களிடத்தில் கூறுதல் என்பது எந்தக் கருத்துணர்வில் "நற்செய்தியாக" இருந்தது? அது அவர்களின் மனநிறைவை இடித்துப் போட்டதால், அவர்கள் தங்கள் வாழ்வை மறுபறுசீலனை செய்யும்படி கட்டாயப் படுத்தியதால், அவர்கள் தங்கள்மீது தேவன் கிருபை பொழியக் கூடிய வகையிலான மக்களாக இருக்கும்படி உற்சாகப்படுத்தியதால், அது "நற்செய்தியாக" இருந்தது!*

*"அன்புடன் [முழுமையான] சத்தியத்தைப் பேசுகின்றவர்களை (எபே. 4:15; கலா. 4:16ஐக் காணவும்) நாம் மதிக்கின்றோமா? ஆம் என்றே நான் நம்புகின்றேன். பயமடைகின்ற அறுவைச் சிகிச்சை நிபுணரிடத்தில் செல்ல, நாம் விரும்புவதைக் காட்டிலும் அதிகமாக, பயமடையும் பிரசங்கியாரை விரும்புதல் கூடாது. [பய உணர்வுகொண்ட அறுவைச் சிகிச்சை நிபுணரையும் பய உணர்வுகொண்ட பிரசங்கியாரையும் நாம் அவ்வளவாக*

*விரும்பக் கூடாது.] "உங்கள் வழிகளை மாற்றுங்கள்!" என்ற செய்தி எங்கு தேவைப்படுகிறதோ, அங்கு அவ்வாறு கூப்பிடும் சத்தமாக நாம் இருக்க மனவிருப்பம் கொண்டுள்ளோம் என்றும் நான் நம்புகின்றேன் (கலா. 6:1; யாக். 5:19, 20ஐக் காணவும்).*

## சந்தேகத்தின் ஒரு வனாந்தரத்தில் "விசுவாசியுங்கள்" என்று கூப்பிட்ட ஒரு குரல்

*ஒரு நாளில், யோவான் யோர்தானுக்கு அருகில் பிரசங்கித்துக் கொண்டிருக்கையில், இயேசு அவரிடம் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும்படி வந்தார். நீங்கள் இந்த வரலாற்றை அநேகமாக அறிந்திருப்பீர்கள்: யோவான் எப்படி கிறிஸ்துவுக்கு ஞானஸ்நானம் கொடுக்க விரும்பாதிருந்தார், ஆனால் அவர் [கிறிஸ்து] எப்படி அவரை [யோவான் ஸ்நானனை] இணங்கச் செய்தார்; மற்றும் இயேசு ஞானஸ்நானம் பெற்ற பின்பு, தேவன் எப்படி பரலோகத்திலிருந்து பேசினார், பரிசுத்த ஆவியானவர் எப்படி புறாவடிவில் இறங்கி வந்தார் என்பவற்றை நீங்கள் அநேகமாக அறிந்திருப்பீர்கள் (மத். 3:13-17).[14]*

*இந்த வெளிப்பாடுகள் யாவையும், யோவான் தாம் யாருக்காக பாதையைத் தயாரித்து இருந்தாரோ அந்த மேசியா இந்த இயேசுவே என்பதை யோவானின் சிந்தையில் உறுதிப்படுத்தின! அந்த வேளையிலிருந்து, "இதோ, தேவ ஆட்டுக்குட்டி!" என்பதே யோவானுக்கு மிகவும் பிரியமான செய்தியாக இருந்தது.*

> *மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி ..." என்றான் (யோவா. 1:29).*
>
> *மறுநாளிலே யோவானும் அவனுடைய சீஷரில் இரண்டுபேரும் நிற்கும்போது, இயேசு நடந்துபோகிறதை அவன் கண்டு: "இதோ, தேவ ஆட்டுக்குட்டி" என்றான் (யோவா. 1:35, 36).*

*இயேசு ஒரு நல்ல மனிதர் மற்றும் ஒரு மாபெரும் போதகர் என்று மாத்திரம் யோவான் ஸ்நானன் போதிக்கவில்லை; அவர் நமது பாவங்களுக்குப் பலியாக வேண்டியிருந்தது, அவர் மூலமாகவே நாம் இரட்சிப்படைய வேண்டியிருந்தது என்றும் அவர் [யோவான்] போதித்தார்!*

*அவிசுவாசம் மற்றும் நம்பிக்கையின்மை ஆகியவை நிறைந்த உலகத்தில், யோவானின் தெளிவான கூப்பிடுதல் இன்னமும் கேட்கப்பட வேண்டியது அவசியமாக உள்ளது. இயேசு தேவனுடைய குமாரனாக இருக்கின்றார்! அவர் மாத்திரமே மனிதரின் ஒரே நம்பிக்கையாக இருக்கின்றார்! இதை நாம், யோவான் கொண்டிருந்த அதே உறுதிப்பாட்டுடன் பிரசங்கிக்கக் கடவோம்!*

## பெருமையின் ஒரு வனாந்தரத்தில் "தாழ்மைப்படுங்கள்" என்று கூப்பிட்ட ஒரு குரல்

*இயேசுவின் ஞானஸ்நானம் யோவான் ஸ்நானனின் ஊழியத்தின் உச்ச கட்டமாக இருந்தது. அந்த வேளையில், அவரது [யோவான் ஸ்நானனின்] ஊழியம் அடிப்படையில் செய்து முடிக்கப்பட்டு இருந்தது, அந்த வேளையிலிருந்து அவரது ஊழியம் இறங்கு முகமாகத் தொடங்கியது. மேசியாவின் முன்னோடுபவர் என்ற வகையில் யோவான் அடிப்படையில் பின்வரும் மூன்று பொறுப்புகளைக் கொண்டிருந்தார்: மேசியாவுக்கு வழியைச் சரி செய்தல், மேசியாவுக்கு வழியை ஆயத்தப்படுத்துதல், பின்பு மேசியாவின் வழியில் இருந்து வெளியேறுதல்![15] அது யோவானைப் பொறுத்தமட்டில் நேர்த்தியாகவே இருந்தது; அவர் தமக்கென்று தேவன் திட்டமிட்டிருந்த எந்தப் பணிப் பொறுப்பையும் நிறைவேற்றத் தயாராக இருந்தார்.*

*யோவானின் உண்மையான மாபெரும் தன்மைக்கு ஒரு திறவுகோலாக உள்ள வசனப்பகுதியான யோவான் 3ம் அதிகாரத்திற்கு என்னுடன் வாருங்கள். கிறிஸ்துவின் பிரபலத் தன்மை உயரத் தொடங்கினபோது, யோவானின் சீஷர்கள் யோவானிடத்தில் வந்து, "ரபீ, உம்முடனேகூட யோர்தானுக்கு அக்கரையில் ஒருவர் இருந்தாரே, அவரைக் குறித்து நீரும் சாட்சிகொடுத்தீரே, இதோ, அவர் ஞானஸ்நானங்கொடுக்கிறார், எல்லாரும் அவரிடத்தில் போகிறார்கள் என்றார்கள்" (வ. 26). அவர்களின் குரல்களில் இருந்த பொறாமையை உங்களால் கேட்க முடிகிறதா? உண்மையில் அவர்கள், "ஒரு காலத்தில் எல்லாரும் நம்மிடம் வந்தார்கள், ஆனால் இப்பொழுது அவர்கள் அவரிடம் போகின்றார்கள். ஒரு காலத்தில் நாம் மேடையின் மையப் பகுதியில் இருந்தோம், ஆனால் இப்பொழுது மையப்படுத்தும் வெளிச்சம் அவர்மீது விழுகிறது. நீர் அவருக்கு ஞானஸ் நானம் கொடுத்தீர்; அது உம்மை அவரைக் காட்டிலும் பெரியவராக்குகிறது என்பது அவர்களுக்குத் தெரியாதா?" என்று கூறினார்கள்.*

*படைத் தலைவர்கள் மத்தியில் பொறாமை இருந்த காரணத்தினால் யுத்தங்கள் இழந்துபோகப்பட்டுள்ளன. யோவானின் சீஷர்களுடைய பொறாமைப் போக்கு/விரோதப் போக்கு அவரால் ஊக்கப்படுத்தப் பட்டிருந்தது என்றால், அது இயேசுவின் தொடக்க கால ஊழிய இயக்கத்தின்மீது செய்திருக்கக் கூடிய சேதத்தைப் பற்றி நினைத்துப் பாருங்கள். அவர்களின் முறையீட்டுக்கு ஸ்நானனின் பதில்செயலைக் கவனித்து - வியப்படையுங்கள். முதலில் அவர், கிறிஸ்துவின் வெற்றி தேவனுடைய சித்தமாயிருந்தது என்று கூறினார்: "பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலொழிய, அவன் ஒன்றையும் பெற்றுக் கொள்ள மாட்டான்" (வ. 27). பின்பு அவர், நடந்துகொண்டிருந்த விஷயம் தம்மை மகிழ்ச்சிப்படுத்திற்று என்று வலியுறுத்தினார்:*

> *"நான் கிறிஸ்துவல்ல, அவருக்கு முன்னாக அனுப்பப்பட்டவன்" என்று நான் சொன்னதற்கு நீங்களே சாட்சிகள். மணவாட்டியை*

> *உடையவனே மணவாளன்; மணவாளனுடைய தோழனோ அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக் குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்; இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று (வ. 28, 29).*

*கடைசியாக, அவர் பின்வரும் குறிப்பிடத்தக்க வார்த்தைகளைப் பேசினார்: "அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்" (வ. 30). இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசி, அவற்றை மனப்பூர்வமாய் விரும்புதல் என்பது பெரிய, பெரிய மனிதர்களால் மட்டுமே முடியும்!*

*யோவானின் இக்கட்டான/இருதலையான நிலையைக் குறித்து எனக்குத் தெரிந்த வெற்றிகரமான பல பிரசங்கியார்கள் இடர்ப்படுகின்றார்கள். அவர்கள் இந்த உரிமைகோருதலை ஒப்புக்கொண்டாலும் இல்லாவிட்டாலும் மகிழ்வுடன் அனுபவிக்கின்றார்கள். ஆயினும் விதிப்படி, மதிப்பிற்குரிய பிரசங்கியார்கள் வயதாகும்போது, அவர்கள் பிரசங்கிப்பதற்கு ஒரு சில அழைப்புக்களையே பெறுகின்றார்கள், முக்கியப்படுத்தும் வெளிச்சம் இளம் பிரசங்கியார்கள்மீது விழுகின்றது. "அது நல்லது. அவர்கள் பெருக வேண்டும், நாம் சிறுக வேண்டும். தேவன் அவர்களோடே இருப்பாராக!" என்று கூறுவது நமக்கு எவ்வளவு கடினமானதாக உள்ளது!*

*தங்கள் தன்னலத்துடன் போராடிக் கொண்டிருப்பவர்கள் பிரசங்கியார்கள் மட்டும் அல்ல. நாம் பெற்றிருக்க வேண்டும் என்று நாம் நினைக்கின்ற பாராட்டைப் பிறர் பெற்றால் எப்படியிருக்கும்? மேன்மையான வேலைகள் அல்லது பதவி உயர்வுகளை மற்றவர்கள் பெற்றால் எப்படியிருக்கும்? அவர்களின் இந்த நிலைமைகள் பற்றி நாம் சந்தோஷமாக இருக்கின்றோம் என்று நேர்மையாகக் கூற முடியுமா? "அவர்கள் பெருக வேண்டும், நாம் சிறுக வேண்டும்" என்று நாம் உண்மைத் தன்மையுடன் கூறமுடியுமா?*

*நம்மில் சிலருக்கு, இதைக் காட்டிலும் பெரிய அறைகூவல் இருப்பதில்லை. "... தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்; தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்" என்பதை நினைவில் வையுங்கள் (யாக். 4:6ஆ). பெருமையின் வனாந்தரத்தில், "தாழ்மையாய் இருங்கள்!" என்று குரல் எழுப்பிக் கூப்பிட்ட யோவானைப் போல் நாம் இன்னும் அதிகமாய் மாறும்படிக்குத் தேவன் நமக்கு உதவுவாராக.[16]*

## கோழைத்தனத்தின் ஒரு வனாந்தரத்தில் "வீரமாயிருங்கள்" என்று கூப்பிட்ட ஒரு குரல்

*யோவானின் வாழ்வில் நடந்த மற்ற நிகழ்ச்சிகளைப் பற்றிப் படிக்க முடியும்,[17] ஆனால் அவர் வாழ்வில் நடந்த கடைசிக் காட்சியுடன் நாம் முடித்துக் கொள்வோம். அவரது பிரசங்கித்தல் சுட்டிக் காண்பிப்பதாகவும் நடைமுறைப்படியானதாகவும் இருந்தது என்று நாம் ஏற்கனவே உரைத்திருந்தோம். அது வலிவார்ந்த வகையில் தனிப்பட்டதாகவும் இருந்தது. இதற்கு, ஏரோது அரசனை அவர் [யோவான்] குற்றம் சாட்டியது என்பதைக் காட்டிலும் சிறந்த விவரிப்பு வேறு எதுவும் தரப்பட முடியாது.*

*காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோது தன் சகோதரனான பிலிப்புவின் மனைவி ஏரோதியாளினிமித்தமாகவும், தான் செய்த மற்றப் பொல்லாங்குகளினிமித்தமாகவும், யோவானாலே கடிந்து கொள்ளப் பட்டபோது (லூக். 3:19).*

*ஏரோது தன் சகோதரனாகிய பிலிப்புவின் மனைவி ஏரோதியாளினி மித்தம் யோவானைப் பிடித்துக் கட்டிக் காவலில் வைத்திருந்தான். ஏனெனில்: நீர் அவளை வைத்துக்கொள்வது நியாயமல்லவென்று யோவான் அவனுக்குச் சொல்லியிருந்தான் (மத். 14:3, 4).*

யோவானுக்கும் ஏரோதுவுக்கும் இடையில் மோதல் எவ்வாறு வந்தது என்பது பற்றி மிகச் சரியாக நாம் எதுவும் அறிவதில்லை. யோவான் பிரசங்கித்ததைக் கேட்க ஏரோது வந்தானா?[18] (யோவானின் பிரசங்கத்தைக் கேட்ட கூட்டத்தின் வெளி விளிம்பில் ஏரோது தனது இராஜரீகக் கூட்டத்தாருடன் அமர்ந்திருப்பதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது.) யோவான், ஏரோதுவின் கோட்டைகள் ஒன்றிற்கு ஒரு பயணம் மேற் கொண்டாரா? (ஏரோதுவின் அரண்மனையில் அந்தப் பிரசங்கியார் நின்று கொண்டு தமது செய்தியை பிரசங்கிக்கையில் அவரது கண்கள் பளிச்சிடுவதையும் கூட நான் பார்க்க முடிகிறது.) நமக்கு விவரங்கள் தரப்படவில்லை, ஆனால் கிரேக்க வேதபாடப் பகுதியானது, ஏரோது ஏரோதியாளைச் சேர்த்துக் கொண்டது நியாயமல்ல/சட்டத்தின் படியானதல்ல என்று அவனிடத்தில் யோவான் தொடர்ந்து கூறிக் கொண்டிருந்ததாகச் சுட்டிக்காண்பிக்கிறது.

இதற்கு தைரியம், ஏராளமான தைரியம் தேவைப்பட்டது! ஏரோது ஒரு முக்கியமான மனிதனாக, செல்வாக்குடன் உள்ள மனிதனாக இருந்த படியால் இதற்குத் தைரியம் தேவைப்பட்டது. யோவான் ஒரு தனிப்பட்ட கடிந்து கொள்ளுதலை ஏற்படுத்தியபடியால் இதற்குத் தைரியம் தேவைப்பட்டது. பிரசங்க மேடையின் பாதுகாப்பில் இருந்துகொண்டு, பொதுவாகப் பாவத்தைக் கண்டித்து உணர்த்துவதும், யாரேனும் ஒருவரிடம் தனிப்பட்ட முறையில், "நீங்கள் தவறு செய்கின்றீர்கள்" என்று உணர்த்துவதும் முற்றிலும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட விஷயங்களாக உள்ளன.[19] ஏரோதுவும் ஏரோதியாளும் கேட்க விரும்பியதை அல்ல ஆனால் அவர்கள் கேட்க வேண்டியதை யோவான் கூறியதால் இதற்கு தைரியம் தேவைப்பட்டது. பல "சுவிசேஷப் பிரசங்கங்கள்" எவரொருவரையும் குற்றம் உணர்த்துவது இல்லை, ஆனால் யோவான், "நீர் அவளை வைத்துக் கொள்வது நியாயமல்ல" என்று வெடித்தார் - மற்றும் அது அச்செய்தியைக் கேட்டவர்களைக் கலவரம் அடையச் செய்தது! அந்தத் தீர்க்கதரிசி, தமது வார்த்தைகள் தமது உயிருக்கே ஆபத்தாக முடியும் என்று அறிய வேண்டி யிருந்ததால் இதற்குத் தைரியம் தேவைப்பட்டது. ஏரோதியாளைப்[20] போல் ஒரு மனைவியை/வைப்பாட்டியைக் கொண்டிருந்த ஒரு ஏரோதுவை, ஒருவர் கோபமூட்டிவிட்டு, அதனால் ஏற்படும் விளைவுகளை துன்புற்று அனுபவியாமலிருப்பது என்பது முடியாத விஷயமாகும். யோவான் "காற்றினால் அசையும் நாணல்" அல்லவென்று இயேசு கூறியிருந்தார் (மத்.

*11:7). மாறாக, அவர் [யோவான்], பாவத்திற்கு எதிராகப் பேசிய தேவனுடைய உறுதி வாய்ந்த தைரியமான குரலொலியாக இருந்தார்!*

*மீண்டும் ஒருமுறை, இந்த நிகழ்ச்சித் தொடரின் விவரங்களை அறிய நீங்கள் விரும்பலாம்: யோவான் எவ்வாறு கைது செய்யப்பட்டார் மற்றும் கடைசியில் அவர், ஒரு மதுபான விருந்து, ஒரு நடனமாடும் பெண் மற்றும் ஒரு பழிவாங்கும் மனைவி/வைப்பாட்டி ஆகியவற்றின் விளைவாக எவ்வாறு தமது உயிரை இழந்தார் என்பவற்றை நீங்கள் அறிய விரும்பலாம்.[21] மனிதப் பாரம்பரியத்தின்படி, யோவானின் தலை ஏரோதியாளிடத்தில் கொண்டு வரப்பட்டபோது, அவள் ஒரு நீளமான ஊசியை எடுத்து அந்தத் தீர்க்கதரிசியின் நாவில் குத்தி, "இனிமேல் நீ, 'நீர் அவளை வைத்துக் கொள்வது நியாயமல்ல' என்று மீண்டும் ஒருக்காலும் கூறமாட்டாய்" என்று அலறியதாக ஒரு வரலாறு உள்ளது.*

*யோவானை வாயடைத்து விட்டதாக ஏரோதியாள் நினைத்திருக்கலாம், ஆனால் அவள் அதைச் செய்திருக்கவில்லை. தைரியம் வாய்ந்த ஒரு மனிதருடைய குரலை அமர்த்திப்போட முடியாது. ஸ்நானனின் மரணம் ஏரோதின் மனதை அரித்தது, அவன் இயேசுவின் ஊழியத்தைப் பற்றிக் கேள்விப்பட்டபோது, அவர் [இயேசு] மரித்தோரிலிருந்து எழுந்த யோவானாக இருக்கக் கூடிய சாத்தியக்கூறு அவரது சிந்தையில் அடிக்கடி வந்துபோயிற்று (மாற். 6:14). யோவான் மரித்துச் சற்றுக் காலத்திற்குப் பின்னும்கூட, அவரது செல்வாக்கானது, இயேசு தம்மைக் கேள்வி கேட்டவர்களுக்குப் பதில் அளிக்க யோவானின் ஊழியத்தைப் பயன்படுத்துமளவுக்கு அவ்வளவு பெரியதாக இருந்தது (மத். 21:23-27; லூக். 20:2-8).*

*யோவானுக்கு இருந்த தைரியத்தைத் தேவன் நமக்குக் கொடுப்பாராக: பாவம் என்பது உயர்ந்த இடத்திலோ அல்லது தாழ்ந்த இடத்திலோ, எங்கிருந்தாலும் அதற்கு எதிராகப் பேசக் கூடிய தைரியம்; அவர்களின் பாவங்களைக் குறித்து அவர்களிடம் தனிப்படச் செல்லக் கூடிய தைரியம்; மக்கள் எதை விரும்புகின்றார்கள் என்றல்ல ஆனால் அவர்களுக்கு எது தேவை என்ற கண்ணோக்கில், சாத்தியக்கூறான விளைவுகளைப் பொருட்படுத்தாமல், சரியானவற்றிற்காக நிற்கக் கூடிய தைரியம். இயேசு இன்னமும் நம் ஒவ்வொருவருக்கும் அறைகூவல் விடுக்கின்றார்: "... மரிக்க வேண்டியிருந்தாலும், உண்மையுள்ளவனாய் இரு. நீ உண்மையுள்ளவனாய் இருந்தால் ஜீவகிரீடத்தை நான் உனக்குத் தருவேன்" (வெளி. 2:10; புதிய நூற்றாண்டு மொழிபெயர்ப்பு).*

## *முடிவுரை*

*யோவான் "வனாந்தரத்தில் கூப்பிடுகிற ... ஒரு சத்தமாக இருந்தார்":*

*... சுயத்தைச் சீராட்டிய ஒரு வனாந்தரத்தில் "உங்களை மறுத்து விடுங்கள்" என்று கூப்பிட்ட ஒரு குரல்.*
*... மனநிறைவின் ஒரு வனாந்தரத்தில் "உங்கள் வழிகளை மாற்றுங்கள்" என்று கூப்பிட்ட ஒரு குரல்.*
*... சந்தேகத்தின் ஒரு வனாந்தரத்தில் "விசுவாசியுங்கள்" என்று கூப்பிட்ட*

ஒரு குரல்.

... பெருமையின் ஒரு வனாந்தரத்தில் "தாழ்மைப்படுங்கள்" என்று கூப்பிட்ட ஒரு குரல்.

... கோழைத்தனத்தின் ஒரு வனாந்தரத்தில் "வீரமாயிருங்கள்" என்று கூப்பிட்ட ஒரு குரல்.

யோவான் எவ்வாறு இப்படிப்பட்ட ஒரு குரலாக இருக்க முடிந்தது? அவரது இரகசியம் என்ன? அவர் கர்த்தருக்கும் அவரது சித்தத்தைச் செய்வதற்கும் தம்மை ஒப்புக்கொடுத்திருந்தார். இவ்விதமாக அவர் மாறுபட்டவராயிருக்கத் துணிந்தார். மற்ற குரல்கள் வாயடைக்கப் பட்டிருந்த இடத்தில் பேசுவதற்கு அவர் மனவிருப்பமாயிருந்தார்.

இன்றைய நாட்களில் தேவன் நமக்கு யோவானைப் போன்ற பல ஆண்களையும் பெண்களையும் தருவாராக. நாம் ஒவ்வொருவரும் இன்னும் அதிகமாய் யோவானைப் போல் இருப்பதற்குத் தேவன் நமக்கு உதவுவாராக![22]

---

குறிப்புகள்

[1]இந்தப் பிரசங்கத்தில் ஏதாவதொரு இடத்தில் நீங்கள், "ஸ்நானன்" என்ற வார்த்தையின் அர்த்தத்தை விளக்கப்படுத்த விரும்பலாம். [2]பறை சாற்றுவோர் அல்லது முன் அறிவிப்பவர்கள், ஒரு அரசனின் வருகையை அறிவிப்பதுடன் - தரை விரிப்புக்களை விரித்தல் மற்றும் (இந்த வேத பாடப்பகுதியில் வலியுறுத்தப்பட்டுள்ளது போல்) அரசர் பயணம் செய்ய ஒரு சாலையை ஏற்படுத்துதல் என்பன போன்ற - அவரது வருகைக்குத் தயாரிப்புப் பணிகளையும் செய்கின்றார்கள் என்பதை நீங்கள் விளக்கப்படுத்த விரும்பலாம். [3]இந்தப் பிரசங்கத்திற்கான எனது குறிப்புகள், நான் எனது ஆதாரமூலங்களைப் பதிவாகச் சேகரிக்கத் தொடங்குவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதப் பட்டவையாகும். உரியவருக்கு மதிப்பளிக்கத் தவறுபவனாயிருந்தால் என்னை மன்னிக்கும்படி முன்னதாகவே வேண்டிக் கொள்ளுகின்றேன். [4]இந்த சந்தர்ப்பப் பொருளில், "வெட்டுக்கிளிகள்" என்பவை நம்மில் பலர் வெட்டுக்கிளிகள் என்று அழைக்கும் உயிரினத்தைக் குறிப்பதில்லை. "Grasshoppers" என்பதைப் பற்றி நினைத்துப் பாருங்கள், நீங்கள் அதிகம் தவற மாட்டீர்கள். [5]நான் இப்படிப்பட்ட பரம்பரைச் சொத்தைக் கொண்டிருந்தமைக்காகக் கர்த்தருக்கு நன்றி செலுத்துகின்றேன். நீங்களும் இவ்விதமாக ஆசீர்வதிக்கப் பட்டிருந்தால், அதை இவ்விடத்தில் குறிப்பிட நீங்கள் விரும்பலாம். [6]இவ்வரலாற்றின் விவரங்களுக்கு, "கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில் "கிறிஸ்து வருகின்றார்!" என்ற பாடத்தில் காணவும். உங்கள் உரையைக் கேட்பவர்கள் இவ்வரலாற்றிற்குப் பழக்கமற்றவர்களாயிருந்தால், இதை நீங்கள் மறு கண்ணோட்டமிட விரும்பலாம். [7]லூக்கா 1:80ல் "வனாந்தரங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, யோவா. 1:23ல் "வனாந்தரம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட அதே அடிப்படை வார்த்தையாக உள்ளது. [8]யோவான் சிறுவனாக இருந்தபோதே அவரது பெற்றோர்கள் இறந்து போனார்கள் என்றும் அதுவே அவர் பாலைவனம்/வனப்பகுதிக்குச் செல்லுவதற்கான காரணமாக/வேளையாக இருந்தது என்றும் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளார்கள் - ஆனால் அது ஒரு யூகமாக மட்டுமே உள்ளது. [9]சோதோம் கொமோரா

*பட்டணங்கள், யோர்தான் நதி சவக்கடலில் கலக்கும் இடத்திற்கு அருகில் இருந்தன என்று சிலர் நம்புகின்றார்கள். [10]எனது குறிப்புகளில், நான் வாழும் இடத்திற்கு ஏற்ற வகையிலான, சுயத்தைச் சீராட்டுதல் பற்றிய உதாரணங்களைக் கொண்டுள்ளேன். உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குத் தக்காற்போன்று இந்தப் பகுதியை விரிவுபடுத்திக்கொள்ளுங்கள். ஒரு சில வசதிகள் மட்டுமே உள்ள சூழ்நிலையில் நீங்கள் வாழ்ந்தாலும் கூட, நடைமுறைப் பயன்பாடுகள் அப்போதும் ஏற்படுத்தப்பட முடியும்.*

[11]*கலாத்தியர் 4:4.* [12]"Sic'im" *என்பது* "sic him" *என்பதன் சுருக்கச் சொல்லாக உள்ளது.* "Sic" *என்பது தாக்குதலுக்கான ஒரு கட்டளையாகும்.* [*இதைத்தான் தமிழில் நாம் "சூ!" என்று நாயை ஏவுதல் என்று வழங்குகின்றோம்.*] *இந்த வாக்கியத்தில் உள்ள விவரிப்புகள் உலகில் நான் வாழும் பகுதிக்கு ஏற்புடையது. நீங்கள் வாழும் பகுதிக்குத் தக்காற்போன்று இதை மாற்றிக் கொள்ளுங்கள்.* [13]*இவ்வசனப் பகுதியை வாசித்த பின்பு, நீங்கள் வாழும் இடத்திற்குத் தக்காற் போன்ற நடைமுறைக் கருத்துக்களை ஏற்படுத்துங்கள். யோவானின் வார்த்தைகளில் பல ("போதுமென்றிருங்கள்" என்பது போன்ற வார்த்தைகள்) என்னைக் குற்றம் உணர்த்தியுள்ளன.* [14]*இயேசுவின் ஞானஸ்நானம் பற்றிய வரலாறு "கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது. அவ்வரலாறு உங்கள் மாணவர்களுக்குப் பழக்கமற்றதாக இருந்தால், இந்த நிகழ்ச்சிகளை நீங்கள் விவரிக்க விரும்பலாம்.* [15]This sentence was adapted from Charles R. Swindoll, *John the Baptizer* (Anaheim, Calif.: Insight for Living, 1991), 3. [16]*யோவானின் தாழ்மை என்பதன் வெளிச்சத்தில் காணும்போது, அவரே ஒருக்காலும் விரும்பியிராத ஒரு அந்தஸ்திற்கு அவரைச் சிலர் உயர்த்த முயற்சித்தல் என்பது முரண்பாடானதாக உள்ளது. கடந்த காலங்களில், இராஜ்யம்/சபை என்பது யோவானின் நாட்களிலேயே நிலைநாட்டப்பட்டிருந்தது என்று மனிதர்கள் பேசியது பொதுவானதாகவே இருந்தது, ஆனால் மத்தேயு அதிகாரம் 14ல் யோவானின் மரணத்தைப் பற்றிக் கூறுகின்றார், மற்றும் அதிகாரம் 16ல் இராஜ்யம்/சபை நிலைநாட்டம் பற்றிய வாக்குத்தத்தத்தைக் கூறுகின்றார். "கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில் லூக்கா 7:28ன் மீதான விளக்கவுரைகளை மறுகண்ணோட்டமிடவும். கடந்த காலங்களில் சிலர், "ஸ்நானன்" என்ற சொற்றொடரை, அச்சொற்றொடரினால் தங்களை அழைத்துக் கொள்ளுவதை நியாயப்படுத்துவதற்குப் பயன்படுத்தினார்கள். "ஸ்நானன்" என்ற சொற்றொடர் எதை அர்த்தப்படுத்துகிறது என்று நீங்கள் விளக்கம் தர விரும்பலாம்.* [17]*எடுத்துக்காட்டாக, யோவான் சிறையில் இருந்தபோது கணநேரம் சந்தேகத்தோடு இருந்தது பற்றிய விவரம் இங்கு கலந்துரையாடப் படவில்லை. அந்த நிகழ்ச்சி மனதைக் கவரக் கூடியதாக இருந்தது ("கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில் "இயேசு பராமரிக்கின்றாரா?" என்ற பாடத்தைப் படிக்கவும்), ஆனால் அது இந்த எடுத்துரைப்பின் பொதுவான போக்கிற்குப் பொருந்துவதில்லை.* [18]*ஏரோது, யோவான் கூறுவதைக் கவனிக்க ஆர்வமாயிருந்தான் என்று பிற்பாடு எடுத்துரைக்கப்பட்டுள்ளது (மாற். 6:20), எனவே இது சாத்தியக் கூற்றின் வட்டாரத்துக்குப் புறம்பே இருப்பதில்லை.* [19]*இந்தப் பத்தியில் எடுத்துரைக்கப்பட்டுள்ள சத்தியங்களில் சில, "மனநிறைவின் வனாந்தரத்தில் 'உங்கள் வழிகளை மாற்றுங்கள்' என்று கூப்பிட்ட ஒரு குரல்" என்ற தலைப்பின் கீழ் கூறப்பட்டவைகள் போன்றுள்ளன. மீண்டும் கூறுவதற்கு நான் மன்னிப்பை வேண்டுவதில்லை. இரட்டை வலியுறுத்தமானது, இந்த சத்தியங்களின் முக்கியத்துவத்தை நிலைநாட்டுவதற்கு உதவி செய்ய வேண்டும்.* [20]*ஏரோதும் ஏரோதியாளும் புதிய ஏற்பாட்டின் ஆகாப் மற்றும் யேசபேல் என்று அழைக்கப்பட்டுள்ளார்கள்.*

*[21]உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு இவ்வரலாறு பழக்கமற்றது என்றால், இதை நீங்கள் சுருக்கமாய்க் கூறுவதற்கு விரும்பலாம். (இந்தப் புத்தகத்தில் முன்பு உள்ள "வெற்றியின் அபாயம்" என்ற பாடத்தில் காணவும்.) [22]நீங்கள் இதை ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தி, ஒரு அழைப்பை விடுத்தால், அந்த அழைப்பானது தனிநபர்கள் தங்கள் வாழ்வைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுப்பதற்கானது என்று வலியுறுத்துங்கள். புதிய ஏற்பாட்டில் கட்டளையிடப்பட்டுள்ள விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் என்ற பதில்செயலானது (மாற். 16:15, 16; அப். 2:38), கர்த்தரிடத்தில், ''நான் என் வாழ்வை உமக்கு அர்ப்பணிக்கின்றேன், நான் செய்யும்படி நீர் விரும்புகின்றது எதுவாயினும் நான் அதைச் செய்வேன்'' என்று கூறுவதாக உள்ளது.*

*41*

# சோதனைக்கான காலம்

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #16*

V. *இரண்டாம் பஸ்காவில் இருந்து மூன்றாம் பஸ்கா வரை (தொடர்ச்சி).*

X. *ஏரோதுவின் ஆளுகைப் பகுதியில் இருந்து இயேசு விலகிச் செல்லுதல் (மற்றும் திரும்பி வருதல்) (தொடர்ச்சி).*

2. *ஐயாயிரம் ஆண்களுக்கு உணவளித்தல் (மத். 14:13-21; மாற். 6:33-44; லூக். 9:11-17; யோவா. 6:2-14).*
3. *தண்ணீரின்மீது நடத்தல் (மத். 14:22-36; மாற். 6:45-56; யோவா. 6:15-21அ).*

Y. *ஜீவ அப்பம் பற்றி இயேசுவின் உரை (மற்றும் பேதுருவின் அறிக்கை) (யோவா. 6:21ஆ-71).*

### அறிமுகம்

*இந்தப் பாடம், ஐயாயிரம் பேர்களுக்கு உணவளித்தல் என்ற இயேசுவின் குறிப்பிடத்தக்க அற்புதங்களில் ஒன்றுடன் தொடங்குகிறது. இது ஜீவ அப்பம் பற்றிய பிரசங்கம் என்ற அவரது மிகவும் முக்கியமான உரைகளில் ஒன்றுடன் முடிவடைகிறது. முதலாவது, அவரது பூமிக்குரிய ஊழியத்தில் உயர்வான வேளைகளில் ஒன்றாக இருந்தது; இரண்டாவது மிகவும் தாழ்வான தருணங்களில் ஒன்றாக இருந்தது.*

*இந்தப் பாடத்தில் நாம், இரண்டு வார்த்தைகளின்மீது கவனம் செலுத்துவோம். முதலாவது, "சோதனை" என்ற வார்த்தையாக உள்ளது. திரளான கூட்டத்திற்கு இயேசு உணவளிப்பதற்கு முன்பு, அவர் பிலிப்பு விடம் "இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம்?" என்று கேட்டார் (யோவா. 6:5ஆ). இதைக் கர்த்தர், "அவனை[பிலிப்புவை]ச் சோதிக்கும்படி" கேட்டார் என்று யோவான் எழுதினார் (யோவா. 6:6). இதைத் தொடர்ந்து, கிறிஸ்து தம் அப்போஸ்தலர்களுடன் மேற்கொண்ட உரையாடல், பன்னிருவரில் [பிலிப்புவுடன் கூட] மற்ற யாவரையும்கூட சோதித்தது.*

*இரண்டாவது வார்த்தை "நம்பிக்கை" அல்லது "விசுவாசம்" என்பதாகும். ஜீவ அப்பம் பற்றிய பிரசங்கத்தில், "நம்பிக்கை" என்ற வார்த்தையின் பல்வேறு வடிவங்கள் மீண்டும் மீண்டும் காணப்படுகின்றன (யோவா. 6:29, 35, 36, 40, 47). விசுவாசத்தின் அவசியத்தை இயேசு அதிகமதிகமாக வலியுறுத்தத் தொடங்கினார் என்று நாம் ஏற்கனவே கவனித்தோம்.[1]*

*கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் அவரில் உண்மையிலேயே விசுவாசம்*

கொண்டுள்ளார்களா இல்லையா என்பதை நிரூபிப்பதற்கான வேளை கிறிஸ்துவுக்கு வந்திருந்தது. "சோதித்தல்" மற்றும் "விசுவாசம்" என்ற வார்த்தைகள் இப்பாடத்தில் உள்ள நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும் காணப்படுவதில்லை - ஆனால் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், கர்த்தரைப் பின்பற்றுவதாக உரிமைகோருபவர்களின் விசுவாசத்திற்கான சோதனை யொன்று ஆழப்பதியப்பட்டுள்ளது.

## சமனான புல்தரையில் ஒரு சோதனை (மத். 14:13-21; மாற். 6:33-44; லூக். 9:11-17; யோவா. 6:2-14)

நமது முந்திய பாடத்தின் முடிவில், இயேசு தாமும் தமது சீஷர்களும் கலிலேயாவில் கிழக்குக் கரைப் பகுதிக்குப் படகில் பயணம் செய்யும் ஒரு திட்டத்தை முன்மொழிந்திருந்தார் (மாற். 6:30-32; மத். 14:13; யோவா. 6:1ஐக் காணவும்).[2] அவர்களின் அடைவிடம், பெத்சாயிதா-ஜூலியஸ் என்ற கிராமத்திற்கு அருகாமையிலிருந்த வனாந்தரமான இடமாய் இருந்தது (லூக். 9:10).

அவர்கள் கரையை நெருங்குகையில், திரளான மக்கள் கூட்டம் - நூற்றுக்கணக்கில் மக்களும், அவர்களுடன் ஒவ்வொரு நிமிடமும் அதிகம் அதிகமான மக்கள் வந்து சேர்ந்ததுமான கூட்டம் - கரையை அணுகிற்று.[3] கிறிஸ்து கிருபை பொருந்தினவராய், "அவர்கள்மீது பரிவிரக்கம் கொண்டார்." அவரது வழக்கமான பாணியில் அவர், அவர்களுக்குப் போதிக்கவும் அவர்களில் நோயுற்று இருந்தவர்களைக் குணமாக்கவும் தொடங்கினார் (மத். 14:14; மாற். 6:34; லூக். 9:11).

### விசுவாசம் சோதிக்கப்பட்டது: "உங்கள் தேவைகளைத் தருவேன்[4] என்று என்மீது நம்பிக்கை[5] கொள்ளுகின்றீர்களா?"

நாளானது முடிந்தபோது, கூட்டத்தார் எண்ணிக்கை ஆயிரக் கணக்கிலாகும் வரையில் அக்கூட்டம் பெருத்துக் கொண்டே சென்றது (லூக். 9:14). சோதித்தல் தொடங்கிற்று:

> இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து, திரளான ஜனங்கள் தம்மிடத்தில் வருகிறதைக் கண்டு, பிலிப்புவை நோக்கி: "இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம்" என்று கேட்டார். தாம் செய்யப்போகிறதை அறிந்திருந்தும், அவனைச் சோதிக்கும்படி இப்படிக் கேட்டார் (யோவா. 6:5, 6).

பிலிப்பு, இயேசுவின் வார்த்தைகளை, கணக்கிடுதலுக்கான தனது திறமைக்கான சோதனை என்பதாகக் கண்டார். அவர், "இவர்களில் ஒவ்வொருவனும் கொஞ்சங் கொஞ்சம் எடுத்துக் கொண்டாலும், இருநூறு பணத்து அப்பங்களும் இவர்களுக்குப் போதாதே" என்று பதில் அளித்தார் (யோவா. 6:7).

*பின்பு விரைவிலேயே, அப்போஸ்தலர்களில் எஞ்சியிருந்த மற்றவர் களுக்கு, விசுவாசத்திற்கான இதே அடிப்படை சோதனை தரப்பட்டது:*

> *சாயங்காலமானபோது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: "இது வனாந்தரமான இடம், நேரமுமாயிற்று; ஜனங்கள் கிராமங்களுக்குப் போய்த் தங்களுக்குப் போஜனபதார்த்தங்களைக் கொள்ளும்படி அவர்களை அனுப்பிவிடவேண்டும்" என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: "அவர்கள் போகவேண்டுவதில்லை; நீங்களே அவர்களுக்குப் போஜனங்கொடுங்கள்" என்றார் (மத். 14:15, 16).*

*பன்னிருவரும், கூட்டத்தாருக்கு "உண்பதற்கு ஏதாவது" தரவேண்டும் என்ற கிறிஸ்துவின் கட்டளையை, அவர்கள் தங்கள் ஆதாரமூலங்களை ஆய்வு செய்யும் திறமை என்பதாகக் கண்டார்கள். அவர்கள் தங்களிடத்தில் உணவு/சமையல் பொருட்கள் எதுவும் வைத்திருக்கவில்லை,[6] கூட்டத்தின் திரளில் கணக்கிட்டப்போது ஒரு பையனிடம் மாத்திரமே திண்பண்டம் இருந்தது (மத். 14:17).*

*புயலை அமர்த்துதல் மரித்தோரை எழுப்புதல் உட்பட கர்த்தர் பல அற்புதங்கள் செய்திருந்ததை மாத்திரமே சீஷர்கள் கண்டிருந்தார்கள் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த வேளையில் அவர் நோயாளிகளைக் குணமாக்குவதை அவர்கள் கண்டிருந்தார்கள். மற்றும் இயேசு சமீபத்தில்தான் அவர்கள் அற்புதம் செய்வதற்கான வல்லமையை அளித்திருந்தார் (மத். 10:1). இருந்தபோதிலும், கிறிஸ்து ஒரு அற்புதம் செய்ய முடியும் என்றால், அவரால் - ஒரு கைமட்டுமே நிறையக்கூடிய அளவுள்ள அப்பத்தையும் மீன்களையும் வைத்துக் கொண்டு ஐயாயிரம் ஆண்களும் அத்துடன் பெண்களும் பிள்ளைகளும் கொண்ட பெரிய கூட்டத்திற்கு உணவளித்தல் உள்ளிட - எந்த அற்புதத்தையும் செய்ய முடியும்[7] என்பதைப் புரிந்துகொள்வதில் அவர்கள் மிகவும் கடினமான வேளையைக் கொண்டிருந்தார்கள்.*

*அற்பமான உணவுப் பொருளைக் கையில் எடுத்த இயேசு, உணவு உண்பதற்காகக் கூட்டத்தினரைப் புல்வெளியில் அமரும்படி கூறினார் (மத். 14:19) - ஐந்து சிறிய அப்பங்களும் இரண்டு சிறு மீன்களும்[8] மாத்திரமே இருந்தன என்பது தெளிவு. இவ்விதமாக, சோதனையானது அங்கிருந்த ஒவ்வொருவருக்கும் விரிவாக்கப்பட்டது. சீஷர்களும் அந்தத் திரளான கூட்டத்தினரும் கிறிஸ்து கட்டளையிட்டபடி செய்வதற்காவது குறைந்தபட்சம் போதுமான அளவு விசுவாசம் கொண்டிருந்தார்கள்.*

### *சோதனையின் விளைவுகள்: ஒரு உணவு - மற்றும் தவறான புரிந்துகொள்ளுதல்*

*நாம் ஒரு தேர்வை எழுதும்போது, பொதுவாக அதன் முடிவை அறிந்து கொள்ள மிகுந்த ஆர்வம் கொண்டிருப்போம். இந்த நிகழ்ச்சியில், அங்கிருந்தவர்களின் விசுவாசத்திற்கு வெகுமதியளிக்கப்பட்டது: ஒரு பையனுக்கு மட்டுமே போதுமானதாயிருந்த திண்பண்டமானது, பசியுடனிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் திருப்தியுடன் போதுமான அளவு*

*உண்பதற்குரிய* [all-you-can-eat-buffet[9]] *உணவாயிற்று:*

> *எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்; மீதியான துணிக்கை களைப் பன்னிரண்டு கூடை நிறைய எடுத்தார்கள். ஸ்திரீகளும் பிள்ளைகளும் தவிர சாப்பிட்ட புருஷர்கள் ஏறக்குறைய ஐயாயிரம் பேராயிருந்தார்கள் (மத். 14:20, 21; மேலும் மாற். 6:41-44; லூக். 9:16; யோவா. 6:12ஐயும் காணவும்).*

*உண்டவர்கள் ஆனந்தம் அடைந்தார்கள்*[10] *ஆனால் அவர்கள், அந்த உணவே ஒரு கூடுதலான சோதனை என்பதை உணர்ந்தறியத் தவறினார் கள்: அது, அவர்கள் எவ்வாறு இயேசுவையும் அவரது ஊழியத்தையும் உணர்ந்தறிந்தார்கள் என்பதற்கான சோதனையாக இருந்தது. அவர்கள் உணர்வெழுச்சி அடைந்தவர்களாய், "மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி*[11]*" என்று ஒருவருக்கொருவர் கூறிக் கொண்டார் கள் (யோவா. 6:14). இவரே அவர்கள் எதிர்பார்த்திருந்த ஒருவராக இருந்தார்!*[12] *விரைவிலேயே, "வந்து, [அவரை] இராஜாவாக்கும்படிப் பிடித்துப் போக" திட்டங்கள் வடிவமைக்கப்பட்டன (யோவா. 6:15).*

*"இராஜாவாக்குதல்?" அவர் இராஜாவாகப் பிறந்திருந்தார் (மத். 2:2)*[13] *- ஆனால் அந்த மக்கள், பூமிக்குரிய இராஜா என்ற யூதத்துவத்தின் பிரபலமான கருத்தைத் தங்கள் சிந்தையில் கொண்டிருந்தார்கள்: தங்கள் விரோதிகளுக்கு எதிராகத் தங்களை வெற்றிகரமாக நடத்திச் செல்ல முடியக் கூடிய ஒருவர். இயேசுவின் தற்போதைய அற்புதம் அவர்களின் கற்பனை களைப் பற்றியெரியச் செய்திருந்தது: அவர் படைத்தளபதியாக மட்டு மின்றி, அதன் பண்டகசாலை அதிகாரியாகவும் - படைகளுக்கு அன்றாட உணவளிப்பவராகவும் செயல்பட முடியும்! அவர்கள், அவரை பூமிக்குரிய ராஜாவாக ஏற்றுக்கொள்ளுதல் என்பது அவரை தங்கள் ஆவிக்குரிய ராஜாவாக ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்தலுக்குச் சமமாயிருக்கும் என்பதை உணர்ந்தறியத் தவறிவிட்டார்கள்.*

*அவர்களின் நோக்கங்களை அறிந்த கிறிஸ்து தமது சீஷர்களை புறம்பே அனுப்பி*[14] *மற்றும் கூட்டத்தினரைக் கலையச் செய்ததின் மூலம் அவர்களின் திட்டங்களில் தடை ஏற்படுத்தினார்.*[15] *பின்பு அவர் கவலை கொண்ட வராய்,*[16] *தனித்திருக்கவும் ஜெபிக்கவும், அருகாமையிலிருந்த ஒரு மலையின் மீது*[17] *ஏறினார் (மத். 14:22, 23; மாற். 6:45, 46; யோவா. 6:15-17அ).*

## *புயல் வீசிய கடலில் ஒரு சோதனை (மத். 14:22-33; மாற். 6:45-52; யோவா. 6:15-21அ)*

*இயேசு தமது அப்போஸ்தலர்களைப் படகில் ஏறி கப்பர்நகூமுக்குச் செல்லும்படி கூறியபோது, அவர்கள் கூட்டத்தாரிடத்தில் அவர் தமது பணியை முடித்த பின்பு தங்களுடன் சேர்ந்து கொள்வார் என்று எதிர் பார்த்தார்கள் என்பது உறுதி (யோவா. 6:17ஐக் காணவும்). ஒருவேளை அவர்கள் கடற்கரையோரமாகக் காத்திருந்து இருக்கலாம்: ஒருவேளை அவர்கள் சற்று தூரம் படகை வலித்துச் சென்று காத்திருந்து இருக்கலாம்.*

*கர்த்தர் வராதபோது, முடிவில் அவர்கள் கடலைக் கடந்து செல்லத் தொடங்கினார்கள்.*

***விசுவாசம் சோதிக்கப்பட்டது: "நான் உங்களைப் பாதுகாப்பேன் என்று நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா?"***

*கடலில் ஏறக்குறைய பாதிதூரம் சென்றபோது,[18] அந்த நீர்த்திரள் உட்பட்டிருந்த திடீர்ப் புயல்களில் ஒன்றினால் தாக்கப்பட்டார்கள்.[19] "பெருங்காற்று அடித்தபடியினாலே கடல் கொந்தளித்தது" என்று யோவான் எழுதினார் (யோவா. 6:18). "... படவு ... எதிர்க்காற்றாயிருந்தபடியினால் அலைகளினால் அலைவுபட்டது" என்று மத்தேயு கூடுதலாகக் கூறினார் (மத். 14:24). காற்றானது, அவர்கள் செல்ல முயற்சி செய்துகொண்டிருந்த மேற்கு திசையில் இருந்து வீசிக் கொண்டிருந்தது (மத். 14:24; மாற். 6:48), எனவே அவர்கள் தங்கள் படகின் பாய்களைச் சுருட்டி வைத்துவிட்டு, தண்டு வலிக்கத் தொடங்கினார்கள் (மாற். 6:48). அவர்கள் மணிக்கணக்கில் தண்டுவலித்தார்கள்,[20] ஆயினும் கொந்தளிக்கும் கடலில் அவர்களால் முன்னேறிச் செல்ல முடியவில்லை. நாம் அவர்களின் சக்தி தீர்ந்த நிலையை யும் பெரும் வருத்தத்தையும் கற்பனை செய்ய முடியும். மீண்டும் ஒருமுறை, அவர்களின் விசுவாசம் சோதிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.[21] இதற்கு முன்பு ஒருமுறை இயேசு புயலை அமர்த்தியதன் மூலம் அவர்களைக் காப்பாற்றி யிருந்தார்,[22] ஆனால் இவ்வேளையில் அவர்களுடன் அவர் இல்லை. இவ்வேளையில் அவர் தூரத்தில் இருந்தார்.*

*கிறிஸ்து அவர்களிடமிருந்து மைல்கணக்கில் பிரிந்திருந்தாலும், அவர்களின் இக்கட்டான நிலையை அவர் அறிந்திருந்தார். மாற்கு பின்வருமாறு எழுதினார்:*

> *சாயங்காலமானபோது படவு நடுக்கடலிலிருந்தது; அவரோ கரையிலே தனிமையாயிருந்தார். அப்பொழுது காற்று அவர்களுக்கு எதிராயிருந்தபடியினால், அவர்கள் தண்டு வலிக்கிறதில் வருத்தப் படுகிறதை அவர் கண்டு, இராத்திரியில் நாலாம் ஜாமத்தில் கடலின் மேல் நடந்து அவர்களிடத்தில் வந்து, ... (மாற். 6:47, 48).*

*தண்ணீரின்மீது நடத்தல் என்பது நன்கு அறியப்பட்ட இயேசுவின் அற்புதங்களில் ஒன்றாக உள்ளது. அதை நீங்கள் உங்கள் மனதில் சித்தரிக்கும்போது, பொதுவாகச் சித்தரிக்கப்படுகிறபடி, ஒரு அமைதியும் மென்மையுமான தண்ணீர்ப் பரப்பின்மீது அவர் மிதித்து நடந்ததுபோல் கண்ணோக்காதீர்கள். மாறாக அவர், புயலினால் கொந்தளித்துக் கொண்டிருந்த கடலில் முன்னேறிச் செல்லுகையில் - முதலில் ஒரு அலைமுகட்டின் உச்சியில், பின்பு அலைகளுக்கிடையிலான பள்ளத்தில் - மேலும் கீழும் வேகமாய் அசைந்தாடுவதாகக் காணுங்கள்.*

*கிறிஸ்து படகை நெருங்குகையில், சீஷர்கள் அவரை கணப்பொழுது கண்ணோக்கினார்கள் - ஒருவேளை ஒரு மின்னல் வெளிச்சத்தில் அவர்கள் அவரைக் கண்டிருக்கலாம். எதிர்பாராத வகையிலான அவரது தோற்றம் அவர்களைப் புயலைக் காட்டிலும் அதிகமாகப் பயமுறுத்திற்று.[23] "அவர்*

*கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு, கலக்கமடைந்து, ஆவேசம்[24] என்று சொல்லி, பயத்தினால் அலறினார்கள்" (மத். 14:26; மாற். 6:49, 50அ). இயேசு அவர்களின் பயத்தை அமைதிப் படுத்தி, அவர்களிடத்தில், "திடன் கொள்ளுங்கள், நான்தான், பயப்படாதிருங்கள்" என்று கூறினார் (மத். 14:27; மாற். 6:50ஆ; யோவா. 6:20ஐக் காணவும்).*

*இதன் பின்பு நாம் மத்தேயு 14ல், பேதுரு தண்ணீரின்மீது நடந்த குறிப்பிடத்தக்க வரலாற்றை காண்கின்றோம். அவர் கிறிஸ்துவிடம், "ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும்" என்று கூறினார் (வ. 28). "அதற்கு அவர்: 'வா' என்றார். அப்பொழுது, பேதுரு படவை விட்டிறங்கி இயேசுவினிடத்தில் போக ஜலத்தின்மேல் நடந்தான்" (வ. 29). இந்த அப்போஸ்தலர் தமது கண்களை இயேசுவின்மீது வைத்திருந்த வரையிலும், அவர் தண்ணீரில் மிதப்பவராய் நிலைத்திருந்தார் - ஆனால் அவர் தமது பார்வையை, காற்றினால் கொந்தளித்த கடலின்மீது திருப்பியபோது, "அவர் பயந்தார்" மற்றும் மூழ்கத் தொடங்கினார் என்ற விளக்கவுரையை நான் அடிக்கடி கேள்விப் பட்டுள்ளேன் (வ. 30அ). அவர், "ஆண்டவரே, என்னை இரட்சியும்" என்று கதறினார் (வ. 30ஆ). "உடனே இயேசு கையை நீட்டி, அவனைப் பிடித்து: 'அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய்' என்றார்" (வ. 31). நம்மில் சிலரைப் போலவே, பேதுரு தமது நடையைத் தொடங்கப் போதுமான விசுவாசத்தைக் கொண்டிருந்தார், ஆனால் அதை முடிக்கப் போதுமான விசுவாசத்தைக் கொண்டிருக்கவில்லை.*

**சோதனையின் விளைவுகள்: அமைதி - மற்றும் குழப்பம்**

*இயேசுவும் பேதுருவும் படகினுள் ஏறிவருவதற்கு சீஷர்கள் உதவினார்கள் (யோவா. 6:21அ; மத். 14:32அ ஆகிய வசனங்களைக் காணவும்). உடனடியாக,[25] "காற்று அமர்ந்தது; அவர்கள் மிகவும் பிரமித்து ஆச்சரியப் பட்டார்கள்" (மாற். 6:51). பின்பு, "படவில் உள்ளவர்கள் வந்து: 'மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன்' என்று சொல்லி, அவரைப் பணிந்துகொண்டார்கள்!" (மத். 14:33).*

*இது ஒரு மகிழ்ச்சியான முடிவைக் கொண்ட ஒரு கதை போன்று காணப்படுகிறது, ஆனால் உண்மையில் அப்போஸ்தலர்கள் இடர்ப்பாடு மிகுந்த ஒரு சோதனையில் தோல்வியடைந்து இருந்தார்கள் என்று மாற்கு சுவிசேஷ விபரம் சுட்டிக் காண்பிக்கிறது. மாற்கு, "... அவர்கள் தங்களுக்குள்ளே மிகவும் பிரமித்து ஆச்சரியப்பட்டார்கள். ... அப்பங்களைக் குறித்து அவர்கள் உணராமற் போனார்கள்" (மாற். 6:51ஆ, 52ஆ). கிறிஸ்து நிகழ்த்திய ஒவ்வொரு அற்புதமும் அவரது அக்கறை உணர்வை வெளிப் படுத்தியதுடன், இறையியல் மறை கருத்துக்களையும் கொண்டிருந்தன. "அப்பங்களின் நிகழ்ச்சியில்" இருந்து சீஷர்கள் ஆதாயப்படுத்தியிருக்க வேண்டிய "உட்கண்ணோக்கு" என்னவாக இருந்தது? அவர்களுக்குச் சமவெளியில் உணவளிக்கக் கூடிய வல்லமை அவருக்கு இருந்தது என்றால், அவர்களைக் கடலில் காப்பாற்றக் கூடிய வல்லமையும் அவருக்கு இருந்தது என்று அவர்கள் அறிந்திருக்க வேண்டும்.*

*மாற்கு சுவிசேஷத்தின்படி, "அவர்களுடைய இருதயம் கடினமுள்ள தாயிருந்தது" என்பதே அவர்களின் பிரச்சனையாக இருந்தது (மாற். 6:52ஆ). அவர்கள், விசுவாசத்தின் அளவை என்ற வகையில் இயேசுவைப் புரிந்து கொண்டு மதித்திருந்தார்கள், ஆனால் அவர்கள் தங்கள் வாழ்வையும் இருதயங்களையும் முற்றிலுமாக அவருக்கு அர்ப்பணித்தல் என்பது அவர்களுக்குக் கடினமானதாக இருந்தது. அந்தக் குறிப்பிட்ட பிரச்சனை பன்னிருவரிடம் தொடங்கவுமில்லை [அதற்கு முன்பும் இருந்து வந்தது] அல்லது அவர்களுடன் ஒழியவுமில்லை [அதற்குப் பின்பும் தொடருகிறது].*

## கூட்டம் மிகுந்திருந்த ஒரு ஜெப ஆலயத்தில் ஒரு சோதனை (மத். 14:34-36; மாற். 6:52-56; யோவா. 6:21ஆ-71)

*புயல் வீசிய அந்த இரவில் இன்னும் ஒரு அற்புதம் இருந்தது. இயேசுவும் பேதுருவும் படகில் ஏறிய உடனேயே, "உடனே படவு அவர்கள் போகிற கரையைப் பிடித்தது" என்று யோவான் எழுதினார் (யோவா. 6:21ஆ). அவர்கள் கெனேசரேத்தின்[26] சமவெளியில் இருந்த கரைப்பகுதிக்கு வந்து சேர்ந்தனர், இது கப்பர்நகூமின் தென்பகுதியில் இருந்த ஒரு வளமான பகுதியாக இருந்தது (மத். 14:34; மாற். 6:53). இயேசு கப்பர்நகூமை நோக்கி வடக்குமுகமாக முன்னேறினார், அவ்வாறு செல்லுகையில் மக்களைக் குணமாக்கிக் கொண்டே சென்றார் (மத். 14:35, 36[27]; மாற். 6:54-56).*

*இதற்கிடையில், கடலின் கிழக்குப் பகுதியில் இருந்த கூட்டத்தார், இயேசு அங்கில்லை என்பதை அறிந்தார்கள் (யோவா. 6:22, 24). மேற்குக் கரைப் பகுதியில் இருந்து படகுகள் வந்தபோது, அவர்கள் இயேசு இருக்குமிடம் என்று தாங்கள் எதிர்பார்த்த பகுதியான கப்பர்நகூமுக்குத் தங்களை இட்டுச் செல்ல வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள் (யோவா. 6:23, 24).[28]*

### *விசுவாசம் சோதிக்கப்பட்டது: "நான் உங்களுக்கு ஜீவனைத் தர முடியும் என்று நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா?"*

*கிறிஸ்துவைத் தேடிக் கொண்டு வந்தவர்கள் அவர் ஜெப ஆலயத்தில் போதித்துக் கொண்டிருக்கக் கண்டார்கள் (யோவா. 6:59). தாங்கள் அறியாமல் அவர் எப்படி புறப்பட்டு வந்திருந்தார் என்று குழப்பமும் திகைப்பும் அடைந்த அவர்கள் (யோவா. 6:22), "ரபீ, நீர் எப்பொழுது இவ்விடம் வந்தீர்?" என்று கேட்டார்கள் (யோவா. 6:25ஆ). இது அந்த நாளில் கர்த்தரிடத்தில் கேட்கப்பட்ட கேள்விகளில் முதலாவதாக இருந்தது. அவரைக் கேள்வி கேட்டவர்கள், தாங்கள் அவரைச் சோதிப்பதாக நினைத்தார்கள்; உண்மையில், கேள்வி கேட்டவர்களே சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள். அது அவர்களின் விசுவாசத்தை - அல்லது அவர்களின் விசுவாசக் குறைவை வெளிப்படுத்தும் வேளையாக இருந்தது. உண்மையில், சோதனைகளின் ஒரு வரிசைமுறை தொடுக்கப்பட்டது, இது*

*கூட்டத்தாரிடம் தொடங்கி, அப்போஸ்தலர்களிடத்தில் நெருக்கமாக்கப் பட்டது. அங்கிருந்த ஒவ்வொருவரும், "இந்த மனிதரிடத்தில் என்னை ஈர்ப்பது எது? நான் ஏன் இவரைப் பின்பற்றுகின்றேன்? உண்மையில் இவர் யாரென்று நான் நினைக்கின்றேன்?" என்றெல்லாம் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று இயேசு விரும்பினார்.*

*(1) கூட்டத்தார் சோதிக்கப்பட்டார்கள். இயேசு கப்பர்நகூமுக்கு வந்து சேர்ந்தது பற்றிய கேள்விக்கு விடையளிப்பதற்குப் பதிலாக, அவர் ஜீவ அப்பம் பற்றிய உரையாடலைத் தொடங்கினார். அவர் அந்தக் கூட்டத்தார் தவறான காரணத்திற்காகத் தம்மைப் பின்பற்றுவதைக் குறித்துக் குற்றம் சாட்டினார்:*[29]

> *... நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அழிந்து போகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள் (யோவா. 6:26, 27அ).*

*கிறிஸ்து, தமது உரையைக் கேட்டவர்கள் தங்கள் நோக்கங்களையும் முன்னுரிமைகளையும் ஆய்வு செய்ய வேண்டும் என்று விரும்பினார் - ஆனால் அவர்கள் கிரியை நடப்பித்தால் அழிந்துபோகாத உணவை பெற்றுக்கொள்ள முடியும் என்பதே அவர்கள் கேள்விப்பட்டதாக இருந்தது. அவர்கள், "தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்கள் (யோவா. 6:28). இது இயேசுவுக்கு, அவரது எடுத்துரைப்பை அறிமுகப்படுத்த ஒரு வாய்ப்பை அளித்தது: "அவர் அனுப்பினவரை விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது" என்றார் (யோவா. 6:29).*

*கலந்துரையாடல் முன்னேறிச் சென்று கொண்டிருந்த திசையைக் கூட்டத்தார் விரும்பவில்லை. பரிசேயர்களிடம் இருந்து தங்களது குறிப்பை எடுத்துக் கொண்ட (மத். 12:38ஐக் காணவும்) அவர்கள், ஒரு அடையாளத் தைக் கேட்டார்கள்: "அப்படியானால் உம்மை விசுவாசிக்கும்படிக்கு நாங்கள் காணத்தக்கதாக நீர் என்ன அடையாளத்தைக் காண்பிக்கிறீர்?" (யோவா. 6:30). முந்தின நாளில்தான் கிறிஸ்து அவர்களுக்கு, குணமாக்குதல் மற்றும் அற்புதமாக உணவளித்தல் என்பவற்றின் அடையாளங்களைக் கொடுத்திருந்தார் ஆனால் அது போதுமற்றதாக இருந்தது. கடினப்பட்ட இருதயம் கொண்டவர்களுக்கு எந்த அடையாளமும் எப்போதும் போதுமானதாக இராது.*

*இன்னொரு இலவச உணவு என்பதுதான் அவர்கள் உண்மையாக விரும்பியதாயிருந்தது. இயேசு மோசேயைப் போன்ற தீர்க்கதரிசி என்று அவர்கள் ஒப்புக்கொண்டிருந்தார்களே,*[30] *மற்றும் மோசே அவர்களின் பிதாக்களுக்கு வனாந்தரத்திலே அப்பத்தைக் கொடுத்திருந்தார் - அதுவும் ஒருமுறையல்ல, ஆனால் ஒவ்வொரு நாளும் கொடுத்திருந்தார் (யோவா. 6:31; யாத். 16ஐக் காணவும்)! மோசேயல்ல மாறாக, தேவனே அவர்களுக்கு*

அப்பத்தைக் கொடுத்திருந்தார் என்று இயேசு பதில் அளித்தார் (யோவா. 6:32அ). மற்றும் தேவன், "உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற, வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பத்தை" இப்பொழுது அவர்களுக்குக் கொடுக்க முடியும் (யோவா. 6:32ஆ, 33ஆ).

"ஜீவனைக் கொடுக்கிற" அப்பம் - அதுவே மிகச் சரியாக அவர்கள் விரும்பியதாக இருந்தது! அவர்கள், "ஆண்டவரே, இந்த அப்பத்தை எப்பொழுதும் எங்களுக்குத் தர வேண்டும்" என்றார்கள் (யோவா. 6:34).[31] மீண்டும் ஒருமுறை இயேசுவின் பதிலானது எதிர்பாராத - மற்றும் வரவேற்பு அற்ற - ஒரு திருப்பத்தை மேற்கொண்டது. அவரது உதடுகளில் இருந்து பின்வரும் திகைக்க வைத்த உறுதிப்பாடு வந்தது: "ஜீவ அப்பம் நானே" (யோவா. 6:35அ). இது, கிறிஸ்து கூறியதாக யோவான் சுவிசேஷத்தில் காணப்படும் "நானே" என்ற ஏழுகூற்றுகளில் முதலாவதாக உள்ளது.[32] அவை ஒவ்வொன்றும் தனிச்சிறப்பான முக்கியத்துவம் கொண்டுள்ளன, ஆனால் ஒவ்வொன்றும் அவரது தெய்வீகத்துவத்தின் உறுதிப்பாடாகவும் உள்ளது; ஏனெனில், தேவன் மாத்திரமே எந்த நாளிலும் எந்தக் காலத்திலும், "நானே" (வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், "நான் எப்பொழுதும் இருக்கிறேன்"; யாத். 3:13-15ஐக் காணவும்) என்று உண்மை நிறைவுடன் கூறமுடியும்.

இயேசு திகைக்க வைக்கும் தமது கூற்றைத் தொடர்ந்தார்: "என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்" (யோவா. 6:35ஆ). அங்கு, மீண்டும் "விசுவாசம்" என்ற விடாப்பிடியான வார்த்தை இருந்தது![33] அவர் கவலையுடன், "நீங்கள் என்னைக் கண்டிருந்தும் விசுவாசியாமலிருக்கிறீர்கள்" என்று கூடுதலாகக் கூறினார் (யோவா. 6:36). J. W. மெக்கார்வீ அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> இயேசுவின் ஆளுமைத் தன்மை என்பது அவரது தெய்வீகத்துவத்திற்கு மாபெரும் நிரூபணமாக இருந்தது, ஆனால் யூதர்கள் ... அதை ஆழ்ந்து சிந்திக்க மறுத்துவிட்டார்கள், மற்றும் அவர்கள் ஒரு அடையாளத்திற்காகத் தொடர்ந்து ஆரவாரம் செய்தார்கள் ... ஒருவர் சூரிய வெளிச்சத்தைக் காணுகின்றபோது, அதன் வெப்பத்தை உணருகின்றபோது, மற்றும் அதன் உயிர்கொடுக்கும் வல்லமையை கண்ணோக்கும்போது கூட, அதை [சூரியன் இருப்பதை] நம்ப மறுத்தால், அவருக்கு நீங்கள் எந்த அடையாளத்தினால் செயல் விளக்கப்படுத்துவீர்கள்?[34]

(2) "யூதர்கள்" சோதிக்கப்பட்டார்கள். அந்த வேளையில், " 'நான் வானத்திலிருந்து வந்த அப்பம்' என்று அவர் சொன்னதினிமித்தம் 'யூதர்கள்' அவரைக் குறித்து முறுமுறுத்தார்கள்" (யோவா. 6:41). யோவான், யூதத்தலைவர்களைக் குறிப்பதற்கு "யூதர்கள்" என்ற சொற்றொடரை அடிக்கடி பயன்படுத்தினார் (1:19; 5:10, 15, 16, 18), மற்றும் ஒருவேளை அதுவே இவ்விடத்தில் அர்த்தப்படுவதாகவும் இருக்கலாம்.

யூதர்கள் முறுமுறுத்ததையும் பொருட்படுத்தாமல், இயேசு தமது உரிமைகோருதலைத் திரும்பப் பெறுவதற்கு மறுத்து விட்டார். மாறாக,

அவர் அதை இன்னும் உறுதியாக்கினார்:

> ஜீவ அப்பம் நானே. உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள். இதிலே புசிக்கிறவன் மரியாதிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே. நானே வானத்திலிருந் திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக் கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார் (யோவா. 6:48-51).

ஆவிக்குரிய வாழ்வைக் (யோவா. 10:10) கொண்டு வருவதற்காக இயேசு மாம்சமாக வேண்டியிருந்தது (யோவா. 1:14). மற்றும், ஒரு சில மாதங்களில், அவர் "உலகத்தின் ஜீவனுக்காக" சிலுவையில் அறையப்படும் படி தமது மாம்சத்தை மனப்பூர்வமாக "கையளிக்க" இருந்தார். இப்படிப் பட்ட மேன்மையான கருத்துக்கள், மூடப்பட்ட சிந்தைகொண்ட யூதர்களின் புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. விளக்கம் தரும்படி கிறிஸ்துவிடம் தாழ்மையாகக் கேட்பதற்குப் பதிலாக, அவர்கள் "இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பான்? என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம் பண்ணினார்கள்" (யோவா. 6:52). இதற்கு இயேசுவின் பதிலானது இன்னும்கூட அதிகம் திகைப்பூட்டுவதாக வும் புதிரானதாகவும் இருந்தது: ''நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாம லும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவா. 6:53).

மதரீதியான கருத்தமைவில், ''அப்பம் புசித்தல்'' என்ற உருவகம் யூதர்களுக்கு நன்கு பழக்கமானதாக இருந்தது. டேவிட் ஸ்மித் அவர்கள், "வேத வசனங்களிலும் ரபீத்துவ இலக்கியத்திலும், அறிவுறுத்துதல் என்பது அப்பம் என்றும் அதை கிரகித்துக் கொள்ளுகின்றவர்கள் அதை உண்ணு கின்றார்கள் என்றும் ஒன்றுபோலவே அழைக்கப்பட்டதால், இப்படிப் பட்ட மொழிநடையானது, நவீன காலத்தில் வாழ்பவர்களின் காதுகளுக்குக் கேட்பதைக்காட்டிலும் யூதர்களுக்கு குறைந்தபட்சம் வினோதமாகவே இருந்தது" என்று சுட்டிக்காண்பித்தார்.[35] இருந்தபோதிலும், மாம்சத்தைப் புசித்தல் மற்றும் இரத்தத்தைப் பானம் பண்ணுதல் என்பது பற்றிய சிந்தனை அவர்களுக்கு வெறுப்பூட்டுவதாக இருந்திருக்க வேண்டும். இரத்தத்தை உண்ணுதல் அல்லது குடித்தல் என்பதை நியாயப்பிரமாணம் கண்டனம் செய்திருந்தது (லேவி. 17:10-14).

இயேசு தமது உண்மையான உடல் மற்றும் இரத்தத்தை உண்டு குடித்தல் என்ற மனித மாம்சம் உண்ணும் கருத்தைப் பற்றிப் பேசவில்லை,[36] ஆனால் அதற்கு மாறாக, அவரை "மாம்சத்தில் உள்ள" மேசியா என்று ஏற்றுக்கொள்வதைப் பற்றிப் பேசினார். உண்மையில் அவர், நம்பிக்கையற்ற வர்களுக்கு "தமது மாம்சத்தை உண்ணுதல்" எவ்வாறு என்று ஏற்கனவே கூறியிருந்தார், ஆனால் அவர்கள் அதைக் கவனித்திருந்ததில்லை:

> … அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற

*கிரியையாயிருக்கிறது (யோவா. 6:29).*

*... என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான் (யோவா. 6:35).*

*... நீங்கள் என்னைக் கண்டிருந்தும் விசுவாசியாமலிருக்கிறீர்கள் (யோவா. 6:36).*

*குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்திய ஜீவனை அடைவதும், ... என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது (யோவா. 6:40).*

*என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (யோவா. 6:47).*

இதை ஆழ்ந்து சிந்தியுங்கள்: "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு *நித்திய ஜீவன் உண்டு*" என்று இயேசு கூறினார் (யோவா. 6:47; வ. 40 ஐயும் காணவும்). அதற்குச் சற்றுப் பின்பு அவர், "என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு *நித்திய ஜீவன் உண்டு*" என்று கூறினார் (யோவா. 6:54அ). ஜீவனுக்கு இரண்டு வழிகள் இல்லாதிருக்கும் வரையிலும் (ஒரே ஒரு வழிதான் உள்ளது; யோவா. 14:6), "அவரது மாம்சத்தைப் புசித்து அவரது இரத்தத்தைப் பானம்பண்ணுதல்" என்பது "அவரில் விசுவாசமாயிருத்தல்" என்பதற்குச் சமமாயுள்ளது.

அவரைப் பற்றி அறிந்துகொள்ளுதல் பின்பு நாம் அறிந்தவற்றை ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றினால் நமது விசுவாசம் வருகிறது. கிறிஸ்து, " 'எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள்' என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே;[37] ஆகையால் பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக்கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்" என்று கூறினார் (யோவா. 6:45). மேலும் அவர், "நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" என்றும் கூறினார் (யோவா. 6:63ஆ).

நாம் உண்பதினால் உணவைத் தன்மயமாக்கிக் கொள்ளுதல் போலவே, இயேசுவைப் பற்றிக் கற்றுக்கொள்வதினால், அவரை ஏற்றுக்கொள்வதினால், அவரில் விசுவாசம் கொள்வதினால், அவருக்கு கீழ்ப்படிவதினால் நாம் அவரைத் தன்மயமாக்கிக் கொள்ளுகின்றோம். நாம் உண்ணுகின்ற உணவு நமது உடல்களின் பாகமாவது போலவே, கிறிஸ்துவின் சிந்தனைகளும் பண்பும் நமது ஆத்துமாக்களின் பாகமாக வேண்டும். ஜானி இராம்ஸே அவர்கள், " 'எனது ஆவியை உள்ளீர்த்துக் கொள்ளுங்கள், எனது சிந்தனை போலவே சிந்தியுங்கள், எனது நடத்துவத்தைப் பின்பற்றுங்கள்; ஆம், பரலோகத்தின் வழிகளில் ஆழ்ந்திருங்கள்' என்று அவர் புத்தி கூறுகின்றார்!" என்று எழுதினார்.[38] நாம் "திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாக" இருக்க வேண்டும் (2 பேது. 1:4), கிறிஸ்து நம்மிடத்தில் "உருவாக" அனுமதிக்க வேண்டும் (கலா. 4:19), பவுலுடன் சேர்ந்து, "... இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" (கலா. 2:20) என்று கூறக்கூடிய நிலைக்கு நாம்

வரும் மட்டும், அறைகூவல் விடுக்கப் படுகின்றோம்.

யோவான் 6ல் இயேசு தமது மாம்சத்தை உண்ணுதல் மற்றும் தமது இரத்தத்தைக் குடித்தல் பற்றிப் பேசியபோது, அவர் கர்த்தருடைய இராப்போஜனத்தைத் தமது சிந்தையில் கொண்டிருக்கவில்லை. நம்மில், இராப்போஜனத்தின் அடையாளத்துவத்தில் பழக்கமாகியுள்ளவர்கள் வசனம் 53 முதல் 56 வரையான பகுதியில் கிறிஸ்துவின் சொல்லாக்கத்தினால் அதைப் பற்றி நினைவூட்டப்படுதல் என்பது இயல்பானதாகவே உள்ளது. ஆயினும், இவ்விடத்தில் கிறிஸ்து, கர்த்தருடைய பந்தியில் கலந்து கொள்ளுதல் பற்றியல்ல, ஆனால் தம்மை மேசியா என்று யூதர்கள் ஏற்றுக்கொள்ளுதல் பற்றியே அக்கறை உள்ளவராயிருந்தார் என்பதை சந்தர்ப்பப் பொருள் தெளிவாக்குகிறது. விசுவாசம் - அல்லது விசுவாசக் குறைவு - என்பதுதான் ஜீவ அப்பம் பற்றிய பிரசங்கத்தின் முக்கிய விஷயமாக உள்ளது.

(3) *சீஷர்கள் சோதிக்கப்பட்டார்கள்.* மன இறுக்கம் தொடர்ந்து கட்டியெழுப்பப்பட்டது: "அவருடைய சீஷரில் அநேகர் இவைகளை[ஜீவ அப்பமாயிருத்தல் பற்றிய இயேசுவின் வார்த்தைகளை]க் கேட்ட பொழுது, இது கடினமான உபசேதம், யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள்" (யோவா. 6:60). முறுமுறுத்தவர்களாய் இருந்த (யோவா. 6:61அ) இந்தப் பிந்திய குழுவினர் அவரது விரோதிகளாகவோ அல்லது ஆழமற்ற சிந்தனை கொண்டு, அப்பம் தேடும் கும்பலின் பிரதிநிதிகளாகவோ இருக்கவில்லை என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். மாறாக இவர்கள் இயேசுவின் *சீஷர்களாய்* இருந்தார்கள், இவர்களில் சிலர் அவரை நீண்ட காலமாகப் பின்பற்றியிருந்தார்கள். ("சீஷர்கள்" என்ற சொற்றொடர் பன்னிருவரையும் [யோவா. 6:64], அத்துடன் அவருக்கு ஏறக்குறைய முழுநேர சீஷர்களா யிருந்த எஞ்சின மற்றவர்களையும் [லூக் 6:13] உள்ளடக்கிற்று.)

இயேசுவின் போதனை, அவரைப் பின்பற்றியவர்களைக் கலவரம் அடையச் செய்தது ஏன்? அது அரசியல் ரீதியான, பட்டயம் வீசும் மேசியா என்ற அவர்களின் முன்கருத்துக்களுக்கு நேர்மாறாக இருந்தது. கிறிஸ்து கவலையுடன் அவர்களிடத்தில், "இது உங்களுக்கு இடறலாயிருக்கிறதோ? மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்?" என்று கேட்டார் (யோவா. 6:61ஆ, 62). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், "நான் சரீரத்திற்கு உரியவைகளுக்குப் பதிலாக ஆவிக்குரியவைகளின்மீது கவனம் செலுத்து கின்ற காரணத்தினால் என்னை மேசியா என்று ஏற்றுக்கொள்வது உங்களுக்குக் கடினமாயிருந்தால், நீங்கள் எதிர்பார்த்துள்ள வகையிலான இராஜ்யத்தை நிலைநாட்டாமலேயே நான் இந்த பூமியை விட்டுச் செல்லுவதை நீங்கள் எப்படிக் கையாளப் போகின்றீர்கள்?" என்றே அவர் கேட்டார். இயேசு பரலோகத்திற்கு ஏறிச் சென்றது - தமது மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்குப் பின்பு வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளன்று - இராஜ்யம்/சபை நிலைநாட்டப்படுதலை விளைவித்தது, ஆனால் அவரது பின்பற்றாளர்கள் ஒரு மாறுபட்ட வகையிலான இராஜ்யத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

*ஆவிக்குரிய விஷயங்கள் சரீரத்திற்குரிய விஷயங்களைவிட எவ்வளவோ அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை என்று இயேசு மீண்டும் வலியுறுத்தினார் (யோவா. 6:63); ஆனால் மீண்டும் ஒருமுறை அவர், "ஆகிலும் உங்களில் விசுவாசியாதவர்கள் சிலர் உண்டு ..." என்று முடிவு செய்ய வேண்டியிருந்தது (யோவா. 6:64அ). நான் இந்தப் பாடத்தின் தொடக்கத்தில், கிறிஸ்துவின் இந்த உரையானது அவரது ஊழியத்தின் மிகத்தாழ்ந்த வேளைகளில் ஒன்றுக்கு உடனடி காரணமாய் இருந்தது என்று குறிப்பிட்டிருந்தேன். இவ்விடத்தில் அந்த மிகத் தாழ்ந்த வேளை உள்ளது: "அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள்" (யோவா. 6:66).[39]*

*இயேசுவின் விசுவாச சோதனை முறுமுறுத்தலையும், விவாதத்தையும் கடைசியில் பின்வாங்கிச் செல்லுதலையும் புறக்கணித்தலையும் உண்டாக்கிற்று. அவரது "வகுப்பில்" இருந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் இந்தச் சோதனையில் தோல்வியடைந்தார்கள்.*

*(4) அப்போஸ்தலர்கள் சோதிக்கப்பட்டார்கள். மிகவும் இடர்ப்பாடான சோதனை இன்னும் இருந்தது. கிறிஸ்து பன்னிருவரிடம் திரும்பி, "நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ?" என்று கேட்டார் (யோவா. 6:67). அந்த வார்த்தைகளில் கவலையையும் அக்கறையையும்கூட நாம் நிச்சயமாகவே உய்த்து உணருகின்றோம்.*

*பேதுருவின் பதில் அவரது [இயேசுவின்] இருதயத்திற்குக் களிப்பூட்டியிருக்க வேண்டும். அப்போஸ்தலர்களுக்காகப் பேசிய அவர் [பேதுரு], ''ஆண்டவரே, யாரிடத்தில் போவோம். நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே. நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம்" என்று கூறினார் (யோவா. 6:68, 69). சந்தர்ப்பப் பொருளில், "நாங்கள் விசுவாசித்து இருக்கிறோம்'' என்பவை திறவுகோல் வார்த்தைகளாக உள்ளன. அவர்களின் விசுவாசம் பூரணப்பட்டதாக இருந்ததா? கிறிஸ்து யார் என்பதை அவர்கள் முழுமையாகப் புரிந்துகொண்டிருந்தார்களா? இராஜ்யத்தின் உண்மையான இயல்பு அவர்களின் சிந்தைகளில் தெளிவாயிருந்ததா? இல்லை, இல்லை. இருந்தாலும், அவர்கள் இயேசுவே மேசியா என்று நம்பியிருந்தார்கள், அவருக்குத் தங்களை அர்ப்பணித்திருந்தார்கள். அவர்களின் விசுவாசம் வளர்ந்துகொண்டு இருந்தது. அவர்கள் சோதனையில் தேறியிருந்தார்கள்!*

*நான் அதை மறுசொற்றொடராக்க அனுமதியுங்கள்: அவர்களில் பெரும்பான்மையானோர் சோதனையில் தேறியிருந்தார்கள். பேதுரு அதை அறியாதிருந்தார்,[40] ஆனால் அவர் அப்போஸ்தலர்களில் பதினோரு பேருக்காக மட்டுமே பேசினார். ஜீவ அப்பம் பற்றிய பிரசங்கத்தைச் சுற்றி நடந்த நிகழ்ச்சிகள், யூதாஸ் இயேசுவை முற்றாகப் புறக்கணிப்பதற்கு அடிப்படைக் காரணியாக இருந்தன என்று நமது வேத வசனப் பகுதிகள் சுட்டிக்காண்பிக்கின்றன (யோவா. 6:64, 70, 71).[41] இந்த வேளையில் மற்ற பலர் சரீரப்பிரகாரமாக பிரிந்து சென்றதுபோல யூதாஸ் பிரிந்து சென்றுவிடவில்லை, ஆனால் அவனது இருதயம் இனியும் ஆண்டவருடன்*

*இல்லாதிருந்தது. பூமிக்குரிய அரியணையையும் அதனுடன் உதவியாக வந்த ஆதாயங்கள் யாவற்றையும் இயேசு மறுத்தபோது, அது யூதாஸுக்கு ஏமாற்றத்தைப் பெருக்கெடுக்கச் செய்திருக்க வேண்டும்[42] (யோவா. 6:15). இயேசுவின் வார்த்தைகள் கூட்டத்தாரைத் துரத்தி விட்டபோது, அவிசுவாசம் அவனை மூழ்கடித்திருக்க வேண்டும்; அது ஒரு பேரரசைக் கட்டி எழுப்புவதற்கான வழியாக இருந்ததில்லை! குழுவினர் என்ற வகையில் பன்னிருவரும் சோதனையில் தேறுவதற்குரிய மதிப்பெண்களைப் பெற்றிருந்தார்கள், ஆனால் யூதாஸ் பரிதபிக்கத்தக்க வகையில் தோல்வியடைந்தான்.*

## *முடிவுரை*

*அப்போஸ்தலர்களுக்கு வேறு சோதனைகளும் இருந்திருக்கும் (மத். 16:13ஐக் காணவும்), ஆனால் இயேசுவைப் பின்பற்றுவதாக உரிமைகோரியவர்களுக்கு சோதிக்கப்படுதலின் வேறு எந்த வேளையும் இவ்வளவு விரிவான செயல்விளைவைக் கொண்டிருந்தது இல்லை. நாம் உய்த்துணர்ந்தாலும் இல்லை என்றாலும், நீங்களும் நானும் இதே பரீட்சைகளுக்கு இன்னமும் உட்பட்டவர்களாக இருக்கின்றோம்:*

1. *எனது தேவைகளின்மீது அக்கறை கொள்வதில் நான் அவர்மீது நம்பிக்கை கொள்ளுகின்றேனா அல்லது பிரச்சனைகள் எழுகின்றபோது நான் சிடுசிடுத்து அமளி செய்கின்றேனா?*
2. *என்னைப் பாதுகாப்பார் என்று நான் அவர்மீது நம்பிக்கை கொள்ளுகின்றேனா அல்லது எனது வாழ்வில் சிரமம் வருகிறபோது நான் பயத்தில் புரளுகின்றேனா?*
3. *எனக்கு அவர் வாழ்வைத் தருவார் என்று நான் அவர்மீது நம்பிக்கை கொள்ளுகின்றேனா? நான் அப்படிச் செய்தால், என் வாழ்வை அவருக்குத் தருவேன்.*

*நினைவில் வையுங்கள்: விசுவாசம் உள்ளவர், உண்மையான விசுவாசம் உள்ளவர் மாத்திரமே தேர்ச்சிக்குரிய மதிப்பெண்களைப் பெறுகின்றார்.*

## *குறிப்புகள்*

*இந்தப் பாடத்துடன் பிணைப்பதற்கான பிரசங்கம் பற்றிய எனது தேர்வில் நான் போராடினேன். அற்புதமாய் உணவளித்தது பற்றிய ஒரு பிரசங்கத்தையும் ஜீவ அப்பத்தின்மீதான உரை பற்றிய ஒரு பிரசங்கத்தையும் தயாரிக்க நான் விரும்பினேன். ஆயினும் ஒவ்வொரு பாடத்திலும் இரண்டிரண்டு பிரசங்கங்களைத் துணைவைக்கும் நடைமுறையை ஏற்படுத்த நான் விரும்பவில்லை. ஜீவ அப்பம் பற்றிய வசனப் பகுதியானது மாணவர்களுக்கு குறைவான பழக்கமுடையதாகையால் அதைத் தேர்ந்து கொள்ள நான் சாய்ந்தேன், ஆனால் ஐயாயிரம் பேருக்கு உணவளித்த நிகழ்ச்சியானது தொடக்க காலக் கிறிஸ்தவர்களுக்கு மிகவும் முக்கியமானதாக இருந்த காரணத்தினாலும்,[43] அது இன்றைய நாட்களின் கிறிஸ்தவர்*

களின் மத்தியில் இன்னமும் பிரபலமாயிருப்பதாலும் நான் இதையே தேர்ந்து கொண்டேன். இந்த நிகழ்ச்சியின் மீதான எனது விளக்கவுரை முயற்சிகள் இந்தப் பாடத்தைத் தொடர்ந்து வருகின்றன.

ஜீவ அப்பத்தின் மீதான உரை பற்றி நான் ஒரு பிரசங்கத்தைத் தயாரித்திருந்தால், "தவறான நோக்கங்களுக்காகத் தேவனைத் தேடுதல்" என்பதே எனது அணுகுமுறையாக இருந்திருக்கும். இயேசு, தாம் பொழியக்கூடிய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கு மாறாக, தாம் அளிக்கக் கூடிய சரீரப்பிரகாரமான பயன்களின்மீது அடிப்படை ஆர்வம் கொண்டிருந்த பின்பற்றாளர்களால் சூழப்பட்டு இருந்தார். நம்மைப் பற்றிய விஷயம் என்ன?

உண்மையில், இந்தப் பாடம் பிரசங்கத்துவ சாத்தியக்கூற்றினால் நிறைந்து வெடிக்கும் நிலையில் உள்ள வசனப்பகுதிகள் பொதியப்பட்டதாக உள்ளது. பிறருக்கு உதவுதல் என்ற கருத்தைப் பிரசங்கிப்பதற்காக, ஐயாயிரம் பேருக்கு உணவளித்தலின் வரலாற்றை நான் பயன்படுத்தினேன். இது சுவிசேஷ ஊழியத்தின் அவசியம் என்பதன் மீதானதொரு பிரசங்கத் திற்குத் தழுவிக்கொள்ளப்பட முடியும்: "திரளான கூட்டத்தாருக்கு உணவளித்தல்": (1) கூட்டத்தாரின் சரீரப்பிரகாரமான தேவைகள்மீது இயேசு அக்கறையாயிருந்தது போல் நாம் திரளான கூட்டத்தாரின் ஆவிக்குரிய தேவைகள்மீது அக்கறையாக இருக்க வேண்டும். (2) திரளான கூட்டத்தாருக்கு ஆவிக்குரிய வகையில் உணவளிப்பதற்கு, நாம் நமது சொந்த ஆதாரமூலங்களுக்கும் அப்பால் கண்ணோக்கவும், கர்த்தரைச் சார்ந்திருக்கவும் கற்றுக் கொள்ளவும் வேண்டும். (3) ஆவிக்குரிய போஷிப் பானது கர்த்தரிடத்திலிருந்து (வசனத்திலிருந்து) வருகிறது. அதனை நமது பொறுப்பு தொடங்கி வைப்பதில்லை, ஆனால் - அப்போஸ்தலர்கள் செய்ததுபோல் அதனைப் பகிர்ந்து கொள்ளுவதில் இருக்கிறது.

இயேசு தண்ணீரின்மீது நடந்த மற்றும் புயலை அமர்த்திய வரலாற்றை ஆழ்ந்து சிந்தியுங்கள்: இந்த நிகழ்ச்சியின்மீதான ஒரு பிரசங்கத்திற்கு "கிறிஸ்து தொலைவில் இருப்பவராகக் காணப்படும்போது" என்று தலைப்பிடலாம். சாத்தியமான பிரதானக் கருத்துக்கள் இங்கு தரப்படுகின்றன: (1) நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து இருக்கும்போது கூட புயல்கள் வருகின்றன. (2) உங்கள் வாழ்வில் புயல்கள் வீசுகின்றன பொழுதும் அதை இயேசு அறிந்தவராயிருக்கிறார். (3) புயல்கள் வரும் போது, உங்கள் பலவீனங்களைக் கண்ணோக்காமல், அவருடைய பலத்தைச் சார்ந்திருங்கள். (4) அவர் புயலை அமர்த்த முடியும் என்று விசுவாசியுங்கள். (5) அமர்த்துதலுடன் எதிர்பாராத ஆசீர்வாதங்களும் வரக்கூடும் (யோவா. 6:21ஆ).

மேற்கண்ட வரலாற்றின் ஒரு பாகத்தை மட்டும் வைத்துப் பிரசங்கங் கள் பிரசங்கிக்கப்பட்டுள்ளன: பேதுரு தண்ணீரின்மீது நடந்தார் (மற்றும் மூழ்கினார்) - இந்தப் பிரசங்கத்தில், வாழ்வின் காற்றுகள் மற்றும் அலைகள் ஆகியவற்றைக் கண்ணோக்குவதற்குப் பதிலாக இயேசுவைக் கண்ணோக்கு தலை வலியுறுத்துதலும் இருக்கும்.

யோவான் 6ல் ஜீவ அப்பத்தின் மீதான இயேசுவின் உரையில் உள்ள மற்ற அம்சங்கள் பிரசங்கச் சாத்தியக்கூற்றினைக் கொண்டுள்ளன. எடுத்துக்

*காட்டாக, ஜீவ அப்பத்தின்மீதான உரையில் உள்ள ஒரு தனி வசனம் - "ஆண்டவரே யாரிடத்தில் போவோம்?" (யோவா. 6:68) - அர்த்தம் நிறைந்த பிரசங்கம் ஒன்றைத் தொடங்கும் இடமாக பயன்படக்கூடும். இயேசு ஒருவரே உலகின் பிரச்சனைகளுக்கு ஒப்பேறக்கூடிய தேர்ந்து கொள்ளு தலாக இருக்கின்றார் மற்றும் மக்களின் ஆத்துமாக்களுக்கு ஒரே நம்பிக்கை யாக இருக்கின்றார் என்பதை புரிந்து கொள்ளாத வரையிலும் சிலர் இயேசுவைப் பற்றித் தீவிரமாகச் சிந்திப்பதற்கு மறுத்துவிடுவார்கள்.*

*மீண்டுமாக கூட்டத்தார், வனாந்தரத்தில் தரப்பட்ட மன்னாவைத் தங்கள் சிந்தைகளில் கொண்டிருந்ததால், இதைக் கிறிஸ்து, ஜீவ அப்பத்து டன் நேரெதிராக ஒப்பிட்டார். அந்த நேரெதிர்ப் பண்பைக் காண்பிப்பதற்கு நீங்கள் ஒரு வரைவட்டவணையைத் தயாரிக்க விரும்பலாம், அது பிரசங்கித் தலுக்கான வரைக்குறிப்பாகப் பயன்படுத்தப்பட முடியும். உங்கள் சிந்தனை யைத் தூண்டக்கூடிய மாதிரி அட்டவணை ஒன்று குறிப்புகளுக்குப் பின் தரப்படுகிறது.*

---

குறிப்புகள்

*[1]இப்புத்தகத்தில் முன்புள்ள "நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா?" என்ற பாடத்தின் அறிமுகத்தை மீண்டும் வாசிக்கவும். [2]இயேசு இந்தப் பின்வாங்குதலை முன்மொழிந்தது ஏன் என்பதை மறுகண்ணோட்டமிட நீங்கள் விரும்பலாம் (முந்தின பாடத்தின் கடைசிப் பகுதியை மீண்டும் வாசியுங்கள்.) [3]இந்த நிகழ்ச்சி பற்றிய முழுமையான விவரத்திற்கு, தொடர்ந்து வரும் பிரசங்கத்தைக் காணவும். பாடத்தின் இந்த இடத்தில், நீங்கள் குறைந்தபட்சம் இந்த நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்த விரும்பலாம். ("மக்களுக்கு உண்மையிலேயே உதவி தேவைப்படுகிறபோது" என்ற அடுத்த பாடத்தின் அறிமுகப் பகுதியைக் காணவும்.) [4]மிகச் சரியாக இந்த கூற்று வேத வசனப்பகுதியில் தோன்றுவதில்லை என்றாலும், துணைக்கருத்துத் தலைப்புக்களில் நான் பயன்படுத்தும் இந்தக் கேள்வியும் மற்ற கேள்விகளும், இயேசு தமது அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்த சோதனைகளைப் பிரதிபலிக்கின்றன. [5]நான், துணைக் கருத்துத் தலைப்புக்களில் "நம்பிக்கை" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றேன், ஏனெனில் நம்பிக்கை என்பது இரட்சிக்கும் விசுவாசத்தின் அத்தியாவசியமான பகுதியாக உள்ளது. [6]இது மறைமுகமாய் உணர்த்தப்பட்டுள்ளது. அவர்கள் ஏதேனும் உணவைக் கொண்டு வந்திருந்தால், அங்கு இருந்தது என்னென்ன என்பது பற்றி இயேசுவுக்கு அவர்கள் தந்த அறிக்கையில் நிச்சயமாக அதைப் பட்டியலிட்டிருப்பார்கள். இதை அவர்கள் செய்யவில்லை என்ற உண்மையானது அவர்கள் ஏரோதுவின் எல்லைப் பகுதிகளில் இருந்து பின்வாங்கிச் செல்ல வேண்டியதில் உள்ளடங்கியிருந்த அவசரத் தன்மைக்கு ஒரு சுட்டிக்காட்டுதலாக இருக்கலாம். அவர்கள் அருகாமையிலிருந்த ஊர் ஒன்றில் உணவு வாங்கிக்கொள்ளத் திட்டமிட்டு இருக்கலாம் (யோவா. 4:8ஐக் காணவும்). [7]இந்த விஷயம் குறித்த அவர்களின் இயலாமை நமது இவ்வரலாற்றின் பிற்பகுதியில் வலியுறுத்தப்பட்டுள்ளது; மாற். 6:42ஐ வாசிக்கவும். [8]அப்பம் மற்றும் மீன்கள் ஆகியவற்றின் அளவு குறித்து, தொடர்ந்து வரும் பிரசங்கத்தில் காணவும். [9]*"All-you-can-eat buffet" *என்பது, உண்பவர்கள் தாங்கள் திருப்தியடையும் வரையில் தங்கள் உணவுத் தட்டுகளை உணவுகளால் நிரப்பிக் கொள்ள அனுமதிக்கின்ற அமெரிக்க உணவு விடுதிகள் சிலவற்றில் பயன்படுத்தப்படுகிற சொற்றொடராக உள்ளது.*

மக்கள் "வயிறாற" உண்டார்கள் என்று பெரும்பான்மையான சுவிசேஷ விவரங்கள் வலியுறுத்துவதால் நான் இந்தச் சொற்றொடரை இங்கு பயன்படுத்தியுள்ளேன். [10]யோவான் 6:26 வசனம், அவர்களின் பேரார்வத்தைச் சித்தரிக்கிறது.

[11]மோசேயைப் போல் ஒரு தீர்க்கதரிசியைத் தேவன் எழுப்புவார் என்ற மோசேயின் கூற்றை மக்கள் தங்கள் சிந்தையில் கொண்டிருந்திருப்பார்கள் என்பது உறுதி (உபா. 18:15). அடுத்த நாளில் இயேசு செய்த பிரசங்கமானது, மக்கள் அவரை மோசேயுடன் ஒப்பிட்டார்கள் என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது (யோவா. 6:31, 32, 49, 58). [12]இயேசுவின் ஊழியத்தின் முடிவுக்கு அண்மையில், கிறிஸ்து எருசலேமுக்குள் வெற்றிப் பிரவேசமாக நுழைந்த போது, இதே போன்ற உணர்வெழுச்சி கூட்டத்தாரைப் பற்றிக் கொண்டது (மத். 21:1-11, 14-17; மாற். 11:1-11; லூக். 19:29-44; யோவா. 12:12-19 ஆகியவற்றைக் காணவும்). [13]இயேசு, பிதாவினிடத்திற்கு திரும்ப எழுந்து செல்லாதவரையிலும் அவர் [இயேசு] ராஜாவாக முடிசூடப்படவில்லை என்பதில் ஒரு கருத்துள்ளது. ஆயினும், இயேசு தாமே "யூதர்களின் ராஜாவாக" இருப்பதை ஒப்புக் கொண்டதால் (மத். 27:11), ஞானிகளின் இந்தக் கூற்று மிகச் சரியானது என்று நாம் கண்ணோக்க வேண்டும். [14]அவர், அவர்களைப் பெத்சாயிதா/கப்பர்நகூமுக்குச் செல்லும்படி கூறினார் (மாற். 6:45; யோவா. 6:17). (இந்த பெத்சாயிதா கப்பர்நகூமுக்கு அருகில் இருந்தது, ஒருவேளை இது அதன் புறநகர்ப்பகுதியாக இருந்திருக்கலாம்.) இயேசு ஏன் தமது சீஷர்களைத் தம்மை விட்டுப் புறம்பே அனுப்பினார் என்பது நமக்குக் கூறப்படவில்லை. ஒருவேளை அவர், கூட்டத்தாரும் சென்று விடும்படி அவர்கள்மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு, தமது கட்டளையுடன் அவர்களின் இணக்கத்தையும் விரும்பியிருக்கலாம். ஒருவேளை அவர்கள் அந்தக் கூட்டத்தாரின் தவறாக வழிநடத்தப்பட்ட வைராக்கியத்தில் பிடிபடுவதை அவர் விரும்பாது இருந்திருக்க லாம். அவர்களும் கூட, இராஜ்யம் பற்றிய பொருளாதார ரீதியான தவறான கருத்துக்களுடன் போராடிக் கொண்டிருந்தார்களே. [15]கூட்டத்தில் பலர் பொதுவாகப் பார்வையில்படும் இடத்தில் தங்கியிருந்தார்கள் (யோவா. 6:22), ஆனால் இயேசு அவர்களைக் கலைந்து செல்லச் செய்ததின் மூலம் குறைந்தபட்சம் அவர்களின் உணர்வெழுச்சியைக் குளுமைப்படுத்தினார். [16]இது மறைமுகமாக உணர்த்தப்பட்டுள்ளது. அவர் கவலையாக இருப்பதற்குப் பல காரணங்களைக் கொண்டிருந்தார். அவரது அப்போஸ்தலர்களாலும் கூட்டத்தாராலும் அவ் வேளையில் காட்சிப்படுத்தப்பட்ட பொதுவான தவறான புரிந்து கொள்ளுதலுடன் கூடுதலாக, அவர் தமது உறவினரான யோவான் ஸ்நானனின் மறைவு குறித்துப் புலம்புவதற்கு இன்னும் ஒரு வாய்ப்பைப் பெற்று இருந்ததில்லை. [17]அந்தப் பகுதியில் ஒரு மலை இருந்தது (யோவா. 6:3). இயேசு திரளான கூட்டத்தினருக்குப் போதிக்க, மலையின் ஓரத்தில் அமர்ந்திருக்கலாம், பின்பு மக்களுக்கு உணவளிக்க சமவெளிப் பகுதிக்கு இறங்கி வந்திருக்கலாம். [18]NASBயில் [மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பில்] "மூன்று நாலு மைல் தூரம்" என்றுள்ளது (யோவா. 6:19). KJVயில் "five and twenty or thirty furlongs" என்றுள்ளது. கிரேக்க மொழியில் இருபத்தி ஐந்து அல்லது முப்பது *stadia* என்றுள்ளது. *Stadia* என்பது stadion என்ற வார்த்தையின் பன்மைச் சொல்லாக உள்ளது, இது சுமார் 607 அடிகள் கொண்ட ஒரு ரோம அளவையாகும். [19]"இவர் யார்" என்ற பாடத்தில் கலிலேயாக் கடல் பற்றிய கலந்துரையாடலை வாசிக்கவும். [20]அவர்கள் "இருட்டாயிருந்த" போது, "சாயங்காலத்தின்" ஏதோ ஒரு வேளையில் புறப்பட்டிருந்தார்கள் (யோவா. 6:16, 17ஐக் காணவும்), ஆனால் "நாலாம் ஜாமம்" வரைக்கும் இயேசு அவர்களிடத்தில் வரவில்லை (மத். 14:25; மாற். 6:48), இது அதிகாலை 3:00 முதல் 6:00 மணி வரையான வேளையாகும்.

[21]இயேசு புயலை அனுப்பியிருந்ததில்லை, ஆனால் வாழ்வில் ஏற்படும்

ஒவ்வொரு இடர்ப்பாடும் அவரில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தைச் சோதிக்கிறது. [22]"இவர் யார்?" என்ற பாடத்தைப் படிக்கவும். [23]மாற்கு சுவிசேஷ விவரம், "அவர்களைக் கடந்துபோகிறவர்போல் காணப்பட்டார்" என்று கூறுகிறது (மாற். 6:48). அவர்களைப் பயமுறுத்துவதைத் தவிர்ப்பதற்காக அவர் "அவர்களைக் கடந்து செல்ல நோக்கம் கொண்டார்" என்று சிலர் ருத்துத் தெரிவித்துள்ளார்கள், ஒருவேளை அவ்வாறு இருந்திருக்கலாம். ஆயினும் மற்ற சுவிசேஷ விவரங்கள், இயேசு "அவர்களிடத்தில் போனார்" என்பதைச் சுட்டிக் காண்பிக்கின்றன (மத். 14:25; யோவா. 6:19). மாற்கு 6ல், "கடந்து போகிறவர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது, "உடன் செல்லுகிறவர்" என்றும் மொழிபெயர்க்கப்படக் கூடும், அதுவே இவ்விடத்தில் சாத்தியமான அர்த்தமாக இருக்கிறது. [24]அவரை ஒரு ஆவேசம் என்று அவர்கள் நினைத்தது ஏன் என்பது நமக்குக் கூறப்படவில்லை; ஆனால் அந்த நாட்களில் மனிதர்களின் இருதயங்களில் மூடநம்பிக்கை ஆட்சி செலுத்திற்று என்பதை நினைவில் வையுங்கள். [25]இந்த நிகழ்ச்சிகள் "உடனடியாக" நடைபெற்றன என்ற கருத்தானது யோவான் 6:21ல் தெரிவிக்கப்படுகிறது. [26]சில வேளைகளில் கலிலேயாக்கடல், "கெனேசரேத் கடல்" என்று அழைக்கப் பட்டது (லூக். 5:1), ஏனென்றால் அப்பகுதியானது அங்கிருந்து பார்வைக்கெட்டும் தூரத்தில் இருந்தது. [27]மக்கள் இயேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டது பற்றி "நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா" என்ற பாடத்தில் காணவும். [28]படகுகள் மேற்குக் கரையில் இருந்த திபேரியாவிலிருந்து வந்தன. படகோட்டிகள் கூட்டத்தைக் கண்டு, அவர்கள் செல்ல விரும்பும் இடத்திற்கு அவர்களை அழைத்துச் செல்வதன் மூலம் பணம் சம்பாதிக்கலாம் என்ற நம்பிக்கையில் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்திருக்கலாம். இதற்கு முன்பு அந்தக் கூட்டத்தில் இருந்தவர்கள் கப்பர்நகூமிலிருந்து கால்நடையாக நடந்து சென்றிருந்தார்கள், ஆனால் கப்பர்நகூமுக்குப் படகில் திரும்பிச் செல்லுவது என்பது பயணிக்க மிகவும் சுலபமான வழியாக இருந்திருக்கலாம். [29]இந்த மாபெரும் பிரசங்கத்தை வசனத்திற்கு வசனம் விளக்கிக் கூறுதலை இங்குள்ள வரையறைக்குட்பட்ட இடமானது தடை செய்கிறது. இயேசு மற்றும் அவரைக் கேள்வி கேட்டவர்கள் ஆகியோருக்கிடையில் நடைபெற்ற உரையாடலின் எளிமைப்படுத்தப்பட்ட விவரத்தைத் தருதல் அவசியமானதாக உள்ளது. [30]இந்தப் பாடத்தின் முற்பகுதியில் யோவான் 6:14க்கான குறிப்புகளை மறுகண்ணோட்டமிடவும்.

[31]இதை யோவான் 4:15ல் சமாரியப் பெண்ணின் வேண்டுகோளுடன் ஒப்பிடவும். யோவான் 4ல் அந்தப் பெண்ணுடனான இயேசுவின் கலந்துரை யாடலுக்கும் யோவான் 6ல் அவரது பிரசங்கத்துக்கும் இடையில் பல இணைவுகள் உள்ளன. யோவான் 4ல் கிறிஸ்து தண்ணீர் என்ற உருவகத்தைப் பயன்படுத்தினார், ஏனென்றால் அந்தப் பெண்ணின் சிந்தையில் தண்ணீர் என்ற கருத்து அப்போது இருந்தது, மற்றும் அவர் யோவான் 6ல் அப்பம் என்ற உருவகத்தைப் பயன்படுத்தி னார், ஏனென்றால் உணவு என்பதே அந்தக் கூட்டத்தாரின் அக்கறையாக/கவலை யாக இருந்தது. பிரதான கருத்து இன்னமும் ஒரே மாதிரியானதாகவே உள்ளது. ஆயினும், யோவான் 4ன் கலந்துரையாடல், ஏற்றுக்கொள்ளுதலை விளைவித்தது, யோவான் 6ன் கலந்துரையாடல் புறக்கணித்ததில் முடிந்தது. [32]வசனம் 48 மற்றும் 51 ஆகியவற்றையும் காணவும். "நானே" என்னும் மற்ற கூற்றுக்கள் உள்ள வசனங்கள் பின்வருமாறு: 8:12, 58; 10:11; 11:25; 14:6; மற்றும் 15:1. [33]இயேசு தம்மீது விசுவாசம் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தக் கூடுதலான வார்த்தைகளைப் பயன்படுத்தினார் (யோவா. 6:40, 47ஐக் காணவும்); ஆனால், ஏற்கனவே கூறப்பட்டபடி, ஒவ்வொரு வசனத்தையும் ஆராய இங்குள்ள

[வரையறைக்குட்பட்ட] இடம் அனுமதிப்பதில்லை. [34]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 385. [35]David Smith, *The Days of His Flesh*: *The Earthly Life of Our Lord and Saviour Jesus Christ,* 8th ed. (London: Hodder and Stoughton, 1910), 241 (emphasis his); quoted in Robert Duncan Culver, *The Life of Christ* (Grand Rapids, Mich.: Baker Book House, 1976), 147n. [36]*இது கத்தோலிக்கர்களின் திருப்பலியை நியாயப்படுத்துவதற்கு அவர்களால் பயன்படுத்தப்படுகிற வசனப்பகுதிகளில் ஒன்றாக உள்ளது, அந்தத் திருப்பலியின் போது அப்பமும் திராட்ச இரசமும் இயேசுவின் உடலாகவும் இரத்தமாகவும் நேரடியாகவே மாறுகின்றன என்று அவர்கள் உரிமைகோருகின்றார்கள். ஆயினும், கர்த்தருடைய பந்தியை கிறிஸ்து ஏற்படுத்தியபோது, அது ஒரு நினைவுகூரும் பண்டிகையாக/ஆசரிப்பாக இருந்தது என்பதை அவர் தெளிவாக்கினார் (லூக். 22:19; 1 கொரி. 11:24, 25). இது நமது பாடத் தொடரில் பிற்பாடு, கர்த்தருடைய பந்தியைப் பற்றி நாம் படிக்கும்போது கலந்துரையாடப்படும் (மத். 26:26-29; மாற். 14:22-25; லூக். 22:19, 20; 1 கொரி. 11:23-26).* [37]*ஏசாயா 54:13; எரேமியா 31:33, 34 ஆகியவற்றை வாசிக்கவும்.* [38]Johnny Ramsey, "Eat My Flesh; Drink My Blood," *Gospel Minutes* (27 July 1979): 3. [39]*யோவானின் சுவிசேஷ விவரத்தில் இந்த இடத்தில் இருந்து, அவர் "சீஷன்" என்ற வார்த்தையை "உண்மையான சீஷன்" என்ற அர்த்தத்தில் மாத்திரம் பயன்படுத்தினார்.* [40]*முடிவு வரைக்கும் அப்போஸ்தலர்கள் யூதாஸின் அவிசுவாசத்தைப் பற்றி அறிந்திருக்கவில்லை (யோவா. 13:21, 22ஐக் காணவும்).*

[41]*யூதாஸ் ஏதோ ஒரு வகையில் ஒரு புதிராகவே இருக்கின்றான். சிலர் அவனை ("அவன் தொடக்கத்திலிருந்தே பிசாசாக இருந்தான்" என்று கூறி) மிகவும் இருட்டாகச் சித்தரிக்கின்றார்கள், மற்றவர்களோ கர்த்தரை விற்றுப் போட்ட அவனது பொல்லாத நடக்கையென்ற குற்றத்திலிருந்து அவனை விடுவிக்கின்றார்கள். யூதாஸ் பற்றி (அவன் என்ன செய்தான் மற்றும் அவன் ஏன் அதைச் செய்தான் என்பவை பற்றி) இந்தப் பாடத் தொடரில் பிற்பகுதியில் காணப்படும்.* [42]*பணம் பற்றிய சிந்தை யூதாஸின் இருதயத்தில் முந்தி இடம் பெற்றிருந்தது (யோவா. 12:6).* [43]*ஜீவ அப்பம். இதைப் பற்றிய குறிப்புகளை, தொடர்ந்து வரும் "மக்களுக்கு உண்மையிலேயே உதவி தேவைப்படும்போது" என்ற பிரசங்கத்தில் படிக்கவும்.*

---

## *ஜீவ அப்பம் (யோவான் 6:27-58)*

| ***மன்னா*** | ***ஜீவ அப்பம்*** |
|---|---|
| *தேவனிடமிருந்து வந்தது (வ. 31, 32)* | *தேவனிடமிருந்து வந்தவர் (வ. 32, 58)* |
| *அழியக்கூடியது (வ. 27)* | *நிலைத்திருப்பவர் (வ. 27)* |
| *சரீரப்பிரகாரமானது (அப்பம்)* | *ஆவிக்குரியவர் (இயேசு; வ. 35, 48, 51)* |
| *உண்டவர்களுக்கு மீண்டும் பசி ஏற்பட்டது (மறைமுகமாய் உணர்த்தப்பட்டது)* | *உண்பவர்கள் திருப்தி அடைகின்றார்கள் (வ. 35)* |
| *உண்டவர்கள் கடைசியில் மரித்தார்கள் (வ. 49, 58)* | *உண்பவர்கள் பிழைப்பார்கள் (வ. 33, 40, 47, 50, 51, 58)* |
| *உண்டதினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது (வ. 31)* | *விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றார் (வ. 29, 35, 36, 40, 47)* |

42

# மக்களுக்கு உண்மையிலேயே உதவி தேவைப்படும்போது

## மத். 14:13-21; மாற். 6:33-44; லூக். 9:11-17; யோவா. 6:2-14, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*"ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல்" என்று பொதுவாகக் குறிப்பிடப் படும் நிகழ்ச்சி, கிறிஸ்துவின் மிகத் தனிச்சிறப்பான அற்புதங்களில் ஒன்றாக உள்ளது. உயிர்த்தெழுதல் தவிர்த்து, இது ஒன்றுதான் நான்கு சுவிசேஷ விவரங்களிலும் பதிவு செய்யப்பட்ட ஒரே அற்புதமாக உள்ளது.[1] குறிப்பிட்ட இந்த அற்புதம் ஏன் இப்படி உயர்வாக மதிக்கப்படுகிறது? ஒருவேளை இது கர்த்தருடைய "படைப்பாக்கத்திறன்" கொண்ட ஒரு சில அற்புதங்களில் ஒன்றாக இருந்தது என்பது இதற்குக் காரணமாக இருக்கலாம்.[2] வேறு எந்த ஒரு அற்புதமும் இவ்வளவு திரளான கூட்டத் தாரால் பார்க்கப்பட்டு, வஞ்சிக்கப்படுதல் என்ற சூழ்நிலையை தவிர்த்து இருந்ததில்லை என்பது இதற்குக் காரணமாக இருக்கலாம். காரணம் எதுவாயிருப்பினும், திரளான கூட்டத்தாருக்கு இயேசு உணவளித்தது பற்றிய வரலாறு, தொடக்க காலக் கிறிஸ்தவர்களுக்கு முக்கியமானதாக இருந்தது. அப்பங்கள் மற்றும் மீன்கள் ஆகியவற்றின் கருத்துரு என்பது தொடக்க கால கிறிஸ்தவ வரைகலையில் பொதுவானதாக இருக்கிறது. இந்த நிகழ்ச்சியானது இன்றைய நாட்களில் உள்ள கிறிஸ்தவர்களுக்கும் விசேஷித்த அர்த்தம் உடையதாக இருக்கிறது. வேதாகம வரலாற்றில் மக்களுக்கு மிகவும் பிரியமான நிகழ்ச்சிகளை அறியும்படி வாக்கெடுப்புகள், ஆய்வுகள் நடத்தப்படும்போது, இந்த வரலாறு எவ்வித மாறுபாடுமின்றி பட்டியலின் உச்சிக்கு அருகில் இருக்கிறது.*

*ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல் என்பது பல்வேறு நிலைப்பாடுகளில் இருந்த அணுகப்பட முடியும்,[3] ஆனால் இதை நான், இயேசு மக்களுக்கு எவ்வாறு உதவினார் - மற்றும் நீங்களும் நானும் அதே விஷயத்தை எவ்வாறு செய்ய முடியும் என்பதற்கு உதாரணமாகப் பயன்படுத்தவே விரும்புகின் றேன். புதிய ஏற்பாடு எதையாவது போதிக்கிறதென்றால், அது கிறிஸ்துவின் பின்பற்றாளர்கள் என்ற வகையில் நாம் மற்றவர்களின் தேவைகள் குறித்து உணர்வறிவு உடையவர்களாயிருந்து அவர்களுக்கு உதவ முயற்சி செய்ய*

வேண்டும் என்றே போதிக்கிறது.

> ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக் கடவோம் (கலா. 6:10).
>
> திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது (யாக். 1:27).
>
> ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலை கொள்ளுகிறதெப்படி? (1 யோவா. 3:17).

ஐயாயிரம் பேர்களுக்கு உணவளித்தலின் வரலாறானது - உண்மையிலேயே தேவைகள் உடையவர்களுக்கு எவ்வாறு உதவுவது மற்றும் உதவாதிருப்பது என்பது உட்பட - இந்தக் கட்டளைகளை நிறைவேற்றுவது எவ்வாறு என்பதற்கான முக்கியமான கொள்கைகளை உள்ளடக்கியிருக்கிறது.

## மக்கள் தேவைகளைக் கொண்டுள்ளார்கள்

இவ்வரலாற்றின் முதற்பகுதி, உண்மையான, மெய்யான தேவைகளைக் கொண்டுள்ள மனிதர்கள் இருக்கின்றார்கள் என்ற உண்மையை முக்கியத்துவப்படுத்துகிறது.[4] நாம் ஒரு முன்கண்ணோட்டத்துடனும் சில பின்னணித் தகவல்களுடனும் தொடங்குவோம்.

இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும் கலிலேயாவைச் சுற்றி பயணம் செய்து கொண்டிருந்தார்கள். அந்தப் பயணத்தின் முடிவில், ஏரோது அரசன் யோவான் ஸ்நானனைச் சிரச்சேதம் செய்வித்திருந்தான் - மற்றும் அவன் இப்போது அவர்களின் ஊழியத்தின்மீது அபாயத்திற்குரிய வகையில் ஆர்வமாய் இருந்தான் - என்பதை அவர்கள் அறிந்தார்கள்.[5] பன்னிருவரும் கலிலேயாக்கடலின் கிழக்குக் கரைக்குச் செல்ல வேண்டும் என்ற திட்டத்தைக் கிறிஸ்து முன் வைத்தார். அவர்களின் அடைவிடமானது, பெத்சாயிதா - ஜுலியஸ் அருகில் இருந்த ஒரு வனாந்தரமான பகுதியாக இருந்தது, இது கலிலேயாக் கடலின் வடக்கு முனையில் இருந்து ஏழு அல்லது எட்டு மைல்கள் தொலைவில் இருந்தது.[6] கடலின் குறுக்கே அவர்களின் படகுப் பயணமானது அநேகமாக ஒரு ஓய்வான விஷயமாக இருந்திருக்கும். கிறிஸ்துவும் - அநேகமாக சீஷர்களில் ஒரு சிலரும் - அந்தப் பயணத்தில் ஒரு சிறு தூக்கம் தூங்கியிருப்பார்கள் என்று நான் கற்பனை செய்கின்றேன் (மத். 8:24ஐக் காணவும்).

***அன்று தேவையில் இருந்த மக்கள்***

*அதே வேளையில், கப்பர்நகூமில் இருந்த கூட்டத்தார், இயேசுவின் திட்டத்தை எவ்வாறோ கண்டறிந்து, "பட்டணங்களிலிருந்து கால் நடையாய் அவரிடத்திற்குப் போனார்கள்" (மத். 14:13). மாற்கு, "... கால்நடையாய் அவ்விடத்திற்கு ஓடி, அவர்களுக்கு முன்னே அங்கே சேர்ந்து ..." என்று எழுதினார் (மாற். 6:33).[7] பின்வரும் காட்சியை உங்கள் மனதில் சித்தரியுங்கள்: இளைஞர்களும் [ஓடத்] தகுதியானவர்களும் கரையோரமாக ஓடிக்கொண்டிருக்க, வயது முதிர்ந்தவர்களும் வியாதிப்பட்டவர்களும் மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தார்கள். தங்களால் இயன்ற அளவுக்கு மிகச் சிறப்பாக துரிதமாய்ச் சென்றவர்கள் மத்தியில் இயேசு குணமாக்கும் படி அவர்கள் கொண்டு வந்திருந்து நோயாளிகளும் இருந்தார்கள் (மத். 14:13, 14). அநேகமாக ஒவ்வொருவரும் ஒன்றாகவே புறப்படத் தொடங்கி யிருப்பார்கள், ஆனால் விரைவிலேயே ஒரு நீண்ட ஊர்வலமானது கடலின் வடக்கு முனையைச் சுற்றிப் பிணைபடத் தொடங்கிற்று.*

*இயேசுவின் படகு கரையை அணுகியபோது, அங்கு அவரது வருகையை ஆவலுடன் எதிர்நோக்கிய ஒரு கூட்டம் ஏற்கனவே இருந்தது (மாற். 6:33; மத். 14:14). கூட்டத்தைக் கண்டபோது சீஷர்கள் வேதனைக் குரல் எழுப்பினார்களா?[8] அவர்கள் களைப்புடனும் பசியுடனும் இருந்தார்கள் (மாற். 6:31); அவர்கள் கிறிஸ்துவுடன் தனிமையில் இருக்க அவர்களுக்கு நேரம் தேவையாக இருந்தது; ஆனால் இங்கு எப்போதும் இருக்கிற, வற்புறுத்துகிற மக்கள் கூட்டம் இருந்தது! அவர்கள் எவ்வாறு உணர்ந்திருப்பார்கள் என்பதை நான் அறிகின்றேன். சில வேளைகளில் நான் உடல், மனம் மற்றும் ஆத்துமா ஆகியவற்றில் மிகவும் களைப்பு அடைந் திருப்பேன் - ஆனாலும் அப்போதும் மக்கள் என்னிடம் வந்து எனது உதவி தேவை என்று கேட்டுக் கொண்டிருப்பார்கள். நான் எப்போதுமே சற்றே கிருபைத் தன்மையுடன் உதவ முயற்சி செய்வதுண்டு, ஆனால் சில வேளைகளில் வெறுப்பின் உணர்வுக்கு எதிராக நான் போராட வேண்டி யிருந்ததும் உண்டு.[9]*

*இயேசுவின் பதில்செயல் என்னுடையது எப்படி இருந்திருக்கும் என்பதுபோல் இருக்கவில்லை. அவர் "... அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலிருந்தபடியால் அவர்கள்மேல் மனதுருகி[னார்] ..."[10] (மாற். 6:34ஆ; மத். 14:14ஐக் காணவும்). அவர்களை அவர் ஏற்றுக் கொண்டாரென்று லூக்கா எழுதினார் (லூக். 9:11அ).[11] அவர்களினால் உண்டான துன்பத்தை அவர் தாங்கிக் கொண்டார் என்றோ, அவர்களை அவர் சகித்துக் கொண்டார் என்றோ கூறப்படவில்லை; அவர்களை அவர் ஏற்றுக்கொண்டார். அது என்னைத் திகைப்பில் ஆழ்த்துகிறது.*

*யோவான், "அவர் வியாதிக்காரரிடத்தில் செய்த அற்புதங்களைத் திரளான ஜனங்கள் கண்டபடியால் அவருக்குப் பின்சென்றார்கள்" என்று எழுதினார் (யோவா. 6:2). கிறிஸ்து உடனடியாக, "சொஸ்தமடைய வேண்டு மென்றிருந்தவர்களைச் சொஸ்தப்படுத்தினார்" (லூக். 9:11இ). பிரசங்கிப் பதற்கான வாய்ப்பை அவர் ஒருக்காலும் தவறவிட்டது இல்லையாதலால், அவர் "அநேக காரியங்களை அவர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார்"*

*(மாற். 6:34ஆ), "தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து அவர்களுடனே பேசி[னார்]" (லூக். 9:11ஆ).*

*இது இயேசுவின் வாழ்வில் இன்னுமொரு நீண்ட வேலை நிறைந்த நாளாக இருந்தது. அவர் அவ்வப்போது மலையின் ஒரு பக்கமாக ஓய்வெடுத் திருந்தார் (யோவா. 6:4, 15ஐக் காணவும்). ஆயினும் பெரும்பாலான வேளைகளில் அவர் போதிப்பதிலும் குணமாக்குவதிலும் மும்முரமாய் ஈடுபட்டிருந்தார். அதே வேளையில், கூட்டத்தினரின் எண்ணிக்கை தொடர்ந்து வளர்ந்து கொண்டிருந்தது (யோவா. 6:5).[12] அந்தக் கூட்டத்தினர் "ஸ்திரீகளும் பிள்ளைகளும் தவிர ... புருஷர்கள் ஏறக்குறைய ஐயாயிரம் பேராயிருந்தார்கள்" என்று பிற்பாடு கூறப்பட்டது (மத். 14:21). பெண்கள் மற்றும் பிள்ளைகளைப் பற்றிய மதிப்பீடு மாறுபடுகிறது,[13] ஆனால் பத்து மற்றும் பதினைந்து ஆயிரங்களுக்கு இடையில் உள்ள எண்ணிக்கையில் மக்கள் அங்கு இருந்திருக்கக் கூடும்.*

*இயேசு நாள் முழுவதும் மக்களை ஆவிக்குரிய வகையில் போஷித்தார்; ஆனால் மாலை வேளை நெருங்கியபோது, உடலுக்குரிய போஷிப்பு அத்தியாவசியமானதாக ஆயிற்று. கிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் உட்பட, சமவெளியில் இருந்த ஆயிரக்கணக்கானவர்கள் நாள் முழுவதும் உணவின்றி இருந்தார்கள். (பசியினால் வாடும் பத்தாயிரம் வயிறுகள் ஒரே வேளையில் கூக்குரலிடுவதை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா?) கப்பர்நகூமில் இருந்து கர்த்தர் திடீரென்று புறப்பட்டு வந்திருந்தது, மற்றும் கூட்டத்தாரின் உள்ளான தூண்டுதலின் பதில்செயல் ஆகியவை, பயணத்திற்கு வேண்டியவற்றைத் தயார் செய்ய நேரத்தை அவர்களுக்கு அனுமதித்திராது.[14]*

*உணர்வெழுச்சி மிகுந்த அற்புதங்கள் மற்றும் வாழ்வை மாற்றும் போதனை ஆகியவற்றினால் பொதியப்பட்ட ஒரு நாளில் உடலுக்குரிய உணவின் தேவையானது சாதாரணமானதாகக் காணப்பட்டு இருக்கலாம், ஆனால் நமது உடல் அவ்வப்போது புத்துணர்வூட்டப்பட வேண்டிய வகையில் தேவன் நம்மைப் படைத்துள்ளார். நாம் "அப்பத்தினால் மாத்திரம்" பிழைப்பவர்களாக இருக்கக் கூடாது (மத். 4:4), ஆனால் அவ்வப் போது சில பிஸ்கட்டுகள் அல்லது மக்காச்சோள ரொட்டிகள்[15] என்பவை நாம் நன்கு இயங்குவதற்கு அவசியமானவைகளாக உள்ளன.*

*இயேசு, அந்தத் தேவையைத் தமது சீஷர்களின் கவனத்திற்குக் கொண்டு வரத் தயங்கவில்லை. அவர் திரளான கூட்டத்தாரைச் சுட்டிக் காண்பித்து பிலிப்புவிடத்தில், "இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம்?" என்று கேட்டார் (யோவா. 6:5). பிற்பாடு அவர் தமது அப்போஸ்தலர்களிடத்தில், "நீங்களே அவர்களுக்குப் போஜனங் கொடுங்கள்" என்று கூறினார் (மத். 14:16). கூட்டத்தார் உடலுக்குரிய மற்றும் ஆவிக்குரிய என்ற இருவகையான தேவைகளையும் கொண்டிருந் தார்கள்.*

**இன்று தேவையில் இருக்கின்ற மக்கள்**

மக்கள் இன்றைக்கும் இன்னமும் தேவைகளை, உண்மையான தேவைகளைக் கொண்டுள்ளார்கள். ஆவிக்குரிய தேவைகளே அவர்களின் மிக முக்கியமான தேவைகளாக உள்ளன. இயேசு, "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப் படுத்தினால் அவனுக்கு இலாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" என்று கேட்டபோது இதையே அவர் வலியுறுத்தினார் (மத். 16:26). ஆயினும், மக்கள் மற்ற தேவைகளையும் கொண்டிருந்தார்கள், அந்தத் தேவைகள் புறக்கணிக்கப்படக் கூடாதவை களாக இருந்தன. பசியால் மக்கள் வாடிக் கொண்டிருந்த ஓரிடத்திற்குச் சென்றது பற்றி ஒரு மனிதர் இன்னொரு மனிதரிடம் பேசிக் கொண்டிருந் தார். அந்த இரண்டாவது மனிதர், "நீங்கள் அங்கு என்ன செய்தீர்கள்?" என்று கேட்டார். முதலாவது மனிதர், "நான் அவர்களுக்குக் கைபிரதிகளைக் கொடுத்தேன்" என்று பதில் அளித்தார். இரண்டாவது மனிதர், "அப்போது என்னவாயிற்று?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார். அந்தக் கதையைக் கூறிய மனிதர், "அவர்கள் அவற்றைத் தின்று விட்டார்கள்" என்று கவலை யுடன் கூறினார்.

நாம் பல ஆண்டுகளாக - உணவு மற்றும் உடை போன்ற - குறிப்பிட்ட சில தேவைகளை உணர்ந்து அறிந்துள்ளோம். யாக்கோபு 2:15, "வஸ்திர மில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும்" இருப்பவர்களைப் பற்றிப் பேசுகிறது. சமீபத்தில் நான், நான்கு மற்றும் ஐந்தாம் நூற்றாண்டுகளில் இருந்த தொடக்க கால சபைக் கட்டிடங்கள் பற்றிய நிலைப்படக் காட்சி ஒன்றைப் பார்த்தேன். அந்தக் கட்டிடங்கள் ஒவ்வொன்றிலும், தேவையில் உள்ளவர்களுக்காக உணவு மற்றும் உடை ஆகியவற்றைச் சேகரித்து வைப்பதற்காக ஒரு அறை ஒதுக்கப்பட்டு இருந்தது. இன்றைய நாட்களில் சபைக் கட்டிடங்கள் உபகார விஷயங்களுக்கு இதே போன்று அறைகளைக் கொண்டுள்ளன.

விதவைகள் மற்றும் திக்கற்ற பிள்ளைகள் ஆகியோரைப் பராமரித்தல் என்பது பரவலாகப் புரிந்துகொள்ளப்பட்ட இன்னொரு தேவையாக உள்ளது. யாக்கோபு, "திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், ... பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது" என்று எழுதினார் (யாக். 1:27). பல சபைகள் தங்கள் விதவைகள் புறக்கணிக்கப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கென்று திட்டங்களைக் கொண்டுள்ளார்கள் (அப். 6:1ஐக் காணவும்). சில கிறிஸ்தவர்கள், குடும்பமில்லாத பிள்ளைகளைத் தத்து எடுத்துக் கொள்ளுகின்றார்கள். சிறுவர் இல்லங்கள் மற்றும் காப்பகங்கள் ஆகியவை இப்படிப்பட்டவர் களைப் பராமரிப்பதற்கான மற்ற ஏற்பாடுகளில் உள்ளடங்குகின்றன. நாம் எப்போதுமே, விதவைகள் மற்றும் திக்கற்ற பிள்ளைகளைப் பராமரிப்பதற் கான மிகச் சிறந்த முறை பற்றி கருத்து ஒருமைப்படுவதில்லை, ஆனால் இந்தத் தேவை பற்றி நாம் அக்கறை கொள்ள வேண்டும் என்பதில் நாம் கருத்து ஒருமைப்படுகின்றோம்.

நோயாளிகளைப் பராமரித்தல் போன்ற பொதுவாகப் புரிந்து உணரப் பட்ட பிற தேவைகளைக் குறிப்பிட முடியும். இயேசு நோயாளிகள்மீது அக்கறையுள்ளவராக இருந்தார். அவர், உபகார சிந்தை கொண்ட பின்பற்றாளர்களைப் பின்வரும் வார்த்தைகளினால் பாராட்டினார்: "வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்" (மத். 25:36அ). பல சபைகள், தேவையில் உள்ளவர்களுக்கு உணவு எடுத்துச் செல்லுதல் உட்பட, நோயாளிகளுக்கு உதவி செய்ய முயற்சி செய்கின்றார்கள். சில நாடுகளில், துன்புறும் வியாதியஸ்தர்களுக்கு உதவுவதற்குக் கிறிஸ்தவர்கள் மருத்துவமனைகளைக் கூடக் கட்டியிருக்கின்றார்கள்.

தற்போது நாம் செய்கிறது போல் பிறருக்கு சேவை செய்தல் என்பது நல்லதாகவே உள்ளது, ஆனால் கூடுதலான தேவை என்பது எப்போதுமே எழுகிறது - அல்லது குறைந்தபட்சம், பழைய தேவைகளின் புதிய வெளிப் பாடுகள் நிலவுகிறது - என்ற உண்மையைக் குறித்து நாம் கூருணர்வு உள்ளவர்களாக இருக்க வேண்டும்.[16] விவாக ரத்தினால் குடும்பங்கள் பிரிந்து போகின்றன. பிள்ளைகள் அலட்சியப்படுத்தப்படுகிறார்கள் அல்லது தவறாக நடத்தப்படுகின்றனர். மதுபானப் பழக்கமும் போதைப் பொருட் களுக்கு அடிமையாகுதலும் தொடர்ந்து அதிகமாகிக் கொண்டு வருகின்றன. பாலியல் முறைகேடு கட்டுக்கு அடங்காத நிலையில் உள்ளது, மற்றும் எய்ட்ஸ் என்ற கொள்ளைநோயானது குறையும் அடையாளம் காணப் படுவதில்லை. ஆண்களும் பெண்களும் தீவிரமான உணர்வு ரீதியான பிரச்சனைகளில் போராடிக் கொண்டிருக்கிறார்கள். குடும்பமின்றி "தெருக்களில் வாழும் மக்களின்" எண்ணிக்கை நமது நகரங்களில் அதிகரித்து வருகிறது. இந்தப் பட்டியல் இன்னும் விரிவாகப் போகக் கூடும்.

இந்தப் பிரச்சனைகளை எவ்வாறு அணுகுவது என்பதற்கு நான் பதில்களைக் கொண்டுள்ளேன் என்று மறைமுகமாய் உணர்த்துவதில்லை. அல்லது சபைகள் என்ற வகையில் நாம், இந்த அறைகூவல்களை அணுகு வதற்கு விரிவான திட்டங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று நான் கருத்துத் தெரிவிக்கவும் இல்லை. தேவைகள் - தனிநபராக உள்ள கிறிஸ்தவர்கள் என்ற வகையில் மற்றவர்கள் இவற்றை அணுகும்படி நாம் உதவக்கூடிய - எல்லா வகையான தேவைகளும், உண்மையான தேவை களும், சட்டரீதியான தேவைகளும் நிலவுகின்றன என்பதை வலியுறுத்தவே நான் முயற்சி செய்கின்றேன்.

நாம் நமது முன்னுரிமைகளை நேராக வைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் மீண்டுமாகக் கூறுகிறேன். மக்களை இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்புக்கேற்ற அறிவிற்குள் கொண்டுவருதல் என்ற நமது இலக்கில் நாம் தடைப்பட்டு நின்று விடக்கூடாது. அதே வேளையில், நம்மைச் சுற்றியுள்ள வர்களை அழுத்திக் கொண்டுள்ள தேவைகளைக் கவனியாமல் விட்டு விடுதல் என்பது, நாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று தேவன் நோக்கங் கொண்டுள்ளாரோ, அதைக் காட்டிலும் குறைவானதாகவே உள்ளது. "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடு … அன்பு கூருவாயாக" என்பது முதலாம் பிரதான கற்பனையாக இருக்கையில், "உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக"

*என்பது இரண்டாவது பிரதான கட்டளையாக உள்ளது (மத். 22:37, 39). யோவான் பின்வருமாறு எழுதினார்:*

> *ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவஅன்பு நிலைகொள்ளுகிறதெப்படி? (1 யோவா. 3:17).*
>
> *... தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்? தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூர வேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம் (1 யோவா. 4:20, 21).*

## ***உதவி செய்வதைச் சிலர் எவ்வாறு தவிர்க்கின்றார்கள்***

*நாம் நமது வரலாற்றுக்குத் திரும்புவோம். நாம் ஏற்கனவே கவனித்தபடி, கூட்டத்தின் தேவைகளைப் பற்றி அறிந்திருந்த இயேசு, அவர்களுக்கு உதவும்படி தமது அப்போஸ்தலர்களிடத்தில் கூறினார். சீஷர்களின் பதிலானது, உதவி கேட்கப்படுகையில் நாம் சில வேளைகளில் அளிக்கும் பதில்கள் போன்றதாகவே இருந்தது.*

***"எங்களிடத்தில் ஆதாரமூலங்கள் இல்லை"***

*கிறிஸ்து முதலில் பிலிப்புவினிடத்தில் அறைகூவல் விடுத்தார் என்பது உறுதி:*

> *இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து, திரளான ஜனங்கள் தம்மிடத்தில் வருகிறதைக் கண்டு, பிலிப்புவை நோக்கி: "இவர்கள் சாப்பிடத்தக்கதாக, அப்பங்களை எங்கே கொள்ளலாம்" என்று கேட்டார். தாம் செய்யப்போகிறதை அறிந்திருந்தும்,[17] அவனைச் சோதிக்கும்படி இப்படிக் கேட்டார் (யோவா. 6:5, 6).*

*கர்த்தர் பிலிப்புவைத் தனிப்படத் தேர்ந்தது ஏன் என்று நாம் நிச்சயமாகக் கூற முடியவில்லை.[18] பிலிப்பு அந்தப் பகுதியில் இருந்து வந்தவர்[19] எனவே ஆதாரமூலங்கள் எங்கு கிடைக்கும் என்பதை அதிகமாக அறிந்திருப்பார் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. காரணம் எதுவாக இருப்பினும், பிலிப்பிடம் கேட்கப்பட்டது; அந்த அப்போஸ்தலரின் பதிலானது, நாம் அறைகூவல்களுக்கு அடிக்கடி பதில் அளிக்கும் விதத்தைப் போன்றதாகவே இருந்தது. உண்மையில் அவர் [பிலிப்பு], "நம்மிடத்தில் ஆதாரமூலங்கள் உண்டா இல்லையா என்று நாம் ஆய்வு செய்வோம்" என்றே கூறினார். அங்கிருந்தவர்களின் எண்ணிக்கையை அவர் விரைவாகக் கணக்கிட்டார்.[20] அவர் ஒவ்வொரு நபருக்கும் தேவையான குறைந்த அளவு அப்பத்தைக் கணக்கிட்டு, அதை அங்கிருந்த மக்களின் எண்ணிக்கையால் பெருக்கினார்.*

*பின்பு அவர் அப்பத்தின் அப்போதைய விலையைக் கணக்கிட்டு அதை, தேவையான அப்பங்களின் எண்ணிக்கையைக் கொண்டு பெருக்கினார். பின்பு அவர் இயேசுவிடம், "கடைசி விளைவை"* ["the bottom line"[21]] *கொடுத்தார்: "இவர்களில் ஒவ்வொருவனும் கொஞ்சம் கொஞ்சம் எடுத்துக் கொண்டாலும், இருநூறு பணத்து அப்பங்களும் இவர்களுக்குப் போதாதே" (யோவா. 6:7; மாற். 6:37ஐக் காணவும்). ஒரு பணம் என்பது சாதாரண உழைப்பாளியின் ஒரு நாள் கூலியைக் குறித்தது (மத். 20:2). இருநூறு பணத்தைச் சம்பாதிக்க ஒரு தொழிலாளிக்கு அரை ஆண்டுக்கு மேற்பட்ட கால அவகாசம் தேவைப்படும்! அந்தத் தொகையில் மிகவும் சிறிய அளவானதே சீஷர்களின் பணப்பையில்[22] இருந்திருக்கும்.*

*ஒவ்வொரு பிரச்சனைக்கும் பணம் என்பதே பதிலாக உள்ளது என்று நாம் சிலவேளைகளில் நினைக்கின்றோம், நாம் கொண்டுள்ள பணத்தைக் கணக்குப் பார்த்தல் என்பதே ஒரு தேவைக்கு அடிக்கடி நமது முதல் பதில்செயலாக உள்ளது என்பது உண்மையாக இருப்பதில்லையா? அது ஒரு தனிப்பட்ட அறைகூவலாக இருந்தால், நாம் ஒருவேளை, "எங்களிடம் பணம் இல்லை" என்று மட்டும் பதில் அளிக்கின்றோம். அது ஒரு சபையின் தேவையாக இருந்தால், ஒருவேளை நாம், "எங்களது நிதிநிலைத் திட்ட அறிக்கையில் இதற்கென்று நாங்கள் எதுவும் ஒதுக்கவில்லை" என்று பதில் அளிக்கின்றோம். நாம் வலிவார்ந்த ஒரு பணிப்பொறுப்பை எதிர்கொள்ளும் போது, எல்லையற்ற ஆதாரமூலங்களைக் கொண்டுள்ளவரான தேவனைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாக நமது சொந்த ஆதாரமூலங்களையே பார்த்துக் கொண்டிருத்தல் என்பது ஒரு பொதுவான தவறுதலாக உள்ளது.*

*கர்த்தருடைய ஊழியத்தைப் பொறுத்தமட்டில், சிலவேளைகளில் கிறிஸ்தவர்கள் "அடிப்படை ஆய்வில் இயலாநிலை" யினால் துன்புறு கின்றார்கள் என்று கூறப்பட்டுள்ளது. இந்த அல்லது அந்தத் திட்டம் ஏன் பயன்படாது என்பதைச் சுட்டிக் காண்பிப்பதே தங்கள் ஊழியம் என்று சிலர் நினைப்பது உறுதி. இது தொடர்பாக நான் சில வேளைகளில் தவறி யிருக்கின்றேன் என்பதை நான் அறிக்கையிட்டாக வேண்டும்.*

***"இது எங்கள் பிரச்சனையல்ல"***

*பிற்பாடு, கூட்டத்தின் தேவைகளை எல்லா அப்போஸ்தலர்களும் எதிர்கொள்ள வைக்கப்பட்டார்கள் - மற்றும் மீண்டும் நாம் அவர்களின் பின்வரும் பதிலைக் காணமுடிகிறது: "சாயங்காலமாகிறபோது, பன்னிரு வரும் சேர்ந்துவந்து, அவரை நோக்கி: 'நாம் இருக்கிற இடம் வனாந்தர மாயிருக்கிறது, சுற்றியிருக்கிற ஊர்களிலும் கிராமங்களிலும் ஜனங்கள் போய்த் தங்கி,[23] போஜன பதார்த்தங்களைச் சம்பாதித்துக் கொள்ளும்படி அவர்களை அனுப்பிவிட வேண்டும்' என்றார்கள்" (லூக். 9:12).*

*அவர்களின் தீர்வானது "நடைமுறைக்கு உரியது" என்பதை விடத் தாழ்ந்த நிலையில் இருந்தது. அந்தப் பகுதியில் இருந்த சிற்றூர்களுக்கும் கிராமங்களுக்கும் பத்திலிருந்து பதினைந்தாயிரம் வரையுள்ள அந்த மக்கள் கூட்டம் சிதறிச் செல்லுவதினால் ஏற்படும் குழப்பத்தைக் கற்பனை செய்து பாருங்கள். நான் வசிக்கின்ற ஜட்சோனியா என்ற சிறு நகரத்தில் திடீரென்று*

ஆயிரக்கணக்கான மக்கள் உணவை எதிர்பார்த்து வந்து சேர்ந்தார்கள் என்றால் பெருங்கூச்சலும் குழப்பமும் ஏற்படும்! சீஷர்கள் இந்த ஆலோசனையை முன்வைத்தது ஏன்? அநேகமாக, அவர்கள் தாங்களே களைப்புடனும் பசியுடனும் இருந்தபடியால், அந்தப் பிரச்சனையைக் கையாள அவர்கள் விரும்பாதிருந்தார்கள்.

துரதிர்ஷ்டவசமாக, தேவையுடன் உள்ள மக்களை எதிர்கொள்ளும் போது சிலவேளைகளில் இதுவே நமது “தீர்வாகவும்” உள்ளது: “சென்று வாருங்கள். உங்களை நீங்களே கவனித்துக் கொள்ளுங்கள். இது எனது பொறுப்பு அல்ல. நான் இதைக் குறித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்க முடியாது.” நாம் தொந்தரவுப்படுத்தப்படுவதை விரும்புவதில்லை. நாம் மற்றவர்களின் பிரச்சனைகளைத் தோள் கொடுத்து தாங்க விரும்புவதில்லை. மீண்டும் ஒருமுறை நான் “குற்ற உணர்வுடன்” இருக்கின்றேன் என்று கெஞ்ச வேண்டியிருக்குமோ என்று நான் பயப்படுகின்றேன்.

### “அவர்கள் தகுதியற்றவர்களாய் இருக்கின்றார்கள்”

கூட்டத்தினருக்கு உதவி செய்யாதிருப்பதற்கு அப்போஸ்தலர்கள் கூடுதலான காரணங்களைக் கொடுத்திருக்கக் கூடும். எடுத்துக்காட்டாக, “அவர்கள் நமது உதவியைப் பெறத் தகுதியற்றவர்களாய் இருக்கின்றார்கள். அவர்கள் ஆவிக்குரிய விஷயங்களில் உண்மையான ஆர்வம் கொண்டிருக்கவில்லை. அவர்கள் இலவச மருத்துவ உதவிக்காகவும் இலவச உணவிற்காகவும் மட்டுமே இங்கு இருக்கின்றார்கள்” என்று அவர்கள் [அப்போஸ்தலர்கள்] கூறியிருக்க முடியும்.[24] தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகள் இந்த ஆய்வு சரியானதே என்று நிரூபித்தன; பிற்பாடு இயேசு [வும் கூட], அந்தக் கூட்டத்தார் மேலோட்டமானவர்களாக இருந்தார்கள் என்றும் அவர்களின் முன்னுரிமைகள் தவறானவைகளாய் இருந்தன என்றும் சுட்டிக் காண்பித்தார்.[25]

மக்களின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் இயேசு அறிந்தவராக இருந்திருப்பார் (யோவா. 2:25), ஆனால் இதை அவர், அவர்களுக்கு உதவாமல் இருப்பதற்கான ஒரு சாக்குப்போக்காகப் பயன்படுத்தவில்லை. நாம் சோம்பேறித்தனத்தையும் மந்தமான நிலையையும் ஊக்கப்படுத்தக் கூடாது (2 தெச. 3:10); ஆனால் ஒரு தேவை என்பது நேர்மையானதாக உள்ளதென்றால், நாம் உதவ முயற்சி செய்ய வேண்டும் - இது, அதைப் பெறுபவர் எப்படிப்பட்டவராக இருக்கின்றார் என்பதால் இன்றி நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றோம் என்பதால் செய்யப்பட வேண்டும்.[26]

உதவி செய்யாதிருப்பதற்குச் சீஷர்களின் சாக்குப்போக்கைக் கர்த்தர் ஏற்றுக்கொள்ளவில்லை.[27] அதற்குப் பதிலாக அவர், “நீங்களே அவர்களுக்குப் போஜனங்கொடுங்கள்'' என்று கூறினார் (மாற். 6:37). அவர் இவ்வார்த்தைகளைப் பேசியபோது அவரது கண்கள் சற்றே சிமிட்டினவா? அவர் இன்னமும் தமது பின்பற்றாளர்கள், ‘‘யாவருக்கும் விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்ய” (கலா. 6:10) தவறுவதற்குக் கூறும் சாக்குப்போக்குகளை ஏற்றுக்கொள்ளாதவராகவே இருக்கின்றார்.

# நாம் எவ்வாறு உதவி செய்ய முடியும்

*அது இவ்வரலாற்றின் எதிர்மறையான பாகமாக உள்ளது. நாம் இப்பொழுது நேர்மறையான பாகத்தைக் காண்போம்: மக்கள் நேர்மையான தேவைகளைக் கொண்டிருக்கும்போது அவர்களுக்கு உதவி செய்யும் அறைகூவலை நாம் எவ்வாறு சந்திக்க முடியும்?*

### இயேசுவின் ஆவியை ஈர்த்துக் கொள்ளுங்கள்

*நாம் இயேசுவின் ஆவியை ஈர்த்துக்கொள்ள வேண்டும் என்பது அநேகமாக மிக முக்கியமான ஆலோசனையாக இருக்கலாம். கிறிஸ்து அந்தக் கூட்டத்தார்மீது மனதுருகி அவர்களை ஏற்றுக்கொண்டார் என்பதை நினைவில் வையுங்கள். அப்போஸ்தலர்கள் தொந்தரவுகளைப் பார்த்து இருக்கலாம், ஆனால் அவர் [இயேசு] தேவைகளைக் கண்ணோக்கினார்.*

*பிறருடைய தேவைகளைக் குறித்த கூருணர்வில் குறைவுபடுதலானது மிகவும் பரவலாக உள்ள ஒரு தவறுதலாகும். இது நிச்சயமாகவே எனது குறைபாடுகளில் ஒன்றாக உள்ளது. சற்றுக் காலத்திற்கு முன்பு ஒரு சவ அடக்க நிகழ்ச்சியில், தாயை இழந்த ஒரு பெண்ணை என் மனைவி ஜோ சென்று கட்டித் தழுவிக் கொண்டிருக்கையில், ஜோவிடம் அந்தப் பெண்மணி, "நான் அறிந்தவர்களில், நீங்கள் மிகவும் இனிமையான பெண்களில் ஒருவராக இருக்கின்றீர்கள்" என்று கூறினார்கள். நன்கு தகுதி வாய்ந்த வகையில் கூறப்பட்ட அந்தப் பாராட்டுரைக்கு ஒரு காரணம் உள்ளது: ஜோ, தன்னைச் சுற்றிலும் உள்ளவர்களின் தேவைகள் குறித்துக் கூருணர்வு உள்ளவளாக இருக்கின்றாள். அவள், உண்மையானதென்று பிறர் உணர்ந்தறிகின்ற அக்கறையை வெளிப்படுத்தி, மாறுதல் எதுவுமின்றி உதவுவதற்கு வழியொன்றை கண்டறிகின்றாள். அவள் ஒரு விசேஷித்த வரம் கொண்டிருக்கின்றாள்.*

*இயேசுவின் ஆவியைக் கொண்டிருத்தல் என்பது நாம் பிறருக்கு உதவுதல் பற்றித் தரக்கூடிய மிகவும் முக்கியமான ஆலோசனையாக இருக்கலாம் என்று நான் மீண்டும் கூறுகின்றேன். தேவையில் உள்ளவர் களின்மீது நாம் கிறிஸ்துவின் எண்ணப்போக்கை வளர்த்துக் கொண்டால், இது உதவுவதில் நமக்கு இருக்கும் தயக்கத்தை வெற்றிகொண்டு எந்தத் தடையையும் நீக்கிப் போட்டுவிடும். இருந்தபோதிலும், ஒரு சில திட்ட வட்டமான ஆலோசனைகளும் உதவிகரமாக இருக்கலாம். நாம் இந்த வரலாற்றைத் தொடருவோம்.*

### உங்களிடம் இருக்கின்ற ஆதாரமூலங்களைப் பயன்படுத்துங்கள்

*பிலிப்புவும் மற்ற சீஷர்களும் தங்களிடம் இல்லாதவைகளின்மீது கவனம் செலுத்திக் கொண்டிருந்தார்கள், ஆனால் இயேசுவோ அங்கு இருந்த ஆதாரமூலங்களை அறிந்திருக்கும்படி அவர்களை ஊக்கப் படுத்தினார். அவர், "உங்களிடத்தில் எத்தனை அப்பங்களுண்டு? போய் பாருங்கள்!" என்றார் (மாற். 6:38அ). "சென்று வாங்குதல்" என்பது சீஷர்களின் "தீர்வாக" இருந்தது (மத். 14:15; மாற். 6:37ஐக் காணவும்), ஆனால் "சென்று பாருங்கள்: உங்களிடம் உள்ளவை எவையென்று*

பாருங்கள்" என்பது இயேசுவின் "தீர்வாக" இருந்தது.

அங்கிருந்த ஒவ்வொருவரிடமும் அவர்கள் ஆய்வு செய்தார்கள் என்பது உறுதி. இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும் தங்களுடன் உணவுப் பொருள் எதுவும் எடுத்து வந்திராத அளவுக்கு அவசரமாகப் புறப்பட வேண்டியிருந்தது,[28] மற்றும் இதுவே அந்தக் கூட்டத்தாருக்கும் பொதுப் படையாக உண்மையாயிருந்தது. அப்போஸ்தலர்கள் முழுவதுமாகத் தேடினார்கள். (பத்திலிருந்து பதினைந்தாயிரம் வரையிலான மக்களை ஆய்வு செய்வதற்கு எவ்வளவு நேரம் ஆகியிருக்கும்?) இன்னமும், அவர்களால் ஒரு பையனின் சிற்றுண்டியையே கண்டறிய முடிந்தது. எஜமானரிடத்தில் அந்திரேயா, "இங்கே ஒரு பையன் இருக்கிறான், அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு, ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம்?" என்றான் (யோவா. 6:9).

"அப்பங்கள்" என்ற வார்த்தையை நீங்கள் வாசிக்கும்போது, ஒரு குடும்பத்திற்கு உணவளிப்பதற்காக உணவு மேஜையின்மீது வைக்கப்படும் பெரிய ரொட்டியைப் பற்றி நீங்கள் நினைக்க வேண்டாம். இவைகள் சிறிய, தட்டையான, உப்பு பிஸ்கட்டைப் [cracker[29]] போன்றவைகளாயிருந்தன. அந்த அப்பங்கள் வாற்கோதுமையினால் செய்யப்பட்டிருந்தன; வாற்கோதுமை என்பது ஏழை மனிதனின் உணவாக இருந்தது. மீன்கள் என்பவை அந்தப் பகுதியில் ஏராளமாய்க் கிடைக்கக் கூடிய சிறிய அளவுடைய, பதப்படுத்தப்பட்ட மீன்களாக இருந்திருக்கும்; sardines[30] (சாளை) என்ற வகையான மீன்களை நினைத்துப் பாருங்கள். "ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும்": ஆயிரம் மனிதர்களுக்குப் பிரித்துத் தருவதற்கு ஒரு சிறிய கேக்கும், 2,500 மனிதர்களுக்குப் பிரித்துத் தருவதற்கு ஒரு மீனும் அங்கு இருந்திருக்கும்! அது பசியுடன் இருக்கும் ஒரு சிறு பையன் உண்ட பின்பும் பசியுடன் இருக்குமளவே இருந்த உணவாகும். அந்திரேயாவின் வார்த்தைகள் முற்றிலும் ஒரு குறைவான கூற்றாகவே இருந்தன: "அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம்?"

தனது உணவை விட்டுக்கொடுத்துவிட மனதாயிருந்த அந்தப் பையனைப் பற்றி ஒரு வார்த்தை கூற நான் இங்கே சற்றுத் தாமதிக்க வேண்டும். உணவு உண்பதைப் பையன்கள் எவ்வளவாய் விரும்புகின்றார்கள் என்பதை அறிந்த யாரோ ஒருவர், "இது அப்பங்களைப் பெருக்க மடையச் செய்வதைக் காட்டிலும் பெரிய அற்புதமாயிருந்தது!" என்று நகைச்சுவையாகக் கூறினார். இந்தப் பையன் ஏற்படுத்திய பங்களிப்பானது தீவிரமாகவே குறிப்பிடத்தக்கதாக இருந்தது. அவன் சிறுவனாக இருந்த போதிலும், கர்த்தரிடத்தில் மன ஈடுபாடு உள்ளவனாகி அவர்மீது விசுவாசம் கொண்டிருந்தான் என்று மாத்திரமே நான் முடிவு செய்யக்கூடும். இது அற்புதமானதாக இருப்பதில்லையா?

தமது பின்பற்றாளர்கள் எதையும் அதிகமாகக் கொண்டிருந்ததில்லை என்றாலும், அவர்கள் கொஞ்சமாவது கொண்டிருந்ததைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று இயேசு விரும்பினார். நம்மில் பெரும்பான்மையானோர், நாம் கொண்டுள்ளவை எவை, நம்மால் செய்ய முடிந்தவை எவை என்பதை

*வகைப்படுத்துவதை விட, நாம் கொண்டிராததவை எவை, நம்மால் செய்ய முடியாதவை எவை என்பதை வகைப்படுத்துவதில் சிறந்தவர்களாய் இருக்கின்றோம். உங்கள் உடைமைகள் மற்றும் திறமைகள் மிகவும் எளிமையானவை என்று நீங்கள் சங்கடம் அடையலாம், ஆனால் எப்படியும் அவற்றைத் தேவனுக்கென்று அர்ப்பணம் செய்யுங்கள். அவர் விளைவு களால் உங்களை ஆச்சரியப்படுத்துவார்!*

### *உங்கள் சொந்த ஆதாரமூலங்களையல்ல, கர்த்தருடைய ஆதாரமூலங்களையே சார்ந்திருங்கள்*

*நீங்கள் உங்கள் ஆதாரமூலங்களைத் தேவனுடைய ஊழியத்தில் பயன்படுத்தும்போது, நீங்கள் வானத்தையும் பூமியையும் உரிமையாகக் கொண்டுள்ள ஒருவரோடு உடன் ஊழியராகின்றீர்கள் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள் (ஆதி. 14:23)! மற்றும், நீங்கள் கொண்டுள்ள கொஞ்சத்தை அவருடைய ஊழியத்திற்கென்று நீங்கள் அர்ப்பணிக்கும் போது, அந்தக் கொஞ்சத்தைக் கொண்டு அவர் அற்புதமான விஷயங்களை நிறைவேற்ற முடியும் என்பதையும் புரிந்துகொள்ளுங்கள். கர்த்தருடைய கரங்களில் உள்ள கொஞ்சமானது எப்போதுமே அதிகமானதாக உள்ளது என்று அடிக்கடி கூறப்பட்டுள்ளது. இதற்கு, நாம் படித்துக் கொண்டுள்ள நிகழ்ச்சியை விடச் சிறந்த விவரிப்பு வேறெதுவும் இல்லை.*

*நீங்கள் அநேகமாக இவ்வரலாற்றை நன்கு அறிந்திருக்கலாம்: இயேசு அப்போஸ்தலர்களிடம், ‘‘ஜனங்களை உட்காரவையுங்கள்’’ என்றார் (யோவா. 6:10).[31] “... எல்லாரையும் ... பந்திபந்தியாக உட்காரவைக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார். அப்படியே வரிசை வரிசையாய் நூறுநூறு பேராகவும் ஐம்பதைம்பது பேராகவும், உட்கார்ந்தார்கள்” (மாற். 6:39, 40). அவர்கள் அவ்வாறு உட்காரும்படி இயேசு கேட்டுக் கொண்டதற் குப் பல காரணங்கள் இருந்திருக்கலாம். அப்படிப்பட்ட ஒரு ஏற்பாடானது அவர்களுக்கு உணவளிக்கும் வேலைக்கு வசதியானதாக இருந்திருக்கும். பசியுடன் உள்ள பத்தாயிரம் மக்கள் தங்கள் கைகளை நீட்டிக் கொண்டு, இயேசுவைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டு நிற்பதற்கு முட்டித் தள்ளிக்கொண்டு இருப்பதை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? அத்துடன் கூடுதலாக, இது எவரொருவரும் விடப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும். இது கூட்டத்தினரை எண்ணுவதற்கு - மற்றும் அற்புதத்தை அதிகாரத்துவப் படுத்துவதற்கு - உதவியிருக்கவும் சாத்தியமுண்டு.*

### *நீங்கள் புரிந்துகொண்டாலும், புரிந்துகொள்ளாவிட்டாலும் கர்த்தர் கூறுவதை அப்படியே செய்யுங்கள்*

*பன்னிருவரும் அந்தக் கூட்டத்தினரை ஒழுங்குபடுத்தியபோது, தங்கள் செயல் சற்றே மதியீனமானது என்று உணர்ந்தார்களா? ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் மாத்திரமே அங்கு கிடைத்திருந்த நிலையில், அம்மக்கள் உணவு உண்பதற்காக அமரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டபோது திகைப்பான பார்வை கொண்டிருந்தார்களா? அவர்களின் செயல் மதிக்கப்படும் வகையில், அந்தக் கூட்டத்தார், தாங்கள் செய்யும்படி கர்த்தர்*

*கூறியதை அப்படியே செய்தார்கள். எந்த ஒரு அருஞ்செயலிலும், நமது ஆதாரமூலங்களை அளப்பதல்ல ஆனால் தேவனுடைய சித்தத்தைத் தீர்மானித்து - அதை அப்படியே செய்வது என்பதுதான் வெற்றியின் முதல் படியாகும் என்று கூறப்பட்டுள்ளது.*

*ஒவ்வொருவரும் தயாராக இருந்தபோது, கிறிஸ்து "அந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து" சகல ஆசீர்வாதங்களின் ஆதாரமூலமாகிய (யாக். 1:17) "வானத்தை அண்ணாந்துபார்த்து," அவ்வுணவிற்காக ஸ்தோத்திரம் செலுத்தியதன்மூலம் (யோவா. 6:11, 23ஐக் காணவும்) "அதை ஆசீர்வதித்தார்" (மத். 14:19அ).[32] உணவு உண்பதற்கு முன்பு யூதர்கள் செய்த ஜெபம் எளிமையானதாக இருந்தது: "எங்கள் யெகோவா தேவனே, அண்டத்தின் ராஜாவே, பூமியிலிருந்து அப்பத்தைக் கொண்டு வருகிறவரே, நீர் ஆசீர்வதிக்கப்பட்டவர்."[33] ஒருவேளை இயேசு இதற்கொத்த வார்த்தைகளைப் பயன்படுத்தியிருப்பார்.*

*பின்பு மனதைத் தயங்கவைக்கும் பகுதி வந்தது: கிறிஸ்து, "அப்பங் களைப் பிட்டு, அவர்களுக்கு [ஜனங்களுக்கு; லூக். 9:16] பரிமாறும்படி தம்முடைய சீஷர்களிடத்தில் கொடுத்தார்; அப்படியே இரண்டு மீன்களை யும் எல்லாருக்கும் பங்கிட்டார்" (மாற். 6:41). "ஒரு நிமிடம் பொறுங்கள்! எனக்கு அதிகமாகக் கூறுங்கள்! இது எதைப் போன்று காணப்பட்டது என்று மிகச் சரியாகக் கூறுங்கள்! என்ன நடந்தது என்பது பற்றிய விவரங்களை எனக்குத் தாருங்கள்!" என்று கூவுவதற்கு நான் விரும்புகின்றேன். வேதாகமம் நமது அறியும் ஆர்வத்தைத் திருப்தி செய்வதற்காக எழுதப்பட வில்லை என்பதற்கு நாம் மீண்டும் ஒருமுறை (ஒருவேளை நமக்கு இது அவசியமானால்) நிரூபணத்தைக் கொண்டுள்ளோம்.*

*என்ன நடந்தது என்பது பற்றி, இந்த அற்புதம் முற்றிலுமாக இயேசுவின் கரங்களிலேயே நடைபெற்றது என்று நான் தைரியமாக/தன்னம்பிக்கை யுடன் உணருகின்றேன். இயேசு ஒவ்வொரு அப்போஸ்தலருக்கும் ஒரு கூடை நிறைய அப்பங்களைக் கொடுத்தார் என்றும் அந்த உணவானது அவர்களின் கூடைகளில், அவர்கள் எடுத்து வழங்க வழங்க, தொடர்ந்து பலுகிற்று என்றும் சிலர் நினைக்கின்றார்கள். ஆயினும் வேத வசனப் பகுதி யானது, "அவர் அந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து, … அவர்களுக்கு[ஜனங்களுக்கு]ப் பரிமாறும்படி தம்முடைய சீஷர் களிடத்தில் கொடுத்துக் கொண்டிருந்தார்" என்றே வலியுறுத்துகிறது (மாற். 6:41).[34] வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், சீஷர்கள் தங்கள் கூடைகளை நிரப்புவதற்கு திரும்ப திரும்ப வரவேண்டியிருந்திருக்கும்.[35] இயேசு தலைமைச் சமையல்காரராக இருந்தார் மற்றும் சீஷர்கள், உணவைப் பரிமாறுபவர்களாக இருந்தார்கள் என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார்.[36]*

*நான் யூகிக்க வேண்டியிருந்ததென்றால், இந்த அற்புதம் எலியாவின் நாட்களில் கலயத்தில் மாவும் ஜாடியில் எண்ணெயும் தீர்ந்துபோகாத அற்புதத்திற்கு (1 இரா. 17:14-16) ஒத்ததாக இருந்தது என்று நான் யூகிப்பேன் - அதாவது, அந்தப் பையன் தனது தின்பண்டத்தை வைத்திருந்த கூடையை இயேசு வைத்துக் கொண்டு, அதிலிருந்து அதிகம் அதிகமான அப்பங்களை*

யும் மீன்களையும் எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார். (அங்கிருந்தவர் களின் கண்கள் விரிய விரிய, கிறிஸ்துவின் முகத்தில் புன்னகை பரவியதை என்னால் காண முடிகிறது.) துல்லியமான விவரங்களை அறிதல் என்பது முக்கியமானதல்ல. அற்புதம் ஒன்று - ஒரு உண்மையான அற்புதம் - நடைபெற்றது என்பதை அறிதலே போதுமானது.

மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகியோரின் சுவிசேஷ விவரங்களின்படி, மக்கள் "திருப்தியடையும் வரை" உண்டார்கள் (மத். 14:20அ; மாற். 6:42; லூக். 9:17அ). அவர்கள் "வேண்டியமட்டும்" பெற்றார்களென்றும் "அவர்கள் திருப்தியடைந்தார்கள்" என்றும் யோவான் வலியுறுத்தினார் (யோவா. 6:11, 12). அடுத்த நாளிலும் கூட்டமானது அதையே அதிகமாக தேடி வந்ததால் (யோவா. 6:26, 27, 34), இயேசு அந்த உணவின் தரத்தையும் மேம்படுத்தி யிருப்பார் - காய்ந்துபோய் கடினமாக இருந்த வாற்கோதுமை அப்பங்களும் உப்பிடப்பட்ட மீன்களும் இராஜரீக விருந்து போலாகியிருக்கும்.

ஒவ்வொருவரும் வயிறு நிறைய உண்டபோது, கிறிஸ்து தமது சீஷர்களிடத்தில், "ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கை களைச் சேர்த்துவையுங்கள்" என்று கூறினார் (யோவா. 6:12), "மேலும், அப்பங்களிலும் மீன்களிலும் மீதியான துணிக்கைகளைப் பன்னிரெண்டு கூடைநிறைய எடுத்தார்கள்" (மாற். 6:43).[37] ஆதாரமூலங்களை வீணாக்கு வதில் ஆண்டவர் நம்பிக்கை கொள்வதில்லை - அது ஒரு சரியான நடைமுறையாக உள்ளது - என்பதைக் காண்பிப்பதற்கு வரலாற்றின் இந்தப் பாகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் இந்த அற்புதத்தின் மட்டுமீறிய இயல்பை வலியுறுத்துவது என்பதே இந்த விவரத்தின் அடிப்படை நோக்கமாக உள்ளது. அற்பமான அளவுள்ள உணவில் இருந்து பத்து முதல் பதினைந்து ஆயிரம் வரையிலான மக்களுக்கு உணவளிக்கப் பட்டது மட்டுமின்றி, தொடக்கத்தில் இருந்ததை விட முடிவில் ஏராளமான அளவிலான உணவு சேமிக்கப்பட்டிருந்தது!

துரதிர்ஷ்டவசமாக, உண்மையிலேயே இயல்பான வகையில் இந்த அற்புதம் நடந்ததை மறுக்கின்றவர்களும் இருக்கின்றார்கள். அங்கிருந்தவர் களில் பலர் தங்கள் அங்கிகளுக்குள் உணவை மறைத்து வைத்திருந்தார்கள் என்றும், அந்தச் சிறுபையன் தன்னலமின்றித் தனது அப்பங்களையும் மீன்களையும் கொடுத்தவுடன், அவர்களும் தங்கள் உணவைப் பிறருடன் பகிர்ந்து கொண்டார்கள் என்றும் ஒரு கருத்தைப் பரப்பியுள்ளார்கள்.[38] மேம்போக்காகப் பார்த்தால்கூட, இந்த "விளக்கம்" கருத்தறிவு எதையும் ஏற்படுத்துவதில்லை. இயேசு செய்த செயலானது மக்கள் வெட்கப்பட்டுத் தங்கள் உணவைப் பகிர்ந்து கொள்ள வைத்தது என்றால், அவரை ராஜாவாக்க வேண்டும் என்ற அவர்களின் அதீதமான விருப்பத்தை விளக்கப்படுத்துவது சாத்தியமற்றதாகிறது (யோவா. 6:15). ஏற்கனவே இருந்திராத உணவு எதுவும் உண்டாக்கப்படவில்லை என்றால், அதிக உணவிற்காக அடுத்த நாளில் அவர்கள் அவரைத் தேடி வந்ததற்குக் காரணம் எதுவும் இருந்திராது. பகுத்தறிவுள்ள மற்ற விளக்கங்களும் அளிக்கப்பட்டு உள்ளன,[39] ஆனால் அவை யாவையுமே, இயேசு ஒரு "அடையாளத்தை" - அதாவது ஒரு அற்புதத்தை நிகழ்த்தினார் என்ற யோவானின் எளிய

*போதனையை (யோவா. 6:14) மறுக்கின்றன. வேதாகம ரீதியான விவரம் தெளிவாக உள்ளது: இயேசு ஒரு பையனின் சிற்றுண்டியை எடுத்து, அதை ஐயாயிரம் பேருக்கு உணவளிக்கத் தக்கதாகப் பெருக்கமடையச் செய்தார்!*

***பிறருக்கு உதவி செய்யத் தவறுவதற்கான சாக்குப்போக்குகளை ஒழித்துப்போடுங்கள்***

*கர்த்தருடைய கரங்களில் உள்ள கொஞ்சமும் அதிகமானதாக உள்ளது என்பதை நாம் மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகின்றோம். நாம் கொண்டிராதவைகள் மற்றும் செய்ய இயலாதவைகளைக் குறித்து முறையிடுவதை நாம் நிறுத்தி விடுவோமாக. மாறாக, நாம் கொண்டுள்ளவற்றையும் நம்மால் செய்யக் கூடியவைகளையும் மற்றவர்களுக்கு உதவுவதில் பயன்படுத்துவோமாக - அதன்பின்பு, அவர் நமது ஆதாரமூலங்களையும் விளைவுகளையும் எவ்வளவாகப் பெருக்கமடையச் செய்யக் கூடும் என்பது பற்றி வியப்பு அடையத் தயாராக இருப்போமாக!*

## *முடிவுரை*

*இந்த அனுபவத்திலிருந்து இயேசுவின் அப்போஸ்தலர்கள் கற்றுக் கொள்ள வேண்டும் - அவர்கள் தங்கள் வாழ்வின் எந்த அறைகூவலையும் சந்திப்பதில் அவர் உதவ முடியும் என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று இயேசு நோக்கங்கொண்டார் (மாற். 6:52ஐக் காணவும்). அவர்கள் சத்தியத்தைப் புரிந்துகொள்வதில் கடினமான வேளையைக் கொண்டிருந்தார்கள், ஆனால் நாம் அதிகம் ஏற்றுக்கொள்பவர்களாய் இருப்போம் என்று நான் நம்புகின்றேன். நாம் சாக்குப்போக்குக் கூறுவதை நிறுத்தும்போது, நம்மால் இயன்றவற்றைச் செய்யும்போது, தேவன் நமது முயற்சிகளை ஆசீர்வதித்து மற்றவர்களின் வாழ்வையும் ஆசீர்வதிப்பார் என்பதைக் கற்றுக் கொள்வோம் என்று நான் நம்புகின்றேன்.*

*பிறருக்கு உதவுதல் பற்றிய இந்தப் பிரசங்கம் எனது ஐந்து அப்பங்களாகவும் இரண்டு மீன்களாகவும் உள்ளது. இதன் வரையறைகளை அறிந்து உணர்ந்தவனாக நான் இருக்கிறேன். இது தனக்குள்ளாக, தன்னிலிருந்து இது அனுப்பப்பட்ட ஆயிரக்கணக்கான இருதயங்களுக்கு ஒருக்காலும் உணவளிக்க முடியாது என்று நான் அறிந்திருக்கின்றேன். எனவே, தேவன் இதை ஆசீர்வதித்து இதன் பயன்பாட்டைப் பெருகச் செய்ய வேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன். எல்லாவற்றிற்கும் மேலாக இது, மக்கள் தேவைகளைக் கொண்டுள்ளார்கள், நாம் அந்தத் தேவைகளைச் சந்திக்க வேண்டும், மற்றும் நாம் அந்தத் தேவைகளை - கர்த்தருடைய உதவியுடன் - சந்திக்க முடியும் என்று கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்ள உதவி செய்யும்படி நான் ஜெபிக்கின்றேன்!*

## *குறிப்புகள்*

*இந்த எடுத்துரைப்பில், தேவையில் உள்ளவர்களுக்கு உதவுதல் பற்றி நான் பொதுவாக வலியுறுத்தி இருக்கின்றேன். நீங்கள் ஒருவேளை, பிறருக்கு*

உதவுதல் பற்றிய பின்வரும் ஒரு அம்சத்தின்மீது கவனம் செலுத்த விரும்பலாம்: "மக்கள் உதவி பெறத் தகுதியற்றவர்களாய் இருக்கும்போது [என்ன செய்யலாம்?]"

எடுத்துரைப்புப் பிரசங்கத்தை நீங்கள் மகிழ்வுடன் அனுபவித்தால், இயேசு பெருக்கமடையச் செய்த சிற்றுண்டியைக் கொண்டிருந்த சிறு பையனின் நிலைப்பாட்டில் இருந்து இந்த வரலாற்றைக் கூற முயற்சி செய்யுங்கள்.

ஒரு இலேசான திருப்பத்திற்கு, நீங்கள் இந்தப் பிரசங்கத்தின் தலைப்பை "பத்தாயிரம் பேருக்கு உணவளித்தல்" என்று மாற்றிக் கொள்ளலாம்.[40]

---

குறிப்புகள்

[1]இயேசு செய்த ஆயிரக்கணக்கான அற்புதங்களில், ஏழே ஏழை மட்டுமே யோவான் தேர்ந்துகொண்டார் - மற்றும் யோவான் பொதுவாக, ஒப்பீட்டு சுவிசேஷ விவரங்கள் பதிவு செய்துள்ளவற்றை வேண்டுமென்றே தவிர்த்தார் என்பதைக் கவனிக்கும்போது, இந்த அற்புதத்தைப் பற்றி மீண்டும் எடுத்துரைத்தல் என்பது கூடுதலான தனிச்சிறப்பைக் கொண்டுள்ளது. ("கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில், "யோவான் எழுதிய சுவிசேஷம்" என்ற பாடத்தைப் படிக்கவும்.) [2]"படைப்பாக்கத் திறன்" கொண்ட அற்புதம் என்பது, கிறிஸ்து எதையேனும் உண்டாக்கிய அற்புதங்களில் ஒன்றாக உள்ளது. அவர் தண்ணீரைத் திராட்ச இரசமாக்கினது இவ்வகைப்பட்ட இன்னொரு அற்புதமாகும். [3]முந்திய பாடத்தில், நாம் இந்நிகழ்ச்சியை விசுவாசத்தின் சோதனையின் நிலைப்பாட்டில் கண்ணோக்கினோம். [4]2 தெசலோனிக்கேயர் 3ல் பவுலின் போதனையின்படி, நாம் உதவி செய்தல் என்பது சிலருடைய பகுதியில் சோம்பேறித்தனத்தை ஊக்குவிக்கும் என்ற காரணத்தினால், நாம் உதவி செய்யக்கூடாத மக்கள் சிலர் இருக்கின்றார்கள். இதைப் பற்றி நான் சுருக்கமாகத் தொட்டுச் செல்வேன் (நீங்கள் இந்தச் சிந்தனையை விரிவாக்க விரும்பலாம்), ஆனால் உதவி செய்தலின் எதிர்மறைக் கருத்திற்கு மாறாக நேர்மறைக் கருத்தை வலியுறுத்துதலே இந்தப் பிரசங்கத்தில் எனது நோக்கமாக உள்ளது. நான் உண்மையான/மெய்யான/சட்டப்பூர்வமான தேவைகள் என்று குறிப்பிடும்போது, நாம் வசனரீதியாக எடுத்துரைக்கக் கூடிய தேவைகளையே அர்த்தப்படுத்துகின்றேன். [5]இயேசுவின் ஊழியத்தின்மீது ஏரோதுவின் அக்கறை பற்றி, முன்பகுதியில் உள்ள "வெற்றியின் அபாயம்" என்ற பாடத்தின் விளக்கவுரைகளை மறுகண்ணோட்டமிடவும். [6]இந்தக் கூற்றுகள், அவர்களின் பயணம் கப்பர்நகூமில் அல்லது அதற்கு அருகில் தொடங்கிற்று என்ற யூகத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இயேசுவின் ஊழியத்தின் போது பலஸ்தீனம் என்ற வரைபடத்தைக் காணவும். கடலின் கிழக்குப்பகுதிக்கு இயேசு பின்வாங்கிச் சென்றதின் நோக்கத்தை நீங்கள் மறுகண்ணோட்டமிட விரும்பலாம். ("வெற்றியின் அபாயம்" என்ற முன்பகுதியிலுள்ள பாடத்தைப் படிக்கவும்.) [7]அந்தப் பகுதியில் நன்கு பழக்கப்பட்டவர்கள், இது விசேஷித்த பிரச்சனைகள் எதையும் முன்னிறுத்தாது என்று நமக்கு உறுதிப்படுத்துகின்றார்கள். கால்நடையாகப் பயணம் செய்தவர்கள் யோர்தானைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது, ஆனால் யோர்தான் நதி கலிலேயாக் கடலில் கலக்குமிடத்தில் சிறிதே தூரத்தில், கடவுதுறை ஒன்று இருந்தது. [8]நான் இவ்விடத்தில் தீர்ப்பிடுபவனாக இருப்பதாக நான் நினைக்கவில்லை. கூட்டத்தினருக்கு உணவளிக்கும்படி இயேசு ஆலோசனை

தெரிவித்தபோது, அவர்களை அனுப்பி விடுதல் என்பதே சீஷர்களின் பதிலாக இருந்தது (மாற். 6:36). [9]இந்தப் பிரசங்கத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கையில், உண்மையிலேயே நான் செய்வதை விட்டுவிட்டு தனக்கு உதவி செய்வதற்கு ஒரு மணி நேரமோ அல்லது அதற்கு அதிகமான நேரமோ எடுத்துக் கொள்ளும்படி என்னிடத்தில் கேட்ட ஒரு பெண்ணிடம் இருந்து ஒரு தொலைபேசி அழைப்பைப் பெற்றேன். எனது சிந்தையில் இயேசுவின் உதாரணங்கள் அவ்வளவு புத்தம் புதியதாக இருந்த நிலையில், நான் தெரிவு எதையும் கொண்டிருக்கவில்லை. நான் அந்தப் பெண்மணிக்கு உதவி செய்தேன். [10]"மேய்ப்பனில்லாத ஆடுகள்" என்ற சொற்றொடரின்மீதான விளக்கங்களுக்கு இப்புத்தகத்தின் முற்பகுதியில் உள்ள "வெற்றியின் அபாயம்" என்ற பாடத்தில் காணவும்.

[11]KJVயில் "he received them" என்றுள்ளது. [12]யோவான், "அப்பொழுது யூதருடைய பண்டிகையாகிய பஸ்கா சமீபமாயிருந்தது" என்று விளக்கியிருந்தார் (யோவா. 6:4). இது, பண்டிகைக்குச் சென்ற திருப்பயணிகள், உணர்வெழுச்சி எதைப் பற்றியது என்பதைக் காண்பதற்காக தங்கள் வழிகளில் நின்றதால் கூட்டம் எவ்வாறு வளர்ந்தது என்பதை விளக்குவதற்காக எழுதப்பட்டதென்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தங்களிடத்தில் ஏராளமான உணவைக் கொண்டிருப்பார்கள் என்பது இதில் உள்ள பிரச்சனையாக இருந்தது, ஆனாலும் நாளின் முடிவில் கூட்டத்தாரிடம் ஆய்வு செய்யப்பட்டபோது, உணவு எதுவும் இல்லை என்பது தெளிவு. ஒருவேளை இந்த விவரம் அந்தப் பகுதியில் "மிகுந்த புல்" வளர்ந்திருந்தது ஏன் என்பதை (யோவா. 6:10) விவரிக்க ஏதுவாக ஆண்டின் குறிப்பிட்ட பகுதியை வலியுறுத்துவதற்காக மாத்திரம் தரப்பட்டிருக்கலாம். [13]ஒரு சில பெண்களும் பிள்ளைகளும் மாத்திரமே அவ்வளவு நீண்ட தூரம் ஓடியிருந்திருப்பார்கள் என்று சிலர் நினைக்கின்றார்கள், மற்றவர்கள் இதை "மதியீனமானது!" என்று கூறுகின்றார்கள். [14]விடுதலையியல் விளக்கவுரையாளர்கள் - இவர்கள் இயேசு உண்மையில் அற்புதங்களை நிகழ்த்தினார் என்பதை நம்பாதவர்கள் - "மக்கள் தங்களுடன் உணவைக் கொண்டு வராது அவ்வளவு நீண்ட தூரம் பயணம் செய்திருக்க மாட்டார்கள்" என்று கூறுகின்றார்கள். ஆயினும், சுவிசேஷ விவரங்களை எழுதிய எழுத்தாளர்களால் சித்தரிக்கப்பட்ட சித்தரிப்பில், இயேசுவின் பகுதியிலும் கூட்டத்தாரின் பகுதியிலும் அவசரத்தன்மை இருந்தது என்பது தெளிவாக உள்ளது. [15]பிஸ்கட்டுகள் மற்றும் மக்காச்சோள ரொட்டிகள் என்பவை நான் வாழும் பகுதியில் உள்ள அப்பத்தின் வகையாகும். நீங்கள் வாழும்பகுதியில் உள்ள அப்பத்தின் வகையை இவ்விடத்தில் பதிலாகப் பயன்படுத்தலாம். [16]கலாத்தியர் 6:10 வசனமானது, பொதுவான வழி வகையில் "நன்மை" செய்தல் பற்றிப் பேசுகிறது; 1 தெசலொனிக்கேயர் 5:14ம் கூட, மக்களின் தேவைகள் எதுவாயிருப்பினும் நாம் அவர்களுக்கு உதவ வேண்டியது அவசியம் என்று சுட்டிக் காண்பிக்கிறது. இந்தப் பத்தியில் நான் குறிப்பிடுகிற தேவைகள், நான் வாழும் இடத்தில் என்னைச் சுற்றிலும் நான் காண்கின்ற தேவைகளாக உள்ளன. நீங்கள் வாழும் பகுதிக்கு ஏற்றவாறு இதை நீங்கள் தழுவியமைத்துக் கொள்ளலாம். நீங்கள், முன்பு குறிப்பிட்ட - உணவு, உடை மற்றும் அவை போன்ற - அடிப்படைத் தேவைகள் இன்னும் மிகவும் அதிகமாக உள்ள பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கலாம். [17]கர்த்தர் நமக்கு முன்பாக ஒரு அறைகூவலை வைக்கும்போதெல்லாம், அவர் ஏற்கனவே ஒரு தீர்வைக் கொண்டுள்ளார். அது என்ன என்பதை மாத்திரம் நாம் கண்டறிய வேண்டும்! [18]பிலிப்பு என்பவர் இயேசுவின் முதல் சீஷர்களில் ஒருவராக இருந்தார் ("கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில், "ஒவ்வொன்றிற்கும் ஒரு முதல் வேளை!" என்ற பாடத்தில் காணவும்). [19]பிலிப்பு பெத்சாயிதா ஊரைச் சேர்ந்தவராக இருந்தார் (யோவா. 1:44; 12:21), இது

கப்பர்நகூமின் புறநகர்ப் பகுதியொன்றாக இருந்திருக்கலாம், ஆனால் இது கடலின் கிழக்குப் பகுதியில் இருந்த பெத்சாயிதாவாக இருந்திருக்கவும் சாத்தியக்கூறு உள்ளது (அங்குதான் ஐயாயிரம் பேருக்கு உணவளித்த நிகழ்ச்சி நடைபெற்றது; லூக். 9:10). [20]பிலிப்புவின் மிகச் சரியான சிந்தனை பற்றி நாம் எதுவும் அறிவதில்லை; ஆனால் குறிப்பிடப்பட்ட தொகையை [கணக்கிட்டுப்] பெறுவதற்கு, அவர் இங்கு விவரிக்கப்பட்டுள்ளதற்கு ஒத்த ஒரு செயல்முறையைச் செய்திருக்க வேண்டும். அவர் செய்ததை விவரிப்பதற்கு நான் வாழும் பகுதியில், "அவர் பிரச்சனையைத் தீர்க்க ஒரு பென்சிலை எடுத்தார்" என்பது போன்ற பல்வேறு பேச்சு உருவகங்களை நாங்கள் கொண்டுள்ளோம். இந்த வேளைக்கு ஏற்புடைய தொடர்பு நிலை விளக்கம் ஒன்றையும் நாங்கள் கொண்டுள்ளோம்: "bean counters" - மக்களை விட பொருள்/நிதிகள் ("beans") பற்றி அதிக கவலை உடையவர்கள்.

[21]"The bottom line" என்பது ஒரு எளிய கணிதப் பிரச்சனையில் கடைசி விளைவைக் குறிக்கிறது: இது மொத்தம் மற்றும் இறுதி விளைவாக உள்ளது. [22]இது இயேசுவும் அவரது சீஷர்களும் பயணம் செல்லுகையில் அவர்களால் பயன்படுத்தப்பட்ட அற்பத் தொகையைக் கொண்டிருந்த ஒரு பை அல்லது பெட்டியாக இருந்தது. இந்தப் பை/பெட்டிக்கு யூதாஸ் பொறுப்பாளியாக இருந்தான் (யோவா. 12:6; 13:29). [23]அப்போஸ்தலர்கள் ''தங்கி'' என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்கள் என்ற உண்மையானது, சமவெளியில் இருந்த ஆயிரக்கணக்கானவர்களில் பெரும்பான்மையானோர் அந்தப் பகுதியில் இருந்து வந்தவர்கள் அல்ல என்ற உண்மையை நிரூபிக்கிறது. [24]உலகில் நான் வாழும் பகுதியில், நாங்கள் ''அவர்கள் எதையேனும் பெறுவதற்கு மட்டுமே இங்கு இருக்கின்றார்கள்'' என்று கூறுவதுண்டு. [25]முந்திய பாடத்தில் "கூட்டம் மிகுந்திருந்த ஒரு ஜெப ஆலயத்தில் ஒரு சோதனை'' என்ற உட்தலைப்பின் கீழ் உள்ள கலந்துரையாடலைக் காணவும். [26]இதனை ''நாம் யாருடையவர்களாய் இருக்கின்றோம் என்ற காரணத்தினால்'' என்றும் சொற்றொடராக்கம் செய்ய முடியும். [27]உலகில் நான் வாழும் பகுதியில் நாங்கள், "அவர்களைக் கொக்கியிலிருந்து விலகி விட அவர் அனுமதிக்கவில்லை" என்று கூறுவதுண்டு. [28]முந்திய பாடத்தின் குறிப்பு எண் 6ஐ மறுகண்ணோட்டமிடவும். [29]"Cracker" என்பது உலகின் சில பகுதிகளில், "உப்பு பிஸ்கட்" என்று அழைக்கப்படும் பொருளுக்கு அமெரிக்காவில் பயன்படுத்தப்படும் சொற்றொடராக உள்ளது. [30]நான் வாழும் இடத்தில் sardines எனப்படும் மீன்கள் டின்களில் விற்கப்படுகின்றன. ஒரு சிறிய டின்னில் பல டஜன் எண்ணிக்கையிலான sardines இருக்கும். [இது நம் நாட்டில் வழங்கப்படும் அயிரை/சாளை மீனுக்கு ஒப்பானதாக இருக்கலாம்.]

[31]யோவான், ''அந்த இடம் மிகுந்த புல்லுள்ளதாயிருந்தது'' என்பதையும் கூடுதலாகக் கூறினார், இது மக்கள் தரையில் உட்கார மனவிருப்பமாயிருந்தது ஏன் என்பதை விளக்குவதற்குக் கண்ணால் கண்ட சாட்சியின் விவரமாக இருந்தது. (மேலும் மத். 14:19; மாற். 6:39ஐயும் காணவும்.) [32]இந்த வேளையில் இயேசுவின் உதாரணம், நாம் நமது உணவிற்காக - அந்த உணவு அற்பமானதாக இருந்த போதிலும் - தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று நமக்குப் போதிக்கிறது. யூதர்கள், ''நன்றி செலுத்தாமல் எதையாவது மகிழ்வுடன் அனுபவிக்கிறவன் தேவனிடத்திலிருந்து திருடியவன் என்றே எண்ணப்படுவான்" என்று ஒரு மரபுக் கூற்றைக் கொண்டிருந்தார்கள் (William Barclay, *The Gospel of Luke*, rev. ed., The Daily Study Bible Series [Philadelphia: Westminster Press, 1975], 118). [33]William Barclay, *The Gospel of Matthew*, rev. ed., vol. 2, The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 100. [34]கிரேக்க வசனத்தில் பயன்படுத்தப்பட்ட வினைச் சொல்லின் செயல்பாட்டை NASB சரியாகப் பிரதிபலிக்கிறது. [35]அப்போஸ்தலர்களால்

*பயன்படுத்தப்பட்ட கூடைகள் எங்கிருந்து வந்தன என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். உலகப் பிரகாரமான வரலாற்றில் இருந்து நாம், உலகில் நான் வாழும் பகுதியில் மக்கள் தங்கள் பணப் பைகளை அல்லது சிறு பணப்பைகளை வைத்துக்கொள்ளச் சிறு கூடைகளை எடுத்துச் செல்வது போன்றே, யூதர்கள் சிறு கூடைகளைச் சுமந்து சென்றார்கள் என்று நாம் அறிகின்றோம். ஒரு நாளின் பயணத்தின்போது தேவைப்படுகிற பொருட்களை வைத்து எடுத்துச் செல்லும் ஒரு சிறு கொள்கலனை [ஒரு பை அல்லது கூடையை] எடுத்துச் செல்லுதல் என்பது உலகின் பெரும்பாலான இடங்களில் வழக்கமாக உள்ளது. அந்தக் கூடைகள் சீஷர்களின் சொந்தக் கூடைகளாக இருந்திருக்கும் அல்லது கூட்டத்தில் இருந்த மக்களிடத்திலிருந்த அவர்கள் அவற்றைக் கடனாகப் பெற்றிருக்கலாம். [36]யாரோ ஒருவர், கிறிஸ்துவை உற்பத்தியாளர் என்றும் அப்போஸ்தலர்களை விநியோகிப்பாளர்கள் என்றும் விவரித்தார். [37]மீதமான உணவுக்கு என்னவாயிற்று? இது ஒரு முக்கியமற்ற விவரமாக இருப்பதால், சுவிசேஷ விவரங்கள் இதைப் பற்றிக் கூறுவதில்லை. பன்னிரெண்டு கூடைகளும் அப்போஸ்தலர்களுடையவைகளாக இருந்திருந்தால், இது ஒருவேளை அடுத்து வந்த வாரத்திற்கு அவர்களின் உணவாக இருந்திருக்கலாம். அவர்கள் கூடைகளை கடன்பெற்றிருந்தார்கள் என்றால், கூடைகளைப் பயன்படுத்தும்படி அவர்களை அனுமதித்திருந்தவர்கள் அந்த மீதமான உணவைப் பெற்றிருக்கலாம். மீதமானதில் பெரும்பங்கை அந்தச் சிறுபையன் பெற்றிருப்பான் என்பது உறுதி. வார்ரென் வயர்ஸ்ப் அவர்கள், "அந்தப் பையன் எத்தனை அப்பங்களை வீட்டுக்கு எடுத்துச் சென்றிருப்பான் என்று நான் வியப்படைகின்றேன். நடந்தவற்றை அவன் தன் தாயிடம் கூறியபோது அவளின் திகைப்பை நீங்கள் கற்பனை செய்து பாருங்கள்!" என்று எழுதினார்* (Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 1 [Wheaton, Ill.: Victor Books, 1989], 51. *[38]மக்கள் உணவுப் பொருட்கள் எதுவுமின்றி இந்தப் பயணத்தை மேற் கொண்டிருப்பார்கள் என்பதை, நம்பிக்கையற்ற இவர்கள் ஏளனம் செய்கின்றார்கள், ஆனால் வேதாகம ரீதியான விவரத்தின்படி, அதுவே விஷயங்களின் நிலை என்பது துல்லியமாக இருந்தது. [39]இன்னொரு "விளக்கம்," "திருவருட்சாதன விளக்கம்" என்று அழைக்கப்படுகிறது: ஒவ்வொருவரும் ஓரிரு துணுக்குகள் அப்பத்தையும் மீனையும் பெற்றுக் கொண்டார்கள், ஆனால் அது எப்படியோ அவர்களைத் திருப்திப்படுத்திற்று. இந்தக் கருத்து, யோவான் கூறிய "அவர்கள் வயிறார உண்டனர்" என்ற கூற்றுக்கு நேர்மாறாக உள்ளது (யோவா. 6:11, 12) மற்றும் அற்புதம் முடிந்த பின்பு, பன்னிரெண்டு கூடைகள் நிறைய துணுக்குகளை சேகரிக்க முடிந்தது எப்படி என்பதை விளக்கத் தவறுகிறது! [40]நீங்கள் இப்பிரசங்கத்தை எப்படி வளரச் செய்தாலும், மக்கள் கர்த்தரிடத்தில் வரும்படியான ஒரு ஊக்கப்படுத்துதலுடன் இதை நீங்கள் முடித்துவைக்க விரும்பலாம். அவர்கள் முதலாவது, தேவனுடன் தங்களுக்குள்ள உறவைப் பற்றி அக்கறை கொள்ளாதிருந்தால், தாங்கள் பிறருக்குச் செய்யக் கூடியவற்றில் எப்பொழுதுமே வரையறைக்கு உட்பட்டவர்களாகவே இருப்பார்கள். நீங்கள் மாற். 16:16; அப். 2:38; மற்றும் கலா. 3:26, 27 போன்ற வசனப்பகுதிகளைப் பயன்படுத்த விரும்பலாம்.*

43

# கவலை தரும் இடைமறித்தல்களா அல்லது பயன்மிக்க இடையிசைகளா?

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #17*

VI. *மூன்றாவது பஸ்காவிலிருந்து இயேசு பெத்தானிக்கு வந்து சேர்ந்தது வரை.*[1]

A. *மூன்றாவது பஸ்கா (யோவா. 6:4; 7:1ஐக் காணவும்).*

B. *பாரம்பரியத்தை மதிக்கவில்லை என்று கடிந்து கொள்ளப்படுதல் (மத். 15:1-20; மாற். 7:1-23).*

C. *ஏரோதுவின் எல்லைப் பகுதியிலிருந்து விலகிச் செல்லுதல் (மத். 15:21; மாற். 7:24).*

D. *பெனிக்கியா (அல்லது கானானிய) பெண் ஒருத்தியின் மகளைக் குணமாக்குதல் (மத். 15:22-28; மாற். 7:25-30).*

E. *ஏரோதுவின் எல்லையைத் தவிர்த்தல் (மத். 15:29; மாற். 7:31).*

F. *காது கேளாதவர் உட்படப் பலரைக் குணமாக்குதல் (மத். 15:30, 31; மாற். 7:32-37).*

G. *நான்காயிரம் ஆண்களுக்கு உணவளித்தல் (மத். 15:32-39அ; மாற். 8:1-9).*

### அறிமுகம்

*இடைமறித்தலை நான் நன்முறையில் கையாளுவதில்லை. நான் ஒவ்வொரு நாளுக்கும் திட்டமிட விரும்புகின்றேன். நான் ஒவ்வொரு வாரத்திற்கும், மாதத்திற்கும் மற்றும் ஆண்டிற்கும் கூடத் திட்டமிட விரும்புகின்றேன். நான் என்ன செய்ய வேண்டும் என்பதையும் ஒவ்வொரு பணிப்பொறுப்பையும் செய்து முடிக்க தோராயமாக எவ்வளவு காலம் செல்லும் என்பதையும் அறிந்திருக்க விரும்புகின்றேன். எனது பணி அட்டவணையில் இடைமறித்தல்களுக்கு இடமில்லை. இவ்விதமாக,*

*இடைமறித்தல்கள் வரும்போது - எவ்வித மாற்றமும் இன்றி இவைகள் வருகின்றன - அது எனக்குச் சலிப்பூட்டுகிறது.*

*எனது நாற்பது ஆண்டுகால முழுநேரப் பிரசங்கியாராக இருந்த வாழ்வில் நான் இந்த விஷயத்துடன் விசேஷமாகப் போராடியுள்ளேன். சுவிசேஷ ஊழியருடைய பணிபற்றிய புத்தகங்கள், ஒவ்வொரு நாளின் பணி அட்டவணையும் இடைமறித்தலுக்கு நேரத்தை அனுமதிக்க வேண்டும் என்று கூறுகின்றன. இந்தப் புத்தகங்களின் எழுத்தாளர்கள், திட்டமிடப் பட்ட பணிகளைக் காட்டிலும் இவ்விதமான இடைமறித்தல்கள் சில வேளைகளில் கர்த்தருக்கு அதிகமான கனி தரக்கூடும் என்று சுட்டிக் காண்பிக்கின்றார்கள். இது உண்மையாக உள்ளது என்று அறிந்த நிலையில், நான் ஒவ்வொரு நாளும் அதிகமானவற்றை நிறைவேற்றப் பணி அட்டவணையை தயாரிக்கின்றேன் - நான் இடைமறிக்கப்படும்போது சிடுசிடுப்பு அடைகின்றேன்.*

*இந்தப் பாடத்தில் நாம், இடைமறித்தல்களை இயேசு எவ்வாறு சமாளித்தார் என்று காண்போம். ஜீவ அப்பம் பற்றிய பிரசங்கத்திற்குப் பின்பு, "அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள்" (யோவா. 6:66) என்பதை நீங்கள் நினைவில் வைத்திருக்கலாம். அந்த வேளையிலிருந்து, கிறிஸ்து தாம் இந்த பூமியில் தமது அப்போஸ்தலர்களுடன் இல்லாது போகக் கூடியதான வரவிருந்த வேளைக்கென்று அந்தப் பன்னிருவரையும் தயார் செய்விப்பதில் தமது அதிகமான முயற்சிகளைச் செலவிட்டுக் கவனம் செலுத்தினார். பயிற்சிக் கென்று கொடுக்கப்பட்ட வேத வாசிப்புகளை நீங்கள் வாசிக்கையில், கர்த்தர் மீண்டும் மீண்டும் கலிலேயாவில் இருந்து பின்வாங்குவதைக் காண்பீர்கள். இதற்கு, அவர் தமது விரோதிகளுடன் மோதலைத் தவிர்த்தல் என்பது ஒரு காரணமாயிருந்தது, ஆனால் தமது அப்போஸ்தலர்களுடன் நேரத்தைச் செலவிடுதல் என்பது இன்னொரு காரணமாக இருந்தது. ஆயினும், அந்த நோக்கத்தில் இயேசு நிலையாக தடைப்படுத்தப்பட்டார்: அவர் நண்பராலும் விரோதியாலும் இடைமறிக்கப்பட்டார். இந்தப் பாடமானது, கவலை தரும் அந்த இடைமறித்தல்களை பயன்மிக்க இடையிசைகளாக மாற்ற அவர் எவ்வாறு சமாளித்தார் என்பதைப் பற்றியதாக உள்ளது.*

## *விமர்சனத்தினால் இடைமறிக்கப்படுதல் (மத். 15:1-20; மாற். 7:1-23; மேலும் யோவா. 6:4; 7:1ஐக் காணவும்)*

*ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல் பற்றி யோவான் கூறியபோது, "அப்பொழுது யூதருடைய பண்டிகையாகிய பஸ்கா சமீபமாயிருந்தது" என்று அவர் எழுதினார் (யோவா. 6:4). யோவான் 5:1ல் உள்ள "யூதருடைய பண்டிகை" என்பது பஸ்காவாக இருந்தால், 6:4ல் குறிப்பிடப்பட்டுள்ளது, யோவான் சுவிசேஷத்தில் உள்ள மூன்றாவது பஸ்காவாகும்.*

*பல எழுத்தாளர்கள் (அநேகமாகப் பெரும்பான்மையானவர்கள்), இயேசு "இவைகளுக்குப் பின்பு யூதர்கள் இயேசுவைக் கொலை செய்ய வகை தேடினபடியால், அவர் யூதேயாவில் சஞ்சரிக்க மனதில்லாமல் கலிலேயாவில் சஞ்சரித்து வந்தார்" என்று கூறுகிற 7:1ன் காரணத்தினால், யோவான் 6:4ன் பஸ்கா பண்டிகையில் கலந்து கொள்ளவில்லை என்று நம்புகின்றார்கள். இயேசு அந்தப் பண்டிகையில் கலந்து கொண்டிருந்தால் - அவர் கலந்து கொண்டார் என்று நினைக்கவே நான் தலைப்படுகின்றேன்[2] - அவர் அமைதியாக [எவரும்] அறியாத வகையில் அவ்வாறு கலந்து கொண்டார்[3] (யோவா. 7:10ஐ ஒப்பிடவும்). பஸ்கா பண்டிகை தொடர்பாக எருசலேமில் நடைபெற்ற எந்த நிகழ்ச்சிகள் பற்றிய பதிவேடும் நமக்கு இல்லை.*

*நமது பாடத் தொடரைப் பொறுத்தமட்டில், யோவான் 6:4ல் உள்ள பஸ்காவைப் பற்றிய குறிப்பானது, கிறிஸ்துவின் வாழ்வின் நாள் வரிசை அட்டவணையும் நமக்கு உதவுகிறது என்பதே அதன் முக்கிய நோக்கமாக உள்ளது. அந்தப் பஸ்காவிலிருந்து அதன் பின்பு சுமார் ஆறுமாதங்கள் வரையிலும், நாம் மாபெரும் கலிலேய ஊழியத்தின் கடைசி நிகழ்ச்சியைக் கொண்டுள்ளோம். இது அந்த மாகாணத்தில் இருந்து பின்வாங்கிச் செல்லுதல்களின் ஒரு வரிசையினால் பண்புபடுத்தப்படுகிறது.*

### கவலை தரும் இடைமறித்தல்

*நமது பாடம் தொடங்குகையில், இயேசு கலிலேயாவில் போதித்துக் கொண்டிருந்தார், அப்போது எருசலேமில் இருந்து பரிசேயர் வேதபாரகர் களின் குழுவொன்று அவரிடம் வந்து சேர்ந்தது.[4] அவர்கள் கிறிஸ்துவை இடைமறிக்கத் தயங்கவில்லை. மாற்கு 7:1 வசனம், ''அவரிடத்தில் கூடிவந்தார்கள்'' என்று கூறுகிறது. அவர்கள் இயேசுவைச் சுற்றிச் சூழும் வரையிலும் கூட்டத்தைத் தோள்களினால் இடித்து விலக்கிக் கொண்டு வழி ஏற்படுத்தி முன்னேறியதையும், பின்பு அவரது முகத்திற்கெதிரே சத்தமிட்டதையும் என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. இந்த வேளையில் அவர்கள் ஒரு புதிய குற்றச்சாட்டைக் கொண்டு வந்திருந் தார்கள்: அவரது சீஷர்கள் கை கழுவாமல் உணவு உண்பதன்மூலம் முன்னோர் பாரம்பரியத்தை மீறி நடந்தார்கள் என்று குற்றம் சாட்டினார் கள். பரிசேயர்கள் அந்தப் பாரம்பரியங்களை மோசேயின் நியாயப் பிரமாணத்தைப் போலவே பரிசுத்தமானதாகக் கருதினார்கள்.*

### பயன்மிக்க இடையிசை

*கவலை தரும் இந்த இடைமறித்தலை, மனிதப் பாரம்பரியங்கள் மீதான அவசியமான பாடங்களைப் போதிப்பதற்கு ஒரு வாய்ப்பாகப் பயன் படுத்திக் கொண்டதன் மூலம், கிறிஸ்து இதை ஒரு பயன்மிகுந்த இடையிசையாக மாற்றினார். முதலில் அவர், ஏவுதல் பெற்றிராத பாரம்பரியங்களின் அபாயங்கள் பற்றி உறுதியான எச்சரிக்கைகளைக் கொடுத்து குற்றம் சாட்டியவர்களிடத்தில் உரையாற்றினார். அப்படிப் பட்ட பாரம்பரியங்கள் தேவனுடைய கட்டளைகளாயிராமல், "மனிதரின் கட்டளையாக'' இருந்தன என்று அவர் வலியுறுத்தினார் (மாற். 7:7).*

*பரிசேயர்கள் "[தங்கள்] பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை" மீறினார்கள் என்று அவர்கள்மீது அவர் குற்றம் சாட்டினார் (மத். 15:3). இதை அவர், பழங்காலத்தில் மனிதரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு பாரம் பரியமான, தங்களின் எல்லா அல்லது ஒரு பகுதி பணத்தை "தேவனுக்கு அர்ப்பணம்" செய்து (மாற். 7:11; மத். 15:5ஐக் காணவும்), பின்பு வயது முதிர்ந்து தேவையில் உள்ள தங்கள் பெற்றோர்களிடத்தில், "நாங்கள் வருந்துகின்றோம், ஆனால் இந்த நிதிகளை உங்களுக்கு உதவுவதற்குப் பயன்படுத்த எங்களுக்கு அனுமதியில்லை" என்று கூறுவதற்கு அனுமதிக்கும் ஒரு பாரம்பரியத்தைக் கொண்டு விவரித்தார்.[5]*

*பின்பு அவர் கூட்டத்தை நோக்கித் திரும்பினார். உண்மையில் அவர், கைகளைக் கழுவுதல் என்பது எவ்வளவாகப் பழையதும் வெறுமையானது மான பாரம்பரியமாக இருந்ததோ, அவ்வளவுக்கு அதன் அடிப்படைக் கொள்கை தவறுள்ளதாக இருந்தது என்று சொன்னார்: "வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்" (மத். 15:11). பிரச்சனை சுகாதாரத்தைப் பற்றியதல்ல, ஆனால் அதற்கு மாறாக சடங்காச்சாரமான தீட்டுப்படுதல் பற்றியதாயிருந்தது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். பேதுரு பிறகு விளக்கம் கேட்டார், கிறிஸ்து பின்வருமாறு பதில் அளித்தார்:*

> *வாய்க்குள்ளே போகிறதெல்லாம் வயிற்றில் சென்று ஆசனவழியாய்க் கழிந்துபோம் என்பதை நீங்கள் இன்னும் அறியவில்லையா? வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டு வரும்; அவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங் களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச் சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டு வரும். இவைகளே மனுஷ னைத் தீட்டுப்படுத்தும்; கை கழுவாமல் சாப்பிடுகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது (மத். 15:17-20).*

*கடைசியில் இயேசு தமது சீஷர்களுடன் தனிமையில் இருந்தபோது, அவர்களுக்குப் போதித்தார். அவர் பரிசேயர்களைப் பற்றி அவர்களை எச்சரித்தார்.[6] அவர் பரிசேயர்களின் போதனைகளை, தேவனால் பிடுங்கி எறியப்படும் களைகளுக்கு ஒப்பிட்டார் (மத். 15:13). இந்த மதத்தலைவர் களை அவர், பார்வையற்றவர்களுக்கு (அவர்களின் போதனைகளைக் கேள்வியெதுவும் இன்றி பின்பற்றுகின்றவர்களுக்கு) வழிகாட்டும் பார்வை யற்றவர்கள்[7] என்று குறிப்பிட்டார்.[8] இவைகள் அவசியமான பாடங்களாக - ஒரு இடைமறித்தலினால் தூண்டப்பட்ட பாடங்களாக இருந்தன.*

*நீங்கள் கர்த்தருக்கென்று எதையேனும் செய்ய முயற்சித்தால், நீங்கள் விமர்சிக்கப்படுவதற்குப் பலமான சாத்தியக்கூறு உள்ளது. ஒன்றுமே செய்யாதிருப்பது மற்றும் ஒன்றுமற்றவராயிருப்பது என்பதுதான் விமர்சனத்தைத் தவிர்க்க ஒரே வழி என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார். உங்களால் முடிந்த அளவு சிறப்பாகச் செயல்பட்டு, நீங்கள் விமர்சனத் தினால் இடைமறிக்கப்படும்போது, நீங்கள் பல்வேறு வழிகளில் பதில்செயல்*

செய்ய முடியும்: நம்மில் பலரும் செய்கிறதுபோல், உங்களைக் குறித்து நீங்கள் வருத்தப்பட முடியும்; சிலர் செய்கிறதுபோல், நீங்கள் வெளியேறி விட முடியும் அல்லது கிறிஸ்து செய்ததுபோல் அதை [விமர்சனத்தை] மிகச்சிறந்த சூழ்நிலையாக்க முடியும்.

உங்கள் வழியில் விமர்சனம் வரும்போது, முதலில் அதில் ஏதேனும் உண்மை இருக்கிறதா என்று பாருங்கள் (எனது அனுபவத்தில், அதில் அடிக்கடி உண்மை இருந்துள்ளது). அடுத்து, ஒரு பதில் அல்லது விளக்கம் என்பது ஏதாவது நல்ல நோக்கத்திற்கு உதவுமா என்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள். கடைசியாக, உங்கள் பணிமுறைக்குத் திரும்புங்கள், எஜமானருக்காக உங்களால் முடிந்த அளவு மிகச் சிறப்பாகச் செய்யத் தீர்மானியுங்கள். நீங்கள் இம்முறையில் பதில்செயல் செய்தால், நீங்களும் கூட, கவலைதரும் இடைமறித்தல் ஒன்றை பயன்மிக்க இடையிசையாக மாற்ற முடியும்.

## கதறுதலினால் இடைமறிக்கப்படுதல் (மத். 15:21-28; மாற். 7:24-30)

இயேசு தமது விரோதிகளுடனான இந்தப் போராட்டத்திற்குப் பின்பு, "தீரு, சீதோன் பட்டணங்களின் திசைகளுக்குப் போனார்" (மத். 15:21). பரிசேயர்களிடமிருந்து விலகிச்செல்ல வேண்டும் என்பது இதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம் என்று நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம், ஆனால் பன்னிருவருடன் தனிமையில் இருக்க வேண்டும் என்பதே கிறிஸ்துவின் அடிப்படை நோக்கமாக இருந்தது என்பது தெளிவு.[9] அவரது விரோதிகளிடம் வளர்ந்துகொண்டிருந்த பகை உணர்வானது, அவர் தமது எதிராளிகள் தம்மைக் கொல்லும் வேளைக்கென்று தமது அப்போஸ்தலர் களைத் தயார்ப்படுத்துவதை இன்னும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக செய்தது.

நாம் அறிந்த வரையில், இதுவே இயேசு அந்நிய மண்ணில் காலடி வைத்த முதல் வேளையாக உள்ளது. தீருவும் சீதோனும், பெனிக்கியா[10] என்ற பழமையான நாட்டின் கடலோர நகரங்களாக இருந்தன. பெனிக்கியா என்பது, கலிலேயாவுக்கு வடமேற்கில், மத்திய தரைக்கடலின் வடகிழக்கு மூலையில் அமைந்திருந்த ஒரு குறுகிய பட்டி போன்ற அமைப்புள்ள நாடாக இருந்தது. கிறிஸ்துவின் நாட்களில், இது சீரியாவின் ரோம மாகாணங்களில் ஒன்றாக இருந்தது.

### கவலை தரும் இடைமறித்தல்

இயேசு, "தீருவின் எல்லையில்" வந்தபோது, அவர் தாம் இருப்பதை இரகசியமாகக் காத்துக் கொள்ளும் விருப்பத்துடன் "ஒரு வீட்டுக்குள் பிரவேசித்தார்" ஆனால் "அவர் மறைவாய் இருக்கக்கூடாமற்போயிற்று" (மாற். 7:24). முந்தின பாடம் ஒன்றில் நாம், கிறிஸ்துவின் ஊழியம் பற்றிய செய்தியானது, "தீரு, சீதோன் பட்டணங்களின் திசைகள்" வரையிலும் கூடச் சென்றடைந்தது என்று கண்டோம் (மாற். 3:8). ஆகையால்,

விரைவிலேயே, கர்த்தர் தமது உதவியை நாடிய ஒருத்தியால் இடைமறிக்கப் பட்டார்: "அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரு சிறு பெண்ணின் தாயாகிய ஒரு ஸ்திரீ, அவரைக் குறித்துக் கேள்விப்பட்டு வந்து அவர் பாதத்தில் விழுந்தாள். அந்த ஸ்திரீ சீரோபேனிக்கியா தேசத்தாளாகிய கிரேக்க [புறஜாதி][11] ஸ்திரீயாயிருந்தாள்'' (மாற். 7:25, 26அ). ''சீரோபேனிக்கியா'' என்ற சொற்றொடர் பெனிக்கியர்களை சீரியாவின் மாகாணத்தில் இருந்த மற்ற குடிமக்களில் இருந்து வித்தியாசப்படுத்திற்று.

அந்தப் பெண்மணி, ''ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்" என்று கதறினாள் (மத். 15:22அ). "தாவீதின் குமாரன்" என்பது இஸ்ரவேலர்களின் மேசியாத்துவச் சொற்றொடராக இருந்தது. யூதத்துவத் தின் நம்பிக்கையானது அவர்களைச் சுற்றிலும் இருந்த நாடுகளிலும் வடிந்திருந்தது.[12] அவள் இயேசுவிடம், "என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள்'' என்று கூறினாள் (மத். 15:22ஆ). ''அவள் தன் மகளைப் பிடித்திருந்த பிசாசைத் துரத்திவிடவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டாள்'' என்று மாற்கு வலியுறுத்தினார் (மாற். 7:26ஆ). மத்தேயுவின் சுவிசேஷ விவரப்படி, அவள் தொடர்ந்து கூப்பிட்டாள் (மத். 15:23). இவள் விடாப்பிடியான, கூக்குரலிடும் தாயாக இருந்தாள். இவளது சிறுபெண்ணுக்கு உதவி தேவைப்பட்டது, அதை ஒவ்வொருவரும் அறிய வேண்டும் என்று இவள் விரும்பினாள். எப்போதாவது நீங்கள் தீவிரமான வியாதியுடன்கூடிய ஒரு சிறுபிள்ளையை கொண்டிருந்தால், நீங்கள் அவளைக் குறித்துப் பரிதாபப்படக்கூடும்.

**பயன்மிக்க இடையிசை**

இயேசுவுக்கும் அந்தப் பெண்மணிக்கும் இடையில் பின் நிகழ்ந்த உரையாடலானது, சுவிசேஷ விவரங்களிலேயே மிகவும் நாடக இயல்பும் புதிருமான நிகழ்ச்சிகளில் ஒன்றாக உள்ளது. மேலோட்டமாகப் பார்த்தால், இது அவளை இயேசு வேண்டுமென்றே அவமானப்படுத்தியது போலத் தோற்றம் அளிக்கிறது. தொடக்கத்தில், அவர் அவளைக் கண்டும் காணாது விட்டார், அவரது சீஷர்கள் அவளைத் துரத்திவிட முயற்சி செய்தார்கள்[13] (மத். 15:23). கடைசியில் அவர் அவளிடத்தில் பேசியபோது, "காணாமற் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனே யன்றி, மற்றப்படியல்ல" என்று அவர் கூறினார் (மத். 15:24).

நம்பிக்கை இழந்த நிலையில் இருந்த இந்தத் தாயை [இவை போன்ற] எதுவும் தடுத்து நிறுத்தவில்லை. அவள் தொடர்ந்து, "ஆண்டவரே, எனக்கு உதவிசெய்யும்!'' என்று கெஞ்சினாள் (மத். 15:25). இயேசு, ''முந்தி பிள்ளைகள் திருப்தியடையட்டும்,[14] பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல" என்று பதில் அளித்தார் (மாற். 7:27). இந்த வாக்கியத்தில் உள்ள "பிள்ளைகள்" என்பவர்கள் யூதர்களாக உள்ளார்கள் என்பது தெளிவு - இது புறஜாதியாரை "நாய்கள்" என்றாக்கும். உங்களை நாய் என்று அழைப்பதை நீங்கள் எப்படி விரும்புவீர்கள்? நான் அந்தப் பெண்ணாக இருந்திருந்தால், கோபத்தில் வீராப்பாகப் புறம்பே செல்லும்படி சோதிக்கப்பட்டிருப்பேன்! இதற்குப் பதிலாக அந்தப்

பெண்மணி, "மெய்தான், ஆண்டவரே, ஆகிலும் மேஜையின் கீழிருக்கும் நாய்க்குட்டிகள் பிள்ளைகள் சிந்துகிற துணிக்கைகளைத் தின்னுமே" என்று புத்திசாலித்தனமாகப் பதில் அளித்தாள் (மாற். 7:28; மத். 15:27).

இந்தக் காட்சியை நான் எனது மனதில் சித்தரிக்கும்போது, இயேசு "ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ சொன்ன அந்த வார்த்தையினிமித்தம் போகலாம். நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது. பிசாசு உன் மகளை விட்டு நீங்கிப் போயிற்று" (மத். 15:28அ; மாற். 7:29ஐக் காணவும்) என்று பதில் அளிக்கையில் அவரது முகத்தில் புன்னகை பரவுவதை நான் காண்கின்றேன். மத்தேயு, "அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்" என்று எழுதினார் (மத். 15:28ஆ). அவள் தன் வீட்டுக்கு வந்தபொழுது, "பிசாசு போய் விட்டதையும், தன் மகள் கட்டிலில் படுத்திருக்கிறதையும் [அடிபட்ட அனுபவத்தின் சோர்வு எதுவும் ஐயத்திற்கிடமின்றி இல்லை] கண்டாள்" என்று மாற்கு பதிவு செய்தார் (மாற். 7:30). நான் இந்த வரலாற்றை விரும்புகின்றேன்!

இவ்வரலாறு எவ்வளவு நாடக பாணியாகவும் மனதை ஈர்ப்பதாகவும் உள்ளதோ, அவ்வளவுக்கு இது கலக்கமடையச் செய்வதாகவும் உள்ளது. இயேசு பயன்படுத்திய வார்த்தைகளை, அவரது பண்பு மற்றும் நோக்கமாக நாம் அறிந்துள்ளவற்றுடன் ஒப்புரவாக்குவதற்கு விளக்கவுரையாளர்கள் போராடுகின்றார்கள். சிலர், கிறிஸ்துவின் இந்த வார்த்தைகள் ஒரு முகவை மதிப்பாக எடுத்துக்கொள்ளப்பட முடியும் என்று சுட்டிக்காண்பித்துள்ளார் கள். உண்மையில் அவர், "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு" அனுப்பப்பட்டிருந்தார் (மத். 10:6). பிற்பாடு, "இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் [புறஜாதியார்]" அழைக்கப்படுவார்கள் (யோவா. 10:16).[15] அதே வேளையில், இயேசு தமது அடிப்படை நோக்கத்திலிருந்து தடுத்து நிறுத்தப்படாதிருக்கத் தீர்மானித் தார் (என்று விளக்கவுரையாளர்கள் வலியுறுத்துகின்றனர்) (மத். 10:5). அந்த நோக்கத்தின்மீதான கிறிஸ்துவின் கவனமே அவரது தொடக்க பதிலுக்குக் காரணியாக இருந்தது என்று நான் நம்புகின்றேன்,[16] ஆனால் அது நிச்சயமாக முழுமையான விளக்கமாக இருப்பதில்லை. இதற்கு முன்பே இயேசு, உதவி வேண்டிய ஒரு புறஜாதியாரின் கூப்பிடுதலுக்கு நேர்மறையாக பதில் அளித்திருந்தார் (மத். 8:5-13). மற்றும், அவர் தீருவின் பகுதியை விட்டுச் சென்ற பின்பு, அவர் இன்னும் பல புறஜாதியாரைக் குணமாக்கவிருந்தார்.[17]

கிறிஸ்து இவ்வாறு பேசியது ஏன் என்பதை நாம் ஆழ்ந்து சிந்திக்கையில், புறஜாதியாருக்கு எதிரான தப்பெண்ணத்தை நாம் விலக்கிப்போட வேண்டும் என்பதை நான் மிகையாக வலியுறுத்த இயலாது. மற்ற இனங்களுக்கு எதிராக யூதர்கள் வழக்கமாகக் கொண்டிருந்த பாரபட்சமான கருத்தினால் இயேசு வேதனைப் படுத்தப்படவில்லை (லூக். 2:32; மத். 8:10-12; 12:18, 21).

அந்தப் பெண்ணை நோக்கித் திருப்பப்பட்ட வார்த்தைகளைக் கிறிஸ்து எவ்வாறு பேசினார் என்பதை நாம் அறிவதில்லை என்று மற்ற சிலர் வலியுறுத்துகின்றார்கள். சட்டப்படியாக, இயேசு தாம் யாரிடம் பேசுகின் றாரோ அவரது பண்புக்கு ஏற்ற வகையில் தமது அணுகுமுறையைத்

*தழுவியமைத்தார் என்று அவர்கள் நமக்கு நினைவூட்டுகின்றார்கள்.*[18] *ஆகையால் அவர்கள், இது கர்த்தருக்கும் அந்தப் பெண்ணுக்கும் இடையில் துரிதசிந்தையுடன் நகைச்சுவை உணர்வுடனும் நடைபெற்ற, நோக்கங் கொண்ட உயிர்த்துடிப்பான உரையாடல் என்று அவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். இயேசு இதை தமது கண்களைச் சிமிட்டிக் கொண்டே பேசினார் என்பதைக் கற்பனை செய்வதில் எனக்குப் பிரச்சனை எதுவும் இருப்பதில்லை. இந்த உரையாடலின் முடிவில் அவர் தமது முகத்தில் புன்னகையைக் கொண்டிருப்பார். இருந்தாலும் இதைவிட இன்னும் அதிகமான வரலாறு உள்ளது.*

*அந்தப் பெண்ணின் வேண்டுகோளுக்குக் கிறிஸ்துவின் பதிலுக்கான இன்னொரு சாத்தியக்கூற்றை நான் முன்மொழிய அனுமதியுங்கள். இவ்வரலாற்றின் முடிவில், இயேசு அந்த பெண்ணின் மகளான இளம் பெண்ணைக் குணமாக்கினார், இது இந்த நிகழ்ச்சியின் தொடக்கம் முதலாகவே அவரது நோக்கமாக இருந்தது என்று நான் நம்புகின்றேன். மற்றும், இவ்வரலாற்றின் முடிவில் அவரது வார்த்தைகளின் நோக்கங்கள், அந்தத் தாயின் விசுவாசத்தைப் பாராட்டுதலுடன் தொடர்புடையதாகவே காணப்படுகின்றன: "ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது" (மத். 15:28அ).* B. S. *டீன் அவர்கள், "அவளது விசுவாசம், பரிசேயர்களின் மாய்மாலத்திற்கும் கலிலேயர்களின் சலனபுத்திக்கும் பிற்பாடு புத்துணர்வைக் கொண்டு வருமளவுக்கு மிகவும் தாழ்மையானதாக, வெற்றி கொள்ளப்பட முடியாத தாக இருந்தது" என்று எழுதினார்.*[19] *தனிநபர்களின் விசுவாசம் பற்றி இயேசு இருமுறை மாத்திரமே இவ்விதமாகப் பாராட்டியுள்ளார் - அந்த இரு தனிநபர்களுமே புறஜாதியாராக இருந்தார்கள்: இந்த சீரோபேனிக்கியாவைச் சேர்ந்த பெண் மற்றும் ஒரு ரோம நூற்றுக்கு அதிபதி (மத். 8:10; லூக். 7:9).*

*வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், கடுமையானவைகளாகக் காணப்படும் இயேசுவின் வார்த்தைகள், அந்தப் பெண்ணின் விசுவாசத்தினு டைய ஆழத்தை அவரது சீஷர்களுக்குச் செயல்விளக்கப்படுத்துவதே ஒரு நோக்கமாக இருக்க வேண்டும். அவளது இருதயத்தைக் கர்த்தர் அறிந்திருந்த படியால் (யோவா. 2:25) அவளது விசுவாசத்தையும் அறிந்திருந்தார் என்பதை மனதில் வையுங்கள். பின்வரும் சாத்தியக்கூற்றை ஆழ்ந்து சிந்தியுங்கள்: இயேசு, இந்த வேளையை தமது அப்போஸ்தலர்கள் எதிர் காலத்தில் கொண்டிருக்க வேண்டிய விசுவாசத்தின் வகையைக் குறித்துக் குறிக்கோள் பாடம் என்ற வகையில் இதைப் பயன்படுத்துவதினால், கவலை தரும் இடையூறு ஒன்றை பயன்மிக்க இடையிசையாகத் திருப்பினார்.*[20] *பன்னிருவருக்கும் வரவிருந்த தொந்தரவுகளை அவர் அறிந்திருந்தார் (மத். 10:17, 18, 21, 22, 24, 25). அந்தப் பெண் கொண்டிருந்தது போன்ற விசுவாசத்தைக் கொண்டிருத்தலே அவர்கள் வெற்றியாளர்களாய் இருக்க முடிவதற்கான ஒரே வழியாக இருந்தது: அது, ஊக்கமிழந்துபோகவோ அல்லது தடுத்து நிறுத்தப்படவோ மறுத்துவிட்ட ஒரு விசுவாசமாக இருந்தது (1 யோவா. 5:4). நம் ஒவ்வொருவருக்கும் இந்தப் பாடம் அவசியமாக உள்ளது.*

*சிலவேளைகளில் நீங்கள் ஒரு தகுதிவாய்ந்த பணியில் ஈடுபட்டிருக்கும் போது, நீங்கள் செய்து கொண்டிருப்பதற்குச் சற்றும் தொடர்பற்ற வகையில்*

அல்லது சிறிதளவே தொடர்புடைய வகையில் ஒரு உதவிக்கான அழைப்பினால் இடைமறிக்கப்படலாம். அது நேரிடும்போது, அந்த இடைமறித்தலை எடுத்து, அதை ஒரு நேர்மறையான வழியில் பயன் படுத்துவது எப்படி என்று ஆழ்ந்து சிந்தியுங்கள். முன்பே சுட்டிக் காண்பிக்கப்பட்டபடி, முடிவு விளைவானது, நீங்கள் தொடக்கத்தில் செய்யத் திட்டமிட்டு இருந்தவற்றைக் காட்டிலும் கர்த்தருக்கு அதிகமான மகிமையைக் கொண்டு வரலாம்.

## கூட்டத்தினரால் இடைமறிக்கப்படுதல் (மத். 15:29-31; மாற். 7:31-37)

இயேசுவும் அவரது சீஷர்களும் கடைசியில் தீருவை விட்டுப் புறப்பட்டபோது, அவர்கள் உடனடியாக கலிலேயாவுக்குத் திரும்பி விடவில்லை. அதற்குப் பதிலாக, அவர்கள் இன்னமும் ஏரோதின் ஆட்சி எல்லைப் பகுதியைத் தவிர்த்தார்கள்,[21] அவர்கள் வடக்கே சீதோனை நோக்கியும், பின்பு மலைகள் மற்றும் யோர்தான் நதியின் தொடக்கப் பகுதி ஆகியவற்றின் குறுக்காகக் கிழக்கிலும் கடைசியில் "தெக்கபோலி நாட்டில்"[22] (மாற். 7:31) ஒரு தனிமையான பகுதிக்கு (மாற். 8:4) வந்து சேரும் வரையில் கலிலேயாக் கடலின் கிழக்குக் கரைப் பகுதியில் தெற்கு நோக்கியும் பயணம் செய்தார்கள்.

**கவலை தரும் இடைமறித்தல்**

கர்த்தர் தமது அடைவிடத்தை சென்று சேர்ந்தபோது, அவர் ஒரு மலையின் பக்கமாக ஏறிச் சென்று அமர்ந்தார் (மத். 15:29), அவர் தமது சீஷர்களுக்குப் போதிக்கவே இவ்வாறு அமர்ந்தார் என்பதில் சந்தேக மில்லை.[23] மீண்டும் ஒருமுறை அவர் இடைமறிக்கப்பட்டார்: ‘‘அப்பொழுது, சப்பாணிகள், குருடர், ஊமையர், ஊனர் முதலிய அநேகரை, திரளான ஜனங்கள் கூட்டிக்கொண்டு இயேசுவினிடத்தில் வந்து, அவர்களை அவர் பாதத்திலே வைத்தார்கள்"[24] (மத். 15:30அ).

இது, அசுத்த ஆவிபிடித்திருந்த இருவரை குணமாக்கியிருந்ததும், அவர் நாட்டை விட்டுச் சென்று விடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருந்ததுமாகிய அதே பொதுவான பகுதியாக இருந்தது (மாற். 5:17). குணமாக்கப்பட்ட மனிதர்களில் ஒருவரிடம் இயேசு, அவர்மீது ஆண்டவர் கிருபை காண்பித் திருந்த விதத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளும்படி அறிவுறுத்தியிருந்தார் (மாற். 5:19). உடனடியாக, அம்மனிதன், "இயேசு தனக்குச் செய்தவை களையெல்லாம் தெக்கப்போலி என்னும் நாட்டில் பிரசித்தம் பண்ணத் தொடங்கினான்," அவன் கூறியதைக் கேட்ட ஒவ்வொருவரும் ஆச்சரியப் பட்டார்கள் (மாற். 5:20). இம்மனிதரின் செய்தியினுடைய செயல்விளைவு, அப்பகுதியெங்கிலும் இருந்து இப்பொழுது உதவி நாடி வந்த ஆயிரக்கணக் கானவர்களில் (மாற். 8:3) காணப்படுகிறது. முன்பு, அந்தப் பகுதியில் இருந்த மனிதர்கள், "வெளியேறுக!" என்று கூறியிருந்தார்கள். இப்பொழுது அதே மக்கள் "எங்களுக்கு உதவுக!" என்று கெஞ்சிக் கொண்டிருந்தார்கள்.[25]

*பயன்மிக்க இடையிசை*

*தொடர்ந்து வந்த இந்த இடைமறித்தல்களினால் கிறிஸ்து சலிப்புற்று இருந்திருப்பாரென்றால், அதை அவர் வெளிக் காண்பிக்கவில்லை. இந்த வேளையில், அவர் இடைமறித்தலை, பெரும்பான்மையாய் புறஜாதி யாரைக் கொண்டிருந்த ஒரு கூட்டத்தினரின்[26] இருதயங்களுக்கு ஜீவனுள்ள மெய்யான தேவனைச் சுட்டிக் காண்பிக்கும் வாய்ப்பாகத் திருப்பினார்: "... அவர்களை அவர் சொஸ்தப்படுத்தினார். ஊமையர் பேசுகிறதையும், ஊனர் சொஸ்தமடைகிறதையும்,[27] சப்பாணிகள் நடக்கிறதையும், குருடர் பார்க்கிற தையும் ஜனங்கள் கண்டு, ஆச்சரியப்பட்டு, இஸ்ரவேலின் தேவனை மகிமைப்படுத்தினார்கள்"[28] (மத். 15:30ஆ, 31).*

*குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியை மாற்கு பதிவு செய்தார்: "கொன்னை வாயுடைய ஒரு செவிடனை"[29] குணமாக்கிய நிகழ்ச்சி (மாற். 7:32).*

> *அப்பொழுது, அவர் அவனை ஜனக்கூட்டத்தை விட்டுத் தனியே அழைத்துக் கொண்டுபோய், தம்முடைய விரல்களை அவனுடைய காதுகளில் வைத்து, உமிழ்ந்து[30] அவனுடைய நாவைக் தொட்டு, வானத்தை அண்ணாந்து பார்த்து, பெருமூச்சு விட்டு: "எப்பத்தா!"[31] என்றார், அதற்குத் "திறக்கப்படுவாயாக!" என்று அர்த்தமாம் (மாற். 7:33, 34).*

*அந்த மனிதனின் காதுகளில் இயேசு தமது விரல்களை வைத்தது ஏன்? அவர் துப்பியது ஏன்? இவைகள் நமக்குக் கூறப்படவில்லை. இதே போன்ற பிற குணமாக்குதல்களில் இந்தச் செய்கைகள் மீண்டும் செய்யப்படாததால், இவைகள் அவர் செய்த செயலுக்குச் சார்புடையவைகளாயிருந்தன. இதற்கு மறுபுறத்தில், விண்ணகம் நோக்கி அனுப்பப்பட்ட "ஆழமான பெருமூச்சு" குறிப்பிடத்தக்கதாக உள்ளது: இது கர்த்தர் உணர்வெதுவும் இன்றி இயந்திரத்தனமாக குணமாக்கவில்லை என்பதை நாம் அறியச் செய்கிறது;[32] அவரது இருதயமானது, உடல்ரீதியாக அல்லது ஆவிக்குரிய வகையில் வேதனைகளுடன் போராடிய ஒவ்வொரு நபரினாலும் தொடப்பட்டது. கிறிஸ்து, "இந்த உலகத்தில் ஒருக்காலும் கேட்க அல்லது பேச முடியாத பல இலட்சக்கணக்கான மக்களைப் பற்றிய நினைவின் காரணமாக" பெருமூச்சு விட்டிருக்கலாம் என்று ஒரு எழுத்தாளர் கூறினார்.[33]*

*இயேசு, "திறக்கப்படுவாயாக!" என்று கூறிய பின்பு, அந்த மனிதனின் "செவிகள் திறக்கப்பட்டு, அவனுடைய நாவின் கட்டும் அவிழ்ந்து, அவன் செவ்வையாய்ப் பேசினான்" (மாற். 7:35). மக்கள், "எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார் ... என்று சொல்லி, மேன்மேலும் ஆச்சரியப்பட்டார் கள்" (மாற். 7:37).*

*கடைசியில் இயேசு அப்பகுதியை விட்டுப் புறப்பட்டபோது, சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்த இருதயங்களைக் கொண்டிருந்த மக்களை விட்டுப் புறப்பட்டார்.[34] நீங்களும் நானும் இடைமறித்தல்களுக்குச் சரியான வழியில் மறுசெயல் செய்தால், நாம் கர்த்தரின் ஆவியைக் காட்சிப்படுத்துகிறவர்களாய் இருப்போம் - இது*

*நம்மை இடைமறிப்பவர்களுக்குச் சுவிசேஷத்தைப் போதிக்கக் கதவைத் திறக்கலாம். இதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்.*

## இடர்ப்பாட்டினால் இடைமறிக்கப்படுதல் (மத். 15:32-38; மாற். 7:36; 8:1-9)

*முன்பு இயேசு, தாம் குணமாக்கிய ஒரு மனிதரிடத்தில், நடந்தவற்றை எல்லாருக்கும் கூறும்படி அறிவுறுத்தியிருந்தார் (மாற். 5:19). இந்த வேளையில் அவர் தமது உரையைக் கேட்டவர்களிடத்தில், "அதை ஒருவருக்கும் சொல்ல வேண்டாமென்று ... கட்டளையிட்டார்" (மாற். 7:36அ) - ஏனென்றால், அவரது நோக்கம் மாற்றம் அடைந்திருந்தது. இப்போது அவர் தமது சீஷர்களுடன் தனித்திருக்க நேரம் அவசியமாகத் தேவைப்பட்டது.*

*வழக்கம்போலவே, அவரது வேண்டுகோள் கவனமாய்ப் பின்பற்றப் படவில்லை, மற்றும் அவரைப் பற்றிய புகழ்ச்சி அந்தப் பகுதி முழுவதிலும் பரவிற்று (மாற். 7:36ஆ - வைக் காணவும்). மக்களின் எண்ணிக்கையானது "திரளான ஜனங்கள் கூடிவந்திருக்கும்" அளவு வரையிலும் வளர்ந்தது (மாற். 8:1அ): இது "ஸ்திரீகளுக்கும் பிள்ளைகளுக்கும் தவிர ... புருஷர் நாலாயிரம் பேர்'' என்பதாயிருந்தது (மத். 15:38). அநேகமாக, எட்டு முதல் பன்னிரெண்டு ஆயிரம் வரைக்கும் அங்கிருந்திருக்கலாம், அவர்களில் சிலர் "தூரத்திலிருந்து வந்தவர்களா"க இருந்தார்கள் (மாற். 8:3).*

**கவலை தரும் இடைமறித்தல்**

*மீண்டும் ஒருமுறை இடைமறிக்கப்பட்டபோது - அந்த இடைமறித்தலானது மூன்று நாட்களாகத் தொடர்ந்திருந்த போதிலும், - இயேசு கிருபையுள்ளவராக இருந்தார் (மத். 15:32; மாற். 8:2). அந்த மூன்று நாட்களைப் பற்றிய விவரங்கள் நமக்குத் தரப்படவில்லை, ஆனால் அவர் தொடர்ந்து போதித்து குணப்படுத்தியிருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை.[35]*

*இதற்குமுன்பு கப்பர்நகூமில் இருந்து அவரைப் பின்தொடர்ந்திருந்தவர்களைப் போல் இன்றி,[36] இந்தக் கூட்டத்தில் இருந்தவர்கள் உணவுப் பொருட்களுடன் வந்திருப்பார்கள் - ஆனால் மூன்று நாட்களுக்குப் பின்பு, அவர்களிடம் இருந்த உணவுப் பொருட்கள் தீர்ந்து போய்விட்டன. அந்த வேளையில், இடையீட்டின் இயல்பு மாறிற்று: அவர்களுக்கு உணவு மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்பட்டது!*

**பயன்மிக்க இடையிசை**

*கர்த்தர் தமது இயல்பைத் தம்மிடம் தக்க வைத்துக் கொண்டிருந்த நிலையில், மீண்டுமாக, கவலை தரும் இடையூறு ஒன்றைப் பயன்மிக்க இடையிசையாக மாற்றினார். முந்திய ஒரு பாடத்தை மீண்டும் வலிவுபடுத்துவதற்கு, அவர் பிரச்சனையைத் தமது சீஷர்களிடத்தில் முதலில் முன்வைத்தார் (மத். 15:32; மாற். 8:1-3). அவர்கள் உண்மையில், "இந்த இக்கட்டான சூழ்நிலையை எவ்வாறு கையாள்வது என்ற கருத்து எதுவும் எங்களிடம் இல்லை" என்று கூறினார்கள் (மத். 15:33; மாற். 8:4)!*

ஐயாயிரம் பேர்களுக்கும் உணவளித்ததை அப்போஸ்தலர்கள் அவ்வளவு சீக்கிரத்தில் மறந்து போயிருக்கக் கூடும் என்பதை நம்புதலைச் சில விளக்கவுரையாளர்கள் கடினமான விஷயமாகக் காண்கின்றார்கள். அவர்கள், ஐயாயிரம் பேருக்கு உணவளித்தது மற்றும் நாலாயிரம் பேருக்கு உணவளித்தது ஆகியவை பற்றிய இரு விவரங்களும் ஒரு நிகழ்ச்சியின் மாறுபட்ட விவரங்களாக மட்டுமே உள்ளன என்று முடிவு செய்கின்றார்கள். இப்படிப்பட்ட ஒரு முடிவுக்கு நியாயப்படுத்தும் காரணம் எதுவும் இல்லை.

முதலாவது, இவ்விரு நிகழ்ச்சிகளையும் மத்தேயுவும் மாற்குவும் பதிவு செய்துள்ளார்கள் - மற்றும் அவர்கள் பல பத்தாண்டுகளினூடே கடந்து வந்திருந்த கதைகளைப் பதிவு செய்யவில்லை. மத்தேயு அப்போஸ்தலர் களில் ஒருவராக இருந்தபடியால், கண்ணால் கண்ட சாட்சி என்ற வகையில் அவர் இதை எழுதினார். மாற்குவின் சுவிசேஷ விவரமானது கண்ணால் கண்ட சாட்சியின் (அதாவது, அப்போஸ்தலர்களில் ஒருவரான பேதுருவின்[37]) சாட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பட்டதாகும்.

இரண்டாவது, இயேசு பிற்பாடு தம்முடைய சீஷர்களுக்கு புத்தி சொல்லும் வேளையில் இவ்விரு நிகழ்ச்சிகளையும் குறிப்பிட்டார் (மத். 16:9, 10; மாற். 8:19, 20).

மூன்றாவது, இவ்விரு நிழ்ச்சிகளுக்கும் இடையில் ஒற்றுமைகள் இருந்தபோதிலும், வேறுபாடுகளும் உள்ளன:

(1) இரு நிகழ்ச்சிகளும் நடைபெற்ற இடங்கள் மாறுபட்டவையாக இருந்தன. முதலில் அற்புத விதமான உணவளித்த நிகழ்ச்சி, கலிலேயாக் கடலின் வடக்கு முனைக்கு அருகில் நடைபெற்றது; இரண்டாவது நிகழ்ச்சி தெற்கு முனைக்கு அருகில் நடைபெற்றது.

(2) கூட்டம் மாறுபட்டதாக இருந்தது. முதலாவது கூட்டமானது பெரும்பான்மையும் யூதர்களைக் கொண்டிருந்தது; இரண்டாவது கூட்டமானது பெரும்பான்மையும் புறஜாதியார்களைக் கொண்டிருந்தது.

(3) கூட்டத்தின் அளவு மாறுபட்டதாக இருந்தது. ஐயாயிரம் ஆண்கள் எதிர். நாலாயிரம்.

(4) உள்ளடங்கியிருந்த காலம் மாறுபட்டதாக இருந்தது. முதலாவது கூட்டமானது ஒரு நாள் மட்டும் அங்கிருந்தது; இரண்டாவது கூட்டமானது மூன்று நாட்களாக அங்கிருந்தது.

(5) உணவுக்கான தேவையின் காரணம் மாறுபட்டதாக இருந்தது. முதலாவது கூட்டமானது உணவைக் கொண்டு வந்திருக்கவில்லை; இரண்டாவது கூட்டமானது உணவு தீர்ந்து போனதாயிருந்தது.

(6) அங்கு கிடைத்த ஆதாரமூலம் மாறுபட்டதாக இருந்தது. முதல் வேளையில் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் கிடைத்திருந்தன; இரண்டாவது வேளையில், ஏழு அப்பங்களும் ஒரு சில மீன்களும் கிடைத்திருந்தன.

(7) பயன்படுத்தப்பட்ட கருவிகள் மாறுபட்டவைகளாக இருந்தன. முதல் நிகழ்ச்சியில் பன்னிரெண்டு சிறு கூடைகள் பயன்படுத்தப்பட்டன; இரண்டாவது நிகழ்ச்சியில் ஏழு பெரிய கூடைகள்[38] பயன்படுத்தப்பட்டன.

*மற்ற வேறுபாடுகளும் குறிப்பிடப்பட முடியும்: முதல் கூட்டமானது புல்வெளியில் அமர்ந்தது (மத். 14:19; மாற். 6:39), இரண்டாவது கூட்டமானது தரையில் அமர்ந்தது (மத். 15:35; மாற். 8:6). முதலாவது கூட்டமானது இயேசுவை ராஜாவாக்க முயற்சி செய்தது; இரண்டாவது கூட்டத்திலிருந்து இதைப் போன்று பதில்செயல் வரவில்லை. வேதாகமம் ஏவுதல் பெற்றது என்று நம்புகின்ற எவரொருவரும், இவை இரண்டும் தனித்தனி நிகழ்ச்சிகள் என்று முடிவு செய்தாக வேண்டும். விஷயம் அதுவாக இருக்கும்போது, நாம் அப்போஸ்தலர்களின் பதில்செயலை எவ்வாறு விளக்கப்படுத்த முடியும்?*

*பொதுவாக அப்போஸ்தலர்கள் ஒரு புதிய சத்தியத்தை புரிந்து கொள்வதற்கு ஒன்றுக்கு அதிகமான முறைகள் தேவைப்பட்டிருந்தது.*[39] *நான் புதிதாக எதையாவது கற்றுக்கொள்வதற்கு முன்பு, கணிசமான அளவு திரும்பத் திரும்ப அவற்றைச் செய்ய வேண்டியுள்ளது என்பதை நான் ஒப்புக் கொண்டாக வேண்டும். இதை நீங்கள் ஒப்புக்கொண்டாலும் இல்லா விட்டாலும், உங்களைப் பொறுத்தமட்டிலும் கூட இதுவே உண்மையாக இருக்கலாம். இயேசு தமது மாணவர்களிடம் ஒரே வகையான சத்தியங் களுடன் திரும்பத் திரும்பச் செல்வதற்கு எவ்வளவு பொறுமையாக இருந்திருக்க வேண்டும்! பசி என்பது கிறிஸ்துவும் அவரது அப்போஸ்தலர் களும் அறிந்திராத ஒன்றாக இருந்ததில்லை என்பதையும் ஆழ்ந்து சிந்தியுங்கள்; சட்டப்படி, இயேசு பசியை ஒரு அற்புதத்தினால் நீக்கிப் போடவில்லை (யோவா. 4:6, 8, 31ஐக் காணவும்). மற்றும், பன்னிருவரும், ஐயாயிரம் பேருக்குக் கர்த்தர் உணவளித்ததைத் தொடர்ந்து அவரது கடிந்து கொள்ளுதலை (யோவா. 6:26, 27), அவர் மீண்டும் இவ்விதமான அற்புதம் ஒன்றைச் செய்யமாட்டார் என்பதற்கான சுட்டிக் காண்பித்தலாக எடுத்துக் கொண்டிருக்கலாம். இந்தக் காரணிகள் யாவற்றையும் கவனத்தில் கொள்ளும்போது, இவர்களின் பதில்செயலானது முதலில் தோன்றியதைப் போல் வினோதமாக நமக்குத் தோன்றுவதில்லை.*

*இவ்வரலாற்றின் எஞ்சிய பகுதியை நீங்கள் அறிவீர்கள்: மீண்டும் ஒருமுறை இயேசு அற்புதவிதமாக ஜனக்கூட்டத்திற்கு உணவளித்தார் (மத். 15:34-38; மாற். 8:5-9). இதை அவர் பசியைப் போக்குவதற்காக மட்டும் செய்யாமல், அவசியமான ஒரு பாடத்தைப் பன்னிருவருக்கும் கற்பிப்பதற் காகவும் செய்தார் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். (இதைப் பற்றி நாம் இன்னும் அதிகமாக அடுத்த பாடத்தில் படிப்போம்.)*

*இந்தக் கணத்திற்கு, பின்வருவதைக் கற்றுக் கொள்ளுங்கள்: இடைமறித்தல்கள் என்பது அவ்வப்போது உங்கள் முற்றான நோக்கத்தி லிருந்து வழிவிலக்குதலுக்கு மாறாக அதற்குப் பங்களிக்கக் கூடும். இவ்விதமாக, இடைமறித்தல்கள் வரும்போது, நீங்கள் ஏற்கனவே திட்டமிட்டுள்ளவைகளுடன் அவைகள் எப்படி பொருந்தலாம் என்பதைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். அப்போது, நீங்கள் திட்டமிட்டு இருந்ததைப் பார்க்கிலும் கர்த்தர் மேன்மையாகத் திட்டமிட்டு இருப்பதை நீங்கள் கண்டறியலாம்!*

## முடிவுரை

*இயேசு தமது சீஷர்களுடன் தனித்திருப்பதற்கான தமது விருப்பத்தை விட்டுவிடவில்லை. மக்களுக்கு உணவளித்த பின்பு, அவர்களை அனுப்பிய பின்பு கடலின் மேற்குப் பகுதிக்குப் படகில் பயணம் செய்தார் (மத். 15:39; மாற். 8:9, 10). ஆயினும், நீங்கள் இரண்டு உண்மைகளை நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும்: அதிகமான இடைமறித்தல்கள் வரும் (மத். 15:39; 16:1; மாற். 8:10, 11), மற்றும் அந்த கவலை தரும் இடைமறித்தல்களை பயன்மிக்க இடையிசைகளாகக் கிறிஸ்து எப்போதுமே மாற்றுவார்.*

*வாழ்க்கை என்பது, ''நாம் மற்ற திட்டங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கையில் மெய்மையில் நமக்கு என்ன நடக்கிறது என்பதாக உள்ளது''[40] என்று யாரோ ஒருவர் எழுதினார். அதை நாம் தழுவியமைத்து, "வாழ்க்கை என்பது கவன நிறைவுடன் நாம் ஏற்படுத்திய திட்டங்கள் இடைமறிக்கப்படும் போது நடைபெறுவதாக உள்ளது" என்று கூறமுடியும். இடைமறித்தல்கள் வரும்போது - மற்றும் அவை வரும் - நாம் அதிக இரக்கம் உள்ளவர்களாய் இருக்கத் தேவன் நமக்கு உதவுவாராக மற்றும் நாம் நமது வாழ்வில் தொல்லை தரும் இடைமறித்தல்களை வல்லமைமிகுந்த இடையிசைகளாக மாற்றுவது எப்படி என்று இயேசுவிடமிருந்து கற்றுக் கொள்ளத் தேவன் நமக்கு உதவுவாராக!*

## குறிப்புகள்

*நீங்கள் ஒரு நீண்ட தலைப்பை விரும்புவீர்கள் என்றால், இந்தப் பாடமானது, "கவலை தரும் இடையூறுகளைப் பயன்மிக்க இடைவேளை களாகத் திருப்புதல்'' என்று அழைக்கப்படக்கூடும். நீங்கள் ஒரு சிறிய தலைப்பை விரும்பினால், ''இடைமறித்தல்களைச் சமாளித்தல்'' என்ற தலைப்பை முயற்சி செய்து பாருங்கள்.*

***வரலாறு 1***

*இந்தப் பாடத்தைத் தொடர்ந்து, பாரம்பரியங்களை மீறியதற்காக இயேசுவின் சீஷர்களைப் பரிசேயர்கள் குற்றம் சாட்டுதல் பற்றிய ஒரு பிரசங்கத்தை நான் கொண்டிருந்தேன். அந்த வரலாறு பல்வேறு வழிமுறைகளில் அணுகப்படக் கூடும். இங்கு ஒரு மாற்றுத் தேர்வுள்ள ஒரு வரைக்குறிப்பு உள்ளது:*

I. *குற்றச்சாட்டு (மத். 15:1, 2; மாற். 7:1-5).*
II. *பதில் (மத். 15:3-9; மாற். 7:6-13).*
III. *நடைமுறைப் பயன்பாடு (மத். 15:10-20; மாற். 7:14-23).*

*''இயேசு பரிசேயர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கிய நாள்''[41] என்ற தலைப்பில் பின்வருவன போன்ற கருத்துக்களுடன் பிரசங்கிக்க முடியும்:*

I. *மனிதப் பாரம்பரியங்கள் தேவனுடைய வசனத்தை அடிக்கடி இடம் மாறச் செய்தன என்ற இயேசுவின் போதனையினால் பரிசேயர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள் (மத். 15:3-6).*

II. *வெளிப்படையான அடையாளங்கள் இரண்டாந்தரமானவைகளே என்ற அவர் போதனையினால் அவர்கள் அதிர்ச்சிஅடைந்தார்கள் (வ. 7, 8).*

III. *மனிதரால் அதிகாரத்துவப்படுத்தப்பட்ட ஆராதனை வீணானது என்ற அவரது போதனையினால் அவர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள் (வ. 9).*

IV. *கைகளின் சுத்தத்திற்கு மேலாக இருதயத்தின் நிலைப்பாடு அதிகம் முக்கியத்துவம் வாய்ந்தது என்ற அவரது போதனையினால் அவர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள் (வ. 10, 11, 15-20).*

V. *மனிதரால் ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்கள் அழிவுக்கு உட்படும் என்ற அவரது போதனையினால் அவர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள் (வ. 13).*

VI. *உண்மைத்தன்மை மட்டுமே போதுமானதல்ல என்ற அவரது போதனையினால் அவர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள் (வ. 14).[42]*

*ரிச்சர்டு ரோஜர்ஸ் அவர்கள் இந்த வரலாற்றைப் பற்றிப் போதித்த போது, முடிவில் அவர் பின்வரும் ஆவிக்குரிய பாடங்களைச் சுட்டிக் காண்பித்தார்:*

- *மனிதர்களின் பாரம்பரியத்தின்படி வாழ்கின்ற பக்தியுள்ள மக்களே பெரும்பாலும் சத்தியத்திற்கு விரோதிகளாக இருக்கின்றார்கள்.*
- *பாவம் செய்வதற்கும் தேவனுடைய வசனத்திற்குக் கீழ்ப்படி யாமைக்கும் நமக்குச் சாக்குப்போக்குக் கொடுக்கிற எந்த ஒரு மார்க்க அமைப்பைக் குறித்தும் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.*
- *இருதயத்தில் இருந்து வராமல், உதடுகளில் இருந்து மட்டும் வருகிற ஆராதனை பற்றி நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.*
- *உள்ளான மனிதன்மீது நாம் அதிக கவனம் செலுத்தினால், புறம்பான மனிதன் தேவன் விரும்பும் வண்ணமாக இருப்பான். உண்மையான பரிசுத்த தன்மையானது உள்ளிருந்து வருகிறது.*
- *பாரம்பரியத்திலிருந்து பிரிந்து வருதல் என்பது கடினமானதாக உள்ளது. நமக்குள் இருக்கும் ஏதோ ஒன்று நம்மைக் கடந்த காலத்தைப் பற்றிக்கொண்டிருக்கவும் மாற்றம் எதையும் ஏற்படுத்தாமல் இருக்கவும் விரும்பச் செய்கிறது. பேதுருவே கூட தமது பாடத்தை இருமுறை கற்றுக்கொள்ள வேண்டியதாக இருந்தது![43]*

*பரிசேயர்களின் குற்றச்சாட்டு பற்றிய வரலாற்றின் சிறு சிறு பகுதிகள் பிரசங்கங்களின் அடிப்படையாகப் பயன்பட முடியும். (1) எடுத்துக்*

*காட்டாக, "கொர்பான்" பற்றிய இயேசுவின் விவரிப்பானது "நாம் செய்ய வேண்டிய முறைப்படியாக நமது பெற்றோர்களை ஏன் பராமரிப்ப தில்லை?" என்ற ஒரு எடுத்துரைப்புக்கு அறிமுகமாகப் பயன்படுத்தப்பட முடியும். இனியும் நாம் கொர்பான் சாக்குப்போக்கைக் கொண்டிருப்ப தில்லை, ஆனால் மக்கள் இன்னமும் "உண்மையில் இது எனது பொறுப்பு அல்ல" என்பது போன்ற சாக்குப்போக்குகளைப் பயன்படுத்துகின்றார்கள். (2) ஏசாயாவின் புத்தகத்திலிருந்து ஒரு மேற்கோளானது ''வீணான ஆராதனை" என்ற ஒரு பிரசங்கத்திற்குப் பாடப்பொருளை அளிக்க முடியும். எவ்விதமான மற்றும் எல்லா ஆராதனையும் தேவனுக்கு ஏற்புடையவை களே என்று சிலர் நினைக்கின்றார்கள், ஆனால் இந்த வேத பாடப் பகுதியானது, தேவனுடைய வசனம் கனப்படுத்தப்படாமலோ அல்லது ஆராதனை என்பது இருதயத்திலிருந்து வராமலோ இருந்தால், அந்த ஆராதனை வீணானது அல்லது வெறுமையானது என்று அறிவிக்கிறது. முதல் கருத்தானது ஆராதனையின் புதிய ஏற்பாட்டு பாணியில் இருந்து மனிதரால் ஏற்படுத்தப்பட்ட விலகுதல்களைப் பற்றிப் பிரசங்கிக்க வாய்ப்பளிப்பதாக இருக்கும். இரண்டாவது கருத்தானது சபைக்கான பிரசங்கத்திற்குப் பயன்படுவதாக இருக்கும். (3) கடைசியாக, மத்தேயு 15:18-20அ-வும் மாற்கு 7:20-23ல் உள்ள கிறிஸ்துவின் வார்த்தைகள் "மனிதனைத் தீட்டுப்படுத்துவது எது?" என்ற கருத்தைப் பற்றிப் பிரசங்கிக்கப் பயன்படுத்தப்பட முடியும். பட்டியலிடப்பட்ட பாவங்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் பாடக்கருத்துக் களைப் பல விளக்கவுரைகள் கொண்டுள்ளன.*

***வரலாறு 2***

*சீரோபேனிக்கியா நாட்டுப் பெண்ணைப் பற்றிய விவரம் ஒரு மாபெரும் பிரசங்கத்தை ஏற்படுத்தும். இந்தப் பாடத்தில் சுட்டிக் காண்பிக்கப்பட்டபடி, நான் அந்த வரலாற்றைப் பெரிதும் விரும்புகின் றேன். இந்தத் தொடரில் அடுத்துவரும் பிரசங்கமானது அநேகமாக, நான் ''பாரம்பரியங்கள்''மீதான எடுத்துரைப்பின் அவசியத்தை உய்த்துணரா திருந்தால் அந்த நிகழ்ச்சியின்மீது கவனம் செலுத்துவதாக இருந்திருக்கும். அந்த நிகழ்ச்சி பற்றிய ஒரு பிரசங்கத்தின் முதல் பாதியானது அந்த வரலாற்றை நாடகபாணியில் மறுபடி உரைப்பதைச் சித்தரிக்கக் கூடும், அதே வேளையில் அதன் இரண்டாம் பாதியானது இயேசு ஏன் அவ்வாறு பேசினார் பின்பு அந்தப் பெண் கொண்டிருந்தது போன்ற விசுவாசத்தின் அவசியம் பற்றி நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்தினார் என்பதை ஆராய்வதாக இருக்கக் கூடும்.*

***வரலாறு 3***

*நாலாயிரம் ஆண்களுக்கு உணவளித்த அற்புதமானது ஐயாயிரம் ஆண்களுக்கு உணவளித்த அற்புதத்தினால் நிழலிடப்படுகிறது. பிந்திய இந்த நிகழ்ச்சி பற்றி எண்ணற்ற பிரசங்கங்கள் பிரசங்கிக்கப்பட்டு இருக்கின்றன, ஆனால் முந்திய நிகழ்ச்சி பற்றி ஒரு சில பிரசங்கங்களே பிரசங்கிக்கப் பட்டுள்ளன. இதற்கு முன்பு நீங்கள் ஐயாயிரம் பேருக்கு உணவளித்தது*

*பற்றிப் பிரசங்கிக்காதிருந்தால், நீங்கள் "மாறுபட்டவர்களாயிருக்க" விரும்பி, இந்த வேளையில் நாலாயிரம் பேர்களுக்கு உணவளித்தது பற்றி பிரசங்கிக்க விரும்பலாம். இவ்விரண்டில் எந்த ஒரு நிகழ்ச்சியைப் பயன்படுத்தியும் ஒரே விதமான அடிப்படைக் கருத்துக்களை ஏற்படுத்த முடியும்.*

**இன்னொரு சாத்தியக்கூறு**

*மாற்கு 7:37ன் பின்வரும் வாக்கியத்தில் இருந்து பிரசங்கங்கள் பிரசங்கிக்கப்பட்டுள்ளன: "[அவர்] எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார்." காட்சியமைவு குறிப்பிடப்பட்ட பின்பு, இந்தக் கூற்றின் பொதுவான சத்தியம் சுட்டிக் காண்பிக்கப்படலாம்: கர்த்தர் எப்போதுமே "விஷயங்களை நன்றாய்ச் செய்கின்றார்." பின்பு நீங்கள் வலியுறுத்த விரும்புகின்ற விசேஷித்த பகுதிகளைப் பொறுக்கியெடுக்கக் கூடும்: அவர் படைப்பில் நன்றாய்ச் செய்தார்; அவர் திருமணத்தையும் குடும்பத்தையும் நிலை நாட்டுவதில் நன்றாய்ச் செய்தார்; அவர் நமக்கு வேதாகமத்தைக் கொடுப்பதில் நன்றாய்ச் செய்தார்; அவர் நமக்காக மரிப்பதற்காக இப்பூமிக்கு வந்ததில் நன்றாய்ச் செய்தார்; அவர் இரட்சிப்புக்கான நிபந்தனைகளை நமக்குக் கொடுத்தபோது நன்றாய்ச் செய்தார்; அவர் தமது சபையை நிலைநாட்டியபோது நன்றாய்ச் செய்தார்; இன்னும் பிற.*

---

*குறிப்புகள்*

*[1]இந்தக் காலகட்டத்தின் நிகழ்ச்சிகளை மத்தேயு மற்றும் மாற்கு ஆகியோர் மாத்திரமே அடிப்படையில் பதிவு செய்தார்கள். [2]யோவான் 7:1 வசனம் பின்வரும் பகுதியுடன் இணைவு பெற்றுள்ளதுபோல் அதிகமாக யோவான் 6:4உடன் இணைவு பெற்றிராததாகவே காணப்படுகிறது. இவ்வசனம் அந்தப் பகுதியை அறிமுகப்படுத்துகிறது மற்றும் இயேசு தமது சகோதரர்களிடத்தில் கூடாரப் பண்டிகைக்குப் போகத் திட்டமிடவில்லை என்று கூறியது ஏன் என்பதை விளக்குகிறது. [3]உலகில் நான் வாழும் பகுதியில், அவர் பண்டிகையின்போது "ஒரு தாழ்மையான வெளிக்குறிப்பைக் காத்துக் கொண்டார்" என்று கூறுவதுண்டு. [4]இந்த நிகழ்ச்சி பற்றிய ஒரு முழுமையான கலந்துரையாடலுக்கு இந்தப் பாடத்தைத் தொடர்ந்து வரும் பிரசங்கத்தைக் காணவும். [5]நாம் அறிந்த வரையிலும், பரிசேயர்கள் இயேசுவுக்கும் அவரது சீஷர்களுக்கும் எதிராக இந்தக் குற்றச்சாட்டை மீண்டும் ஒருக்காலும் பயன்படுத்தவில்லை. அவரது விசாரணையின்போது இது நிச்சயமாகக் கொண்டு வரப்படவேயில்லை. [6]சீஷர்களிடத்தில் பரிசேயர்களைப் பற்றிய இயேசுவின் எச்சரிக்கைகள் தொடரும் - இதை நாம் அடுத்த பாடத்தில் காண்போம் (மத். 15:39-16:12; மாற். 8:10-21ஐக் காணவும்). [7]இந்த ஒப்புவமையை இயேசு முன்பே பயன்படுத்தியிருந்தார் (லூக். 6:39), மற்றும் இதை அவர் மீண்டும் பயன்படுத்துவார் (மத். 23:16, 24). [8]இந்தப் புத்தகத்தில் "பரிசேயர்கள் குற்ற உணர்வு அடைந்தபோது" என்ற துணைப்பாடத்தில் காணவும். [9]இயேசு பெனிக்கியாவுக்கு சுவிசேஷ ஊழிய நோக்கத்துடன் சென்றார் என்று சில எழுத்தாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றார்கள், ஆனால் மாற்கு 7:24 மற்றும் மத்தேயு 15:24 ஆகிய வசனங்கள் விஷயம் இதுவல்ல என்று சுட்டிக் காண்பிக்கின்றன. [10]தீருவும் பெனிக்கியாவும் யூத*

*மக்களின் பழங்கால வரலாற்றில் - நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் - பங்கு வகித்திருக்கின்றன.*

*[11]மூலபாஷை வசனத்தில் மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பில் "கிரேக்க [ஸ்திரீ]" என்றுள்ளது (KJVயில் காணவும்). புறஜாதியாரைப் பொதுவாகக் குறிப்பிடுவதற்குப் புதிய ஏற்பாட்டில் "கிரேக்கர்" என்ற சொற்றொடர் அடிக்கடி பயன்படுத்தப் படுகிறது. [12]இந்தச் சொற்றொடரை "மேசியா" என்ற வார்த்தை யோவான் 4:25ல் சமாரியப் பெண்ணினால் பயன்படுத்தப்பட்ட விதத்துடன் ஒப்பிடவும். [13]தொல்லை தரும் பிரச்சனைகளுக்கு இதுவே அவர்களின் "சர்வநோக்கமான தீர்வாக" இருந்தது (மத். 14:15ஐக் காணவும்). மத்தேயு 15:24ன் வெளிச்சத்தில், அவர்கள் இயேசுவிடம், அவள் அவர்களை விட்டுச் சென்று அவர்களைத் தனிமையில் இருக்க விடும்படி அவள் விரும்பியதைக் கொடுக்கும்படி கருத்துத் தெரிவித்திருக்கலாம். [14]"முந்தி" என்ற வார்த்தையானது, பிற்பாடு புறஜாதியார் தங்கள் வாய்ப்பைப் பெறுவார்கள் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது - இதுவே விஷயமாகவும் இருந்தது. [15]எல்லா மக்களுக்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும்படி பிரதான கட்டளையை கிறிஸ்து கொடுத்தபோது இது நடைபெற்றது (மத். 28:18-20; மாற். 16:15, 16). [16]பெனிக்கியாவில் உதவிக்கான வேண்டுகோள்களினால் அளவுக்கு அதிகமாகச் சூழ்ந்து கொள்ளப்பட்டிருக்கவும், அங்கு அவர் நிறைவேற்றும்படி நம்பிக்கையா யிருந்தவற்றினால் தடைப்படுத்தப்பட்டிருக்கவும் முடியும். [17]இப்பாடத்தின் அடுத்த பகுதியான "கூட்டத்தினரால் இடைமறிக்கப்படுதல்" என்ற பகுதியில் இன்னும் விளக்கம் தரப்பட்டுள்ளது. [18]யோவான் 3ல் யூதத்துவத் தலைவர்களிடத்தில் அவரது அணுகுமுறையை யோவான் 4ல் சமாரியப் பெண்ணிடத்தில் அவரது அணுகுமுறையுடன் நேரெதிராக ஒப்பிடவும். [19]B. S. டீன் அவர்களின் "வேதாகம வரலாற்றின் வரைக்குறிப்பு" என்ற புத்தகத்தில் காணவும். [20]இயேசு புறஜாதியாருக்கு உதவிய ஒவ்வொரு முறையும், தேவன் யூதரல்லாதவர்கள்மீதும் ஆர்வமுள்ளவராக இருக்கின்றார் என்ற சிந்தனையை அவர் நட்டிருக்கக் கூடிய பலத்த சாத்தியக்கூறும் உள்ளது.*

*[21]இயேசு கலிலேயாவில் இருந்து தெக்கப்போலிக்குச் செல்லவில்லை, மற்றும் இவ்விதமாக அவர் "பின்வாங்க" வில்லை என்ற உண்மை இருந்தபோதிலும், இதைச் சில ஒப்பீடுகள், "கலிலேயாவிலிருந்து இரண்டாம் முறை பின்வாங்குதல்" என்று அழைக்கின்றன மற்றும் பிற ஒப்பீடுகள் "கலிலேயாவிலிருந்து மூன்றாம் முறை பின்வாங்குதல்" என்று அழைக்கின்றன. இந்த காலகட்டத்தின்போது கிறிஸ்து ஏரோதுவின் எல்லைப் பகுதிகளைத் தவிர்த்தார் என்பதை அறிந்துகொள்வது போதுமானதாக உள்ளது. [22]"இயேசுவின் ஊழியத்தின்போது பலஸ்தீனம்" என்ற வரைபடத்தில் தெக்கப்போலி காண்பிக்கப்பட்டுள்ளது. [23]அந்த நாட்களில் போதித்தலுக்கு உட்காருதல் என்பது யூகிக்கப்பட்ட நிலைப்பாடாக இருந்தது (மத். 5:1, 2). [24]மூலபாஷை வேத வசனத்தில் "cast them down" ["கீழே வீசினார்கள்"] என்றுள்ளது (KJV மற்றும் ASV ஆகிய வசனப்பகுதிகளை ஒப்பிடவும்). அவர்கள் நோயுற்று இருந்தவர்களைத் தவறாக நடத்தினார்கள் என்று யூகிக்கக் கூடாது, ஆனால் அவ்வார்த்தைகள் அவர்களின் அவசரத் தன்மையையும் அக்கறையையும் சுட்டிக் காண்பிக்கின்றன. [25]நீங்கள் எதுகைச் சொற்றொடரை விரும்பினால், பின்வரும் சொற்றொடரைப் பயன்படுத்த விரும்பலாம்: முன்னதாக, அப்பகுதியில் இருந்த மனிதர்கள் "எங்கள் கரைகளில் இருந்து விலகுக!" என்று கூறியிருந்தார்கள், இப்பொழுது அந்த மக்கள் "எங்கள் நோயாளிகளைக் குணமாக்குக!" என்று வேண்டிக் கொண்டார்கள் "எங்கள் கரைகளைக் கை விடுக!" எதிர். "எங்கள் நோயாளிகளுக்கு உதவுக!" என்பது இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது. [26]கடலின் கிழக்குப் பகுதியில் முன்பு இருந்த கூட்டத்தாரை(ஐயாயிரம் பேர்களை)ப்*

பார்க்கிலும் இந்தக் கூட்டத்தார் மாறுபட்ட வகையாக இருந்தார்கள். அந்தக் கூட்டத்தார் இயேசுவைக் கப்பர்நகூமில் இருந்து பின்தொடர்ந்து வந்திருந்தார்கள், அவர்களில் பெரும்பான்மையானவர்கள் யூதர்களாக இருந்தார்கள். இந்தக் கூட்டத்தார் அப்பகுதியில் இருந்து வந்திருந்தார்கள், இவர்கள் அடிப்படையில் புறஜாதிகளாக இருந்தார்கள். [27]மூல வேதவசனப் பகுதியானது, "ஊனர்கள் முழுமையாக்கப்"பட்டார்கள் என்று கூறுகிறது (KJVயைக் காணவும்). The Living Bible என்ற வேதாகமம் பின்வரும் பொழிப்புரையுடன் இந்தச் சிந்தனையைப் பிரதிபலிக்கிறது: "கைகளையும் கால்களையும் இழந்திருந்தவர்கள் புதியவைகளைப் பெற்றுக் கொண்டார்கள்." இன்றைய நாட்களில் "குணமாக்கும் ஊழியம்" என்று அழைக்கப்படும் கூட்டங்களுக்கு கையிழந்த ஒரு மனிதரை நீங்கள் அழைத்துச் சென்றால் என்ன நடக்கும் என்பதை நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியுமா? [28]"இஸ்ரவேலின் தேவன்" என்ற சொற்றொடர், இது புறஜாதி மக்கள் கூட்டமாக இருந்தது என்பதற்கு இன்னுமொரு ஆதாரமாக உள்ளது. [29]பேசுவதில் இந்த மனிதருக்கிருந்த சிரமம், கேட்க முடியாமையினால் மட்டும் விளைந்தது அல்ல என்பது உறுதி. மாற்கு 7:35 வசனம், இவர் "தனது நாவில் ஒரு கட்டை" கொண்டிருந்தார் என்று கூறுகிறது. [30]NASBயில் "with the saliva" என்ற வார்த்தைகள் சாய்வெழுத்துக்களில் உள்ளன, இது இவ்வார்த்தைகள் மொழிபெயர்ப்பாளர்களால் கூட்டப்பட்டன என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. கிரேக்க வேத வசனத்தில் நேரடியாக, "உமிழ்ந்து, அவனுடைய நாவைத் தொட்டு" என்றுள்ளது. மூல வேத வசனமானது கிறிஸ்து எவ்விடத்தில் துப்பினார் என்றோ அல்லது அவர் தமது உமிழ் நீரைக் கொண்டு (ஏதேனும் செய்திருந்தால்) என்ன செய்தார் என்றோ சுட்டிக் காண்பிப்பதில்லை.

[31]இது ஒரு அரமாயிக் சொற்றொடராக உள்ளது. [32]உலகில் நான் வாழும் பகுதியில், நாங்கள் "அவர் தமது குணமாக்கும் வல்லமைகளைத் தானியங்கு விமான ஓட்டியாக/வழிகாட்டியாக அமைக்கவில்லை" என்று கூறுவதுண்டு. [33]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 403. McGarvey's reference was to Frederic W. Farrar, *The Life of Christ* (New York: Cassell & Co., 1885), 229-30. [34]சபையானது எருசலேமிலிருந்து சிதறியபோது (அப். 8:1-4), கிறிஸ்தவர்கள் பலஸ்தீனத்தைச் சுற்றிலுமிருந்த பகுதிகளுக்குச் சென்றார்கள் (அப். 8:2, 5; 11:19). யோவான் ஸ்நானன், இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் ஆகியோர் முன்பு செய்திருந்த ஊழியத்தின் காரணமாக அம்மக்களில் பலரின் இருதயங்கள் [சுவிசேஷத்தை] ஏற்றுக்கொள்ளக் கூடியவைகளாக இருந்தன. [35]இதை, அவர் இதற்கு முன்னதாக ஐயாயிரம் பேர்களிடத்தில் செய்த செயலுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும் (மாற். 6:34; மத். 14:14). [36]மத்தேயு 14:13, 14; மாற்கு 6:32-34; லூக்கா 9:10, 11 ஆகிய வசனங்களை வாசிக்கவும். மேலும் அந்த வசனங்களின்மீது இப்புத்தகத்தில் இதற்கு முன்னுள்ள "சோதனைக்கான காலம்" மற்றும் "மக்களுக்கு உண்மையிலேயே உதவி தேவைப்படும்போது" என்ற பாடங்களில் தரப்பட்டுள்ள விளக்கவுரைகளையும் மறுகண்ணோட்டமிடவும். [37]"கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில் "மாற்கு எழுதிய சுவிசேஷம்" என்ற பாடத்தை மறுகண்ணோட்டமிடவும். [38]இரண்டாவது முறை உணவளித்தது தொடர்பாக, "கூடை" என்பதற்கு மாறுபட்ட கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. நாலாயிரம் பேருக்கு உணவளித்த நிகழ்ச்சி பற்றிய எடுத்துரைப்பில் "கூடை" என்பதற்கான வார்த்தை "ஒரு *பெரிய* கூடை" என்று அர்த்தப்படுகிறது. இந்தக் கூடைகள் சிலவேளைகளில் ஒரு மனிதரைப் பிடிக்கக் கூடிய அளவுக்குப் பெரியவைகளாய் இருந்தன. [39]J. W. மெக்கார்வீ அவர்கள், "முந்திய அனுபவம் ஒன்று இருப்பினும், ஒரு அற்புதத்தை எதிர்பார்க்கத் தவறுதல் என்பது இஸ்ரவேல் ஜனங்கள் மற்றும் பன்னிருவர் ஆகியோரின்

*வரலாற்றில் பொதுவாக நடந்ததாக இருந்தது* [*எண். 11:21-23; சங். 78:19, 20 ஆகியவற்றைக் காணவும்*]*" என்று எழுதினார்* (McGarvey and Pendleton, 405). [40]Robert Lawrence Balzer, quoted in Leonard Louis Levinson, *Webster's Unafraid Dictionary* (New York: Collier Books, 1967), 138.

[41]*பிற்பகுதியில் வரும்"பரிசேயர்கள் குற்ற உணர்வடைந்தபோது" என்ற துணைப்பாடத்தில் காணவும்.* [42]Adapted from Alger Fitch, *Preaching Christ* (Joplin, Mo.: College Press, 1992), 79. [43]Richard Rogers, *Behold Your King (Book of Matthew)* (Lubbock, Tex.: Sunset Study Series, n.d.), 19.

## 44

# மோசமாகிப்போன ஒரு நல்ல கருத்து

## மாத். 15:1-6; மாற். 7:1-5; 9-13, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*Fiddler on the Roof என்ற நாடகத்தில், ஒரு யூதத் தகப்பன், இளம் தலைமுறையினர் பழைய வழிகள் பற்றி எவ்வளவு குறைவாக அக்கறை கொள்ளுகின்றார்கள் என்பதினால் அதிர்ச்சியடையும்போது, அவர் "பாரம்பரியம், பாரம்பரியம்!" என்பது பற்றி ஒரு பாடலைப் பாடுகின்றார். இந்தக் காட்சியை நான் கவனிக்கும் ஒவ்வொரு முறையும், அதில் ஈடுபடும் ஒவ்வொருவருக்காகவும் பரிதாபப்படுகின்றேன்: அவர்கள் கருத்துணர்வு எதையும் ஏற்படுத்தாத பழக்க வழக்க முறைமைகளினால் சலிப்புற்று இருக்கும் இளம் மக்களும், தனக்கு நன்கு பழக்கமான உலகமானது நழுவிச் செல்வதைக் காணும்போது மனமுடைந்து போகும் முதிர்வயது மனிதருமே.*

*அந்த நாடகத்தில் வரும் தகப்பன் தனது நாட்களில் உள்ள ஒரு சில பாரம்பரியங்களுக்கான அறைகூவலினால் குழம்பியிருப்பாரென்றால், அவர் இன்றைய நாட்களில் எவ்வாறு உணருவார் என்று கற்பனை செய்து பாருங்கள். அநேக காலங்கள் கனப்படுத்தப்பட்ட பாரம்பரியங்கள் இதற்கு முன் ஒருபோதும் இவ்வளவு குறுகிய காலத்தில் - இவற்றிற்குப் பதிலாக சிறிதளவே நிரந்தரத் தகுதியுள்ளவற்றினால் இடம் மாற்றப்பட்டு - புறம்பே தள்ளி வீசப்பட்டதில்லை. மக்கள் வாழ்க்கைக்கு அர்த்தத்தைத் தேடும்போது, ''தாங்கள் யார்'' என்பதைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யும்போது, களைந்து எறியப்பட்ட மதிப்புக்களைத் தவிர்த்து, இது ஒரு குழப்பத்தின் காலமாய் இருக்கிறது.*

*இது சமுதாயத்தில் மட்டுமின்றி மதத்திலும் உண்மையாக உள்ளது. சிலரைப் பொறுத்தமட்டில், "பாரம்பரியமானது" எதுவும் தானாகவே தவிர்த்து ஒதுக்கப்பட வேண்டியதாக உள்ளது, மற்றவர்கள் கடந்த காலத்தைப் பற்றிக்கொள்ள நம்பிக்கையிழந்த வகையில் முயற்சி செய்கின்றார்கள். பாதுகாப்பும் புத்தியுள்ளதுமான இடைநிலைக்களம் ஒன்று உள்ளதா? அப்படியொன்று இருந்தால், அது என்ன? பாரம்பரியங்கள் எப்போது நல்லவையாக உள்ளன, மற்றும் அவை எப்போது மோசமானவை யாக உள்ளன? நாம் வாழும் குழப்பம் நிறைந்த உலகில் ஒரு சில கேள்விகளே மிகவும் முக்கியமானவைகளாய் இருக்கின்றன.*

*பாரம்பரியங்கள் பற்றி வேதாகமத்தில் உள்ள மிக நீண்ட கலந்துரையாடல் - இயேசு தமது சீஷர்கள் "முன்னோர்களின் பாரம்பரியங்களை" மீறுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டிற்கு எதிராகத் தற்காப்புவாதம் செய்த வேளையில் - மத்தேயு 15 மற்றும் மாற்கு 7 ஆகிய அதிகாரங்களில் உள்ளன. இவ்விரு வசனப்பகுதிகளும் பல்வேறு வழிமுறைகளில் அணுகப்பட முடியும்,[1] ஆனால் நாம் இவற்றை இந்த மற்றும் இதற்கு அடுத்த பிரசங்கங்களில், சற்று முன்பாக முன்மொழியப்பட்ட கேள்விகளுக்குப் பதில்களைக் கண்டறியப் பயன்படுத்துவோம்.*

*இந்தப் பிரசங்கங்கள் தயாரிப்பதற்கு மிகவும் கடினமானவைகளாக இருந்துள்ளன. நாம் ஒரு பாரம்பரியத்தை எப்பொழுது விடாப்பிடியாகப் பற்றிக்கொள்ள வேண்டும் மற்றும் எப்பொழுது அதை விட்டுவிட மனவிருப்பத்துடன் இருக்க வேண்டும் என்று அறிவது எப்போதுமே சுலபமானதாக இருந்ததில்லை. கடைநிலைகளைத் தவிர்க்கும் நிலைப்பாடுகளைக் கண்டறிதல் என்பது நமக்குக் கடினமானதாக உள்ளது - மற்றும் அங்கே தரித்திருப்பது என்பது இன்னும் அதிக கடினமானதாக உள்ளது. இந்தக் கொள்கைகளை நமக்கு நடைமுறைப்படுத்திக் கொள்வதைக் காட்டிலும் பிறருக்கு நடைமுறைப்படுத்துதல் என்பது மிகவும் சுலபமானதாக உள்ளது. இயேசுவால் கண்டனம் பண்ணப்பட்ட பாரம்பரியக் கொள்கையின் வகையிலிருந்து நம்மில் எவரும் விதிவிலக்கானவர்கள் அல்ல.[2] இவ்வகையான பிரசங்கங்கள் சுயபரிசோதனை மற்றும் ஆய்வைச் செய்யும்படி கூக்குரலிடுகின்றன.*

## ஒரு பாரம்பரியம் மோசமானதாக இருக்கக் கூடும் *(மத். 15:1, 2; மாற். 7:1-5)*

*ஒருநாள், இயேசு கப்பர்நகூமில் போதித்துக் கொண்டிருக்கையில்,[3] அவர் பரிசேயர்களின் குழு ஒன்றினால் அணுகப்பட்டார். இவர்கள், அவரை எல்லா இடங்களிலும் பின்தொடர்ந்து கொண்டிருந்த சாதாரண வகைப்பட்ட[4] பரிசேயர்கள் அல்ல; இவர்கள் இயேசுவின் அழிவைத் துரிதப்படுத்துவதற்காக அவரது தொண்டையை இறுக்கிப் பிடிப்பதற்காக[5] எருசலேமில் இருந்து அனுப்பப்பட்ட, வாக்குவாதம் செய்பவர்களாயிருந்தார்கள்.[6] கிறிஸ்து ஓய்வுநாளை மீறுகின்றார் என்ற குற்றச்சாட்டு எதிர்த்தாக்குதலைக் கொண்டிருந்ததென்று நிரூபிக்கப்பட்டிருந்ததால்,[7] அவர்கள் ஒரு புதிய குற்றச்சாட்டை முயற்சி செய்தார்கள். அவர்கள், "உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை ஏன் மீறி நடக்கிறார்கள்? கை கழுவாமல் போஜனம் பண்ணுகிறார்களே" என்று கேட்டார்கள் (மத். 15:2).*

### *"பாரம்பரியம்" விளக்கியுரைக்கப்படுகிறது*

*இந்தக் குற்றச்சாட்டைப் புரிந்துகொள்வதற்கு, நீங்கள் "முன்னோர்களின் பாரம்பரியம்" என்றால் என்ன என்பதையும் அது பரிசேயர்களுக்கு அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது ஏன் என்பதையும் அறிய வேண்டும். "பாரம்பரியம்" என்ற வார்த்தை, "வழிவழியாகக் கையளிக்கப்*

பட்டது" என்று அர்த்தம் தருகின்ற ஒரு கிரேக்கக் கூட்டு வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டதாக உள்ளது.[8] மத்தேயு 15:2ல் குட்ஸ்பீடு அவர்கள் இவ்வார்த்தையை "கையளிக்கப்பட்ட சட்டங்கள்" என்று மொழிபெயர்த்துள்ளார்.[9]

இவ்வார்த்தை வேதாகமத்தில் தேவனிடத்திலிருந்து "கையளிக்கப் பட்டு" இருந்த போதனைகளை (அதாவது, ஏவுதல் பெற்ற போதனை; 1 கொரி. 11:2; 2 தெச. 2:15; 3:6) குறிப்பதற்கு அவ்வப்போது பயன்படுத்தப் பட்டது. இது மிகவும் அடிக்கடி, *மனிதர்களிடமிருந்து* கையளிக்கப்பட்ட விதிமுறைகளைக் குறிக்கிறது (மத். 15:2, 3, 6; மாற். 7:3, 5, 8, 9, 13; கலா. 1:14; கொலோ. 2:8). இன்றைக்கான சத்தியம் புத்தகங்களில் அடிக்கடி பயன்படுத்தப்படும் சொற்றொடர்கள் "மனிதரால் ஏற்படுத்தப்பட்ட பாரம்பரியம்" மற்றும் "ஏவுதல் பெற்றிராத பாரம்பரியம்" உட்பட, பாரம்பரியத்தின் இவ்வகையைச் சுட்டிக் காண்பிக்கின்றன. இந்த மற்றும் இதற்கு அடுத்த பிரசங்கங்களில், பெரும்பாலான வேளைகளில் நான் "பாரம்பரியம்" என்ற வார்த்தையை மனிதர்களிடமிருந்து தோற்றம் பெற்ற பாரம்பரியங்கள் என்ற அதன் அதிகம் பொதுவான அர்த்தத்தில் பயன்படுத்துவேன்.

பரிசேயர்கள் "மூப்பர்களின் பாரம்பரியம்" என்பது பற்றிப் பேசினார்கள். "மூப்பர்கள்" என்ற சொற்றொடர் ஜெப ஆலய அதிகாரி களைக் குறிப்பதாக இருப்பதில்லை (லூக். 7:3[10]), ஆனால் கடந்த காலத்தில் வாழ்ந்திருந்தவர்களும் நியாயப்பிரமாணத்தில் வல்லுநர்கள் என்று கருதப் பட்டிருந்தவர்களுமான மனிதர்களைக் குறிக்கிறது.[11] பல நூற்றாண்டு களாக, மதிப்புப் பெற்ற யூதத்துவ போதகர்கள், மோசேயின் நியாயப் பிரமாணத்தைப் பற்றி விளக்கங்களையும் தீர்மானங்களையும் தரவழைத் திருந்தார்கள். அந்த போதனைகள் "வாய்மொழிச் சட்டம்" அல்லது "பாரம் பரியம்" என்று அறியப்பட்டு கணிசமான அளவுக்கு வளர்ந்திருந்தன.[12]

எழுதப்பட்ட நியாயப்பிரமாணத்துடன் மோசே தாமே "வாய்மொழிப் பிரமாணத்தையும்" கொடுத்திருந்தார் என்று பரிசேயர்கள் போதித்தார் கள்,[13] மற்றும் இந்த "வாய்மொழிப் பிரமாணம்" மாபெரும் போதகர்களால் பின் தலைமுறையினருக்கு கையளிக்கப்பட்டது என்று பரிசேயர்கள் போதித்தார்கள். "பாரம்பரியம்" என்பது நியாயப்பிரமாணத்தைப் போலவே அல்லது அதை விட அதிகமாகவே கட்டுப்படுத்துகிறது என்று பரிசேயர்கள் கருதினார்கள். வார்ரென் வயர்ஸ்ப் அவர்கள், பாரம்பரியத் தின்மீது வைக்கப்பட்ட வலியுறுத்தத்தைப் பின்வருமாறு காண்பித்தார்:

> ரபீ எலெயேசர், "பாரம்பரியத்திற்கு எதிராக வேத வசனங்களை விளக்கி உரைப்பவர் இனிவரும் உலகில் பங்குடையவராய் இருப்பதில்லை" என்று கூறினார். *தல்மூத்தில்* உள்ள யூதப் பாரம்பரியங்களின் தொகுப்பான *மிஷ்னா* என்பது, "வேதவாக்கியங் களுக்கு முரண்பாடாக எதையும் போதித்தலைக் காட்டிலும், ரபீக்களின் குரலுக்கு எதிராக எதையும் போதித்தல் என்பது மாபெரும் குற்றமாக உள்ளது" என்று பதிவு செய்துள்ளது.[14]

''பாரம்பரியத்தின்'' ஒழுங்கு முறைகள் நியாயப்பிரமாணத்தைச் சுற்றியமைந்த "வரப்பு" என்றே நினைக்கப்பட்டன: "பாரம்பரியத்தை" ஒருவர் ஒருக்காலும் மீறியதில்லை என்றால், அவர் நியாயப்பிரமாணத்தை ஒருக்காலும் மீறமாட்டார் என்பதே கருத்தாக இருந்தது. இது துவக்கத்தில் ஒரு மோசமான கருத்தாயிருந்ததில்லை, ஆனால் சட்டங்கள் பெருக் கெடுத்து ஆயிரக்கணக்கில் பெருகின மற்றும் வினோதமான கற்பனை உருவாக ஆகும் வரையிலும் மாற்றம் அடைந்தன. இது மோசமாகிப்போன ஒரு நல்ல கருத்தாக இருந்தது.

**"பாரம்பரியம்" வற்புறுத்தப்பட்டது**

உணவு உண்பதற்கு முன்பு கைகளைக் கழுவுதல் பற்றிய "பாரம்பரியம்" என்பது நல்லதொரு உதாரணமாக இருக்கிறது. சடங்காச்சாரமான சுத்தமின்மை பற்றி பழைய ஏற்பாடு அதிகம் கூறியுள்ளது. (லேவி. 11-15 மற்றும் எண். 19 ஆகியவற்றை வாசிக்கவும்.) சட்டப்படியாக, இந்த "சுத்தமின்மை" என்பது சுகாதாரம் பற்றிச் சிறிதளவே செயல்படுவதாக, ஆனால் மனிதன் தேவனை அணுகுவதற்கான அவனது தகுதி பற்றி அதிகம் செயல்படுவதாக இருந்தது. சுத்தமின்மையை நீக்குவதற்கான சில சடங்காச் சாரங்கள் கழுவுதலை உள்ளடக்கியிருந்தன.[15] மூல நியாயப்பிரமாணங்கள் போதுமான அளவு சிக்கலானவைகளாக இருந்தன, ஆனால் நூற்றாண்டு களினூடாக, சடங்காச்சாரமான அசுத்தம் மற்றும் சடங்காச்சாரமான கழுவுதல் ஆகியவை, கணக்கிடுவதற்கு எண்ணற்றவைகள் ஆகுமளவுக்கு மனிதர்கள் இந்த ஒழுங்கு முறைமைகளுடன் ஏராளமானவற்றைச் சேர்த்திருந்தார்கள்.[16]

"அசுத்தமானவை" என்று கருதப்பட்ட பொருட்கள், சூழ்நிலைகள் மற்றும் சந்தர்ப்பங்கள் ஆகியவை பற்றிய பரிசேயர்களின் பட்டியல் ஏறக்குறைய முடிவற்றதாக இருந்தன. மற்றும், "சுத்தமின்மை" என்பது நீங்கள் விரும்பினால், மாற்றப்படக்கூடியதாக - தொற்றிப் பரவக்கூடியதாக - இருந்தது. எடுத்துக்காட்டாக, (சுண்டெலி போன்ற) சுத்தமில்லாத உயிரினம் ஒரு கோப்பையைத் தொட்டுவிட்டால், அந்தக் கோப்பை "சுத்த மற்றதாக" ஆயிற்று. அந்தக் கோப்பையில் வைப்பதெல்லாம் "சுத்தமற்றதாக" ஆயிற்று. அந்தக் கோப்பையில் இருப்பதை எவராவது ஒருவர் உண்டால், அவர் "சுத்தமற்றவராக" ஆனார். "சுத்தமற்ற" அந்த நபரை எவரேனும் தொட்டுவிட்டால், அவரும் "சுத்தமற்றவர்" ஆனார். "சுத்தமற்ற" இந்தச் சுற்றமானது மேலும் மேலும் தொடர்ந்தது.

இவ்விதமாக மாற்கு, ''ஏனெனில், பரிசேயர் முதலிய யூதர் அனைவரும்[17] முன்னோர்களின் பாரம்பரியத்தைக் கைக்கொண்டு, அடிக்கடி [கவனமாக] கை கழுவினாலொழியச் சாப்பிட மாட்டார்கள்" (மாற். 7:3அ) என்று வலியுறுத்தினார். ["கவனமாக" என்ற வார்த்தை தமிழ் வேதாகமத்தில் இல்லை.] "கவனமாக" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை ''கை முஷ்டியுடன்'' என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது.[18] The Life and Times of Jesus the Messiah என்ற புத்தகத்தில், ஆல்ஃப்ரெட் எடெர்ஷெய்ம் அவர்கள், கழுவும் சடங்குகள் பற்றி விரிவாக

*விவரித்துள்ளார். அந்த விவரங்களில் ஒரு சில இங்கு தரப்படுகின்றன:*

> *சுத்திகரித்தல் என்பவை மிகவும் அடிக்கடி நடந்தவைகளாயிருந்தன என்ற வகையில், மற்றும் தண்ணீர் பிறநோக்கங்களுக்குப் பயன் படுத்தப்பட்டிராதிருந்தது என்பதைக் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டிருந்த நிலையில், ... அந்த நோக்கத்திற்காகப் பெரிய பாத்திரங்கள் அல்லது ஜாடிகள் வைக்கப்பட்டிருந்தன ... ஒன்றரை "முட்டைக் கூடுகள்" கொள்ளத்தக்க அளவுக்கு தண்ணீரை இவற்றில் இருந்து முகந்தெடுப்பது பழக்கமாய் இருந்தது ... தண்ணீரானது இரு கைகளிலும் ஊற்றப்பட்டது ... முழுக்கைகளும் கழுவப்பட்டதை உறுதி செய்து கொள்ளும் வகையில் தண்ணீரானது மணிக்கட்டுகள் மீது வழிந்தோடும்படிக்குக் கைகள் உயர்த்தப்பட்டன, மற்றும் கைகளின் மூலமாக மாசுபடிந்த அந்தத் தண்ணீரானது மீண்டும் விரல்களில் வழிந்தோட அனுமதிக்கப்படாது இருந்தது. இது போலவே, ஒவ்வொரு கையும் இன்னொரு (முட்டியினால்) தேய்த்துத் துடைக்கப்பட்டது, அவ்வாறு துடைக்கும் கை ஏற்கனவே கழுவப் பட்டிருந்தால் மட்டுமே அதற்குப் பயன்படுத்தப்பட்டது.*[19]

*மேலும் மாற்கு, பரிசேயர்கள் "கடையிலிருந்து வரும்போதும் ஸ்நானம் பண்ணாமல் சாப்பிட மாட்டார்கள்" என்றும் குறிப்பிட்டார் (மாற். 7:4அ). கடைவீதியிடத்தில் இருந்த பல பொருட்கள் அவர்களை தீட்டுப்படுத்தி யிருக்கக் கூடும். அவர்கள், சுத்தமற்ற புறஜாதியார்களைத் தொட்டிருக்க லாம் - அல்லது சுத்தமற்ற புறஜாதியாரால் தொடப்பட்டிருந்த சுத்தமற்ற தூசானது அவர்கள்மீது படிந்திருக்கலாம்! அவர்கள் கடையிலிருந்து வீட்டிற்கு வந்தபோது, அவர்கள் தங்கள் கைகளை மட்டும் கழுவிக் கொள்வதில்லை; மாறாக அவர்கள் தங்கள் உடல் முழுவதையும் கழுவி[குளித்து]க் கொள்வார்கள். வேறு வார்த்தைகளில் சொல்லுவ தென்றால், அவர்கள் உண்பதற்கு முன்பு குளிப்பார்கள்.*

*மாற்கு, "அப்படியே செம்புகளையும் கிண்ணங்களையும் செப்புக்குடங் களையும் மணைகளையும் கழுவுகிறதுமல்லாமல்,[20] வேறு அநேக ஆசாரங் களையும் கைக்கொண்டுவருவார்கள்" என்றும்கூட குறிப்பிட்டார் (மாற். 7:4ஆ). இந்தக் கழுவுதலுக்கு சுகாதாரம் என்பது நோக்கமாயிருந்ததில்லை, ஆனால் சடங்காச்சாரமான சுத்தம் என்பதே நோக்கமாயிருந்தது என்பதை நினைவில் வையுங்கள். ஒழுங்குமுறைகள் எண்ணிக்கையற்றவைகளும் நம்ப இயலாத அளவுக்குச் சிக்கலானவைகளுமாய் இருந்தன.*

***"பாரம்பரியம்" மதிக்கப்படாதிருந்தது***

*நீங்கள் இவை எல்லாவற்றையும் மனதில் வைத்து, பரிசேயர்கள் இயேசுவின் அப்போஸ்தலர்களின் முரட்டு மற்றும் ஆயத்தமான வாழ்வுப் பாணியை எப்படி மதித்திருப்பார்கள் என்பதை நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியும். சீஷர்களுக்கு உண்பதற்கும்கூட நேரம் இருக்கவில்லை (மாற். 6:31), "முன்னோர் பாரம்பரியத்தில்" குறிப்பிடப்பட்ட விரிவான சடங்காச்சார ரீதியான கழுவுதல்களைச் செய்வதற்கு மிக மிக குறைவான நேரமே இருந்தது. அப்போஸ்தலர்கள் தானிய வயலில் இருந்து கதிரைக்*

கொய்து, கைகளினால் நிமிட்டி தங்கள் வாய்களில் போட்டுக் கொள்பவர் கள் என்றும்கூட அறியப்பட்டிருந்தார்கள் (மத். 12:1-8)![21] ஆகையால், “அவருடைய சீஷரில் சிலர் கழுவாத அசுத்த கைகளாலே போஜனம் பண்ணுகிறதை அவர்கள் கண்டு குற்றம்பிடித்தார்கள்” (மாற். 7:2), அவர்கள் இயேசுவிடம் “உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை மீறி, ஏன் கை கழுவாமல் சாப்பிடுகிறார்கள்?” என்று கேட்டார்கள் (மாற். 7:5).

## எப்பொழுது ஒரு பாரம்பரியம்[22] மோசமானதாக இருக்கிறது (மத். 15:3-6; மாற். 7:9-13)

சுயநீதியான, சுயத்திற்கு ஊழியம் செய்த பரிசேயர்களிடம் இயேசு தமது பொறுமையை இழந்தார்.[23] அவர்களின் குற்றச்சாட்டை மறுக்கவோ அல்லது அதற்கு நேரடியாகப் பதில் அளிக்கவோ கூட அவர் கவலைப் படவில்லை.[24] அதற்குப் பதிலாக அவர், அவர்கள்மீது ஒரு குற்றச்சாட்டை நிலைப்படுத்தினார்:

> நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்? “உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக” என்றும்; “தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்படவேண்டும்” என்றும், தேவன் கற்பித்திருக் கிறாரே. நீங்களோ, எவனாகிலும் தகப்பனையாவது தாயையாவது நோக்கி: “உனக்கு நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் காணிக்கையாகக் கொடுக்கிறேன்” என்று சொல்லி, தன் தகப்பனை யாவது தன் தாயையாவது கனம்பண்ணாமற்போனாலும், அவனு டைய கடமை தீர்ந்ததென்று போதித்து, உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கி வருகிறீர்கள் (மத். 15:3-6).[25]

இதற்கு முன்பே நான், தொடக்கத்தில் பாரம்பரியங்கள், மோசேயின் நியாயப்பிரமாணத்தைச் சுற்றி ஒரு வரப்பை இடுவதை, நியாயப்பிரமாணம் மீறப்படாதிருத்தலை உறுதிப்படுத்த உதவுதலை நோக்கமாகக் கொண்டு இருந்தன என்று குறிப்பிட்டிருந்தேன். ஆயினும் காலங்கள் கடந்தபோது, புதிய விதிகள் பெருகியபோது அவைகள் தொடக்க கால நியமங்களுடன் உறவுபட்டிருத்தலில் படிப்படியாகக் குறைவுபடத் தொடங்கின - கடைசியில் அவைகள் அந்தக் கட்டளைகளுக்கு முரண்பாடாகச் செல்லும் அளவுக்குக் கூட இவ்வாறு குறைவுபட்டன.

### மோசமாக இருந்த ஒரு பாரம்பரியம்

கிறிஸ்து இதற்குப் பல உதாரணங்களைக் கொடுத்திருக்க முடியும் (மாற். 7:13ஆ), ஆனால் அவர் ஒன்றே ஒன்றை மட்டும் கூறி, தம்மை எல்லைக்கு உட்படுத்திக் கொண்டார்: “ ‘உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக’ என்றும்; ‘தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன்[26] கொல்லப்பட வேண்டும்’ என்றும், தேவன்[27] கற்பித்திருக்கிறாரே” (மத். 15:4). இந்தக் கட்டளைகளில் முதலாவதானது தொடக்க காலப் பத்து

*கட்டளைகளில் ஒன்றாக இருந்தது (யாத். 20:12; உபா. 5:16). இரண்டாவது கட்டளையானது பத்து கட்டளைகளின் விரிவாக்கப்பட்ட மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரமாணங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது (யாத். 21:17; லேவி. 20:9). இந்த இரண்டு கட்டளைகளும் தனிநபர் ஒருவர் தனது பெற்றோர்களுடன் கொண்டுள்ள உறவுமுறையின் நேர்மறை மற்றும் எதிர்மறை அம்சங்களை உள்ளடக்கிற்று: அவர் [ஒரு தனிநபர்] தமது தந்தையையும் தாயையும் மதித்துப் பாராட்ட வேண்டும். இது அவர்கள் முதிர்வயதாகும்போது அவர்களின் தேவைகளைக் கவனித்தலையும் உள்ளடக்கிற்று (நீதி. 23:22; 1 தீமோ. 5:8). அவர் மரியாதைக் குறைவைச் சுட்டிக்காண்பிக்கும் எதையும் செய்யக் கூடாதிருந்தது.*

*துரதிர்ஷ்டவசமாக, மனிதரால் ஏற்படுத்தப்பட்ட பாரம்பரியமொன்று, அந்தக் கட்டளைகளை ஒன்றுமற்றதாக்கும்படி பரிணமித்திருந்தது. இயேசு தம்மீது குற்றம் சுமத்தியவர்களைக் கண்டித்தபோது அவரது கண்கள் பளிச்சிட்டு இருக்க வேண்டும்:*

> *நீங்கள் உங்கள் பாரம்பரியத்தைக் கைக்கொள்ளும்படிக்குத் தேவனுடைய கட்டளைகளை வியர்த்தமாக்கினது நன்றாயிருக்கிறது. எப்படியெனில், ‘‘உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக” என்றும் ... மோசே சொல்லியிருக்கிறாரே, நீங்களோ, ஒருவன் தன் தகப்பனையாவது தாயையாவது நோக்கி: “உனக்கு நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் கொர்பான் என்னும் காணிக்கையாகக் கொடுக்கிறேன்” என்று சொல்லிவிட்டால் அவனுடைய கடமை தீர்ந்தது என்று சொல்லி, அவனை இனி தன் தகப்பனுக்காவது தன் தாய்க்காவது யாதொரு உதவியும் செய்ய ஒட்டாமல்; நீங்கள் போதித்த உங்கள் பாரம்பரியத்தினால் தேவ வசனத்தை அவமாக்குகிறீர்கள் (மாற். 7:9-13அ).*

*‘‘கொர்பான்’’ என்பது ‘‘காணிக்கை’’ அல்லது ‘‘கொடை’’ என்று அர்த்தப்படுகிற ஒரு அரமாயிக் வார்த்தையாகும். ஒரு யூதர் தாம் உடைமையாகக் கொண்டுள்ளவற்றில் குறிப்பிட்ட ஒரு பகுதியை “கொர்பான்” என்று, அதாவது தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ‘‘ஒரு கொடை’’ என்று நேர்ந்துகொள்ள முடிந்திருந்தது. அந்த ஆதாரமூலங்கள் அவரது மரணம் வரையிலும் அவரது உடைமையாகவே நிலைத்திருக்கும் - அவர் மரணமடையும் வேளையில், அவைகள் தேவாலயத்தின் உடைமையாகிவிடும் - ஆனால் அவர் உயிருடன் உள்ள வரையிலும், அந்த உடைமைகள் தொடக்கூடாதவைகளாகக் கருதப்படும்.[28] இயேசுவைப் பொறுத்தமட்டில், ஒரு மனிதன் இப்படிப்பட்ட பொருத்தனையை ஏற்படுத்தியிருந்தால், பரிசேயர்கள் “இனியும் அம்மனிதனை அவனது தகப்பன் அல்லது தாய்க்கு ஏதொன்றையும் செய்ய அனுமதிக்க மாட்டார்கள்.” ரபீக்கள் பின்வருமாறு கூறுவது வழக்கம்: “இது பெற்றோர்களுக்கும் கடினமானதாக உள்ளது, ஆனால் சட்டம் தெளிவாக உள்ளது, பொருத்தனைகள் காக்கப்பட வேண்டும்.’’[29]*

*பின்வருவதை உங்கள் மனதில் சித்தரித்துப் பாருங்கள்: ஒரு ஆணும் ஒரு*

*பெண்ணும் தங்கள் மகன் வீட்டிற்குச் செல்லுகின்றார்கள். அந்தப் பெண் அழுது கொண்டிருந்தாள். அந்த ஆண் கவலையுள்ளவராகக் காணப் படுகின்றார். அவர்கள் கதவைத் தட்டுகின்றார்கள். அவர்களின் மகன் அவர்களின் தட்டுதலுக்குப் பதில் அளித்தபோது, அவர்கள் கவலையுடன், "நாங்கள் எங்களுக்குச் சொந்தமாயிருந்த எல்லாவற்றையும் இழந்து விட்டோம்.[30] நீயே எங்களின் கடைசி நம்பிக்கையாக இருக்கின்றாய். நீ எங்களுக்கு உதவ முடியாதென்றால், நாங்கள் பிச்சை எடுக்க வேண்டும் அல்லது பட்டினி கிடக்க வேண்டும்" என்று கூறுகின்றார்கள். அவர்களை அந்த இளைஞன், இகழ்ச்சி நிறைந்த வெறுப்புடன் உற்றுப் பார்க்கின்றான்: அவர்கள், அவனை இவ்வுலகத்திற்குக் கொண்டுவந்த, அவனது குழந்தைப் பருவத்தில் அவனைப் போஷித்து பராமரித்த அவனது பெற்றோராவார்கள். அவர்களிடத்தில் அவன், "மன்னிக்கவும், நான் உங்களுக்கு உதவ முடியாது! உங்கள் முதிர்வயதில் உதவுவதற்கென்று நான் கொஞ்சம் பணத்தைச் சேமித்து வைத்திருந்தேன், ஆனால் ஒரு பரிசேயர் சில நாட்களுக்கு முன்பு இங்கு வந்து, அந்தப் பணத்தை கொர்பான் என்று அறிவிப்பதில் உள்ள நிதிநிலை அனுகூலங்களைச் சுட்டிக்காண்பித்தார். எனவே, நல்வரவு, சென்று வாருங்கள்! உங்களுக்கு தேவையானவற்றைப் பெற வேறு ஏதாவது வழிபார்த்துக் கொள்ளுங்கள், இனியும் என்னிடத்தில் உதவி கேட்டுக் கொண்டு இவ்விடம் வராதீர்கள்!" என்று கூறி, அவர்களின் முகங்களில் அவன் தன் வீட்டுக் கதவை அறைந்து மூடுகின்றான்.*

*இப்படிப்பட்ட ஒரு காட்சியைச் சித்தரிப்பதற்குக்கூட எனக்குச் சங்கடமாக உள்ளது. இதற்கொத்த கவலைமிகுந்த நிகழ்வுகள் கர்த்தர் இந்த பூமியில் மனிதராக வாழ்ந்த நாட்களில் நடைபெற்றது என்பது உறுதி. இயேசு தமது குற்றச்சாட்டின் இப்பகுதியைப் பின்வருமாறு முடித்தார்: "உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கி வருகிறீர்கள்" (மத். 15:6ஆ). மாற்குவின் கூற்றுப்படி, "இது போலவே நீங்கள் மற்றும் அநேக காரியங்களையும் செய்கிறீர்கள்"[31] (மாற். 7:13ஆ).*

**நல்லவைகளாய் இருக்கிற பாரம்பரியங்கள்**

*பாரம்பரியங்கள் - மனிதரால் ஏற்படுத்தப்பட்ட பாரம்பரியங்களும் கூட - தன்னிலேயே தவறானவைகளாய் இருக்க வேண்டும் என்று அவசியமில்லை என்பதைக் குறிப்பிட நான் இங்கு சற்றே தாமதிப்பது அவசியமாக உள்ளது. மனிதரால் ஏற்படுத்தப்பட்ட பாரம்பரியச் சடங்காச்சாரங்களில் தேவனு டைய மனிதர்கள் கர்த்தருடைய அங்கீகாரத்துடன் ஈடுபட்டதற்கான வேதாகம ரீதியான உதாரணங்கள் உள்ளன. யூதமக்களின் வாழ்வில் - அவர்களின் பாரம்பரியமான திருமணங்களில், சவஅடக்கங்கள் மற்றும் இவை போன்றவற்றில் - இயேசுவின் ஈடுபாட்டைப் பற்றி நினைத்துப் பாருங்கள். [தேவாலயப் பிரதிஷ்டைப்] பண்டிகையின்போது கிறிஸ்து கலந்துகொண்டதை (யோவா. 10:22)ப் பற்றி நினைத்துப் பாருங்கள், இந்த பண்டிகை யூதர்களுக்குள், பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் தொடங்கப்பட்ட ஒரு பண்டிகையாக இருந்தது.[32]*

*பாரம்பரியம் என்பது நமது வாழ்வில் முக்கியமான பகுதியாகச்*

*செயல்படுகிறது. இது நமது வாழ்விற்கு ஒரு தொடர்ச்சியைக் கொடுத்து வேறு வகையில் நாம் தவற விடக்கூடிய விஷயங்களுக்குச் சுவையையும் பரிமாணத்தையும் கொடுக்கிறது. சமீபத்திய ஆண்டுகளில், சமூகவியலாளர் கள், தனிநபர் ஒருவர் "வேர்களைக்" கொண்டிருத்தல் என்பது, அவரது மனரீதியான நல் இருப்புக்கு முக்கியமானது என்று வலியுறுத்தியுள்ளார்கள். மக்கள் ஒரு குழுவாக, ஒரு சபையாகக்கூட, குறிப்பிட்ட சில விஷயங் களைப் பாரம்பரிய முறைப்படி செய்வதில் தவறு இல்லை - ஆனால் அதில் தேவனுடைய சித்தம் மீறப்பட்டிருக்கக் கூடாது.*

**மறுக்க இயலாத வகையில் மோசமாக உள்ள பாரம்பரியங்கள்**

*இது நம்மை, "எப்பொழுது ஒரு பாரம்பரியம் மோசமானதாக இருக்கிறது?" என்ற கேள்விக்குத் திரும்பக் கொண்டு வருகிறது. இயேசுவின் முதல் பதில் பின்வருமாறு சொல்லாக்கப்பட முடியும்: "அந்தப் பாரம் பரியம், தேவனால் விளக்கியுரைக்கப்பட்டுள்ள ஒரு கட்டளையை மீறும் பொழுது." பரிசேயர்கள் தங்கள் பாரம்பரியத்தினால் தேவனுடைய கட்டளையை மீறியிருந்தார்கள் என்று கிறிஸ்து சொன்னார் (மத். 15:3), அவர்கள் தங்கள் பாரம்பரியத்தைக் கைக்கொள்ளும்படிக்குத் தேவனுடைய கட்டளைகளை வியர்த்தமாக்கினார்கள் (மாற். 7:9), தங்கள் பாரம்பரியத் தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கினார்கள் (மத். 15:6; மாற். 7:13) என்று கிறிஸ்து கூறினார். கர்த்தர் பரிசேயர்களை "மாயக்காரர்" என்று அழைத்தார் (மத். 15:7; மாற். 7:6) ஏனென்றால், சீஷர்கள் "முன்னோர்களின் பாரம்பரியத்தைக் கைக்கொள்வதில்லை" என்று பரிசேயர் குற்றம் சாட்டி யிருந்த அதே வேளையில், அவர்கள் தாங்களே "தேவனுடைய பாரம்பரியத் திற்குக் கீழ்ப்படியாமல் போயிருந்தார்கள்!"*

*மதரீதியாக நான் என்னைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கும்படி போதிக்கப் பட்டிருந்தேன். மற்றும், நான், அமெரிக்காவில் சுதந்திரமான சிந்தனை ஊக்குவிக்கப்பட்டிருந்த பகுதியில் வளர்ந்தேன். ஆகவே, மிக முக்கியமான சபைகள் ஏறக்குறைய முழுவதுமாக பாரம்பரியங்களினால் கட்டப் பட்டிருந்த (மற்றும் கட்டப்பட்டு இருக்கிற) ஆஸ்திரேலியாவில் நான் பத்து ஆண்டுகளாக வாழ்வதற்கு முன்பு வரையிலும், பரிசேயர்களுக்கு இயேசு கூறிய இவ்வார்த்தைகளை முற்றிலும் நான் புரிந்துகொள்ளவில்லை.[33] இந்த நாமகரணக் கூட்டங்கள் வேதாகம அதிகாரத்தை பலவீனப்படுத்துகிற போதனை அதிகாரத்தைப் பற்றிய பாரம்பரியங்களை (2 தீமோ. 3:16, 17ஐ வாசிக்கவும்); ஞானஸ்நானம் பற்றிய வேதாகமரீதியான போதனையை அவமாக்குகின்ற "பச்சிளம் குழந்தைகளின் ஞானஸ்நானம்" பற்றிய பாரம் பரியங்களை (மாற். 16:15, 16); கிறிஸ்தவ சபைகூடி வருதலை விட்டு விடாதிருக்கும்படியான அறிவுறுத்தலை ஒன்றுமற்றதாக்குகிற நடைமுறை நோக்கங்கள் யாவற்றுக்குமான "விசேஷித்த நாட்களை" (எபி. 10:25); இன் னும் பிறவற்றைப் பின்பற்றுகின்றன. J. W. மெக்கார்வீ அவர்கள், "சில கட்டளைகளை அதிக அல்லது குறைந்த அளவுக்கு அவமாக்கும்படியான கூடுதல் அல்லது சேர்க்கை என்பது [தேவனால் வெளிப்படுத்தப்பட்ட அவரது சித்தத்திற்கு] அநேகமாக ஒன்றுகூட இருப்பதில்லை" என்று எழுதினார்.[34]*

## முடிவுரை

*நம்மில் பெரும்பான்மையானவர்கள், தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் போகச் செய்யும் மனிதரால் ஏற்படுத்தப்பட்ட பாரம்பரியம் எதுவும் தவறானதாக உள்ளது என்பதை அநேகமாக ஒப்புக் கொள்ளுகின்றவர்களாய் இருப்போம். ஆயினும், இயேசு தமது குற்றச்சாட்டை இன்னும் முடிக்காது இருந்தார். நமது அடுத்த பிரசங்கத்தில், ஒரு பாரம்பரியம் நல்லதா அல்லது மோசமானதா என்பதைத் தீர்மானிப் பதற்கு கிறிஸ்து கொடுத்த இன்னும் இரண்டு அடிப்படைத் தத்துவங்களை நாம் கலந்துரையாடுகையில் தமது படிப்பு இன்னும் அதிகமாக தனிப்பட்டதாக நமக்குச் சொந்தமானதாக ஆகும்.*

*இந்தப் பிரசங்கத்திலிருந்து நீங்கள் எதையும் தக்க வைத்துக் கொள்ளா திருந்தாலும், பின்வரும் சத்தியத்தை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன்: நம்மைத் தேவனுடைய கற்பனைக்குக் கீழ்ப்படிவதிலிருந்து விலக்கக் கூடிய ஏதொன்றையும் நாம் அனுமதிக்கக் கூடாது. நீங்கள் இன்னும் கிறிஸ்தவராகாது இருந்தால், நீங்கள் பின்வரும் எளிய மற்றும் தெளிவான கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன்: இயேசுவை விசுவாசியுங்கள், உங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்புங்கள், உங்கள் இருதயத்தில் உள்ள விசுவாசத்தை அறிக்கையிடுங்கள், மற்றும் கர்த்தருக்குள் ஞானஸ்நானம் (முழுக்காட்டுதல்) பெறுங்கள் (யோவா. 3:16; அப். 17:30; ரோமர் 10:9, 10; அப். 2:38; கலா. 3:26, 27). நீங்கள் தேவனுக்கு உண்மையற்ற ஒரு பிள்ளையாக இருந்தால், நீங்கள் ஆதியிலே கொண்டிருந்த அன்பில் மீண்டும் கட்டி எழுப்பப்பட வேண்டும் என்று உங்களை நான் வேண்டிக் கொள்ளுகின்றேன் (கலா. 6:1; யாக். 5:19, 20; அப். 8:22; யாக். 5:16).*

*கர்த்தரிடம் வருவதற்குப் பல வழிகள் உள்ளன என்ற பொய்யைச் சாத்தான் விற்றிருக்கின்றான், ஆனால் இயேசு, "நானே வழி" என்று கூறியுள்ளார் (யோவா. 14:6; வலியுறுத்தம் என்னுடையது[35]) தேவனுடைய நிச்சயமான வார்த்தைகளுக்குப் பதிலாக மனிதர்களுடைய போதனைகளை வைக்காதீர்கள்!*

## குறிப்புகள்

*பாரம்பரியம் பற்றிய இயேசுவின் போதனை பற்றிய எனது நடப்பித்தலில் முற்றாயிருக்க நான் முயற்சி செய்ததால், இது ஒரு இரண்டு பகுதிப் பிரசங்கமாயிற்று. நீங்கள் ஒருவேளை இதன் முதல் பகுதியை ஞாயிறு காலையிலும் இரண்டாம் பகுதியை ஞாயிறு மாலையிலும் பிரசங்கிக்க விரும்பலாம். நீங்கள் இந்த இரு பிரசங்கங்களில் ஒன்றை விரும்பித் தேர்ந்துகொண்டு, உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு மிகவும் நடைமுறைப் பயன்பாடாக இருப்பதை வலியுறுத்த விரும்பலாம்.*

*உங்கள் எடுத்துரைப்பின் ஒரு பகுதிக்கு, நீங்கள், பாரம்பரியம் மற்றும் சத்தியம் ஆகியவற்றை நேரெதிராக ஒப்பிடும் அட்டவணை ஒன்றைப் பயன்படுத்த விரும்பலாம். நீங்கள் தொடங்குவதற்கு என்று (பல்வேறு*

*ஆதாரமூலங்களில் இருந்து திரட்டப்பட்ட) சில சிந்தனைகள் இங்கு உள்ளன:*

*மனிதர்களிடமிருந்து வந்த* **பாரம்பரியம்** *(தவறாக பயன் படுத்தப்படும்போது)*

*மனிதர்களைப் பிரியப்படுத்துகிறது (கலா. 1:14ஐக் காணவும்)*
*புறம்பானவற்றை வலியுறுத்துகிறது*
*மேலோட்டமானதாக உள்ளது*
*சடங்காச்சாரங்களை வலியுறுத்துகிறது*
*வெறுமையான வார்த்தைகளை உண்டாக்குகிறது*
*வசனத்தை இடம் மாற்றுகிறது*
*அடிமைத்தனத்தில் முடிகிறது*

*தேவனிடமிருந்து வந்த* **சத்தியம்** *(பயன்படுத்தப்படும்போது)*

*தேவனைப் பிரியப்படுத்துகிறது*
*உள்ளானவற்றை வலியுறுத்துகிறது*
*அடிப்படையானதாக உள்ளது*
*நீதியை வலியுறுத்துகிறது*
*மாற்றப்பட்ட வாழ்வை உண்டாக்குகிறது*
*வசனத்தை உயர்த்துகிறது*
*விடுதலையில் முடிகிறது (யோவா. 8:31, 32)*

---

*குறிப்புகள்*

*[1]மற்ற அணுகுமுறைகள், முந்திய பாடத்தைத் தொடர்ந்துள்ள குறிப்புகள் என்ற பகுதியில் வரைக்குறிப்பிடப்பட்டன. [2]கடந்த காலப் பாரம்பரியங்கள் பயனற்றவை என்று கூறுபவர்கள் நாளைய பாரம்பரியங்களை நிலைநாட்டுவதில் மும்முரமாக இருக்கின்றார்கள் என்பதை அறியப் போதுமான அளவுக்கு நீண்ட காலமாக நான் சபையின் வரலாறு பற்றிப் படிக்கின்ற மாணவனாக இருந்துள்ளேன் - மற்றும் அவர்கள் ஏதாவது ஒரு மதவாதி என்ற வகையில் தங்கள் கருத்துக்கள் "சரியான வழியில்" இருத்தல் பற்றி பிடிவாதமானவர்களாய் இருக்க முடியும். [3]இது, ஐயாயிரம் பேருக்கு உணவளித்தது மற்றும் தண்ணீரின்மீது நடந்தது ஆகிய அற்புதங்களுக்குப் பின்பு உடனடியாக நடைபெற்றது (மத். 14:15-33); அந்த அற்புதங்களைத் தொடர்ந்து இயேசு கப்பர்நகூமில் இருந்தார் என்பதை யோவான் 6:17, 59 வசனங்கள் சுட்டிக் காண்பிக்கின்றன. [4]உலகில் நான் வாழும் பகுதியில்,* "These were not the run-of-the-mill Pharisees" *என்றோ அல்லது,* "These were not the garden-variety Pharisees" *என்றோ நான் கூறுவதுண்டு. நீங்கள் வாழும் இடங்களில் "சாதாரணமானது" என்று அர்த்தப்படுவதற்கு நீங்கள் வண்ணமிகு சொற்றொடர் ஒன்றைக் கொண்டிருக்கலாம். [5]இந்த விவரிப்பான சொற்றொடர் சுய விளக்கம் கொண்டதாக உள்ளது: பிற விலங்குகளைக் கொன்று உண்ணும் ஒரு விலங்கானது இன்னொரு விலங்கைக் கொல்ல விரும்பும்போது, அது பெரும்பாலும் தொண்டையிலேயே தாக்குகிறது. [6]இது பின்வரும் உண்மைகளின்*

*அடிப்படையிலான ஒரு யூகித்து உணருதலாக உள்ளது: (1) பரிசேயர்கள் அவரைக் கொலை செய்வதற்குச் சாக்குப்போக்கு ஒன்றைத் தேடிக் கொண்டிருந்தார்கள் (யோவா. 5:18; 7:1 ஆகியவற்றைக் காணவும்) மற்றும் (2) இந்தப் பரிசேயர்கள் அவரைக் குற்றம் சாட்டுவதற்காகவே எருசலேமிலிருந்து வந்திருந்தார்கள். இவர்களை ''தலைநகரிலிருந்து வந்த அதிர்ச்சித் துருப்புகள்'' என்று* R. C. *ஃபோஸ்டெர் அவர்கள் அழைத்தார்* (*Studies in the Life of Christ* [Grand Rapids, Mich.: Baker Book House, 1971], 664). [7]*"கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில் உள்ள "கூட்டத்தின் புயல்" என்ற பாடத்தை மறுகண்ணோட்டமிடவும். இயேசுவின் விரோதிகள் வெற்றியின்றி இருந்த மற்ற குற்றச்சாட்டுகளையும் முயற்சி செய்தார்கள்.* [8]*Paradosis என்பது கிரேக்கக் கூட்டுவார்த்தையாக உள்ளது. Para என்பது "உடனருகில்" என்று வழக்கமாக அர்த்தப்படுகிற முன்னிடைச் சொல்லாக இருக்கையில், dosis என்பது ''கொடுத்தல் (அல்லது மாற்றுதல்)'' என்று அடிப்படையில் அர்த்தப்படுத்துகிறது. கிரேக்கக் கல்வியாளர்களின் கூற்றுப்படி, para மற்றும் dosis என்பவற்றின் இணைவு "மற்றவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட (கையளிக் கப்பட்ட)து" என்று குறிப்பிடுகிறது.* (An explanation is given in W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words,* ed. John R. Kohlenberger III with James A. Swanson [Minneapolis: Bethany House Publishers, 1984], 1159-60.) *மாற்கு 7:13ல் இந்த வார்த்தையின் பெயர் மற்றும் வினை ஆகிய இரு வடிவங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளது. வசனத்தின் இப்பகுதி* NASB*யில் "நீங்கள் கையளித்துள்ள உங்கள் பாரம்பரியம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* [9]Edgar J. Goodspeed and J. M. Powis Smith, *The Short Bible: An American Translation* (New York: Modern Library, 1933), 347. [10]*இந்தப் புத்தகத்தில் "நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா?" என்ற பாடத்தின் தொடக்கத்தில் காணவும்.*

[11]*பிற்பாடு நாம் மத்தேயு 19:3-9ஐப் படிக்கும்போது, அந்த மனிதர்களில் இருவரான ஹில்லல் மற்றும் ஷம்மாய் என்பவர்களைப் பற்றிச் சுருக்கமாகக் கலந்துரையாடுவோம்.* [12]*இந்தப் பாரம்பரியங்கள் மிஷ்னா (அல்லது மிஷ்னாஹ்) என்று அறியப்பட்ட ஒரு தொகுப்பாக மூன்றாம் நூற்றாண்டில் ஒன்றுகூட்டப்பட்டன. மூன்றாம் நூற்றாண்டின் முடிவில், இது தல்மூத் என்று அழைக்கப்பட்ட அதிக விவரங்களைக் கொண்ட ஒரு புத்தகமாக பெருக்கப்பட்டு இருந்தது. தல்மூத் என்பது இன்றைய நாட்களில்கூட யூதத்துவ ரபீக்களால் அதிகாரத்துவம் உடையதென்று கருதப்படுகிறது.* [13]*இது உண்மையற்றதாக உள்ளது. இன்றைய நாட்களில் உள்ள பல்வேறு மதக்குழுக்கள் இதைப் போன்ற ஒரு உரிமைகோருதலை ஏற்படுத்துகின்றன, இவைகள் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட தங்கள் சட்டங்களை, அப்போஸ்தலர்களால் போதிக்கப்பட்டு நூற்றாண்டு களினூடே "சபையினால்" வாய்மொழியாகக் கையளிக்கப்பட்டன என்று தவறான நிரூபணம் தருவதன் மூலம் அந்த உரிமைகோருதலை நியாயப்படுத்த முயற்சி செய்கின்றன.* [14]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 134. [15]*எடுத்துக்காட்டாக, லேவியராகமம் 15:5-8, 10-12 ஆகியவற்றை வாசிக்கவும். ஆசாரியர்கள் ஆசரிப்புக் கூடாரத்தினுள் நுழைவதற்கு முன்பு கழுவ வேண்டியதும் கழுவப்பட வேண்டியதுமான வழிமுறையானது இன்னொரு எடுத்துக்காட்டாக உள்ளது (யாத். 30:19; 40:12).* [16]*மத்தேயு 23ல் இயேசு பரிசேயர்கள்மீது, ''… பாரமான சுமைகளை … மனுஷர் தோள்களின்மேல் சுமத்துகிறார்கள்'' (வ. 4) என்று குற்றம் சாட்டினார். கிறிஸ்து இந்தக் கூற்றைக் கூறுகையில் இந்த சுமைமிகுந்த பாரம்பரியங்கள் அநேகமாக அவரது சிந்தையில் முன்னிலை வகித்திருக்க வேண்டும்.* [17]*இந்தப் பாரம்பரியம் யூதமக்கள் அனைவருக்கும் அன்றாட சடங்காச்சாரமாகும் அளவுக்குப் பரிசேயர்களின்*

*செல்வாக்கு மிகுந்திருந்தது.* [18]*இந்த விளக்கம் எனது* NASB *வேதாகமப் பிரதியில் மையநெடும்பத்தியில் தரப்பட்டுள்ளது.* [19]Alfred Edersheim, *The Life and Times of Jesus the Messiah,* New Updated Version [Peabody, Mass.: Hendrickson Publishers, 1993], 482. [20]*"கழுவுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "ஞானஸ்நானப்படுத்துதல்" அல்லது "முழுக்காட்டுதல்" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது.*

[21]*இயேசு ஐயாயிரம் மக்களை முதலில் அவர்கள் கைகளைக் கழுவிக் கொள்ளா மல் உண்பதற்கு அனுமதித்து இருந்தார் என்ற செய்தி பரிசேயர்களை அடைந்திருக்க வும் கூட வாய்ப்பு உள்ளது. ஐயாயிரம் பேர்களுக்கு உணவளித்த நிகழ்ச்சியானது இந்த நிகழ்ச்சிக்குச் சற்று முன்புதான் நடைபெற்றிருந்தது.* [22]*"பாரம்பரியம்" என்பதன் மூலம் நான் "மனிதரின் பாரம்பரியம்" என்று அர்த்தப்படுத்துகின்றேன். இந்தப் பிரதான தலைப்பும் இதற்கடுத்துவரும் பிரசங்கத்தின் இரு பிரதான தலைப்புகளும் ஓரளவுக்கு ஒன்றின்மீதொன்று கவிந்துள்ளதாக இருக்கும், ஆனால் இவை ஒவ்வொன்றும் தனிப்பட்ட கவனத்தைப் பெறத் தகுதியுள்ளதாயிருக்கும்படி போதுமான அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக உள்ளன.* [23]*அவர்களை அவர் மாயக்காரர்கள் என்று அழைத்தார் (மத். 15:7). அவர்கள் மனம் புண்படுத்தப்பட்டார்களா இல்லையா என்பது அவரது அடிப்படை அக்கறையாக இருக்கவில்லை (மத். 15:12-14).* [24]*கவனித்துக் கொண்டும் கேட்டுக்கொண்டும் இருந்த கூட்டத்தின் பயனுக்காக, பிற்பாடு அவர் குற்றச்சாட்டுக்கு ஓரளவு பதில் அளித்தார் (மத். 15:10, 11; மாற். 7:14-16); ஆனால் அவர் பரிசேயர்களிடம் நேரடியாகப் பேசும்போது இதைச் செய்யவில்லை.* [25]*மத்தேயு முதலில் இயேசுவின் குற்றம் சாட்டுதலையும் பின்பு ஏசாயாவிலிருந்து இயேசுவின் மேற்கோளையும் பதிவு செய்தார். மாற்கு இந்த வரிசைமுறையைத் திருப்பிப் போட்டார். உண்மையான வரிசைமுறை முக்கியமானதல்ல. தனித் தனியான சாட்சிகளிடத்தில் இதுபோன்ற இலேசான மாறுபாடுகள் எதிர்பார்க்கப்பட வேண்டியவைகளாகவே இருக்கின்றன.* [26]*பின்தொடரும் விவரத்தில், பெற்றோர்களைப் "பொல்லாங்காய்ப் பேசுதல்" (சபித்தல்) என்று நாம் பொதுவாக நினைக்கும் வகையிலான குறிப்பு எதுவும் இல்லை, ஆனால் தேவையில் உள்ள பெற்றோர்களுக்கு உதவி செய்யாமல் அவர்களை அனுப்பி விடுதல் என்பது உண்மையில் அவர்கள்மீது "ஒரு சாபத்தை" வைத்தலாக உள்ளது - இது அவர்களைப் பசியுடனும் அவகீர்த்தியுடனும் இருக்கும் நிலைக்குக் கொண்டு வருவதாக உள்ளது.* [27]*மாற்கு, "... என்றும் மோசே சொல்லியிருக்கிறாரே" என்று எழுதினார் (மாற். 7:10). மோசே நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தபோது தேவனிடமிருந்து ஏவுதலினால் பேசினார் என்பதை இயேசு நம்பியதற்கு இது இன்னொரு ஆதாரமாக உள்ளது.* [28]*அந்த உடைமைகள் தேவனைச் சேர்ந்தவை என்றாலும், [பொருத்தனை செய்துகொண்ட] அந்தத் தனிநபர் தாம் உயிரோடிருக்கும் காலம் முழுவதிலும் அவற்றைத் தமது சொந்த உபயோகத்திற்குத் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ளலாம் என்றிருந்ததாகச் சிலர் யூகிக்கின்றார்கள்.* [29]Quoted in Vine, 232. *பொருத்தனைகள் காத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பது பழைய ஏற்பாட்டுச் சட்டமாக இருந்தது (எண். 30ஐக் காணவும்), ஆனால் பத்து கட்டளைகளைப் புறம்பே ஒதுக்குமளவுக்கு நியாயப்பிரமாணத்தை இவ்விதமாகப் பொருத்தனைகளுக்கு நடைமுறைப் படுத்துதல் என்பது மதியீனமானதாக இருந்தது.* [30]*ஒருவர் உடைமையாகக் கொண்டிருந்த யாவற்றையும் இழந்துபோகக் கூடிய சாத்தியக்கூறு அன்று இருந்தது (மத். 6:19); இன்றும் இருக்கிறது.*

[31]*ஓய்வுநாளைக் குறித்துப் பரிணமித்திருந்த கேலிக்கிடமான ஒரு சில*

*சட்டங்களை நாம் முன்பே குறிப்பிட்டு இருந்தோம். ("கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில் "கூட்டத்தின் புயல்" என்ற பாடத்தில் காணவும்.)* [32]*"கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில் "யூதர்களின் பண்டிகைகள்" என்ற அட்டவணையில் காணவும்.* [33]*பாரம்பரியத்தினால் கட்டப்பட்டுள்ள அதே சபைகள் நான் இப்போது வாழ்கின்ற இடத்திலும் உள்ளன, ஆனால் அவைகள் செல்வாக்குச் செலுத்தும் மதக் குழுக்களாக இங்கிருப்பதில்லை.* [34]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 396. [35]*உண்மையில் கிரேக்க வசனப்பகுதியிலேயே இந்த வலியுறுத்தம் உள்ளது.*

45

# பாரம்பரியம் ஒன்று எப்போது மோசமாக இருக்கிறது?

## மாத். 15:7-20; மாற். 7:6-8; 14-23, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*முந்திய பிரசங்கத்தில் நாம், "பாரம்பரியம்" என்ற வார்த்தை "கையளிக்கப்பட்ட விஷயங்கள்" என்று அடிப்படையாக அர்த்தப்பட்டது என்று கற்றோம். இது தேவனிடத்திலிருந்து கையளிக்கப்பட்டவற்றை குறிப்பிட [வும்] முடியும், ஆனால் இது வழக்கமாக மனிதர்களிடத்திலிருந்த கையளிக்கப்பட்டவற்றையே குறிப்பிடுகிறது. ஒரு பாரம்பரியமானது மனிதர்களிடத்திலிருந்து தொடங்கியது என்ற உண்மையே அதைத் தானாகவே மோசமானதாக்கி விடாது. ஆயினும், மத்தேயு 15 மற்றும் மாற்கு 7 ஆகிய அதிகாரங்களில் இயேசுவின் பலமான வார்த்தைகள், மனிதருடைய பாரம்பரியங்கள் தவறானவைகளாக, மிகவும் தவறானவைகளாக இருக்க முடியும் என்ற கருத்தில் சந்தேகம் எதையும் விட்டு வைக்காது இருக்கின்றன. ஒரு பாரம்பரியம் மோசமானதாக உள்ளதா என்பதைத் தீர்மானிப்பதற்கு நமது வேதபாடப் பகுதிகள் குறைந்தது மூன்று அடிப்படைக் கோட்பாடு களைக் கருத்தாகத் தெரிவிக்கின்றன. முதலாவதை நாம் ஏற்கனவே கலந்துரையாடினோம்: ஒரு பாரம்பரியமானது தேவனால் விளக்கி யுரைக்கப்பட்டுள்ள ஒரு கட்டளையை மீறுகிறபோது அந்தப் பாரம்பரியம் மோசமானதாக உள்ளது.[1] மற்ற இரண்டையும் நாம் இந்த எடுத்துரைப்பில் பரிசோதனை செய்வோம். நாம் அவ்வாறு செய்கையில், நம்மில் ஒவ்வொருவரும் தன்னைத்தானே சோதித்துப் பார்த்துக் கொள்வோம் (2 கொரி. 13:5)!*

### ஒரு பாரம்பரியமானது[2] மற்றவர்களைக் கட்டுவிக்கும்போது அது மோசமானதாக உள்ளது (மத். 15:7-9; மாற். 7:6-8)

கிறிஸ்து பரிசேயர்களிடம் பேசிக்கொண்டிருந்தபோது, அவரது

வார்த்தைகள் மிகவும் கூர்மையாயின: “மாயக்காரரே, உங்களைக் குறித்து: ‘இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்’ என்று ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான்” (மத். 15:7-9). இந்த மேற்கோள் ஏசாயா 29:13ல் இருந்து வருகிறது. அந்த வசனப்பகுதியில், தீர்க்கதரிசி தமது நாட்களில் இருந்த மாயக்காரர்களைக் கண்டனம் பண்ணிக்கொண்டு இருந்தார். ஏவுதல் பெற்ற அந்த வார்த்தைகள் இயேசுவின் நாட்களில் இருந்த மதத்தலைவர்களுக்குத் தக்கவகையில் பொருந்துவதாக இயேசு கூறினார்.

ஏசாயாவின் வார்த்தைகளில் இருந்து பல்வகையான முக்கிய பாடங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்: “உதட்டளவினால் செய்யும் ஆராதனை” போதுமானதாக இருப்பதில்லை; கர்த்தருக்கு நாம் கீழ்ப்படிதல் என்பது இருதயத்தில் இருந்து வரவேண்டும் (மத். 22:37; ரோமர் 6:17; எபே. 6:6; கொலோ. 3:16; 2 கொரி. 9:7). நமது ஆராதனை, இருதயத்தினால் தூண்டப்படாததாகவும் பரலோகத்தினால் அங்கிகரிக்கப்படாததாகவும் இருந்தால், அது ‘‘வீணானது’’ (வெறுமையானது[3]) என்று நாம் கண்டுள்ளோம். நமது தற்போதைய கலந்துரையாடலில், நான் இந்த மேற்கோளின் கடைசிப் பாகத்தின்மீது கவனம் செலுத்த விரும்புகின்றேன்: அவர்கள் “மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்தார் கள்.” அவர்கள், “மனுஷருடைய கற்பனைகளை, தேவனுடைய உபதேசங் கள் என்று” போதித்துக் கொண்டு இருந்தார்கள் என்பதைச் சந்தர்ப்பப் பொருள் தெளிவாக்குகிறது. பரிசேயர்களுக்குப் பாரம்பரியங்கள் முக்கியத் துவம் வாய்ந்ததாக இருந்ததுபோல், அவைகள் கர்த்தருடையவைகளாய் இராமல், மனிதர்களின் போதனைகளாய் இருந்தன என்பதைப் புரியவைக்க வேண்டும் என்று இயேசு விரும்பினார்.

### அவைகள் கட்டளைகளாய் இருப்பதுபோன்று பாரம்பரியங்களினால் கட்டுவித்தல்

பரிசேயர்கள் ஒவ்வொரு உணவுக்கு முன்பாகவும் தங்களின் விரிவான சடங்காச்சாரக் குளியலை மேற்கொண்டதற்காகக் கிறிஸ்து அவர்களைக் கண்டனம் பண்ணினாரா? இல்லை, அவர்கள் அறிவிற்கு ஏற்புடைய தல்லாத சடங்குகளில் நேரத்தை வீணாக்க விரும்பினால், அது அவர்களின் வேலையாயிருந்தது. பரிசேயர்களின் நடைமுறைகளுக்காக அல்ல, ஆனால் அவர்கள் அந்த நடைமுறைகளைக் கொண்டு பிறரைக் கட்டுப்படுத்த முயற்சி செய்ததின் காரணத்தினாலேயே இயேசு அவர்களைக் கண்டனம் பண்ணினார். அவர்கள் தங்கள் பாரம்பரியங்களை தெய்வீகக் கட்டளைகள் என்ற அளவுக்கு உயர்த்தி இருந்தார்கள். அவர்கள் தங்களின் பாரம்பரியங் களை மனிதர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று போதித்திருந்தார்கள். அவற்றைக் கடைப்பிடிக்கத் தவறிய எல்லாரையும் அவர்கள் கண்டனம் பண்ணினார்கள். இரண்டாவது கோட்பாட்டை நாம் பின்வருமாறு

சொல்லமைப்போம்: ஒரு பாரம்பரியம் மற்றவர்களைக் கட்டுவிக்கும்போது அது மோசமானதாக உள்ளது.

அப்படிப்பட்டதொரு நடைமுறையானது குறைந்தபட்சம் கொள்கையளவிலாவது தவறானதாக உள்ளது என்பதை ஒவ்வொருவரும் காண முடியும். ஆண்டுகளினூடாக, எனது குடும்பத்தார் விடுமுறைகள் மற்றும் பிற வைபவங்கள் ஆகியவை பற்றித் தங்களுக்கே உரித்தான (தனிச் சிறப்பான?) பாரம்பரியங்களை வளர்த்துக்கொண்டு இருக்கின்றார்கள். நாங்கள் இவற்றை மகிழ்வுடன் அனுபவிக்கின்றோம், இவைகள் நாம் யார் என்று விளக்கப்படுத்த உதவுகின்றன. ஆயினும் நாங்கள் இவற்றை மற்றவர்கள்மீது கட்டுவிக்க முயற்சி எதையும் மேற்கொள்வதில்லை. எங்கள் குடும்பப் பாரம்பரியங்களை மற்ற வீட்டார்கள் கடைப்பிடிப்பதில்லை என்பதற்காக அவர்களைக் கண்டனம் பண்ணுதல் என்பது, குறைந்த பட்சமாகக் கூறினால் கேலிக்கு இடமானதாக இருக்கும்.

நமது மதரீதியான பாரம்பரியங்களை மற்றவர்கள்மீது திணித்துக் கட்டுவித்தல் என்பது தவறாக உள்ளது என்று இயேசு தெளிவாகப் போதித்தார். இந்தக் கொள்கையை நாம் நடைமுறைப்படுத்த முயற்சிக்கும் போது, முரண்பாடு எழுகிறது. மக்கள் "விஷயங்களை எப்போதும் செய்வதுபோல் செய்வதில்" இயல்பாகவே அதிக ஆறுதலை/வசதியைக் காண்கிறார்கள், நாமும் அதுவே செய்யப்பட வேண்டிய வழி என்று நினைக்கச் சாய்கின்றோம். இருந்தபோதிலும், மாற்றப்பட முடியாதவை (தேவனால் வெளிப்படுத்தப்பட்ட அவரது சித்தம்) மற்றும் மாற்றப்படக் கூடியவை (அவரது சித்தத்தைச் செயல்படுத்துவதற்குப் பயன்படுத்தக்கூடிய செய்முறைகள்) ஆகியவற்றிற்கு இடையே ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்து வதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும்.

ஆராதனை வட்டத்திலிருந்து விவரிப்புகள் மனதிற்கு வருகின்றன;[4] நான் பிரசங்கித்துள்ள பெரும்பான்மையான சபைகள் பாடல் புத்தகங் களைக் கொண்டுள்ளன. எனவே, பாடல்களை ஒளித்திரையில் இட்டுக் காண்பிக்கும் சபைகளை நாம் கண்டனம் பண்ண வேண்டுமா?[5] நான் ஆராதித்துள்ள இடங்களில் எல்லாம், ஞாயிறுகாலை ஆராதனையில் பிரசங்கம் ஒரு பாகமாக இருத்தல் என்பது வழக்கமாக இருந்துள்ளது. ஒரு ஞாயிறுகாலை ஆராதனையை பாடல்கள், ஜெபங்கள் மற்றும் கர்த்தரு டைய பந்தியை ஆசரித்தல் பற்றி மையங்கொண்ட வேத வாசிப்பு ஆகிய வற்றையே முதன்மையாகக் கொண்டு நடத்துதல் என்பது தவறானதாக இருக்குமா?[6] நான் இணைவு கொண்டுள்ள சபைகளில் ஞாயிறு மாலை ஆராதனை சபைகூடிவரும் கட்டிடத்தில் நடைபெறுகின்றது. இன்னொரு சபை ஞாயிறு மாலை ஆராதனையை வீடுகளில் நடத்த முடிவு செய்தால், அது வசனரீதியானதல்லாமல் இருக்குமா?[7] "இது நடைமுறைக்குரியதா?" என்று நான் கேட்கவில்லை, "இது வசனரீதியற்றதா?" என்றுதான் நான் கேட்கின்றேன்.

புதிய ஏற்பாடானது ஆராதனைக்கான அடிப்படை மாதிரி ஒன்றை நமக்குக் கொடுக்கிறது, ஆனால் பல விவரங்கள் நமது முடிவுக்கு விட்டு விடப்பட்டுள்ளன. ஆண்டுகளினூடே, சபைகள், வேத வசனங்களின்

வேண்டுகோள்களை நிறைவேற்றுவதற்குத் தங்களுக்குப் பொருத்தமான அணுகுமுறையை வளர்த்துக் கொண்டுள்ளன. இதில் தவறு எதுவும் இருப்ப தில்லை, ஆனால் நாம் தேவனிடமிருந்து கையளிக்கப்பட்டது (தெய்வீக மாதிரி) மற்றும் மனிதரிடமிருந்து கையளிக்கப்பட்டது (தெய்வீக மாதிரியைச் செயல்படுத்துவதற்கான நமது செய்முறை) ஆகியவற்றிற்கு இடையில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த கவனம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.[8]

எனது குடும்பத்தார், ஒக்லஹாமாவிலுள்ள மஸ்கோஜீ என்ற இடத்தின் மேற்குப்பகுதி கிறிஸ்துவின் சபையில் ஊழியம் செய்து கொண்டிருந்த போது, நாங்கள் சார்லஸ் கெல்லி என்ற பெயர்கொண்ட பாடல் நடத்துனரைக் கொண்டிருந்தோம், இவர் சில வேளைகளில் ஆராதனை வரிசை முறைமையை மாற்றுவதுண்டு. எடுத்துக்காட்டாக, நாங்கள் கர்த்தருடைய பந்தியில் ஆராதனையின் தொடக்கத்திலோ அல்லது கடைசியிலோ பங்கேற்பதுண்டு. அவ்வப்போது அவர், கர்த்தருடைய பந்திக்குப்பின் உடனடியாகக் காணிக்கை வழங்குதல் என்ற வழக்கத்திற்கு மாறாக காணிக்கை கொடுத்தலைக் கர்த்தருடைய பந்தி நடத்தும் நேரத்திலிருந்து மாறுபட்ட ஒரு நேரத்தில் நடத்துவதுண்டு.[9] ஒரு ஞாயிற்றுக்கிழமை காலைவேளையில், கர்த்தருடைய பந்திக்குப் பின்பு காணிக்கை சேகரித்தல் நடைபெறாதபடியால், பார்வையாளர்களில் ஒரு பெண்மணி தாவி எழுந்து ஆராதனையில் இருந்து துரிதமாய் வெளியேறினார். அந்தப் பெண்மணி கட்டிடத்தை விட்டுச் செல்லுகையில், அந்தப் பெரிய அறையில் இருந்த ஒரு மனிதரிடத்தில், “நான் வந்து சேர்ந்த இந்தக் குழு எப்படிப்பட்டது?” என்று ஆச்சரியப்பட்டுக் கூறினார். அந்தப் பெண்மணி, “வசனரீதியான ஆராதனை வரிசைமுறை ஒன்றுள்ளது”[10] என்றும் அதிலிருந்து விலகுதல் எதுவும் “வசனரீதியற்றது” என்றும் நம்பினார் என்பது உறுதி.

இந்த அடிப்படைக் கொள்கைகளை நான் மிகையாக வலியுறுத்தம் செய்ய முடியாது: தேவனுடைய கட்டளைகளுக்கும் மனிதருடைய பாரம்பரியங்களுக்கும் இடையில் வித்தியாசம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது இன்றியமையாததாக உள்ளது; மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட நமது பாரம்பரியங்களை மற்றவர்கள்மீது திணித்துக் கட்டுவிப்பது தவறானதாக உள்ளது. இதுவரை கூறப்பட்டுள்ளவற்றை நாம் ஒப்புக் கொள்கின்றோம் என்ற யூகத்தில், [இப்போது] “நாம் தேவனுடைய கட்டளைகளையும் மனிதர்களுடைய பாரம்பரியங்களையும் எவ்வாறு வித்தியாசப்படுத்துகின்றோம்?” என்பது மிகவும் முக்கியமான கேள்வியாக உள்ளது.

### பாரம்பரியங்கள் மற்றும் கட்டளைகள் ஆகியவற்றிற்கு இடையில் வித்தியாசம் ஏற்படுத்துதல்

அதிகம் அதிகமாக, “பாரம்பரியமானது” என்ற வார்த்தை - ஆகவே அது பழையதும் காலம் கடந்ததுமாக, சிறிதளவே அல்லது முக்கியத்துவமே இல்லாததாக, மற்றும் விதிவிலக்குடன் புறம்பே தள்ளப்படலாம் என்ற மறைமுகக் குறிப்புடன் சற்றுக்காலமே நம்மைச் சுற்றியுள்ள விஷயங்களுக்கு நடைமுறைப் படுத்தப்படுவதாகக் கேள்விப்படுகின்றேன். எடுத்துக்

காட்டாக, "பாரம்பரியமான குடும்பம்"[11] (அதாவது, தந்தை, தாய் மற்றும் அவர்களின் பிள்ளைகள் அடங்கியது) என்ற சொற்றொடரானது சிறுமைப் படுத்தும் பாணியில் பயன்படுத்தப்பட்டுள்ளதை நான் கேள்விப்பட்டு இருக்கின்றேன். வேதாகமத்தில் நம்பிக்கை உள்ளவர்களுக்கு, "இந்த ஏற்பாடு எவ்வளவு காலமாக இருந்துள்ளது?" என்பதல்ல ஆனால் "இது பரலோகத்திலிருந்து வந்ததா அல்லது மனிதர்களிடமிருந்து வந்ததா?" என்பதே முக்கியமான கேள்வியாக உள்ளது (மத். 21:25).

கர்த்தருடைய சபையின் உண்மை மிகுந்த/விசுவாசம் மிகுந்த குழுமங்கள் "பாரம்பரியமான சபைகள்" என்று நம்பிக்கையிழந்த நிலையில் குறிப்பிடப்படுவதையும், அவர்கள் விசுவாசிப்பதும் நடைமுறைப் படுத்துவதும் "பாரம்பரிய நிலைப்பாடு" என்று ஒதுக்கப்படுவதையும் நான் கேள்விப்படும்போது, மனச்சோர்வடைகின்றேன். இந்தப் பெயர்ப் பட்டிகளை நடைமுறைப்படுத்துகின்றவர்கள் இந்த சபைகள் செய்யும் ஒவ்வொன்றையும் "பாரம்பரியமானது" என்று முத்திரையிட்டு - விசுவாச விஷயத்தில் அவர்கள் செய்கின்றவைகள் மற்றும் முடிவு செய்யும் விஷயத் தில் அவர்கள் செய்கின்றவைகள் ஆகியவற்றிற்கு இடையில் சிறிதளவே வித்தியாசத்தை ஏற்படுத்துகின்றார்கள்.

கடந்த காலத்தில் சபையைப் பாழாக்கியிருந்த ஒவ்வொரு பிரச்சனை யையும் ஒன்றுகூட்டிக் குவித்து, அவை யாவும் கருத்துக்கள் பற்றிய விஷயம் மட்டுமே என்றும் தனிச்சிறப்பற்றவை என்றும் விரிவுரையாளர்கள் உரைத்ததை நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். பின்னோக்கிப் பார்க்கை யில், சில முரண்பாடுகள் தேவையற்றவையாகக் காணப்படுகின்றன, ஆனால் சபையானது போராடியிருக்கின்ற ஒவ்வொரு கேள்வியையும் விலக்கிவிடுதல் நியாயமானதா? ஆதி சபையைப் பயமுறுத்திய யூதத்துவம் மற்றும் மறையியல் ஞானம் ஆகியவற்றின் பிரச்சனைகளை இவ்விதமாய்க் குறைப்பதற்குக் கிறிஸ்தவர்கள் முயற்சி செய்திருந்தால், ஏவுதல் பெற்ற எழுத்தாளர்கள் எவ்வாறு பதில்செயல் செய்திருப்பார்கள்?

நாம் பின்வருவதை ஒப்புக்கொள்வோமாக: மனிதரால் ஏற்படுத்தப் படுகிற பாரம்பரியம் மற்றவர்களைக் கட்டுவிக்கும்போது மோசமானதாக உள்ளது. நாம் எந்த ஒரு நம்பிக்கையையும் அல்லது நடைமுறையையும், அது காலங்கடந்ததால் விரிவுபட்டிருப்பதால் மாத்திரமே, தாமாக அதைப் "பாரம்பரியமானது" என்று வகைப்படுத்தி விடக்கூடாது என்பதையும் நாம் ஒப்புக்கொள்வோமாக.

முன்னதாக நான், மிகவும் முக்கியமான கேள்வியானது, தேவனுடைய கட்டளைகள் மற்றும் மனிதர்களின் பாரம்பரியங்கள் ஆகியவற்றிற் கிடையில் வித்தியாசம் ஏற்படுத்துதல் எவ்வாறு என்பது பற்றியது என்று கூறினேன். அந்தக் கேள்விக்கான பதில் உங்களுக்குத் தெரியும், அது இந்தப் பிரசங்கத்தில் பலமுறைகள் குறிப்பால் உணர்த்தப்பட்டுள்ளது: நாம் விசுவாசிக்கின்ற, போதிக்கின்ற மற்றும் செய்கின்ற ஒவ்வொரு விஷயமும், வேதவசனங்கள் போதிக்கின்றவற்றின் வெளிச்சத்தில் ஆராய்ச்சி செய்யப் பட வேண்டும். "இதை நாம் எப்போதும் எப்படிச் செய்துள்ளோம்?" என்பது கேள்வியல்ல. "நாம் இதை எப்படிச் செய்ய விரும்புவோம்?"

*என்பதும் நிச்சயமாகக் கேள்வியல்ல. "தேவனால் வெளிப்படுத்தப்பட்ட அவரது சித்தத்தில் அவர் போதிப்பது என்ன?'' என்பதே கேள்வியாக உள்ளது (அப். 17:11ஐக் காணவும்). நாம் இயேசுவின் சொற்றொடரமைப் பைக் கடன் வாங்குவோமாக (மத். 21:25): ஒரு உபதேசம் அல்லது செயல்முறையானது ''பரலோகத்தில் இருந்து வந்தது'' என்றால், அது ஒவ்வொரு கிறிஸ்தவரையும் கட்டுவிப்பதாக உள்ளது. அது "மனிதர்களிடத் தில் இருந்து வந்தது" என்றால், நாம் அதை மற்றவர்கள்மீது கட்டுவிக்கும் குற்ற உணர்வுள்ளவர்களாய் இருக்கக்கூடாது.*

*இந்தப் பதிலைக் கொடுப்பதில் நான், எது "பாரம்பரியமானது" மற்றும் "எது பாரம்பரியமல்லாதது" என்பது பற்றிய ஒவ்வொரு வழக்கையும் தீர்த்து வைத்துள்ளேனா? கேட்கப்படக்கூடிய கேள்வி ஒவ்வொன்றுக்கும் நான் பதில் அளித்துள்ளேனா? இல்லை மற்றும் இல்லை. புறக்கோடிகளைத் தவிர்க்கும்படி கிறிஸ்தவர்களிடம் வேண்டுகோள் விடுத்தலே எனது நோக்கமாக இருந்துள்ளது. நமது பாரம்பரியங்களை, நாம் எவ்வளவுதான் விரும்பினவைகளாய் இருந்தாலும் அவைகளை மற்றவர்கள் கைக் கொள்ளாது இருப்பதற்காக அவர்களைக் கண்டனம் பண்ணாதிருப் போமாக. அதே வேளையில், எந்த ஒரு போதனையையும் அல்லது நடைமுறையையும், அது பல ஆண்டுகளாக இருந்துள்ளது என்பதற்காக அது "பாரம்பரியமானது" என்று நாம் ஒருக்காலும் ஒதுக்கிவிடாது இருப் போமாக. புதிய ஏற்பாடு பல நூற்றாண்டுகளாக இருந்துள்ளதே. மதரீதி யான எந்த ஒரு போதனை அல்லது நடைமுறையையும் ஏற்றுக் கொள்ளவோ அல்லது புறக்கணிக்கவோ நாம் தேவனுடைய வசனத்தையே நமது தர அளவையாக ஏற்படுத்த முடிவு செய்வோமாக.*

*நீண்ட காலத்திற்கு முன்பாகவே, யோசுவா தேவனுடைய மக்களுக்கு தேவனிடத்திலிருந்து இந்தச் செய்தியைக் கொடுத்திருந்தார்: ''என் தாசனாகிய மோசே உனக்குக் கற்பித்த நியாயப்பிரமாணத்தின் படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்க மாத்திரம் மிகவும் பலங்கொண்டு திடமனதாயிரு; நீ போகும் இடமெல்லாம் புத்திமானாய் நடந்துகொள்ளும் படிக்கு, அதை விட்டு வலது இடதுபுறம் விலகாதிருப்பாயாக" (யோசு. 1:7; 23:6ஐயும் காணவும்). தேவன் கட்டியிராததை நாம் கட்டும்படிக்கு "வலது புறம்'' திரும்பவும், தேவன் (தாம் வெளிப்படுத்திய சித்தத்தில்) கட்டுவித்திருப்பதை கட்டவிழ்க்கும்படிக்கு "இடது புறம்" திரும்பவும் நாம் நினைக்கலாம். இந்த இருபுறக்கோடிகளையுமே தவிர்க்கும்படி நாம் நம் இருதயங்களை அமைப்போமாக. நாம், இயேசுவின் புதிய ஏற்பாட்டின் போதனையின்படி "எல்லாவற்றையும்" செய்வதற்குத் தீர்மானிப்போமாக!*

*அந்தச் சிந்தனையை நாம் முடிக்க முடியும் - ஆனால் கிறிஸ்து தமது கலந்துரையாடலை இன்னும் முடிக்கவில்லை. அவர் மனிதர்களின் பாரம் பரியங்கள் பற்றிக் குறைந்தது இன்னும் ஒரு கருத்தைக் கொண்டிருந்தார். இந்த சத்தியம் அவ்வளவு தெளிவாக இல்லையென்றாலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே உள்ளது. இது முந்திய இரண்டு கோட்பாடுகளைப் போலவே - ஒருவேளை அவற்றைவிட அதிகமாகவே - அதிகமாக ஆத்தும ஆராய்வை வேண்டுகிறது.*

## ஒரு பாரம்பரியமானது அளவுக்குமீறிய முக்கியத்துவத்தை எடுத்துக் கொள்ளும்போது மோசமானதாகிறது (மத். 15:10-20; மாற். 7:14-23)

இயேசு மற்றும் பரிசேயர்களுக்கிடையில் நடந்த இந்தக் கருத்துப் பரிமாற்றம் தனிப்பட்டதாக இருக்கவில்லை. கடின இருதயம் கொண்ட தலைவர்களுக்கு முன்பாக, கிறிஸ்து தம்மையும் தமது சீஷர்களையும் தற்காத்துக் கொள்வதில் ஆர்வம் எதுவும் கொண்டிருந்ததில்லை, ஆனால் தமது உரையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு ஒரு விளக்கம் தகுதியானது என்று அவர் நினைத்தார். எழுப்பப்பட்ட அஸ்திபாரமான பிரச்சனையின்மீது அவர் பிரசங்கித்த பிரசங்கத்தை மாற்கு ஒரே ஒரு வசனத்தில் செறிவுபடக் கூறினார்:

> பின்பு அவர் ஜனங்களெல்லாரையும் வரவழைத்து அவர்களை நோக்கி: "நீங்கள் எல்லாரும் எனக்குச் செவிகொடுத்து உணருங்கள். மனுஷனுக்குப் புறம்பே இருந்து அவனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்த மாட்டாது; அவன் உள்ளத்திலிருந்து புறப்படுகிறவைகளே அவனைத் தீட்டுப்படுத்தும் ..." என்றார் (மாற். 7:14, 15).

மற்ற விஷயங்களுடன், ஒவ்வொரு உணவுக்கு முன்னதாகவும் கழுவுதல் என்பது பற்றி மனிதரால் ஏற்படுத்தப்பட்ட ஒழுங்குமுறைகள் தர்க்கப் பொருத்தமற்றது என்று இயேசு போதித்தார். உண்மையில் கழுவப்படாத கைகளுடன்[12] உண்ணப்பட்ட உணவு உட்பட, ஒரு நபருக்குள்ளாகச் செல்லுகிற எதுவும் அவனைத் தீட்டுப்படுத்துவதில்லை (மத். 15:20ஆ). மாறாக, ஒருவரிடமிருந்து வெளிவருகிறதினால் ஒருவர் - அதாவது, அந்தத் தனிநபரின் வார்த்தைகள் மற்றும் செய்கைகளினால் ஒருவர் - தீட்டுப்பட முடியும்.

கிறிஸ்துவின் கூற்று, சடங்காச்சாரமான கழுவுதல்கள் பற்றிய உடனடியான கேள்விக்கு அப்பாலும் மறைமுகமான கருத்துக் கொண்டிருந்தது. இயேசு கூறியவற்றில் இருந்து மாற்கு ஒரு முடிவைக் குறிப்பிட்டார்: "இவ்விதமாக அவர் எல்லா உணவும் சுத்தமானது என்று அறிவித்தார்"[13] (மாற். 7:19ஆ). நம்மில், புதிய ஏற்பாட்டின் போதனைக்குப் பழக்கமாகியுள்ளவர்களுக்கு, கர்த்தரின் இந்த அடிப்படைக் கூறுள்ள வார்த்தைகள் அவரது உரையைக் கேட்டவர்களுக்கு எப்படி ஒலித்திருக்கும் என்று புரிந்து மதித்தல் கடினமானதாக உள்ளது. யூதர்கள் எதை உண்ணலாம் எதை உண்ணக்கூடாது என்பது பற்றிய நியாயப்பிரமாணத்தின் அறிவுறுத்தல் (லேவி. 11) அவர்களின் பிறப்பிலிருந்தே அவர்களின் மனங்களில் பதிக்கப் பட்டிருந்தது (அப். 10:14ஐக் காணவும்). கிறிஸ்து தமது சீஷர்களுடன் தனிமையில் இருந்தபோது, பேதுரு அவரிடம் ''இந்த உவமையை எங்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்'' (மத். 15:15) என்று கேட்கும் அளவுக்கு, அவரது வார்த்தைகள் திகைப்பூட்டுபவைகளாய் இருந்தன. ''உவமை'' என்ற வார்த்தையின் பயன்பாடானது, இந்தக் கூற்று

*நிச்சயமாகவே நேர்ப்பொருளில் எடுத்துக் கொள்ளப்படக் கூடாது என்று நினைத்ததைச் சுட்டிக்காண்பிக்கிறது!*[14]

*இயேசு, "நீங்களும் இவ்வளவு உணர்வில்லாதவர்களா?" என்று கேட்கையில் (மாற். 7:18அ) அவர் அநேகமாகத் தமது தலையை உலுக்கி யிருப்பார். கூட்டத்தார் புரிந்துகொள்ளத் தவறியது பற்றி அவர் திகைப் படையவில்லை, ஆனால் அவர் தமது அப்போஸ்தலர்கள் மாபெரும் உட்கண்ணோக்குக் கொண்டிருப்பார்கள் என்று நம்பியிருந்தார் என்பது உறுதி. இருந்தபோதிலும், அவர் பொறுமையாக [பின்வருமாறு] விளக்கினார்: "புறம்பேயிருந்து மனுஷனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப் படுத்தமாட்டாதென்று நீங்கள் அறிந்துகொள்ள வில்லையா? அது அவன் இருதயத்தில் போகாமல் வயிற்றிலே போகிறது; அதிலிருந்து ... நீங்கிப் போகிறது" (மாற். 7:18ஆ, 19அ). வேறு வார்த்தை களில் சொல்லுவதென்றால், உண்ணுதல் மற்றும் கழித்தல் ஆகியவை மனிதனின் ஒழுக்கத் தகுதியைக் குறித்து ஏதொன்றும் செய்யாத இயற்கையான செயல்முறையொன்றின் பாகமாக உள்ளன.*

*எச்சரிக்கையின் ஒரு வார்த்தை இங்கு முறையானதாக உள்ளது.* R. C. *ஃபோஸ்டர் அவர்கள், "போதைதரும் மதுபானம் அல்லது எவ்வகையான விஷம் போன்ற சுய அழிவுள்ள விஷயங்களுக்கு இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சி செய்தல் என்பது முற்றிலும் தெரிந்தே தவறு செய்கிறதாயிருக்கும்" என்று எழுதினார்.*[15] *வாய்க்குள் செல்லுகிற சில பொருட்கள் தீமை செய்கின்றவைகளாய் இருக்கக்கூடும். சிறுபிள்ளை களிடத்தில் பெற்றோர்கள், "அதை உன் வாயை விட்டு எடு!" என்று எவ்வளவு அடிக்கடி கூறுகின்றார்கள். உடலானது "தேவனுடைய ஆலயமாக" உள்ளது (1 கொரி. 3:16, 17; 6:19); அந்த ஆலயத்திற்குத் தீமை விளைவிக்கக் கூடிய எதுவும் தவிர்க்கப்பட வேண்டும். ஆயினும், கிறிஸ்து மிகவும் தீமை நிறைந்த சாத்தியக்கூறுள்ளதைத் தமது சிந்தையில் கொண்டிருக்கவில்லை; யூதர்கள் "தீட்டானது" என்று கருதிய [ஆனால்] போஷிக்கும், நலமிக்க உணவைப் பற்றியே அவர் அக்கறை கொண்டிருந்தார்.*

*அவர் தமது விளக்கங்களைத் தொடர்ந்தார்:*

> *மனுஷனுக்குள்ளே இருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப் படுத்தும், எப்படியெனில், மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத் தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும். பொல்லாங்கானவை களாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனு ஷனைத் தீட்டுப்படுத்தும் (மாற். 7:20-23).*

### ***இது அன்று ஒரு இருதயத்தின் பிரச்சனையாயிருந்தது***

*பட்டியலிடப்பட்டுள்ள "பொல்லாங்கானவைகளைக்" குறித்து அதிகமாகக் கூறப்பட முடியும், ஆனால் நான் "இருதயம்" என்ற வார்த்தை*

யின்மீது கவனம் செலுத்த விரும்புகின்றேன். இந்த வரலாறு முழுவதிலும் இயேசு, இருதயத்தின் பிரச்சனையே பரிசேயர்களின் பிரச்சனையாக இருந்தது என்று வலியுறுத்தினார். இதற்கு முன்னதாக, அவர் இப்படிப் பட்ட கூற்று ஒன்றைக் கூறியிருந்தார், ஏனெனில் அவர்கள் தங்கள் இருதயங் களில் இருந்து தேவனை ஆராதிக்கவில்லை (மத். 15:8; மாற். 7:6). அவர்களின் கவனம் மனிதனுக்குள் செல்லுகின்ற புறம்பானவற்றின்மீது இருந்தது, ஆனால் அவர்கள் உள்ளானவற்றின்மீது - நல்லது மற்றும் பொல்லாதது ஆகியவற்றின் ஆதாரமூலமாகிய இருதயத்தின்மீது - கவனம் செலுத்தியிருக்க வேண்டும் என்றே இங்கு அவர் உண்மையில் கூறினார்.

இது, ஒரு பாரம்பரியம் மோசமானதா அல்லவா என்று தீர்மானிக்கின்ற மூன்றாவது கோட்பாடு ஒன்றைக் கருத்தாகத் தெரிவிக்கிறது: ஒரு பாரம் பரியமானது அளவுக்குமீறிய முக்கியத்துவத்தை எடுத்துக் கொள்ளும்போது அது மோசமானதாயிருக்கிறது - அது ஒரு முறுக்கப்பட்ட ஆவிக்குரிய வலியுறுத்தத்தைக் கொடுக்கும் போதோ அல்லது அதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற நமது தீர்மானமானது தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதற்கான நமது அக்கறையின்மேல் நிழலிடும்போதோ - மோசமானதாகிறது. பரிசேயர்கள் தங்கள் பாரம்பரியங்களைக் கொண்டு உணர்வுகளை ஆட்டிப் படைத்த செயலானது அவர்கள் தேவனுடைய கட்டளையைப் புறக்கணிக்கக் காரணமாயிற்று என்று இயேசு கூறினார் (மாற். 7:8).

**இது இன்று ஒரு இருதயத்தின் பிரச்சனையாயிருக்கிறதா?**

முன்பே கூறியபடி, பாரம்பரியத்திற்கு அளவுக்குமீறிய முக்கியத்து வத்தைக் கொடுக்கும் அக்கறையானது, ஒரு பாரம்பரியம் மோசமானதாக உள்ளதா அல்லவா என்று தீர்மானிக்கின்ற பிற கோட்பாடுகளை விட அதிக நுட்பம் வாய்ந்ததாக உள்ளது. சோதனையானது புறநிலைக்குரியதாக இருப்பதை விட அதிகமாக அகநிலைக்குரியதாக உள்ளது; இருந்த போதிலும், இது முக்கியமானதாக உள்ளது. இந்த மூன்றாவது அபாய மானது நாம் கலந்துரையாடியுள்ள மற்ற இரண்டை விட பல வகையில் அல்லது மிக அதிகமாக வலையில் அகப்படுத்தலாம். நீங்களும் நானும் தேவனுடைய கட்டளைகளுக்குப் பதிலீடாகப் பாரம்பரியங்களை வைத்திருக்க மாட்டோம். நமது பாரம்பரியங்களைக் கைக்கொள்ளவில்லை என்று மற்ற மக்களை நாம் கண்டனம் செய்யாமலிருக்கலாம். ஆயினும் மக்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல் இருக்கும்போது, நமது பாரம்பரியங் களை நாம் செய்வதை விட அதிகமாக மக்கள் புறக்கணிக்கும்போது நாம் அதிக கலவரம் அடையும் அளவுக்கு நமது பாரம்பரியங்கள் நமக்கு அதிகம் முக்கியமானவைகள் என்பது இன்னமும் சாத்தியமானதாகவே உள்ளது.

நீங்கள் தலையை அசைத்து, "மக்கள் அதுபோன்றே இருக்கின்றார்கள்" என்று சிந்திக்கின்றீர்களா? ஒரு எச்சரிக்கை வார்த்தை பின்வருமாறு: இது மற்றவர்களுக்கு நடைமுறைப்படுத்த வேண்டிய ஒரு கொள்கையாக இருப்பதில்லை. இது சுயத்திற்கு நடைமுறைப்படுத்த வேண்டிய ஒரு கொள்கையாக உள்ளது. என்னால் இன்னொரு மனிதரின் இருதயத்தை

அறிய முடியாது. ஒரு மனிதரின் பாரம்பரியங்கள் அவருக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன என்று நான் நினைக்கலாம், ஆனால் அதை நான் அறிய முடியாது. இரண்டு தனிநபர்கள் மிகச் சரியாக ஒரே விதமான பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்கக் கூடும், அவர்களில் ஒருவர் சரியான எண்ணநோக்குடனும் இன்னொருவர் கோணலான எண்ணநோக்குடனும் அதைக் கடைப்பிடிக்கக்கூடும். இந்த விஷயத்தில் நாம் மற்றவர்களைத் தீர்ப்பிடுதலின் குற்ற உணர்வைக் கொண்டிராதிருப் போமாக (மத். 7:1, 2; ரோமர் 2:1); நாம் ஒவ்வொருவரும் தன்னைத் தானே தீர்ப்பிடுவோமாக.

## முடிவுரை

பாரம்பரியம் பற்றிய இயேசுவின் போதனை பற்றிய நமது கலந்துரையாடலை நாம் முடிக்கும் இவ்வேளையில், கடந்த காலத்தில் கூறப்பட்ட ஏவுதல் பெற்றிராத கொள்கை வாசகம் ஒன்று சிந்தைக்கு வருகிறது: "விசுவாச விஷயங்களில் ஒருமைப்பாடு; கருத்து விஷயங்களில் சுதந்திரம்; எல்லா விஷயங்களிலும் ஈகை (அல்லது அன்பு)." [ஆங்கிலத்தில் இது இன்னும் செயல்வலிவாக உள்ளது: "In matters of faith, unity; in matters of opinion, liberty; in all things, charity (or love)."] இந்தக் கொள்கையின் மூன்று பகுதிகள் மதரீதியாக நாம் என்ன செய்கின்றோம் அல்லது போதிக்கின்றோம் என்பது பற்றி நாம் கேட்கத் தேவையான மூன்று கேள்விகளைக் கருத்தாகத் தெரிவிக்கின்றன.

"விசுவாச விஷயங்களில் ஒருமைப்பாடு." "விசுவாச விஷயம்" என்பது தேவன் தமது வசனத்தில் பேசியுள்ளவற்றைப் பற்றியதாக உள்ளது (ரோமர் 10:17). இப்படிப்பட்ட விஷயங்களில், நாம் ஒருமைப்பாட்டுடன் இருக்க வேண்டும் (1 கொரி. 1:10). இது நாம் கேட்க வேண்டிய முதல் கேள்வியைக் கருத்தாக தெரிவிக்கிறது: "நான் செய்கின்ற அல்லது போதிக்கின்ற விஷயத்திற்கு வேதாகம ரீதியான அதிகாரத்துவத்தை நான் கொண்டுள்ளேனா?" எந்த ஒரு நடைமுறையையும் பற்றி, "இது எவ்வளவு காலமாக இவ்வாறு செய்யப்பட்டு வருகிறது?" என்பதல்ல ஆனால் "இது எங்கு தொடக்கம் பெற்றது?" என்பதே முக்கியமான கேள்வியாக உள்ளது.

"கருத்து விஷயங்களில் சுதந்திரம்." "கருத்து விஷயம்" என்பது தேவன் தமது வசனத்தில் பேசியிராதவற்றைப் பற்றியதாக உள்ளது. இது தனிப்பட்ட முடிவு செய்தலை உள்ளடக்குகிறது. இப்படிப்பட்ட விஷயங்களில், நாம் நமது கருத்துக்களைப் பிறர்மீது திணித்து கட்டுவிக்கக்கூடாது. "சுதந்திரம்" என்பது கவனிப்பு வார்த்தையாக உள்ளது.[16] இது நிலையான இருதய - தேடுதலுக்கு அழைக்கிறது: "ஒரு கட்டளையைச் செயல்படுத்துவதற்கான நடைமுறைக்கு உகந்த வழியானது, காலத்தின் காரணத்தினால், அந்தக் கட்டளையைப் போன்ற அதே தனிச்சிறப்பான முக்கியத்துவத்தை எனது சிந்தையில் எடுத்துக் கொண்டுள்ளதா?"

"எல்லா விஷயங்களிலும் ஈகை (அல்லது அன்பு)." சககிறிஸ்தவர்கள் முடிவு செய்யும் விஷயங்களில் நம்முடன் கருத்து வேறுபடும்போது, நாம்

இன்னமும் அவர்கள்மீது அன்புகூர வேண்டும் (யோவா. 13:35; ரோமர் 12:10). இந்த அடிப்படைக் கொள்கை புறக்கணிக்கப்பட்டதால், சகோதரர்கள் அந்நியப்பட்டுள்ளார்கள், சபைகள் பிரிவுபட்டுள்ளன. ஒவ்வொருவரும் பின்வரும் கேள்வியைக் கேட்க வேண்டியதாக உள்ளது: "வேத வசனங்களை மீறாத மற்றும் சட்டம் என்ற வகையில் கட்டுவிக்காத தீங்கற்ற பாரம்பரியங்களைக் குறித்து நான் கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டுள்ளேனா?" "நாம் எப்போதுமே இவ்வாறுதான் செய்திருக்கின்றோம்" என்பதால் மட்டும் சிலவற்றை ஒரு குறிப்பிட்ட வழியில்தான் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துவது மதியீனமானதாக உள்ளது. [அதுபோலவே] மாறுபட்டு இருக்க வேண்டும் என்பதற்காகவே விஷயங்களை வேறுமாதிரி செய்ய வலியுறுத்துதலும் சமஅளவுக்கு மதியீனமானதாக உள்ளது.[17] கருத்து விஷயங்களில் கருத்து வேறுபாடு இருக்கும்போது, அன்பு, அக்கறை, மற்றும் கூருணர்வு என்பவைகளே நாளின் ஒழுங்குமுறையாக உள்ளது.

பாரம்பரியங்கள் பற்றிய பாடக்கருத்து சிக்கலானதாக உள்ளது. அடிப்படைக் கொள்கைகளை எடுத்துரைத்தல் என்பது கடினமானதாக இருப்பதில்லை, ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துவதுதான் கடினமானதாக உள்ளது. ஆகையால், இந்தப் பாடக்கருத்து முக்கியமற்றது என்றோ அல்லது மத்தேயு 15 மற்றும் மாற்கு 7ல் இயேசுவால் போதிக்கப்பட்ட கொள்கைகளைப் புரிந்துகொண்டு அவற்றிற்குக் கீழ்ப்படிய நாம் முயற்சி செய்யத் தேவையில்லை என்றோ இது அர்த்தப்படுத்துவதில்லை. மாறாக, எவரொருவரும் எல்லாப் பதில்களையும் கொண்டுள்ளதாக உரிமைகோருமளவுக்குத் தைரியம் கொண்டிருக்கக் கூடாது என்பதையே இது அர்த்தப்படுத்துகிறது. இது, நாம் படிக்கத் தயாராக இருக்கவேண்டும், மறுபடியும் படிக்க வேண்டும் மற்றும் எழுகின்ற ஒவ்வொரு "பிரச்சனையை"ப் பற்றியும் மேலும் படிக்கத் தயாராக இருக்க வேண்டும் என்றே அர்த்தப்படுகிறது. இது, நம் யாவரும் ஒருவர் மற்றவரிடத்தில் பொறுமையாக இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுகிறது (எபே. 4:2).

பாரம்பரியங்கள் பற்றிய பாடக்கருத்தைப் போன்று ஒவ்வொரு தலைப்பும் கடினமானதாக இருக்கவில்லை என்பதற்காக நான் நன்றி நிறைந்தவனாக இருக்கின்றேன். எடுத்துக்காட்டாக, பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுதல் என்ற விஷயத்தை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். அந்த வழியைக் கர்த்தர் மிகவும் தெளிவாக்கியிருப்பது ஆச்சரியமானதல்லவா? இயேசு நம்மீது அன்புகூர்ந்து நமது பாவங்களுக்காக மரித்தார் (யோவா. 3:16; 1 கொரி. 15:1-3), இப்பொழுது நாம் அன்புடன் கீழ்ப்படிவதின் மூலம் பதில்செயல் செய்வது தேவையாயிருக்கிறது (யோவா. 3:16; மாற். 16:16; அப். 22:16). பாரம்பரியங்கள் பற்றி நாம் எல்லா விடைகளையும் கொண்டிராது இருக்கலாம், ஆனால் நாம் மிகவும் முக்கியமான கேள்விக்குப் பதிலைக் கொண்டுள்ளோம்: "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" (அப். 2:37, 38; 8:36-38; 16:30-33 ஆகியவற்றைப் படிக்கவும்.) பாரம்பரியங்களைப் பற்றிய கேள்விகளுடன் நீங்கள் உங்கள் வாழ்நாள் முழுவதும் போராடிக் கொண்டிருக்கலாம், ஆனால் அவருடைய சித்தத்தின்படி செய்வதற்கு அடுத்த கணம் காத்திருக்க நீங்கள் துணியாதீர்கள். நீங்கள்

*அவருக்குக் கீழ்ப்படிவது அவசியமென்றால், அதை இப்போதே செய்யுங்கள்!*

---

*குறிப்புகள்*

[1]*நீங்கள் முந்திய பிரசங்கத்திற்குத் திரும்பி, "எப்பொழுது ஒரு பாரம்பரியம் மோசமானதாக இருக்கிறது'' என்ற அதன் இரண்டாவது பகுதியை மறுகண்ணோட்டமிட விரும்பலாம்.* [2]*முந்திய பிரசங்கத்தில் இருந்தது போலவே, இந்தப் பிரசங்கத்தின் பிரதான தலைப்பில் உள்ள "பாரம்பரியம்" என்ற வார்த்தை மனிதர்களின் பாரம்பரியங்களைக் குறிப்பதாயிருக்கும்.* [3]"Vain" *என்ற ஆங்கில வார்த்தை "பெருமை" என்றும் அர்த்தமாகக் கூடும். "வெறுமையான, பயனற்ற, மதிப்பற்ற'' என்பதே வேதாகமத்தின் சொற்றொடர்களின்படியான அதிகம் பொதுவான அர்த்தமாக உள்ளது. (பிர. 1:14ல் இவ்வார்த்தையின் மாறுபட்ட மாறுபாடு எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் கவனிக்கவும்.)* [4]*நான் வாழும் இடத்தில் நிலவுகிற சூழ்நிலையை விவரித்தல் மட்டுமே இதை விளக்கப்படுத்த எனக்குத் தெரிந்த வழியாக உள்ளது. நீங்கள் உலகின் உங்கள் பகுதிக்கு அதிகம் நடைமுறைப்படுத்தப்படக்கூடிய விவரிப்புகளைப் பயன் படுத்தலாம்.* [5]*நான் குறிப்பிடுகிற மாற்று ஏற்பாடுகள் வேத வசனரீதியற்றவைகள் அல்ல என்பதையும் "இல்லை" என்ற பதிலானது ஒவ்வொரு கேள்விக்குப் பின்பும் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது என்பதையும் எனது உரையைக் கேட்பவர்கள் காண்பார்கள் என்று நான் யூகிக்கின்றேன்.* [6]*இங்கிலாந்துப் பின்னணியுள்ள சபைகள் இவ்வகையான ஞாயிறு காலை ஆராதனையைக் கொண்டிருக்கின்றன என்று கூறச்சாத்தியக்கூறு உள்ளது.* [7]*இல்லங்களில் ஞாயிறு மாலை ஆராதனையை நடத்துவதில் உள்ள ஞானம் பற்றிச் சிலர் கேள்வி எழுப்பலாம், ஆனால் அந்தக் கேள்வி நடைமுறைக்கு உகந்ததா என்பது பற்றியதுதானே தவிர வேத வசனரீதியானதல்ல.* [8]*மூப்பர்கள் தாங்கள் கண்காணிப்புச் செய்யும் சபையின்மீது கொண்டுள்ள பொறுப்பு என்பது இந்தக் கலந்துரையாடலின் ஒரு காரணியாக உள்ளது. அவர்கள் தங்கள் பொறுப்பை நிறைவேற்றுவதில், அந்த சபையில் செயல்விளைவை ஏற்படுத்தும் முடிவுகளை எடுக்கின்றார்கள். ஆயினும் அவர்கள், மற்ற சபைகள் தங்கள் முடிவுகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுவதில்லை என்பதை உணர்ந்து அறிய வேண்டும். இது பிராந்திய சபையின் சுயாதீனத்தின் கொள்கையாக இருக்கிறது. விசுவாச விஷயங்கள் மற்றும் கருத்து விஷயங்கள் ஆகியவற்றிற்கு இடையில் வித்தியாசம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று நான் மீண்டும் ஒருமுறை கூறுகின்றேன்.* [9]*கர்த்தருடைய பந்திக்குப் பின்பு காணிக்கை சேகரித்தல் என்பது வசதியானதாக இருப்பினும், காணிக்கை கொடுத்தல் என்பது கர்த்தருடைய பந்தியின் பாகம் அல்ல என்பதை மக்கள் உணர்ந்தறிவது அவசியம் என்பதே அவரது தர்க்கமாக இருந்தது.* [10]*அந்தப் பெண்மணி எதிர்பார்த்த வேளையில் நாங்கள் காணிக்கை கொடுத்தல் பகுதியை நடத்தாதபடியால், அவர், நாங்கள் "ஆராதனையின் செயல்பாடுகளில்" ஒன்றை (காணிக்கை கொடுத்தலை) நீக்கிப்போட்டிருந்ததாகவும்கூட எண்ணி இருக்கலாம்.*

[11]*"பாரம்பரியமான குடும்பம்" என்ற ஏற்பாடு தேவனிடமிருந்து வந்ததாகவும், ஆதியாகமத்தின் தொடக்க அதிகாரங்களில் இருந்தே காணப்படுவதாகவும் உள்ளது. "பாரம்பரியக் குடும்பம்" என்பது, "ஒருபால், திருமணங்கள்" மற்றும் தேவனுடைய வசனத்திலிருந்து விலகிச் செல்லுதல்களை ("சேர்ந்து வாழும் ஏற்பாடு'' எதிர். திருமணம் செய்து கொள்ளுதல் போன்றவற்றை)ப் பரிந்துரைப்பவர்களின்*

*தாக்குதலின் கீழ் உள்ளது.* [12]*கூட்டத்தில் சிறுவர் சிறுமியர் இருந்தால், பிரசங்கத்தின் ஏதாவதொரு வேளையில் நீங்கள், பல தாய்மார்கள் தங்கள் பிள்ளைகள் உணவு உண்ணும்முன்பு கைகளைக் கழுவ வேண்டும் என்று வலியுறுத்துவது பற்றி இயேசுவின் வார்த்தைகள் ஒன்றும் குறிப்பிடுவதில்லை என்று வலியுறுத்த விரும்பலாம். தாய்மார்கள் சுத்தத்தைப் பற்றி அக்கறையாய் இருக்கின்றார்கள். இயேசு சடங்காச்சாரம் பற்றிப் பேசினார்.* [13]*அந்த வேளையில் விஷயம் இதுவாக இருந்தது என்று சீஷர்கள் புரிந்து கொண்டதாக மாற்குவின் வார்த்தைகள் அர்த்தப்படுத்துவதில்லை. மாற்கு முப்பது அல்லது அதற்குச் சற்று அதிகமான காலத்திற்குப் பின்பு இதை எழுதினார். பின்னோக்கிக் கண்ட ஏவுதல் பெற்ற மனிதர்கள், கிறிஸ்து கூறியவற்றில் இருந்து இந்த சத்தியம் தப்பிக்க முடியாத ஒரு முடிவாக உள்ளது என்று கண்டார்கள்.* [14]*மாற்கு 7:14, 15ன் கருத்துக்களுடன் பேதுரு, அப். நடபடிகள் 10ன் நிகழ்ச்சிகள் வரையிலும் கூடப் போராடிக் கொண்டிருந்தார்.* [15]R. C. Foster, *Studies in the Life of Christ* (Grand Rapids, Mich.: Baker Book House, 1971), 669. [16]*சபையையும் மற்ற கிறிஸ்தவர்களையும் புண்படுத்தும் வகையில் நமது சுயாதீனத்தைப் பயன்படுத்தக்கூடாது என்று வேதாகமம் நமக்குப் போதிக்கிறது (1 கொரி. 8:9ஐக் காணவும்), ஆனால் கிறிஸ்தவ சுயாதீனம் பற்றிய ஒரு ஆழமான கலந்துரையாடல் என்பது நாம் இந்த எடுத்துரைப்பில் கூறிமுடிக்கக் கூடியவற்றிற்கு அப்பால் உள்ளது.* [17]*சில தனிநபர்களும் சபைகளும் - தங்கள் வழிமுறையானது மேன்மையானது என்பதற்குத் தெளிவான ஆதாரங்கள் உள்ளன என்பதால் அல்ல, ஆனால் ''பாரம்பரியமான சபை'' என்ற வகையில் தாங்கள் கருத்துருக் கொண்டவற்றிற்கு எதிராக புரட்சி செய்கின்றார்கள் என்ற காரணத்தினால் - தங்களால் முடிந்த அளவுக்கு மாறுபட்டவர்களாக இருப்பதென்று தீர்மானித்து இருக்கின்றார்கள் என்பது உறுதி. இது ஆவிக்குரிய வகையில் "விடலைப் பருவ நடக்கையாக'' உள்ளது. மாறுபட்டிருக்க வேண்டும் என்பதற்காக மட்டும் மாறுபட்டு இருப்பதில் மதிப்பு எதுவும் இருப்பதில்லை.*

## 46

# மலை உச்சிகள் மற்றும் பள்ளத்தாக்குகள்

### *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #18*

VI. *மூன்றாவது பஸ்காவிலிருந்து இயேசு பெத்தானிக்கு வந்து சேர்ந்தது வரை (தொடர்ச்சி).*

H. *ஏரோதுவின் எல்லைப் பகுதியில் இருந்து இன்னொரு விலகிச் செல்லுதல்.*

1. *கலிலேயாவில்: இயேசுவின் விரோதிகளால் இன்னொரு தாக்குதல் - அதைத் தொடர்ந்து இன்னொரு பின்வாங்குதல் (மத். 15:39ஆ-16:12; மாற். 8:10-21).*
2. *பெத்சாயிதாவில்: பார்வையற்ற ஒரு மனிதர் குணமாக்கப்படுதல் (மாற். 8:22-26).*
3. *பிலிப்புச் செசரியாவின் அருகில்: நல்ல அறிக்கை (மத். 16:13-20; மாற். 8:27-30; லூக். 9:18-21).*
4. *பிலிப்புச் செசரியாவின் அருகில்: இயேசுவின் மரணம் முன்னுரைக்கப்பட்டது (மத். 16:21-28; மாற். 8:31-38; லூக். 9:22-27).*
5. *பிலிப்புச் செசரியாவின் அருகில் (எர்மோன் மலைமீது?): மறுரூபமாகுதல் (மத். 17:1-13; மாற். 9:2-13; லூக். 9:28-36).*

## அறிமுகம்

*முந்திய பாடங்களில் நாம், இயேசு கலிலேயாவிலிருந்து பின்வாங்குதல்களின் வரிசையொன்றைத் தொடங்கியிருந்ததைக் கண்டுள்ளோம்:[1] கலிலேயாக் கடலின் கிழக்குப் பகுதிக்கும் பெனிக்கியாவில் தீரு மற்றும் சீதோன் பகுதிகளுக்கும். இந்தப் பாடத்தில் நாம், கிறிஸ்து மீண்டும் பின்வாங்கியதை - இந்த வேளையில் வடக்கில் தொலைவாக, பிலிப்புச் செசரியாவின் மலைப் பகுதிகளுக்குச் சென்றதை - மீண்டும் காண்போம்.*

*ஒவ்வொரு பின்வாங்குதலும் தத்தமது முக்கிய நிகழ்வுகளைக்*

கொண்டிருந்தது. எடுத்துக்காட்டாக, அவற்றில் ஒன்றின்போது, கர்த்தர் ஐயாயிரம் பேருக்கு உணவளித்து பின்பு தண்ணீரின்மீது நடந்தார். ஆயினும், மற்றவை எதுவும், இதில் உள்ளதுபோல் நினைவில் நிற்கத்தக்க நிகழ்ச்சிகள் எதையும் அதிகமாகக் கொண்டிருந்ததில்லை. ஒரு வார காலத்தில், இந்த நிகழ்ச்சிகள் யாவும் நடைபெற்றன: நல்ல அறிக்கை; கிறிஸ்து தமது சபையைக் கட்டியெழுப்பும் திட்டம் வெளியிடப்படுதல்; இயேசுவின் மரணம் உயிர்த்தெழுதல் மற்றும் இரண்டாம் வருகை பற்றிய முதலாவது தெளிவான, குழப்பமற்ற அறிவிப்புகள் மற்றும் மறுரூபமாகுதல். இது கர்த்தருக்கு ஒரு அசாதாரணமான வேளை - அவரது ஊழியத்தில் ஒரு உச்சகட்டமான காலம், ஒரு திருப்புமுனை - என்பதைப் பெரும்பாலான விளக்கவுரையாளர்கள் ஒப்புக்கொள்ளுகின்றார்கள்.

இந்தப் பாடத்தை நான் "மலை உச்சிகள் மற்றும் பள்ளத்தாக்குகள்" என்று அழைக்கின்றேன், ஏனென்றால் இது இயேசுவுக்கு உணர்வுகளின் கடைக் கோடியின் வேளையாக இருந்திருக்க வேண்டும் (மாற். 8:12அ - வைக் காணவும்). முழுமையும் மனிதர் என்ற வகையில், கிறிஸ்து "எல்லாவற்றிலும்" நம்மைப் போல் ஆனார் (எபி. 2:17): அவர் மகிழ்வுடன் இருக்க முடிந்திருந்தது (லூக். 10:21), மற்றும் அவர் கவலையுடன் இருக்க முடிந்திருந்தது (லூக். 19:41; யோவா. 11:35). இந்த எடுத்துரைப்பில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின்போது, இயேசு இருதயத்தை உடைக்கும் பள்ளத்தாக்குகளிலிருந்து உணர்வு உற்சாகமூட்டும் மலை உச்சிகளுக்குச் சென்று பின் மீண்டும் பள்ளத்தாக்குகளுக்குத் திரும்பினார்.

நமது பாடத்தின் ஓட்டத்தில், நாம் நமது கர்த்தரின் இருதயத்தைப் பற்றி அதிகம் கற்றுக்கொள்வோம். நாம் நம்மைப் பற்றியும் அதிகம் கற்றுக்கொள்ளலாம்.

## ஒரு பள்ளத்தாக்கில்: இயேசு கோபமடைந்தார் (மத். 15:39-16:12; மாற். 8:10-21)

நமது பாடத்தின் தொடக்கத்தின்போது, இயேசு அப்போதுதான் கலிலேயாவிலிருந்து - மக்தலா மற்றும் தல்மனூத்தா பகுதிக்குத் - திரும்பி யிருந்தார் (மத். 15:39; மாற். 8:10). இந்த இடம் திபேரியாவுக்கு வடக்கு திசையில் நான்கு அல்லது அதற்குச் சற்றேக் குறைவான மைல்கள் தொலைவில் இருந்த மகதலா என்ற கிராமமாக இருந்திருக்கலாம்.[2]

### தமது விரோதிகளால் இடையூறு பண்ணப்பட்டார்

கிறிஸ்து வந்துசேர்ந்தபோது, அவரது பழைய விரோதிகளான பரிசேயர்கள் அங்கு காணப்பட்டு, "அவரோடே தர்க்கிக்கத் தொடங்கினார் கள்" (மாற். 8:11அ). அவர்கள் சதுசேயர்களுடன் இணைந்து காணப்பட்டது வினோதமானதாக இருந்தது (மத். 16:1). நாம் சதுசேயர்களைப் பற்றி முன்பு நமது பாடங்களில் பேசியிருக்கின்றோம்,[3] ஆனால் இதுவே சுவிசேஷ விவரங்களில் இவர்களைப் பற்றி முதன்முறையாகக் குறிப்பிடப்பட்ட இடமாக உள்ளது. சாதாரணமாகப் பரிசேயர்களும் சதுசேயர்களும்

*கடுமையான பகைவர்களாய் இருந்தார்கள்; ஆனால் இயேசுவை ஒரு பயமுறுத்தலாக இவ்விரு சாராருமே நினைத்ததால், அவரை அழிப்பதற்கு இவ்விருசாராரும் உடன்பாடு மேற்கொண்டார்கள்.*[4] *அரசியல் போல் வெறுப்புணர்வானது "வினோதமான இணைவுறவுகளை ஏற்படுத்த" முடியும்* [can make "strange bedfellows"[5]].

*இந்த வேளையில், பரிசேயர்கள் இதற்கு முன்பே விடுக்கப்பட்டிருந்த அறைகூவலை மீண்டும் விடுத்தார்கள்: கிறிஸ்துவிடம் அவர்கள், "வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் காண்பிக்க வேண்டும்" என்று கேட்டார்கள் (மாற். 8:11ஆ; மத். 12:38-42; 16:1; யோவா. 2:18ஐக் காணவும்). கர்த்தர், மரித்தவர்களை உயிருடன் எழுப்புதல் உட்பட நூற்றுக் கணக்கான அற்புதங்களைச் செய்திருந்ததால், அவர்கள் எதை விரும்பினார் கள் என்பதை மிகச் சரியாகக் கூறுவது கடினமானதாகவே இருக்கும். ஒருவேளை, ''வானத்திலிருந்து'' என்ற வார்த்தையில் தனிச்சிறப்பு இருக்கலாம்.*[6] *"வானம்'' என்பதற்கு மத்தேயு 16:2, 3ல் பயன்படுத்தப் பட்டுள்ள கிரேக்க வார்த்தை "ஆகாயம்" என்று அர்த்தப்படுவதாக உள்ளது. ஒருவேளை பரிசேயர்கள், யோசுவா செய்திருந்ததைப் போல் சூரியனையும் சந்திரனையும் நிறுத்தும்படி (யோசு. 10:12, 13), எலியா செய்திருந்ததுபோல் வானத்திலிருந்து அக்கினி இறங்கி வரச் செய்யும்படி (1 இரா. 18:38) அல்லது இவைபோன்ற வேறு செயல்களைச் செய்யும்படி இயேசுவிடம் அறைகூவல் விடுத்திருக்கலாம்.*

*மாற்கு சுவிசேஷத்தின்படி, பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்களின் விவாதமானது/எதிர்நிற்குதலானது கிறிஸ்துவை "ஆவியில் [ஆழமாக]" பெருமூச்சு விடும்படி செய்தது (மாற். 8:12). எந்த அற்புதமும் அது எவ்வளவுதான் காட்சிக்குரியதாக இருப்பினும் அவர்களைத் திருப்திப் படுத்தாது என்பதை அவர் அறிந்தார்.*[7] *அவர்கள் "எனக்கு இரத்தாம்பர நிறத்தைக் காண்பியுங்கள், பிற்பாடு நான் அப்படிப்பட்ட ஒரு நிறம் உள்ளது என்று நம்புவேன்'' என்று கூறிய பார்வையற்ற மனிதரைப் போல் இருந்தார்கள். அவர்களின் கண்கள் மூடப்பட்டிருந்தன; அவர்கள் இருதயங்கள் கடினப்பட்டிருந்தன; அவர்களை நம்ப வைக்கச் செய்வதற்கு வழியெதுவும் இல்லாதிருந்தது.*

*இயேசு அவர்களுக்கு ஒரு சுருக்கமான விடையளித்தார். அவர்கள் வானத்தை உற்றுப் பார்த்து தட்பவெப்ப நிலை என்னவென்று முன்னு ரைக்கக் கூடியவர்களாக இருந்தார்கள் என்று அவர் கூறினார்.*[8] *ஆயினும், அவர்கள் தங்களின் தப்பெண்ணம் கொண்ட இருதயங்களினால், இயேசுவையும் அவரது ஊழியத்தையும் கண்டும் அவர் யார் என்பதைப் புரிந்துகொள்ள முடியாதவர்களாக இருந்தார்கள் (மத். 16:2, 3).*[9] *அவர், "இந்தப் பொல்லாத விபசார சந்ததியார் அடையாளம் தேடுகிறார்கள்; யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை" என்று முடித்தார் (மத். 16:4அ). இது அவரது தெய்வீகத்துவம், அவரது உயிர்த்தெழுதல் (ரோமர் 1:5ஐக் காணவும்) ஆகியவற்றின் நிறைவான நிரூபணத்திற்கு ஒரு மறைவான குறிப்பாக இருந்தது. யோனா, மாபெரும் மீனின் வயிற்றினுள் மூன்று*

*நாட்கள் இருந்தது போலவே, கிறிஸ்துவும், கல்லறையினுள் மூன்று நாட்கள் இருப்பார் (மத். 12:40).*[10]

***தமது நண்பர்களால் நம்பிக்கை இழந்தார்***

*இயேசு கலிலேயாவில் நேரத்தைச் செலவிடத் திட்டமிட்டு இருந்திருந்தால், அதை அவரது விரோதிகளின் காலம் தாழ்த்தாத வருகையானது சாத்தியமற்றதாக்கிற்று. உடனடியாக, "[அவர்] அவர்களை விட்டுப் புறப்பட்டுப்போனார்" (மத். 16:4ஆ). தமது சீஷர்களுடன் ஒரு கப்பலைப்/படகைப் பிடித்து அவர் மீண்டும் ஒருமுறை கலிலேயாக் கடலின் கிழக்குப் பகுதியை நோக்கி முன்சென்றார் (மாற். 8:13) - இந்த வேளையில் பெத்சாயிதாவைச் சுற்றியுள்ள இடங்களுக்குச் சென்றார்.*[11]

*இந்தப் பயணத்தின்போது, கிறிஸ்து தமது சீஷர்களுக்கு ஒரு எச்சரிக்கை தந்தார்: "பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்த மாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" (மத். 16:6). மேலும் அவர், "ஏரோதின் புளித்த மாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்"*[12] *என்றும் கூறினார் (மாற். 8:15) - இது அநேகமாக, இயேசுவை அழிப்பதற்கு ஏற்கனவே பரிசேயர்களுடன் இணைந்து செயல்பட்டுக் கொண்டு இருந்த ஏரோதியர்களைக் குறிப்பிட்டிருக்கலாம் (மாற். 3:6).*[13]

*"புளித்த மா" என்ற உருவகம் வேத வசனங்களில், செல்வாக்கைக் குறிப்பிட விசேஷமாக எதிர்மறையான செல்வாக்கைக் குறிப்பிட அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது.*[14] *இயேசு அநேகமாக, தம்மை மேசியா என்று மக்கள் ஏற்றுக் கொள்வதைத் தடை செய்யும்படிக்கு இந்தக்குழுவினரால் போதிக்கப்பட்டிருந்த ஒருதலைப்பட்சமான கருத்துக்களைத் தமது சிந்தையில் கொண்டிருந்து இருக்கலாம். சீஷர்கள் கூட, மேசியா மற்றும் அவரது இராஜ்யம் பற்றிய தங்களது முன் அனுமானக் கருத்துக்களுடன் போராடிக் கொண்டு இருந்தார்கள். கர்த்தருடைய எச்சரிக்கையை, "நீங்கள் சத்தியத்தைக் காண்பதைத் தடை செய்யக் கூடியவைகளான முன் அனுமானக் கருத்துக்கள் உங்கள்மீது செல்வாக்குச் செலுத்தாதபடி எச்சரிக்கையாயிருங்கள்" என்று சொல்லாக்கப்படலாம்.*

*கிறிஸ்து எதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார் என்று அப்போஸ்தலர்கள் கருத்து எதுவும் கொண்டிராது இருந்தார்கள். "புளித்த மா" என்ற குறிப்பானது அவர்களை, அப்பத்தைப் பற்றி நினைக்கச் செய்தது. அவர்கள் தங்களுடன் ஒரே ஒரு அப்பத்தை மாத்திரமே கொண்டு வருமளவுக்குக் கிறிஸ்துவின் புறப்படுதல் திடீரென்று நடைபெற்றிருந்தது (மாற். 8:14). அவர்கள் தங்கள் எஜமானரின் வார்த்தைகள், பயணத்திற்காக போதிய உணவுப் பொருட்களை எடுத்து வராதது பற்றிய ஒரு கடிந்துகொள்ளுதலாக இருந்தன என்று முடிவு செய்தார்கள் (மத். 16:7; மாற். 8:16).*

*அவர்களின் புரிந்துகொள்ளுதலில் இருந்த குறைபாட்டினால் இயேசு இடர்ப்பட்டார், அவர்களை "அற்ப விசுவாசிகளே" என்று அழைத்தார் (மத். 16:8). அவர் ஐயாயிரம் பேருக்கு உணவளித்த இடத்தின் அருகில் அவர்கள் இருந்தார்கள் (லூக். 9:10-17), மற்றும் அந்த இடம், அவர் நான்காயிரம் பேருக்கு உணவளித்த இடத்திற்கு தொலைவில் இல்லை (மாற். 7:31;*

*8:1-9).[15] அவர் அற்பமான உணவுப் பொருளைக் கொண்டு ஆயிரக்கணக் கானவர்களுக்கு உணவளித்தார் என்றால் (மத். 16:9, 10), தேவைப்பட்டால் அவர் ஒரே ஒரு அப்பத்தைக் கொண்டு தங்களின் சிறுகுழுவினருக்கு உணவளிப்பதில் அவருக்கு இடர்ப்பாடு எதுவுமிராது என்பதை அவர்கள் புரிந்து கொண்டிருக்க வேண்டும் - அவர் அதைச் செய்யவில்லையாதலால், அவர்கள் சிந்தையில் இயல்பான அப்பத்தையே கொண்டிருந்தார்கள். கடைசியில் அப்போஸ்தலர்கள், "அவர் அப்பத்தின் புளித்த மாவைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று சொல்லாமல், பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் உபதேசத்தைக் குறித்தே அப்படிச் சொன்னார் என்று அறிந்துகொண்டார்கள்" (மத். 16:12).*

## *ஒரு பள்ளத்தாக்கில்: இயேசு* [*பிறரின்*] *உணர்வறிந்தார்* [Empathetic[16]] *(ஆனால் ...) (மாற். 8:22-26[17])*

*பொதுவாக நடைபெற்றது போலவே, கலிலேயாவிலிருந்து பின்வாங்கு வதற்கு கிறிஸ்து பல நோக்கங்கள் கொண்டிருந்தார்: அவர் தமது விரோதி களிடமிருந்து தொலைவில் இருக்க விரும்பினார் (மத். 16:4ஆ; மாற். 8:13ஐக் காணவும்), ஆனால் அவர் தமது சீஷர்களுடன் தனிமையில் நேரத்தைச் செலவிடவும் விரும்பினார். அந்தப் பிந்திய நோக்கமானது, அவரது மரணம் நெருங்கிக் கொண்டிருந்த அந்த வேளையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாயிற்று (மாற். 8:31). அவர் வடக்கு நோக்கி, இடையூறுகள் குறைவாயிருக்கக் கூடிய பிலிப்புச் செசரியாவின் திசைகளுக்கு முன்செல்ல முடிவு செய்தார்.*

*அவர்கள் அந்தத் திசையில் தங்கள் பயணத்தைத் தொடங்கி, "பெத்சாயிதா ஊருக்கு வந்தார்(கள்)" (மாற். 8:22அ). இது கடலின் வடகிழக்குக் கரையில் இருந்த பெத்சாயிதா ஜூலியஸ் என்ற ஊராக இருந்தது.[18] அவர்கள் அந்த ஊரை அடைந்தபோது மக்கள், குணமாக்கும் படி "ஒரு குருடனை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்" (வ. 22ஆ). அவர்களின் வேண்டுகோளைக் கிறிஸ்து மறுக்கவில்லை. எப்போதும் போலவே, அவர் பரிவிரக்கம் கொண்டிருந்தார் - ஆனால் திரளானவர்கள் தம்மைப் பின்தொடர்ந்தால் தங்கள் பயணம் தாமதப்படும் என்பதால் அவர், கூட்டம் ஒன்றுகூடுவதைத் தவிர்க்கத் தீர்மானித்தார். அவர் அந்த மனிதனைக் குணமாக்கு முன்பு, கிராமத்துக்கு வெளியே அழைத்துப்போய் (வ. 23அ), குணமாக்கிய பின்பு அதை ஒருவருக்கும் சொல்ல வேண்டாம் என்றும் நேராக வீட்டிற்குச் செல்லும்படியும் உண்மையில் கூறினார் (வ. 26).*

*குணமாக்கிய இந்த விஷயம், வழக்கத்திற்கு மாறான பல்வேறு அம்சங்களைக் கொண்டிருந்தது. இயேசு தாம் குணமாக்கியவர்களை எப்போதாவது மட்டுமே தொட்டிருந்தார். வேறு ஒருமுறை மாத்திரமே அவர், குணமாக்குதல் தொடர்பாகத் தமது உமிழ்நீரைப் பயன்படுத்தினார் (மாற். 7:33, 34). ஆயினும், இந்த ஒரு அற்புதம் மட்டுமே இரண்டு படிநிலைகளில் செய்யப்பட்டது என்பது இந்த நிகழ்ச்சியில் மிகவும்*

*வழக்கத்திற்கு மாறான அம்சமாக இருந்தது.*[19] *இது சீஷர்களின் புரிந்து கொள்ளுதல் மற்றும் விசுவாசம் ஆகியவற்றைக் குறித்து போராட்டத்தின் இரு வரலாறுகளுக்கு இடையில் செருகப்பட்டிருப்பதால் இது, விசுவாசம் என்பது உடனடியாக அல்ல ஆனால் படிநிலைகளிலேயே வருகிறது என்பதற்கான புலனறியும் பாடமாக உள்ளது என்று கருத்துத் தெரிவிக்கப் பட்டுள்ளது. உண்மையில் இயேசுவின் நோக்கம் என்னவாக இருந்தது என்பதை நாம் அறிவதில்லை.*

*தொடுதல், துப்புதல் மற்றும் இந்த அற்புதத்தின் தனிச்சிறப்பான இருபடிநிலை அம்சம் என்பதும் கூட தற்செயலானவைகளாய் இருந்தன என்று நாம் கண்டுள்ளோம். செயல்முறையில் அல்ல ஆனால் தமது நபர்த்துவத்தில்தான் வல்லமை உள்ளது என்பதை மனதில் ஆழப்பதியச் செய்வதற்குக் கிறிஸ்து பல்வேறு செய்முறைகளைப் பயன்படுத்தினார்.*

## *ஒரு மலை உச்சியின்மீது: இயேசு ஊக்கப்படுத்தப்பட்டார் (மத். 16:13-20; மாற். 8:27-30; லூக். 9:18-21)*

*பெத்சாயிதா ஜூலியஸில் இருந்து கிறிஸ்துவும் அவரது பின்பற்றாளர் களும் பிலிப்புச் செசரியாவின் பகுதிகள் கண்ணுக்குத் தெரியும் இடத்திற்குக் கடைசியில் சென்று சேரும் வரையிலும் தங்கள் பயணத்தை தொடர்ந்தார் கள். இங்கு இயேசு, தாம் யார் என்பதை அப்போஸ்தலர்கள் உண்மை யிலேயே புரிந்துகொண்டிருந்தார்களா என்பதைக் குறித்து, அவர்களிடத்தில் கேள்விகள் கேட்கவிருந்தார். இது சீஷர்களுக்கு மிகவும் முக்கியம் வாய்ந்த பரீட்சையாக இருந்தது.*

### ஒரு விசேஷித்த தேர்வு

*கிறிஸ்து ஜெபித்தபின்பு (லூக். 9:18), அவர் தமது சீஷர்களை அழைத்து, "மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள்?" என்று கேட்டார் (மத். 16:13). அதற்கு அவர்கள்: "சிலர் உம்மை யோவான் ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், வேறு சிலர் எரேமியா, அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள்" என்றார்கள் (மத். 16:14; மாற். 6:14-16; லூக். 9:7, 8 ஆகியவற்றையும் காணவும்).*[20] *இந்த மனிதர்கள் ஒவ்வொருவரும் தேவனுக்குத் தனிச்சிறந்த ஊழியக்காரர்களாக இருந்திருந்தார்கள். இது ஒரு பாராட்டுரை போலத் தொனித்திருக்கலாம் - ஆனால் இது அப்படிப்பட்டதாக இருந்ததில்லை. இது ஒரு புறக் கணித்தலாக இருந்தது: இயேசுவை மேசியா என்ற வகையில் [ஏற்றுக் கொள்ளாமல்] புறக்கணித்தலாக இருந்தது.*

*பின்பு இயேசு சகலத்திலும் முக்கியமான கேள்வியைக் கேட்டார்: "நீங்கள் என்னை யாரென்று சொல்லுகிறீர்கள்?" (மத். 16:15). அவரது அப்போஸ்தலர்கள் அவரை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா என்று ஆரம்பத்தில் நினைத்திருந்ததால் அவரைப் பின்பற்றினார்கள் (யோவா.*

*1:41, 49) - ஆனால் அவர், மேசியா பற்றிய அவர்களின் தேசீய எதிர்பார்ப்பு களை நிறைவேற்றாதிருந்தார். சற்றுக் காலத்திற்கு மாபெரும் கூட்டம் அவரைப் பின்தொடர்ந்தது, ஆனால் அதன் பிறகு, பொது ஜனக் கருத்தின் அலையானது அவருக்கு எதிராகத் திரும்பிற்று (யோவா. 6:66). இவை எல்லாவற்றின் வெளிச்சத்தில், இன்னும் அப்போஸ்தலர்கள் அவரில் நம்பிக்கையாய் இருந்தார்களா? அவர் மேசியாவாயிருந்தார் என்பதில் அவர்கள் இன்னமும் நிச்சயமாக, கற்பாறைபோல் உறுதியான நிச்சயத்தில் இருந்தார்களா?*

*நல்ல அறிக்கை என்று அறியப்பட்டுள்ளதாக இருப்பதைக் குரலெழுப்பிப் பேதுரு பேசினார்:[21] ''நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" (மத். 16:16). "கிறிஸ்து" என்பது "மேசியா" என்பதன் கிரேக்க வடிவமாக உள்ளது. பேதுரு, இயேசுவே தீர்க்கதரிசனங்களினால் வாக்களிக்கப்பட்டவர், யூதர்களால் எதிர்பார்க்கப்பட்டிருந்தவர் என்று தாம் நம்பியிருந்ததை/விசுவாசித்திருந்ததை உறுதிப்படுத்தினார்.*

***விசேஷித்த ஒரு விளக்கம்***

*இயேசு, ''யோனாவின் குமாரனாகிய சீமோனே* [Barjona[22]] *நீ பாக்கியவான், மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்.[23] மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்'' (மத். 16:17, 18அ) என்று கூறுகையில் அவரது குரலில் இருந்த ஊக்கமான தன்மை பற்றிக் கற்பனை செய்வது கடினமானதாக இருப்பதில்லை.*

*''பேதுரு'' மற்றும் ''கல்'' என்ற வார்த்தையின்மீது வாக்குவாதம் பற்றியெரிந்து எழுந்துள்ளது. வசனம் 18, சபையானது பேதுருவின்மீது கட்டப்பட்டதாகப் போதிக்கிறது என்பதில் கத்தோலிக்கர்கள் மனநிறைவு அடைகின்றார்கள்.[24] "பேதுரு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, "பாறை" என்று அர்த்தப்படுவது உண்மையே - ஆனால் இயேசு, வசனம் 18ல் "பாறை" என்பதற்கு மாறுபட்ட இரண்டு வார்த்தைகளைப் பயன்படுத்தினார். Petros என்பது "பேதுரு" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையாயிருக்க, petra என்பது [தமிழில்] "கல்" என்று மொழிபெயர்க்கப் பட்ட வார்த்தையாக உள்ளது. மாறுபட்ட வார்த்தைகள் பயன்படுத்தப் பட்டிருப்பது மட்டுமின்றி, இவற்றில் முதலாவது ஆண்பாலைக் குறிப்பதாக வும் இரண்டாவது பெண்பாலைக் குறிப்பதாகவும் உள்ளன. மற்றும், இவ்வார்த்தையின் அர்த்தங்களும் மாறுபட்டவையாக உள்ளன. "Petra" என்பது திடமான ஒரு பாறையைக் குறிப்பதாயிருக்கையில், petros என்பது வெட்டப்பட்ட ஒரு கல் அல்லது பாறையை, அல்லது எறியப்படக்கூடிய அல்லது சுலபமாக நகர்த்தப்படக் கூடிய ஒரு கல்லைக் குறிப்பதாக உள்ளது" என்று* W. E. *வைன் அவர்கள் எழுதினார்.[25]*

*கிறிஸ்து இவ்விடத்தில் வார்த்தை விளையாட்டு ஒன்றைப் பயன் படுத்தினார். எனது மனதில் நான், அவர் ஒரு கல்லைத் தமது கைகளில் தூக்கியெறிந்து கொண்டு, உண்மையில் "நீ பேதுருவாய் ஒரு கல்லைப்போல்*

*இருக்கின்றாய்" என்று கூறியதை என்னால் காண முடிகிறது. பின்பு அவர் பிலிப்புச் செசரியாவின் பிதுங்கியிருந்த பாறை அஸ்திபாரத்தை நோக்கிச் சைகை காண்பித்து "ஆனால் அதுபோன்ற ஒரு கல்லின்மீது நான் எனது சபையைக் கட்டுவேன்" என்று கூறுவதைக் காண்கின்றேன்.*

*கர்த்தர் தமது சபையைக் கட்டியெழுப்பவிருந்த கல் எதுவாக இருந்தது? கத்தோலிக்கரல்லாத விளக்கவுரையாளர்களில் பெரும்பான்மையானவர்கள், இது பேதுரு அப்போதுதான் செய்திருந்த சத்தியம் என்ற அஸ்திபாரக் கல்லாக இருந்தது என்று ஒப்புக்கொள்ளுகின்றார்கள்.*[26] *எடுத்துக்காட்டாக,* J. W. *மெக்கார்வீ அவர்கள் பின்வருமாறு சுட்டிக்காண்பித்தார்:*

> *... ஒப்புவமையில், இயேசு தாமே கட்டுபவரின் நிலைப்பாட்டையும், சீமோன் பேதுரு திறவுகோலை உடையவர் என்ற நிலைப்பாட்டையும் மேற்கொண்டிருப்பதால், இவர்களில் எவரும் அஸ்திபாரமென்ற வகையில் தக்கவிதமாய்க் கருதப்பட முடியாது. ஆகையால், அஸ்திபாரம் என்பது பேதுரு அப்போதுதான் பேசிய அறிக்கையாகவே இருக்க வேண்டும், ஏனெனில் இதுவே இப்படிப்பட்ட நடைமுறைகள் யாவற்றுக்கும் பொறுப்பாக எஞ்சியுள்ளது.*[27]

*பேதுரு/கல் வாக்குவாதமானது இந்த நிகழ்ச்சியின் உண்மையான தனிச்சிறப்பை மறைத்துள்ளது என்பது எவ்வளவு கவலைக்குரியதாக உள்ளது! பேதுருவின் அறிக்கையினால் உற்சாகப்படுத்தப்பட்ட இயேசு, தமது சீஷர்கள் எதிர்காலத்தை வெளிப்படையாய் அறியத் தயாராயிருந்தார்கள் என்று நினைத்தார். இவ்விதமாய் அவர், தாம் ஒரு சபையை, தமது சபையை (எபே. 1:22, 23; 2:16; 3:10, 11; 4:4; கொலோ. 1:18 ஆகியவற்றைக் காணவும்) நிலைநாட்ட வந்திருந்ததாகத் திகைப்புக்குரிய தமது முதலாவது கூற்றை எடுத்துரைத்தார். இந்தக் கூற்றை "திகைப்புக்குரியது" என்று நான் அழைக்கின்றேன், ஏனென்றால், இது முற்றிலும் எதிர்பாராததாக இருந்திருக்க வேண்டும். இது பொருளாதாய, இயல்பான இராஜ்யம் என்ற யூதத்துவக் கருத்துடன் பொருந்தியதாக இருக்கவில்லை.*

*இந்த அறிவிப்புகளை ஏற்படுத்தியதில், கிறிஸ்து தமது சீஷர்கள் நன்கு பழக்கப்பட்டிருந்த மேசியாத்துவ/இராஜ்யம் என்ற சொல்லாக்கத்தை முற்றிலுமாகக் கைவிட்டு விடவில்லை (மத். 16:19ஐக் காணவும்). ஆனால், உண்மையில் அவர், தமது இராஜ்யமானது இயல்பில் உலகத்திற்குரியதாயிராது, மாறாக ஆவிக்குரியதாகயிருக்கும் என்றே அறிவித்தார். அவர் ஒரு அரசியல் நிறுவனத்தை நிலைநாட்டுவதில் ஆர்வமாயிருந்ததில்லை; அவர் தமது சபையைக் கட்டப் போகின்றவராயிருந்தார்.*

*இது புதிய ஏற்பாட்டில் முதன் முதலாக "சபை" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்ட இடமாக உள்ளது, ஆனால் உறுதியாகவே இது கடைசியான இடமல்ல. "சபை" என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட முறைகள் காணப்படுகிறது.*[28] *இயேசு உயிர்த்தெழுந்தபின் இராஜ்யம்/சபை நிலைநாட்டப்பட்ட பின்பு, கிறிஸ்துவின் பின்பற்றாளர்களை ஒரு குழுவாகக் குறிப்பதற்கு [சபை என்ற] இந்த வார்த்தையே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டது.*

நாம் மத்தேயு 16:18, 19ல் பேதுருவிடம் இயேசுவின் கூற்றுக்குத் திரும்புவோம். மேசியாத்துவ இராஜ்யம் அழிக்கப்படாததாக இருக்கும் என்று தானியேல் தீர்க்கதரிசனம் கூறியிருந்தார் (தானி. 2:44அ). கிறிஸ்து இப்போது, தமது சபை/இராஜ்யம் ஒருக்காலும் அழிக்கப்படாது என்று அறிவித்தார்: "பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" (மத். 16:18ஆ). "பாதாளம்" என்பது மரித்தவர்கள் இருக்கும் "காணப்படாத உலகமாக" உள்ளது, ஒவ்வொரு தனிநபருக்கும் மரணம் என்பது பாதாள உலகின் "வாசலாக" உள்ளது. இயேசுவின் மரணம் சபையை அழிக்காது: பிசாசானவன், இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது, தேவனுடைய திட்டங்களுக்குத் தான் [பிசாசு] தடங்கலை ஏற்படுத்தியதாக நினைத்தான் என்பது உறுதி, ஆனால் அந்த மரணம் சபையின் இருப்புக்கு இன்றியமை யாததாக இருந்தது (அப். 20:28; எபே. 5:23, 25). சபை உறுப்பினர்களின் மரணம்கூட சபையை அழித்து விடாது.[29] பிற்பாடு சாத்தான், கிறிஸ்தவர் களுக்கு எதிராகத் துன்புறுத்துதலைத் தொடங்கி வைப்பான், ஆனால் அவனது கொடுங்கோன்மையானது சபையை அழிப்பதற்குப் பதில் அதைப் பரவச் செய்வதாய் இருக்கும் (அப். 8:1-4).

கிறிஸ்து அடுத்தபடியாக, வெளிப்படையாகப் பேசிய அப்போஸ் தலருக்கு பின்வரும் வாக்குறுதியின் மூலம் வெகுமதியளித்தார்: "பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத் தில் நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப் பட்டிருக்கும்" (மத். 16:19).

அந்த வாக்குத்தத்தத்தின் - கட்டுதல் மற்றும் கட்டவிழ்த்தல் என்ற - இரண்டாம் பாகம் பேதுருவின் தனிப்பட்ட உரிமையாக இருந்ததில்லை; அந்த வாக்குத்தத்தம் பிற்பாடு எல்லா அப்போஸ்தலர்களுக்கும் விரிவாக்கப் பட்டது (மத். 18:18). வேத வசனம் எவ்வாறு உள்ளது என்று கவனியுங்கள்: "பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ, அவைகள் பரலோகத் திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்ட விழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்." இது சற்றே அழகற்ற விதத்தில் உள்ளது,[30] ஆனால் இது ஒரு நேரடியான மொழிபெயர்ப்பாக உள்ளது. ஏவுதல் பெற்ற அப்போஸ்தலர்களின் உபதேசத்தின் முக்கியத்துவத்தை (அது மனிதர்களைக் "கட்டி" மற்றும் "கட்டவிழ்த்து" விடுவதை) இயேசு வலியுறுத்தினார், ஆனால் அவர்கள் தங்கள் போதனையின் ஆதாரமூலங்களாக இருக்க மாட்டார்கள் என்பதை யும் அவர் வலியுறுத்தினார்: "கட்டுதல்" மற்றும் "கட்டவிழ்த்தல்" என்பவை பரலோகத்தில் தொடங்கும் மற்றும் அதன் பின்பு (அதன் பின்பு மாத்திரமே) அப்போஸ்தலர்கள் இந்த பூமியில் ஏவுதலினால் "கட்டுவார்கள்" மற்றும் "கட்டவிழ்ப்பார்கள்."

பேதுருவுக்கு இயேசு ஒரு விசேஷித்த சிலாக்கியத்தை - அந்த வாக்குத் தத்தத்தின் முதல் பகுதியை - கொடுத்தார்: "பரலோக ராஜ்யத்தின் திறவு கோல்களை நான் உனக்குத் தருவேன்." திறந்து, உள்நுழைதல் என்பதை அனுமதித்தலே திறவுகோல்களின் அடிப்படை நோக்கமாக இருந்தது.

இரட்சிக்கப்படுவது எவ்வாறு என்பதை, மற்றும் இவ்விதமாக, இராஜ்யம்/ சபை என்பதற்குள் நுழைவது எவ்வாறு என்பதை யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் முதன்முதலில் கூறியவர் பேதுருவே ஆவார் (அப். 2:14-43; 10:24-43, 47; 15:7). இரட்சிக்கப்படுவது எவ்வாறு என்பதை மக்களுக்குக் கூறுதல் என்பது பேதுருவால் மட்டுமே மகிழ்வுடன் அனுபவிக் கப்பட்ட சிலாக்கியமாக இருந்ததில்லை; எல்லா அப்போஸ்தலர்களும் இரட்சிப்பின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். இதை முதன்முதலாகச் செய்தது என்பது பேதுருவுக்கு அளிக்கப்பட்ட விசேஷித்த வெகுமதியாக இருந்தது.

அது ஒரு உணர்வெழுச்சியூட்டும் நாளாக இருந்தது. சீஷர்கள் இன்னும் அதிகமாகக் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது, ஆனால் அவர்களின் விசுவாசம் கட்டுக்கோப்பானதாக இருந்தது. இயேசு சந்தோஷ முள்ளவராய் இருந்திருக்க வேண்டும் - ஆனால் "... தாம் கிறிஸ்துவாகிய இயேசு என்று ஒருவருக்கும் சொல்லாதபடிக்குத் தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளையிட்டார்" (மத். 16:20). அந்த சத்தியத்தைத் தைரியமாய் அறிவிக்க வேண்டிய வேளை வரும் (அப். 2:36ஐக் காணவும்), ஆனால் அந்த வேளை இன்னும் வந்திருக்கவில்லை.

## ஒரு பள்ளத்தாக்கில்: இயேசு தடை செய்யப்பட்டார் (மத். 16:21-28; மாற். 8:31-38; லூக். 9:22-27)

இயேசுவின் சீஷர்கள் எதிர்காலத்தைப் பற்றி கற்றுக்கொள்ளத் தயாராக இருந்தார்கள் என்று அவர் நினைத்ததால், அவர் தமது சபை நிலைநாட்டப் படுதல் பற்றி அறிவித்திருந்தார். ஆயினும் அவர்கள் அந்த அறிவிப்பின் துணைப்பொருளை ஏற்றுக்கொள்ளுதலைக் கடினமானதாகக் காண்பார் கள்: அவரது மரணமின்றி சபை இருக்க முடியாது. சபை என்பது அவரது இரத்தத்தினால் இரட்சித்துக்கொள்ளப்பட்ட மக்களைக் கொண்ட சரீரமாக இருக்கும் (எபே. 5:23, 25; அப். 20:28ஐக் காணவும்). தாம் மரிக்க வேண்டும் என்று தமது அப்போஸ்தலர்களுக்கு அவர் கூற வேண்டிய வேளை வந்திருந்தது.

### தமக்குக் காத்திருந்த துன்பங்களினிமித்தம் பாரப்படுதல்

கிறிஸ்து, தமக்குக் காத்திருந்த மரணத்தைப் பற்றி இதற்கு முன்பு மறைவான சொற்றொடர்களில் பேசியிருந்தார் (மத். 9:15; 10:38; 12:38-40; யோவா. 2:19-22; 3:14, 15), ஆனால் இப்போது அவர் உருவகமான மொழிநடையைக் கைவிட்டு விட்டார். மத்தேயு, "அதுமுதல் இயேசு, தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரக ராலும் பல பாடுகள்பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங் கினார்'' என்று எழுதினார் (மத். 16:21). ''மூப்பராலும் பிரதான

ஆசாரியராலும் வேதபாரகராலும்" என்பது சனதெரீன் சங்கத்தைக்[31] குறிக்கும் ஒருபொருள் பலசொல்லாக இருந்தது, அதில் இம்மூன்று குழுவினரும் அடிப்படை உறுப்பினர்களாய் இருந்தார்கள். "வேண்டும்" என்ற வார்த்தையை உங்கள் சிந்தையில் அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள்: இயேசு தேவனுடைய திட்டங்களையும் நோக்கங்களையும் நிறைவேற்று வதற்கு உறுதி எடுத்துக்கொண்டிருந்தார் (யோவா. 6:38)! மாற்கு சுவிசேஷ விவரமானது, "மனுஷகுமாரன் ... கொல்லப்பட்டு, மூன்று நாளைக்குப் பின்பு உயிர்த்தெழுந்திருக்க வேண்டியதென்று அவர்களுக்குப் போதிக்கத் தொடங்கினார். இந்த வார்த்தையை அவர் *தாராளமாகச்* சொன்னார்" (மாற். 8:31, 32அ).

### தம்மைச் சுற்றியிருந்தவர்களின் தவறான புரிந்துகொள்ளுதலினால் பாரப்படுதல்

இயேசுவின் கூற்றிலிருந்த தெளிவான தன்மையானது, சீஷர்கள் அதைப் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்வதை சுலபமானதாக ஆக்கியிருக்க வில்லை. மேசியாவின் இராஜ்யம் அரசியல்ரீதியான இயல்பு கொண்டிருக் கும் என்று அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதிலும் போதிக்கப் பட்டிருந்தார்கள். ஆகவே, மரித்தல் பற்றிய கிறிஸ்துவின் வார்த்தைகள் அவர்களுக்கு எவ்விதமான கருத்தறிவையும் ஏற்படுத்தவில்லை. நீங்கள் மதரீதியாகத் தவறான வகையில் வளர்க்கப்பட்டு, பின்பு சத்தியத்தைப் புரிந்துகொள்ளும் நிலைக்கு வந்திருந்தால், உங்களால் அவர்களின் போராட்டத்தை மதிக்க முடியும்.

கர்த்தருடைய அறிவிப்பைக் குறித்து விசேஷமாகப் பேதுரு பிரச்சனைகள் கொண்டிருந்தார். அவர் அப்போதுதான் இயேசுவை மேசியாவாகிய கிறிஸ்து என்று அறிக்கையிட்டிருந்தார்! அவரது சிந்தையில், இயேசு முன்சென்று தமது இராஜ்யத்தை - உலகப்பிரகாரமான இராஜ்யத்தை - நிலைநாட்டுவார் என்ற கருத்தை அவர் கொண்டிருந்தார்! அப்போஸ்தலர்களைப் பொறுத்தமட்டில், மரித்த மேசியா என்ற கருத்தானது ஆளுகை செய்யும் மேசியா என்ற கருத்துடன் ஒப்புரவாக முடியாததாக இருந்தது.[32] ஆகையால் அவர் [பேதுரு] கிறிஸ்துவைத் திருத்தும் பொறுப்பைத் தாமே ஏற்றுக்கொண்டார்!

மற்ற சீஷர்களுக்கு முன்பாக எஜமானரைச் சங்கடப்படுத்த விரும்பாத நிலையில் பேதுரு "அவரைத் தனியே அழைத்துக்கொண்டுபோனார்." அவர்கள் தனிமையில் இருக்கும்போது, பேதுரு "ஆண்டவரே, இது உமக்கு நேரிடக் கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்து கொள்ளத் தொடங்கினான்" (மத். 16:22). இந்த வேளையில் பேதுருவின் துடுக்குத்தனம் ஏறக்குறையப் புரிந்துகொள்ள முடியாததாக உள்ளது - ஆனால் கர்த்தரைப் பின்பற்றுவதாக அறிவித்துக் கொண்டு, ஆயினும், அவர் அறிந்துள்ளதைவிட தாங்கள் அதிகம் அறிந்துள்ளதாக நினைக்கின்ற மக்கள் எப்போதுமே இருந்துள்ளார்கள்.

[இவ்வேளையில்] இயேசுவின் கடிந்துகொள்ளுதலானது வெளிப்படை யாய்ப் பேசிய அந்த அப்போஸ்தலருக்கு அவர் எப்போதும் கொடுத்ததை

*விட அதிகக் கடுமையானதாக இருந்தது: "அவரோ திரும்பிப் பேதுருவைப் பார்த்து: 'எனக்குப் பின்னாகப் போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக் கிறாய் ...' என்று கூறினார்" (மத். 16:23). சற்று நேரத்திற்கு முன்பு[தான்] அவரை [பேதுருவை] அவர் [இயேசு], "பேதுரு" என்று, தமது நம்பிக்கைக் குரிய "கல்" என்று அழைத்திருந்தார். இப்போது அவர், அவரை "சாத்தான்" என்று, அசுத்த ஆவிகொண்டுள்ள எதிரி என்று அழைத்தார்.[33] கிறிஸ்து தமது அடைவிடத்தை அடைவதிலிருந்து தடை செய்ய முயற்சி செய்ததில் பேதுரு பிசாசின் கருவியாக ஆனார் என்று இயேசு கூறினார்.[34]*

*பேதுரு சிலுவையை தெய்வீகத்துவக் கருத்துக் கண்ணோக்கில் காண்பதற்குப் பதில் மனிதக் கண்களுடன் கண்டார் என்பதே அவரது பிரச்சனையாக இருந்தது. இயேசு அவரிடத்தில், "... நீ தேவனுக்கு ஏற்றவை களைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய்" (மத். 16:23ஆ) என்று கூறினார்.*

*கர்த்தருடைய சிந்தையானது வரவிருந்த தமது மரணத்தினால் பாரப்பட்டிருந்தது (மத். 26:38, 39). அவரது சீஷர்கள் அவரது இராஜ்யம் மற்றும் ஆளுகையின் உண்மையான இயல்பைப் புரிந்துகொள்ளத் தவறியது அந்தப் பாரத்துடன் இன்னொரு பாரத்தைக் கூட்டிற்று. அவர்கள் மரணம் என்பதற்குப் பதில் மணிமுடிகள்[35] என்ற எண்ணத்தில், சிலுவைகளுக்குப் பதில் கிரீடங்கள் என்ற எண்ணத்தில், துன்புறுத்தப்படுதலுக்குப் பதில் துதிக்கப்படுதல் என்ற எண்ணத்தில் நினைத்துக் கொண்டிருந்தார்கள்.*

*இயேசு எல்லா சீஷர்களையும் வரவழைத்து அவர்களிடம் பின்வருமாறு கூறினார்:[36]*

> *ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன். தன் ஜீவனை ரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான். மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப் படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? (மத். 16:24-26; மாற். 8:34-37; லூக். 9:23-25ஐயும் காணவும்).*

*அவர், "ஆதலால், விபசாரமும் பாவமுமுள்ள இந்தச் சந்ததியில் என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுவானோ, அவனைக் குறித்து மனுஷகுமாரனும் தமது பிதாவின் மகிமைபொருந்தின வராய்ப் பரிசுத்த தூதர்களோடுங்கூட வரும்போது வெட்கப்படுவார்" என்றும் கூடக் கூறினார் (மாற். 8:38). இந்த வார்த்தைகள் பொதுவான பயன்பாட்டைக் கொண்டுள்ளன, ஆனால் இயேசு தமது மரணம் பற்றி அப்போது பேசியிருந்த வார்த்தைகளினிமித்தம் பேதுரு அப்போதுதான் "வெட்கப்பட்டிருந்தார்" என்பதைச் சிந்தையில் வைத்துக் கொள்ளுங்கள்.*

*கிறிஸ்து தமது கடிந்துகொள்ளுதலில், "பிதாவின் மகிமைபொருந்தின வராய்ப் பரிசுத்த தூதர்களோடுங்கூட" வருவதைக் குறிப்பிட்டிருந்தார்.*

இப்போது அவர் தமது உரையைக் கேட்டவர்களுக்கு, "மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமைபொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார்; அப்பொழுது, அவனவன் கிரியைக்குத் தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்" என்று உறுதிப்படுத்தினார் (மத். 16:27). இதுவே இரண்டாவது வருகை பற்றிய தெளிவான முதல் முன்னுரைத் தலாக இருந்தது. இந்தப் புதிய வெளிப்படுத்துதலின் எல்லா விஷயங்களி லிருந்தும் அப்போஸ்தலர்களின் சிந்தனைகள் சுற்றி சுழன்றிருக்கும்!

கர்த்தர் தமது சீஷர்களிடத்தில், தமது மரணம் பற்றிய தமது முன்னு ரைத்தலானது, தமது இராஜ்யத்தை நிலைநாட்டுதலுக்கான தமது திட்டங்களைத் தாம் கைவிட்டு விட்டதாக அர்த்தப்படுத்துவதில்லை என்று உறுதிப்படுத்தினார்: "இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசி பார்ப்பதில்லை யென்று,[37] மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மாற். 9:1; மேலும் மத். 16:28; லூக். 9:27ஐயும் காணவும்). "பலத்தோடே" என்ற சொற்றொடர் மீது நெருங்கிய கவனம் செலுத்துங்கள். கிறிஸ்து தமது பிதாவினிடத்திற்கு ஏறிச் செல்லுவதற்கு முன்பு, தங்கள்மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கிவரும் போது "பலமடைவார்கள்" என்று கிறிஸ்து அப்போஸ்தலர்களிடத்தில் கூறுவார் (அப். 1:8) மற்றும் அவர்கள் "உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேமில் தங்கியிருக்க வேண்டும்" (லூக். 24:49) என்றும் அவர்களுக்குக் கூறவிருந்தார். கிறிஸ்து பரத்துக்கேறின பின்பு பத்து நாட்கள் கழித்து, பெந்தெகொஸ்தே என்னும் யூதர்களின் பண்டிகை நாளில் அவர்கள்மீது பரிசுத்த ஆவியானவரின் வல்லமை வந்திறங்கிற்று (அப். 2:1-4) மற்றும் இயேசு தமது சபையை/இராஜ்யத்தைக் கட்டுவதாகக் கூறிய தமது வாக்குறுதியை நிறைவேற்றினார். (அப். 5:11; 8:1; கொலோ. 1:13; வெளி. 1:6, 9 ஆகிய வசனங்களை வாசிக்கவும்.)[38]

அப்போஸ்தலர்கள் தங்கள் வாழ்நாட்களிலேயே இராஜ்யம் பலத் தோடே வருவது பற்றிக் கிறிஸ்து எதை அர்த்தப்படுத்தினார் என்பதைப் புரிந்துகொண்டார்களா? இல்லை, சபை நிலைநாட்டப்படுதல், அவரது இரண்டாவது வருகை ஆகியவைபற்றி அவர்கள் புரிந்துகொண்டிருந்ததை விட அதிகமாக இதைப் பற்றி அவர்கள் [அப்போது] புரிந்துகொண்டிருக்க வில்லை - ஆனால் விதையானது நடப்பட்டிருந்தது.

## ஒரு மலை உச்சியின்மீது: இயேசு ஊக்கமூட்டினார் (மத். 17:1-13; மாற். 9:2-13; லூக். 9:28-36)

அடுத்த சில நாட்களில் வெளியிடப்பட்டவை எவை என்று சுவிசேஷ விவரங்கள் நமக்குக் கூறுவது இல்லை. இயேசுவின் வார்த்தைகளை, அவைகள் சீஷர்களின் வாழ்வில் அது வரையிலும் போதித்து இருந்த வற்றுடன் சேர்த்து ஒப்புரவாக்குவதில் சீஷர்கள் போராடுகையில் வளர்ந்த மன இறுக்கத்தை நம்மால் கற்பனை செய்ய மட்டுமே முடியும். அந்த

*வேளையின் முடிவின்போது, கர்த்தர் அநேகமாக இன்னொரு நினைவு கூரத்தக்க அனுபவத்திற்குத் தயாராயிருந்தார், மற்றும் அவ்விதமான ஒன்றை அவர் நேர்ப்பொருளாகவே பெற்றுக் கொண்டார்.*

### *மலையின்மீது: இயேசு தயாராயிருத்தல்*

> *ஆறு நாளைக்குப் பின்பு, இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவனுடைய சகோதரனாகிய யோவானையும் கூட்டிக்கொண்டு தனித்திருக்கும்படி உயர்ந்த மலையின்மேல் போய், அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மை யாயிற்று. அப்பொழுது மோசேயும் எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள் (மத். 17:1-3).*

*மோசே, எலியா மற்றும் கிறிஸ்து ஆகியோருக்கிடையில் நடந்த கலந்துரையாடலின் கருத்தை லூக்கா பதிவுசெய்தார்: அவர்கள், "அவர் எருசலேமிலே நிறைவேற்றப்போகிற அவருடைய மரணத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்" (லூக். 9:31). மேசியா மரித்தல் என்ற கருத்தைக் குறித்துச் சீஷர்கள் போராடிக் கொண்டிருந்தார்கள், ஆனால் பழைய ஏற்பாட்டின் இந்த நாயகர்கள், அவரது மரணமானது எல்லாக் காலங் களிலும் விசுவாசம் நிறைந்தவர்களுக்கு எவ்வளவு இன்றியமையாததாக இருந்தது என்பதைப் புரிந்துகொண்டிருந்தார்கள் (எபி. 9:15).*

*இந்த அனுபவத்தினால் மூழ்கடிக்கப்பட்டு, என்ன கூறுவதென்று அறியாத நிலையில் (மாற். 9:6), பேதுரு, "ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்குச் சித்தமானால், இங்கே உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம்" என்று உளறிக்கொட்டினார் (மத். 17:4). அவர் பேசுகையில், "இதோ, ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது. 'இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமா யிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள்' என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று!" (மத். 17:5). அந்த சத்தம் பேசிய பின்பு, "உடனே அவர்கள் சுற்றிலும் பார்த்தபோது, இயேசு ஒருவரைத் தவிர வேறொருவரை யும் காணவில்லை" (மாற். 9:8).*

*இந்தத் தரிசனமானது சீஷர்களின் பிரயோஜனத்திற்கானதாக இருந்தது: இது பேதுரு ஏற்படுத்தியிருந்த அறிக்கையை உறுதிப்படுத்திற்று மற்றும் எருசலேமில் கர்த்தருக்கு வரவிருந்த மரணம் பற்றிய அவரது முன்னு ரைத்தலை நிச்சயப்படுத்திற்று. இது, அவர் கூறுவது எதுவாயிருப்பினும், அப்போஸ்தலர்கள் "அவருக்குச் செவிகொடுக்க" வேண்டும் என்பதை வலியுறுத்திற்று!*

*முன் எப்போதும் நடந்திராத இந்த நிகழ்ச்சி இயேசுவின் பிரயோஜனத் திற்கானதாகவும் இருந்தது. அவரது மரணத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பன்னிருவரும் புரிந்துகொண்டிருக்கவில்லை, ஆனால் மோசேயும் எலியாவும் அதைப் புரிந்துகொண்டிருந்தார்கள். மனிதர்கள் அவரைப்*

*புறக்கணித்து இருந்திருக்கலாம், ஆனால் தேவன் அவரைப் புறக்கணித்து விடவில்லை. கர்த்தர் வானத்திலிருந்து, கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தின் போது, அவரது முப்பது ஆண்டு காலத் தயாரிப்பின்மீது அங்கீகரித்தலின் முத்திரையிட்டுப் பேசியிருந்தார். இப்போது அவரது சொந்த ஊழியத்திற்கு அங்கீகாரம் அளித்தார். இவ்விதமாக இயேசுவுக்கு வரவிருந்த கொடுமை யான மரணத்திற்குப் பரலோகம் தன்னைத் தயார் செய்து கொண்டிருந்தது.*

***மலையின்கீழ்: சீஷர்கள் கலக்கமடைதல்***

*"அவர்கள் மலையிலிருந்து இறங்குகிறபோது, இயேசு அவர்களை நோக்கி: 'மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும்வரைக்கும் இந்தத் தரிசனத்தை ஒருவருக்கும் சொல்லவேண்டாம்' என்று கட்டளை யிட்டார்" (மத். 17:9). தமது மரணம் பற்றிய அறிவிப்பில் கிறிஸ்து, தமது உயிர்த்தெழுதலைக் குறிப்பிட்டு இருந்தார் (மத். 16:21), ஆனால் இப்போது அவர், அந்த நிகழ்ச்சியை காலத்தின் ஒரு குறிப்பு என்ற வகையில் பயன்படுத்தினார். மீண்டும் ஒருமுறை, அவரது சீஷர்கள் குழப்பம் அடைந்தார்கள்; "மரித்தோரிலிருந்து எழுந்திருப்பது என்னவென்று" அவர்கள் கலந்துரையாடினார்கள் (மாற். 9:10). கர்த்தர் அடிக்கடி உவமைகளில் பேசியதால் (மத். 13:35), அவர் உருவக மொழிநடையைப் பயன்படுத்தினார் என்று அவர்கள் நினைத்தார்கள் என்பது தெளிவு.*

*"மரித்தோரிலிருந்து எழுந்திருப்பது" என்பதில், இயேசு எதை அர்த்தப்படுத்தினார் என்று அவரிடம் அவர்கள் கேட்கவில்லை, ஆனால் அவர்களைக் கவலைப்படுத்திய வேறு சிலவற்றைப் பற்றி அவர்கள் அவரிடத்தில் கேட்டார்கள். அவர்கள் அப்போதுதான் எலியாவைக் கண்டிருந்தார்கள், ஆனால் அந்தத் தீர்க்கதரிசி கிறிஸ்துவின் ஊழியத்தின் தொடக்கத்தில் தோன்றாமல் முடிவின் அருகாமையில் தோன்றியிருந்தார். இவ்விதமாக அவர்கள், "... எலியா முந்தி வரவேண்டுமென்று வேதபாரகர் சொல்லுகிறார்களே அதெப்படி?" என்று கேட்டார்கள் (மத். 17:10).*

*எலியாவின் வருகை பற்றிய தீர்க்கதரிசனங்கள் யோவான் ஸ்நானனின் ஊழியத்தில் நிறைவேறியிருந்தன என்பதை கிறிஸ்து முன்னரே வலியுறுத்தி யிருந்தார் (மத். 11:14; லூக். 1:17), ஆனால் மலையின்மீது எலியாதாமே தோன்றியிருந்தது அப்போஸ்தலர்களைக் குழப்பம் அடையச் செய்திருந்தது. இயேசு, எலியா ஏற்கனவே வந்திருந்தார் என்று மீண்டும் விளக்கப்படுத்தினார் (மத். 17:12). "அவர் யோவான் ஸ்நானனைக் குறித்துத் தங்களுக்குச் சொன்னார் என்று சீஷர்கள் அப்பொழுது அறிந்து கொண்டார்கள்" (மத். 17:13).*

## *முடிவுரை*

*கிறிஸ்து மலையடிவாரத்தை அடைந்தபோது, அவர் உடனடியாகத் தம்மை உணர்வெழுச்சியின் இன்னொரு பள்ளத்தாக்குப் பகுதியில் கண்டார் - அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரு இளைஞனை, அவரது சீஷர்கள் குணப்படுத்த இயலாதுபோனதினால் இழுக்கப்படுதல் (மத். 17:14-16) -*

*ஆனால் அதைப் பற்றி நாம் நமது அடுத்த பாடத்தில் படிப்போம். இந்தக் கணத்திற்கு, நாம் நமது தற்போதைய படிப்பில் இருந்து இரு பயன்பாடு களை ஏற்படுத்துவோம்: முதலாவது, நாம் உணர்வுப்பூர்வமான நமது உயர்வுகள் மற்றும் தாழ்வுகள் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்போது, கர்த்தர் புரிந்துகொள்ளுகின்றார். அவர் அவ்விடங்களில் இருந்துள்ளார். இரண்டாவது, நாம் கர்த்தரை ஏமாற்றம் அடையச் செய்யும்போது கூட, அவர் இன்னமும் நம்மீது அன்புகூருகின்றார். இந்தப் பாடத்தில், நாம் இயேசு அனுபவித்திருக்கக் கூடிய பல்வேறு வகைப்பட்ட உணர்வுகளைக் கவனித்தோம், ஆனால் அன்பு என்பதே அவரது உணர்வுகள் எல்லா வற்றிலும் விஞ்சிய சிறப்புப் பெற்றதாக உள்ளது. அவரது சீஷர்கள் அவரை மூச்சுமுட்டச் செய்தபோதிலும் கூட, அவர்களை அவர் அப்போதும் அன்புகூர்ந்தார். அவர்களில் ஒருவர் பிற்பாடு, ''முடிவு பரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார்'' என்று எழுதினார் (யோவா. 13:1). அது உங்களை ஆறுதல்படுத்தி உங்கள் சிந்தைக்குச் சமாதானத்தைக் கொண்டு வரவில்லையென்றால், வேறெதுவும் அவ்வாறு செய்யாது.*

---

*குறிப்புகள்*

[1]*பின்வாங்குதல்களின் இந்த வரிசைத் தொடர் ஏன் தொடங்கிற்று என்று நீங்கள் மறுகண்ணோட்டமிட விரும்பலாம். (இந்தப் புத்தகத்தில், "வெற்றியின் அபாயம்" என்ற பாடத்தைப் படிக்கவும்.)* [2]*இந்த ஊர்கள் இப்புத்தகத்தில் உள்ள "இயேசுவின் ஊழியத்தின்போது பலஸ்தீனம்" என்ற வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளன.* [3]*சதுசேயர்கள் பற்றிய ஒரு பின்னணிக்கு, "கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில் காணவும்.* [4]*கிறிஸ்துவின் ஊழியத்தினுடைய கடைசி வாரத்தின்போது - ''கேள்விகளின் நாளின்'' போது - பரிசேயர்களையும் சதுசேயர்களையும் நாம் மீண்டும் காண்போம்.* [5]"Politics makes strange bedfellows" *என்பது உலகில் நான் வாழும் பகுதியில் ஒரு பழங்கூற்றாக உள்ளது. பொதுவான ஒரு காரணமானது மாறுபட்டவர்களை ஒன்றுகூடி உடன்படிக்கை ஏற்படுத்தச் செய்கிறது.* [6]*மூலகிரேக்க வசனம், ''பரலோகத்திலிருந்து'' என்றே நேரடியான அர்த்தப்படுகிறது. இது ''தேவனிடத்திலிருந்து'' என்பதற்குப் பதிலாக ''வானத்திலிருந்து'' என்று மொழிபெயர்க்கப்பட முடியும்.* [7]*இதைப் பற்றிய முந்திய ஒரு கலந்துரையாடலை "கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில் "ஒரு மும்முரமான நாள்" என்ற பாடத்தில் காணவும்.* [8]*பின்வரும் பழங்கூற்று ஒன்றுள்ளது: "இரவு வேளையில் செவ்வானம் என்பது மேய்ப்பரின் மகிழ்ச்சியாக உள்ளது; காலை வேளையில் செவ்வானம் என்பது மேய்ப்பருக்கு எச்சரிக்கையாக உள்ளது"* (William Barclay, *The Gospel of Matthew,* rev. ed., vol. 2, The Daily Study Bible Series [Philadelphia: Westminster Press, 1975], 129. [9]*"காலங்களின் அடையாளங்கள்" என்ற சொற்றொடர், யூதர்கள் நூற்றாண்டுகளாக எதிர்நோக்கியிருந்த மேசியா மற்றும் அவரது இராஜ்யம் வந்துசேர்ந்த "காலங்கள்" வந்திருந்தன என்று நிரூபிப்பதற்காக இயேசு நிகழ்த்திய ''அடையாளங்களை'' (அற்புதங்களை)க் குறிக்கிறது! இது சிலர் கருத்துத் தெரிவிப்பதுபோல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் "அடையாளங்களை" குறிப்பதில்லை.* [10]*''கிறிஸ்துவின் வாழ்வு, 2'' என்ற புத்தகத்தில் ''யோனாவின் அடையாளம்'' என்ற துணைப்பாடத்தை வாசிக்கவும்.*

[11]“இயேசுவின் ஊழியத்தின்போது பலஸ்தீனம்” என்ற வரைபடத்தில் காணவும். [12]“சதுசேயர்களின் புளித்தமா” மற்றும் “ஏரோதியர்களின் புளித்தமா” என்ற சொற்றொடர்கள் ஒன்றுக்குப் பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது, ஆனால் இவை பயன்மிகுந்த வகையில் தனிப்படக் கலந்துரையாடப்பட முடியும். [13]“கிறிஸ்துவின் வாழ்வு, 2” என்ற புத்தகத்தில் “கூட்டத்தின் புயல்” என்ற பாடத்தில் காணவும். [14]இந்தப் புத்தகத்தில் உள்ள புளித்தமா பற்றிய கலந்துரையாடலை மறுகண்ணோட்டமிடவும், விசேஷமாக அந்தப் பாடத்தின் இறுதியில் உள்ள வரைக்குறிப்பு எண் 33ஐ வாசிக்கவும். [15]இந்தப் புத்தகத்தில் உள்ள இயேசுவின் ஊழியத்தின்போது பலஸ்தீனம் என்ற வரைபடத்தைக் காணவும். [16]Empathy என்பது sympathy போன்றதாக, ஆனால் பலமானதாக உள்ளது. Sympathetic என்றால் யாரேனும் ஒருவருடன் “உணருதல்” என்பதாக உள்ளது, empathetic என்றால் அந்த நபருக்குள் “உணருதல்” என்பதாக உள்ளது - அதாவது, அந்த நபர் மற்றும் அவரது பிரச்சனைகளை அடையாளம் கண்டுகொள்ளுதல் என்றாகிறது. [17]மாற்கு மட்டுமே பார்வையற்ற இந்த மனிதரை இயேசு அற்புதமாய்க் குணமாக்கியது பற்றிக் கூறுகின்றார். இது மாற்கு மட்டுமே குறிப்பிட்டுள்ள இரு அற்புதங்களில் ஒன்றாக உள்ளது. 7:31-37ல் காதுகேளாத ஒரு மனிதரைக் குணமாக்கியது இன்னொரு அற்புதமாகும். [18]இந்த புத்தகத்தில் உள்ள இயேசுவின் ஊழியத்தின்போது பலஸ்தீனம் என்ற வரைபடத்தில் பெத்சாயிதா ஜூலியஸ் என்ற ஊரைக் கண்டறியவும். [19]இந்த அற்புதம் “வளர்நிலையானது” என்று அடிக்கடி கூறப்படுகிறது, ஆனால் அந்தச் சொல்லாடலைப் பயன்படுத்துதல் என்பது தவறான மனப்பதிவை விட்டுச் செல்லக்கூடும். அதிகபட்சம் ஒரு சில நிமிடங்களே ஆகியிருந்தன. இது இன்றைய நாட்களில் நாட்கள், வாரங்கள், மாதங்கள் தேவைப்படுகின்றதாகக் கூறப்படுகிற “வளர்நிலை அற்புதங்கள்” எனப்படுபவை போன்றதல்ல. [20]கருத்துக் கணிப்பு ஒன்றை மேற்கொள்வதன் மூலம் நீங்கள் சத்தியத்தை கண்டறிய முடியாது என்பதற்கு இது ஒரு நல்ல விவரிப்பாக உள்ளது.

[21]“நல்ல அறிக்கை” என்ற சொற்றொடர் 1 தீமோத்தேயு 6:12, 13 வசனங்களில் காணப்படுகிறது. [22]Barjona என்பது “யோனாவின் மகன்” என்பதற்கான எபிரெயப் பதம் ஆகும். பேதுருவின் தந்தை யோனா என்ற பெயருடையவராய் இருந்தார் என்பது தெளிவு. [23]இது, மற்றவர்கள் பெற்றிராத ஒரு விசேஷித்த வெளிப்படுத்துதலைப் பேதுரு பெற்றிருந்தார் என்று அர்த்தப்படுத்துவதில்லை. மாறாக, இது இயேசுவைப் பற்றிய சத்தியத்தின் ஆதாரமூலமாக இருப்பவர் மனிதரல்ல, தேவனே என்பதை ஒப்புக் கொள்ளுதலாக உள்ளது. இதனைத் தேவன், இயேசுவின் வாழ்வு மற்றும் போதனை ஆகியவற்றின் மூலம் பேதுருவுக்கு வெளிப்படுத்தியிருந்தார். [24]பேதுரு முதல் போப்பாக இருந்தார் என்பதற்கு மத்தேயு 16:18, 19 வசனங்களே, அவர்களின் அடிப்படையான “நிரூபணமாக” உள்ளது. [25]W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words,* ed. John R. Kohlenberger III with James A. Swanson (Minneapolis: Bethany House Publishers, 1984), 974. சில வேளைகளில், இயேசு “கல்” என்பதற்கு மாறுபட்ட இரு வார்த்தைகள் இல்லாத அராமயிக் மொழியில் பேசியிருப்பார் என்று திருப்தியடையப்படுகிறது - ஆனால் அது வெறும் யூகமாக மட்டுமே உள்ளது. இந்த நிகழ்ச்சியைப் பற்றிக் கூறக் கூடிய ஏவுதல்பெற்ற வசனமானது கிரேக்கமொழியில் உள்ளது மற்றும் இம்மொழியானது மாறுபட்ட இரு வார்த்தைகளைப் பயன்படுத்துகிறது என்பது மட்டுமே நாம் உறுதியாக அறிந்துள்ள விஷயமாக உள்ளது. [26]புரொட்டஸ்டன்டு மதத்தைச் சேர்ந்த சில விளக்கவுரையாளர்கள், எபேசியர் 2:20 வசனமானது, கிறிஸ்தவர்கள் “அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் என்ற

அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களாய் இருக்கின்றார்கள், கிறிஸ்து இயேசு தாமே அதற்கு மூலைக்கல்லாக இருக்கின்றார்'' என்று கூறுவதைச் சுட்டிக் காண்பிக்கின்றார்கள். இவ்வசனத்திலிருந்து அவர்கள், பேதுருவின்மீது கட்டப்பட்ட சபையைக் கிறிஸ்து உரைத்தார் - இது பேதுருவின்மீது மட்டுமல்ல, அதற்கு மாறாக எல்லா அப்போஸ்தலர்களின்மீதும் கட்டப்பட்டது என்பது ஒரு விதிவிலக்கு என்று முடிவு செய்கின்றார்கள். இந்த விளக்கம் அபாயமானதாக இருப்பதில்லை (இது பேதுருவின்மீது மட்டுமே சபை கட்டப்பட்டது என்ற கத்தோலிக்க விவாதத்திற்குப் பதில் அளிக்கிறது), ஆனால் இரண்டு விளக்கங்கள் முறையானவையாக உள்ளன: (1) மத்தேயு 16 மற்றும் எபேசியர் 2 ஆகியவற்றின் உருவகங்கள் மாறுபட்டவையாக உள்ளன, இவைகள் குழப்பப்படக்கூடாது. (2) எபேசியர் 2:20ல் கூட, சபையானது அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் என்பவர்களின் போதனையின்மீது கட்டப்பட்டது என்பதே அர்த்தமாயிருக்கும் - மற்றும் அவர்களின் போதனைகள் இயேசுவை மையப்படுத்தியிருந்தன (1 கொரி. 2:2; கலா. 6:14 ஆகியவற்றைக் காணவும்). [27]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914). 412. [28]"சபை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை மற்றும் புதிய ஏற்பாட்டில் அவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ள பல்வேறு வழிமுறைகள் ஆகியவை பற்றிய கலந்துரையாடலுக்கு இப்பாடத்தின் கடைசிப் பகுதியில் உள்ள "சபை என்ற வார்த்தையின் அர்த்தம்" என்ற பகுதியை வாசிக்கவும். மற்றும் "இரட்சிப்பைப் புரிந்துகொள்ளுவது எப்படி?" என்ற புத்தகத்திலும் காணவும். [29]சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் கொல்லப்பட்டாலும், அது சபையை அழித்து விடாது, ஏனெனில் வசனம்தான் சபை/இராஜ்யத்தின் "விதை"யாக உள்ளது (லூக். 8:11). வசனம் அழிக்கப்பட முடியாததாக உள்ளதால் (1 பேது. 1:23-25), சபையானது விதையின் வடிவத்திலாவது என்றென்றைக்கும் இருக்கும். [30]அழகின்மையின் காரணமாக, பெரும்பாலான மொழிபெயர்ப்புகள் இவ்வசனத்தை நேரடியாக மொழிபெயர்க்க முயற்சி செய்வதில்லை; இவைகள் கட்டப்பட்டிருக்கும் அல்லது கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று மட்டுமே குறிப்பிடுகின்றன (KJV & NIV ஆகியவற்றில் காணவும்). NASBயும் கூட ஒரு மறுபதிப்பில் "shall be" என்று கூற மாற்றப்பட்டுள்ளது, ஆனால் சமீபத்திய மறுபதிப்பு நேரடி மொழிபெயர்ப்புக்குத் திரும்பியுள்ளது.

[31]சனதெரீன் பற்றிய ஒரு சுருக்கமான கலந்துரையாடலுக்கு "கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில் காணவும். [32]"மூன்று நாட்களுக்குப் பின் மீண்டும் உயிர்த்தெழுவார்" என்ற வார்த்தைகளைக் கிறிஸ்து கூடுதலாகக் கூறினார், ஆனால் அந்த வார்த்தைகளும் அப்போஸ்தலர்களுக்கு அர்த்தமற்றவையாகவே இருந்தன (மாற். 9:10ஐக் காணவும்). [33]"சாத்தான்" என்பதற்கு "எதிராளி" என்ற நேரடி அர்த்தம் உள்ளது. [34]வனாந்தரத்தில் நேரிட்ட சோதனைகள் ஒன்றில், சிலுவையின்றி அரசராகுதல் உள்ளடங்கியிருந்தது. [35]"மணிமுடி" என்பது ஆட்சி செய்பவரால் அணிந்துகொள்ளப்படுகிற ஒரு கிரீடமாகும். [36]மாற்கு 8:34ன்படி, அவர் இந்த வார்த்தைகளை அருகில் இருந்த மற்றவர்களுக்கும் உரைத்தார். [37]அங்கு நின்றிருந்தவர்களில் குறைந்தது ஒரு நபர் - யூதாஸ் - இராஜ்யம் நிலை நாட்டப்படுவதற்கு முன்பு மரணத்தைக் கண்டார், ஆனால் பெரும்பாலானவர்கள் மரிக்காது இருந்தார்கள். [38]இயேசு தமது இராஜ்யத்தை இன்னும் நிலைநாட்டவில்லை என்ற நம்பிக்கை கொண்ட (ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்கள் போன்ற)வர்கள் மாற்கு 9:1உடன் போராடுகின்றார்கள். இது மறுரூபமடைதலைக் குறிக்கிறது என்று கூறுதல் புகழ்பெற்ற ஒரு "பாசாங்காக" உள்ளது. மெக்கார்வீ அவர்கள், "இந்தச் சொல்விளக்கத்தை மறுரூபமடைதல் என்று

*குறிப்பிடுகின்றவர்கள் நிச்சயமாகவே தவறு செய்கின்றார்கள், ஏனெனில் அந்த வேளையில் காணப்படக்கூடிய அளவில் இராஜ்யம் எதுவும் நிலைநாட்டப் பட்டிருந்தது இல்லை" என்று எழுதினார் (*McGarvey and Pendleton, *417)*.

# படிப்பு உதவிகள்


இயேசுவின்
ஊழியத்தின்
போது
பலஸ்தீனம்
சீரியா
சீதோன்
பெனிக்கியா
தீரு
எர்மோன் மலை
பிலிப்புச் செசரியா
கலிலேயா
பாசான்
மாவட்டம்
பெத்சாயிதா?
கப்பர்நகூம்
பெத்சாயிதா ஜூலியஸ்
கெர்கேசா
மகதலா
திபேரியா
கலிலேயாக்
கடல்
நாசரேத்
தெக்கப்போலி
சமாரியா
யோர்தான் நதி
மகா கடல்
பெரேயா
எருசலேம்
யூதேயா
சவக்
கடல்
மெக்காரூஸ்

# பரிசேயர்கள் இடறலடைந்தபோது
## *(மத். 15:12-14)*

*பரிசேயர்கள் தங்கள் பாரம்பரியத்தினால் தேவனுடைய கட்டளையை அவமாக்கியிருந்தார்கள் என்று இயேசு அவர்களிடம் கூறினார் (மத். 15:3-6). அவர்களை அவர், ஏசாயா தீர்க்கதரிசியால் கண்டனம் பண்ணப்பட்ட "மாய்மாலக்காரர்கள்" என்று அழைத்தார் (மத். 15:7-9). பிற்பாடு அவரும் அவரது சீஷர்களும் கூட்டத்தை விட்டுச் சென்ற பின்பு (மாற். 7:17), அவர்கள் அவரிடத்தில், "பரிசேயர் இந்த வசனத்தைக் கேட்டு இடறலடைந்தார்கள் என்று அறிவீரா?" என்று கேட்டார்கள் (மத். 15:12). அது ஒரு கீழ்மதிப்பான கூற்று என்று நான் கற்பனை செய்கின்றேன்; மார்க்கத் தலைவர்கள் அநேகமாக (திகைப்பினால்) நீலம்பாரித்து இருப்பார்கள்!*

*சட்டப்படி, நாம் பிறரைப் புண்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்று வேதாகமம் போதிக்கிறது (மத். 17:27; 18:6; ரோமர் 14:21; 1 கொரி. 8:13 ஆகிய வசனங்களைக் காணவும்;* KJV[1]*). ஆயினும், இயேசு கூறியதை யூதர்கள் தங்கள் மனம் புண்படுத்துவதாக எடுத்துக் கொண்டது போலவே (மத். 13:57; மாற். 6:3), நாம் என்ன சொன்னாலும் அல்லது செய்தாலும் சில வேளைகளில் மக்கள் மனம் புண்படுவார்கள். மனிதனுக்குள் இருப்பது என்ன என்பதை அறிந்த இயேசு (யோவா. 2:24, 25), பரிசேயர்களின் இருதயங்களைப் பார்த்து அவர்களின் வெறுப்புணர்வு அமைதிப்படுத்த முடியாதது என்பதை உணர்ந்தறிந்தார். அவர்களுக்கான அவரது வார்த்தைகள் அடிப்படையில், அவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தவர்களின் நன்மைக்கானதாக, மாய்மாலமான போதகர்களின் செல்வாக்குப் பற்றித் தனிநபர்களை எச்சரிக்கை செய்வதற்கானதாக இருந்தன (மத். 16:6, 12). நேரடியான தன்மைக்கான இயேசுவின் உதாரணமானது நமது போதனையில் நாம் [பிறரைப்] புண்படுத்தும் வகையில் இருக்கக் கூடிய உரிமையைத் தருகிறதா? இல்லை, நீங்களும் நானும் மனிதர்களின் இருதயங்களை அறிவதில்லை, அறியவும் முடியாது. நாம் எப்பொழுதுமே "அன்புடன் சத்தியத்தை"ப் பேச முயற்சி செய்ய வேண்டும் (எபே. 4:15).*

*பரிசேயர்களை மனம்புண்படச் செய்தல் என்பது பற்றி கிறிஸ்து அதிகம் அக்கறை கொள்ளாது இருந்திருக்கலாம், ஆனால் அவரது சீஷர்கள் அதில் அதிக அக்கறை கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்கள் இளமைப் பருவத்தில் இருந்தே இந்தக் கல்விமான்களை மதிக்கும்படி போதிக்கப் பட்டிருந்தார்கள். மற்றும், இந்தத் தலைவர்கள் எவ்வளவு அதிகமாய்ச் செல்வாக்கை வசப்படுத்திக் கையாண்டார்கள் என்பதையும் - இவர்களைத் தங்கள் எஜமானர் தொடர்ந்து கலவரப்படுத்தினால் அவருக்கும் தங்களுக்கும் ஏற்படும் விளைவுகள் எவ்வளவு அழிவுக்குரியதாக இருக்க முடியும் என்பதையும் - இவர்கள் அறிந்து இருந்தார்கள்.*

*கர்த்தர் தமது பின்பற்றாளர்களுக்கு ஆறுதல் அளிக்கத் துரிதப்பட்டார். அவர், "என் பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்"*

*என்று கூறினார் (மத். 15:13). "நாற்று" என்ற வார்த்தை, பரிசேயர்களால் போதிக்கப்பட்ட மனித பாரம்பரியங்களைப் போதித்தலைச் செய்தவர் களைக் குறித்ததா, அல்லது இந்த போதனைகளின் அடிப்படையில் அமைந்த பரிசேயத்துவ அமைப்பைக் குறித்ததா? "மேற்கூறிய யாவும்" என்பதே சரியான பதிலாக இருக்கிறது. தேவன், நியாயப்பிரமாணத்தின் போதனைகளை ''நட்டிருந்தார்,'' ஆனால் அவர் பரிசேயர்களின் பாரம்பரியங்களை "நட்டிருக்கவில்லை." அதே போன்று, ஒரு தோட்டத்தில் கெடுதல் உண்டாக்குகிற களைகள் நல்ல செடிகளை அமுக்கிப் போடுகிற தைப் போலவே, மனிதரின் பாரம்பரியங்கள், மனிதர்களின் இருதயங் களிலும் வாழ்வுகளிலும் உள்ள வசனத்தை அமுக்கிப் போடுகின்றன (மத். 15:3, 6, 9). நேர்மையான ஒரு தோட்டக்காரர் களைகளைத் தமது தோட்டத்திலிருந்து நீக்கிப்போடுவது போலவே, தேவன் - கடைசியில் - கள்ளப் போதகர்களையும் அவர்களின் போதனைகளையும் வேருடன் பிடுங்கிப் போடுவார்.*

*இவ்விதமாய்க் கிறிஸ்து, கவலையில் ஆழ்ந்திருந்த தமது அப்போஸ்தலர் களிடம், "அவர்களை [பரிசேயர்களை] விட்டுவிடுங்கள்" என்று கூறினார் (மத். 15:14அ). அவர் தமது பின்பற்றாளர்கள் பரிசேயரின் கள்ள போதனையை ஒருக்காலும் அறைகூவல் விடுக்கக் கூடாது அல்லது அவர்களின் தவறுகளை ஒருக்காலும் வெளிப்படுத்தக் கூடாது என்ற கருத்தறிவில் "அவர்களை விட்டுவிடுங்கள்" என்று போதிக்கவில்லை. அது அவரது வார்த்தைகள், அவர்தாமே செய்தவற்றிற்கு முரண்படுவதாக்கி விடும் (மத். 23ஐக் காணவும்). மாறாக அவர், "அவர்களின் ஆவேசப் போக்கைக் கவனிக்க வேண்டாம்"[2] என்றே கூறினார். The Living Bible என்ற வேதாகமத்தில் "எனவே அவர்களைப் புறக்கணியுங்கள்" என்றுள்ளது.*

*அவர்கள் பரிசேயர்களின் கோபத்திற்குப் பயப்படாது இருப்பதற்கு இயேசு ஒரு காரணத்தைக் கொடுத்தார்: கடைசியில் தேவன் அவர்களைக் கவனித்துக் கொள்வார். இப்போது அவர்களுக்கு அவர் இன்னொரு காரணத்தைக் கொடுத்தார்: "அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடரா யிருக்கிறார்கள்;[3] குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும்[4] குழியிலே விழுவார்களே" (மத். 15:14ஆ). பரிசேயர்கள் தப்பெண்ணம், மேட்டிமை மற்றும் சுய ஆர்வம் ஆகியவற்றினால் பார்வையற்று இருந்தார்கள். கடைசியில் அவர்களின் பார்வையற்ற தன்மையானது அவர்களின் அழிவை விளைவிக்கும்.*

*உண்மையில், கிறிஸ்து, ''இறந்துகொண்டிருக்கும் நாற்றுகளும்'' "பார்வையற்றவர்களாயுள்ள வழிகாட்டிகளும்," சரியானவற்றைச் செய்தல் மற்றும் போதித்தல் ஆகியவற்றினின்று அவர்களை விலக்கி விடுவதற்கு அனு மதிக்கக் கூடாது என்று அவருடைய சீஷர்களுக்குக் கூறிக்கொண்டிருந்தார். நாம் விரோதிகளை ஏற்படுத்துவதற்கென்று நமது வழியை விட்டு வெளிச் செல்லாதிருக்கையில், நாம் வெளியேறும் அளவுக்கு எதிர்ப்பானது நம்மை ஊக்கம் இழக்கச் செய்வதற்கு அனுமதிக்கக் கூடாது என்பதே இதில் நமக்குள்ள பாடமாகும்.*

குறிப்புகள்

[1]"மனம் புண்படுதல்." இது வேதாகமத்தில் "இடறலடைதல்" என்றுள்ளது. "Offend" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது "இடறி விழுதலுக்குக் காரணமாகுதல்" என்பது உட்படப் பல்வேறு அர்த்தங்களைக் கொண்டிருக்கக் கூடும். இந்தப் பாராவில் பட்டியலிடப்பட்டுள்ள வசனங்களை NASB வேதாகமத்தில் காணவும். இந்த கலந்துரையாடலின் நோக்கத்திற்காக நான், "பிறர்மீது கோபம் கொள்ளுதல் அல்லது வெறுப்படைதல்" என்ற பொதுவான அர்த்தம் உட்பட சாத்தியமான எல்லா அர்த்தங்களையும் உள்ளடக்குகின்றேன். [2]இந்தக் கூற்றை சங்கீதம் 37:1, 2உடன் ஒப்பிடவும். [3]மத்தேயு 23:16, 17, 19ஐ வாசிக்கவும். [4]கள்ளபோதகர்களைப் பின்பற்றுபவர்கள் தங்கள் தவறுகளுக்கு அவர்களைப் போன்றே பொறுப்புள்ளவர்களாய் இருக்கின்றார்கள் என்று இந்த வசனம் போதிக்கிறது.

# இயேசுவின் வரையறைக்குட்பட்ட கட்டளை பற்றிய குறிப்புகள்

***மத்தேயு 10:9, 10அ:*** *''உங்கள் கச்சைகளில் பொன்னையாவது வெள்ளியையாவது செம்பையாவது, வழிக்காகப் பையையாவது ... தேடி வைக்க வேண்டாம்.'' "கச்சை" என்ற சொற்றொடர் "இடுப்பைச் சுற்றிக் கட்டப்படும் தோல்'' அல்லது துணியினால் ஆன "இடுப்புவாருக்கான'' கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சிலவேளை களில் இந்தக் கச்சைகளில் பணம் தனிப்பட வைக்கப்பட்டது (மாற். 6:8ஐக் காணவும்), எனவே "கச்சைகள்'' என்பது இக்கருத்தைத் தருகிறது. "பை'' என்பது பயணங்களுக்கான அத்தியாவசியப் பொருட்களை வைத்து, தோளில் தொங்கவிடக்கூடிய ஒரு பையாக இருந்தது. இது ஒரு இரவுப் பயணப் பெட்டி அல்லது முதுகில் போடக்கூடிய பையுடன் ஒப்பிடப் படலாம். அப்போஸ்தலர்கள் அத்தியாவசியப் பொருட்கள் எதையும் எடுத்துச் செல்ல வேண்டியதில்லை என்பதால், அவர்களுக்கு இப்படிப் பட்ட பை எதுவும் தேவைப்பட்டிராது.*

***மாற்கு 6:10:*** *இயேசு, "நீங்கள் எங்கேயாகிலும் ஒரு வீட்டில் பிரவேசித் தால், அவ்விடத்தை விட்டுப் புறப்படுகிறவரைக்கும் அங்கேதான் தங்கியிருங்கள்'' என்று கூறினார் (மத். 10:11; லூக். 9:4ஐக் காணவும்). ஒருவர் ஒரு வீட்டினுள் பிரவேசிக்கையிலும் அதை விட்டு வெளியில் புறப்படுகை யிலும் செய்யப்பட வேண்டிய சடங்காச்சாரங்கள் விரிவானவைகளாகவும், அதிக நேரம் எடுத்துக் கொள்ளுபவைகளாகவும் இருந்தன (லூக். 7:44-46ஐக் காணவும்). ஒவ்வொரு நகரத்திலும் ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளில் தங்குதல் என்பது அப்போஸ்தலர்களின் ஊழியத்திலிருந்து நேரத்தை எடுத்துக் கொள்ளுவதாயிருக்கும்.*

***மத்தேயு 10:12, 13:*** *"ஒரு வீட்டுக்குள் பிரவேசிக்கும்போது அதை வாழ்த்துங்கள். அந்த வீடு பாத்திரமாயிருந்தால் நீங்கள் கூறின சமாதானம் அவர்கள்மேல் வரக்கடவது; அபாத்திரமாயிருந்தால், நீங்கள் கூறின சமாதானம் உங்களிடத்திற்குத் திரும்பக் கடவது.'' "இந்த வீட்டிற்குச் சமாதானம் உண்டாவதாக'' என்பதே ஒரு வீட்டிற்குள் செல்லும்போது கூறும் சாதாரண வாழ்த்துதலாக இருந்தது. ஆயினும், அந்த வீட்டில் குடியிருப்பவர்கள் அப்போஸ்தலர்களின் செய்தியைப் புறக்கணித்தால், அவர்கள் அந்த வாழ்த்துதலில் அளிக்கப்பட்ட "சமாதானத்தை'' பெற மாட்டார்கள் (வ. 14, 15ஐக் காணவும்).*

***மத்தேயு 10:14:*** *"எவனாகிலும் உங்களை ஏற்றுக்கொள்ளாமலும், உங்கள் வார்த்தைகளைக் கேளாமலும்போனால், அந்த வீட்டையாவது பட்டணத்தையாவது விட்டுப் புறப்படும்போது, உங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப்போடுங்கள்'' (மாற். 6:11; லூக். 9:5ஐக் காணவும்). அவிசுவாசியான புறஜாதியாரால் தொடப்பட்ட எதுவும் "அசுத்தமானது'' என்று யூதர்கள் நம்பினார்கள். ஆகையால் அவர்கள் ஒரு புறஜாதியார்*

நாட்டில் இருந்துவிட்டு, பலஸ்தீனத்துக்குத் திரும்பும்போது, அவர்கள் தங்கள் கால்களில் இருக்கும் தீட்டுப்பட்ட புறஜாதியாரின் தூசியை உதறுவார்கள். இயேசுவால் கட்டளையிடப்பட்ட அடையாளத்துவமான இந்தச் செய்கையானது, அவிசுவாசிகளான யூதர்கள் அவிசுவாசிகளான புறஜாதியாரை விட மேன்மையானவர்களாய் இருந்ததில்லை என்று சுட்டிக்காண்பித்தது.

**மத்தேயு 10:17:** "... மனுஷரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ... தங்கள் ஜெப ஆலயங்களில் உங்களை வாரினால் அடிப்பார்கள்." வாரினால் அடிப்பித்தல் என்பது (அடித்தல், சவுக்கால் அடித்தல்) ஜெப ஆலயங்களில் செயல்படுத்தப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் மிக உச்ச பட்சமான வடிவமாக இருந்தது. இது "பணிவிடைக்காரனால்" செயல்படுத்தப்பட்டது. ("நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா?" மற்றும் "புறக்கணிக்கப்படுதலைக் கையாள்வது எப்படி?" என்ற பாடங்களின் தொடக்கப் பகுதிகளில் ஜெப ஆலயத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ள குறிப்புகளைக் காணவும்.)

**மத்தேயு 10:23:** "... மனுஷகுமாரன் வருவதற்குள்ளாக நீங்கள் இஸ்ரவேலருடைய பட்டணங்களையெல்லாம் சுற்றி முடியாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." "வருவதற்குள்ளாக" என்ற வார்த்தையின் தனித்துவம் என்ன என்பது நமக்கு நிச்சயமாகத் தெரியாதபடியால், இது, "இந்த அதிகாரத்திலேயே மிகவும் கடினமான வசனம்" என்று கருதப்படுகிறது.[1] "வருவதற்குள்ளாக" என்ற வார்த்தையானது, கி.பி. 70ல் எருசலேம் அழிக்கப்பட்டபோது, யூதர்களுக்கு எதிராக நியாயத்தீர்ப்பளிக்கக் கர்த்தர் வரவிருந்ததைக் குறித்திருக்கக் கூடும்; இது இவ்வசனப் பகுதியை வசனம் 15உடன் பிணைப்பதாயிருக்கும். இது, இயேசு அவர்களுக்குப் பின்னாலேயே - அதே நகரங்களுக்கு - வருவார் என்று எளிமையாக அர்த்தப்படவும் சாத்தியக்கூறு உள்ளது (மத். 11:1ஐக் காணவும்).[2]

**மத்தேயு 10:25ஆ:** "... வீட்டெஜமானையே பெயல்செபூல் என்று சொன்னார்களானால் ..." இது, இயேசு பிசாசின் வல்லமையைக் கொண்டே அசுத்த ஆவிகளைத் துரத்தினார் என்று பரிசேயர்கள் தேவ தூஷணக் குற்றம்சாட்டியது பற்றிய ஒரு குறிப்பாக உள்ளது. ("கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில் "ஒரு மும்முரமான நாள்" என்ற பாடத்தில் இந்தக் குற்றச்சாட்டு மற்றும் இயேசுவின் பதில் ஆகியவை மீதான விளக்கங்களைக் காணவும்.)

**மத்தேயு 10:26:** "... அவர்களுக்கு[உங்களைத் துன்புறுத்துபவர்களுக்கு]ப் பயப்படாதிருங்கள்; வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை; அறியப்படாத இரகசியமும் இல்லை." "மறைபொருள்" மற்றும் "இரகசியம்" என்று இயேசு பேசியபோது, அவர் அநேகமாக, தம்மையும், தமது அப்போஸ்தலர்களையும் தங்கள் ஊழியத்தையும் அழிப்பதற்குத் தமது விரோதிகள் வனைந்த சூழ்ச்சிகளைக் குறிப்பிட்டிருக்கலாம். The Living Bible என்ற வேதாகமம் இதை, "அவர்களின் இரகசியமான சூழ்ச்சிகள் வெளிப்படையான தகவலாகும்" என்று பொழிப்புரை செய்கிறது. இந்த

வாக்குத்தத்தம் நிறைவேற்றப்பட்டது; இன்றைய நாட்களில் நாம் புதிய ஏற்பாட்டின் பக்கங்களில் அந்தப் பிசாசுத்தனமான திட்டங்களைப் பற்றி வாசிக்கின்றோம்.

***மத்தேயு 10:41, 42:*** "*தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்க தரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்; நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன் நீதிமானுக்கேற்ற பலனை அடைவான். சீஷன் என்ற நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் கொடுக்கிற வனும் தன் பலனை அடையாமற்போகான் என்று மெய்யாகவே உங்களுக் குச் சொல்லுகிறேன்.*" இதற்கு முன்பு இயேசு, அப்போஸ்தலர்களைப் புறக்கணிப்பவர்கள் சபிக்கப்படுவார்கள் என்று வாக்களித்திருந்தார் (வ. 14, 15); இவ்விடத்தில் அவர், அவர்களையும் அவர்களின் செய்தியையும் ஏற்றுக்கொள்ளுபவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று வாக்களித்தார். "இந்தச் சிறியரில்" என்பது சந்தர்ப்பப் பொருளில் அநேகமாக அப்போஸ் தலர்களைக் குறித்திருக்கலாம். இரட்சிப்புக்கு ஒரே ஒரு காரணிமாத்திரம் இவ்விடத்தில் கருதப்படுகிறது என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும்: ஒரு கலசம் தண்ணீர் கொடுப்பதில் காட்சிப்படுகின்றபடி, அப்போஸ்தலர் களை ஏற்றுக்கொள்ளுதல். (தண்ணீர் கொடுத்தல் போன்ற) எந்த ஒரு செய்கையும்/கிரியையும் இரட்சிப்பை உறுதிப்படுத்துகிறது என்பது இங்கு போதனையாக இருப்பதில்லை. மாறாக, மற்ற ஒவ்வொரு விஷயமும் சமமானதாக இருக்கும்போது[3] சீஷர்களை ஏற்றுக்கொண்டவர்கள் இரட்சிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள்.

***மாற்கு 6:12, 13:*** "*அவர்கள் புறப்பட்டுப் போய் ... பிரசங்கித்து ... அநேகம் நோயாளிகளை எண்ணெய் பூசிச் சொஸ்தமாக்கினார்கள்.*" குணமாக்குதல் தொடர்பாக "எண்ணெய் பூசுதல்" என்பது (யாக். 5:14ஐக் காணவும்) ஒரு பொருள் விளங்காத இரகசியமாக உள்ளது. ஒருவரை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுவதற்கு மூன்று அடிப்படைக் காரணங் கள் இருந்தன: (1) அது ஒரு சடங்காச்சார நோக்கங் கொண்டிருந்தது - பிரித்தெடுத்து வைக்கும் ஒரு வைபவத்தின் பகுதியாக இருந்தது (யாத். 30:25, 26, 30; 1 சாமு. 9:16; 15:1; 16:13 ஆகியவற்றைக் காணவும்). (2) அது ஒரு நடைமுறை நோக்கங்கொண்டிருந்தது - தனிப்பட்ட வகையில் அலங்கரித்தலின் பகுதியாக இருந்தது (ரூத் 3:3; 2 சாமு. 14:2ஐக் காணவும்). இதன் தொடர்பாகப் பார்க்கையில், ஒருவரின் தலையை எண்ணெயால் அபிஷேகம் செய்வித்தல் என்பது அந்த நபருக்குப் புத்தணர்வைக் கொண்டு வருவதற்கான செயலாக இருந்தது (லூக். 7:46; எபி. 1:9ஐக் காணவும்). (3) அது ஒரு மருத்துவ நோக்கங்கொண்டிருந்தது - காயங்களுக்குச் சிகிச்சை அளிப்பதின் பகுதியாக இருந்தது (ஏசா. 1:6; லூக். 10:34); எண்ணெயானது காயங்களை ஆற்றி [உடலைப்] பாதுகாத்தது. அப்போஸ்தலர்கள் மக்களைக் குணப்படுத்துவதற்கு முன்பு அவர்களை எண்ணெயினால் அபிஷேகம் செய்தபோது, அவர்கள் ஒரு விசேஷித்த சடங்காச்சாரத்தில் ஈடுபட்டிருந் தார்களா? அவர்கள் புத்துணர்வின் கூடுதலான தொடுதலினால் அக்கறையைக் காண்பித்தார்களா? அவர்கள் அடிப்படையான மருத்துவ

சிகிச்சையை அளித்திருக்கக்கூட முடியுமா?[4] இயேசு மக்களைக் குணமாக்கியது தொடர்பாக, எவரொருவரையும் எண்ணையால் அபிஷேகம் பண்ணியதாகப் பதிவேடு எதுவும் இராததால், அநேகமாக இது அந்தச் செயல்முறையின் இன்றியமையாத பாகமாக இருந்திருக்காது. சில வேளைகளில் கிறிஸ்து தமது குணமாக்குதல்களில் - துன்புறுபவரைத் தொடுதல், கண்களில் சேற்றைப் பூசுதல், இன்னும் இதுபோன்ற - அடையாளச் செயல்களில் ஈடுபட்டிருந்தார், இது முடிவு விளைவுகளில் ஏதொன்றும் செய்பவையாக இருந்ததில்லை அல்லது அவற்றில் சிறிதளவே செயல்பட்டன. அப்போஸ்தலர்கள் எண்ணெயினால் அபிஷேகம் செய்ததும் இதே வகைப்பட்டதாகவே இருக்கலாம்.

---

குறிப்புகள்

[1]Will Ed Warren, Class Syllabus, *The Life of Christ: The Synoptic Gospels*, Harding University, 1991, 41. [2]இது, இயேசுவின் இரண்டாம் வருகை வரைக்கும் யூதர்களுக்குத் தொடர்ந்து சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் என்பதற்கான வாக்குத்தத்தமாக இருப்பதாகச் சிலர் நம்புகின்றார்கள். அப்படிப்பட்ட நேர்மறையான ஒரு வாக்குத்தத்தம் சந்தர்ப்பப் பொருளுக்குப் பொருத்தமானதாகக் காணப்படுவதில்லை. [3]நாம் தேவனுடைய கிருபையினாலேயே இரட்சிக்கப் படுகின்றோம் என்பது எப்போதும் புரிந்துகொள்ளப்பட வேண்டும் (எபே. 2:8, 9). [4]அப்போஸ்தலர்கள் மக்களை அற்புதவிதமாகக் குணமாக்கும்படி செயல் பட்டதால், இது பொருத்தமானதாகக் காணப்படுவதில்லை; ஆனால் இது சாத்தியக் கூற்றின் வட்டாரத்திற்கு அப்பாற்பட்டதாக இருப்பதில்லை. அப்போதும் இப்போதும், நமக்கு நாமே செய்யக்கூடியவற்றைத் தேவன் நமக்காகச் செய்வதில்லை என்பது உண்மையாகவே உள்ளது.

*கீழ்கண்ட விபரங்களைப் பூர்த்தி செய்ய தயவு செய்து கொஞ்சம் சமயம் எடுத்துக்கொள்ளுங்கள். இப்பாடங்களை தொடர்ச்சியாக பெற்றுக் கொள்ள விரும்புவோர் யாராவது உங்களுக்குத் தெரியுமானால், தயவு செய்து இந்தப் படிவத்தை பிரதி எடுத்துக்கொள்ளுங்கள். நாங்கள் அவர்களிடமிருந்தும் கேட்க விரும்புகிறோம். பூர்த்தி செய்த விவரங்களை இந்த முகவரிக்கு அனுப்புங்கள்:*

*இன்றைக்கான சத்தியம்,*
*தபால் பை எண். 5311,*
*சிவாஜி நகர், பெங்களூர் - 560001.*

*தேதி:* ____________ *முழுப் பெயர்:* ____________

*முழு தபால் விலாசம்:* ____________

____________

____________ *மாகாணம்* ____________

Email *விலாசம்:* ____________

*ஒன்றைக் குறிப்பிடவும்:*

- ❑ *ஆண்*
- ❑ *பெண்*

1. *நீங்கள் எந்த சபையில் ஆராதிக்கிறீர்கள்?* ____________

____________

____________

2. *சபையில் உங்களுடைய பணிநிலையை கீழ்கண்டவைகளில் எந்தப் பெயர் விவரிக்கிறது? (சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் குறிப்பிடவும்.)*
   - ❑ *பிரசங்கியார்*
   - ❑ *போதகர்*
   - ❑ *சபைநடத்துனர்*

3. *நீங்கள் ஏதாவது பிரசங்கப் பயிற்சிப் பள்ளியில் போதிக்கிறீர்களா?*
   - ❑ *ஆம்*
   - ❑ *இல்லை*

4. *இன்றைக்கான சத்தியம் நூல்களில் காணப்படும் பாடங்களை எவ்வளவு அடிக்கடி உபயோகப்படுத்துகிறீர்கள்?*
   - ❑ *ஒழுங்காக*
   - ❑ *எப்பொழுதாவது*
   - ❑ *மிகவும் அரிதாய்*

5. *இதன் மொழிபெயர்ப்பின் தரத்தை எவ்வாறு காண்கிறீர்கள்?*
   - ❑ *வாசிக்கவும் விளங்கிக் கொள்ளவும் சுலபமானதாக*
   - ❑ *புரிந்து கொள்ளக் கொஞ்சம் கடினமானதாக*
   - ❑ *புரிந்துகொள்ள மிகவும் கடினமானதாக*

6. இந்தப் பாடங்கள் பொதுவாக வாசிப்பவரின் மொழிநடையில் உள்ளது என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?
   - ❑ ஆம்
   - ❑ இல்லை

7. வேதாகம வகுப்புகளில் இல்லாமல் மற்றவர்களுடன் வேதாகமத்தைப் படிப்பதில் எவ்வளவு அடிக்கடி செயல்படுகிறீர்கள்?
   - ❑ அடிக்கடி
   - ❑ எப்போதாவது தான்

8. கடந்த ஆண்டில் உங்கள் பகுதியில் ஏதாவது புதிய சபைக்குழுமங்களை நிலைநாட்ட உதவியிருக்கின்றீர்களா?
   - ❑ ஆம். ஆம், என்றால் எத்தனை?________________________
   - ❑ இல்லை

9. கடந்த ஆண்டில் நீங்கள் வேதாகமத்தைக் கற்றுக் கொடுத்த யாரேனும் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டிருக்கின்றார்களா?
   - ❑ ஆம். ஆம் என்றால் எத்தனைபேர்?
   - ❑ இல்லை

10. தற்போது நீங்கள் இன்றைக்கான சத்தியம் உலக ஊழியப் பள்ளியின் வெளியீடுகளைத் தவறாமல் பெற்றுக் கொண்டு வருகிறீர்களா? (ஒன்றைக் குறிப்பிடவும்.)
    - ❑ ஆம், நேரடியாக எனக்கு அனுப்பப்படுகின்றன
    - ❑ ஆம், விநியோகிப்பவரின் பெயர்: ______________________
    - ❑ இல்லை

11. எந்த மொழியில் வெளியீடுகளைப்பெற நீங்கள் விரும்புகிறீர்கள்? (ஒன்றை மாத்திரம் குறிப்பிடவும்.)
    - ❑ ஆங்கிலம்
    - ❑ மலையாளம்
    - ❑ ஹிந்தி
    - ❑ தமிழ்
    - ❑ கன்னடா
    - ❑ தெலுங்கு

12. நீங்கள் 5 பிரதிகளுக்கும் அதிகமாகப் பெற்றுக் கொள்பவராய் இருந்தால், நீங்கள் அதை எவ்வாறு உபயோகிக்கிறீர்கள்? (சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் குறிப்பிடவும்.)
    - ❑ பிரசங்கியார்களுக்கும் போதகர்களுக்கும் விநியோகித்தல்
    - ❑ அங்கத்தினர்களுக்கு விநியோகித்தல்.
    - ❑ அங்கத்தினர் அல்லாதவர்களுக்கு விநியோகித்தல்.